தொல்காப்பியம்

உரைவளம்

சொல்லதிகாரம்

கிளவியாக்கம்

யாதும் ஊரே யாவரும் கேளிர்

INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

பதிப்பாசிரியர்:

ஆ. சிவலிங்கனார்

தொல்காப்பியம்-சொல்லதிகாரம்

(உரைவளம்)

கிளவியாக்கம்

பதிப்பாசிரியர்

ஆ. சிவலிங்கனார்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES.

டி. டி. டி. ஐ., தரமணி, சென்னை-600113.

தொல்காப்பிய நூல் உரைவள வெளியீட்டுத் திட்டம்
வெளியீடு-8

Bibliographical Data

Title of the Book	:	Tolkappiyam-Collathikaram-Kilaviyakkam
Editor	:	A. SIVALINGANAR International Institute of Tamil Studies, Madras - 600113.
Publisher & copy Right	:	International Institute of Tamil Studies, Madras - 600113.
Publication number	:	51
Language	:	Tamil
Edition	:	First
Date of Publication	:	July 1982
Paper used	:	16 Kg. D/Demy.
Size of the book	:	21×18 cms.
Printing types used	:	10 Point Tamil Roman
Number of pages	:	xvi+493
Number of copies	:	1200
Price	:	Rs. 20/-
Printing	:	Sri Gomathy Achagam 7, Chinnappa Rowther Street Triplicane, Madras-5. Phone: 841478.
Binding	:	Card borad
Artist	:	Eswari
Subject	:	Grammar
Summary	:	Commentaries on Tolkappiyam Collathikaram-Kilaviyakkam

டாக்டர் ச. வே. சுப்பிரமணியன்
இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை 600 113

முன்னுரை

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் தொல்காப்பிய உரைவள வெளியீட்டுத் திட்டத்தின் மூலம் எட்டாவது வெளியீடாகத் தொல்காப்பியச் சொல்லதிகாரக் கிளவியாக்க உரைவளம் வெளிவருகின்றது.

இதில் இளம்பூரணர், சேனாவரையர், தெய்வச்சிலையார், நச்சினார்க்கினியர், கல்லாடனார், பெயர் அறியப்படாத ஒருவர், ஆகியோர் உரைகளும், வெள்ளைவாரணனார், ஆதித்தர் உரைகளில் தேவையான—புதிய உரைகளும், தற்கால அறிஞர் பெருமக்களின் கருத்துரைகளும், பிற்கால இலக்கண நூல்களிலிருந்து ஒப்புமை நூற்பாக்களும், (நூற்பாக்களுக்கு மட்டும்) டாக்டர் சி. இலக்குவனார், டாக்டர் கமீல் சுவலபில் ஆகியோரின் ஆங்கில மொழிபெயர்ப்புகளும் அடங்கியுள்ளன. நூற்பா உரைகளின் இறுதியிலும், ஆங்காங்கே அடிக்குறிப்புகளிலும் பதிப்பாசிரியரின் விளக்கங்கள் அமைந்துள்ளன.

நூலின் தொடக்கத்தில் என்னால் எழுதப்பட்ட ஆங்கில முன்னுரை (Foreword) ஒன்றும் சேர்க்கப்பட்டுள்ளது.

இதுவரை வெளிவந்துள்ள உரைவள நூல்களை ஆதரித்தது போலவே இந்நூலையும் தமிழுலகம் ஆதரிக்கும் என்னும் நம்பிக்கை யுடையேன்.

பதிப்பாசிரியர் ஆ. சிவலிங்கனார், சொல்லகராதி செப்பனிடல் முதலியவற்றால் உதவி புரிந்த டாக்டர் கே. பகவதி செல்வி ச. சிவகாமி ஆகியோரைப் பாராட்டுகிறேன்.

எம் நிறுவனத்தலைவரும் தமிழக அரசின் கல்வியமைச்சருமாகிய மாண்புமிகு. செ. அரங்கநாயகம் அவர்கள் இவ்வெளியீட்டுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து வருவதற்கு என்றும் நன்றியுடையேன்.

அழகுற அச்சிட்ட ஸ்ரீ கோமதி அச்சக உரிமையாளர் சி. சரவணகுமார் அவர்கட்கும் நன்றி.

29—7—1982

அன்புடன்,
ச. வே. சுப்பிரமணியன்

பதிப்புரை

உரைவள வெளியீடு

தொல்காப்பியச் சொல்லதிகாரத்துக்கு இன்றுவரை அச்சாகி வந்துள்ள உரைகள், இளம்பூரணர் உரை, சேனாவரையர் உரை, தெய்வச்சிலையார் உரை, நச்சினார்க்கினியர் உரை, கல்லாடனார் உரை, பெயர் அறியப் படாத ஒருவர் உரை, ஆதித்தர் உரை, நன்னூலை இணைத்து எழுதப் பட்ட வெள்ளைவாரணனார் உரை, சுப்பிரமணிய சாஸ்திரியார் குறிப்புரை என்பனவாம். இவர் யாவரும் ஆங்காங்குக் கருத்து வேறுபாடுகளுடன் தத்தம் உரைகளை எழுதியுள்ளனர்.

புலியூர்க் கேசிகன் போல்வார், பல்கலைக் கழகங்களின் பாட அமைப்புகளுக்கு ஏற்ப உரையாசிரியர்களின் கருத்துக்களையே தம் நடையில் எழுதிய உரைகளும் வெளிவந்துள்ளன.

சேனாவரையர் உரைக்கு மட்டும் யாழ்ப்பாணம் கணேசய்யர், பூவராகம் பிள்ளை ஆகியோர் விளக்கம் எழுதினர். திருப்பனந்தாள் பேராசிரியர் கு. சுந்தர மூர்த்தி அவர்களே அனைவர் உரைகளுக்கும் விளக்கமும் ஆராய்ச்சிக் கருத்துகளும் எழுதியவர்.

டாக்டர் சி. இலக்குவனார் தொல்காப்பிய மூலத்தை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து விளக்கமும் எழுதியுள்ளார்.

டாக்டர் கமீல் சுவலபில் என்பவர் தொல்காப்பிய எழுத்ததிகார மூலத்தை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார். சொல்லதிகாரத்தில் கிளவியாக்கத்துக்கு மட்டில மொழி பெயர்த்தார்; குறிப்புகளும் எழுதியுள்ளார்.

அனைவர் உரைகளையும் கருத்துகளையும் தொகுத்து உரைவளமாகத் தருதல் வேண்டும் என்னும் எண்ணத்தால் முதன் முதலில் கிளவியாக்கத்துக்கு உரைவளம் வெளியிடுகின்றது உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.

தொல்காப்பியத்துக்கு உரைவள வெளியீட்டுப் பணியினை முதன் முதலில் மேற் கொண்டவர்கள் ஆபிரகாம் அருளப்பன், டாக்டர் வி. ஐ. சுப்பிரமணியம் ஆவர். அவர்கள் இருவரும், தொல்காப்பியம் சொல்லதிகாரம் உரைக்கோவை முதற்பாகம் என்னும் அமைப்பில், கிளவியாக்கம், வேற்றுமையியல், வேற்றுமை மயங்கியல், விளிமரபு என்னும் நான்கு இயல்களுக்கு மட்டில் உரைவளம் வெளியிட்டனர். அவர்கள் உரைக்கோவையில் இளம்பூரணர், தெய்வச்சிலையார், சேனாவரையர், நச்சினார்க்கினியர், கல்லாடனார், பெயரறியப்படாத ஒருவர் உரைகளே அடங்கியுள்ளன.

கிளவியாக்க உரைவளம்

இக்கிளவியாக்க உரைவளத்தில் இன்றுவரை வெளிவந்துள்ள உரைகளும் கருத்துகளும் சேர்க்கப்பட்டுள்ளன.

உரைக்கோவையில் இளம்பூரணர் உரை, தெய்வச்சிலையார் உரை, சேனாவரையர் உரை, நச்சினார்க்கினியர் உரை, கல்லாடனார் உரை, பெயரறியப் படாத ஒருவர் உரை என வரிசைப் படுத்தியமைக்கப் பட்டிருப்பதற்கு மாறாக, இக்கிளவியாக்க உரைவளத்தில், இளம்பூரணர் உரைக்குப் பின்னர்ச் சேனாவரையர் உரையும், அதன் பின்னர்த் தெய்வச்சிலையார் உரையும் பிறவும் ஆக வரிசைப் படுத்தப் பட்டுள்ளன; கால அடிப்படையில்.

இளம்பூரணர் கி. பி. 11 ஆம் நூற்றாண்டு
சேனாவரையர் கி. பி. 14 ஆம் நூற்றாண்டு
தெய்வச்சிலையார் கி. பி 14 ஆம் நூற்றாண்டின் முற்பகுதி
நச்சினார்க்கினியர் கி. பி 14 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி
கல்லாடனார் கி. பி. 15 ஆம் நூற்றாண்டு
பெயரறியப்படாத ஒருவர் கி. பி 15 ஆம் நூற்றாண்டு

இவ்வாறு வரையறுத்தவர் மு. அருணாசலம் பிள்ளையவர்கள். *

சேனவரையர் கருத்துகளுக்கு மாறாகச் சில விடங்களில் தெய்வச் சிலையார் எழுதியதாலும், தெய்வச்சிலையாரின் தனிப்பட்ட கருத்துகளைச் சுட்டிச் சேனாவரையர் யாண்டும் மறாமையாலும் தெய்வச்சிலையாருக்கு முற்பட்டவர் சேனாவரையர் என்ற கருத்தினால் இளம்பூரணருரையையடுத்துச் சேனாவரையர் உரை அமைக்கப் பட்டது.

---

* தமிழ் இலக்கிய வரலாறு 11, 14, 15 ஆம் நூற்றாண்டு

கிடைக்கப் பெற்ற உரைகளுள் முதலுரையாதலினால் இளம்பூரணர் உரை முன்னரும், இளம்பூரணரையும் சேனாவரையரையும் நச்சினார்க்கினியர் மறுத்தும் ஏற்றும் உரை வகுத்தமையால் அவ்விருவர் உரைகளையடுத்து நச்சினார்க்கினியர் உரை அமைக்கப்பட வேண்டுமாயினும், உரை வேறுபாடுகள் என்று பார்க்கும்போது இளம்பூரணர், சேனாவரையர், தெய்வச்சிலையார் ஆகிய மூவரின் உரைகளே வேறுபட்டிருத்தலின் இம்மூவர் உரைக்கும் அப்பாற்பட்ட உரையாக நச்சினார்க்கினியர் கூறாமையின் தெய்வச்சிலையார் உரையை அடுத்து நச்சினார்க்கினியர் உரையும் அமைக்கப்பட்டன பெயரறியப்படாத ஒருவர் உரை பெரிதும் கல்லாடனார் உரையையே தழுவியதாதலின் இறுதியில் அமைக்கப்பட்டது.

வெள்ளைவாரணனார், சுப்பிரமணிய சாஸ்திரியார், ஆதித்தர் ஆகியோர் உரைகளில் வேறுபட்ட கருத்துகள் மட்டும் முறையே அமைக்கப்பட்டன.

இக்கால அறிஞர்களாம் டாக்டர். தெ. பொ. மீனாட்சி சுந்தரனார், டாக்டர் ச. வே. சுப்பிரமணியன், டாக்டர் செ. வை. சண்முகம் போல்வார் கருத்துரைகளும், பதிப்பாசிரியர் கருத்துரைகளும் அமைக்கப்பட்டன.

சூத்திரங்களை அடுத்து டாக்டர் சி. இலக்குவனார், டாக்டர் கமீல்சுவலபில் ஆகியோரின் ஆங்கில மொழி பெயர்ப்புகளும், நேமிநாதம், வீரசோழியம், நன்னூல், இலக்கணவிளக்கம், தொன்னூல் விளக்கம், முத்துவீரியம் ஆகிய இலக்கண நூல்களிலிருந்து ஒப்புமைச் சூத்திரங்களும் சேர்க்கப்பட்டன.

உலகத்தமிழாராய்ச்சி நிறுவன இயக்குநர், டாக்டர் ச. வே. சுப்பிரமணியன் அவர்களின் ஆங்கில முன்னுரை (Forword) இந்நூலுக்கு அணி செய்கின்றது.

என்செயல்

இவ்வுரைவளத்துக்கு உரைக்கோவையை முதன்மையாகக் கொண்டு (பிற பதிப்புகளைத் துணையாகக் கொண்டு) உரைகள் அமைக்கப்பட்டன. பாடவேறுபாடுகளும் சுவடி வேறுபாடுகளும் ஆங்காங்கே தரப்பட்டன. எந்தப் பாடம் சிறக்கும் என்பதும் குறிக்கப்பட்டது, அடிக்குறிப்பில் உரைத் தொடர்களுக்கு விளக்கங்களும், பிறர் விளக்கங்களும் தரப்

பட்டன. உரைத்தொடர் விளக்கங்களுக்கு யாழ்ப்பாணம் கணேசய்யர், பூவராகம் பிள்ளை, கு. சுந்தரமூர்த்தி ஆகியோர் விளக்கங்கள் எனக்குப் பெரிதும் துணை செய்தன. ஆங்காங்கே அவர்தம் பெயர்களையும் குறிப்பிட்டுள்ளேன்.

உரையாசிரியர்களிடையே காணப்படும் கருத்து வேறுபாடு களையும் அவைபற்றிய பலர் கருத்துகளையும், என் கருத்து களையும் சூத்திரவுரைகளின் இறுதியில் கொடுத்திருந்தாலும் சில சொற்றொடர்களில் அமையும் கருத்துகளை ஆங்காங்கு அடிக்குறிப்பிலும் கொடுத்துள்ளேன்.

பெயரறியப்படாத ஒருவர் உரையை உரைக்கோவையில் அரசு உரை எனக் குறித்துள்ளனர். இவ்வுரை அரசாங்க நூல் நிலையத்திலிருந்து பெற்றதால் அரசு உரை என்றே குறித்தனர்.

தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் பதிப்பித்துத் தமிழ்நாடு வெளியீடாக (1971) வந்த "தொல்காப்பியம்—சொல்லதிகாரம் —கல்லாடனார் விருத்தி" என்னும் நூலில் இணைப்பாக 'வேறு உரை' என்று அவ்வுரை குறிக்கப்பட்டது.

கு. சுந்தரமூர்த்தியின் விளக்கவுரையுடன் கழகம் வெளியிட்ட (1864) கல்லாடனார் உரையின் இணைப்பாகப் 'பழைய உரை' என்பது காணப்படுவதும் அவ்வுரையேயாகும்.

பழையஉரை என்றால் இளம்பூரணருக்கும் முற்பட்ட தாகலாம் எனும் எண்ணம் தோன்றுமாகலானும், அரசு உரை என ஓர் உரை கூறுதல் வேண்டாமையானும், வேறுரை எனப் பொதுப்படக் கூறுதல் குறிப்பிட்ட ஓர் உரையைக் குறியாமை யானும் பொதுவில் ஒருவர்உரை என்று கூறுவதுதான் பொருந்தும் என எண்ணி ஒருவர் உரை என அமைத்தேன்.

உதாரணம் என்பதை எடுத்துக்காட்டு என அமைத்தார் சுந்தரமூர்த்தி. உதாரணம் என்பதுதான் உரையாசிரியர்களுடைய ஆட்சியாதலின் அதை அப்படியே அமைத்தேன். இளம்பூரணர் அதை வரலாறு என ஆண்டார். அவர் உரையில் அது அப்படியே அமைக்கப்பட்டது. சூத்திரம் நுதலுவது பற்றிக் குறிப்பிட்டுப் பின்னர் உரை எனத் தொடங்கிச் சூத்திரப் பொருள் எழுதினர் இளம்பூரணர். சூத்திரத்தையடுத்து இதன் பொருள் எனத் தொடங்கினர் சேனாவரையர். மற்றையோர் சூத்திரம் நுதலுதல் கூறிப் பொருள் எழுதினர். ஒருவர் மட்டும் 'என்பது' எனத் தொடங்கிப் பொருள் எழுதினர். யாவரும்

சூத்திரப் பொருளைப் பொழிப்பு நிலையிலும் கருத்து நிலையிலும் எழுத, நச்சினார்க்கினியர் மட்டும் பதவுரையாக எழுதினார். இவையாவும் அவ்வப்படியே அமைக்கப்பட்டன

நன்றி

இந்நூல் வெளிவரத்துணை புரிந்த, மயிலம், தமிழ்க்கல்லூரி முதல்வர் து. கார்த்திகேயன், ஷை கல்லூரிப் பேராசிரியர் வே. சிவசுப்பிரமணியன், வேண்டும் நூல்கள் தந்துதவிய க. வா. சச்சிதானந்தம், அவ்வப்போது உசாத்துணையாயிருந்து வரும் டாக்டர் வை இரத்தினசபாபதி, சொல்வகராதி செப்பனிட்டுதவிய டாக்டர் பகவதி, செல்வி ச. சிவகாமி, அவ்வப்போது கருத்துகள் வழங்கிய டாக்டர் க காந்தி பூ. சுப்பிரமணியன், ஆர். ஆளவந்தார் ஆகியோர்க்கு என் நன்றி என்றும் உரியது.

இந்நூல் அச்சாகி வருங்கால் தமது பணிநேர எல்லையும் கடந்து மெய்வருத்தம் பாராது உதவிய அச்சுக் கோப்புச் செல்வியர்க்கும், அச்சேற்றியுதவிய ஸ்ரீ கோமதி அச்சக உரிமையாளர் திரு. சரவணகுமார் அவர்க்கும் நன்றி.

என்னை இப்பணியில் ஈடுபடுத்தி உலகுக்கு அறிமுகப்படுத்தி உயர்த்தி வரும் எங்கள் நிறுவன இயக்குநர் டாக்டர் ச. வே. சுப்பிரமணியன் அவர்கட்கு என்றென்றும் கடப்பாடுடையேன்.

நிறுவனக் குழுத்தலைவரும், தமிழ்நாடு அரசின் கல்வி அமைச்சரும் ஆகிய மாண்புமிகு. செ. அரங்கநாயகம் அவர் கட்கும் குழுவினர்க்கும் நன்றியுடையேன். ஏற்கும் தமிழுலகுக்கு என்றும் நன்றியேன்.

என்னைப் படிக்க வைத்த இடம் திருப்பாதிரிப்புலியூர் ஞானியார் மடாலயம்: என்னைப் படிப்பிக்க வைத்த இடம் மயிலம்-பொம்மபுர ஆதீன மடாலயம். இத்திரு மடங்களின் அடிகள்மார்க்கு என் வணக்கம்.

தாய்தண்டமிழ் நாட்டிற்பெருந் தக்கோர்பலர் முன்னே
போய்தங்குதற் கேற்றம்மிகப் போற்றப்பெறுங் கல்வி
ஏய்தந்துநல் நெறிசேர்ந்திட என்னையருள் செய்த
தாய்தந்தையர் தாட்டாமரை தாழாதிறைஞ் சுவனே.

29-7-1982

ஆ. சி.

DR. S. V. SUBRAMANIAN
Director
International Institute of Tamil Studies
Adaiyaru, T. T. T. I (Post)
Madras-600 113

FOREWORD

Tolkāppiyam Col atikāram deals with morphology and Syntax. All the nine **iyals** of this chapter speak about the words, affixes, word order and sentence construction.

The section **Peyariyal** tells us about nouns, while **Viṉaiyiyal** deals with verbs. **Iṭaiyiyal, Vēṟṟumai yiyal, Vēṟṟumai Mayaṅkiyal** and **Viḷimarapu** are the four, dealing with affixes. **Uriyiyal**, a speciality to Tamil Grammar, generally talks of roots as well as Semantics. The first and last sections, viz. **Kiḷaviyākkam** and **Eccaviyal** talk about the sentence construction, ie. syntax.

Especially the first section **Kiḷaviyākkam** enumerates the word order as well as sentence construction in Tamil. The division of nouns into **uyartiṇai** and **akṟiṇai**, i.e , 'high-class' and 'non-class' is quite unique and is a great achievement in the Grammar of Tolkappiyam. Those who are having intelligence, i e., human beings are considered as high-class, while non-humans and all other things are grouped as non-class. This itself is a very good classification in grammar in those very old days.

Tamil is quite a different language and has its own greatness. It will not be out of place to cite an example in explanation. In English a verb can show only the action and tense; it can be only a part of a sentence. e.g: went. It can take any pronoun, as, he went, she went, it went, they went etc. The verb itself cannot give us who has done the work, whether human or non-human, one or many, male or female, etc.

But in Tamil, the very word, because of its form conveys the complete sense of a sentence. The root **pō**, meaning go, shows along with action and tense other matters like number, gender and person. For e.g: **Pōṉāṉ** is masculine, singular, third person. **Pōṉār** is plural. These are of high-class. In non-class it comes as **pōṉatu** and **pōyiṉa** for singular and plural. The very verb makes the subject explicitly

clear. **Kiḷaviyākkam** gives proper explanations regarding the differentiating endings of these class of words.

Rules and norms regarding language tradition and linguistic usage are many. When the proper noun and demonstrative pronoun come together in a sentence along with the predicate, the demonstrative pronoun must not precede the proper noun, but should follow it. Such rules help in the avoiding of ambiguity. This is a general order not only for Tamil but all the languages in the world.

The noun-adjective sequence is given due thought in this **iyal**. An adjective, that comes to qualify the noun should always precede it. To picturise in words a bird with legs of red colour, the word Order should be, first red, then legs and then bird as, **Ceṅkāl nārai**. This is strictly followed and never to be reversed as **Kāl Cem nārai** or **nārai kāl cem** or other, as it is ungrammatical. So, for a sentence to be clear and senseful the word order must be present. This forms an important part of syntax, explained in **Kiḷaviyākkam**.

Theories regardings questioning and answering also find place here. Varieties of appropriate answers to interrogations is quite interesting in itself.

Pairs of things like eyes, hands, ears, etc, may take a predicate, either singular or plural, according to this **iyal**.

Transformation analysis, surface level and deep level constructions are explicitly dealt with in **Kiḷaviyākkam**. Though the work **Tolkāppiyam** belongs to the B. Cs, it gives many lingustic details to the linguists of the 20th century.

This present volume on **Kiḷaviyākkam** comes as a further addition to the set of **Tolkāppiyam** commentaries compilation editions. Thiru. A Sivalinganar is doing a very good job of compiling all the commentaries of **Tolkāppiyam** and presenting them at one place with his own explanations as well as theories of recent day linguists.

This laudable volume, demanding much labour of the editor makes us look forward to the completion of the great project, which is not quite far in the future.

S. V. SUBRAMANIAN

பொருளடக்கம்

	பக்கம்
முன்னுரை	iii
பதிப்புரை	iv—viii
பொருளடக்கம்	ix—x
Foreword	xi—xiii
சுருக்க விளக்கம்	xiv—xv
System of Transliteration	xvi
தொல்காப்பியம்-சொல்லதிகாரம்-கிளவியாக்கம் (விளக்கம்)	1—24
திணை யிரண்டு	25—59
உயர்திணை முப்பால்	59—69
அஃறிணை யிருபால்	69—72
பேடியும் தெய்வமும்	72—91
உயர்திணை ஆண்பால் ஈறு	91—96
உயர்திணைப் பெண்பால் ஈறு	96—98
உயர்திணைப் பலர்பால் ஈறு	98—107
அஃறிணை ஒன்றன்பாலீறு	107—111
அஃறிணைப் பலவின்பாலீறு	111—116
மேற்கூறப்பட்ட பதினோரெழுத்தும் வினைக்கண் வருதல்	116—123
பாலறி கிளவிகள் மயங்கல் கூடா	123—137
பேடி முடிபு	137—141
செப்பு வினா வழுவற்க	141—153
வினாவும் செப்பாதல்	153—157
செப்பு வழு வமைதி	157—161
செப்பினும் வினாவினும் சினை முதற் கிளவி	161—168
தகுதியும் வழக்கும்	169—181
இனச் சுட்டில்லாப் பண்புகொள் பெயர்	181—190

இயற்கைப் பொருள் மேல் செப்பு	190—194
செயற்கைப் பொருள்மேல் செப்பு	194—196
மேலதற்குப் புறனடை	197—201
இதுவுமது	201—205
பால் ஐயம்	205—212
திணை ஐயம், அஃறிணைப் பால் ஐயம்	212—219
ஐயந்துணிந்துழிச் சொல்லும் மரபு	219—230
வண்ணச்சினைச் சொல் மரபு	230—238
பால்திணை வழுவமைதி	238—245
செலவு வரவு தரவு கொடை பற்றியன	245—249
தரவு வரவு பற்றிய செய்தி	249—253
செலவு கொடை பற்றிய செய்தி	253—258
யாது எவன் பற்றிய செய்தி	258—262
யாது பற்றி மேலும் ஓர் செய்தி	262—267
சினை முதற்சொல் உம்மை பெறல்	267—274
மன்னாப்பொருள் உம்மை பெறல்	274—280
செப்பு வழுவமைதி	280—289
மேலதற்குப் புறனடை	290—296
இதுவும் மேலதன் புறனடை	296—302
இயற்பெயரும் சுட்டுப்பெயரும்	302—309
சுட்டுப்பெயர் முற்பட வருதல்	309—312
சுட்டு முதற் காரணக்கிளவி	312—318
இயற்பெயரும் சிறப்புபெயரும்	318—323
ஒருபொருட் பலபெயர் முடியுமாறு	323—329
திணை வழுவமைதி	329—335
ஒருவன் ஒருத்தி பற்றிய மரபு	335—364
வியங்கோள் எண்ணுப் பெயர்	346—350
வேறு வினைப் பொதுச்சொல் முடியுமாறு	350—357
அது எண்ணில் வருமாறு	357—361
இரட்டைக்கிளவி அமையுமாறு	361—365
ஒருபெயர்ப் பொதுச்சொல் சொல்லுமாறு	366—371

ஒருசார் மரபு பற்றியது	371—382
திணை வழுவமைதி	382—390
பல பொருள் ஒருசொல் பற்றியது	390—411
மரபு வழுக் காத்தல்	411— 19
உயர்திணைப் பெயர்க்கு அஃறிணை முடிபு	417—444
குடிமை முதலியவற்றிற்குப் புறநடை	444—447
காலம்—என்பதற்குப் புறநடை	447—450
இனம் செப்பல்	450—457
பன்மைச்சொல் ஒருமையொடு முடிதல்	457—465
உதாரணச் செய்யுட் பொருள்	466
பயன்படுத்தப்பட்ட நூல்கள்	
சொல்லகராதி	481—492
சூத்திர முதற் குறிப்பகராதி	493

சுருக்க விளக்கம்

அகத்—அகத்திணையியல்

அகம்—அகநானூறு

அவி—அவிநயம்

ஆதி—ஆதித்தர்

ஆ. மொ—ஆங்கில மொழிபெயர்ப்பு

இடை—இடையியல்

இல. வி—இலக்கண விளக்கம்

இல—இலக்குவனார்

இ-ஏ—இன்னொரு ஏடு

இ—ள்—இதன் பொருள்

இச்—எனின்—இச்சூத்திரம் என்னுதலிற்றோ வெனின்

இளம்—இளம்பூரணர்

உ—ம்—உதாரணம்

உயிர், உயிர்ம—உயிர்மயங்கியல்

உயிரீற்—உயிரீற்றுப்புணரியல்

உரி—உரியியல்

உருபி—உருபியல்

எச்ச—எச்சவியல்

எ—டு—எடுத்துக்காட்டு

எழு, எழுத் எழுத்து—எழுத்ததிகாரம்

எ—று—என்றவாறு

ஒரு—ஒருவர்

க. சு.—கமில் சுவலபில்

கல்—கல்லாடனார்

கலி—கலித் தொகை

கிள வி—கிளவியாக்கம்

குற், குற்றிய—குற்றியலுகரப் புணரியல்

சங்கர—சங்கரநமச்சிவாயர்
சிவ—சிவலிங்கனார்
சிவஞா—சிவஞானமுனிவர்
சிலப்—சிலப்பதிகாரம்
சுப்பிர—சுப்பிரமணிய சாஸ்திரியார்
சு. வே—சுவடி வேறுபாடு
சேனா—சேனாவரையர்
செய், செய்யு—செய்யுளியல்
சொல்—சொல்லதிகாரம்
தெய்—தெய்வச்சிலையார்
தொகை—தொகை மரபு
தொல்—தொல்காப்பியம்
தொல்—பொருள்—தொல்காப்பியப் பொருளதிகாரம்
தொன், தொ. வி—தொன்னூல் விளக்கம்
நச்—நச்சினார்க்கினியர்
நன்—நன்னூல்
நூன்—நூன் மரபு
நேமி—நேமிநாதம்
பக்—பக்கம்
பதிற்று—பதிற்றுப்பத்து
பி. இ. நூ—பிற்கால இலக்கண நூல்கள்
புறம்—புறநானூறு
பெய—பெயரியல்
பேரா—பேராசிரியர்
பொ-ள்—பொருள்
மயிலை—மயிலைநாதர்
மரபு—மரபியல்
மலைபடு—மலைபடுகடாம்
மாற—மாறனலங்காரம்
முத்து—முத்துவீரியம்
முல்லை—முல்லைப்பாட்டு
மொழி—மொழி மரபு
வினை—வினையியல்
வீர—வீரசோழியம்
வெள்ளை—வெள்ளைவாரணனார்
வேற், வேற்றுமையியல்
வேற்—மய—வேற்றுமை மயங்கியல்

System of Transliteration

உயிர் எழுத்துகள் —Vowels

	இலக்குவனார்	கமீல்சுவலபில்
அ	a	a
ஆ	ā	ā
இ	i	i
ஈ	ī	ī
உ	u	u
ஊ	ū	ū
எ	e	e
ஏ	ē	ē
ஐ	ai	ai
ஒ	o	o
ஓ	ō	ō
ஔ	au	au

மெய்யெழுத்துகள் — Consonants

	இலக்குவனார்	கமீல்சுவலபில்
வல்லினம்		
க்	k	k
ச்	s	c
ட்	ṭ	ṭ
த்	th	th
ப்	p	p
ற்	ṟ	ṟ
மெல்லினம்		
ங்	ṅ	ṅ
ஞ்	ñ	ñ
ண்	ṇ	ṇ
ந்	n	n
ம்	m	m
ன்	ṉ	ṉ
இடையினம்		
ய்	y	y
ர்	r	r
ல்	l	l
வ்	v	v
ழ்	ḻ	ḻ
ள்	ḷ	ḷ

தொல்காப்பியம்-சொல்லதிகாரம்

(உரைவளம்)

கிளவியாக்கம்

இளம்பூரணர்:

இவ்வதிகாரம் சொல்லிலக்கணம் உணர்த்தினமை காரணத் தாற் சொல்லதிகாரம் என்னும் பெயர்த்து. சொல் என்பது* எழுத் தொடு புணர்ந்து பொருள் அறிவுறுக்கும் ஓசை. அதிகாரம் என்பது முறைமை.

மற்று, அச்சொல் எனைத்து வகையான் உணர்த்தினானோ வெனின், எட்டு வகைப்பட்ட இலக்கணத்தான் உணர்த்தினான் என்க. அவையாவன: இரண்டு திணை வகுத்து, அத் திணைக்கண் ஐந்து பால் வகுத்து, எழுவகை வழு வகுத்து, எட்டு வேற்றுமை வகுத்து, அறுவகை ஒட்டு வகுத்து, மூன்று இடம் வகுத்து, மூன்று காலம் வகுத்து, இரண்டு இடத்தான் ஆராய்தல்.

இரண்டு திணையாவன[1]—உயர்திணையும் அஃறிணையும்.

ஐந்து பாலாவன— ஒருவன், ஒருத்தி, பலர், ஒன்று, பல என்பன.[2]

சுவடி வேறுபாடு

1. என்பன.
2. என இவை'

* எழுத்தொடு புணர்ந்து என்பதற்கு, 'எழுத்தாதல் தன்மையொடு புணர்ந்து' எனப் பொருள் கூறுவர் சேனாவரையர். அவர் உரையிற் காண்க.

எழுவகை வழுவாவன—திணைவழு, பால்வழு, இடவழு, கால வழு, செப்பு வழு, வினா வழு, மரபு வழு என்பன.

எட்டு வேற்றுமையாவன—பெயர், ஐ, ஒடு, கு, இன், அது கண், விளி என்பன.

அறுவகை ஒட்டாவன —** வேற்றுமைத் தொகை, உவமைத் தொகை, வினையின் தொகை, பண்பின் தொகை, உம்மைத் தொகை, அன்மொழித் தொகை என்பன.

மூன்று இடமாவன—தன்மை, முன்னிலை, படர்க்கை என்பன.

மூன்று காலமாவன—இறந்த காலம், நிகழ்காலம், எதிர் காலம் என்பன.

இரண்டு இடமாவன—வழக்கிடம், செய்யுளிடம் என்பன.

சேனாவரையர்

* தன்தோள் நான்கின் ஒன்றுகைம் மிகூஉம்
களிறுவளர் பெருங்கா டாயினும்
ஒளி பெரிது சிறந்தன்று அளியஎன் நெஞ்சே.

ஆதியில் தமிழ்நூல் அகத்தியர்க் குணர்த்திய
மாதொரு பாகனை வழுத்துதும்
போதமெய்ஞ் ஞானம் திகழ்தரற் பொருட்டே

தவளத் தாமரைத் தாதார் கோயில்
அவளைப் போற்றுதும் அருந்தமிழ் குறித்தே.

சந்தனப் பொதியத் தடவரைச் செந்தமிழ்ப்
பரமா சாரியன் பதங்கள்
சிரமேற் கொள்ளுதும் திகழ்தரற் பொருட்டே

** ஒட்டு=பிளவுபடாமல் ஒட்டி நிற்பது; அறுவகைத் தொகையும் அவ்வாறு பிளவுபடாமல் ஒட்டி நிற்றலின் அவை ஒட்டு எனப்பட்டன.

* இப்பாடல்கள் சேனாவரையர் உரைத் தொடக்கத்தில் முதற் சூத்திரத்திற்கு முன்னர்க் காணப்படுகின்றன. இவற்றைச் சேனாவரையரே ஆண்டிருப்பார் என்பதை அவர் உரையாக உள்ள ஏடுகளில் காணப்படுதலால் அறியலாம்.

[1]நிறுத்த முறையானே சொல் உணர்த்திய எடுத்துக் கொண்டார்; அதனால் இவ்வதிகாரம் சொல்லதிகாரம் என்னும் பெயர்த் தாயிற்று.

சொல்லாவது எழுத்தொடு [2]ஒருபுடையான் ஒற்றுமை யுடைத்தாய்ப் பொருள் குறித்து வருவது. [3]உரையாசிரியரும் 'எழுத்தாதல் தன்மையொடு புணர்ந்து' என்பார் 'எழுத்தொடு புணர்ந்து' என்றாராகலின், ஒருபுடை யொற்றுமையே கூறினார். தன்மையொடு புணர்ந்தென்னாக்கால், [4]ஓரெழுத் தொருமொழிக்கு எழுத்தொடு புணர்தல் இன்மையின் சொல்லாதல் எய்தா தென்க.

பொருள் குறித்து வாராமையின் அசைநிலை சொல்லாகா வெனின்,

---

1. நிறுத்த முறை—எழுத்து, சொல், பொருள் என்று நிரல்பட நிறுத்திய முறை. எழுத்து எழுத்ததிகாரத்தில் கூறப்பட்டது. ஈண்டு சொல் உணர்த்திய எடுத்துக் கொள்ளப் பட்டது.

2. ஒருபுடையான் ஒற்றுமை — அரசன் என்பது, நான்கெழுத்தாலாயது என்றாலும் அ, ர, ச, ன் எனத் தனித்தனி யெழுத்தாம் தன்மையிழந்து சொல் நிலைப் படுதலின் சொல் எனப்படுமேயன்றி எழுத்தெனப் படாது: அதனால் அரசன் என்பதில் அ, ர, ச, ன் என்பன எழுத்துகளல்ல; எழுத்துத் தன்மையன எனக் கொள்க.

3. உரையாசிரியர் என வருமிடம் எங்கும் இளம்பூரணர் எனக் கொள்வாரும்; இளம்பூரணரல்லர் வேறானவர் எனக் கொள்வாரும் உண்டு. உரையாசிரியர் கூற்றாகச் சேனாவரையர் கூறுமிடங்களில் சில இளம்பூரணர் உரையில் இல்லாமையும் காணத்தக்கது.

4. கா (சோலை) என்னும் ஓரெழுத்து ஒருமொழி பிறிதொரு எழுத்தொடு புணர்தல் இல்லையாதலின் அது சொல் எனப்படாமல் இல்லை. அதனால் எழுத் தொடு புணர்தல் என்பதற்கு எழுத்தொடு எழுத்து சேர்தல் எனப்பொருள் கூறலாகாது.

"ஆவயின் ஆறும் முன்னிலை யசைச்சொல்" (சொல். 274)
என்றும்,

"வியங்கோள் அசைச்சொல்" (சொல். 273)

என்றும் ஓதுதலான், அவையும் இட முதலாகிய பொருள் குறித்து வந்தன வென்க.

"யாகா பிற பிறக்கு" (சொல். 279)

என்னுந் தொடக்கத்தனவோ எனின், அவையும் மூன்றிடத்திற்கு முரியவாய்க் [5]கட்டுரைச் சுவைபட வருதலிற் பொருள் குறித்தனவேயாம். இக்கருத்தே பற்றியன்றே ஆசிரியர்,

"எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே" (சொல். 15.)
என்றோதுவா ராயிற்றென்க.

சொற்றான் இரண்டு வகைப்படும்; தனிமொழியும் தொடர் மொழியும் என. அவற்றுள், தனிமொழியாவது [6]சமய வாற்றலாற் பொருள் விளக்குவது. தொடர்மொழியாவது [7]அவாய் நிலையானும் [8]தகுதியானும் [9]அண்மை நிலையானும் இயைந்து பொருள் விளக்கும் தனிமொழியீட்டம்.

---

5. கட்டுரைச் சுவை—செய்யுளின் ஓசையின்பம்.

6. சமய ஆற்றல்—காலம் காலமாக வழங்கப்பட்டு வரும் தன்மை. நிலம், நீர் முதலியன அவ்வாறு வழங்கி வருவன. நட, வா, முதலிய வினைகளும் கொள்க.

7. அவாய் நிலை—ஒரு சொல் ஒரு சொல்லை இன்றியமையாது எதிர் பார்த்து (விரும்பி) நிற்கும் நிலை. 'காற்று வீசும்' என்ற தொடரில் காற்று என்று கூறிய மாத்திரத்தில் அது பற்றியறியும் விருப்பு நமக் கேற்படுதலின் அச்சொல் அடுத்த சொல்லை எதிர் நோக்கியுளது; அச்சொல் வீசும் என்பது. அதனால் காற்று என்னும் சொல் வீசும் என்பதை அவாவித் தொடர்ந்தது.

8. தகுதி—இயைபான பொருத்தம். நெருப்பு, என்பது சுடுவது. அது அதற்குத் தகுதி. அத்தகுதிக்கேற்ப 'நெருப்பால் சுடு' என்ற தொடர் அமைவது தகுதியால் அமைவதாம்.

9. அண்மை நிலை—சொற்களைத் தொடர்ந்து கூறுங்கால். கால இடையீடு இல்லாமல் நெருக்கமாகக் கூறுதல் 'முருகன் உலகம் உவப்பத் தோன்றினான்' என்ற தொடரை இணைந்த நிலையில் கூறாமல் தனிச் தனிச் சொல்லாக நிறுத்தி நிறுத்திக் கூறினால் பொருள் சிறவாது.

பெயர்ச் சொல்லும், •வினைச் சொல்லும், இடைச் சொல்லும், உரிச்சொல்லும் எனத் தனிமொழி நான்கு வகைப் படும் :—மரம் என்பது பெயர்ச் சொல்; உண்டான் என்பது வினைச்சொல்; மற்று என்பது இடைச்சொல்; நனி என்பது உரிச்சொல்.

இருமொழித் தொடரும் பன்மொழித் தொடரும் எனத் தொடர்மொழியிரண்டு வகைப்படும் :—சாத்தன் வந்தான் என்பது இருமொழித் தொடர்; 'அறம் வேண்டியரசன் உலகம் புரந்தான்' என்பது பன்மொழித் தொடர்.

[10]அதிகாரம் என்னும் சொற்குப் பொருள் பலவுள

10. அதிகாரம் என்பது தொடர்பு, தொகுதி, ஆணை முதலிய பல பொருளது. தமிழ்மொழிச் சொல் பற்றிக் கிளவியாக்கம் முதல் எச்சவியல் ஈறாக ஒன்பது ஓத்துகள் கூறுகின்றன ஆதலின் அவ்வொன்பதற்கும் பொதுப் பெயராகச் சொல்லதிகாரம் எனக்கூறப் பட்டது. இது ஓரிடத்துநின்றசொல் பல சூத்திரங் களோடு சென்றியைதலாகும்.
ஒன்றனதிலக்கணம் பற்றிவரும் பல சூத்திரத் தொகுதிக்கு, "செப்பும் வினாவும் வழாஅல் ஓம்பல்" (13) என்னும் நூற்பாப் பொருள் பற்றியே "வினாவும் செப்பே" (14) "செப்பே வழீஇயினும்" (15) "செப்பி னும் வினாவினும்" (16) என்னும் நூற்பாக்கள் தொடர்ந்து கூறுவதைக் கொள்க. ஒரு நூற்பாவில் உள்ள ஒரு சொல்லை அடுத்த நூற்பாவிற்கொண்டு கூட்டுதலையும் அதிகாரத்தால் கூட்டுதல் என்பர்.

"அதிகாரம் அதிகரித்தல் : அஃது இருவகைப் படும். அவற்றுள் ஒன்று; வேந்தன் இருந்துழியிருந்து தன் நிலம் முழுவதும் தன் ஆணையின் நடப்பச் செய்வதுபோல ஒருசொல் நின்றுழிநின்று பல சூத்திரங் களும் பல ஓத்துக்களும் தன் பொருளே நுதலிவரச் செய் வது, இரண்டு. சென்று நடாத்தும் தண்டத் தலைவர் போல ஓரிடத்து நின்றசொல் பல சூத்திரங்களோடும் சென்றியைந்து தன் பொருளைப் பயப்பிப்பது. இவற் றிற்கு முறையே வடநூலார் யதோத்தேச பக்கம் எனவும், காரியகால பக்கம் எனவும் கூறுப. இதுசேனா வரையர் உரையானும் உணர்க. அவற்று ஈண்டு அதிகாரம் என்பது முன்னையது"—சிவஞானமுனிவர். முதற்சூத்திர விருத்தி.

வேனும், ஈண்டதிகாரம் என்றது ஒரு பொருள் நுதலிவரும் பலவோத்தினது தொகுதியை யென்க. வடநூலாரும் ஓரிடத்து நின்ற சொற் பல சூத்திரங்களோடு சென்றியைதலையும், ஒன்றன திலக்கணம் பற்றிவரும் பல சூத்திரத் தொகுதியையும் 'அதிகாரம்' என்ப. சொல்லதிகாரம் சொல்லையுணர்த்திய அதிகாரம் என விரியும். அச்சொல்லை யாங்ஙனம் உணர்த்தி னானோ வெனின், [11]தம்மையே யெடுத்தோதியும் இலக்கணம் கூறியும் உணர்த்தினான் என்பது.

தெய்வச்சிலையார்

இவ்வதிகாரம் என்ன பெயர்த்தோவெனின் மேற் சொல்லப் பட்ட எழுத்தினான் இயன்று பொருளறிவிக்குஞ் சொற்களைப் பாகுபடுத்துதலாற் சொல்லதிகாரம் என்னும் பெயர்த்து. அஃது யாங்கனம் உணர்த்தினார் எனின், சொற்களைப் பொருள் நிலைமை நோக்கித் தொடர்மொழி, தனிமொழி என இருவகைப் படுத்து, அத்தொடர்மொழியை அல்வழித்தொடர்,வேற்றுமைத் தொடர் என இருவகைப்படுத்து, அவ்விருவகைத் தொடரும் செப்பும் வினாவுமாக நிகழ்தலான், அவற்றை வழுவாமற் கூறு தற்காக முற்படச் சொல் நிலைமையாற் பொருளை உயர்திணை அஃறிணையென இருவகைப்படுத்து, அவ்வுயர்திணையுணர்த்தும் சொற்களை, ஒருவனையறியுஞ் சொல், ஒருத்தியையறியுஞ் சொல், பலரையறியுஞ் சொல் என மூவகைப் படுத்து, அஃறிணையுணர்த்துஞ் சொற்களை ஒன்றினை யறியுஞ்சொல், பலவற்றையறியுஞ்சொல் என இருவகைப் படு(த்த......வவகைப் பட்ட சொல்லும், பெயர்ச் சொற்கண்ணும், வினைச் சொற் கண்ணும் வருதலிற் பெயராற் பாலறியப்படுஞ் சொல்லி னானும்) அமைக்க வேண்டுஞ் சொற்களை யெடுத்தோதி, அதன் பின் வேற்றுமைத் தொடர் கூறுவார் மயங்கா மரபினவாகி வருவன எழுவகை வேற்றுமையுணர்த்தி, அதன்பின் அவ் வேற்றுமைக்கண் மயங்குமாறுணர்த்தி, அதன்பின் எட்டாவ தாகிய விளி வேற்றுமை யுணர்த்தி, அதன்பின் தனிமொழிப்

11. தம்மையே யெடுத்தோதுதல் 'குடிமை ஆண்மை' (56) 'காலம் உலகம்'(57) எனச்சொற்களை விதந்து கூறுதல். இலக்கணங்கூறல் : 'னஃகான் ஒற்றே ஆடூஉ வறிசொல்' (5) எனக் கூறுதல்.

பகுதியாகிய பெயர்ச் சொற் பாகுபாடும், வினைச்சொல் இடைச் சொல் உரிச்சொற் பாகுபாடும் உணர்த்தி; அதன்பின் சொற்கள் விகாரப்படுமாறும், ஒட்டுமாறும், எஞ்சுமாறும், பிறவும் உணர்த் தினா ரென்க. அவற்றுள் அல்வழித் தொடர் கிளவியாக்கத் துள்ளும், வேற்றுமைத்தொடர் வேற்றுமையோத்துள்ளும் வேற்றுமைமயங்கியல், விளிமரபு என்பனவற்றுள்ளும், தனி மொழிப் பகுதியாகிய பெயரிலக்கணம் பெயரியலுள்ளும், வினை யிலக்கணம் வினையியலுள்ளும், இடைச்சொல் இலக்கணம் இடைச்சொல் லோத்தினுள்ளும், உரிச்சொல் இலக்கணம் உரிச் சொல் லோத்தினுள்ளும், எஞ்சியவெல்லாம் எச்சவியலுள்ளும் உணர்த்தினார் என்று கொள்க. இவ்வகையினான் ஓத்தும் ஒன்பதாயிற்று.

பொருளுணர்த்துவன தனிமொழியாதலால், தொடர்மொழி யென வகுத்ததனாற் பயன் என்னை யெனின், பொருள் உணர்த்துதற்குச் சிறப்புடையன தொடர்மொழியென்று கொள்க. என்னை சிறந்தவாறெனின், சாத்தன் என்றவழிப் பொருண்மை மாத்திரம் உணர்த்துதலல்லது கேட்டார்க்கொரு பயன்பட நில்லாமையின், 'சாத்தன் உண்டான்' எனப் பயன்பட வரூஉந் தொடர்மொழியே பொருள் இனிது விளக்குவது என்க.

சொல்லிலக்கணம் அறிந்ததனாற் பயன், தொடர்மொழி யாகிய வாக்கியத்தினைப் பிரித்துப் பெயர்ச்சொல், வினைச் சொல், இடைச்சொல், உரிச்சொல் எனக் குறியிட வேண்டுதலின் அதன்பிற் கூறப்பட்டது.

[1]இனி எழுவாய் வேற்றுமையையும், விளிவேற்றுமையையும் எழுத்ததிகாரத்துள் அல்வழிக்கண்ணே முடித்தார் ஆதலான்

---

1. எழுத்ததிகாரப் புணரியலில் வேற்றுமையென்பன ஆறாகக்கூறப்பட்டுள்ளன. "ஐ ஒடு கு இன் அது கண் என்னும், அவ்வாறென்ப வேற்றுமை யுருபே" (புணரியல் 11) என்னும் நூற்பாவில் முதல் வேற்றுமை யும் எட்டாம் வேற்றுமையும் கூறப்படவில்லை. இதன் உரையில் இளம்பூரணர் இவ்விரண்டையும் அல்வழியிற் சேர்த்துக் கூறியதும் காண்க.

அவற்றை வேற்றுமைத்தொடர் என்றல் அமையாதெனின், அவை வேற்றுமையென்று குறிபெறுதலானும், [2]எழுவாய் வேற்றுமை கிளவியாக்கத்தோடு மணந்து கிடப்ப வைத்தலானும் விளிவேற்றுமை எழுவாயது திரிபாதலானும் அமையும் என்க.

நச்சினார்க்கினியர்

இவ்வதிகாரம் என்ன பெயர்த்தோ வெனின், மேற் பாயிரத்துள் 'எழுத்துஞ் சொல்லும் பொருளும் நாடி' என நிறுத்த முறையானே எழுத்து உணர்த்திச் சொல் உணர்த்துகின்றார் ஆதலின், சொல்லதிகாரம் என்னும் பெயர்த்து. அது 'சொல்லை யுணர்த்திய முறைமை' என விரியும்.

சொல் என்றது, எழுத்தினான் ஆக்கப்பட்டு இருதிணைப் பொருட் டன்மையும் ஒருவன் உணர்தற்குக் கருவியாம் ஓசையை. ஈண்டு 'ஆக்கப்படுதல்' என்றது, ஒரு சொல் கூறுமிடத்து ஓரெழுத்துப் போக ஓரெழுத்துக் கூறுவதல்லது ஒரு சொல்லாக முடியும் எழுத் தெல்லாம் சேரக் கூறலாகாமையின், அவ்வெழுத்துக்கள் கூறிய அடைவே *போயிற்றேனும் கேட்டோர் கருத்தின் கண் ஒரு தொடராய் நிலைபெற்று நின்று பொருளை அறிவுறுத்தலை. ஆயின், ஓரெழுத் தொருமொழிக்கு ஆக்குதல் இன்றால் எனில், ஓரெழுத் தொருமொழியைக் கூறியக் கால் அதுவும் செவிப் புலனாய்க் கருத்தின் கண் நிகழ்ந்து பின்னர்ப் பொருளை ஆக்குதலின், அதுவும் ஆக்குந் தன்மை யுடைய தாயிற்று.

இருதிணைப் பொருளுமாவன, ஐம்பாற் பொருளின் பகுதி யாகிய காட்சிப் பொருளும், கருத்துப் பொருளும், அவற்றின்

---

2. எழுவாய் வேற்றுமை கிளவியாக்கத்துள் மணந்து (கலந்து) கிடத்தலாவது : — கிளவியாக்கத்துள் 11, 13—16, 19, 20—22, 31, 32, 38, 39, 52—55 27 முதலிய எண்கள் உள்ள நூற்பாக்கள் எழுவாய் வேற்றுமைத் தொடர்புடையனவாய் இருத்தல்,

* வே :

1. போயின வேனும்

பகுதியாகிய ஐம்பெரும்பூதமும், அவற்றின் பகுதியாகிய இயங்குதிணையும் நிலைத்திணையுமாம். இவையெல்லாம் ஐம்பாலாய் அடங்கின.

* இனிப் பொருட் டன்மையாவது, மக்கட்டன்மையும் இயங்குதிணைத் தன்மையும் நிலைத்திணைத் தன்மையுமாம். இத்தன்மை, ஒருபொருட்குக் கேடு பிறந்தாலும் தனக்குக் கேடின்றித்தான் ஒன்றேயாய்ப் பலவகைப்பட்ட பொருள் தோறும் நிற்கும் என்றுணர்க.

கருவியாவது, அப்பொருள் தன்மையை ஒருவன் உணர்தற்கு அவ்வோசை கருவியாய் நிற்றல். இதனை ஐம் பொறிகள் ஒருவன் பொருளை உணர்தற்குக் கருவியாய் நின்றாற் போலக் கருவியாய் நிற்கும் என்றுணர்க.

இனி ஓசையைச் சொல என்றீரேல், கடலொலி சங்கொலி விண்ணொலி முதலியனவும் சொல்லாகாவோ எனின், சொல் 'இது முன்பு யான் உணர்ந்த எழுத்து' என்றே பின்பு கூறியக் காலும் உணரநிற்றலின்,கேடின்றி நிலைபேறு உடையதாயிற்று. இவை அங்ஙனம் உணர்தல் ஆற்றாமையானும், எழுத்தினான் ஆக்கப்படாமையானும் நிலைபேறு இலவாயின; ஆதலின் சொல் எனப்படா. அன்றியும், 'ஓசை, அரவம், இசை' என்பன போலன்றிக் 'கிளவி, சொல், மொழி' என்பன எழுத்தினான் ஆகிய ஓசையை யுணர்த்தும். முற்கு, வீளை முதலியன எழுத்தினான் ஆக்கப்படாமையின் சொல் ஆகா.

இனி ஒருசாரார், எழுத்தினான் ஆகிய ஓசையையும் கெடும் என்பர். உரையாசிரியரும், 'சொல் என்பது எழுத்தினான் ஆக்கப்பட்டுத் திணை அறிவுறுக்கும் ஓசை என்றும், 'தன்னை உணர நின்ற வழி எழுத்து எனப்படும்; தான் இடை நின்று பொருள் உணர்த்திய வழிச் சொல் எனப்படும்' என்றும் கூறினார் இக்கருத்தே பற்றி.

---

* மக்கள் தன்மையுடையவர் சாத்தன், கொற்றன், ஆயன் முதலியோர் எனின், அவருள் சாத்தன் இறந்தால், மக்கள் தன்மை என்பதுமற்றையோரிடம் நிலைத்திருக்கும். ஒருமரம்அழிந்தால் மரத்தன்மையே அழிந்துவிடாது. உள்ளனவும் தோன்றுவனவு மாகிய மரங்களி லெங்கும் இருக்கும். இதுவே பொருள் தன்மையாம்.

இனிச் சேனாவரையர் 'சொல் பொருள் குறித்து வரும்' என்றாரால் எனின், ஒருவன் பொருள் தன்மையை யுணர்தற்குச் சொல் கருவியாய் நிற்றல் அன்றித் தனக்கு ஓர் உணர்வு இன்மையின் தான் ஒரு பொருளைக் கருதி நிற்றல் இன்று என மறுக்க*

அச்சொல்லை எட்டு வகையானும், எட்டிறந்த பலவகையானும் உணர்த்துப. இரண்டு திணையும், ஐந்துபாலும், ஏழு வகை வழுவும், எட்டு வேற்றுமையும், ஆறு ஒட்டும், மூன்று இடமும், மூன்று காலமும், வழக்கும் செய்யுளுமாகிய இரண்டு இடமும் என எட்டு வகையான் உணர்த்துப. இனி எட்டு இறந்த பல வகையாவன: சொல் நான்கு வகை என்றலும், அவற்றையே பலவாகப் பகுத்தலும், விகாரவகையும், பொருள்கோள் வகையும், செய்யுட்கு உரிய சொல் நான்கு என்றலும், பிறவுமாம்.

அச்சொற்றான், தனிமொழியும் தொடர் மொழியும் என இருவகைப்படும். தனிமொழி பொருள் விளக்குமாறு:

நிலந்தீ நீர்வளி விசும்போ டைந்தும்
கலந்த மயக்கம் உலகம் ஆதலின்
இருதிணை யைம்பால் இயல்நெறி வழாஅமைத்
திரிவில் சொல்லொடு தழாஅல் வேண்டும் (மரபியல் 89)

என்னும் மரபியற் சூத்திரத்தான் உணர்க.

தொடர்மொழி, இருமொழித் தொடரும் பன்மொழித் தொடரும் என இருவகைப்படும். அவை தொடருங்கால் பயனிலை வகையானும் தொகைநிலை வகையானும் எண்ணு நிலை வகையானும் தொடரும். இனி வடநூலார் கூறிய வாறே அவாய் நிலையானும் தகுதியானும் ‡தொடரும் என்றலுமாம்.

---

* "ஒருவன் ஒரு பொருளின் தன்மையை யுணர்தற்குச் சொல் கருவியாய் நிற்றல் பற்றிச் சொல்லுவானது கருதுதல் தொழிலைச் சொல்மேல் ஏற்றிச் சொல் பொருள் குறித்து வரும் என்றனரேயன்றிச் சொல்லிற்கு உணர்வின்று என்பது சேனாவரையர் அறியாததன்று. ஆதலின் இம்மறுப்புப் பொருத்தமுடையதன்று" கு. சுந்தரமூர்த்தி.

‡ இவ்விடத்தில் 'அண்மை நிலையானும் என்பது விடுபட்டிருக்கலாம் என்பர் கு. சுந்தரமூர்த்தி; பொருந்துவதே.

(உ-ம்) சாத்தன், உண்டான், மன், நனி என்பன தனிமொழி.

சாத்தன் வந்தான்—இது பயனிலைத் தொடர். யானைக் கோடு—இது தொகைநிலைத்தொடர்; நிலம் நீர்—இது எண்ணு நிலைத் தொடர். இவை இருமொழித் தொடர்.

'அறம் வேண்டி அரசன் உலகம் புரக்கும்' என்பது பன்மொழித் தொடர்.

கல்லாடனார்

இவ்வதிகாரம் என்னுதலி எடுத்துக் கொள்ளப்பட்டதோ வெனின், அதிகார நுதலியதூஉம், அதிகாரத்தினது பெயர் உரைப்பவே விளங்கும். இவ்வதிகாரம் என்ன பெயர்த்தோ வெனின், சொல்லதிகாரம் என்னும் பெயர்த்து. அஃது இடுகுறியோ, காரணக்குறியோ வெனின், காரணக் குறி. என்ன காரணம் எனின், சொல்லுணர்த்தினமை காரணத்தின் என்பது. என்னை? கிளவியாக்கம் எழுவாயாக எச்சவியல் இறுதி யாகக் கிடந்த ஒன்பது ஓத்துக்களுள்ளும் சொல்லின்கட் கிடந்த விகற்பமெல்லாம் ஆராய்ந்தார் எனக் கொள்க.

அதிகாரம் என்ற பொருண்மை என்னையெனின், முறைமை.

அவ்வோத்துக்களுள்ளும் எனைத்து வகையான் உணர்த்தி னானோ வெனின், எட்டு வகைப்பட்ட இலக்கணத்தினான் உணர்த்தினான் என்பது. அவை உணரச் சொல் உணர்ந்தானாம்.

அவை யாவையெனின், இரண்டுதிணை வகுத்து, அத்திணைக்கண் ஐந்து பால் வகுத்து, ஏழு வழு வகுத்து, எட்டு வேற்றுமை வகுத்து, ஆறுதொகை வகுத்து, மூன்று இடம் வகுத்து, மூன்று காலம் வகுத்து, இரண்டிடத்தான் [1]ஆராய்ந்தான் என எட்டாவன.

சு. வே ;

1. ஆராய்ந்தானாம் என்பது. இப்பாடமே நன்று.

[2]இவற்றுள் வழுவென்பது தமை....ஃசொல்லிற் கிலக்கணமா மாறு என்னையோ வெனின், இன்மை முகத்தான் இலக்கணமாம் என்றுணர்க.

அவற்றுள் இரண்டுதிணையாவன :—உயர்திணையும் அஃறி ணையுமாவன.

ஐந்து பாலாவன : — ஒருவன், ஒருத்தி, பலர், ஒன்று, பல என இவை.

ஏழுவழுவாவன : — திணைவழூஉ, பால்வழூஉ, இடவழூஉ, கால வழூஉ, மரபுவழூஉ, செப்பு வழூஉ, வினாவழூஉ என இவை.

வேற்றுமை யெட்டாவன : — எழுவாய் வேற்றுமை முதலாக விளிவேற்றுமை யீறாகக் கிடந்த இவை.

தொகை ஆறாவன : — வேற்றுமைத் தொகை, உவமத் தொகை, வினைத் தொகை, பண்புத் தொகை, உம்மைத் தொகை, அன்மொழித் தொகை என இவை.

மூன்று இடமாவன : — தன்மை, முன்னிலை, படர்க்கை.

---

2. "சொற்கு இலக்கணமாமாறு என்னையோவெனின் இன்மை முகத்தானும் உண்மை முகத்தானும் அமைந்த இலக்கணமாம் என்றுணர்க." (கழகப் பதிப்பு 1964)

"இவற்றுள் வழு என்பது அமையாச் சொல்லிற்கு இலக்கணமாமாறு என்னையோ வெனின் இன்மை முகத்தான் இலக்கணமாம் என்றுணர்க" டாக்டர் தெ. பொ. மீனாட்சி சுந்தரனார் பதிப்பு. (1971). இன்மை முகத்தாற் கூறுதலாவது "வேறு வினைப் பொதுச் சொல் ஒருவினை கிளவார்" (கிளவியாக். 46) என எதிர்மறை முகத்தாற் கூறுதல். உண்மை முகத்தாற் கூறுதலாவது "னஃகான் ஒற்றே ஆடூஉ வறி சொல்" (கிளவியா. 4) என உடன்பாட்டு முகத்தால் கூறுவது. இவ்வகையில் வழுவெல்லாம் விலக்கு முகத்தான் (எதிர் மறுத்து) கூறுதலின் வழுவும் சொல்லிற்கிலக்கணம் கூறுவதாயிற்று.

மூன்றுகாலமாவன :— இறந்த காலம், நிகழ்காலம், எதிர் காலம்.

* இரண்டு இடமாவன : — ....று சொல்லிலக்கணங்களுள் எட்டென்றற்கு விதி உரையிற் கோடல் என உணர்க.

இனிப்பிற இலக்கணம் உண்டெனினும், இவை பெரும் பான்மைய, என்றாதல் அவையு மிவற்றுளடங்கு......ற்றுச் சொல்லென்ற பொரு...........யென்றவாறு.

ஆனால் கடலொலியும் காரொலியும் விண்ணொலியும் சொல்லாம் பிறவெனின், அற்றன்று; ஓசையெனினும், அரவம் எனினும், இசையெனினும், ஒலியெனினும் எழுத்தானாம் ஓசைக்கும் எழுத்து அல் ஓசைக்கும் பொது.

கிளவியெனினும், மாற்றம் எனினும், மொழியெனினும் இவையெல்லாம் எழுத்தொடு புணர்ந்து பொருளறிவுறுக்கும் ஓசைமேல் நிற்கும்.

எனவே, எழுத்தொடு புணராது பொருளறிவுறுக்கும் ஓசையும் உளவோ வெனின், உள. அவை, முற்கும், வீளையும், இலதையும், அனுகரணமும் என்றித் தொடக்கத்தன. அவை சொல் எனப்படா. பொருளறிவுறுக்கும் எழுத்தொடு புணரா வோசை மேலதன்றாராய்ச்சி.

---

*இப்பகுதி திருத்தமாகக் கழகப்பதிப்பில் காணப்படுகின்றது. அது :—

"இரண்டு இடமாவன வழக்கும் செய்யுளுமாகிய இவை. சொல்லிலக்கணங்கள் எட்டு என்றற்கு விதி உரையிற் கொடல் என உணர்க. இனிப் பிற இலக்கணமுண்டெனினும், இவை பெரும்பான்மைய வென்றாதல் அவையும் இவற்றுள் அடங்குமென்றாதல் கொள்ளப் படும் என்க. மற்றுச் சொல் என்றதற்குப் பொருண்மை யென்னையெனின், ஓசை யென்றவாறு"

"இனிப்பிற இலக்கணம் உண்டு எனினும் இவை பெரும்பான்மைய என்னுதல். அவையும் இவற்றுள் அடங்கும்" தெ. பொ. மீ. பதிப்பு

எனவே, எழுத்தல் ஓசையும், எழுத்தொடு புணராது பொருளையறிவிக்கும் ஓசையும், எழுத்தொடு புணர்ந்து பொருளையறிவிக்கும் ஓசையும், எழுத்தொடு புணர்ந்தே பொருளை யறிவுறுத்தாது, இறிஞி, மிறிஞி யென்றாற் போல வரும் ஓசையும் என ஓசை நான்கு வகைப்படும்.

அந்நான்கினுள்ளும், பின்னின்ற விரண்டும் இவ்வதிகாரத் தாராயப் படுகின்றன.

மேலதிகாரத்தோடு இவ்வதிகாரத்திடை இயைபு என்னையோ எனின், மேற்பாயிரத்துள், எழுத்துஞ் சொல்லும் பொருளும் என நிறுத்தார்; நிறுத்த முறையானே எழுத் துணர்த்திச் சொல் உணர்த்திய எடுத்துக் கொண்டார் என்பது.

எழுத்தோடு சொல்லிடை வேற்றுமையென்னை யெனின், தன்னை [1] யுணர நின்றவழி எழுத்தெனப்படும். தான் இடை நின்று பொருளுணர்த்தியவழிச் சொல் எனப்படும்.

ஒருவர்

இவ்வதிகாரம் என்ன பெயர்த்தோ வெனின், சொல்லதி காரம் என்னும் பெயர்த்து. சொல்லதிகாரம் என்பது இடு குறியோ வெனின், காரணக்குறி. என்னை? சொல் உணர்த்தின மையாற் பெற்றாம் என்க. அதிகாரமாவது முறைமை யென்ற வாறாம்.

*இனிச் சொல் என்ற பொருண்மை யென்னையெனின், ஓசையென்றவாறாம். ஓசையைச் சொல் என்றீரால், கடலோ சையும் சங்கொலியும் விண்ணொலியும் சொல்லாகாவோ வெனில் இசையெனினும் அரவமெனினும் ஒலியெனினும் எழுத் தினானாகிய வோசைக்கும் எழுத்தல் ஓசைக்கும் பொதுவாம். சொல் எனினும் கிளவியெனினும் மொழியெனினும் எழுத்தொடு

சு. வே :

1. உணர்த்தி

* இது நச்சினார்க்கினியர் உரையைக் கொண்டுள்ளது.

புணர்ந்து பொருளறிவுறுக்கும் ஓசைமேல் நிற்கும். முற்கும் வீளையும் இலதையும் என்னும் தொடக்கத்தனவோவெனின், அவை யெழுத்தொடு புணராமையிற் சொல்லாகா; அவையும் பொருளறிவுறுக்கும் என அறிக.

இனி யெழுத்தொடு புணர்ந்த ஓசையே சொல் எனப்படுவது என்றறிக. அச்சொல் எழுத்தினானாகி வருதலான் ஆக்குவதனை முன் உணர்த்தி ஆக்கப்பட்டதனைப் பின்னுணர்த்தினார். வரியெழுத்துஞ் சொல்லாம். பிறவாமையின் சொன்முன் வைக்கற்பாலீர் எனின், ** அகரமென்ற இடத்து நான்கு சொல்லின் ஒன்று மூன்று சொல்லின்......என்பது இயற்றிற்கும்.

‡இனி அச்சொல் எனைத்து வகையான் உணர்த்தினானோவெனின், எட்டுவகையான் உணர்த்தினான். அவ்வெட்டு வகையும் [1]யாவோ வெனின், இரண்டு திணைவகுத்து, அத்திணைக்கண் ஐந்துபால் வகுத்து, எழுவகை வழூஉ வகுத்து, எட்டு வேற்றுமை வகுத்து, ஆறுவகைப்பட்ட தொகை வகுத்து, மூன்று இடம் வகுத்து, மூன்று காலம் வகுத்து, இரண்டிடம் வகுத்தலான் இவை சொல்லாராய்ந்த வெட்டிலக்கணமுமாவன.

அவற்றுள் இரண்டுதிணையென்பன : உயர்திணை அஃறிணை.

ஐந்து பாலென்பன : ஒருவன, ஒருத்தி, பலர், ஒன்று, பல

ஏழ்வழூஉ என்பன : திணைவழூஉ, பால்வழூஉ, இடவழூஉ, காலவழூஉ, மரபுவழூஉ, செப்புவழூஉ, வினாவழூஉ.

எண்வகை வேற்றுமையாவன : எழுவாய் வேற்றுமை முதலாக விளிவேற்றுமையீறாக ஓதப்பட்டன.

அறுவகைப்பட்ட தொகையாவன : வேற்றுமைத்தொகை, உவமைத் தொகை, வினைத்தொகை, பண்புத் தொகை உம்மைத்தொகை, அன்மொழித் தொகை.

** இத்தொடரின் பொருள் விளங்கவில்லை.

‡ இது இளம்பூரணர் உரையைக் கொண்டுள்ளது.

சு. வே :

1. யாதோ.

மூன்றிடம் என்பன : தன்மை, முன்னிலை, படர்க்கை.

மூன்று காலம் என்பன : இறந்தகாலம், எதிர்காலம், நிகழ் காலம்.

இரண்டிடம் என்பன : வழக்கிடம், செய்யுளிடம் என இவ்வாறு சொல்லுப.

இவ்வெட்டன் புடை பெயர்ச்சியே கிளவியாக்க முதலாக எச்சவியல் இறுதியாகக் கிடந்த ஒன்பதோத்தினுள்ளும் ஆராயப் பட்டதெனக் கொள்க.

சுப்பிரமணிய சாஸ்திரியார்

இவ்வதிகாரத்தில் சொல்லைப்பற்றி ஆசிரியர் தொல் காப்பியனார் உணர்த்துதலான், இது சொல்லதிகாரம் எனப் பெயர்த்தது. சொல்லின் இலக்கணம் யாது? தொல்காப்பியனார் பெயரியலில் 'எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே, (பெயரியல். 1) என்றார். அஃதாவது பொருள் குறித்தன வெல்லாம் சொல்' என்பதாம். ஆயின் குறிப்பின் உணர்த்தும் சைகையும் பொருள் குறிப்பதனால், அதன்கண் "அதிவியாப்தி என்று எண்ணி உரையாசிரியர், 'சொல் என்பது எழுத்தொடு புணர்ந்து பொருள் அறிவுறுக்கும் ஓசை' என்றார் என்க. இங்ஙனம் இலக்கணம் கூறின், ஓரெழுத்தொரு மொழியில் அவ் வியாப்தி வரும் என்று நினைத்து, 'எழுத்தொடு' என்பதற்கு 'எழுத்தாதற் றன்மையொடு' என்ற பொருளை உரையாசிரியர் கருதியிருக்கவேண்டும் என்று கூறிச் சேனாவரையர், 'சொல்லா வது எழுத்தோடு ஒருபுடையான் ஒற்றுமையுடைத்தாய்ப் பொருள் குறித்துவருவது' என்று சொல்லின் இலக்கணம் கூறினர் என்க. நச்சினார்க்கினியர் 'சொல் என்றது எழுத்தினான் ஆக்கப்பட்டு இருதிணைப் பொருட்டன்மையும் ஒருவன் உணர்தற்குக் கருவியாம் ஓசையை' என்று சொல்லிப் பின், 'இனிச் சேனாவரையர் சொல்பொருள் குறித்துவரும் என்றாரால்எனின், ஒருவன் பொருட்டன்மையை உணர்வதற்குக் கருவியாய் நிற்றலன்றித் தனக்கு ஓர் உணர்வின்மையின் தான் ஒரு பொருளைக் கருதி நிற்றல் இன்றென மறுக்க' என்று சேனா வரையரை மறுத்தனர். ஆனால் சேனாவரையர் 'சொல்கருவியாய்

நில்லாது என்று கருதினர் என்பதற்குப் பிரமாணந் தெரியவில்லை. அன்றியும் 'எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே' என்ற தொல்காப்பியச் சூத்திரத்தை நச்சினார்க்கினியர் இங்கு மறந்தனர் போலும்.

ச. வே. சுப்பிரமணியன்

பொதுநிலையில் சொல்லுக்கு இலக்கணம் கூறும்போது, மரபு வழீ* நின்று, ஒழுக்க அடிப்படையில் தோன்றிய திணை பற்றித் திணைக்கண் தோன்றுவது சொல் எனப் பேசுகின்றது தொல்காப்பியம். புறநிலை அடிப்படையை வைத்து இலக்கணம் கூறும்போது சொல்லுக்கு நிலைக்களம் பொருண்மையும் சொன்மையும் எனக் குறிக்கின்றது (தொல். சொல். 156). பொருண்மை, தெரிபுவேறுநிலையல், குறிப்பில் தோன்றல் எனத் தெளிவுபடுத்துகின்றது (தொல். சொல், 157). சொன்மை சொல்லின் புறவடிவை யுணர்த்துகின்றது என்பது வெளிப்படை, திணை பால் எண் இடம் காலம் வேற்றுமை இவைகளைச் சொல் உணர்த்தும். வழுக்காத்தலும் உரைக்கப்படுகின்றது. இலக்கணத் தொகை-சொல். பக். 18)

சி. இலக்குவனார்.

The second book of Tholkāppiyam deals with words. Its name is known as '**Sol Padalam**' or '**Sollathikāram**'. It

---

* அதிவியாப்தி = ஒருகுற்றம். ஒரு பொருளுக்கு இலக்கணங் கூறுங்கால் அவ்விலக்கணம் அப்பொருலளவில மட்டும் அமையாமல் அவ்விலக்கணம் உடைய எல்லாப் பொருளிலும் செல்வது (கொம்புடையது மாடு எனின் அது ஆட்டுக்கும் செல்வது)

† அவ்வியாப்தி = ஒருகுற்றம். ஒரு பொருளுக்குக் கூறப்படும் இலக்கணங்களுள் சில அமைந்தும் ஒன்றிரண்டு அமையாமலும் இருப்பது. கொம்பும், குளம்பும் வெண்மையும் உள்ளது மாடு என்பது. இதில் வெண்மை எல்லா மாடுகளுக்கும் பொருந்தாது.

deals with Syntax. parts of speech, Vocabulary, Semanteme. Sementics, Morphemes, Homonyms, Synonyms and dialects briefly.

கிளவியாக்கம்

இளம்.

இனி, இவ்வதிகாரத்து முதற் கண் ஓத்து என்ன பெயர்த்தோ வெனின், கிளவிகள் பொருள்மேலாமாறு உணர்த்தினமையின் கிளவியாக்கம் என்னும் பெயர்த்து; என்னை? ஒருவன் மேலாமாறிது, ஒருத்தி மேலாமாறிது, பலர் மேலாமாறிது, ஒன்றன் மேலாமாறிது, பலவற்றின்மேலாமாறிது, வழுவாமாறிது, வழுவமைதியாமாறிது எனப் பொருள்மேல் ஆமாறு உணர்த்தினமையின் இப்பெயர்த்தாயிற்று.

சேனா.

வழுக்களைந்து சொற்களை ஆக்கிக் கொண்டமையான், இவ்வோத்துக் 'கிளவியாக்கம்' ஆயிற்று. ஆக்கம்—அமைத்துக் கோடல், *நொய்யும் நுறுங்கும் களைந்து அரிசியமைத்தாரை †அரிசியாக்கினார் என்ப வாகலின். சொற்கள் பொருள்கள் மேலாமாறுணர்த்தினமையாற் கிளவியாக்கமாயிற்றெனினும் அமையும்.

பொதுவகையாற் கிளவி என்றமையால், தனிமொழியும் தொடர்மொழியும் கொள்ளப்படும். கிளவி, சொல், மொழி, என்னுந் தொடக்கத்தன வெல்லாம் ஒரு பொருட் கிளவி.

தெய்.

இவ்வதிகாரத்துக் கூறப்பட்ட ஒன்பதோத்தினுள்ளும் முதற் கண்ணது கிளவியாக்கம். அது கிளவியது ஆக்கம் என விரியும். அதற்குப் பொருள், சொல்லினது தொடர்ச்சி என்றவாறு. சொற்கள் ஒன்றோ டொன்று தொடர்ந்து பொருள்மேலாகும் நிலைமையைக் கிளவியாக்கம் என்றார். அது வேற்றுமைத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகையாகி அதனை யுடைய ஓத்திற்குப் பெயராயிற்று.

---

* நொய் — ஓரரிசியின் உடைசல்கள்; நொறுங்கு = நொய்யினும் சிறிய அளவான உடைசல்கள்.

† அரிசியாக்கினார் என்பது சேனாவரையர் கால வழக்குப் போலும்,

நச்.

வழுக்களைந்து சொற்களை அமைத்துக் கோடலின், இவ் வோத்து கிளவியாக்கம் என்னும் பெயர் பெற்றது. இனிச்சொற் கள் பொருள்கள்மேல் ஆமாறு உணர்த்தினமையின் கிளவி யாக்கம் என்னும் பெயர் பெற்றது என்றும் ஆம். ஒருவன் மேல் ஆமாறு இது, ஒருத்திமேலாமாறிது, பலர்மேலாமாறிது, ஒன்றன்மேலாமாறிது, பலவற்றின் மேலாமாறிது, வழுவா மாறிது, வழு அமையுமாறிது எனப் பொருள்கள்மேலாமாறு உணர்த்தினமையின்.

கல்.

இம்முதல் ஒத்து என் நுதலி எடுத்துக் கொள்ளப்பட்டதோ எனின், ஒத்து நுதலியதூஉம், ஒத்தினது பெயர் உரைப்பவே விளங்கும்.

இவ்வோத்து என்ன பெயர்த்தோ எனின், கிளவியாக்கம் என்னும் பெயர்த்து.

கிளவி என்பது சொல்; ஆக்கம்—ஆக்கம் என்பது சொற்கள் பொருள்கண் மேலாமாறு. சொற்கள் பொருள்கண்மேல் ஆமாறுணர்த்தினமையின் கிளவியாக்கம் என்னும் பேர் பெற்றது.

ஒருவன் மேலாமாறிது, ஒருத்தி மேலாமாறிது, பலர் மேலாமாறிது, ஒன்றன் மேலாமாறிது, பலவற்றின் மேலாமாறிது, வழுவாமாறிது, *எனப்பொருட்கண் மேலாமாறுணர்த்தினமை யின் கிளவியாக்கம் எனப்பெயராயிற்று.

மற்று ஏனை யோத்துக்களுள்ளும், பொருள்கள் மேலாமாறே யன்றோ உணர்த்தினது; பொருளல்லவற்றின் மேலாமாறுணர்த் தியதில்லை யெனின், ஏனை யோத்துக்களுட் பொருட்கள் மேலாயு நின்றவற்றின் இலக்கணம் உணர்த்தினார்; ஈண்டு அவை தம்மையாமாறுணர்த்தினார் என்பது.

---

* இங்கு 'வழுவமையுமாறிது' என்பது தெ. பொ. மீ. பதிப் பில் காணப்படுகின்றது. இது அமையும், மற்றையோர் உரைகளில் காணப்படுதலின்.

மற்றுப் பெயர்ச் சொல்லும், வினைச் சொல்லும், இடைச் சொல்லும், உரிச்சொல்லும் எனச் சொல்லு நான்கே யாதலான் ஒத்தும் நான்கே யாகற்பால எனின், ஆகா; என்னை?

நான்கு வகைப்பட்ட சொல்லிற்குப் பொதுவிலக்கணம் இவ் வோத்தினுள் உணர்த்தினார்.

அவற்றுள் முதற்கண்ணது பெயர்ச் சொல்லாதற்கு இலக் கணம் வேற்றுமையோத்துள்ளும், வேற்றுமை மயங்கியலுள்ளும் விளிமரபினுள்ளும் உணர்த்தினார். உணர்த்தி, இலக்கண முடைய பெயரைப் பெயரியலுள் உணர்த்தினார். உணர்த்தி, அதன் பின்னே கிடந்தவினையை வினையியலுள் உணர்த்தினார்; உணர்த்தி, அதன் பின்னே கிடந்த இடைச்சொல்லை இடைச் சொல் லோத்தினுள் உணர்த்தினார்; உணர்த்தி, அதன் பின்னே கிடந்த உரிச்சொல்லை உரிச்சொல்லோத்தினுள் உணர்த் தினார். பின்னை யெல்லா ஓத்தினுள்ளும் எஞ்சி நின்ற சொற்களை எச்சவியலுள் உணர்த்தினார்.

இவ்வகையால் எல்லாம் உணர்த்தினாராகலின் இவ்வோத் தெல்லாம் வேண்டியதூஉம் இம்முறையே கிடந்ததூஉம் ஆயிற்று.

ஒரு.

இனிக் கிளவியாக்கம் என்பது இடுகுறியோ காரணக் குறியோ எனின், காரணக்குறி. என்னை காரணம் எனின், கிளவி என்பது சொல்; ஆக்கம் என்பது அமைத்துக் கோடல்; சொற்களை அமைத்துக் கொள்ளப்பட்டமையின் கிளவியாக்கம் என்னும் பெயர் பெற்றது; அரிசியாக்கிக் கொண்டார் என்பது போல.

மற்று அரிசியாக்குமிடத்து நொய்யும் நுறுங்கும் களைந்து கொள்ளப்படுவதுபோல ஈங்குங் களைந்து கொள்ளப்படுஞ் சொல் உளவோ வெனின், உள. அவை, வழீஇயின சொற் களைந்து, வழுவாதன கொள்ளப்பட்டன இவ்வோத்தினுள் என்பது.

இன்னமும் ஒன்று. கிளவி என்பது சொல்; ஆக்கம் என்பது சொற்களைப் பொருள்மேலாமாறு உணர்த்தினமையாற் சொல்,

ஆக்கம் என்று பெயர் பெற்றது; என்னை? ஒருவன் மேலாமாறிது, ஒருத்திமேலாமாறிது, பலர் மேலாமாறிது, ஒன்றன்மேலாமாறிது பலவற்றின்மேலாமாறிது, வழுவாமாறிது, வழுவமையுமாறிது பொருள்கள்மேலாமா றுணர்த்தினமையின் கிளவியாக்கம் என்று பெயர் பெற்றது. மற்று ஏனையோத்தினுணரும் பொருண் மேலாய் நின்றவாறிலக்கணம் உணர்த்தினார். ஈண்டும் அவை தம்மையே யொன்ப தோத்தினால் உணர்த்தினார் என்பது.

இனிப் பெயர் முதலாகிய நான்கு வகைப்பட்ட சொல்லிற்கு இவ்வோத்தினுட் பொது இலக்கணம் உணர்த்தினார். பெயர்ச் சொல்லது இலக்கணம் வேற்றுமை யோத்தினுள்ளும் வேற்றுமை மயங்கிய லுள்ளும் விளிமரபினுள்ளும் உணர்த்திப் பெயர் முதல் உரியீறாக அவற்றிலக்கணம் அடைவே விரித்துணர்த்தி, எஞ்சி நின்ற சொற்களை எச்சவியலான் உணர்த்தினார் என்க இவ்வகையான் எல்லாம் உணர்த்தினாராகலின் ஒன்பதோத்தும் வேண்டிற்றென்க.

ச. வே. சுப்பிரமணியன்

கிளவி என்ற சொல் அகரக்கிளவி சகரக்கிளவி என எழுத்தையும், தன்மைக்கிளவி, முன்னிலைக்கிளவி என ஒட்டையும் (affixes), வேற்றுமைக்கிளவி போன்று சொல்லையும், பால் மயக்குற்ற ஐயக்கிளவி எனச் சொற்றொடரையும் குறிக்கப் பயன்படுகின்றது. பிழையான சொற்றொடரை நீக்கிச் சரியான சொற்றொடர்களை எவ்வாறு அமைத்துக் கொள்வது என்பதற்குத் துணை புரிகிறது இவ்வியல்* இது தொடரியலைப் (Syntax) பற்றிப் பேசும் இயல். சொற்றொடர் அமைப்பில் சொற்களின் முறையான அமைப்புப் பற்றியும் (Word order) பேசுகின்றது. (சூ—26, 38—41) (இலக்கணத்தொகை. பக். 18)

இலக்குவனார் :

It literally means the creation or formation of expressions or words in the formation of sentences. It describes the role of words in forming sentences to express ideas. The

---

* "Thus Kilaviyakkam deals with how to form grammatical sentences and how to avoid ungrammatical sequences' Dr. S. Subramanian's Paper on "Tolkappiyar's concept of Kilaviyakkam"—Seminar on Tolkappiyam—Annamalai University (1970).

theory that "the sentence preceded the words" has been fully understood by Tolkāppiyar. Therefore he deals with the syntax before entering into the discussion of parts of speech.

ஆதித்தர்

கிளத்தப்படுவது கிளவி; ஆதலின் கிளவி என்பது சொல். சொல் என்பது தனிச் சொல்லையும் சொற்றொடர் (வாக்கியங்) களையும் குறிக்கும். தனிச் சொற்கள் பெயர் வினை இடை உரி எனப் பின்னர்க் கூறப்படுகின்றன. ஆதலின் இங்கு கூறப்பட்ட 'கிளவியாக்கம்' சொற்சேர்க்கையாகிய வாக்கிய அமைப்புப் பற்றியே ஆகும். வாக்கியங்களிற் சொற்கள் நிற்கும் முறை, ஆங்கு உற்ற நியதிகள் பற்றி ஆசிரியர் முதன்முதலிற் கூறுகின்றார்.

சிவலிங்கனார்

ஆக்கம் என்னும் சொல் ஆதல், ஆக்குதல் (ஆகச் செய்தல்) எனத் தன்வினைக்கும் பிறவினைக்கும் பொதுவாகவும், ஆதல் ஆக்கப்படுதல் எனச் செய்வினைக்கும் செயப்பாட்டு வினைக்கும் பொதுவாகவும் வருவதாம். அவன் ஆக்கம் நன்று என்றவிடத்தில் தன் வினையும், அவன் இவனை நல்லவன் ஆக்கினான் என்றவிடத்தில் பிறவினையும், அவன் ஆக்கம் நன்று என்ற விடத்துச் செய்வினையும், "ஆக்கம் (ஆக்கப்பட்டது: செல்வம்) அதர் வினாஅய்ச் செல்லும்" (குறள் 594) என்ற விடத்துச் செயப்பாட்டு வினையும் ஆக அமைவதைக்காணலாம்.

எனவே, கிளவியாக்கம் என்பதற்கு, இளம்பூரணர் தெய்வச்சிலையார், கல்லாடனார் ஆகியோர் கொண்டதான "சொற்கள் பொருள்கள் மேலாமாறு உணர்த்தலின் கிளவியாக்கம் எனப் பெயர் வந்தது" என்னும் தன் வினை, செய்வினைப் பொருளும், சேனாவரையர் நச்சினார்க்கினியர் ஆகியோர் கொண்டதான "வழுக்களைந்து சொற்களை ஆக்கிக் கொண்டமையால் இவ் வோத்துக் கிளவியாக்கமாயிற்று" என்னும் பிறவினை, செயப்பாட்டு வினைப் பொருளும் ஆகிய இரண்டையுமே விளக்கமாகக் கொள்ளலாம். கிளவியாக்கச் சூத்திரங்கள் சில, சொற்கள் பொருள்களின்மேலாகிய நிலையில் கூறப்பட்டுள்ளன; சில ஆணை கூறுவதுபோல் செப்பும் வினாவும் வழாஅல் ஓம்பல் (13) இலக்கண மருங்கிற் சொல்லாறல்ல (27) என்பனவாக ஆக்கப்

படும் நிலையில் கூறப்பட்டுள்ளன. எனவே இரண்டு கருத்துகளை யும் ஏற்கலாம். சேனாவரையரும் நச்சினார்க்கினியரும் முதல் கருத்தையும் மறுக்காமல் ஏற்றுக் கொண்டுள்ளமையும் காண லாம்.

தே. ஆண்டியப்பன்

மொழி என்றால் என்ன? தகவல் (Communication) என்று கூறலாமா? பறவை, விலங்கு இனத்திலும் செய்தி முறைகள் அமைகின்றனவே? தேனீ, சுழன்றாடும் முறையால் தேனிருக்கும் திசையோடு தூரத்தையும் தெரிவித்துவிடும். விலங்குகள் தம் குரலால், உறுமலால் உணர்வுகளை வெளிப்படுத்தும். மனிதர்கள் ஒலித் தொடர்களையே குறியீடாகக் கொண்டு, பல்வேறு செய்தி களை அறிவிக்கும் ஆற்றலைக் கொண்டிருப்பது அதிசயமே. பிற உயிர்கள் சில செய்திகளை அறிவிக்கும். ஆனால் மனிதனோ செப்பு, வினா, ஏவல், வியங்கோள், எதிர்மறை, வினைநிலை முதலிய பல்வேறு கோணங்களில் கருத்தைப் பரிமாறிக் கொள்கிறான். அங்ஙனம் விரிவடையும மொழியாக்கத்தையே கிளவியாக்கம் என்கிறோம்.

ஒலிகள் தனித்தும் தொடர்ந்தும் சொல்லாக்கத்துக்கு அடிப் படையாவது போல, சொற்களும் தனித்தும் தொடர்ந்தும் தொடராக்கத்திற்கு உறுதுணையாகும். எனவேதான் எழுத்தொடு ஒருபுடை ஒப்புமை உடைத்தாய்ப் பொருள்குறித்து வருவது சொல் என்றனர் முன்னோர். ஒருபக்கம் மொழியில் ஒலி யமைப்பு (Phonetic system) மற்றொருபக்கம் பொருளுணர்வு (Meaning consideration) இரண்டையும் இணைக்கும் பாலமாகத் தொடரானது (Syntax) ஆக்கம் பெறுவதால் கிளவியாக்கம் என் கிறோம் *

சி. சுப்பிரமணியன்

சொல்லதிகாரத்தில் கிளவியாக்கம், வேற்றுமையியல், வேற்றுமை மயங்கியல், விளிமரபு, எச்சவியல் ஆகியவை தொட ரியல் (Syntax) பற்றியும், பெயரியல், வினையியல், இடையியல்

---

* காப்பியர்நெறி — சொல்லியல் — முத்துப்பதிப்பகம், ஆழ்வார் நகர் குடியிருப்பு, மதுரை 1977.

ஆகியவை உருபனியல் (Morphology) பற்றியும், உரியியல் சொல் பொருள் (Word and Sementics) ஆகியவற்றைப்பற்றியும் பேசு கின்றன.

மேலே குறிப்பிட்ட சொற்றொடர் பற்றிய இயல்கள் ஐந்தனுள் வேற்றுமையியல், வேற்றுமை மயங்கியல், விளிமரபு ஆகிய மூன்றும் வேற்றுமைச் சொற்றொடர் பற்றிப் பேசு கின்றன. விளிமரபு இசையழுத்தம் பெற்றதும் விளிநிலையினதும் ஆகிய இதரச் சொற்றொடர் பற்றிப் பேசுகின்றது.

தொல்காப்பியச் சொல்லதிகார உரையாசிரியராகிய தெய்வச்சிலையார் கிளவியாக்கம் அல்வழிச் சொற்றொடர் பற்றிப் பேசுகின்றது என்கின்றார். ஆயின் 504, 511, 525 531 முதலிய நூற்பாக்கள் வேற்றுமைச் சொற்றொடர் பற்றியன வாதலின் கிளவியாக்கம் அல்வழிச் சொற்றொடர் பற்றியே பேசுவது என்பது அவ்வளவு ஏற்புடையதாகத் தெரியவில்லை. தவிரவும், இவ்வியலின் போக்கும் பொருளும் இது அல்வழிச் சொற்றொடர் மட்டும் பற்றிப் பேசுவது அன்று என்பதனைப் புலப்படுத்தும். இவ்வியலைத் தொடர்ந்து வேற்றுமைச் சொற் றொடர் பற்றிப் பேசப்படுகின்றது குறித்து இது அல்வழிச் சொற்றொடர் பற்றிப் பேசுகின்றது எனும் எண்ணத்தைக் கொடுப்பதாக இருப்பினும் அல்வழிச் சொற்றொடர்களாகிய வினைத்தொகை, பண்புத்தொகை, உவமத்தொகை உம்மைத் தொகை அன்மொழித் தொகையாகிய தொகை நிலைத் தொடர் களும்; வினைமுற்றுத் தொடர், பெயரெச்சத் தொடர், வினை யெச்சத் தொடர், இடைச்சொற்றொடர், உரிச்சொற்றொடர், அடுக்குத்தொடர் முதலிய தொகாநிலைத் தொடர்களும் பிறவும் எச்சவியல் 899, 900, 902—908, 913—934, 939 முதலிய நூற்பாக் களிலேயே பேசப்படுவதால் தெய்வச்சிலையார் கருதியதுபோல் கிளவியாக்கம் முழுமையும் அல்வழிச் சொற்றொடர் பற்றிப்பேசு வதன்று; அது பிறிதொன்று பற்றிப் பேசுவதற்காக அமைக்கப் பட்டுள்ளது என்பது தெளிவு.*

---

* தொல்காப்பிய மொழியியல் - கிளவியாக்கம் பற்றித் தொல்காப்பியர் (பக். 155, 156) அண்ணாமலைப் பல்கலைக் கழகம், அண்ணாமலை நகர்.(1972)

திணையிரண்டு

1. உயர்திணை யென்மனார் மக்கட் சுட்டே
அஃறிணை யென்மனார் அவரல பிறவே
ஆயிரு திணையின் [1]இசைக்குமன் சொல்லே.

ஆங்கில மொழிபெயர்ப்பு

இலக்குவனார்

Those denoting human beings are called
High class
All others are called Non-class
These are two classes the words denote.

தமிழ் சுவலபில்

That which refers to human beings is called the high class
All the rest is called non (-high) class: those are
the two classes denoted by words

பிற்கால இலக்கண நூல்கள்

நேமிநாதம்: சொல். 2.

மக்கள் நரகரே வானோர் எனும் பொருள்கள்
தொக்க வுயர்திணையாம் தூமொழியாய்—மிக்க
உயிருள் ளனவும் உயிரில் லனவும்
செயிரில் அஃறிணையாம் சென்று

நன்னூல். 261

மக்கள் தேவர் நரகர் உயர்திணை
மற்றுயிர் உள்ளவும் இல்லவும் அஃறிணை

இலக்கண விளக்கம். 162.

உயர்திணை யென்மனார் மக்கட் சுட்டே
அஃறிணை யென்மனார் அவரல பிறவே.

பாடவேறுபாடு :

1. இசைக்குமன.

தொன்னூல் விளக்கம். 50.

> திணையிரண் டென்ப மக்கள் மேதவர் நரகர்
> ஆவர் உயர்திணை; அஃறிணை பிறவே.

முத்துவீரியம், பெயர். 9.

> மக்கள் தேவர் நரகர் உயர்திணை
> மற்றுயி ருள்ளவும் இல்லவும் அஃறிணை.

இளம்.

என்பது சூத்திரம்.

இவ் வோத்தின் தலைக்கட் கிடந்த சூத்திரம் என்னுதலிற் றோவெனின், சொல்லும் பொருளும் வரையறுத்து உணர்த்துதல் நுதலிற்று.

உரை : உயர்திணை யென்மனார் மக்கட் சுட்டு என்பது உயர்திணை என்று சொல்லுவர் ஆசிரியர் மக்கள் என்று சுட்டப் படும் பொருளை என்றவாறு; அஃறிணை என்மனார் அவரல பிற என்பது அஃறிணை என்று சொல்லுவர் ஆசிரியர் மக்களல் லாத பிற பொருளை என்றவாறு; ஆயிரு திணையின் இசைக்கு மன் சொல்லே என்பது அவ்விரு திணையையும் இசைக்கும் சொல் என்றவாறு.

எனவே, உயர்திணைச் சொல்லும், உயர்திணைப் பொருளும்; அஃறிணைச் சொல்லும், அஃறிணைப் பொருளும் எனச் சொல்லும் பொருளும் அடங்கின.

உலகத்தின் மக்கள் என்ற பொருளை உயர்திணை என்றது கூறு பாடின்மையின். அஃறிணை கூறுபாடுடைமையின் அஃறிணை யென்மனார் *அவரல என்னாது பிற என்றான்; அவை உயிருடையனவும் உயிரில்லனவும் என இரண்டு கூற்றன என்றற்கு. அவற்றது கூறுபாடெல்லாம் அறிந்து கொள்க.

மற்று உயர் என்னும் சொல் முன்னர்த் திணையென்னும் சொல் வந்து இயைந்தவாறு யாதோ வெனின், ஒரு சொல் முன்

---

* அவரல = மக்களல்லாத உயிருள்ள விலங்கு முதலியன. பிற = உயிரில்லாத மண், நீர் முதலியன.

அவரல, பிற என்பனவற்றிற்குச் சேனாவரையரின் சிறப்புரை காண்க.

ஒரு சொல் வருங்கால், *தொகைநிலை வகையான் வருதலும், எண்ணுநிலை வகையான் வருதலும், பயனிலை வகையான் வருதலும் என மூன்று வகையான் அடங்கும்.

அவற்றுள் தொகை நிலை வகையான் வந்தது, [1]'யானைக் கோடு' என்பது; எண்ணு நிலை வகையான் வந்தது, [2]'நிலனும் நீரும்' என்பது; பயனிலை வகையான் வந்தது, [3]'சாத்தன் உண்டான்' என்பது. அவற்றுள் இஃது உயர்திணையென இறந்த காலந் தொக்க வினைத் தொகை.[4]

*இனி என்மனார் என்பது, என்ப என்னும் முற்றுச் சொல்லைக் 'குறைக்கும் வழிக் குறைத்தல், (சொல். எச்ச. 7) என்பதனாற் பகரங் குறைத்து, 'விரிக்கும் வழி விரித்தல்' (சொல், எச்ச, 7.) என்பதனால் மன்னும் ஆரும் என்பன இரண் டிடைச் சொல் பெய்து விரித்தான், என்மனார் ஆசிரியர் என்று

---

1. யானைக்கோடு — ஆறாம் வேற்றுமைத தொகை.
2. நிலனும் நீரும் — நிலனும் நீருமாகிய இரண்டு
3. சாத்தன் என்ற எழுவாய் வந்தான் என்னும் பயனி லையைத் தொடர்ந்தது.
4. உயர்திணையை உயர்ந்த திணையென இறந்தகால வினைத் தொகையாக விரிக்கின், மரம் நாடோறும் உயர்ந்தமை கருதி உயர் மரம் எனவும், கல்வியறிவு நாடோறும் உயர்ந்தமை கருதி அதனை உடையார் மேலேற்றி உயர்மக்கள் எனவும் கூறும் வினைத் தொகை போல உயர்திணை என்பதற்கு உயரும் புடைபெயர்ச்சி வினை காட்சி வகையானும் கருத்து வகையானும் இன்மையின் அது வினைத் தொகையன்றென வுணர்க. (—சங்கர நமச்சிவாயர், நன். 261. உரை).

*. இக்கருத்துச் சேனாவரையராலும், தெய்வச்சிலையாரா லும் மறுக்கப்பட்டது காண்க.

கல்லாடனாரும் ஒருவரும் இளம்பூரணர் கூறியவாறே கூறினர்.

முடியற் பாற்று. ‡முற்றுச் சொல் எச்சப் பெயர் என்பவாகலின் இது செய்யுள் நோக்கித் தொகுத்துக் கூறினான் என்பது.

இனி மக்கட் சுட்டே என்பது, 'மக்கள் என்று வரைந்து சுட்டுதற்குக் காரணமாகிய தன்மை' என்னும் ஒருவன்.

இனி மக்கள் எனினும் சுட்டு எனினும் அவரையே சொல்லியவா றென்ப ஒரு திறத்தார் †சுட்டென்பது கருத்து. அக்கருதற்பாடுடையமையின் சுட்டெனவும் படும் மக்கள் என்பது. இனிச் சுட்டே என்புழி ஏகாரம் ஈற்றசை ஏகாரம்.

அஃறிணை யென்பது அல் திணை என்றவாறு: அல்லதும் அதுவே, திணையும் அதுவே: மேற்சொல்லப்பட்ட உயர்திணை யல்லாத திணை அஃறிணை யெனக் கொள்க. ஈண்டும் என் மனார் என்பதற்கு மேற் சொல்லிய வாறே சொல்லுக.

இனி, அவர் என்னும் சொல்லின் முன்னர் அல்ல என்னும் சொல் வந்து இயைந்தவா றியாதோ வென்னின், அவரின் அல்ல என்பான் 'அவரல்ல' என்றான், ஐந்தாம் வேற்றுமைப் பொருள் என்பது. இனி, அல்ல பிற என்பது, அல்லவும் பிறவும் என உம்மைத் தொகை என்றலும் ஒன்று.

இனி, அவ்வுயர் திணை யல்லன வெல்லாம் அவ் வுயர் திணை போல ஓரினத்த வல்ல; தத்தம் வகையான் வேறுபட்டன, உயிருடையனவும் உயிரில்லனவும் என்பது. ஏகாரம் ஈற்றசை யேகாரம்.

---

‡. முற்றுச்சொல் எச்சப் பெயர்; வினைமுற்றுச் சொல்லை எச்சப் பெயர் என்று குறிப்பிடுவர்; ஏன் எனின், முற்று, கொண்டு முடிவது பெயரையாதலின். 'வந்தான் முருகன்' எனக் காண்க. முற்று, பெயரை எஞ்சி யிருத்தலின் பெயரெச்சம் என்னலாம் எனின் பெயரெச்சம் என்பது ஒன்று தனியே, (வினை யெச்சம் போல) இருத்தலின் இதனை எச்சப்பெயர் என்பர் போலும். தொகுத்துக் கூறுதல் — ஆசிரியர் என்பதைக் கூறாமை மறைத்தல்.

†. சுட்டு என்பதற்குக் கருத்து என்பது பொருள்.

[5]ஆயிருதிணையின் இசைக்கும் என்புழி, ஆயிருதிணையையும் என ஐ கார வேற்றுமை விரித்துரைக்க; இன் சாரியை; [6]இசைக்கும் என்பது செய்யும் என்னும் பெயரெச்சம் மன் என்பது இடைச் சொல், ஏகாரம் ஈற்றசை.

சேனா.

இதன் பொருள் மக்கள் என்று கருதப்படும் பொருளை ஆசிரியர் உயர்திணை யென்று சொல்லுவர்; மக்கள் என்று கருதப்படாத பிற பொருளை அஃறிணை யென்று சொல்லுவர்; அவ்விருதிணை மேலும் சொற்கள் நிகழும் என்றவாறு.

எனவே, உயர்திணைச் சொல்லும் அஃறிணைச் சொல்லும் எனச் சொல் இரண்டு என்றவாறாம். மக்கட்சாதி சிறந்தமையான் 'உயர்திணை' என்றார்.

"என்மனார் என்பது செய்யுள் முடிபு எய்தி நின்றதோர் ஆர் ஈற்று எதிர்கால முற்றுச் சொல். என்றிசினோர், கண்டிசினோர் என்பன முதலாயின அவ்வாறு வந்த இறந்தகால முற்றுச் சொல்.

'என்ப' என்னும் முற்றுச் சொல்லினது பகரம் குறைத்து மன்னும் ஆரும் என இரண்டு இடைச்சொற் பெய்து விரித்தார் என்று உரையாசிரியர் கூறினாரால் எனின் :—'என் மனார்'

---

5. இங்குள்ள கருத்தைச் சேனாவரையர் மறுப்பதும், நச்சினார்க்கினியரும் பிறரும் ஏற்பதும் அவரவர் உரைகளிற் காண்க.

6. ஆயிரு திணையின் இசைக்கும் சொல்லுள், மக்கட் சுட்டினை உயர்திணை யென்மனார், அவரல பிற அஃறிணை என்மனார் எனக் கூட்டி இசைக்கும் என்பதைப் பெயரெச்சம் என்றார் போலும். எனினும், 'இசைக்குந் சொல்லே' என்றில்லாமல் 'இசைக்குமன் சொல்லே' என 'மன்' இடைவந்துள்ளமையின் பெயரெச்சம் என்பது பொருந்தாது; முற்று என்பதே நன்று.

1. என் + ம் + அன் + ஆர் = என்மனார் 'ம்' எதிர்காலம் உணர்த்துவது.

என்பது [2]இடர்ப்பட்டுழிச் சிறுபான்மைவாராது, இந்நூலுள்ளும் சான்றோர் செய்யுளுள்ளும் [3]பயின்று வருதலானும், இசை நிறை என்பது மறுத்துப் பொருள் கூறுகின்றார், பின்னும் இசை நிறை என்றல் [4]மேற்கோள் மலைவு ஆதலானும் [5]அவர்க்கது கருத்தன் றென்க மாணாக்கர்க்கு உணர்வு பெருகல் வேண்டி வெளிப்படக் கூறாது உய்த்துணர வைத்தல் அவர்க்கு இயல்பாகலான் [6]செய்யுள் முடிபு என்பது கூறாராயினார்.

என்மனார் ஆசிரியர் எனவே, உயர்திணை அஃறிணை யென்பன தொல்லாசிரியர் குறியாம். ஆசிரியர் என்னும் பெயர் வெளிப்படாது நின்றது.

[7]மக்களாகிய சுட்டு யாதன்கண் நிகழும், அது மக்கட் சுட்டு

---

2. இடர்ப்பட்டுழி = செய்யுளில் ஓசை (தளை)யிடர்ப்பாடு உற்றவிடத்து.

3. பயின்று—மிகுதியாக

4. மேற்கோள் மலைவு = தான் கூறிய கொள்கையில் தானே மாறுபடும் குற்றம். தொல்காப்பியர் இடையியலில் மன் என்பது கழிவு, ஆக்கம், ஒழியிசை என்னும் மூன்று பொருளில் வரும் என்றார். (இடையியல்4) என்மனார் என்பதில் இசையை நிறைக்க மன் சேர்த்தார் என்றால் மன் என்பது இசைநிறை என்னும் பொருளிலும் வரும் என்பது ஆகும். முன்னர் இசை நிறையில் வரும் எனக் கூறாதவர் என்மனார் என்பதில் வருவதாகச் சேர்த்தது தன் கொள்கைக்குத் தானே முரண்படுவதாகிறது. அதனால் மேற்கோள் மலைவு என்னும் குற்றமாம்.

5. அவர்க்கு—தொல்காப்பியர்க்கு (அவர்க்கு என வருமிடமெங்கும் இப்படியே கொள்க)

6. செய்யுள் முடிபு—உலக வழக்கில் என்மனார் என்பது இல்லை; செய்யுள் வழக்கிற்கேயுரிய முடிபாகும்.

7. மக்கள் சுட்டு = மக்கள் என்னும் உணர்வாகிய கருத்து—பண்புத்தொகை. (சுட்டு—கருதுதல்) சுட்டு என்பது கருதப்படும் பொருளுக்கு (மனிதர்க்கு) உரியதாகக் கொள்ளலின் மக்கட்சுட்டு என்பது பண்புத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை.

எனப் பண்புத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை. ஈண்டு மக்கள் என்றது, மக்கள் என்னும் உணர்வை. எனவே, மக்களே யாயினும், மக்கள் என்று சுட்டாது பொருள் என்று சுட்டியவழி உயர்திணை யெனப்படா என்பதாம்.

இனி 'அவரல' என்னாது 'பிற' என்றே விடின், 'யாதல்லாத பிற' என்று அவாய் நிற்கும் ஆகலின், 'அவரல' என்றார், 'மக்கட் சுட்டே' எனறு மேல் நின்றமையின் 'மக்களல்லாத பிற' என்று உணரலாம் எனின், ஆற்றல் முதலாயினவற்றாற் கொள்வது சொல் இல்வழி என மறுக்க. இனி 'அவரல' என்றே ஒழியின், [8]அவற்றது பகுதி யெல்லாம் எஞ்சாமல் தழுவாமையின், எஞ்சாமல் தழுவுதற்கு 'அவரல பிற' என்றார்.

செய்யுளாகலான் [9]ஆயிருதிணை யெனச் சுட்டு நீண்டது. வரையறையின்மையின் ஈண்டு யகர உடம்படுமெய் ஆயிற்று.

[10]சொல் நிகழ்ச்சிக்குப் பொருள் இடமாகலின், ஆயிருதிணை யின்கண் என ஏழாவது விரிக்க. இன்சாரியை வேற்றுமையுருபு

---

8. அவற்றது பகுதி—மக்களல்லாப் பிற உயிர்த் தொகைகளும், உயிரில்லனவும், மக்களின் உயிரும், உடம்பும் பிரித்துக் காண்பனவும் ஆம். அவரல என்று மட்டில் கூறினால் மக்களல்லாத பிற உயிருள்ளன என்று மட்டும் கொள்ளவும் நேரும். உயிரில்லனவற்றையும் கொள்ள வேண்டும் என்பதற்காகப் 'பிற' என்பதும் தேவை.

9. அ + இருதிணை = ஆயிருதிணை; சுட்டு அகரம் செய்யுளாதலின் நீண்டது. அ + இரு = அவ்விரு எனவும் வரலாம். பிற்காலத்தில் நன்னூலார் உடம்படு மெய்யாக இ ஈ ஐ வழி யகரமும், ஏனை உயிர்வழி வகரமும் ஏ முன் யகர வகரங்களும் வரும் என விதித்தார். தொல்காப்பியர் அவ்வாறு விதிக்கவில்லை யாதலின் ஆ + இரு = ஆயிரு என யகர உடம்படு மெய் வந்தது என்றார் சேனாவரையர்.

10. மரம் என்னும் சொல் வழங்கற்குரிய இடம்—சேர்தற் குரிய இடம் மரம் என்னும் ஒரு பொருள் என இத் தொடர்க்கு விளக்கம் காண்க. அதுகொண்டு சொற்கள் எல்லாம் ஆயிருதிணையின்கண் இசைக்கும் என ஏழாவது விரிக்க. உரையாசிரியர் ஆயிருதிணையினை

பற்றியும் பற்றாதும் நிற்கும் என்று, உரையாசிரியர் இரண்டாவது விரித்தாரால் எனின் :—'சாரியை யுள்வழிச் சாரியை கெடுதலும், சாரியை யுள்வழித் தன்னுருபு நிலையலும் (எழு. 157) என்று இரண்டாவதற்குத் திரிபு ஓதினமையானும், 'செலவினும் வரவினும் தரவினுங் கொடையினும்' (சொல் 28) என்புழியும் பிறாண்டும் எல்லாம் ஏழாவது விரித்தற் கேற்பப் பொருளுரைத்தமையானும், அவ்வுரை போலியுரையென்க.

[11]ஆயிரு திணையினும் என்னும் உம்மை விகாரவகையால் தொக்கு நின்றது. 'இசைக்கும்' என்பது செய்யும் என்னும் முற்றுச் சொல். 'மன்' என்னும் இடைச்சொல் 'மன' என ஈறு திரிந்து நின்றது. [12]மன் என்றும் பாடம் ஓதுவாரும் உளர், ஏகாரம் ஈற்றசை.

[13]சொல் வரையறுத்தலே இச்சூத்திரத்துக்குக் கருத்தாயின் 'ஆடூஉ அறிசொல் மகடூஉ அறிசொல்' என்றாற்போல 'உயர் திணைச்சொல், அஃறிணைச் சொல் என அமையும், உயர்திணை

என இரண்டாம் வேற்றுமையாக விரித்தார். திணையின் என்பதில் உள்ள இன்சாரியை இரண்டாம் வேற்றுமைப் பொருளினிடமாக வருமாயின் ஐ உருபுடன் சேர்ந்தே வரவேண்டும் என்பது "சாரியையுள் வழித்தன் உருபு நிலையலும்" என ஆசிரியரால் உணர்த்தப்பட்டதாதலின், ஆயிருதிணையினையும் என்றே இருத்தல் வேண்டும். அவ்வாறில்லாமையின் இரண்டாம் வேற்றுமையில் விரிக்காது ஏழாவதில் விரித்தல் வேண்டும். 'செலவினும் வரவினும்' என்னும் இடத்தில் செலவினையும் வரவினையும் எனப் பொருள் கூறாமல் செலவின் கண்ணும் வரவின் கண்ணும் என்று பொருள் கூறிய உரையாசிரியர் ஆயிருதிணையின் என்பதற்கு மட்டும் இரண்டாம் வேற்றுமை விரித்தது ஏன்?

11. திணையிரண்டே என்றறியப்படுதலின் 'ஆயிருதிணையினும்' என உம்மையிருத்தல் வேண்டும்; இன்மையின் விகாரத்தால் தொக்கது என்றார்.

12. மன் எனப் பாடம் கொண்டவர் இளம்பூரணர்.

13. இந்நூற்பா சொல்லும் பொருளும் வரையறுக்கின்றது என்பது இளம்பூரணர் கொள்கை. சொல் மட்டும் வரையறுக்கின்றது என்பது சேனாவரையர் கொள்கை. இவர் கொள்கைக்கு ஒரு தடை. வருகிறது. சொல்

மக்கள், அஃறிணைபிற எனல் வேண்டாவெனின் :—உயர்திணை அஃறிணை என்பன தொல்லாசிரியர் குறியாகலான், ஆடூஉ மகடூஉப்போல வழக்கொடுபடுத்துப் பொருள் உணரலாகாமையின், உயர்திணை மக்கள் அஃறிணை பிற எனல் வேண்டும் என்பது. இவ்வாறு ஒருபொருள் நுதலிற்றாக உரையாக்கால் சூத்திரம் ஒன்றாமாறில்லை யென்க.

வரையறை செய்வதே இச்சூத்திரக் கருத்தாயின் சூத்திரத்தில் உயர்திணைச்சொல் அஃறிணைச்சொல் எனக்கூறாமல் மக்கட்சுட்டு உயர்திணை, அவரலபிற அஃறிணை என்று பொருளையும் குறித்துக் கூறுவானேன்? அடுத்த நூற்பாவில் ஆடூஉவறிசொல் மகடூஉவறிசொல் என்று சொன்மட்டும் கூறியிருப்பதுபோல் கூறியிருக்கலாமே என்பது தடை. அதற்கு விடை : ஆடூஉ மகடூஉ என்பன ஆண்பாலையும் பெண்பாலையும் உலக வழக்கில் உணர்த்தும். ஆனால் உயர்திணை அஃறிணை என்பன உலகவழக்கில் பொருள் உணர்த்தா ஆதலின், உயர்திணை அஃறிணை என்பனவற்றை விளக்கவேண்டி 'உயர்திணை மக்கள் அஃறிணை அவரல பிற' என்று கூறவேண்டியதாயிற்று. ஒரு சூத்திரம் ஒரு தலைமையான பொருளையே நுதலிற்றாகக் கூற வேண்டுமேயன்றி இரு தலைமையான பொருள் நுதலிற்றாகக் கூறுதல் இல்லை. ஒவ்வொரு பொருளுக்கும் ஒவ்வொரு சூத்திரம் தேவை. அதனால் இச்சூத்திரம் சொல் உணர்த்துவதே எனக் கொள்ள வேண்டும்.

சேனாவரையர் ஒழிய மற்றையுரையாசிரியர் யாவரும் இச்சூத்திரம் சொல்லும் பொருளும் பற்றியே கூறுகிறது என்பர். சேனாவரையர் வடமொழியிலக்கணத்தையும் தழுவியே உரைகூறுபவராதலின் இரண்டு தலைமைப் பொருள்களை ஒரு சூத்திரத்திற் கூறுதல் 'வாக்கியபேதம்' என வடநூலார் கூறுவதையுட் கொண்டு இச்சூத்திரம் சொல் வரையறுத்தல் என்ற ஒரு தலைமைக் கருத்தையே நுதலியது என்றார். நச்சினார்க்கினியர் வடநூல் இலக்கணத்தைத் தமிழில் இணைக்க நினையாதவராதலின் இளம் பூரணரையே போற்றினார்.

தெய்.

இவ்வோத்தினுள் இச்சூத்திரம் என்னுதலிற்றோ வெனின் சொல்லிலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று.

(இதன் பொருள்) உயர்தல் என்பது மிகுதல், திணை என்பது பொருள், என்மனார் என்பது என்று சொல்லுவார் என்றவாறு. மக்கள் என்பது மக்கள் என்னும் பொதுப் பொருண்மை. சுட்டென்பது குறிப்பு; 'இனச்சுட்டில்லா' (கிளவி. 18) எனவும், 'தெய்வஞ் சுட்டிய' எனவும் ஓதினாராகலின், அது சுட்டப்படும் பொருண்மேல் ஆகு பெயராய் நின்றது. ஏ யென்பது ஈற்றசை, அல் என்பது அல்லாமை. திணையென்பதற்கும் என்மனார் என்பதற்கும் மேல் உரைத்தவாறே கொள்க. அவரல என்பது மக்களல்லாத பொருள். பிற என்பது பிறபொருள். மக்களல்லா தவும் பிறவும் என்னும் உம்மை எஞ்சி நின்றது. ஆய் என்பது அவ்வென்னும் சுட்டு நீண்டிசைத்தது. இரு திணையென்பது இரண்டு திணையின்கண்ணும் என்றவாறு. கண் என்னும் உருபும் உம்மும் தொக்கு நின்றன. இசைக்குமன சொல் என்பது ஒலிப்பன சொல்லாவன என்றவாறு.

உலகத்துப் பொருள் எல்லாவற்றினும் மக்கள் என்று சுட்டப் படும் பொருளை உயர்திணையென்று சொல்லுவர்; அவரல்லாத பொருளையும், பிறபொருளையும் அஃறிணை யென்று சொல்லு வர் ஆசிரியர். அவ்விருதிணையின்கண்ணும் ஒலிப்பன சொல்லா வன என்றவாறு.

எனவே, உயர்திணைச் சொல், அஃறிணைச்சொல் எனச் சொல் இருவகையாம் என்பது பெறுதும். அஃதேல் திணையிட மாக அத்திணைக்கட் பிறவற்றை யிசைத்தல் வேண்டும் எனின், ஒக்கும். அவ்விருதிணைக்கண்ணும் உளவாகிய பாலினையே சொற்கள் இசைப்பன என்ப. மேல் எழுத்ததிகாரங் கூறி, இனிச்சொல்லதிகாரங் கூறுவார், சொல்லாவதித் தன்மையதென அதனிலக்கணங்கூறவேண்டுதலின், இச்சூத்திரம் முற்கூறப் பட்டது. அஃதற்றாக, தேவரையறியுஞ் சொல் அஃறிணை யாகுமோ வெனின், அஃதாகாவாறு *முன்னர்க் கூறப்படும்.

* சூ. 4-ல் கூறப்படும்.

உயர் என நிற்பத் திணையென வந்த சொல் எவ்வாறு வந்ததெனின், ஒருசொல் முன் ஒரு சொல் வருங்கால், தொகை நிலை வகையான் வருதலும், தொகா நிலை வகையான் வருதலும் என இரண்டலலதில்லை. அவற்றுள் தொகைநிலை வகையான் வந்தன யானைக்கோடு. பொன்மேனி, கொல்யானை, கருங்குதிரை, உவாப்பதினான்கு, பொற்றொடி என்பன. தொகா நிலை வகையான் வந்தன சாத்தன் உண்டான், சாத்தனை வெட்டினுன், உண்டான் சாத்தன், உண்டுவந்தான், நிலம் நீர் தீ வளி ஆகாயம் என்பன. அவற்றுள் இது தொகைநிலை வகையான் வந்தது. தொகைதாம் பல; அவற்றுள் இஃதெத் தொகையான் வந்ததெனின் பண்புத் தொகையான் வந்ததென்க. மற்றுள்ள பொருள் எல்லாவற்றினும் உயர் பொருள் என விசேடித்து நின்றமையின், உயர்வானம் என்றாற் போல வினைத் தொகை யாகாதோவெனின், ''வினையின் தொகுதி காலத்தியலும்'' (எச்சவியல்18) என்றாராதலின் ஈண்டுக் காலம் தோன்றாமையின் ஆகாதென்க. எற்றுக்கு? உயர்ந்த மக்கள், உயரா நின்ற மக்கள் உயருமக்கள் என நல்வினை யேதுவாக மூன்று காலமும் கொண்டால் ஆகுமேயெனின், அவ்வாறு கருதுவார்க்கு வினைத் தொகையுமாம்.

உயர் பொருள் என்னாது திணையென்றது என்னையெனின், அவ்வாறு [1]ஆடல் வேண்டி ஆசிரியன் இட்டதோர் குறியென்று கொள்க.

[2]என்மனார் என என்ப என்னும் முற்றுச்சொல் திரிந்து நின்றது. குறைக்கும் வழிக் குறைத்தல் என்பதனால் பகரம் குறைத்து, விரிக்கும் வழி விரித்தல் என்பதனால் மன்னும் ஆரும் என இரண்டிடைச் சொற்பெய்து என்மனார் என்றாயிற்று எனப் பொருள் உரைப்பவால் எனின், பகரங் குறைக்கின்றது செய்யுளின்பம் வேண்டியன்றே? ஆண்டுக்குறைத்தவழிப் பின்னும் இரண்டெழுத்து விரிக்கல் வேண்டுமாயிற் குறைத்ததனாற் பயனின்மையின் இவ்வாறு எழுதும் உரை குற்றம் என்க. இஃது

1. ஆடல் — ஆளுதல்
2. இப்பகுதியில் கூறப்படும் கருத்து சேனாவரையரைத் தழுவியதாம்.

[3]எதிர்காலச் சொல்லாயினும் இறந்த காலம் குறித்து நின்றது, இறப்பும் எதிர்வும் மயங்கப் பெறும் ஆகலின். அஃது ஆசிரியர் என்னும் பெயர் கொண்டு முடியும். ஈண்டு அப்பெயர் எஞ்சி நின்றது.

மக்கள் என்னாது சுட்டு என்றது என்னை யெனின், மக்களாவார் ஒரு நீர்மையரன்றி, ஆணும் பெண்ணும் அலியுமாகிய வடிவு வேற்றுமையுடையராதலின், அவரெல்லார் மாட்டும் பொதுவாகக் கிடக்கும் மக்கட்டன்மையைக் குறித்து, 'மக்கள் இவர் என்னும் பொதுப்பொருண்மை உயர்திணையாவது' என்பதறிவித்தற்குச் 'சுட்டு' என்றார்.

அவரல்லாத அஃறிணை யென்னாது, 'பிற' என்றது என்னை யெனின், மக்களல்லாத என்றவழி, உயிருடையனவற்றையே சுட்டும் என்று ஐயுற்று உயிரில் பொருளும் அஃறிணை என்பதறிவித்தற்குப் 'பிற' என்றார்.

'இசைக்குமன' என்பது 'செய்மன' என்னும் *தொழிற் பெயர். அது 'செய்யுமன' என விரிந்து நின்றது. அது 'சொல்' என்னும் பெயர்ப்பயனிலை கொண்டு முடிந்தது.

இனி இச்சூத்திரத்திற்குப் பிறவாற்றானும் கடாவிடையுள்ளுறுத் துரைப்பிற் பெருகும்.

நச்.

இனி இத்தலைச் சூத்திரம் சொல்லும் பொருளும் வரையறுத்துணர்த்துகின்றது.

(இதன் பொருள்) மக்கட் சுட்டே—மக்களாகிய நன்கு மதிக்கப்படும் பொருளை, உயர்திணை என் மனார்—உயர்திணை என்று கூறுவர் தொல்லாசிரியர்; அவர் அல பிறவே—அம்மக்கள்

---

3. என்மனார் - எதிர்காலம் - சேனாவரையர், நிகழ்காலம்- நச்சினார்க்கினியர்.

* தொழிற்பெயர்—வினையாலணையும் பெயர். இசைப்பன—இசைப்பனவாகிய அவைகள்.

அல்லாத பிற பொருளை, அஃறிணை என்மனார்—அஃறிணை என்று கூறுவர் தொல்லாசிரியர்; ஆ இருதிணையின் இசைக்கும் மன் சொல்லே—அவ்விரு திணைப் பொருள்களையும் உணர்த்தும் சொற்கள் (என்றவாறு).

ஏகாரம் மூன்றும் ஈற்றசை. இணைத்தென அறிந்த உம்மை விகாரத்தால் தொக்கது.

'இசைப்பு இசையாகும்' (உரியியல் 12) என்றதனால் இசைப்பு 'ஒலிக்கும்' என்னும் பொருள் தந்தது எனின், சொல்லுக்குப் பொருள் உணர்த்தும்வழி அல்லது ஒலித்தல் கூடாமையின், 'உணர்த்தும்' என்னும் தொழிலினை 'இசைக்கும்' என்னும் தொழிலினால் கூறினார். [1]இதுவும் ஓர் மரபு வழுவமைதி. பொருளை உணர்த்துவான் ஒரு சாத்தனே எனினும், அவற்கு அது கருவியாக அல்லது உணர்த்தலாகாமையின், அக் கருவிமேல் தொழிலேற்றிச் 'சொல் உணர்த்தும்' என்று [2]கருவிக்

---

1. ஒலித்தலை இசைத்தல் என்பது மரபு: உணர்த்துதலைக் கூறுதல் மரபு இல்லை. இச்சூத்திரத்தில் உணர்த்தும் என்பதை இசைக்கும் என்றலின் மரபு வழு. எனினும் ஒருவன் சொல்லை இசைப்பது பொருளை யுணர்த்தவே யாதலின் அமைதியாயிற்று.

2. கருவிக் கருத்தா. கருவியையே கருத்தாவாகக் கூறுவது. பொருளையுணர்த்தச் சொல் கருவி. இச் சூத்திரத்தில் சொல் இசைக்கும் என்றால் சொல்லானது உணர்த்தும் எனப் பொருள்படினும் சொல் உணர்த்தும் தொழில் செய்யாதாதலின் அதனைவிடுத்துச் சொல் லால் உணர்த்தப்படும் எனப் பொருள் கொள்ள வேண்டும். அப்போது சொல் கருவியாகிறது. எனவே சொல்லாகிய கருவியை இங்குக் கருத்தாப்போல் கொண்டு சொல் இசைக்கும் என்றார் ஆசிரியர். அதனால் சொல் என்பது கருவிக் கருத்தாவாம். எல்லாச் சொல்லாலும் பொருள் குறிக்கப்படும் என்பதை, எல்லாச் சொல்லும் பொருள் குறித்தன என்றதும் கருவிக் கருத்தா நிலையிலேயே சொல்லப்பட்டதாம்.

கருத்தாவாகக் கூறினார். இவ்வாசிரியர் எவ்விடத்தும் சொல்லைக் கருவிக் கருத்தாவாகக் கூறுமாறு மேலே காண்க. அஃது,

"எல்லாச் சொல்லும் பொருள்குறித் தனவே" (பெயரியல். 1) என்றாற் போல்வது.

இச்சூத்திரத்தாற் பொருள் இரண்டு; சொல் இரண்டு என வரையறுத்தார்.

[3] உயர்திணை என்பது, ‚உயர்ந்த ஒழுக்கம்' என இறந்தகால வினைத்தொகை. அஃது ஆகுபெயராய் அப்பொருளையுணர்த்தி நின்றது. இதனைப் பண்புத்தொகை என்பாரும் உளர். அது பொருந்தாது; என்னை? இது காலந் தோன்றி நிற்றலின்.

மக்கட் சுட்டு என்பது, 'மக்களாகிய சுட்டு' என இரு பெயரொட்டுப் பண்புத் தொகை. சுட்டு—நன்கு மதிப்பு. அஃது ஆகுபெயராய் மக்கட்பொருளை யுணர்த்தி நின்றது. சேனாவரையர் இதனைப் பண்புத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை என்றாராலோ வெனின், இரு பெயரொட் டாகுபெயர்க்கும் அன்மொழித் தொகைக்கும் வேறுபாடு உணராமற் கூறினமையின் அது பொருந்தாது. என்னை வேறுபாடு எனின், [4]ஈண்டு ஆகுபெயராய் நின்ற நன்கு மதிக்கும்

---

3. இதற்குச் சேனாவரையர் உரையும் அடிக்குறிப்பும் பார்க்க. (பக். 33)

4. மக்கட் சுட்டு : மக்கள் என்பது மக்களை யுணர்த்தச் சுட்டு என்பதும் மக்களையே உணர்த்துகிறது. அதாவது இரு சொற்களும் ஒரு பொருளையே உணர்த்துகின்றன. அதனால் சுட்டு என்பது ஆகுபெயர். மக்கட் சுட்டு என்பது இருபெயரொட்டுப் பண்பாகு பெயர்.

வெள்ளாடை : வெள் என்பது ஆடையின் நிறத்தை யும் ஆடை என்பது ஆடையணிந்தாளையும் உணர்த்து கின்றன. வெண்மை என்பது அவளைச் சுட்ட வில்லை, அதனால் வெள்ளாடை என்பது பண்புத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை.

பொருளும் மக்களையே உணர்த்தி நிற்கும். அன்மொழித்தொகை அவ்வாறின்றி, 'வெள்ளாடை' என்றால் வெண்மையும் ஆடையும் அன்றி உடுத்தாளையே உணர்த்தி நிற்கும். இது தம்முள் வேற்றுமை.

[5] அம்மொழி நிலையா தன்மொழி நிலையலும் (எச்சவியல் 23) என்புழி, வெள்ளாடை என்புழித் தொக்க இருமொழி மேலும் நில்லாது உடுத்தாள் என்னும் அன்மொழிமேல் நின்றது' என்று உதாரணங்காட்டினார் சேனாவரையரும் என்றுணர்க.

அஃறிணை, 'அவ்வொழுக்கம் அல்லவாகிய ஒழுக்கம்' எனப் பண்புத்தொகை. அது பொருளை யுணர்த்தி நின்றது ஆகுபெயராம்.

என்மனார் என்பது, ஓர் ஆரீற்று நிகழ்கால முற்றுவினைத் திரிசொல். என்றிசினோர் என்பது, அவ்வாறு வந்த இறந்தகால முற்றுவினைத் திரிசொல்.

மக்க டாமே ஆறறி வுயிரே (மரபியல் 33) என்று மக்கள் உயர்ந்தமை மரபியலிற் கூறுப. 'அவரல' என்னாது 'பிற' என்றார், அஃறிணையுயிருள்ளனவும் இல்லனவுமாகிய இருகூறும் அடங்குதற்கு.

"மறங்கடிந்த அருங் கற்பின்" (புறம் 166 : 13) எனவும், "சில சொல்லிற் பல கூந்தல்" (புறம் 166 : 16) எனவும் பிறாண்டும் சான்றோர் செய்யுளில் 'இன்' சாரியை யுருபு பற்றாது நிற்றல் நோக்கி உரையாசிரியரும் 'ஆயிருதிணையும்' என இரண்டாம் உருபு விரித்துப் பொருள் கூறினார்.

---

5. தொடர்மொழிகளில் பொருள் சிறக்குமிடம் முன் மொழி பின்மொழி அவ்விருமொழி, அவற்றிற்கு அப்பால் மறைந்த மொழி என நான்காகும். அன்மொழி யின் பொருள் சிறக்குமிடம் முன்மொழி பின்மொழி அவ்விருமொழி ஆகிய அம்மொழிகளில் நிலையாமல் அவையல்லாத மறைந்த மொழியில் ஆம் என்பது இந்நூற்பாவின் பொருள். சேனாவரையரும் இவ்வாறே பொருள் கூறினார்.

* இனிச் சேனாவரையர், 'மக்கட் சுட்டு' என்பதற்கு 'மக்களாகிய சுட்டு யாதன்கண் நிகழும்—அது மக்கட் சுட்டு' என்றும், 'ஆயிரு திணையின் இசைக்குமன சொல்லே' என்பதற்குச் 'சொல் நிகழ்ச்சிக்குப் பொருள் இடமாதலின், ஆயிருதிணையின் கண் என ஏழாவது விரிக்க' என்றும் பொருள் கூறினாரால் எனின்: [6]முன்னர் மக்கள் என்று கருதப்படும் பொருளை உயர் திணை என்ப' என்று அவர் கண்ணழிவு கூறியது, ஒரு பொருளிடத்து நின்ற மக்கட்டன்மையாலே ஒருவற்கு அப்பொருள் மக்கள் என்று கருதப்பட்டதென்று பொருள் தந்து நின்றது, [7]பின்னர், 'மக்களாகிய சுட்டுயாதன்கண் நிகழும்' என்றது, நோக்குகின்றவர்க்கு 'மக்களாகிய கருத்து யாதொரு பொருளிடத்துத் தோன்றும்' என்று பொருள் தந்தால், 'வெள்ளாடை என்னும் பண்புத்தொகை போல் அக்கருத்து மக்களாகாமையிற் பண்புத்தொகை யன்றாம்: அது 'மக்கள் சுட்டு' என்றதற்கு 'அப்பொருள் மக்கட் சுட்டு' என்று அவர் கூறிய பொருளானும் மக்களையே தோற்றுவித்து நின்றலின் அன்மொழித் தொகை யள்றாம். அன்றியும், ஆசிரியர் ஈண்டு ஒருபொருள் நின்று தன்னை ஒருவற்கு உணர்த்துமாறும் ஒருவன் அதனையுணருமாறும் ஆராய்கின்றாரல்லர். 'உயர்ந்த ஒழுக்கம்' என்று முதனூலாசிரியர் கூறிய குறி உலகத்தார்க்கு விளங்கப் பொருள் கூறக் கருதி, அதன் பயன் எய்துவிப்பத் தாமும் 'மக்களாகிய நன்கு மதிக்கும் பொருள்' என்று அச்சொற்குப் பொருள் கூறினார் என்றுணர்க. [8]அவர் கூறிய உயர்ச்சித் தோன்றத் [9]தாமும் 'நன்கு மதிப்பு' என்று பொருள் கூறினார், தாமும் 'உயர்திணை' என்றே ஆளுதல் பற்றி.

---

* இப்பகுதிக் கருத்து நூற்பா உரைகளின் இறுதியில் விளக்கப்படும்.

6. முன்னர் = மக்கள் சுட்டு என்பதற்கு உரை எழுதிய இடத்தில்

7. பின்னர் = மக்கட்சுட்டு என்பதற்குச் சிறப்புரை எழுதிய இடத்தில்

8. அவர் — தொல்காப்பியர்

9. தாமும் — சேனாவரையரும்

இனி, 'இசைப்பு இசையாகும்' என்பதனால், திணை இடமாகச் சொற்கள் நின்று பிறவற்றை இசைத்தல் வேண்டும்; அதனால் அது பொருந்தாது. அன்றியும், ஆசிரியர்க்கு அங்ஙனம் பொருள் கூறுதல் கருத்தாயின், 'ஆடூஉ வறிசொல்' (கிளவி. 2) முதலிய சூத்திரங்கள் எல்லாஞ் சொல் நிகழ்ச்சிக்குப் பொருள் இடமாக 'ஆடூஉவின் கண் நிகழுஞ் சொல்' மகடூஉவின் கண் நிகழும் சொல்' என்றே சூத்திரஞ் செய்வர்; அங்ஙனம் செய்யாது 'ஒருவன் ஆண் மகனை யறியுஞ் சொல்லும் பெண்டாட்டியை யறியுஞ் சொல்லும்' என 'அறியும்' என்னும் பெயரெச்சம் 'சொல்' என்னும் கருவிப் பொருளைக்கொண்டு முடியச் சூத்திரஞ் செய்தலின், ஆசிரியர்க்கு அங்ஙனம் பொருள் கூறுதல் கருத் தன்மையறிக.

'மன்' என்பது, வினைபற்றிய அசைநிலையிடைச் சொல்லாய் நின்றது.

கல்.

[1]இதன் முதற் சூத்திரம் என்னுதலிற்றோ வெனின் சொல் லும் பொருளும் வரையறுத்து உணர்த்துதல் நுதலிற்று. இனி,

(இ-ள்) உயர்திணை யென்மனார் மக்கட் சுட்டே என்பது, உயர்திணை யென்று சொல்லுப ஆசிரியர் மக்களாகிய நன்கு மதிக்கப்படும் பொருளை என்றவாறு; அஃறிணையென்மனார் அவரல பிறவே என்பது, அஃறிணை என்று சொல்லுப ஆசிரியர் அவரினீங்கிய அல்ல வாகிய பிறபொருளை என்றவாறு; ஆயிரு திணையின் இசைக்கு மன சொல்லே என்பது, அவ்விரண்டு பொருளையும் உணர்த்தும் சொற்கள் என்றவாறு; எனவே உயர் திணைச் சொல்லும் உயர்திணைப் பொருளும் அஃறிணைச் சொல்லும் அஃறிணைப் பொருளும் எனச் சொல்லும் பொருளும் அடங்கின.

'உயர்' என்னும் சொல்லின் முன்னர்த் 'திணை' என்னும் சொல் வந்து இயைந்தவாறு யாதோ வெனின், ஒரு சொல் முன்

1. இதன்—கிளவியாக்கத்தின்

ஒரு சொல் வருங்கால் தொகை நிலை வகையான் வருதலும், எண்ணுநிலை வகையான் வருதலும், பயனிலை வகையான் வருதலும் என இம்மூன்று வகையல்லது இல்லை. இதற்குவிதி உரையிற் கோடல் என்னும் தந்திரவுத்தி. ''அவற்றுள் தொகை நிலை வகையான் வந்தது 'யானைக் கோடு' என்பது. எண்ணு நிலை வகையான் வந்தது 'நிலனு நீரும்' என்பது. பயனிலை வகையான் வந்தது 'சாத்தன் உண்டான்' என்பது.

மற்று எச்ச வகை, அடுக்கு வகை, பொருள் கோள் வகை, ஆக்கவகை, இடைச்சொல்வகை, உரிச்சொல்வகை என்றாற் போலப் பிறவும் வகையுள வெனின், நால்வகைச் சொல்லினும் சிறப்புடைய பெயரினையும், வினையிற் சிறப்புடைய முற்றுச் சொல்லினையும் பற்றி, வழக்கிடத்தும் பெரும்பான்மையும் வருவன அவையே யாகலின் அம்மூன்றல்லது இல்லை யென்றார் போலும்.

அவையாவன :—எச்சவகை : உண்டுவந்தான்' உண்ட சாத்தன் என்றாற் போல்வன. அடுக்குவகை : பாடுகோ பாடுகோ பாடுகோ பாடுகோ என்றாற்போல்வன. பொருள் கோள்வகை; [2]'சுரையாழ அம்மி மிதப்ப' என்றாற் போல் வன. ஆக்கவகை : 'சாத்தன் தலைவனாயினான்' என்றாற் போல்வன. இடைச்சொல் வகை ; 'யானோ தஞ்சம் பெரும' என்றாற் போல்வன உரிச்சொல் வகை ; 'செய்யார் தேஎந் [3]தோமரல் கலிப்ப' என்பன.

அவற்றுள் இது தொகைநிலை வகையான் வந்தது. தொகை நிலைவகை ஆறனுள்ளும் வினைத்தொகை. வினைத் தொகை மூன்றனுள்ளும் இறந்த கால வினைத்தொகை.

[4]என்மனார் என்றது என்ப வென்னும் முற்றுச் சொல்

---

2. சுரை மிதப்ப அம்மி ஆழ எனப் பொருள் கொள்க. சுண்ணமொழிமாற்று.

3. தோமரல்—தெருமரல் என்றிருப்பின் நன்று. இது உரிச் சொல்.

4. இளம்பூரணரும் இக்கருத்தினரே.

வினைக் 'குறைக்கும் வழிக் குறைத்தல்' என்பதனால் பகரங் குறைத்து,'விரிக்கும் வழி விரித்தல்' என்பதனான் மன்னும் ஆரும் என்பன இரண்டு இடைச்சொல் பெய்து விரித்து என்மனார் என்றாராயிற்று.

இம்முற்றுச் சொற்கும், பெயராகிய [5]ஆசிரியர் என்பது செய்யுள் விகாரத்தால் தொக்கது : இது எச்சவகை.

[6]என்றார் எனற்பாலதனைக் காலமயக்கத்தால் என்மனார் என்றார் என வுணர்க.

இனி, உயர்திணை என்பதற்கு முன் என்ப என்னும் சொல் முதல் நூலாசிரியனது கூற்றினைப் பின், தான் கூறுகிற மக்கட் சுட் டென்பதனோடு இயைவித்தற்குக் கொண்டு கூறு நிலைமைக் கண் வந்ததாகலின் உயர்திணை யென்னுஞ் சொல்லும், என்ப என்னுஞ் சொல்லும், பின்வருகிற 'மக்கட் சுட்டு' என்னுஞ் சொல்லினோடு வேற்றுமைத் தொகையுள் இறுதியுருபுத் தொகைநிலை வகையான் வந்ததென்ப. பொருளியைபு கூறுவ தல்லது தம்முட் சொல் இயைபு இல என வுணர்க

மக்கட் சுட்டு என்பது மக்களாகிய சுட்டு : என்பதன் பொருள் நன்கு மதிப்பு. அஃதாகு பெயரான் மக்கள் மேல் நின் றது. மக்கள் என்னாது சுட்டு என்றது, தான் உயர்திணை யென இடுகின்ற குறியீட்டிற்குக் காரணம் இது என்பது விளக்கல் வேண்டிப் போலும்.

இனி, ஆசிரியர் என்பதனோடு மக்கட் சுட்டு என்பதூஉம் பொருள் இயை பு அல்லது, சொல்லியை பு இன்று என வுணர்க. ஏ என்பது ஈற்றசை.

அஃறிணை என்பது அல்லாததாகிய திணை யெனக் குணப் பண்பு பற்றி வந்த பண்புத் தொகை. உயர்திணை யல்லாத தாகிய தென மேல் நின்ற உயர்திணை யென்னும் சொல் வரு

---

5. 'ஆசிரியர்' தோன்றா எழுவாய் என்றும் கூறப்படும்.

6. இறந்த காலத்தால் கூறவேண்டுவது எதிர்காலத்தால் கூறப்பட்டது என்பது கருத்து.

வித்துக் கொள்க. [7]உயர்திணை யென்பதற்கு ஏற்ப, இழிதிணை யென்று இல் என்னும் பொருள் நோக்கம் எனவுணர்க.

முன்னின்ற சுட்டென்பதன் முன் அஃறிணை யென வந்த சொல்லும் சூத்திரத்துட் பொருட்படை யென்னும் வினை முடிவின் இறுதிக்கண் வந்த தாகலின் பொருளியை பல்லது சொல்லியை பின் றென வுணர்க.

ஈண்டும் 'என்மனார்' என்பது மேற் சொல்லிய வாறே நின்ற தென வுணர்க.

'அவரல' வென்பது நீக்கப் பொருண்மைக்கண் தொக்க ஐந்தாம் வேற்றுமைத் தொகை. 'அல பிற' என்பது அல்லவா கிய பிற என இரு பெயரொட்டுப் பண்புத் தொகை யென வுணர்க. பிற வற்றை யென்னும் இரண்டாம் வேற்றுமை இறுதிக் கண் தொக்கு நின்றது.

'அவரல' என்னாது 'பிற' என்றது அஃறிணை உயிருடைய னவும் உயிரில்லனவும் என இருகூறாய் அவ்விரு கூறும் தத்தம் வகையானும் வேறுபட்டு நின்றமை விளக்கிய வென்பது. ஏ என் பது ஈற்றசை.

அ என்னும் சுட்டு 'நீடவருதல் செய்யுளுள் உரித்தே' (உயிர்மயங்கியல் 6.) என்பதனால் நீண்டு, பிறவும் வேண்டும் செய்கைப்பட்டு, 'ஆயிருதிணை' என நின்றது.

[8]இருதிணை என்பதனோடு 'அ' என்பது பெயர் பற்றி வந்த

---

7. "உயர்திணை என்பதற்கேற்ப உயர்குணம் அல்லாத திணை என்ற பொருளில் அஃறிணை என்பது கூறப் பட்டதேயன்றி, உயர் என்பதற்கு நேர் எதிரான இழி குணத்தின் காரணமாக அஃறிணை எனக் கூறப்பட வில்லை என்ற நோக்கத்தை உள்ளடக்கியதே அஃறிணை என்னும் சொல்" என்பது இத் தொடரின் கருத்தாகும்.

8. 'அ' என்னும் சுட்டு இருதிணை என்னும் பெயரைப் பற்றி (அடுத்து) வந்த இடைச்சொல். எனவே அது தொகை நிலை, எண்ணு நிலை, பயனிலை என்னும் வகையில் எவ்வகையில் தொடர்ந்தது எனச் சொல் இயைபு கூற வேண்டுவது இல்லை.

தத்தம் குறிப்பிற் பொருள் செய்யும் இடைச்சொல் என்பது அல்லது மூவகையிற் சொல் இயைபு கூறப்படாது. இருதிணை யென்பது இரண்டாகிய திணையென இருபெயரொட்டுப் பண்புத்தொகை,

[9]பிறிதென்பதனோடு ஆயிருதிணை என்பதூஉம், பொருட் படையாகிய வினை முடிவின் கண் வந்ததாதலின் சொல்இயைபு இன்றென்பது.

'திணை' யென்பதனோடு 'இசைக்கும்' என்பது தொகை நிலையான் வந்தது. தொகையுள் இரண்டாம் வேற்றுமைத் தொகை; பொருள் நிற்ப வுருபு தொகுதலின் உருபுத் தொகை யெனப்படும்.

இனி, 'பெயரும் தொழிலும்' என்றெழுந்த பொது விதியை இரண்டாவதற்கு விலக்கிச் 'சாரியை யுள்வழித்தன்னுருபு நிலை யலும்' என்று சிறப்பு விதியோதுதலின் செய்யுள் விகாரத்தாற் சாரியை நிற்ப, உருபு தொக்கது போலும். ஆயிருதிணையையும் என்னும் முற்றும்மையும் செய்யுள் விகாரத்தால் தொக்கது.

இசைக்கும் என்பது செய்யும் என்னும் முற்றுச்சொல். அது பின் நின்ற சொல் என்பதனோடு பயனிலை வகையான் வந்தது.

'இசைப்பு இசையாகும்' (உரியியல் 12) என்பதனான் இசைக்கும் என்பதன் பொருள் ஒலிக்கும் என்பதே யாயினும் சொல்லிற்குப் பொருளுணர்த்தும்வழி யல்லாது ஒலித்தல் கூடாமையின், உணர்த்தும் என்னும் தொழிலே இசைக்கும் என்னும் தொழிலாற்கூறிய வாறாகக் கொள்க. இதுவும் ஓர் மரபு வழுவமைதி போலும்.

பொருளையுணர்த்துவான் ஒரு சாத்தனே எனினும் அவற் கது கருவியாக அல்லது உணர்த்தலாகாமையின் அக்கருவிமேல் தொழிலேற்றிச் சொல் உணர்த்தும் என்று கருவி கருத்தாவாகச் சொல்லிற்றாக வுணர்க.

---

9. பிற ஆயிரு என்பனவற்றிற்குச் சொல் இயைபு கூற முடியாது. ஏன் எனின் ஆயிரு என்பது பிற என்பதுடன் பொருளால் இயைந்துளதேயன்றிச் சொல்லால் இயைந்ததன்று.

'மன' என்பதூஉம் வினை பற்றிய அசைநிலை யிடைச்சொல் லாதலின் அதனோடியைபு கூறப்பட்டது. 'மன்' என்று பாடம் ஓதுவாருமுளர்.

இச்சூத்திரத்தாற் சொல்லிய பொருள் இவ்வதிகாரத்துச் சொல்லுகிற சொல்லது தொகை வரையறையும், அதனை வரை யறுக்குங்கால் பொருளானல்லது வரையறையின்மையின் அப் பொருளது தொகைவரையறையும், பொருட்கு நூலகத்து ஆட்சி பெற்ற குறியீடும் உணர்த்தினவாறாயிற்று.

ஒருவர்

என்பது, மக்கள் என்று சுட்டப்படும் பொருளை உயர்திணை யென்று சொல்லுப ஆசிரியர்; மக்கள் அல்லாத பிற பொருளை அஃறிணை யென்றுசொல்லுபஆசிரியர்;அவ்விருதிணையினையும் சொல்லும் சொல்லும் உயர்திணைச் சொல்லும் அஃறிணைச் சொல்லும் ஆம்.

எனவே சொல்லும் பொருளும் வரையறுக்கப்பட்டது.

உயர்திணை யென்றது பிறப்பினிற், சிறப்பெய்துதற்கு மக்கள் நிலைமை மிக்க சார்வாகலான்.

என்மனார் என்பது என்ப என்னும் முற்றுச் சொல் 'குறைக்கும் வழிக்குறைத்தல்' என்பதனால் பகரத்தைக் குறைத்து 'விரிக்கும் வழி விரித்தல்' என்பதனால் மன்னும், ஆரும் என்பன இரண்டு இடைச் சொற் பெய்து விரித்தார்.

'என்றார்' என்பதனை 'என்மனார்' என எதிர்காலத்தால் சொல்லியது என்னை?

இறப்பே எதிர்வே ஆயிரு காலமும்
சிறப்பத் தோன்றும் மயங்குமொழிக் கிளவி

என்பதாகலாற் கூறினார்.

இசைக்கும் என்பது செய்யும் என்னும் முற்றுச் சொல். 'மன்' என்ற இடைச் சொல் 'மன' என ஈறு திரிந்தது. 'மன்' என்று

பாடம் ஓதுவாரும் உளர். உயர்ந்ததிணை எனும் இறந்தகால வினைத் தொகை உயர்திணை யெனத் தொக்கது.

ஆசிரியர் என்பது இச்சூத்திரத்து இல்லையெனின், என்ப என்னும் முற்றுச் சொல்லே பெறும். முற்றுச் சொல் எச்சப் பெயர் கொண்டு முடியும் என்பதாகலான்.

அவ்விருதிணையினை என இரண்டாவது விரித்துரைக்க.

வெள்ளைவாரணனார்

இது சொல்லையும் பொருளையும் வரையறுத்து உரைக்கின்றது.

இதன் பொருள் :—உயர்திணை யென்று சொல்லுவர் மக்கள் என்று சுட்டபபடும் பொருளை; அஃறிணையென்று சொல்லுவர் அவரல்லாத (உயிர்ப்) பொருளையும் பிற (உயிரல்) பொருளையும்; அவ்விருதிணைப் பொருள்களையும் சொற்கள் உணர்த்தும் என்றவாறு.

உயர்திணையும் அஃறிணையும் எனப் பொருள்கள் இருதிறப் படுதலால், அவற்றையுணர்த்தும் சொற்களும் உயர்திணைச் சொல் அஃறிணைச் சொல் என இருவகைப் படும் என வரையறுத்தவாறு.

*..............................

மக்கள் என்று கருதப்படும் பொருளே உயர்திணை, அவரல் லாத பிறவெல்லாம் அஃறிணையென வரையறுத்துக் கூறிய தொல்காப்பியர், பின்னர் 'இவ்வென அறியும் அந்தம் தமக்கில' வாகிய தெய்வஞ்சுட்டிய பெயர் முதலியனவும் 'உயர்திணை மருங்கிற் பால் பிரிந்திசைக்கும்' (கிளவி. 4) எனக் கூறுத லாலும், 'மக்கள்தாமே ஆறறி வுயிரே' (மரபியல் 33) என வரையறுத்தோதிப் பின் மக்களினத்தோடு தொடர்புடைய கிளையெனப்படுவாராய் மனவுணர்வுடைய ஆறறிவுயிருள்

---

* உரையாசிரியர்களின் கருத்துகளைத் தொகுத்து எழுதி யிருத்தலின் இக்கருத்துரைகள் இங்கு விடப்பட்டன,

வைத்துக் கருதற்குரிய தேவர் தானவர் முதலியோரையும் ஓராற்றான் உயர்திணையுட் சேர்த்து எண்ணுதற்குரிய முறையில் பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே (மரபியல் 33) என மீண்டும் எடுத்தோதியுள்ளமையானும் மக்களொடு சேர்த்துத் தேவர் தானவர் முதலியோரையும் உயர்திணைவகையுட் சார்த்திக் கூறும் பிற்கால வழக்கிற்கு ஆசிரியர் தொல்காப்பியனார் இடந்துதந்துள்ளமை இங்கு நினைத்தற்குரியதாகும்.

மரம் நாடோறும் உயர்ந்தமை கருதி 'உயர்மரம்' என வழங்குமாறு போன்றும் கல்வியறிவு நாடோறும் உயர்ந்தமை கருதி அதனையுடையார் மேலேற்றி உயர்மக்கள் என வழங்குமாறு போன்றும் ஒழுக்கத்தால் நாளும் உயரும் புடைபெயர்ச்சி கருதி அவ்வுயர்ச்சியுடைய மக்கட் டொகுதியை உயர்திணை எனக் கூறினாராதலின், உயர்திணை என்பது வினைத் தொகை என இளம்பூரணர் முதலிய பண்புடையுரையாசிரியர் கூறியது மிகவும் பொருத்த முடையதாதல் காண்க.

ஆதித்தர்

அ + இரு = ஆயிரு. அகரச்சுட்டு இகரச்சுட்டின் பொருளில் வந்தது என்பர் ஆதித்தர்.

'மக்கட்சுட்டு' என்பதற்கு மக்களைச் சுட்டும் பெயர் என்றும், 'பிற' என்பதற்குப் பிறவற்றைச் சுட்டும் பெயர் என்றும் பொருள் கொள்வர் ஆதித்தர். அவர் தரும் விளக்கமாவது;

சொல் ஒன்றைக் குறிக்கும் போது அதற்குப் பெயர் ஆகின்றது. ஆதலின் மக்களைக் குறிக்கும் பெயர் எனக்கூறலாயிற்று. 'அவன் மகன் ஒரு சுத்த வீரன்'—வீரன் உயர்திணை. 'எங்கள் வீரன் (நாய்) நேற்று ஒரு முயலைப் பிடித்தது' வீரன்—அஃறிணை. சொல் ஒன்றே மக்களைச் சுட்டின் உயர்திணை, பிறவற்றைச் சுட்டின் அஃறிணை.

என்பார்—இலக்கிய நடையில் என்மனார் ஆயிற்று. என்மனார் என்பது *கவிமரபாக வந்த இசைநிறைச் சொற்றொடர்.

* கவிமரபாக வந்த இசை நிறை எனின் கவியில் மட்டும் ஆளப்படல் வேண்டும். மனிதன் என்பவன் இவனே,

கவிமரபு இசைநிறையாவது 'எண்ணும் எழுத்தும் கண் எனத் தகும்'—இது ஔவையார் வாக்கு. இதே கருத்தை வள்ளுவர் 'எண் என்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும் கண் என்ப வாழும் உயிர்க்கு (குறள்) எனப் பாடினார். இதன் கருத்து, 'எண் எழுத்து இவ்விரண்டும் வாழும் உயிர்க்குக் கண்' என்பதே, ஆயின் மும்முறை உற்ற 'என்ப' என்பதன் பொருள் என்னை? 'எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும' என்ற சொற்றொடரின் பொருளே ஆங்குஉளது. ஆகவே 'என்ப' என்பது கவிமரபாக வந்த இசைநிறை என்று கூறுகின்றோம்.

செ. வை. சண்முகம்

''தொல்காப்பியர் 'ஆயிருதிணையின் இசைக்கு மன் சொல்லே' என்று பொதுநிலையில் கூறியிருந்தாலும் இது பெயர்க்கே சிறப்பாக உரிய உட்பாகுபாடு என்று கொள்வதே பொருந்தும். ஆயினும் வினையிலும் விகுதி திணைபால் காட்டுவதால் வினையையும் பிரிக்க முடியும் என்று தொல்காப்பியர் ருதுவதாகவே நினைக்க வேண்டியிருக்கிறது. இந்த ஐயம் இரண்டு காரணங்களால் உறுதிப்படுகிறது. கிளவியாக்கத்தில் ருபயரிலும் வினையிலும் பாலறி கிளவி தோன்றும் என்று கூறுவதாலும் (494) பெயரையும் (6 45, 3 4) வினையையும் (686 35) ஒரே வகையாகப் பாகு படுத்தியிருப்பதாலும் அந்த உண்மை வலியுறுகிறது. †

'ஆட்டம் என்பது இதுவே' என உலக வழக்கிலும் 'என்' அடிப்படையாக வரும் சொற்களைப் பயன்படுத்துதல் காணலாம். என்பது என்ப முதலிய சொற்கள் சொல்லப்படும் பொருள்களின் சிறப்பையுணர்த்த வருவன. 'ஊரெனப்படுவது உறையூர்' என்பது போல. 'எண்ணும் எழுத்தும் கண்' என்னாமல் 'எனத்தகும்' என்றது காணும் போது, வள்ளுவர் கூறிய 'என்ப' என்பதையே ஔவையார் (பிற்காலத்தவர்) விடாமல் போற்றினார் என்னலாம்—சிவ.

---

† இந்தியப் பல்கலைக் கழகத் தமிழாசிரியர் மன்றம் பன்னிரண்டாவது கருத்தரங்கு ஆய்வுக்கோவை தொகுதி 2 பக். 1430 ஷ்தமிழாசிரியர் மன்ற வெளியீடு, அண்ணாமலை நகர். (1980)

சிவலிங்கனார்

1. என்ப—என்மனார்.

> "என்மனார் என்பது செய்யுள் முடிபு எய்தி நின்றதோர் ஆர் ஈற்று எதிர்கால முற்றுச் சொல்; என்றிசினோர் கண்டிசினோர் என்பன முதலாயின அவ்வாறு வந்த இறந்தகால முற்றுச்சொல்"

என்பது சேனாவரையர் கூற்று. இவர் கருத்துப்படி 'என்மனார் என்பது, **என் + மன் + ஆர்**எனப்பிரிக்கப்படும். **மன்** என்னும் இடைச்சொல் எதிர் காலம் காட்டுவது. ஆனால் **என்றிசினோர் கண்டிசினோர்** என்பவற்றில் இசின் இடைச்சொல் காலம் காட்டாமல் றகர ஒற்றும் டகர ஒற்றுமே காலம் காட்டின. அதனால் இசின் என்ற இடைச்சொல் போல **மன்** என்ற இடைச்சொல் வந்தது என்பது பொருந்தாது. அப்படியாயின் **ஆர்** என்ற விகுதியிடைச் சொல்லே எதிர் காலம் காட்டியதாகல் வேண்டும். இடைச்சொற்களில் சில காலம் காட்டும்; சில காலம் காடடும் எழுத்துடன் சேர்ந்து வரும் எனக் கொண்டால் **மன்** காலம் காட்டியது என்னலாம். காலம் காட்டும் **மன்** என்பதற்குக் காலம் காட்டாத இசின் என்ற இடைச்சொல் வந்த என்றிசினோர் கண்டிசினோர் என்பனவற்றைப் பொருத்திக் காட்டுவது பொருந்தாது.

> "**என்மனார்** என்பது **என்ப** என்னும் முற்றுச் சொல்லைக் குறைக்கும் வழிக் குறைத்தல் என்பதனாற் பகரம் குறைத்து, விரிக்கும் வழி விரித்தல் என்பதனால் **மன்**னும் **ஆ**ரும் என்பன இரண்டிடைச் சொற் பெய்து விரித்தான்"

இது இளம்பூரணர் உரை. இவரது கொள்கை **என்ப** என்பது இயற்சொல் என்பதும், அஃது ஆசிரியர் தொல்காப்பியரால் **என்மனார்** எனத்திரித்துக் கொள்ளப் பட்டது என்பதும் ஆகும். இவரைத் தெய்வச் சிலையார்,

> பகரங் குறைக்கின்றது செய்யுளின்பம் வேண்டியன்றே? ஆண்டுக் குறைத்தவழிப் பின்னும் இரண்டெழுத்து விரிக்க வேண்டுமாயின் குறைத்ததனாற் பயன் இன்மையின் இவ்வா றெழுதும் உரை குற்றம் என்க"

என்று மறுத்தார். இவர் மறுப்புப் பொருந்துமா என்பது ஐயமேயாம். குறைப்பதும் விரிப்பதும் செய்யுளின்பம் கருதியாயின், குறைத்தனினும் அதிகப்பட விரித்தலே தேவையான போது, குறைத்த ஒன்றற்குப்பதில் இரண்டெழுத்து விரித்துக் கொள்வதால் — இசையின்பம் செய்யுளின்பம் மிகுதிப் படுதலின் பயன் உண்டு என்க. அதனால் மறுப்பு ஏற்கத் தக்க தன்று. இளம்பூரணரைச் சேனாவரையர் மறுக்குமாறு :

> "என்மனார் என்பது இடர்ப்பட்டுழிச் சிறுபான்மை வாராது இந்நூலுள்ளும் சான்றோர் செய்யுளுள்ளும் பயின்று வருதலானும், இசை நிறை என்பது மறுத்துப் பொருள் கூறுகின்றார், பின்னும் இறைநிறை என்றல் மேற் கோள் மலைவு ஆதலாலும் அவர்க்கது கருத்தன் றெனக."

என்பது அம் மறுப்பு. என்ப என்ற சொல்லைத் தொல்காப்பியரே என்மனார் எனத் திரித்து விட்டார் என்பது இளம்பூரணர் கொள்கை. சேனாவரையர் என்மனார் என்பது தொல்காப்பியர் திருத்திய சொல் லன்று; அவர்க்கு முன்னோரும் அதனைக் கையாண்டுள்ளனர் : ஆதலின் உரையாசிரியர் கூற்றுப் பொருந்தாது என்பதற்காக "இடர்ப்பட்டுழிச் சிறுபான்மை வாராது இந்நூலுள்ளும் சான்றோர் செய்யுளுள்ளும் பயின்று வருதலானும்" என்றார். இக்கூற்று ஏற்புடையதேயாம். அடுத்துக் கூறிய மறுப்பு ஏற்புடையதன்று.

> "இசைநிறை என்பது மறுத்துப் பொருள் கூறுகின்றார் பின்னும் இசைநிறை என்பது மேற் கோள் மலைவு"

என்று சேனாவரையர் எழுதிய தொடர் யாரைக் குறிக்கின்றது? இசைநிறை என்பது மறுத்துப் பொருள் கூறியதும், பின்னும் அதைத்தாமே இசைநிறை யென்றதும் உரையாசிரியரா? உரையாசிரியர் எனின் இளம்பூரணர் உரையில் அவ்வாறில்லை. அதனால் இளம்பூரணரினும் வேறுபட்ட ஓர் உரையாசிரியரையே சேனாவரையர் மறுத்தார் என்பது பெறப்படும்.

இனி இசைநிறையை மறுத்தவர் தொல்காப்பியர் எனப் பொருள் கொண்டால் மறுப்பு ஆய்வுக்குரியதாக அமையும்.

தொல்காப்பியர் மன் என்னும் இடைச்சொல் காட்டும் பொருள் மூன்று என்பர்.

> கழிவே ஆக்கம் ஒழியிசைக் கிளவியென்று
> அம்மூன் றென்ப மன்னைச் சொல்லே (சொல். 252)

என்பது அவர் வாக்கு. மன் என்பது இசைநிறைப் பொருளில் வரும் என்று கூறவில்லை. அப்படியிருக்க ஆசிரியரே என்மனார் என்ற சொல்லை உருவாக்கி அதில் மன் என்பது இசைநிறையாக வந்தது என்று ஆள்வாரானால் அஃது அவர் கொள்கைக்கே மாறுபட்டதாகும். அதனால் அவர் 'மேற்கோள் மலைவு' என்ற குற்றம் செய்தவராகின்றார். அப்படிக் குற்றம் புரியார் ஆதலின் உரையாசிரியர் கொள்கை தவறு என்று விளக்கவே "இசைநிறை என்பது மறுத்துப் பொருள் கூறுகின்றார் பின்னும் இசைநிறை யென்றல் மேற்கோள் மலைவு' என்றார். இப்படிச் சேனா வரையர் கூறுவதன் கருத்து 'ஆசிரியர் ஒரு சொல் பற்றி ஒரு பொருள் கூறிப் பின்னர் அதற்கு மாறாகத் தாமே வேறு பொருளில் அச்சொல்லை யாளுவது தவறு' என்பதாகும். இம் மறுப்புப் பொருத்தமில்லை.

ஆசிரியர் மன் என்பது பற்றி இடையியலில் கூறினார். பிற கொன், தில் முதலியன பற்றியும் கூறி, இடையியல் இறுதியில்,

> அவ்வச் சொல்லிற்கு அவையவை பொருளென
> மெய்பெறக் கிளந்த இயல வாயினும்
> வினையொடும் பெயரொடும் நினையத் தோன்றித்
> திரிந்து வேறுபடினும் தெரிந்தனர் கொளலே
> (சொல. 295)

என்ற நூற்பா அமைத்தார். அதன் உரையில் சேனாவரையர் 'அது மன் கொள்கன் தேரே' என்ற தொடரில் மன் என்பது அசைநிலைப் பொருளில் வந்ததாகக் கூறினர். ஆசிரியர் மன் என்பது அசைநிலைப் பொருளில் வரும் என்று கூறவில்லை. புறனடையால் சேனாவரையர் கொண்டார். அதுபோலவே புறனடையால் மன் இசைநிறைப் பொருளிலும் வரும் எனக் கொள்ளலாமே; தவறில்லையே.

அன்றியும் ஆசிரியர் மன் என்பதற்குக் கூறிய மூன்று பொருள் மட்டுமின்றித் தாம் கூறாத நிலைபேறு என்ற பொருளில் தாமே யாண்டுள்ளார்.

முன்னிலை தன்மை ஆயீ ரிடத்தொடு
மன்னா தாகும் வியங்கோட் கிளவி (சொல். 226)

என்றவிடத்து மன்னாது என்பது நிலைபெறாது என்ற பொருளில் ஆளப்பட்டமை காணலாம். சேனாவரையர் உரையும் அதுவே. "மன்னாப் பொருளும் அன்ன வியற்றே" (சொல் 34) என்ற விடத்தும் அப்பொருளேயுண்டு. எனவே நிலைபேறு என்ற பொருளில் ஆசிரியரே ஆண்டது மேற்கோள் மலைவு ஆகுமோ? இப்படியாளுவது உடம்பொடு புணர்த்தல் என்ற உத்தியின்பாற் பட்டதாகுமல்லவோ?

மேலும் ஆசிரியர் மன் என்பது மொழிக்கு முன்னும் பின்னும் வருதலை நோக்கிக் கழிவு ஆக்கம் ஒழியிசை என்ற அம்மூன்று பொருள்களைக் கூறினார். வினைச் சொல்லகத்து வரும் இடைச்சொல் பற்றி யிடையியலிற் கூறவில்லை. புணரியல் நிலையிடைப் பொருள்நிலைக்குதவுவனவான இடைச்சொற்கள் பற்றி இடையியலில் கூறவில்லையெனச் சேனாவரையரே, "அவைதாம் முன்னும் பின்னும்" (செரல்.251) என்ற நூற்பா வுரையில் கூறியுள்ளார். அதனால் வினைச் சொல்லகத்து வந்த மன் பற்றி மேற்கோள் மலைவுக்குற்றம் ஆசிரியர்க்கு வருமோ என்று அஞ்சவேண்டுவதில்லை. (செந்தமிழ்ச் செல்வி சிலம்பு 47—பால் 5 பக் 269-172 1973)

2. மக்கட்சுட்டு

மக்கட்சுட்டு = மக்கள் என்று சுட்டப்படும் பொருள்—இளம்.

மக்கள் என்று கருதப்படும் பொருள்—சேனா.
மக்கள் என்று குறிக்கப்படும் பொருள்—தெய்.
மக்களாகிய நன்கு மதிக்கப்படும் பொருள்—நச்.
மக்களாகியநன்கு மதிக்கப்படும்பொருள்—கல்.
மக்கள் என்று சுட்டப்படும் பொருள்—ஒரு.
மக்களைச் சுட்டும் பெயர்—ஆதி.

மக்கட் சுட்டு என்பது பற்றி உரையாசிரியர்கள் இருவகைக் கருத்தினர் என்பதை மேலேகாட்டிய பொருட்களால் அறியலாம். மக்கள் என்று / ஆக சுட்டப்படும் பொருள் கொண்டவர்கள் இளம் பூரணர், சேனாவரையர், தெய்வச்சிலையார், ஒருவர் என்போர். இவர்கள் என்று என்னும் வினையெச்சச் சொல்லையோ ஆக என்னும் வினையெச்சச் சொல்லையோ வரு வித்துப் பொருள் கொண்டனர்.

நச்சினார்க்கினியரும் கல்லாடனாரும் மக்களாகிய சுட்டப் படும் பொருள் எனக் கொண்டனர். இவர்கள் ஆகிய என்னும் பண்புருபினை வருவித்துக் கொண்டனர்.

ஆதித்தர் மக்களைச் சுட்டுதல் என இரண்டாம் வேற்றுமைத் தொடராகக் கொண்டார். இவர் தவிரப் பிறர் எல்லாரும் சுட்டு என்பதற்குச் சுட்டப்படும் பொருள் எனச் செயப்பாட்டு நிலையில் பொருள் கொண்டனர். ஆதித்தர் சுட்டுதலைச் செய்யும் பெயர் என செய்வினை நிலையிற் பொருள் கொண் டனர். எனினும யாவரும் சுட்டு என்பது, தன் பொருளினின்றும் தன்னொடு தொடர்பான வேறு பொருளையே குறிப்பதாகக் கொள்வதில் மாறுபடவில்லை.

சேனாவரையர் 'மக்கட்சுட்டு' என்பதற்கு உரையெழுதும் போது 'மக்கள் என்று கருதப்படும் பொருள்' என உரையெழுதி னார். இவ்வுரையின்படி மக்கட்சுட்டு என்பதற்குத் தொடரிலக் கணம் கூறுவதானால் வினையெச்சப் பொருள் தரும் 'என்று' 'ஆக' என்பதை விரித்த நிலையில் கூற வேண்டும். மக்கட்சுட்டு எனத்தொகை நிலையிலேயே கூறவேண்டுமாயின் இடைச்சொல் தொகைத் தொடர் என்று கூறலாம். ஆனால் அவர் சிறப்புரை எழுதியவிடத்தில் மக்களாகிய சுட்டு என விரித்து, "மக்களாகிய சுட்டு யாதன்கண் நிகழும் அது மக்கட்சுட்டு எனப் பண்புத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை" எனத்தொட ரிலக்கணம் கூறினார். இது உரை எழுதியதற்கு மாறுபட உள்ளது.

அன்றியும் அவர் எழுதிய உரைக்கும் சிறப்புரைக்கும் கருத்து மாறுபாடும் உண்டு. ஒருவன் ஒரு பொருளைப் பார்க்கும் போது அப்பொருளில் மக்கள் தன்மையிருப்பதும் கண்டு அதனை மக்கள் என்று கருதினான் : அதாவது பார்க்கும்போதே அதனி டம் மக்கள் தன்மையைக் கண்டான். அப்பொருளே அவனுக்குத்

தான் யார் என்று உணர்த்தியது. இக்கருத்தைத் தெரிவிப்பது "மக்கள் என்று கருதப்படும் பொருள்" என்ற தொடர்.

"மக்கள் தன்மையாவது இன்னது என ஓர் இலக்கண அமைதியுட்கொண்ட ஒருவன் ஒருபொருளைப் பார்க்கும்போது அவ்விலக்கணம் அப்பொருளில் பொருந்தியிருந்தால் அதனை மக்கள் என்று நினைப்பான்; இல்லையேல் நினையான்" என்னும் கருத்தைத் தெரிவிப்பது, "மக்களாகிய சுட்டு (கருத்து) யாதன் கண் நிகழும் அது மக்கட் சுட்டு" என்னுந் தொடர். இக்கருத்து ஒருவன் ஒருபொருளை மக்கள் என்று உணர்வதாக அமைந்தது. இது பார்ப்பவன் செயலாகும்.

இனிச் சேனாவரையரின் சொற்றொடர் இலக்கணப் பிழையைக் காணலாம்.

மக்கட்சுட்டு—பண்புத்தொகை என்பர் அவர். வெள்ளாடை என்பது பண்புத்தொகை; அது வெண்மையாகிய ஆடை என விரியும். மக்கட்சுட்டு என்பதும் அவர் கருத்துப்படி 'மக்களாகிய சுட்டு' என விரிந்தது. ஆடைக்கு வெண்மைநிறம் உண்டு; வெண்மையையுடைய ஆடை எனவும் அதை விரிக்கலாம். சுட்டு (கருத்து) மக்களையுடையதன்று. கருத்துக்கு மக்கள் இல்லை. எனவே வெள்ளாடைபோல மக்கட்சுட்டு என்பது பண்புத் தொகை என்று கூறுதல் தவறு.

'வெள்ளாடை வந்தாள்' என்ற தொடரில் வெள்ளாடை என்றது 'வெண்மையாகிய ஆடையையுடைய ஒருத்தி' எனப் பொருள்படும். வெண்மை, ஆடை, ஒருத்தி என்னும் மூன்று பொருள்கள் வெள்ளாடை என்றதில் உண்டு. மக்கட்சுட்டு என்றதில் மக்கள், சுட்டு என்னும் இரண்டு பொருள்களே உள. சுட்டு என்பது சுட்டப்படும் பொருள் எனப் பொருள் கூறலின், சுட்டு, பொருள் என இரண்டு பொருள் இருத்தலின் மக்கட்சுட்டு என்பதிலும் மக்கள், சுட்டு, சுட்டப்படும் பொருள் என மூன்று பொருள் உண்டே என்று வாதிடலாம். வெள்ளாடை என்றதில் ஆடை என்பது தன்னையும் தன்னையுடைய ஒருத்தியையும் உணர்த்துகிறது. மக்கட்சுட்டு என்பதில் சுட்டு (கருத்து) என்பது தன்னையும் தன்மூலமாக வேறொன்றை உணர்த்தாமல் தனக்கு முன்னிற்கும் மக்களையுமே உணர்த்துகின்றது. ஆடை என்பது தன்னையும் தனக்கு அப்பால் உள்ள ஒருத்தியையும்

உணர்த்துகிறதே தவிர தனக்கு முன் உள்ள வெண்மையை யுணர்த்தவில்லை. ஆதலால் மக்கட்சுட்டு என்பது அன்மொழித் தொகையும் அன்று.

இவ்வாறு, சேனாவரையர் கூறிய 'பண்புத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை' என்னும் கருத்தை நச்சினார்க்கினியர் மறுத்தார். 'மக்கட் சுட்டு' என்பது இரு பெயர் ஒட்டு ஆகுபெயர் என்பது நச்சினார்க்கினியர் கருத்தாம். மக்களாகிய சுட்டு எனப் பொருள் தருதலின் அது இருபெயர் ஒட்டுப் பண்புத் தொகை. சுட்டு என்பது சுட்டப்படும் பொருள் தருதலின் ஆகுபெயர். வெள்ளாடை என்பதில் ஆடையணிந்தாள் வேறு வெண்மை வேறாயினாற் போல, சுட்டப்படும் பொருள் வேறு மக்கள் வேறாதலின்றிச் சுட்டப்படும் பொருள் முன்னின்ற மக்களே யாதலின் இருபெயரோட்டாகுபெயராம்.

ஆசிரியர் தொல்காப்பியர் உயர்திணை என்மனார் மக்கள் என்றே கூறியிருக்கலாம்; 'அஃறிணை என்மனார் அவரல பிற சுட்டு' என்னாமல் 'பிற' என்று கூறியதைப்போலக் கூறியிருக்க லாம். மக்கட் சுட்டு எனக்கூறுவானேன் எனின், "இலக்கண நூலார் மக்களை உயர்திணை என்பர்; உயர் என்பது உயர்ந்த ஒழுக்கத்தைக் குறிக்கும்; உயர்திணை என்றால் உயர்ந்த ஒழுக்க முடையதிணை என்பதாகும்; மக்கள் உயர்ந்த ஒழுக்கமுடையவ ராதலின் மதிக்கப்படற்குரியர்; அம்மதிப்பிற்காகவே 'உயர்' என்ற அடை கொடுத்தனர் முன்னோர்; அவர் போலவே யானும் மக்களை உயர்வாக நன்கு மதிப்பாகச் கருதுகிறேன்" என்று நமக்கு அறிவித்தற்காகவே 'மக்கள்' என்று மட்டும் நிறுத்தாமல் மக்கட் சுட்டு என்றார். (சுட்டு நன்கு மதிப்பு—நன்கு மதிக்கப் படும் பொருள்) ஆசிரியர் கூறியவாறுபோலவே சேனாவரையரும் தாமும் உயர்திணை என்ற சொல்லாட்சியை மேற்கொண்ட காரணத்தால் 'சுட்டு' என்பதற்கு 'நன்குமதிப்பு' எனப் பொருள் கொண்டார்.

மு. வரதராசன்

1. என்மனார்

இந்தச் சொல்லைப் பற்றி இவ்வளவு தடுமாற்றம் வேண்டிய தில்லை.

என் + ற் + ஆர் = என்றார்
என் + ற் + அன் + அர் = என்றனர்

என்ற சொற்கள் அன்பெற்றும் பெறாதும் இருவேறு வகையாக அமைதல் போலவே

என் + ம் + ஆர் = என்மார்

என் + ம் + அன் + ஆர் = என்மனார்

என அன்பெற்றும் பெறாதும் இருவேறு வகையாக அமையும் எனக் கொள்ளல் பொருந்தும். மகரம் (உம் என்பதில்) உயிர் கெட்டு நின்று எதிர்காலத்தை உணர்த்துகின்றது எனக் கால இடைநிலை காட்டலும் எளிதாகும். சேனாவரையரும் தெய்வச் சிலையாரும் எதிர்காலம் உணர்த்துவதாகக் கருதுதலும் இதற்குத் துணைபுரிகிறது. என்மார் என்ற சொல் மார்விகுதி யுடையது என்றும், வினையொடு முடிவது என்றும், என்மனார் என்பது செய்யுள் முடிபு என்றும், மன் ஆர் என்பவை காரணம் இன்றிச் சேர்ந்தவை யென்றும் பற்பல வகையாகக் கூறி இடர்ப்பட வேண்டுவதில்லை. * (மொழியியற் கட்டுரைகள் முற்பகுதி பக். 223, 224.)

2. இசைக்குமன.

செய் + ம் + அன் + அ—செய்மன.

இசை + கு + ம் + அன் + அ + —இசைக்குமன

இசைக்குமன என்பதில் கு என்பது சாரியை. செய்கின்றார் என்ப தில் கு + இன்று எனப் பிரித்துக் கு சாரியை எனக் கொண்டாற் போல இங்கும் கொள்ள வேண்டும். ம் கால இடை நிலை. உம் என்பதில் உயிர் கெட்டு, மெய் மட்டும் நின்றது. (கலுழும்—கலுழ்ம் என்பது போல) இசைத்தன இசைக்கின்றன என்பவற்றில் அன் சாரியையும் அகர விகுதியும் அமைந்தாற் போல இவற்றிலும் அமைந்துள்ளன. எதிர்காலம் உணர்த்தும் எனச் சேனாவரையர் கூறுவதும் பொருந்துகிறது. தெய்வச் சிலை யார் செய்மன என்பதை விளக்கும்போது 'இது எதிர் காலத்துச் செய்வது செய்வன செய்பவை செய்யுமவை என வழங்கும் போலும்" என்று எழுதுவது பொருந்தும். வழங்கும் போலும்

---

* விற்பனை உரிமை, பாரிநிலையம், பிராட்வே, சென்னை. 1973

என்று ஐயுற்றுக் கூறவேண்டுவதில்லை. வழங்கும் அல்லது வழங்கு கின்றன என்று அறுதியிட்டு உரைத்தற்கு உரிய சான்றுகள் வரலாற்றில் உள்ளன. (மொழியியற் கட்டுரைகள் முதற்பகுதி. பக். 225, 226.)

க. வர. சச்சிதானந்தம்

என்ப—என்மனார்

என்ப என்பதும் என்மனார் என்பதும் தனித்தனிச் சொற் களே. இளம்பூரணர் என்ப என்பதன் திரிபு என்மனார் எனக் கொள்ளச் சேனாவரையர் தனித்தனிச் சொற்களாகவே கொண் டார். என்றார், என்பார் என இறப்பும் எதிர்வுமாகிய காலங் களை அவ்விரண்டு சொற்களுமே காட்டும்.

அவ்விரண்டினுள் என்ப என்பது முதற் சொல். அதுவும் என்பர் என்பதன் திரிபாகலாம். அதனால் முதலில் என்ப என்பது எதிர்காலம் காட்டிப் பின்னர் இறந்த காலத்துக்கும் வந்ததாக லாம்.

பகரமும் மகரமும் பிறப்பு ஒற்றுமையுடையன. ஆதலின் என்பர் என்பது என்மர் என்றாகியிருக்கலாம். என்பர் என்பது என்ப எனத்திரிந்த காலத்தில் என்மர் என்பது என்ம என்றா காமல் செய்யுளிசை கருதி என்மனார் எனத்திரிக்கப்பட்டிருக்க லாம்.

என்ப என்பது எதிர்காலமும் இறந்த காலமும் காட்டி னாலும் 'என்று சொல்லுவர் (சொன்னார்) ஆசிரியர்' என்னும் போது 'சொல்கிறார்' என்று சொல்வதில் தவறில்லை யல்லவா?

'எழுத்தெனப்படுப... முப்பஃ தென்ப' (தொல்.1) என்ற விடத்தில் என்ப என்பதற்கு 'என்று ஆசிரியர் சொன்னார்' என்பது பொருள். அதுவே யாவரும் சொல்வது. அதுவே 'சொல்லுவார்' என எதிர்காலத்துக்கும் வருவதாயிற்று. கடந் தோரும் வருவோரும் முப்பது என்று சொல்வாராயின் இருப்போ ரும் அப்படித்தானே சொல்வர்? அதனால் அதுவே நிகழ்காலத்தும் வரும் என்பதில் தவறில்லை. அதனால்தான் நச்சினார்க்கினியர் என்மனார் என்பது நிகழ்காலச் சொல் என்றார்—(இந்தியப் பல்

கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றம் ஐந்தாவது கருத்தரங்கு ஆய்வுக்கோவை 1973)

மா. அய்யாச்சாமி

என்மனார், மொழிமனார் எனவரும் தொல்காப்பியச் சொற்கள் முறையே என்னும் → என்ம் →, மொழியும் → மொழிம் (காண்க, குறுந். 51—6) என மாறி நின்று 'அன்' —உம் 'ஆர்' —உம் பெற்றுள்ளன. இவற்றில் 'அன்' என்பது சாரியை ஆகாது; சாரியையாயின் குற்றெழுத்தில் தொடங்கும் அன்—, அர் போன்ற பாலறிகிளவிகட்கு முன்னர்த்தான் அது வரும். 'ஆர்' என நெடிலில் தொடங்கும் பாலறி கிளவிக்கு முன்னர் 'அன்' வந்துள்ளதால் அது சாரியை ஆகாது பிற சொல்லைக் குறித்தல் வேண்டும். எனவே கேளும் + அய்யா = கேண்மியா (குமாரசாமி ராஜா—தொல்காப்பிய மொழியியல்) என்றாயினாற் போல என்னும் + அன்னார் = என்மனார், மொழியும் + அன்னார் மொழிமனார் என மாறியிருக்கக்கூடும். (இந்தியப் பல்கலைக் கழகம் 14ஆம் கருத்தரங்கு (1982) ஆய்வுக்கோவை தொகுதி 4. பக். 12)

உயர்திணை முப்பால்

2. ஆடூஉ வறிசொல் மகடூஉ வறிசொல்
பல்லோர் அறியும் சொல்லொடு சிவணி
அம்முப் பாற்சொல் உயர்திணை யவ்வே.

ஆ. மொ:

இல.

The male-denoting word, the femal-denoting word and The epicence-denoting word are the three Kinds of words which belong to High class group.

சு. சு:

The human male-denoting word, the human female-denoting word, along with the epicene plural denoting word are the three kinds of words which belong to the high class.

பி. இ. நூ:

நேமிநாதம். சொல். 3

ஒருவன் ஒருத்தி பலர்......
ஓங்கு திணைப்பால்

நன். 262,

ஆண்பெண் பலரென முப்பாற் றுயர்திணை.

இல. வி. 163.

ஆண்பெண் பலரென முப்பாற் றுயர்திணை.

தொன். 50—3.

ஆண்பெண் பலர் உயர்திணையே.

முத்து. பெய. 10.

ஆண்பெண் பலரென முப்பாற் றுயர்திணை.

இளம்.

இச்சூத்திரம் என்னுதற்றோ வெனின், மேல்திணை கூறு செய்தெனத் திணையுட் பால் கூறு செய்தல் நுதலிற்று.

உரை: ஆடூஉவினை யறியுஞ் சொல்லும், மகடூஉவினை யறியுஞ் சொல்லும் பல்லோர் அறியுஞ் சொல்லொடு பொருந்தி அம்முப்பாலை யறிவிக்கும் சொல் உயர்திணையுடையன, எ—று.

ஆடூஉ என்றது ஆண்மகனை; மகடூஉ என்றது பெண்மகளை; பல்லோர் என்றது அவர் தொக்க பன்மையை.

[1]இனி, அப்பொருள் மூன்று கூறுபடவே, அவற்றை யுணர்த்துஞ் சொல் மூன்று கூறுபடும் என்பது. [2]இது தந்திர வுத்தி வகைமை கூறல்.

---

1. ஆண்பெண் பலர் என உயர்திணைப் பொருள் மூன்று வகைப் படும் எனவே, அவற்றையுணர்த்தும் சொல் ஆடூஉ வறிசொல், மகடூஉ வறிசொல், பலரறியுஞ் சொல் என மூவகைப்படும் என்பது கருத்து. இது உத்தியால் கொள்ளப்பட்டதாகும். இங்ஙனம் கூறுவது வந்தது கொண்டு வாராதது முடித்தல் என்னும் உத்தியைச் சாரும்—கு. சுந்தரமூர்த்தி.

2. தந்திரம்—நூல். நூலாசிரியனால் தன் (இலக்கண) நூலில் கையாளும் உத்தி தந்திரவுத்தி எனப்படும். அவ்வுத்திவகைகளைப் பொருளதிகார மரபியல் இறுதிச் சூத்திரமான "ஒத்த காட்சி உத்திவகை விரிப்பின்" என் பதிற் காண்க.

சேனா.

இ—ள்: ஆடூஉ அறி சொல்லும் மகடூஉ அறி சொல்லும் பல்லோர் அறியுஞ் சொல்லொடு பொருந்தி, அம்மூன்று கூற்றுச் சொல்லும் உயர் திணையனவாம், எ—று.

ஆண் மகனை ஆடூஉ என்றலும், [1]பெண்டாட்டியை மகடூஉ என்றலும் பண்டையோர் வழக்கு.

அறிவு முதலாயினவற்றான் ஆண்மகன் சிறந்தமையின் ஆடூஉ அறிசொல் முற்கூறப்பட்டது. பன்மை யிருபாலும் பற்றி வருதலின் பல்லோர் அறிசொல் பிற்கூறப்பட்டது.

[2]இரண்டாம் வேற்றுமை உயர்திணைக்கண் சிறுபான்மை

---

1. பெண்டாட்டி என்னும் சொல், இக்கால வழக்குப்போல் மனைவியைக் குறிக்காமல் 'பெண் மகள்' என்ற பொதுப் பெயராகச் சேனாவரையர் காலத்தில் வழங்கப்பட்டது என்னலாம். நச்சினார்க்கினியரும் ஆளுதலின் அவர் காலத்தும் வழங்கப்பட்டிருக்கலாம்.

2. ஆடூஉ + அறிசொல் = ஆடூஉ வறிசொல். இதன் பொருள் ஆடூஉவானவன் அறியும் சொல் என எழுவாய் வேற்று மையிலும், ஆடூஉவினை அறியும்சொல் என இரண்டாம் வேற்றுமையிலும் கூறப்படலாம். இங்கு இரண்டாம் வேற்றுமயே கூறப்படவேண்டும் பொது வாக வேற்றுமையுருபுகள் தொக்கும் விரிந்தும்வரு மாயினும் இரண்டாம் வேற்றுமையுருபு உயர்திணையில் வரும்போது விரிந்தே வரவேண்டும்; ஏன் எனின் தொக்கு நின்றால் முதல் வேற்றுமைப் பொருளாகவும் கொள்ளப்பட்டு விடும். ஆனால் ஆசிரியர் தொகை மரபில் (15) "உயர்திணை மருங்கின் ஒழியாது வருதலும்" என்று விதித்தார்- 'ஒழியாது' என்றதனால் சிறுபான்மை ஒழிந்தும் (தொக்கு) வரலாம் என்பது பெறப்படுதலின் இங்கு 'ஆடூஉவையறி சொல்' என விரியாமல் 'ஆடூஉ வறி சொல்' எனத் தொக்கு நின்றது.

தொகப் பெறுதலின், தொக்கு நின்றது. [3]திரிந்த புணர்ச்சி யன்மையின் விகார வகையால் தொக்கதென்பாரும் உளர்.

'சிவணி' என்னும் வினையெச்சம், 'உயர்திணைய' என்னும் வினைக் குறிப்புக் கொண்டது; [4]ஆறாம் வேற்றுமை ஏற்று நின்ற சொல், பெயராயும் வினைக் குறிப்பாயும் நிற்கும் ஆகலான். [5]உயர்திணையவாம் என்னும் முப்பாற் சொல்லின் வினை, 'ஆடூஉ வறிசொல்' 'மகடூஉ வறிசொல்' என்னும் இரண்டன் வினையாகிய 'சிவணி' என்னும் செய்தென் எச்சத்திற்கு வினை

---

3. இவ்வாறு கூறுவார் யார்? அறியக்கூடவில்லை. "உயர்திணை மருங்கின் ஒழியாது வருதலும்" என்பதில் ஒழியாது என்பதனால் சிறிபான்மை ஒழிந்து வரும் என்பது திரிபுப்புணர்ச்சியிலாகும். 'முருகன் + கொணர்ந் தான்' என்னுமிடத்தில் இரண்டன் உருபு விரிந்தே வரவேண்டும். தொக்குவரலாம் எனின் முருகற் கொணர்ந்தான் என உயர்திணைப் பெயரின் ஈற்றில் திரிபு வரவேண்டும்; வந்தால் தொகலாம். அவ்வாறு தொகுவதை ஒழியாது என்னுபதால் கொள்ளலாம். ஆனால் ஆடூஉ + அறிசொல் = ஆடூஉ வறிசொல் என வருவதில் திரிபு இல்லை (உடம்படு மெய்யைத் திரிபாகக் கொள்வதில்லை) ஆனால் இங்கு ஆடூஉவை என்பது ஆடூஉ என்றே இருப்பது விகாரத்தால் ஆகும் என்பது பிறர் கொள்கை. இக்கருத்தும் ஏற்கலாம் எனச் சேனா வரையர் கருதுதலின் மறுக்கவில்லை.

4. ஆறாம் வேற்றுமைப் பன்மையுருபு 'அ' என்பது. உயர் திணை + அ = உயர்திணைய. இங்கு உயர்திணைய என்ப தற்குப் பொருள் 'உயர்திணையனவாம்' என்பதாதலின் 'அ' என்பது வினை முற்று விகுதியாகக் கொள்ள வேண் டும். ஆறாம் வேற்றுமை ஏற்று நின்ற சொல் பெய ராகுமேயன்றி வினையாகாது. ஆதலின் சேனாவரையர் "சிவணி என்னும்......நிற்கும் ஆகலான்" என்று எழுதியது எட்டுணையும் பொருந்துவதின்று.

5. சிவணி என்பது உயர்திணைய என்பதைக்கொண்டு முடி கிறது. ஆடூஉ வறிசொல் மகடூஉ வறிசொல் இரண்டற் கும் உரிய வினை சிவணி என்பது. 'உயர்திணைய' என்

முதல் வினையாயினவாறு என்னை யெனின் :— உயர்திணைய வாதல், ஆடூஉ வறிசொல் மகடூஉ வறிசொல் என்பனவற்றிற்கும் எய்துதலான், வினை முதல் வினையாம் என்க; ''முதல் நிலை மூன்றும் வினைமுதல் முடிபின'' (சொல். 2?0) என்புழி, வினை முதல் வினையென்னுந் துணையல்லது பிறி தொன்றற்குப் பொதுவாகாது வினை முதற்கே வினையாதல் வேண்டும் என்னும் வரையறையின்மையின். அல்லாக்கால், 'இவளும் இவனும் சிற்றில் இழைத்தும் சிறுபறை யறைந்தும் விளையாடுப' என்பன போல்வன அமையாவாம் என்க.

னும் வினை அவ்விரண்டுடன் பலர் அறியும் சொல்லுக்கும் உரியவினை. சிவணி என்பது செய்தென் வாய்பாட்டு வினையெச்சம். அதுதன் கருத்தாவினை கொண்டு முடிய வேண்டும். இங்கு அது பலர்பாலுக்கும் உரிய வினை யாகிய 'உயர்திணைய' என்பதைக் கொண்டு முடிதலின் பிறகருத்தா வினையைக் கொண்டு முடிந்ததாகும். அதனால் உயர்திணைய என்பது சிவணி என்பதற்குத் தன் கருத்தாவினையாமாறு யாங்ஙனம்?என்பது வினா. அதற்குவிடை : உயர்திணைய என்பது சிவணி என்ப தற்குரிய ஆடூஉ வறி சொல் மகடூஉ வறிசொல் என்ப னவற்றிற்கும் உரியவினையாகவே அமைதலின் 'சிவணி' என்பதற்கு 'உயர்திணைய' என்பது தன் கருத்தா வினை யேயாம். ''முதல் நிலை மூன்றும் வினை முதல் முடிபின'' என்ற நூற்பாவில் வினை முதல்வினை தன் கருத்தாவினையைக் கொள்ள வேண்டும் என்பது கூறப் பட்டதேயன்றித் தன் கருத்தாவுக்கும் பிற கருத்தாவுக் கும் பொதுவான வினையைக் கொள்ளல் கூடாது என்பது கூறப்படவில்லை. வினை முதல்வினை பொது வினையைக் கொள்ளாது என்றால் 'இவள் சிற்றில் இழைத்தும் இவன் சிறுபறையறைந்தும்' என்னுமிடத் துத் தன் வினைகள் 'விளையாடுப' என்னும் இருவர்க் கும் உரிய பொதுவினையைக் கொள்வது தவறாக முடியும். இழைத்தும் அறைந்தும் என்னும் தனித்தனி வினை முதல் வினைகள் விளையாடுப என்னும் பொது வினையைக் கொண்டு முடிந்தது போல, ஆடூஉ வறிசொற்கும் மகடூஉ வறிசொற்கும் உரிய 'சிவணி' என்னும் வினை அவ்விருசொற்களுடன் பலர் அறியும் சொற்கும் உரிய 'உயர்திணைய' என்பதுடன் முடிந்தது.

[6]ஆடூஉ வறிசொல் முதலாயினவற்றை உணர்த்தியல்லது அவற்றது இலக்கணம் உணர்த்தலாகாமையின், ,பால் உணர்த்தும் எழுத்து வகுப்பவே அவை தாமும் பெறப்படும்; இச்சூத்திரம் வேண்டா என்பது கடா அன்மை யுணர்க.

[7]உணர்திணைச் சொல் உணர்த்தி, அதனது பாகுபாடு கூறு கின்றாராகலின், 'அம்முப்பாற் சொல் உயர்திணைய' என்றா ராயினும், உயர்திணைச்சொல் மூன்று பாகுபாடுபடும் என்பது கருத்தாகக் கொள்க. இக்கருத்தா னன்றே ஆசிரியர் 'அம்முப் பாற் சொல்லும்' என 'இனைத்தென அறிந்த பொருள் தொகு திக்குக்' (சொல்.33) கொடுக்கும் உம்மை கொடாராயினதூஉம். உரையாசிரியரும், 'உயர்திணை யெனப்பட்ட பகுப்பை விரிப்புழி இத்துணையல்லது விரிபடாதென்பது ஈண்டுக் கூறியது' என்றுரைத்ததூஉம் என்க. ஆயிருபாற் சொல் அஃறிணை யவ்வே (சொல்.3) என்பதற்கும் ஈதொக்கும்.

---

6. பின்னர் 'னஃகான் ஒற்றே ஆடூஉ வறிசொல் முதலிய வாகப் பால் உணர்த்தும் எழுத்துகளை (ன்,ள்,ர்,து,று, டு,அ,ஆ) வகுத்துக் கூறுதலின் ஆடூஉ வறிசொல் முதலியன பெறப்படும். முன்னரும் அப்பெயர்களைக் கூறுவானேன் என்பது வினா. விடை: 'னஃகான்ஒற்றே' என்னும் சூத்திரமும் பிறவும் ஆடூஉ வறிசொல் முதலிய வற்றின் இலக்கணம் உணர்த்துவன; இங்குக் கூறியன அவற்றின் பாகுபாடுகள் — பெயர்கள். பெயர்கள் உணர்த்தியே பெயர்களின் இலக்கணம் உணர்த்த வேண்டும் ஆதலின் அவ்வினா தேவையில்லை.

7. ''இனைத்தென அறிந்த சினைமுதற் கிளவிக்கு, வினைப் படுதொகுதியின் உம்மை, வேண்டும்'' (சொல் 33) என்ற தன்படி 'அம்முப்பாற் சொல்லும் உயர்திணைய' என உம்மை கொடுத்திருக்க வேண்டும்; அவ்வாறு கொடாமைக்குக் காரணம் என்னையெனின், முதற் சூத்திரம் சொல் உயர்திணை அஃறிணை என இருவகைத்து என்கின்றது. இச்சூத்திரம் அவற்றுள் உயர்திணை மூவகைத்து என்கின்றது; ஆதலின் உயர் திணை மூவகை என்னும் போது உம்மை தேவையில்லை யாதலின் ஆசிரியர் உம்மை கொடாது கூறினார்.

தெய்வ.

நிறுத்த முறையானே உயர்திணைச் சொற் பாகுபடுமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ—ள் : — ஆடூஉ வறி சொல் என்பது ஆண் மகனை அறியுஞ்சொல், எ—று. அறிவார்க்குக் கருவியாகிய சொல் அறிசொல் ஆயிற்று. மகடூஉவறிசொல் என்பது பெண்டாட்டியை அறியுஞ் சொல், எ—று. பல்லோர் அறியுஞ் சொல்லொடு சிவணி என்பது பலரையறியுஞ் சொல்லொடு கூடி, எ—று. அம்முப்பாற் சொல் உயர்திணை யவ்வே என்பது அம்மூன்று கூற்றுச்சொல் உயர்திணையிடத்த, எ—று.

உயர்திணைப் பொருள் பற்றி வரும் பெயர்ச் சொல்லும் வினைச்சொல்லும் மூன்று பகுதிய என்றவாறாயிற்று; எற்றுக்கு? ஆண் பெண் அலி, ஆண் பன்மை பெண் பன்மை அலிப்பன்மை, இவரெல்லாரும் தொக்க பன்மையெனப் பல வகைப்படுமால் எனின், பொருள் நோக்கிக் கூறினாரல்லர்; சொல் முடிபு மூவகை என்று கூறினார் எ.்க. என்னை? அலிப்பன்மை மகடூஉ வறி சொல்லானும் கூறப்படு மாதலானும், ஆண் பன்மையும் (பெண் பன்மையும்) எல்லாரும் தொக்க பன்மையும் 'வந்தார்' எனவே முடிதலானும் மூவகையாகி அடங்கிற் றென்க. [1]பல்லோர் அறியுஞ் சொல் என்னாது சிவணி என்றதனாற்

உரையாசிரியர், "உயர்திணை யெனப்பட்ட....விரிபடாது என்பது ஈண்டுக் கூறியது" என்பதும் இக்கருத்துக்குச் சான்றாம். உரையாசிரியர் கூறியதாக உள்ள இப்பகுதி இளம்பூரணத்தில் இல்லை. விடுபட்டிருக்க வேண்டும் என்பது கு. சுந்தரமூர்த்தியின் கருத்து. இது உரையாசிரியர் என்பார் இளம்பூரணர் அல்லர் என்ற கருத்துக்குச் சான்றாகும்.

1. வடநூலார் ஒருமை இருமை பன்மை என மூன்று பகுதி கூறுயது போல் ஆடூஉ வறிசொல், மகடூஉ வறிசொல் (இருவர்க்கு மேல்) பலர் அறிசொல் என்று ஆசிரியர் கூறினாரோ என்ற ஐயம் வராமலிருத்தற்கு, ஆடூஉ வறி சொல்லும் மகடூஉ வறிசொல்லும் ஆகிய இரண்டும் சேர்ந்து பின்பலரறி சொல்லுடன் கூடிமூன்றாம் எனக் கூறுமுகத்தான் தமிழ்நடை ஒருமை, பன்மை

பெற்றது என்னை யெனின், ஒன்று இரண்டு பலவென வடமொழிப்புலவர் கூறியவாறு போலப் பாகுபடும் வழக்கின்மை யின், ஒன்று பலவெனத் தமிழ் நடையிரண்டு பாலாம்; அவற்றுள் உயர்திணை யொருமை, ஆடூஉ வறிசொல் மகடூஉ வறிசொல் என இருமுடிபுடைத்தாகலின், அச்சொற்கள் பலரறி சொல்லொடு கூடி மூன்று பாலாயின அல்லது பாலுள்ளன இரண்டென்பது அறிவித்தற்கெனக் கொள்க.

[2]சிவணி என்பது வினை யெச்சமன்று; ஒடுவின் பொருண்மை தோன்ற வந்தது 'தாயொடு கூடிமூவர்' என்றாற் போல. அம் [3]முப்பாற் சொல்லும் என உம்மை கொடாதது என்னை யெனின், பால் ஐந்துளவாதலிற் கொடாமையும் அமையும் என்க.

நச்.

இஃது உயர்திணைப் பாலைப் பகுக்கின்றது.

இ—ள் : ஆடூஉ அறிசொல் மகடூஉ அறிசொல்—ஒருவன் ஆண் மகனை அறியும் சொல்லும் பெண்டாட்டியை அறியும் சொல்லும், பல்லோர் அறியும் சொல்லொடு சிவணி—பல்லோரை அறியும் சொல்லொடு சிவணுகையினாலே, அம்முப்பாற் சொல்—அம்மூன்று கூறாகிய சொல்லும், உயர்திணைய—உயர்திணை யினையுடையவாம்; எ—று.

என்றிரண்டேயுடையது என்பதை அறிவித்தற்காகச் 'சிவணி' என்ற சொல் கூறப்பட்டது. உயர்திணையில் உள்ள பால்கள் ஆண் பெண் என இரண்டே என்பதறி வித்தற்கும் 'சிவணி' என்பது கூறப்பட்ட தென்க.

2. சிவணி—சிவணுதலொடு. சிவணி என்பது பெயர்ச்சொல் அன்று. அதனால் சிவணுதலொடு எனப்பொருள் கொள்வது ஏற்புடைத்தன்று.

3. உம்மை கொடாமைக்குக் கூறிய காரணம் பொருந்துவ தன்று. உயர்திணையில் பால் மூன்றேயாதலின் உம்மை வேண்டும். சேனாவரையர் கூறிய காரணம் பொருந்தும்.

ஆண் பன்மையும் பெண் பன்மையும் அவ்விருவரும் தொக்க பன்மையுமன்றிப் பன்மைப் பொருள் வேறின்மையின், ஆடூஉவும் மகடூஉவும் பல்லோர் அறியும் சொல்லொடு சிவணுகையினாலே மூன்றுகூறு ஆயிற்றென்றார். எனவே, அல்வழி இரண்டேயாம் என்பது கருத்து.

[1] செய்தென் எச்சம் காரண காரியப் பொருட்டாய் நின்றது. [2] 'உயர்திணைய' என்ற ஆறாம் வேற்றுமையாய் நிற்கும் சொல், ஈண்டுப் பெயராகாது வினைக் குறிப்பாய் நின்றது.

[3] இனி, சிவண' எனத் திரிப்பாரும் உளர்.

[4] இவ்வாறன்றிச் 'சிவணி உயர்திணையவாம்' என்பார்க்கு முப்பாற் சொற்கும் பயனிலையாய் நின்ற 'உயர்திணையவாம்' என்னும் வினைக் குறிப்பு, ஆடூஉ அறிசொல் மகடூஉ அறிசொல் என்னும் இரண்டன் வினையாகிய 'சிவணி' என்னும் செய்தென் எச்சத்திற்கு வினை முதல் வினையாயிற்று, உயர்திணைய வாகல் ஆடூஉ அறிசொற்கும் மகடூஉ அறிசொற்கும் எய்துதலின். ஆடூஉ மகடூஉ என்பன பண்டையார் வழக்கு. [5] அறிசொல் அறிதற்குக் கருவியாகிய சொல்.

---

1. சிவணி என்பது செய்தென் வாய்பாட்டு வினையெச்சம். அது 'முப்பால்' (ஆகும்) என்பதைக் கொண்டு முடிந்தது. சிவணுதலால் மூன்று கூறு எனப்பொருள் படுதலின் சிவணி என்பது காரணப் பொருளில் வந்த வினை யெச்சம். காரணப் பொருட்டு என்பதையே காரண காரியப் பொருட்டு என்றார்.
2. சேனாவரையரும் இக்கருத்தினரே. இது பொருத்த மில்லை என்பதை அவருரைக் குறிப்பிற் காண்க.
3. யார் என்பது தெரியவில்லை. பிற்காலத்தவரான கல்லாடர் 'சிவண' எனத்திரித்தார். அவரது சிறப்புரை பார்க்க.
4. இப்பகுதிக் கருத்து சேனாவரையருடையது. விளக்கம் அவர் உரைக் குறிப்பிற்காண்க.
5. அறிதற்குக் கருவியாகிய சொல்லே அறிவித்தற்கும் கருவியாம்.

கல்.

என்னுதலிற்றோ வெனின், மேல்திணை கூறுசெய்தான் இனி, அத்திணைக்கட் பால் கூறு செய்தல் நுதலிற்று.

இ—ள் : ஆண்மகனை யறியும் சொல்லும், மகளிரை யறியுஞ் சொல்லும்; பலரையறியுஞ் சொல்லொடு கூடி, அம் மூன்று பாலினை யுணர்த்தும் சொல்லும் உயர்திணையன, என்றவாறு.

அறிசொல் என்புழிச் சொல்லிற்கு அறிதல் கூடாமையின், சாத்தன் அறியுஞ் சொல் என ஒரு பெயர் வருவித்துக் கொள்க ஏ ஈற்றசை. [1]'அவ்வே என வகரம் செய்யுள் விகாரத்தான் வந்தது.

'சிவணி' என்பது பல்லோர் அறியுஞ் சொல்லொடு கூட என ஒரு தொகைப் பொருண்மை தோன்ற நின்றதோர் சொல் லென்று சொல்லுக. இவ்வாறன்றிச் சிவணி என்பதைச் செய் தென்னும் வினை யெச்சமாக்கி 'உயர்திணைய' என்னும் ஆறாம் வேற்றுமை வினைக்குறிப்பு நீர்மையும் உடைமையின் அதனொடு முடிந்ததெனக் [2]கூறுவாரும் உளர்.

இதனாற் சொல்லியது மேற்கூறிய உயர்திணை என்பது, விரிவகையான் ஆண்பால் பெண்பால் பன்மைப்பால் என மூன்று கூறுபடும் என்பதூஉம், அப்பொருள் முக்கூறுபடும் எனவே தந்திரவுத்திவகையான், மேற்கூறிய உயர்திணைச் சொல்என்பது விரிவரையறையான் ஆண்பாற் சொல், பெண்பாற் சொல், பன்மைப்பாற் சொல் என மூன்று கூறுபடும் என்பதூஉம் கூறியவாறாயிற்று.

ஒருவர்.

என்பது ஆண்மகனையும் பெண்டாட்டியையும் அவ்விரு வரது பன்மையாகிய பல்லோரையும் அறிவிக்கும் சொல்லொடு

1. உயர்திணையவே என்பது உயர்திணையவ்வே என வந்தது, வகரம் விரித்தல் விகாரம் என்னும் செய்யுள் விகாரம்.

2. கூறுவார் : சேனாவரையரும் நச்சினார்க்கினியரும்.

பொருந்திய அம்மூன்று [1]கூற்றுச் சொல்லும் உயர்திணையை அறிவிக்குஞ் சொல்லாம்.

[1]அவ்வே என ஆறாவதன் பன்மையாகக் கொள்க.

வெள்.

இஃது உயர்திணையுட் பால்வகையினை யுணர்த்துகின்றது

ஆண்மகனையறியுஞ் சொல்லும் பெண்மகளையறியுஞ் சொல்லும் பல்லோரையறியுஞ் சொல்லொடு பொருந்தி அம்மூன்று கூற்றுச் சொல்லும் உயர்திணையிடத்தனவாம், எ—று.

ஆடூஉ—ஆண்மகன். மகடூஉ—பெண்மகள். ஆடவர் என்றற் றொடக்கத்து ஆண்பன்மையும், பெண்டிர் என்றற் றொடக்கத்துப் பெண்பன்மையும், மக்கள் என்றற் றொடக்கத்து இருவர் பன்மையும் அடங்கப் பல்லோர் அறியுஞ் சொல் என்றார். அறிசொல்—அறிதற்குக் கருவியாகிய சொல். சிவணுதல்—பொருந்துதல். 'சிவணி' என்னும் செய்தென் எச்சம் 'உயர்திணைய' என்னும் வினைக் குறிப்புக் கொண்டு முடிந்தது.

உயர்திணைச் சொற்கள் முப்பால்களாகப் பகுத்துரைக்கப் படும் என்பதனை, ''ஆண்பெண் பலரென முப்பாற்றுயர்திணை'' (262) எனவரும் சூத்திரத்தாற் கூறினார் நன்னூலார்.

அஃறிணையிருபால்

3. ஒன்றறி சொல்லே பலவறி சொல்என்று
ஆயிரு பாற்சொல் அஃறிணை யவ்வே.

ஆ. மொ.

இல.

One denoting word and many-denoting word
These two belong to Non-class group.

---

1. *உயர்திணய என்பதன் அகரம் ஆறாவதன் பன்மை யுருபாகக் கொள்க என்பது பொருள். இது பொருந்துவ தில்லை என்பது முன்னர்க் குறிக்கப்பட்டுள்ளது.*

க. சு.

The word denoting "One" and the word denoting 'many' are the two kinds of words which belong to the non (-high) class.

பி. இ. நா.

நேமி. சொ. 3.

...ஒன்று பலவென்று
.........ஒழிந்தவை
பாங்கில் அஃறிணைப்பால் ஆம்.

நன். 263.

ஒன்றே பலவென் றிருபாற் றஃறிணை

இல. வி. 165

ஒன்றே பலவென் றிருபாற் றஃறிணை

தொன். 50. 4.

ஒன்றுபல அஃறிணை யென்ப.

முத்து. பெய. 11

ஒன்றே பலவென் றிருபாற் றஃறிணை.

இளம்.

இச்சூத்திரம் என்னுதலிற்றோ வெனின், மேல் அஃறிணை யென்றார்; அதனை யினைத்துப் பால்படும் என்று அது படும் பாலை விரித்துணர்த்துதல் நுதலிற்று.

உரை : ஒன்று பல என்னும் இருபாலையும் உணர்த்துஞ் சொல் அஃறிணையுடையன, என்றவாறு.

சேனா.

இ—ள் : ஒன்றனையறியுஞ் சொல்லும் பலவற்றையறியுஞ் சொல்லும் என அவ்விரண்டு கூற்றுச் சொல்லும் அஃறிணையனவாம், எ—று.

தெய்வ.

அஃறிணைச்சொற் பாகுபடுமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ—ள் : ஒன்றனையறியுஞ் சொல்லும், பலவற்றையறியுஞ் சொல்லும் என அவ்விரு கூற்றுச் சொல் அஃறிணையிடத்த, எ—று.

அஃறிணைப் பொருண்மை, உயிர்ப் பொருள், உயிரில் பொருள் எனவும். உயிர்ப் பொருட்கண் ஆண், பெண் எனவும், அவையெல்லாம் பொருள் தோறும் ஒருமையும் பன்மையுமாகியும் பலவகைப் படுமால் எனின், அவையெல்லாம் ஒருமையாயின் வந்தது எனவும், பன்மையாயின் வந்தன எனவும், வழங்கப்படு தலில் சொல் முடிபு நோக்கிக் கூறினார் என்க. அஃறிணைப் பொருள் பற்றி வரும் பெயர்ச் சொல்லும் வினைச் சொல்லும் இருபகுதியவாம் என்றே கொள்ளப்படும்.

நச்,

இஃது அஃறிணைப் பாலைப் பகுக்கின்றது.

இ—ள் : ஒன்று அறி சொல்லே பல அறிசொல் என்று— ஒருவன் ஒன்றனை அறியும் சொல்லும் பலவற்றை அறியும் சொல்லும் என்று சொல்லப்பட்ட, ஆ இருபால் சொல் அஃறிணைய—அவ்விரண்டு கூற்றுச் சொல்லும் அஃறிணையினை யுடையவாம், எ—று.

கல்.

என்னுதலிற்றோ வெனின், மேல் அஃறிணையென்றார், அதனை இனைத்துப் பால்படும் என்று அது படும் பால்விரித் தலை நுதலிற்று.

இ—ள் : ஒன்றினை அறியும் சொல்லும், பலவற்றை அறியும் சொல்லும் என்று சொல்லப்பட்ட அவ்விரண்டு பாலினையும் உணர்த்துஞ்சொல் அஃறிணையன, எ—று.

இதனாற் சொல்லியது மேற்கூறி நின்ற அஃறிணைப் பொருளினையும் அஃறிணைச் சொல்லினையும் விரிவரையான்

ஒருமை, பன்மையெனவும், ஒருமைச் சொல், பன்மைச் சொல் எனவும் *கூறியவாறாயிற்று.

ஒருவர்.

என்பது ஆண் பெண் ஆகிய ஒன்றனையும் அவ்விரண்டினது பன்மையாகிய பலவற்றையும் அறிவிக்கும் சொல்லோடு பொருந்திய அவ்விரண்டு கூற்றுச் சொல்லும் அஃறிணையை அறிவிக்கும் சொல்லாம்.

உயர்திணையவ்வே அஃறிணையவ்வே என்பது உயர்திணை யென அம்முப்பாற்சொல், அஃறிணை என ஆயிருபாற்சொல் [1]என. ஏ ஈற்றசை.

வெள்.

அஃறிணைச்சொற்கள் ஒன்று பல என்னும் இருபால்களாகப் பகுத்துரைக்கப்படுவன என்பதனை "ஒன்றே பலவென்றிருபாற் றஃறிணை" (263) என்பதனாற் குறித்தார் நன்னூலார். அஃறிணைக் கண்ணும் சேவல், களிறு முதலிய ஆண்பாலும் பெடை, பிடி முதலிய பெண்பாலும் உளவாயினும், அவ்வாண்மை பெண்மையாகிய வேறுபாடுகள் உயிருள்ளனவற்றுட் சில வற்றுக்கும் உயிரில்லனவற்றுக்கும் இன்மையான் அப்பகுப் பொழித்து எல்லாவற்றிற்கும் பொருந்த ஒன்றன் பாலாகக் கூறினார்.

பேடியும் தெய்வமும்

4. **பெண்மை சுட்டிய உயர்திணை மருங்கின்**
ஆண்மை திரிந்த பெயர்நிலைக் கிளவியும்
தெய்வஞ் சுட்டிய பெயர்நிலைக் கிளவியும்
இவ்வென அறியும் அந்தம் தமக்கிலவே
உயர்திணை மருங்கிற் பால்பிரிந் திசைக்கும்.

---

* இரண்டு கூறுபடும் என்பது கூறியவாறாயிற்று எனவும் பாடம்.

1. என = என்பதாம்.

ஆ. மொ.

இல.

The high class nouns which denote the female after having ceased to denote the nature of the male,
And the nouns which denote God
have no endings of their own;
but will have the gender of High class.

க. சு :

Words which are nouns belonging to the high class denoting the female and (yet) tending towards the male, and words which are nouns denoting the divine have no ending of their own; they will take the suffix of the gender(s) of the high class.

பி. இ. நூ.

நன். 264.

பெண்மைவிட் டாணவா வுவபே டாண்பால்
ஆண்மைவிட் டல்ல தவாவுவ பெண்பால்
இருமையும் அஃறிணை அன்னவு மாகும்

இல. வி. 165.

தெய்வமும் பேடுமாம் அவ்விரு பகுதியும்
இவ்வெண அறியும் அந்தந்தமக் கிலவே
உயர்திணை மருங்கிற் பால் பிரிந்திசைக்கும்

இளம்.

இச்சூத்திரம் என்னுதலிற்றோ வெனின், ஐய மறுத்தல் நுதலிற்று.

*உரை: பெண்மைசுட்டிய உயர்திணை மருங்கின் என்பதனை

---

* இவ்வுரையில், "பெண்மை சுட்டிய உயர்திணை மருங்கின் ஆண்மை திரிந்த பெயர் நிலைக்கிளவி" என்ப

மொழிமாற்றி, உயர்திணை மருங்கின் பெண்மை சுட்டிய எனக் கொள்க. தெய்வஞ் சுட்டிய பெயர் நிலைக் கிளவியும் என்பது—தெய்வத்தைச் சுட்டிய பெயர்ப் பொருளும் என்றவாறு; இனிப் பெயர்நிலைக் கிளவி என்பதற்கு ஒருவன் சொல்லுவது: பெயர் என்பதனை ஆகுபெயராற் பொருளாக்கிப் பொருண்மேல் நிலைபெற்ற கிளவி யென்னும்; இவ்வென அறியும் அந்தம் தமக்கிலவே என்பது—தம்மை வேறுபாலறிய நிற்கும் ஈற்றெழுத் தினையில என்றவாறு; உயர்திணை மருங்கிற் பால் பிரிந்து இசைக்கும் என்பது—உயர்திணை மருங்கின் முப்பாலி னையும் புலப்படுக்கும் எழுத்தினைத் தமக்கு ஈறாக இசைக்கும், எ—று.

[1](வரலாறு) பேடி வந்தான், பேடி வந்தாள், பேடியர் வந்தார் எனவும், [2]வாசுதேவன் வந்தான், திருவனான் வந்தான், முப்பத்து மூவரும் வந்தார் எனவும் வரும்.

[3]இவ்வென அறியும் அந்தந் தமக்கிலவே என்னும்

தற்கு உரை காணப்படவில்லை. அதற்கு "உயர்திணை யிடத்துப் பெண் தன்மையைக் குறித்த ஆண் தன்மை மாறிய பெயர்ச்சொல்" என்பது பொருள்.

1. பேடி வந்தான், பேடி வந்தாள் என்பன பொருந்தும். வாசுதேவன், திருவனான், முப்பத்து மூவர் என்பன ன், ர் என்னும் பாலுணர்த்தும் ஈறு (அந்தம்) உடையன ஆதலின் உதாரணம் ஆகா. இவ்வாறே இலேசாற் கொள்ளும் நரகன், நரகி, நரகர் என்பனவும் ன், இ, ர் என ஈறுடைமையின் பொருந்தா என்க.

2, இவ்வுதாரணங்கள் இளம்பூரணர் சமணர் அல்லர் என்பதைக் காட்டும்.

3. உயர்திணை மருங்கிற் பால் பிரிந்திசைக்கும் எனப் பின்னர் வருவதே சாலும் ஆதலின் 'இவ்வென அறியும் அந்தம் தமக்கிலவே' என்னும் தொடரையே இலேசு எனக் கருதினார் என்க. இன்னபால் என அறிதற்குரிய இறுதி எழுத்தில்லாதனவே வினை முற்றால் பால் பிரிந்து இசைக்கும். இதற்குச் சேனாவரையர் விளக்கம் நன்று.

இலேசினான் நரகன் வந்தான், நரகி வந்தாள். நரகர் வந்தார் என்பன கொள்க.

சேனா.

இ—ள் : உயர்திணையிடத்துப் பெண்தன்மை குறித்த ஆண்மை திரிந்த பெயர்ச் சொல்லும், தெய்வத்தைக் குறித்த பெயர்ச் சொல்லும், இவையெனத் தம் பொருளை வேறு அறிய நிற்கும் ஈற்றெழுத்தினைத் தமக்குடைய வல்ல; உயர்திணையிடத்து அதற்குரிய பாலாய் வேறு பட்டு இசைக்கும், எ—று.

பால் வேறுபட்டு இசைத்தலாவது, தாம் உயர்திணைப் பெயராய் ஆடூஉவறிசொல் முதலாயினவற்றுக்குரிய ஈற்றெழுத்தே தம் வினைக்கு ஈறாக இசைத்தல்.

உதாரணம் : பேடி வந்தாள், [1]பேடர் வந்தார், பேடியர் வந்தார் எனவும், தேவன் வந்தான், தேவி வந்தாள், தேவர் வந்தார் எனவும் வரும்.

[2]அலிப்பெயரின் நீக்குதற்குப் 'பெண்மை சுட்டிய' என்றும்,

---

1. பேடர் என்பதுபேடு என்பதன் பலர்பால் ஆதலின் இது இங்குப் பொருந்துவதன்று. தேவன் தேவி தேவர் என்பனவும் பாலுணர்த்தும் ன், இ, ர் என்பனவற்றை யுடைமையின் பொருந்தா. தேவு வந்தான் தேவு வந்தாள் என்பனவே பொருந்தும். தேவர் இரண்டற்கும் பொது.

2. பெண்மைமிக்கு ஆண்மை குறைந்தது—பேடி அல்லது பேடு. ஆண்மைமிக்குப்பெண்மை குறைந்ததும் பேடி அல்லது பேடு; இரண்டும் அமைந்தது அலி. இங்குக் குறித்ததுபேடி. பெண்மை சுட்டிய என்றால் பெண்பால் ஆகிவிடும்; அதனால் பெண்மை சுட்டிய என்பதனோடு ஆண்மைதிரிந்த என்பது தேவை. அன்றியும் ஆண்மை திரிந்த என்பது மட்டும் கூறிப் பெண்மை சுட்டிய என்பது கூறாது விட்டால் அலி ஆண்மை திரிந்த தாதலின் அதைக் கொள்ள நேர்ந்துவிடும்; அதனால் பெண்மைசுட்டிய என்பதும் தேவை. எனவே பெண்மை சுட்டிய...பெயர் நிலைக்கிளவி' என்றது பேடியை

மகடூஉப் பெயரின் நீக்குதற்கு 'ஆண்மை திரிந்த' என்றும் கூறினார். 'பெண்மை சுட்டிய' எனவே 'பெண்மை சுட்டாப்பேடு என்பதும் ஒழிக்கப்பட்டதாம். பெண்மை திரிதலும் உண்டேனும் 'ஆண்மை திரிதல்' பெரும்பான்மையாகலான் 'ஆண்மை திரிந்த' என்றார். பேடியர், பேடிமார், பேடிகள் என்பனவும் அடங்கு தற்குப் 'பேடியென்னும் பெயர் நிலைக்கிளவி' என்னாது 'பெண்மை சுட்டிய' ஆண்மை திரிந்த பெயர் நிலைக் கிளவி' என்றார். 'பெண்மை சுட்டிய' என்னும் பெயரெச்சம், 'பெயர் நிலைக் கிளவி' என்னும் பெயர் கொண்டது. 'ஆண்மை திரிந்த' என்பது இடைநிலை. 'தன்மை திரிபெயர்' (சொல். 56) என்றாற் போலச் சொல்லொடு பொருட்கு ஒற்றுமை கருதி 'ஆண்மை திரிந்த பெயர் நிலைக் கிளவி' என்றார்.

'உயர்திணை மருங்கிற் பால்பிரிந்திசைக்கும்' எனவே தமக் கென வேறு ஈறு இன்மை பெறப்படுதலின், 'இவ்வென அறியும் அந்தம் தமக்கில' எனல் வேண்டா எனின்:—'தமக்குரிய ஈற்றான் இசைப்பதன்றியும்' ஆடூஉவறிசொல் முதலியனவற்றிற்குரிய ஈற்றானும் இசைக்குங்கொல் என்னும் ஐயம் நீக்குதற்கு, 'அந்தம் தமக்கிலவே' எனல் வேண்டும் என்பது.

பாலுள் அடங்காத பேடியையும் திணையுள் அடங்காத தெய்வத்தையும் பாலுள்ளும் திணையுள்ளும் அடக்கியவாறு.

[3]'சுட்டிய' என்பது செய்யிய என்னும் வினையெச்சம் என்றும், ஆண்மை திரிதல் சொற்கின்மையின் 'பெயர் நிலைக் கிளவி' என்பது ஆகு பெயராய்ப் பொருள்மேல் நின்றதென்றும் உரையாசிரியர் கூறினாரால் எனின் :—ஆண்மை திரிதல் பெண்மைத் தன்மை எய்துதற் பொருட்டன்றிப் பேடிக்கு இயல்

ஆண்மை சுட்டிய பெண்மை திரிந்ததான பேடுவைக் கூறாதது ஆண்மை திரிதல் பெரும்பான்மையாதலினால் என்க. அதனால் பேடு என்பதும் பேடுவந்தான் என்பதும் கொள்ளலாம். இது பற்றிய விளக்கம் நூற்பா உரைகளின் இறுதியிற் காண்க.

3. இச்சொல் முடிபு பற்றிய விளக்கம் உரையிறுதியிற் காண்க.

பாகலின் பெண்மை சுட்டவேண்டி ஆண்மை திரிதல் என்றல் பெருந்தாமையானும், பொருளே கூறலுற்றாராயின் ஆசிரியர் 'பேடியும் தெய்வமும்' என்று தாம் கருதிய பொருள் இனிது விளங்கச் சுருங்கிய வாய்பாட்டால் சூத்திரிப்பாராகலானும், அவர்க்கது கருத்தன்மையான், உரையாசிரியர்க்கும்அது கருத்தன் றென்க.

தெய்.

எஞ்சியது உணர்த்துதல் நுதலிற்று.

இ—ள் : பெண்மை சுட்டிய உயர்திணை மருங்கின் என்பது பெண்மையைக் குறித்த உயர்திணைப் பெண் பிறப்பினுள், எ—று. ஆண்மை திரிந்த பெயர் நிலைக் கிளவியும் என்பது ஆண்மைத் தன்மையிற்றிரிந்த பெயர்க்கண் நிற்கும் சொல்லும், எ—று. தெய்வம் சுட்டிய பெயர்நிலைக் கிளவியும் என்பது தெய்வப் பொருண்மையைச் சுட்டிய பெயர்க்கண் நிற்கும் சொல்லும், எ—று. இவ்வென அறியும் அந்தம் தமக்கிலவே என்பது இவையென அறிய நிற்கும் ஈற்றெழுத்தினைத் தமக் கென இல, எ—று. உயர்திணை மருங்கிற் பால் பிரிந்திசைக்கும் என்பது உயர்திணை மருங்கிற் பாலாகிப் பிரிந்திசைக்கும், எ—று.

ஆண்மை திரிந்த பெயராவது பேடி, அச்சத்தின் ஆண்மை யிற்றிரிந்தாரைப் பேடி என்பவாகலான். ஈண்டு அப்பெயர் பெற்றது அலியென்று கொள்க. அலி மூவகைப்படும். ஆணுறுப் பிற் குறைவின்றி ஆண் தன்மை யிழந்ததூஉம், பெண்ணுறுப்பிற் குறைவின்றிப் பெண்தன்மையிழந்த தூஉம், பெண் பிறப்பிற் றோன்றிப் பெண்ணுறுப்பின்றித்தாடி தோற்றி ஆண்போலத் திரிவதூஉம் என. அவற்றுட் பிற்கூறியது ஈண்டுப் பேடி யெனப் பட்டது. அதன்கண் நிற்கும் சொல்லாவது வினைச் சொல்.

இப்பேடி என்னுஞ் சொல்லோடு தொடரும் வினைச் சொல்லும், தெய்வப் பொருண்மை குறித்த பெயரொடு தொடரும் வினைச் சொல்லும், உயர்திணை யாண்பாலறி சொல்லானும் ஒலிக்கும் என்றவாறாயிற்று.

உதாரணம் முன்னர்க் காட்டுதும்.

தேவரும் மக்களும் விலங்குமாகிய கதிப்பொருண்மை கூறி நரககதிப் பொருண்மை கூறாத தென்னையெனின் அக்கதி மேல் நிகழ்வதோர் வழக்கின்மையிற் கூறாராயினர். நரகன் வந்தான், நரகி வந்தாள், †நரகர் வந்தார் என வழங்குபவாலெனின், அக்கதியுட் டோன்றுவார் ஆணும் பெண்ணுமாகிப் போகம் நுகர்வர் என்னும் இலக்கணம் இன்மையான், மக்களிற் றூய்மை யில்லாதாரை யுலகத்தார் வழங்குமாறவை யென்க. [1]நரகர் துயர் உழப்பர் என அக்கதிமேற் றோற்றுவார் மேலும் வருமால் எனின், அவ்வாறு வருவன பால் கூறப்படுதலின்றி ஆணும் பெண்ணும் வரையறுக்கப் படாத பொருளை உயிர்த் தன்மை யைக் குறித்து உயர்திணைப் பன்மையான் வழங்கினார் என்க.

நச்.

இஃது ஐயம் அறுக்கின்றது, மேல் [1]தொகையுள் ஒழிந்த தெய்வத்தையும் [2]வகையுள் ஒழிந்த பேடியையும் இவ்வாறு ஆம் என்றலின்.

இ—ள் : உயர்திணை மருங்கின் பெண்மை சுட்டிய—ஒருவன் உயர்திணையிடத்துப் பெண்பாற்கு உரிய அமைதித் தன்மை யைக் கருதுதற்குக் காரணமான, ஆண்மை திரிந்த பெயர் நிலைக் கிளவியும்—ஆண்பாற்கு உரிய ஆளும் தன்மை திரிந்த பெயர்ப் பொருளும், தெய்வம் சுட்டிய பெயர்நிலைக் கிளவியும்—தெய்வத் தன்மையைக் குறித்த பெயர்ப் பொருளும், இவ்வெண் அறியும் அந்தம் தமக்கு இலவே—இவையெனத் தம் பெயர்ப் பொருளின் வேறு அறிய நிற்கும் ஈற்று எழுத்தினை உடைய சொற்களைத் தமக்கு உடைய அல்ல; உயர்திணை மருங்கின் பால் பிரிந்து இசைக்கும்—உயர்திணை இடத்திற்கு உரிய பாலாய் வேறுபட்டு இசைக்கும், எ—று.

---

†. சு. வே :
நாகர்

1. தொகை—திணை
2. வகை—பால்

அலி அன்று என்றற்குப் 'பெண்மை சுட்டிய' என்றார். பெண் அன்று என்றற்கு 'ஆண்மை திரிந்த' என்றார். இரண்டு இடத்துப் பெயர்நிலைக் கிளவியும் சொல்லினால் பொருள் அறியப்படுதலின் ஆகுபெயராய் அப்பொருள் உணர்த்தி நின்றன.

'சுட்டிய' என்பது, 'நிலம் பூத்த மரம்' (கலி. 27 : 9) என்பது போலும் பெயரெச்சம் அது, பெயர்நிலைக் கிளவி என்பதனோடு முடியும். ஆண்மை திரிந்த என்பது இடைநிலை. இதன் பொருள் ஆண்பாற்குரிய ஆளுந்தன்மை முற்பிறப்பின் தான் செய்த தீவினையால் தன்னிடத்து இல்லையான பெயர்ப் பொருள் என்க; என்றது, 'நல்வினை செய்யாத பொருள்' என்றவாறு. இதற்குப் பெண்மை திரிதல் உண்டேனும் ஆண்மை திரிதல் பெரும்பான்மை.

பால் பிரிந்து இசைத்தலாவது, தாம் உயர்திணைப் பொருளாய் அவற்றின் ஈற்றினால் இசைத்தலாம்.

பேடியைப் பாலுள்ளும், தெய்வத்தைத் திணையுள்ளும் அடக்கினார்.

உ—ம் : பேடி வந்தாள், பேடியர் வந்தார், தேவன் வந்தான், தேவி வந்தாள், தேவர் வந்தார் என வரும்.

பேடியர், பேடிமார், பேடிகள் என்பனவும் அடங்குதற்குப் 'பேடி' என்னாது 'ஆண்மை திரிந்த' என்றார். "‡பெண் அவாய் ஆணிழந்த பேடி அணியாளோ" (நாலடி. 251) என்பதனால் பெண் அவாய் நிற்றல் கொள்க.

'அந்தம் தமக்கில' என்றதனான், நிரயப்பாலர், அலி, மகண்மா முதலியவற்றையும் இம்மூவீற்றின் ஏற்பதனால் முடிக்க.

---

‡ பெண் தன்மையை அவாவி ஆண் தன்மையை யிழந்த பேடியானவள் கண் விரும்பத்தக்க அணிகலன்களையணிய மாட்டாளோ!

எ-டு: நரகன் வந்தான், நரகி வந்தாள், நரகர் வந்தார். அலிவந்தான், அலியர் வந்தார், *மகண்மா வந்தாள் எனவரும்.

கல்.

என்னுதலிற்றோ வெனின் ஐய மறுத்தல் நுதலிற்று; என்னை? மேல் தொகையுள் ஒழிந்த தேவரும் நரகரும் [1]ஐ வகையுள் ஒழிந்த பேடியும் எவ்வாறாங் கொல் என்று ஐயுற்றார்க்கு அவையும் இவ்வாறாம் என்கின்றமையின்.

இ—ள் : உயர்திணையிடத்துப் பெண்மைத் தன்மையை யெய்த வேண்டி, ஆண்மைத் தன்மையின் நீங்கிய பேடி என்னும் பொருளும், தெய்வத் தன்மையைக் கருதின தெய்வம் என்னும் பொருளும் இவையிரண்டும். இவையெனத் தம்மை வேறுபாலறி விக்கும் ஈற்றெழுத்தினையுடைய சொற்களை யுடையவல்ல, மேற்கூறிய மக்கள் என்னும் உயர்திணையிடத்து முப்பாலினை யும் உணர்த்துஞ் சொற்கள் அவ்விடத்தினின்று நீங்கி வந்து தம்மையுணர்த்தும், எ—று.

† உ—ம் : பேடி வந்தாள், பேடியர் வந்தார், வாசுதேவன் வந்தான், திருவினாள் வந்தாள், முப்பத்து மூவரும் வந்தார், சந்திராதித்தர் வந்தார் எனினும் அமையும்.

[2]அந்தந் தமக்கிலவே என்றதனான், மக்களும் தேவரும்

---

* மகண்மா வந்தான் என வருதல் இல்லை போலும்.

1. பாடபேதம் 'மன்பதையுள்' இது தவறு; ஐவகையுள் என்பதே நன்று. ஐவகை—ஐம்பால்.

† உ—ம் : என வரும் இடங்களில் அதற்குதாகரணம், உதாரணம் என்பனவாகவும் சுவடிகளில் உண்டு என்பது தமிழ்நாடு அரசு 1971. இல் வெளியிட்ட 'தொல்காப்பியம் — சொல்லதிகாரம்' கல்லாடனார் விருத்தி என்னும் நூலில் பதிப்பாசிரியர் டாக்டர் தெ. பொ. மீனாட்சி சுந்தரனார் குறிப்பின் மூலம் அறிய வருகிறது.

2. இளம். நச். கருத்தும் இதுவே. நரகரை உடன்படார் தெய்வச்சிலையார். அவருரை காண்க.

அல்லாத நிரயப்பாலர் மக்களையுணர்த்தும் முப்பாற் சொல்லானும் சொல்லப்படுவர் என்பது கொள்க.

உ-ம் : நரகன் வந்தான், நரகி வந்தாள், நரகர் வந்தார் என வரும்.

முன்னின்ற [3]சுட்டிய என்பது செய்யிய என்னும் வினையெச்சம். அதற்குவினை 'திரிந்த' என்னும் பெயரெச்சம். பின்னின்ற சுட்டிய என்பது செயத என்னும் பெயரெச்சம்.

உயர்திணை மருங்கின் பெண்மை சுட்டிய ஆண்மை திரிந்த பெயர்நிலைக் கிளவியும் என மொழிமாற்றாகக் கொள்க. உயர்திணை மருங்கின் என்னும் ஏழாவதற்குப் 'பெயர் நிலைக் கிளவி' என்பதனை முடிவாக்கி இடை நின்ற சொல்லைப் பெயர் நிலைக் கிளவிக்கு அடையாக்கிப் பொருளுரைத்துக் கொள்க.

இரண்டிடத்துப் பெயர் நிலைக் கிளவியும் சொல்லினாற் பொருளறியப் படுதலின் பேடியும் தெய்வமும் என்னும் பொருட்கு ஆகுபெயராய் நின்ற வெனவுணர்க. தெய்வம் என்றது தெய்வத் தன்மையை.

இதனாற் சொல்லியது, முன் சொல்லி நின்ற பொருள் வரையறையுள் அடங்காது நின்ற பொருளினையும் ஒருவாற்றான் அடங்கக் கூறியவாறாயிற்று.

எனவே, உயர்திணைப் பொருள், பொருள்முகத்தான் மக்களும் தேவரும் நரகரும் எனமூன்று பொருள் கூறுபடும். சொல்முகத்தான் மக்கள் என்றதன்மேற்பட்டு ஒன்றேயாம், உயர் திணைப் பாலாயிற் பொருள் முகத்தான் ஆண்பால், பெண் பால், ஆணலி, பெண் அலி, பேடிப்பால், ஆண்பாற் பன்மை, பெண்பாற் பன்மை, ஆணலிப்பன்மை, பெண் அலிப்பன்மை பேடிப்பன்மை, ஆண்பாலோடு பெண்பால் கூடிய பன்மை, பெண்பாலோடு ஆண்பால் கூடிய பன்மை, ஆண்பாற் சிலர், பெண்பாற் சிலர் என விகற்பித்து நோக்கப் பல வகைப் படும்.

---

3. இக் கருத்து உரையாசிரியர் (இளம். அல்லர்) நச்சினார்க்கினியர் உரைகளிலும் காணலாம். சேனாவரையர் இதைமறுக்குமாற்றை அவருரையிற் காண்க.

இப்பல வகையும் சொல்வகை மூன்றல்ல தின்மையின் முன்றே யாயின. இவ்வாற்றானே தேவர், நரகர் என்பனவற்றது பாகுபாடும் அறிந்து கொள்க.

இனி, அஃறிணை யுயிருடையதூஉம், உயிரில்லதூஉம் என இரண்டாய் அவற்றுள் உயிருடையது ஆணும் பெண்ணும், ஆண் சிலவும் பெண்சிலவும், ஆண் பன்மையும் பெண் பன்மையும், அவ் விரண்டுந் தொக்க சிலவும், அவ்விரண்டுந் தொக்க பலவும், உயிரல்லவற்றது ஒருமையும் சிலவும் பலவும் என இவ்வாற்றாற் பல பகுதிப்படுமேனும் சொல்வகை நோக்க இரண்டல்லது இன்மையின் இரண்டேயாயின என்பது. இனி மக்கள் முதலியவற் றின் வேறுபாடும் அறிந்து கொள்க.

ஒரு.

என்பது, பெண்மைத் தன்மை யெய்திய உயர்திணையிடத்து ஆண்மை நீங்கிய பெயர்ப் பொருளும், தெய்வம் சுட்டிய பெயர்ப் பொருளும், பாலறிய நிற்கும் ஈற்றெழுத்து இத்தன்மையன எனத் தமக்கு உடையவல்ல; உயர்திணை முப்பாலினையும் விளக்கும் எழுத்தினையே ஈறாக இசைக்கும்.

உ—ம்: பேடி வந்தான், பேடி வந்தாள். பேடியர் வந்தார், வாசுதேவன் வந்தான், திருவினாள் வந்தாள், முப்பத்து மூவரும் வந்தார் என வரும்.

'உயர்திணை மருங்கின்' என்பதனை [1]'ஆண்மை சுட்டிய' என்று மொழிமாற்றி யுரைக்க.

'அந்தம் தமக்கிலவே' என்றதனால், நரகன் வந்தான், நரகி வந்தாள், நரகர் வந்தார் எனத் தேவரும் மக்களும் அல்லாத நரகர்க்கும் அம்முடிவு கொள்க.

---

1. 'ஆண்மை திரிந்த' என்றிருக்க வேண்டும். உயர்திணை மருங்கின் ஆண்மை திரிந்த பெண்மை சுட்டிய பெயர் நிலைக் கிளவி என மாற்றியுரைக்க என்பது இதன் கருத்தாகும்.

வெள்.

பால் வேறுபட்டிசைத்தலாவது, தாம் உயர்திணைப் பெயராய் ஆடூஉ வறிசொல் முதலாயினவற்றுக்குரிய ஈற்றெழுத்தே தம் வினைக்கு ஈறாக இசைத்தல்.

ஆடவர் மகளிர் என்னும் இரு திறத்தாருள் தத்தமக்கு இயல்பாக அமைய வேண்டிய தன்மையில் மாறுபட்டுப் பெண் தன்மை மிக்கு ஆண்தன்மை குறைந்தாரைப் பேடி எனவும் ஆணுமின்றிப் பெண்ணுமின்றி இருதன்மையும் விரவிய நிலையில் உள்ளாரை அலி எனவும் வழங்குதல் தொன்று தொட்டு வரும் தமிழ் மரபு. அவற்றுள் 'உயர்திணை மருங்கிற் பெண்மை சுட்டிய ஆண்மை திரிந்த பெயர் நிலைக் கிளவி' என்றது பேடியை. பெண்மை சுட்டிய பெயரெச்சம் 'பெயர் நிலைக் கிளவி' என்னும் பெயர் கொண்டது. 'ஆண்மை திரிந்த' என்பது பெயர் நிலைக் கிளவிக்கு அடைமொழியாய் இடை நின்றது. ஆண்மையும் பெண்மையும் அல்லாத அலியினைத் 'தன்மை திரிபெயர்' (கிளவியாக்கம் 56) எனப் பின்னர் குறிப்பிடுவர். அலிப்பெயரின் நீக்குதற்குப் பெண்மை சுட்டிய என்றும், மகடூஉப் பெயரின் நீக்குதற்கு 'ஆண்மை திரிந்த' என்றும் கூறினார். பெண்மை சுட்டிய எனவே பெண்மை சுட்டாத நிலையிற் பேடு என்னுஞ் சொல்லை வழங்குதல் தொல்காப்பியர் காலத்து இலக்கண மரபன்று என்பது பெறப்படும். பெண்மை திரிதலும் உண்டேனும் ஆண்மை திரிதல் பெரும்பான்மையாகலான் ஆண்மை திரிந்த பெயர் நிலைக் கிளவியை இங்கு எடுத்தோதினார். *பெண்மை

* பெண்மை திரிந்ததற்குப் 'பெண் மகன்' என்பதை இவ் வாசிரியர் உதாரணம் காட்டுவர். அச்சொல் ஈற்றால் ஆண்பால் தோற்றம் உடையதேயன்றிப் பொருளால் திரிபு இல்லையாதலின் ஆண்மை திரிந்த பெயர் நிலைக் கிளவியோடு ஒத்துக்காட்டுவது பொருந்தவில்லை. ஆண்மை திரிந்த பெயர் நிலைக் கிளவி பேடி. இது பாலுணர்த்தும் ஈறு இல்லாதது. மகடூஉ திரிந்த பெயர் நிலைக் கிளவியாகக் கொள்ளும் 'பெண் மகன்' என்பது ஈற்றால் ஆண் பாலுணர்த்துவது. அதனால் அதை முடிக்கும் போது பெண் மகன் வந்தாள் எனப் பெண் பாலீறாக முடிக்க வேண்டும் என்பது கூறப்பட்டது

திரிந்ததனை 'மகடூஉ மருங்கிற் பால் திரி கிளவி' (பெயரியல் 40) எனப் பின்னர் எடுத்தோதுவர்.

....

உ—ம் : பேடிவந்தாள், பேடியர் வந்தார் எனவும், வாசுதேவன் வந்தான், திருவினாள் வந்தாள், முப்பத்து மூவரும் வந்தார் எனவும் வரும்.

அந்தம் என்றது ஈற்றெழுத்தாகிய விகுதியினை.

மக்கட் பிறப்பிலே தோன்றும் பெண் தன்மை மிகுந்தும் ஆண் தன்மை குறைந்தும் ஆண் பெண் என்னும் இரு தன்மைகளும் விரவியுள்ள பேட்டினைக் குறித்த பெயர்ச் சொல்லும், தெய்வத்தைக் குறித்த பெயர்ச் சொல்லும் இருதிணை ஐம்பால்களுள் இன்ன பால் எனத் தெரிதற்குக் கருவியாகிய விகுதியினை உடையன அல்ல வாதலின், அவை உயர்திணைப் பெயராய் நின்று ஆண்பாற் சொல் முதலியவற்றின் விகுதியினையே தம் வினைக்கு ஈறாகப் பெற்று இன்ன பால் என விளங்கி நிற்பன என்பதனை இச்சூத்திரத்தால் தொல்காப்பியர் தெளிவுபடுத்தியுள்ளமை காணலாம்.

இந்நூற்பாவிற் கூறப்பட்டவற்றுள் தெய்வம் சுட்டிய பெயரை 'மக்கள் தேவர் நரகர் உயர்திணை' என உயர் திணையுட் படுத்திக் கூறிய நன்னூலார், இச்சூத்திரத்திற் குறித்த பெண்மை சுட்டிய உயர்திணை மருங்கின் ஆண்மை திரிந்த பெயராகிய பேடியினையும், தன்மை திரி பெயர் எனவும் 'மகடூஉ மருங்கிற் பால் திரி கிளவி' எனவும் பின்னர்க் கூறப்படும் அலி, மகண்மா முதலியவற்றையும் குறிக்கும் முறையிற் 'பேடு' என்னும் பொதுச் சொல்லைப் பயன்படுத்தி அவற்றுக்கு இலக்கணங் கூறி அவற்றைப் பாலுள்ளும் திணையுள்ளும் அடக்குகின்றார். அவ்வாறு அடக்குவதாக அமைந்தது,

பெண்மைவிட் டாணவா வுவபே டாண்பால்
ஆண்மைவிட் டல்ல தவாவுவ பெண்பால்
இருமையும் அஃறிணை அன்னவு மாகும் (நன்-264)

எனவரும் நன்னூற் சூத்திரமாகும்.

ஆதி.

உயர்திணையைக் காட்டி ஆண்மைதிரிந்த — பெண்மை சுட்டிய பெயர்கள்: அலி, பேடி.

தெய்வம் சுட்டிய பெயர்கள்: முனி, தேவதை, பேய், பிசாசு, சாமி, அம்மன், அம்பாள்.

இவை உயர்திணைப் பெயர்களாயினும் அலி போகிறான் அலி போகிறது, முனி இருக்கிறது, தேவதை ஆடுகிறது. பேய் வருத்துகிறது, பிசாசு அடித்தது, தெய்வம் கொடுக்கிறது, சாமி அருள் புரிந்தார், சாமி அருள் புரிந்தது, அம்மன் அருள் புரிந்தாள் அம்மன் அருள் புரிந்தது என அஃறிணையாகவும் வழங்கப்படுதல் பற்றி—இவை இன்னபால் என அறியும் விகுதிமுறையில்லை யென்று கூறினார். இத் தெய்வப் பெயர்கள் ஆண் பெண் என உயர்திணையாயினும், வினை கொள்ளுமிடத்தில் அஃறிணை ஒன்றன்பால் ஆதலும் அறிக. நன்னூலாரும், இருமையும் அஃறிணை அன்னவு மாகும் (264) என்று கூறியது கவனிக்கத் தக்கது. ஆகவே இவை விகுதி வரம்பு அற்றவை என அறி கிறோம்.

இராம—சுந்தரம்

பாலறி கிளவிகளை அவர் (தொல்காப்பியர்) நிரல் படுத்திக் காட்டுவது உயர்திணைச் சொற்களை உருவ அடிப்படையில் வேறு பிரித்து உணர்வதற்குக் கருவியாக அமைகிறது. சில சொற்களில் இப்பாலறி கிளவிகள் காணப்படாத போது அவற்றின் தொடரியல் உறவைக் கொண்டு அவற்றுக்குப் பால் உணர்த்தப்படும். இம்மாதிரியான பாகுபாட்டிற்குப் பொதுவாக அடுக்கியல் உறவும் (Paradigmatic relation) தொடரியல் உறவும் syntagmatic relation) கணக்கில் கொள்ளப்படும். சுட்டுப் பெயர் களான அவன் அவள் அவர் அது அவை ஆகியவற்றைப் பொறுத்த மட்டில் அடுக்கியல் உறவே போதும். பேடி போன்ற சொற்களுக்குப் போதுமான அடுக்கு (Paradigm) இல்லாததால் அவற்றின் பாலுணர்தற்கு அடுக்கியல் உறவு பயன்படுவதில்லை. தெய்வம் சுட்டிய பெயர் நிலைக்கிளவிகளும் இவ்வகையினவே.

அவன் அவள் அவர் என்ற அடுக்குப் போல, கூளி, கூளன், கூளர்; வாசுதேவன், வாசுதேவள், வாசுதேவர் என்று தெய்வஞ் சுட்டிய பெயர்களுக்கு அடுக்கில்லை. இவ்வடுக்கு இல்லாக் காரணத்தால் இவற்றின் தொடரியல் உறவை மனங்கொண்டு, இவற்றின் திணை, பால் உணர்த்தப் பெறும் எனல்வேண்டும். 'இவ்வென அறியும் அந்தம் தமக்கில' எனினும் இவை 'உயர்திணைப் பாலாய் இசைக்கும்' என்று தொல்காப்பியர் கூறுவதற்குக் காரணம் இவற்றின் தொடரியல் உறவுதான். உயர்திணையினும் கூடப் 'பேடி' வகைச்சொற்கள் ஆண்பாலாய் இசையா என்று வரையறுத்தார். 'பேடி'யில் உள்ள இகர ஈறும் வாசுதேவனில் உள்ள னகர ஈறும் அவற்றின் பாலைக்காட்டவில்லை. மாறாக அவை எந்த வினை கொண்டு முடியுமோ அவ்வினைக்கான ஈறுதான் அவற்றின் பாலைக் காட்டும். *

சிவ.

(1) பேடு, பேடி

மக்களில் ஆணிலும் சேராமல் பெண்ணிலும் சேராமல் இருதன்மைகளும் கலந்த வடிவங்கள் ஒரோரிடங்களில் காணப் படும். அவற்றை உணர்த்தும் சொற்கள் பேடு, பேடி, அலி என்பன. அவற்றுள் பெண்தன்மை மிகுந்து ஆண் தன்மை குறைந்தும், ஆண் தன்மை மிகுந்து பெண்தன்மை குறைந்தும் காணப்படும் வடிவங்கள் பேடி அல்லது பேடு என்னும் சொல்லால் குறிக்கப்படும். மிகுதி குறைவு என்பதில்லா வடிவம் அலி என்னும் சொல்லால் குறிக்கப்படும். (பேடி, பேடு, அலி ஆகிய மூன்றையும் எல்லாவற்றுக்கும் பயன் படுத்துவதும் உண்டு) அலி என்பது அஃறிணையில் சேரும். பேடு, பேடி என்பன உயர்திணையில் சேரும். உயர்திணையில் எப்பாலில் சேரும் என்ற வினாவிற்கு விடையிறுக்க வேண்டியவரானார் ஆசிரியர்.

பேடி பேடு என்பன ஆண்பாலையோ பெண்பாலையோ குறிக்கும் இறுதி எழுத்தில்லாதன. ஆனால் இவற்றால்

---

* தொல்காப்பிய மொழியியல்—கிளவியாக்கம் பற்றித் தொல்காப்பியர் (பக். 145, 146) அண்ணாமலைப் பல்கலைக் கழகம், அண்ணாமலை நகர். (1972)

உணர்த்தப்படும் வடிவம் பெண்மை மிகுந்து ஆண்மை குறைந்த வடிவமாக இருக்குமானால் அவ்வடிவம் பெண்பாலிற் சேர்தற் குரியதாகும். ஆண்மை மிகுந்து பெண்மை குறைந்த வடிவமாக இருக்குமானால் அவ்வடிவம் ஆண்பாலிற் சேர்தற்குரியதாகும். ஆனால் அவற்றையுணர்த்தும் பேடி பேடு என்பனவற்றுக்குப் பால்காட்டும் இறுதியில்லாததால் நாம் வடிவத்துக் கேற்றவாறு அச்சொற்களை ஆண்பாற்சொல் என்றோ பெண்பாற்சொல் என்றோ பிரித்துச் சொல்லவேண்டும். அப்படிச் சொல்லும் போது அவ்வப்பாலுக்குரிய இறுதி யெழுத்துடைய வினைகளால் முடித்தல் வேண்டும். பேடு வந்தான் பேடு வந்தாள், பேடி வந்தான் பேடி வந்தாள் எனச் சொல்லலாம். இவற்றின் பன்மை யாகப் பேடர் வந்தார். பேடியர் வந்த ார் என்பன கொள்ளலாம்.

இவைபோலவே தெய்வப் பெயர்ச் சொற்களும் பாறறிவிக் கும் இறுதியெழுத்துடையன வல்ல அவற்றையும் இவைபோலச் சொல்லவேண்டும். கடவுள் தேவு என்பனவற்றைக் கடவுள் வந்தான் கடவுள் வந்தாள், தேவு வந்தான் தேவு வந்தாள் எனச் சொல்லவேண்டும். இக்கருத்துடையதே 'பெண்மை சுட்டிய' என்னும் இச்சூத்திரம்.

இச்சூத்திரத்தில் 'பெண்மை சுட்டிய ஆண்மை திரிந்த பெயர்' என்பதற்குப் 'பெண்மை மிகுந்தும் ஆண்மை குறைந்தும் உள்ள வடிவம (பொருள்) என்பது பொருள். இவ்வடிவம் பற்றிய பெயர்ச் சொல் உயர்திணையிடத்து ஆண் பெண் பால்களுள் ஒன்றிற் பிரிந்து இசைக்கும் என்றார் ஆசிரியர். அப்பால் எது வாகும் என்பதற்கு அவரே,

ஆண்மை திரிந்த பெயர்நிலைக் கிளவி
ஆண்மை யறிசொற் காகிட னின்றே. (சொல். 12)

என்றார். ஆதலின் இது பெண்பாலில் இசைக்கும். இது கொண்டு ஆண்மை சுட்டிய பெண்மை திரிந்த பெயர் நிலைக் கிளவி ஆண் பாலாய் இசைக்கும் என்க. இதற்கு உதாரணமாகச் சேனாவரை யர் பேடி வந்தாள் பேடர் வந்தார் பேடியர் வந்தார் எனக் காட்டினார்.

நச்சினார்க்கினியர் பேடி வந்தாள் பேடியர் வந்தார் எனக் காட்டினர். இவ்விருவரும் பேடி என்ற சொல்லைப் பெண்

பாலாகக் கொண்டு காட்டினர். பேடி என்பதில் இகரம் பெண் பாலுக்குரியதாகக் கொண்டனர் போலும்.

இளம்பூரணரோ பேடி வந்தான், பேடி வந்தாள், பேடியர் வந்தார் எனக் காட்டினர். அவர் கொள்கை, 'பேடி' என்பது பெண்மை சுட்டிய ஆண்மை திரிந்த வடிவத்துக்கும், ஆண்மை சுட்டிய பெண்மை திரிந்த வடிவத்துக்கும் உரிய பொதுப்பெயர்ச் சொல் என்பதாகும். இதுவே சிறந்ததாம் ஏன் எனின், ஆசிரியர் இவ்வென அறியும் அந்தம் தமக்கில என்றதால் 'பேடி' என்பதில் இறுதி இகரம் பால் உணர்த்துவது இல்லை என்ன வேண்டுமன்றோ? இளம்பூரணர் உரையாசிரியர் உரையையே முழுதும் தழுவியவராதலின் உவரயாசிரியர் கொள்கையும் இதுவே. அதனால் சேனாவரையர் முதலியோர் பேடி என்றதைப் பெண் பாற் சொல்லாகக் கொண்டு உதாரணம் காட்டியது பொருந்தாது.

அன்றியும் 'உயர்திணை மருங்கிற் பால் பிரிந்திசைக்கும்' என்பதற்குப் ''பால் வேறுபட்டிசைத்தலாவது தாம் உயர்திணைப் பெயராய் ஆடூஉவறிசொல் முதலியவற்றுக்குரிய ஈற்றெழுத்தே தம் வினைக்கு ஈறாக இசைத்தல்'' எனச் சேனாவரையர் எழுதியிறுத்தலின் 'பேடி வந்தாள்' என்பதில் வந்தாள என்ற ளகர ஈற்றுப் பெண்பால் வினைச் சொல்லைக் கொண்டே பேடி என்பது பெண்பாற் பெயர்ச் சொல் எனக் கொள்ள வேண்டுமே தவிரப் 'பேடி' என்பது இகர இறுதியாக இருத்தலின் பெண்பாற் பெயர்ச் சொல் எனக் கொள்ளலாகாது. அதனால் சேனாவரையரும் உரையாசிரியர் கருத்தினரே என்றும் கூறலாம்.

உரையாசிரியர் வழி நிற்கும் இளம்பூரணர் 'பேடி வந்தாள்' என்ற ஓர் உதாரணம் காட்டவேண்டியிருக்கப் 'பேடி வந்தான்' என ஆண்பாற்குரியதையும் காட்டியது பேடி என்பது இருபாற்கும் பொதுவானது என்பதை அறிவிக்கவும் 'பெண்மை சுட்டிய ஆண்மை திரிந்த' என்ற தொடரை 'ஆண்மை சுட்டிய பெண்மை திரிந்த' எனவும் மாற்றிக் கொள்ளலாம் ஆதலின் ஆசிரியர் இருவகைப் பாலையும் குறித்தார் என்பதை அறிவிக்கவும் ஆகும்.

இனிப் பேடி என்பதும் பேடு என்பதும் இருபாற்கும் உரிய வான பால் அறியப்படாத சொற்களே என்பதற்குச் சான்று காணலாம்.

ஆண்மை திரிந்த பெண்மைக் கோலத்துக்
காமன் ஆடிய பேடி யாடலும் (சிலப் 1.6:56,7)

என்றவிடத்தில் அடியார்க்கு நல்லார் "ஆண்மைத் தன்மையில் திரிதலாவது விகாரமும், வீரியமும், நுகரும் பெற்றியும், பத்தியும், பிறவும் இன்றாதல்; ஆண்மை திரிந்த என்பதனால் தாடியும், 'பெண்மைக் கோலத்து' என்பதனால் முலை முதலிய பெண் உறுப்புப் பலவும் உடையது ஆண்பேடு என்று பெயர் பெறும் எனக் கொள்க" என்றெழுதிச் சான்றாக,

"வாணன் பேரூர் மறுகிடை நடந்து
நீள்நில மளந்தோன் மகன்முன் ஆடிய
பேடிக் கோலத்துப் பேடு காண்குநரும்"
(மணி. 6:123—124)

என்ற மணிமேகலை யடிகளையும் காட்டினர். பேடிக் கோலத்துப் பேடு என்றதால் பேடி பேடு என்ற இரு சொற்களுமே ஆண் பெண் பால்களுக்கு வழங்கின என அறியலாம்.

இனித் தெய்வச்சிலையாரும் பேடி என்பது இருபாற்கும் உரிய பொதுச் சொல்லாகவே கொண்டார் என்பதை அவர் உரை யால் அறியலாம்.

இக்காலத்தும் ஆற்றலில்லாத — அஞ்சுகின்ற ஒருவனைப் பார்த்துப் 'பேடிப்பயல்' எனக்கூறுதலும் காண்க. எனவே, பேடி என்பது ஆணுக்கும் பெண்ணுக்கும் உரிய பொதுச் சொல் என்க. தேவன், தேவி; நரகன், நரகி என்பன பாலுணர்த்தும் ஈறுடையன. அவற்றை எந்த வகையிலும் — மிகையாலும் கூட உதாரணம் காட்டியது தவறுடையதே.

(2) சுட்டிய

சுட்டிய என்பது செய்யிய என்னும் வினை யெச்சம் என்றார் உரையாசிரியர். (இளம்பூரணர் கூறவில்லை) செய்யிய என்னும் வாய்பாடு காரணப் பொருளில் வருவது. அப்படிப்பார்க்கும் போது சுட்டிய என்பது 'திரிந்த' என்பதைக் கொண்டு முடியு

மானால் பெண்மை சுட்ட வேண்டி ஆண்மை திரிந்தது எனப் பொருள் கொள்ள வேண்டும். அப்படியானால் பெண்மை சுட்ட வேண்டி ஆண்மை திரிந்த பெயர்ச் சொல் எனப் பொருள்வரும். அதனால் திரிதல்தொழில் சொல்லுக்குரியதாகும். சொல் ஒன்றைச் சுட்டவேண்டும் என்றோ திரியவேண்டும் என்றோ கருதாது. அதனால் சுட்டிய (சுட்டவேண்டி) என்பதைச் செய்யிய என்னும் வினை யெச்சம் என்பது பொருந்தாது. இவ்வாறு கூறி மறுத்தார் சேனாவரையர். இது பொருந்துவதே; என்றாலும் உரையாசிரியர் கருத்து சேனாவரையர் கருதியதுபோல் இல்லா மல் வேறு பட்டதாகும்.

'ஆண்மை திரிந்த பெயர்நிலைக் கிளவி' என்பதற்குப் 'பெயர்ச்சொல்' எனப் பொருள் கொண்டார் சேனாவரையர். உரையாசிரியர் 'பெயர்' என்பது ஆகு பெயராய்ப் பொருள் மேல் நின்றது என்றார். ஆண்மை திரிதல் என்பது சொல்லுக்கில்லை; பொருளுக்கே யுண்டு. ஆதலின் பெயர் என்பதற்குப் 'பொருள்' எனக் கொண்டார் உரையாசிரியர். அதனால் 'பெண்மை சுட்டி...பெயர் நிலைக்கிளவி' என்பதை ஆண்மை திரிந்த பெயரில் (பொருளில்) பெண்மை சுட்டிய நிலைக்கிளவி எனக் கொண்டார் என்னலாம். பொருள் 'ஆண்மை திரிந்து விட்டதால் அஃது ஆண்மை திரிபெயர் எனப்பட்டது "ஆண்மை திரிந்த பெயர்நிலைக்கிளவி" (சொல். 12) எனப் பின்னும் ஆசிரியர் ஆள்வர். இதையே" தன்மை திரிபெயர்" (சொல் 56) எனவும் ஆள்வர். ஆண்மை திரிந்த பெயர் நிலைக் கிளவி ஆண்மையறி சொற்காகிடன் இன்று ஆதலின் அது பெண்மை சுட்ட வேண்டியதாயிற்று. எனவே ஆண்மை திரிந்த பொருளில் (வடிவத்தில்) பெண்மையைக் குறிக்க வேண்டி நிலை பெற்ற சொல் (பேடி, பேடு) உயர்திணை மருங்கில் பால் பிரிந்திசைக்கும் என்றார் உரையாசிரியர்.

இப்படிப் பொருள்கொள்வதால் உரையாசிரியர்'பெயர்' என்ப தற்குப் 'பொருள்' எனக் கொண்டதும், 'பெண்மை சுட்டிய' என்ற விடத்துச் 'சுட்டிய' என்பது வினை யெச்சம் என்றதும் பொருந்தும் என்னலாம்.

இப்படியே 'தெய்வம் சுட்டிய பெயர் நிலைக் கிளவி' என்ப தற்கும் 'தெய்வத்தைச் சுட்ட வேண்டி அத்தெய்வப் பொருளில் நிலைபெற்ற சொல்' என்று பொருள் கொள்ள வேண்டும்.

'பெயர் நிலைக் கிளவி' என்பதற்குப் 'பெயர்ச்சொல்' எனக் கொள்ளாமல், 'பொருளில் நிலை பெற்ற சொல்' எனக் கொள்வதற்குப் பின் வருவதும் துணை புரியும்.

ஆடூஉ வறிசொல் மகடூஉ வறிசொல்
பல்லோர் அறியும் சொல் (சொல். 2)

என ஆசிரியர் ஆடூஉச்சொல் மகடூஉச்சொல் பல்லோர் சொல் என்னாமல், ஆடூஉ அறிசொல் மகடூஉ அறிசொல் பல்லோர் அறிசொல் எனக்கூறினார். ஆடூஉப் பொருளை அறிவிக்கும் சொல் முதலியவாகப் பொருள் தரும் அவை. அதைப் போல 'பெண்மை சுட்டிய பெயர்நிலைக் கிளவி' என்பதற்கும் 'பெண்மையைச் சுட்டவேண்டிப் பொருளில் நிலை பெற்ற சொல்' என்றே பொருள் விரிக்கப்பட வேண்டும். இவ்வாறே 'தெய்வம் சுட்டிய பெயர் நிலைக்கிளவி' என்பதற்கும் 'தெய்வத்தைச் சுட்ட வேண்டி அப்பொருளில் நிலை பெற்ற சொல்' எனப் பொருள் கொள்ள வேண்டும். எனவே 'சுட்டிய' என்பன 'செய்யிய' என்னும் வாய்பாட்டு வினையெச்சப் பொருளையும், 'பெயர்' எனவரும் இரண்டும் 'பொருள்' என்னும் பொருளையும் தரும் என்னலாம்; தவறில்லை.

'பெயர் நிலைக்கிளவி' என்பதற்குப் பொருளில் நிலை பெற்ற சொல்' எனப் பொருள் கொள்ளும் போது 'நிலைக்கிளவி' வினைத் தொகையாதலின் மிகாது 'நிலைகிளவி' என்றே இருத்தல் வேண்டும்; செய்யுளின்பத்துக்காக 'நிலைக்கிளவி' என மிக்கது

உயர்திணை ஆண்பால் ஈறு.

5. னஃகான் ஒற்றே ஆடூஉ அறிசொல்.

ஆ. மொ:

இல.

The consonant 'n' signifies the male-denoting word.

க. சு:

The Un voiced Consonant ṉ signifies the human male-denoting word.

இளம்.

இச்சூத்திரம் என்னுதலிற்றோ வெனின், ஆடூஉ அறிதற்கு ஈற்றெழுத்து உணர்த்துதல் நுதலிற்று.

உரை: னஃகானாகிய ஒற்று ஆடூஉவினை அறிவார்க்குக் கருவியாம் சொல், எ—று.

வ—று: உண்டான் என்னும் இறந்த காலத்தானும், உண்ணாநின்றான் என்னும் நிகழ்காலத்தானும், உண்பான் என்னும் எதிர்காலத்தானும், கரியன் செய்யன் என்னும் வினைக் குறிப்பினானும், இங்ஙனம் னகர விறுதியாய படர்க்கை வினை முற்றுச் சொல்லால் உயர்திணை ஆண்பால் உணர்த்தப்படும்.

படர்க்கையிடம் என்பது முன்னர் வினையியலுட் பெறுதும். (சொல். 202, 203, 204) வினையென்பது, 'இருதிணை மருங்கின் ஐம்பாலறிய' (சொல். கிளவி-10) என்னுஞ் சூத்திரத்தால் பெறுதும். *உண்டான் என்ற விடத்து நான்கு எழுத்து உளவே யாயினும், னகரத்தை ஆடூஉவறியுஞ் சொல்என்றார், அதன்கட் டலைமை நோக்கி. ஏகாரம் பிரிநிலை.

சேனா.

இ—ள்: னஃகானாகிய ஒற்று ஆடூஉ அறிசொல்லாம் எ—று.

உ—ம் : உண்டனன் உண்டான்; உண்ணாநின்றனன் உண்ணாநின்றான், உண்பன் உண்பான், கரியன் கரியான் என வரும்.

‡ஆடூஉ அறிசொல்லாவது னகார வீற்றுச் சொல்லாயினும் பால் உணர்த்துதற் சிறப்பு நோக்கி 'னஃகான் ஒற்றே' என்றார்:

---

* உண்டான் என்பதில் னகரத்தைப் பிரித்து அதுவே ஆண்பாலையுணர்த்தும் என்றலின் ஏகாரம் பிரிநிலை. இதனை மறுப்பர் சேனாவரையர்; அசைநிலை என்பர் அவர்.

‡ "அறங்கள் பலவற்றினும் அழுக்காறின்மை சிறப்புடைத் தாதல் பற்றி, 'அறமாவது அழுக்காறின்மை'

'அறமாவது அழுக்காறின்மை' யென்றாற் போல, னஃகான் ஒற்று ஆடூஉவறிசொல் என்றாராயினும், ஆடூஉவறிசொல் லாவது னஃகான் ஒற்று என்பது கருத்தாகக் கொள்க. 'ளஃகான் ஒற்று (6) முதலானவற்றிற்கும் இவை ஒக்கும்.

ஏகாரம் அசை நிலை. உரையாசிரியர் பிரிநிலை என்றாரால் எனின்;—பிரிநிலையாயின் ஆடூஉ வறி சொற்கு இலக்கணங் கூறு

என்றனரேயன்றி, 'அழுக்காறின்மையொன்றே அறம்; ஏனைய அறமல்ல' என்றாரல்லர். அதுபோல னகரஒற்று ஏனைய பகுதி முதலியவற்றுடன் வந்தே ஆண்பாற் பொருளையுணர்த்துமேனும் பாலுணர்த்தும் சிறப்பு நோக்கி 'னஃகான் ஒற்றே ஆடூஉ வறிசொல்' என்றார். எனவே இங்ஙனம் கூறுவதுகொண்டு னகர ஒற்று ஒன்றே தனித்து நின்றது ஆண்பாற் பொருளை யுணர்த்தும் எனக் கொள்ளலாகாது என்பது கருத்து''— கு. சுந்தர மூர்த்தி. இது இளம்பூரணர் முதலியோர் கருத்து. இவ்விளக்கம் பொருந்தவில்லை அறங்கள் பல; அவற்றுள் ஒன்று அழுக்காறின்மை; அது சிறந்ததாதலின் 'அறமாவது அழுக்காறின்மை' என்று கூறுதலுண்டு. அதுபோல ஆண்பாலை யுணர்த்தும் ஈறுகள் பல: அவற்றுள் சிறந்தது னஃகான் ஒற்று; ஆதலின் 'னஃகான் ஒற்றே ஆடூஉவறிசொல்' என்றார். வில்லி, வாளி என்பனவற்றில் இகரம் ஆண்பாலை யுணர்த்துகின்றது. ஆடூஉ, விடலை முதலியவற்றின் இறுதி எழுத்துகளும் உண்டு இவற்றிலெல்லாம் னகரம் சிறந்தது எனக் கொள்ள வேண்டும். உண்டான் என்பதில் னகர ஒற்றொன்று தவிர மற்றைய எழுத்துகள் ஆண்பாலுக் குரியனவல்ல. ''ஆண்மைப் பொருண்மைக்கண் வரும் பெயர்ச் சொற்கும் வினைச் சொற்கும் ஈற்றெழுத்துப் பலவுளவாயினும் அவையெல்லாங் கூறாது னகரவொற் றொன்றனையும் கூறினமையானும்'' எனத் தெய்வச் சிலையார் கூறுவதையும் காண்க. இளம்பூரணர் முதலியோர் எழுதிய கருத்துக்கள் தனி. சேனா வரையர் காட்டும் உவமை தனி—சிவ.

தலன்றிப் †பிரித்து அதன் சிறப்புணர்த்துதலே கருத்தாம் ஆகலின் அவ்வுரை போலியுரையென்க.

தெய்.

நிறுத்த முறையானே ஆடூஉ வறி சொல்லாமாறு உணர்த்து தல் நுதலிற்று

இ—ள் : னகாரமாகிய ஒற்றை அந்தமாகவுடைய சொல் ஆண்பால் உணரவரும் சொல், எ—று.

ஏகாரம் ஈற்றசை. அந்தம் என்பது மேலைச் சூத்திரத்தி னின்றும் தந்துரைக்கப்பட்டது. அவ்வுரை வருகின்ற சூத்திரங் கட்கும் ஒக்கும்.

உ-ம் : உண்டான், உண்ணா நின்றான், உண்பான் இவை வினைச்சொல். கரியன் நெடியன் இவை வினைக் குறிப்பு. *பாண்டியன் மாயவன் இவை பெயர்.

அஃதேல் வினையியலுள்ளும், ''அன் ஆன் அள் ஆள் என்னும் நான்கும், ஒருவர் மருங்கிற் படர்க்கைச் சொல்லே'' (வினையியல். 8) என ஓதுகின்றாராகலின், ஈண்டுக் கூறியதற்குக் காரணம் என்னையெனின்

---

† பிரித்து = பதினெட்டு மெய்களில் னகரத்தை மட்டும் பிரித்து. அவ்வாறு பிரித்துக்கூறின் இச்சூத்திரம் இது கூறவே வந்ததாகி ஆடூஉ வறி சொற்கு இலக்கணம் கூற வந்ததன்றாகிவிடும்; அதனால் அது போலியுரை. இவ்வாறு இப்பகுதிக்கு விளக்கம் காணாமல் ஒரு வினைச்சொல்லின் (உண்டான்) ஈற்றிலுள்ள னகரத்தை மட்டும் பிரித்துக்காணின் அந்த் னகரத்தின் சிறப்பு மட்டும் அதாவது ஆண்பாலையுணர்த்தும் என்ற சிறப்பு மட்டும் இச்சூத்திரம் கூறுவதாக அமையும்; ஆடூஉ வறிசொற்கு இலக்கணம் கூறுவதாக அமையாது: ஆதலின் போலியுரை—இப்படி விளக்கம் காண்பதே நன்று. சிவ.

* பெயர் னகர வீற்றதாய் வரும் என்பதைக் கல்லாடனார் மறுப்பதை அவர் உரையிற் காண்க.

வினையிற் றோன்றும் பாலறி கிளவியும்
பெயரிற் றோன்றும் பாலறி கிளவியும்
மயங்கல் கூடா (கிளவி. 11)

என வழூஉக் காக்கின்றாராகலின், அவை வழு வாமற் கூறுங்கால், அச்சொற்களின் இயல்பு அறிய வேண்டுமன்றே? அதற்காக ஈண்டுத் தோற்றுவாய் செய்தார் என்க. ஆண்மைப் பொருண்மைக்கண் வரும் பெயர்ச் சொற்கும் வினைச் சொற்கும் ஈற்றெழுத்துப் பலவுளவாயினும் அவையெல்லாம் கூறாது, னகர வொற்று ஒன்றனையும் கூறினமையானும் தோற்றுவாய் செய்தவா றுணர்க. இவ்வுரை முன் வருகின்றவற்றிற்கும் ஒக்கும்.

நச்.

இஃது ஆடூஉவறி சொல் உணர்த்துகின்றது.

இ—ள்: னஃகான் ஒற்று—னஃகானாகிய ஒற்றினைஈறாகவுடைய சொல், ஆடூஉ அறி சொல் — ஒருவன் ஆண்மகனை அறியும் சொல்லாம், எ—று.

ஏகாரம் தேற்றேகாரம்.

உ—ம்: உண்டனன் உண்டான், உண்ணாநின்றனன் உண்ணாநின்றான், உண்பன் உண்பான், கரியன் கரியான் என வரும்.

உண்டனன், உண்டான் என்புழி கைரம் ஒழிந்த மூவெழுத்துகளும் ஏனைப் பாற்கும் வருதலின், னகரத்தின் சிறப்பு நோக்கி, 'னஃகான் ஒற்றே' என்றார். அன் ஆன் என்னும் இரண்டனையும் தொகுத்து னஃகான் என்றார். மேலனவற்றிற்கும் இஃது ஒக்கும்.

கல்.

இச்சூத்திரம் என்னுதலிற்றோ வெனின், நிறுத்த முறையானே மேற்கூறிய வுயர்திணைச் சொல்லுள் ஆடூஉ வறி சொல்லாமாறுணர்த்துதல் நுதலிற்று.

ஆடூஉ வறியும் சொல்லாவது னகாரமாகிய வொற்றினையீறாகிய சொல் என்றவாறு. உ—ம்: உண்டான் உண்ணாநின்றான் உண்பான் இவை தெரிநிலை வினை. கரியன் செய்யன்

இவை குறிப்பு வினை. *சூத்திரம், 'னஃகான் ஒற்றே ஆடூஉ வறி சொல்' எனப் பொதுப்பட நின்றமையின், புதன், குபேரன், உண்டேன், உண்மின் என்பனவும் ஆண்பால் உணர்த்துதற்குச் சென்றனவேனும் பொதுமை விலக்கி மேற் சொல்லுகின்ற விதிகளாற் படர்க்கையிடத்து முற்றுச் சொற்கு ஈறாயல்லது வாராதெனக் கொள்க. இதுமேற் கூறுவன வற்றிற்கும் ஒக்கும்.

உண்டான் என்புழி நான்கெழுத்து கூடி ஆண்பால் உணர்த்திற்றேயாயினும் பிற எழுத்துக்கள் பிறபால் உணர்த்தும் வழியும் வருதலான் னகர ஒற்றையே தலைமைபற்றி ஆடூஉ வறி சொல் என்றார் என்க.

ஒரு.

என்பது னகர ஒற்றே ஆண்மகனை அறிவிக்கும் சொல். உதா: உண்டான் உண்ணாநின்றான் உண்பான் என மூன்று காலவினையானும், கரியன் செய்யன் எனக் காலந் தோன்றாத வினைக் குறிப்பானும் அறிக.

உயர்திணைப் பெண்பால் ஈறு

6. ளஃகான் ஒற்றே மகடூஉ அறிசொல்

ஆ. மொ.

இல.

The consonant 'ḷ' signifies the female—denoting word.

க. சு.

The Un voiced consonant ḷ signifies the human female-denoting word.

இளம்.

இச்சூத்திரம் என்னுதலிற்றோ வெனின், மகடூஉ அறிதற்கு ஈற்றெழுத்து உணர்த்துதல் நுதலிற்று.

---

* இக் கருத்துத் தெய்வச்சிலையார்க்கு மறுப்பாக அமைகிறது.

உரை: ளஃகானாகிய வொற்று மகடூஉவினை யறிவார்க்குக் கருவியாஞ் சொல், எ—று.

வ—று: உண்டாள் உண்ணாநின்றாள் உண்பாள் எனவும், கரியள் செய்யள் எனவும் வரும் வினையாலும் வினைக் குறிப் பாலும் மகடூஉவை விளக்கியவா றறிக.

சேனா.

இ—ள்: ளஃகானாகிய ஒற்று மகடூஉ அறிசொல்லாம், எ—று.

உ—ம்: உண்டனள் உண்டாள், உண்ணாநின்றனள் உண்ணா நின்றாள், உண்பள் உண்பாள், கரியள் கரியாள் என வரும்.

தெய்.

மகடூஉ வறிசொல் உணர்த்துதல் நுதலிற்று.

இ—ள்: ளகார மாகிய ஒற்றை அந்தமாகவுடைய சொல் பெண்பால் உணர வரும் சொல், எ—று.

ஏகாரம் ஈற்றசை. உ—ம்: உண்டாள் உண்ணாநின்றாள் உண்பள் இவை வினை, கரியள் குறியள் இவை வினைக் குறிப்பு. அவள், திருவினாள் இவை பெயர்.

நச்.

இது மகடூஉ அறிசொல் உணர்த்துகின்றது.

இ—ள்: ளஃகான் ஒற்று—ளஃகானாகிய ஒற்றினை ஈறாக வுடைய சொல், மகடூஉ அறிசொல்—ஒருவன் மகடூஉ வினை அறியும் சொல்லாம், எ—று.

உ—ம்: உண்டனள் உண்டாள், உண்ணாநின்றனள் உண்ணா நின்றாள், உண்பள் உண்பாள், கரியள் கரியாள் என வரும்.

கல்.

எ—ன், மகடூஉ வறிசொல்லாவது உணர்த்துதல் நுதலிற்று.

இ—ள்: மகடூஉ வினை யறியுஞ் சொல்லாவது ளகாரமாகிய ஒற்றினை யீறாகவுடைய சொல், எ—று.

வ—று: உண்டாள் உண்ணாநின்றாள் உண்பாள் என்பன: இவை தெரிநிலை வினை. கரியள் செய்யள் என்று வரும் இவை குறிப்புவினை என்று வேறுபாடறிந்து கொள்க.

இனி, முதற்சூத்திரத் துரையில் விரித்தாங்கு 'னஃகான் ஒற்றே ஆடூஉ வறிசொல் எனச் சூத்திரம் பொதுட் பட நின்றமை யின்' என்று தொடங்கி உரைத்தவைகள் எல்லாம் ஈண்டும் விரித்துரைத்துக் கொள்க.

ஒரு.

உ—ம்: உண்டாள், உண்ணாநின்றாள், உண்பாள் என்னு மூன்றுகால வினையானும், கரியள் செய்யள் என்னும் வினைக் குறுப்பானும் உணர்க.

உயர்திணைப் பலர்பால் ஈறு.

7\. ரஃகான் ஒற்றும் பகர இறுதியும்
மாரைக் கிளவி [1]யுளப்பட மூன்றும்
நேரத் தோன்றும் பலரறி சொல்லே.

ஆமேர.

இல.

The consonant 'ṛ' the ending of 'Pa' and 'mār' these three Appear as the endings of epicene-denoting words.

கசு:

The Unvoiced consonant ṛ, the ending-pa, and mār, these three appear exclusvely as the endings of epicene-denoting words.

ஈ. வே: 1. யுட்பட

இளம்.

இச்சூத்திரம் என்னுதலிற்றோ வெனின், பல்லோரை அறியுஞ் சொற்கு ஈறாம் எழுத்து உணர்த்துதல் நுதலிற்று.

உரை : ரஃகானும் அதுவே இறுதியும் அதுவே; பகரமும் அதுவே இறுதியும் அதுவே; மாரைக் கிளவி யுளப்பட மூன்றும் என்பது, மார் என்னுஞ்சொல் அகப்பட மூன்றும் என்றவாறு. நேரத்தோன்றும் என்பது நிரம்பத் தோன்றும் என்றவாறு; பலர் அறி சொல்லே என்பது பலரையறிதற்குக் கருவியாஞ் சொல் என்றவாறு.

'நேரத் தோன்றும் பலரறி சொற்கு' என்பான், உருபு தொகுத்துச் 'சொல்லே' என்றான் என்பது. ஏகாரம் ஈற்றசை யேகாரம்.

வ—று: உண்டார், உண்ணாநின்றார், உண்பார் எனவும், கரியர் செய்யர் எனவும் ரகர இறுதியாகி நின்ற படர்க்கை வினை முற்றுச் சொல்லால் உயர்திணைப் பன்மைப்பால் உணர்த்தப் படும்.

இனி *உண்ப, தின்ப என எதிர்காலத்துப் பகர இறுதி முற்றுச் சொல்லால் உணர்திணைப் பன்மைப்பால் உணர்த்தப் படும்.

'ஆர்த்தார் கொண்மார் வந்தார்' 'பூக்குழா லென்னையர்க ணில்லாத தீது' என மார் இறுதியாக நின்ற எதிர்காலத்துப் படர்க்கை வினை முற்றுச் சொல்லால் உயர்திணைப் பன்மைப் பால் உணர்த்தப்படும்.

சேனா.

இ—ள் : ரஃகானாகிய ஒற்றும் பகரமாகிய இறுதியும் மார் என்னும் இடைச்சொல்லும் இம்மூன்றும் பலரறி சொல்லாம், எ—று.

---

* உண்ப: உண்+ப எனப்பிரிப்பின் பலர்பால். உண்+ப்+அ எனப் பிரிப்பின் பலவின்பால்.

உரையளவில் கல்லாடனார் இவரைத் தழுவியுள்ளார்.

ஏ என்பது ஈற்றசை.

உ—ம்:—உண்டனர் உண்டார், உண்ணாநின்றனர் உண்ணா நின்றார், உண்பர் உண்பார், கரியர் கரியார் எனவும், கூறுப வருப எனவும், கொண்மார் சென்மார் எனவும் வரும்.

[1]மார் எதிர்காலம் பற்றி வந்த ஆரேயாம்; 'ரஃகான் ஒற்று' என அடங்கும் எனின் :—அற்றன்று; ஆரேயாயின் கொண்மார் என்புழி மகரம் காலம் பற்றி வந்ததோர் எழுத்தாகல் வேண்டும்; உண்பார் வருவார் எனக்காலம் பற்றி வரும் எழுத்து முதனிலைக் கேற்ற வாற்றான் வேறுபட்டு வருமன்றே? அவ்வாறன்றி உண்மார் வருமார் என எல்லா முதனிலை மேலும் மகரத்தொடு கூடி வருதலானும், வினை கொண்டு முடிதற்கு ஏற்பதோர் பொருள் வேறுபாடுடைமையானும் ஆர் ஈறு அன்று வேறெனவே படும் என்பது.

மூன்று காலமும் வினைக் குறிப்பும் பற்றி வருதல் ஒப்புமை நோக்கி அர் ஆர் என்னும் இரண்டு ஈற்றையும் 'ரஃகான்' என அடக்கி ஓதினார். அன் ஆன் அள் ஆள் என்பனவற்றையும் இவ் வொப்புமை பற்றி னஃகான் ளஃகான் என அடக்கி ஓதினார்.

ரகாரம் மூன்று காலமும் வினைக் குறிப்பும் பற்றிப் பெரு வழக்கிற்றாகலின் பின் வைத்தார்.

---

1 கொண்மார், கொன்+ம்+ஆர் எனப்பிரிப்பின் ஆரீறாம், ம் எதிர்காலம் பற்றி வந்ததாகும் எதிர்கால இடை நிலைகள் பகுதிக்கேற்ப வேறுபடும். உண்பார் என்பதில் பகரமும் வருவார் என்பதில் வகரமும் வரக்காண்க. உண் வா என்னும் முதல்நிலைகள் இரண்டிலும் மார் என்பது (உண்மார், வருவார்) திரியாமல் வருதலின் மார் என்பதை ஆர் என்பதில் அடக்குதல் கூடாது.

உண்பார்வருவார் என்றால் உண்பார் என்பது முற்றுப்பொருளிழந்து எச்சப்பொருளாகிறது. கொண் மார்வந்தார் என்றால் கொண்மார் என்பது முற்றுப் பொருளாகவே இருக்கிறது. எனவே மார் என்பது ஆர் என்பதில் அடங்காது.

[2]உண்கும் உண்டும் வருதும் சேறும் என்னுந் தொடக்கத்தனவும் பலரறி சொல்லாயினும், அவை 'எண்ணியல் மருங்கில் திரிதலின்' (சொல். 209) நேரத் தோன்றா வாகலான், இவற்றை நேரத் தோன்றும் பலரறி சொல் என்றார்.

மூன்றும் பலரறி சொல் என்றாராயினும், பலரறி சொல்லாவது இம்மூன்றும் என்பது கருத்தாகக் கொள்க.

தெய்.

பலரறிசொல் ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

---

2. தன்மையை உயர்திணை என்பர் தொல்காப்பியர். அதனால் உயர்திணைப் பலர்பாலில் தன்மைப் பன்மையும் அடங்கும். இச்சூத்திரத்தில் பலர்பால் ஈறாக ரஃகான் ஒற்றைக் கூறியவர் தன்மைப் பன்மையிறுகளாகிய கும் டும் தும் றும் என்பனவற்றைக் கூறாதது ஏன்? இதற்கு விடை: டும் தும் றும் வன்பனவ தன்மைப் பன்மையாயினும் (அதனால் உயர்திணைப் பன்மையீறுகளாகச் சொல்லலாமாயினும்) அவை உளப்பாட்டுப் பன்மையீறு களாதலின் உயர்திணைப் பொருளைஉளப்படுத்துவதோடு எண்ணும்போது அஃறிணைப் பொருளையும் உளப்படுத்துதலின் உயர்திணைக்கேயுரிய இச் சூத்திரத்தில் அவ்வீறுகளைக் கூறவில்லை என்பது. யானும் என் எஃகமும் சாறும்' என்பதில் 'யான்' என்ற உயர்திணையும் 'எஃகம்' என்ற அஃறிணையும் எண்ணப்பட்டு 'சாறும்' என முடிந்தவாறு காண்க.

"அங்ஙனமாயின் கு, டு, து, று என்னும் தன்மையொருமை விகுதி நான்கையும் இங்குக் கூறாதது என்னை யெனின், ஆசிரியர், தன்மையை உயர்திணையாகக் கொண்டார் எனினும், அத்தன்மைச் சொற்கண் ஒருமை பன்மையாகப் பிரிக்கப்படுவதன்றி, ஆண்பால் பெண்பாலாகப் பிரிக்கப்படுவதில்லை. அதனால் அவ்விகுதிகளை ஆண்பால் விகுதி பெண்பால் விகுதி இரண்டோடும் சேர்த்தல் இயலாமையாலும் டு, து, று என்னும் விகுதிகள் அஃறிணை ஒருமைக்கு வரும் ஆகலானும் விடுத்தனர் எனக் கொள்ளலாம் — பூவராகம் பிள்ளை.

இ—ள் : ரகாரம் ஆகிய ஒற்றும், பகாரம்ஆகிய உயிர்மெய் இறுதியும், மார் என்னும் சொல் உளப்பட இம்மூன்றும் பொருந்தப் பலரறி சொல் தோன்றும்; எ—று. மூன்றும் பொருந்த என்றாராயினும் பால் காட்டுவது தனித்தனியென்று கொள்க.

'பகரம்' என்னாது 'இறுதி' என்றது, பகரம் ஒற்றாக வரின் மொழிக்கு ஈறாகாமையின் உயிரீறு என்பது தோற்றுதற்கு. [1]'கானந்தகைப்ப செலவு' (கலி. பாலை. 3, 22) எனப் பகரம் அஃறிணைக்கும் உரித்தாகலின் உயர்திணைக்கே யுரித்தாமாறு என்னை யெனின், [2]அஃறிணைக்கண் ஓதுகின்ற அகரம் எல்லாப் புள்ளியினும் ஏறி முடிதலின் ஆண்டு அகர ஈறாகி வந்தது. ஈண்டுப் பகர ஒற்றின்மேல் அல்லது வாராமையிற் பகரம் என வேறுபட்டு நின்றது. [3]மார் என்பது ரகரத்துள் அடங்காதோ எனின், வினைக்கண் ஏனைய போல முற்றி நில்லாது எச்சம்

---

1. சுவடி வேறுபாடு : 'கானந் தகைப்ப செலவு எனவும்' 'நயந்து தாம் கொடுப்ப போல' எனவும் அஃறிணைக் கண்ணும் வந்ததென எடுத்துக் காட்டினா உளரால் எனின், தாழிசை மூன்றனுள்ளும் 'தகைப்ப' என ஓதிய வண்ணம் அவ்வாறு சுரிதகத்துக் கண்ணும் வரின் அவ்வண்ணக்கேடு குறித்துக் குறைக்கும் வழிக் குறைத்த தென்க 'நயந்துதாங் கொடுப்ப போல்' என்பது 'விரும்பிக் கொடுப்பாரைப் போல்' என மாந்தரொடு உவமை குறித்து வந்தது.

2. தகைப்ப தகைவ என்பனவற்றில் இறுதி அகரம் ப், வ் என்பனவற்றில் ஏறி வந்தது. இது அஃறிணைப்பன்மை. உண்ப என்பதில் உள்ள அகரம் பகரத்தோடன்றி வேறெழுத்துடன் எவ்விடத்தும்வருவதில்லை; அதனால் இதை அகர இறுதி என்னாமல் பகர இறுதி என்றே கூறவேண்டுவதாயிற்று. இது உயர்திணைப் பன்மைக்கே யுரியது.

3. இதன் விளக்கம் சேனாவரையர் உரையிலும் உரைக் குறிப்பிலும் காண்க.

போல வருதலானும் [4]பெயர்க்கண் ஆர் ஈறாகி வருமிடத்துப் பன்மையுணர்த்தாத சொற்கள் மார் ஈறாகி வரவேண்டுதலானும் வேறு படுத்தோதப் பட்டதென்க.

உ—ம் : உண்டனர், உண்ணா நின்றனர், உண்பர், உண்ப, ஆகொண்மார் வந்தார் இவை வினை. கரியர் நெடியர் இவை வினைக் குறிப்பு. அவர், இவர், நம்பியர், நங்கையர், தாய்மார், தந்தைமார் இவை பெயர். [5]பகர இறுதி அஃறிணைப் பெயரா யல்லது வாராது.

நச்.

இது பலர் அறிசொல் உணர்த்துகின்றது.

இ—ள்: ரஃகான் ஒற்றும்—ரஃகானாகிய ஒற்றினை ஈறாக வுடைய சொல்லும், பகர இறுதியும்—பகரமாகிய இறுதியை யுடைய சொல்லும், மாரைக்கிளவி யுளப்பட மூன்றும்—மார் என்னும் இடைச் சொல்லை ஈறாகவுடைய சொல் உட்பட மூன்றும், நேரத் தோன்றும் பலர் அறி சொல்லே—நிரம்பத் தோன்றும் பலரை அறியும் சொல்லாம், எ—று.

அகரத்தொடு புணர்ந்த பகரம் அல்லது உயர்திணைப் பன்மையை உணர்த்தாது என்றற்கு ஈண்டுப் 'பகரம்' என்றும், மேல் அ ஆ வ (கிளவி–9)என்றும் பகர வகர உயிர்மெய் ஈறாய் நிற்றல் ‡உடம்பொடு புணர்த்துக் கூறினாராயிற்று.

---

4. தாயார், தந்தையார் என்றால் பன்மையின்றி ஒருமையே யுணர்த்தலின் ஆர் விகுதி நீக்கி மார் விகுதி சேர்த்தே பன்மை யாக்க வேண்டும் என்பது.

5. சு. வே : பகா வீறுற்றறியாது உயர்திணைப் பெயரா யல்லது வாராது—இது விளக்கமில்லை.

‡ உடம்பொடு புணர்த்தல் = சொன்ன ஒன்றுடன் சொல்ல வேண்டிய ஒன்றை வெளிப்படையாகச் சொல்லாமல் பொருத்திக் கொள்ளுமாறு அதைச் சேர்த்தல். ஆண் பெண் ஈறுகளாக மெய்யெழுத்துக்களைச் சொல்லி வந்த ஆசிரியர் இதில் பலர் ஈறாக ரகர ஒற்றைக் கூறிப் பகர இறுதி என்றது பகர ஒற்றையன்று; பகரம் ஊர்ந்த அகர இறுதி எனக் கொள்ளல் வேண்டும்.

உ—ம்: உண்டனர் உண்டார், உண்ணா நின்றனர் உண்ணா நின்றார், உண்பர் உண்பார், கரியர் கரியார், கூறுப வருப, ஆர்த்தார். கொண்மார் வந்தார் என வரும்.

மார் ஈறு ஆர் ஈறு என அடங்கும் எனின், மகர ஒற்றுக் காலங் காட்டும் எழுத்தாய் முதல் நிலைக்கு ஏற்ற வற்றான் உண்பார் வருவார் என்றாற்போல வேறுபட்டு வரல் வேண்டும்; அங்ஙனம் வேறுபடாமையானும், வினை கொண்டு முடிதலானும் மார் ஈறு ஆர் ஈற்றின் அடங்காதாயிற்று. [2]ஏனைப் பன்மை யீறுகள் திரிபுடைமையின் இவற்றை நேரத் தோன்றும் என்றார். [3]பகர இறுதி என்றது 'மொழிந்த பொருளோ டொன்ற அவ்வயின் மொழியாததனை முட்டின்று முடித்தல்' (மரபியல் 110) என்பதற்கு இனம்.

கல்.

என்—எனின், பலரையறியுஞ் சொல்லாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ—ள்: ரஃகானாகிய ஒற்றும், பகரமாகிய இறுதியும் மார் என்னும் சொல்லுட்பட இம்மூன்றும் நிரம்பத் தோன்றும் பலரையறியுஞ் சொற்கு, எ—று.

---

2. ஏனைப் பன்மையீறுகள் கும், டும், தும், றும் முதலியன இவை திரிபுடையன ஆமாறு சேனாவரையர் உரைக் குறிப்பில் இவ்விடத்துக் காண்க.

3. மொழிந்த...முடித்தல் — ஓர்உத்தி. சொல்லப்பட்டதோடு சொல்லப்படாததையும் நாம் சேர்த்து முடித்தல் என்பது பொருள். பகர இறுதி என்பதில் பகரம் (ப்) மொழிந்த பொருள்; மொழியாதது அதன் மீது ஊர்ந்த அகரம். அகரம் வெளிப்படையாக மொழியாத தாயினும் இறுதி என்பதால் (மொழியிறுதியில் பகர மெய் வராது ஆதலின்) அகரத்தை நினைவு படுத்தலின், அகரம் மொழியாததாகவும் மொழிந்ததாகவும் கொள்ளலாம். அதனால் மொழியாததனை முடிப்பதாகக் கொள்ள முடியவில்லை. வெளிப்படையாக அகரம் சொல்லப்படாமையின் மொழிந்ததாகவும் கொள்ள முடியவில்லை. அதனால் அவ்வுத்தியாகவே கொள்ளாமல் உத்திக்கு இனம் என்றார்.

பலரையறியுஞ் சொல்லாவன ரகரம், பகரம், மார் என்பன வற்றை யீறாகவுடைய சொற்கள், எ—று.

உ—ம் : உண்டார், உண்ணா நின்றார், உண்பார், கரியர், செய்யர், உண்ப, தின்ப, ஆர்த்தார் கொண்மார் வந்தார், 'பூக் குழாய் என்னையர்க்கண் இல்லாக தீது' என வரும்

ரகர ஒற்று மூன்று காலமும் வினைக் குறிப்பும் பற்றி வருத லான் முன்வைக்கப்பட்டது. பகரம் எதிர்காலமாகிய ஒரு காலம் பற்றி வருதலின் உயிர்மெய் எழுத்தேனும் அதன்பின் வைக்கப் பட்டது மார் என்பதூஉம் எதிர் காலம் பற்றி வரினும் ஒற்றாய் வருதலானும் பெருவழக்கின்றாதலானும் பகரத்தின் பின் வைக்கப்பட்டது.

நேரத்தோன்றும் என்றதனான் உண்டனம், உண்ணா நின்றனம், உண்குவம், கரியம், செய்யம் என மகரஈறும் காட்டு வாருண்மையின் "யானுமென் எஃகமுஞ்சாறும்" என்புழி அம் மகரம் அஃறிணையும் உட்படுத்துத் திரிவுபட நிற்றலின் அம்மஃ கான் திரிபுடைய; விவையே திரிபல்லன என்பன கொள்ளப் பட்டது. சொற்கு என்பது சொல்லெனச் செய்யுள் விகாரத்தால் தொக்கதெனவுணர்க.

*நான்காவது விரியாது 'நேரத்தோன்றும் பலரறி சொல்

---

* இச்சூத்திரத்துக்கு"மூன்றும் என்பது பயனிலை; பலரறி சொல் என்பது எழுவாய்; தோன்றும் என்பது பலரறி சொல் என்பதைக் கொண்டு முடியும் பெயரெச்சம்" எனத் தொடரிலக்கணம் கொண்டனர் சேனாவரையர் முதலியோர். கல்லாடனாரும்இளம்பூரணரும் "மூன்றும் என்பது எழுவாய்; நேரத்தோன்றும் என்பது பயனிலை; சொல் என்பது நான்காம் உருபு தொக்கது" எனக் கொண்டனர். முந்தையோர் கொள்கைப்படியாயின் நேரத்தோன்றும் பலர்பாற் சொல் என்ற அடைமொழி நேரத்தோன்றாத பலர்பாற் சொல்லும் உளபோலும் என்ற கருத்தை அருத்தாபத்தியால் உண்டு பண்ணும். நேரத்தோன்றாதன இல்லையாதலின் அக்கருத்து பொருந்தாது. அவ்வாறு அருத்தாபத்திப் பொருள் படாது எனின் 'நேரத்தோன்றும் பலரறி சொல்' என்

மாரைக் கிளவி யுளப்பட மூன்றும்' என எழுவாயும் பயனிலையு மாக்கிக் கொள்ளின், நேரத்தோன்றும் பலரறி சொல் இவையென, நேரத் தோன்றாதனவும் பலரறிசொல் உளவென்ற கருத்து அருத்தாபத்திப் பட்டு அவையும் தனக்குடன்பாடாய் மேற் கூறுவன போல நிற்பதோர் சொல் நோக்கப் படுதலானும், தோன்றும் என நின்ற செய்யும் என்ற சொல் முற்றோசைப்பட்டுப்பயனிலை வகையாதற்கியலாதுநிற்ற லானும் அவ்வாறு கூறலாகாது எனவுணர்க.

மேல் ஈற்றினின்றிசைக்கும் பதினோரெழுத் தென்று பொதுவாக ஈறு என்று கூறுகின்றாராகலின் ஈண்டுப் பகர விறுதி என்றும் கூறியது என்னை யெனின், ஆண்டுக் கூறுகின்றது மொழியது ஈறு என்பதன்றே? *ஈண்டகரம் உயர்திணைப் பன்மையை யுணர்த்துங்கால் தானே நின்றுணர்த்தாது பகர ஒற்றின் மேலேறி அதன் பின்னின் றுணர்த்தும் என்றற்குக் கூறியது எனவுணர்க. இக்கருத்து மேற் கூறுவனவற்றிற்கும் பொருந்தும்.

பகர விறுதி யென்பன இருபெய ரொட்டுப் பண்புத் தொகை. அகரம் பகர வொற்றோடு புணர்ந்து நிற்றலாற் பகரம் எனவும் பட்டது. அவ்வாறு நிற்புழி அதனிறுதி நிற்றலின் இறுதி எனவும் பட்டது.

பதில் 'பலரறி சொல்' என்பது எழுவாயாக அமையின் அதன் அடை மொழியாகிய நேரத்தோன்றும் என்ற தற்குப் பொருட்சிறப்பின்மையின் அது ஒரு தனித் தொடர் போலவும், தோன்றும் என்பது பயனிலைபோல வும் அமையும். தோன்றும் என்பது பயனிலை போல் அமையின்அதற்கு எழுவாய் இன்மையின் பயனிலை யாதற்கு இயலாது; எனவே இவ்வகையானும் அது பொருந்தாது.

* உயர்திணைப் பலர்பால் ஈறு அகரம் எனக் கொண்டு அது அஃறிணைப் பலவின் பால் ஈறாகவும் வருதலின் அதனின் வேறுபாடறிவித்தற்குப் பகர இறுதியென மெய்யுடன் சேர்ந்த அகரமாகக் கூறினார் ஆசிரியர் என்பது இவர் கருத்து.

ஒரு.

உ—ம்: உண்டார், உண்ணாநின்றார், உண்பார் என்னும் மூன்று கால வினையானும், கரியார் செய்யார் என்னும் வினைக் குறிப்பானும், உண்ப, தின்ப, கொண்மார் வந்தார் என எதிர் காலமுற்றுச் சொல்லானும் அறிக.

அஃறிணை ஒன்றன்பால் ஈறு

8. ஒன்றறி கிளவி தறட வூர்ந்த
குன்றிய லுகரத் திறுதி யாகும்.

ஆ. மொ.

இல.

The word which denote the singular (in non-class nouns) are those which end in shortened 'u' coming upon 'th'' 'ṟ' and ṭ

க. சு.

Words wich denote 'one' are those
Which end in ever-short—u
following t, ṟ and ṭ.

இளம்.

இச்சூத்திரம் என்னுதலிற்றோ வெனின், அஃறிணை யொருமைப்பாற்குரிய எழுத்து உணர்த்துதல் நுதலிற்று.

உரை : ஒன்றனை அறிவிக்குஞ்சொல் த ற டக்களை யூர்ந்த குற்றியலுகரத்து ஈறாகும், எ— று.

வ—று : உண்டது உண்ணாநின்றது உண்பது எனவும், கரியது செய்யது எனவும் வினையானும் வினைக் குறிப்பானும் தகரம் ஊர்ந்த குற்றுகரத்தான் அஃறிணை யொருமைப்பால் விளங்கும்.

[1]கூயிற்று, தாயிற்று எனவும், கோடின்று குளம்பின்று எனவும் வரும் றகரம்.

[2]குண்டுகட்டு, குறுந்தாட்டு எனவரும் டகரம்.

சேனா.

இ—ள் : ஒன்றறி சொல்லாவது தறட என்னும் ஒற்றை யூர்ந்த குற்றியலுகரத்தை இறுதியாக வுடைய சொல்லாம், எ—று.

உ-ம் : வந்தது, வாராநின்றது, வருவது, கரிது எனவும், கூயிற்று, தாயிற்று, கோடின்று, குளம்பின்று எனவும், குண்டு கட்டு, கொடுந்தாட்டு, குறுந்தாட்டு எனவும் வரும்.

கிடக்கை முறையாற் கூறாது தறட எனச் சிறப்பு முறையாற் கூறினார். [3]குன்றியலுகரம் என மெலிந்து நின்றது. தகர உகரம் மூன்று காலமும் வினைக் குறிப்பும்பற்றி வருதலும், றகர உகரம் இறந்த காலமும் வினைக்குறிப்பும் பற்றி வருதலும், டகர உகரம் வினைக்குறிப்பே பற்றி வருதலுமாகிய வேறு பாடுடைமையால் [4]குற்றியலுகரம் என ஒன்றாகாது மூன்றாயின.

---

1. கூவியது தாவியது எனப்பொருள் கொள்க. று இறந்த காலம்; இன்சாரியை.
   கோடு—கொம்பு. கொம்புடையது குளம்புடையது எனப் பொருள் கொண்டு குறிப்பு வினையாகக் கருதுக. இரண்டிலும் இன்சாரியை

2. குண்டு கட்டு (கண் + டு = கட்டு) ஆழமான கண்ணுடையது
   குறுந்தாட்டு (தாள் + டு = தாட்டு) குறிய காலுடையது. இவை குறிப்புவினை.
   தறட வரிசைக்காரணத்தைச் சேனாவரையர் உரையிற் காண்க.

3. இப்பகுதி கிடக்கை முறைச் சிறப்புக்கும், மூன்றாயின மைக்கும் உரியது. கிடக்கை முறை—எழுத்துகள் அமைந்த வரிசை. சிறப்பு—காலம் உணர்த்தும் வேறு பாடுகள்.

4. இப்பகுதிக்கு வெள்ளை வாரணனார் உரைவிளக்கம் காண்க.

தெய்.

அஃறிணை யொருமை யுணர வருஞ்சொல் உணர்த்துதல் நுதலிற்று.

இ—ள் : த, ற, டக்களை யூர்ந்த குற்றுகரத்தினை ஈறாக வுடையன ஒன்றனை அறியும் சொற்களாம், எ—று.

உ—ம் : உண்டது உண்ணா நின்றது உண்பது, கூயிற்று, உண்டு இவை வினை. கரிது, கோடின்று, குண்டுகட்டு இவை வினைக் குறிப்பு. அது, ஒன்று, இரண்டு இவை பெயர்.

நச்.

இஃது அஃறிணைக்கண் ஒன்றறி சொல் உணர்த்துகின்றது.

இ—ள் : ஒன்று அறிகிளவி—ஒருவன் ஒன்றனை அறியும் சொல், த ற ட ஊர்ந்த குன்றிய லுகரத்து இறுதி ஆகும்— த ற ட என்னும் ஒற்றுக்களை யூர்ந்து வந்த குற்றியலுகரத் தினை ஈறாகவுடைய சொல்லாம், எ—று.

உ—ம் : வந்தது, வாராநின்றது, வருவது, கரியது, கூயிற்று, தாயிற்று, கோடின்று, குளம்பின்று, [1]குண்டுகட்டு குறுந்தாட்டு எனவரும்.

கல்.

என்—எனின், உயர்திணைச் சொல்லாமாறுணர்த்தி, இனி அஃறிணைச் சொல்லாமாறு உணர்த்துதல் நுதலிற்று, என்பது.

ஒன்றினை யறியுஞ் சொல்லாவது, த ற டக்கள் என்கின்ற ஒற்றுக்களை யூர்ந்து வருகின்ற குற்றியலுகரமாகிய எழுத்தினை யீறாகவுடைய சொற்கள் எ—று.

உ—ம் : உண்டது, உண்ணாநின்றது, உண்பது, கரிது, செய்(ய)து எனவரும். இவை தகரம் ஊர்ந்து வந்த குற்றியலுகர ஈற்றவாம், கூயிற்று, தாயிற்று, கோடின்று, குளம்பின்றுஎனவரும் இவை றகரம் 'ஊர்ந்து வந்த குற்றியலுகர ஈற்றவாம். குண்டு கட்டு, கொடுந்தாட்டு என வருமிவை டகரம் ஊர்ந்து வந்த

சு. வே :

1. குன்றுகட்டு (இது தவறு)

குற்றியலுகர ஈற்றவாம். மற்று டதறஎன்று எழுத்துக் கிடக்கை முறையாற் கூறாததென்னை யெனின், தகரம் மூன்று காலமும் வினைக் குறிப்பும் கோடலான் முன் வைக்கப் பட்டது. றகரம் இறந்த காலம் ஒன்றும் வினைக்குறிப்பும் கோடலான் அதன்பின் வைக்கப்பட்டது. டகரம் வினைக் குறிப்பல்லது கோடலின்மை யின் இதன்பின் வைக்கப்பட்டது.

உகரத் திறுதி—உகரமாகிய இறுதியெனப் பண்புத் தொகை
* அத்து—அல்வழிச் சந்தி

உகர வீற்றுச் சொல்லிற்கு உகர விறுதி என்பது இருபெய ரொட்டுப் பண்புத்தொகை. [2]குற்றியலுகரம் என்பது மெலிந்து நின்றது.

ஒரு.

உ.ம்: உண்டது, உண்ணாநின்றது, உண்பது; கரிது ‡செய்து எனக் காலம் மூன்றானும், வினைக் குறிப்பானும்; கூயிற்று, தாயிற்று, கோடின்று, குளம்பின்று, உகிரின்று, மயிரின்று என இறந்த காலத்தானும் வினைக் குறிப்பானும், குண்டுகட்டு கொடுந்தாட்டு என்ற வினைக் குறிப்பானும், தறடக்களை ஊர்ந்து வந்த குற்றியலுகரத்தான் ஒன்றறி சொல் என்று அறிக.

வெள்ளை.

††துவ்விகுதி மூன்றுகாலமும் வினைக்குறிப்பும் பற்றி

---

* சாரியை வேற்றுமைத் தொடரில் வருவது. உகரவிறு என்பது அல்வழித்தொடர். சிறு பான்மை அல்வழித் தொடரிலும் வரும் ஆதலின் அத்து அல்வழிச் சந்தி (தொடர்) என்றார்.

2. இத்தொடர்க்குப்பதில் ‘டென்......நின்றது’ என்பது, ஆபிரகாம் அருளப்பன், வி, ஐ. சுப்பிரமணியம் பதிப்பித்த உரைக்கோவையில் காணப்படுகின்றது.

‡ செம்மை + து = செய்து = செம்மையானது இது செய்யது என்பதன் குறுக்கம். செய்யது என்பதில் அசாரியை.

†† இப்பகுதி சிறந்தது; சேனாவரையரின் ‘குற்றியலுகரம் என ஒன்றாகாது மூன்றாயின’ என்னும் தொடர்க்கு சிறந்த விளக்கமாகவும் அமைகிறது.

வருதலும், றுவ்விகுதி இறந்தகாலமும் வினைக் குறிப்பும் பற்றி வருதலும், டுவ்விகுதி வினைக் குறிப்பே பற்றி வருதலும் ஆகிய வேறுபாடுடைமையின், துவ்விகுதி யொன்றே தன் முன் நின்ற எழுத்து நோக்கி றுவ்விகுதியாகவும் டுவ்விகுதியாகவும் திரிந்த தெனக் கொள்ளாது து று டு என மூவேறு விகுதிகளாகக் கொண்டார் ஆசிரியர்.

அஃறிணைப் பலவின்பால் ஈறு

9. அ ஆ வஎன வருஉம் இறுதி
அப்பால் மூன்றே பலவறி சொல்லே

ஆ. மொ.

இல.

The plural-denoting words are three which end in 'a' 'ā' and 'va'

க. சு:

Words which denote 'many' are three genders, namly those which end in—a,—ā,—va.

இளம்.

இச்சூத்திரம் என்னுதலிற்றோவெனின், அஃறிணைப் பன்மைப்பாற்கு ஈறாமா றுணர்த்துதல் நுதலிற்று.

உரை: அ ஆ வ என்று சொல்லப்படுகின்ற இறுதிகளை யுடைய அக்கூற்று மூன்று சொல்லும் பலவற்றை யறியுஞ் சொல்லாம், எ—று.

வ—று: அகாரம்—உண்டன, உண்ணாநின்றன, உண்பன எனவும், கரிய செய்ய எனவும் வரும். ஆகாரம்—உண்ணா தின்னா என வரும். இது மூன்று காலத்தையும் எதிர்மறுக்கும் எதிர் மறைக்கண் அல்லது பால்விளங்கி நில்லா. வகாரம்—உண்குவ, தின்குவ என எதிர்காலம் பற்றிவரும்.

'வருஉம் இறுதி அப்பால் மூன்று' என்பது இறுதியையுடைய அக்கூற்று மூன்று என்றவாறு.

சேனா.

இ—ள் : பலவறி சொல்லாவன அ ஆ வ எனவரும் இறுதி யையுடைய அக்கூற்று மூன்று சொல்லாம், எ—று.

உ–ம் : உண்டன, உண்ணாநின்றன, உண்பன, கரியன எனவும், உண்ணா, தின்னா எனவும், உண்குவ, தின்குவ எனவும் வரும்.

உண்ட, உண்ணாநின்ற, உண்ப, கோட்ட என்னுந் தொடக்கத்தனவும் அகரவீற்றுப் பலவறி சொல்.

அவற்றுள் உண்ப என்பது பகரவீற்றுப் பலரறிசொல் அன்றே, அஃறிணைக்கு ஆயினவா றென்னை யெனின் :—பகர இறுதியாயின்றே உயர்திணைக்காவது? ஈண்டுக் காட்டப் பட்டது 'கானந் [1]தகைப்ப செலவு (கலி.3) சினையவும் சுனையவும் நாடினர் கொயல் வேண்டா நயந்துதாம் கொடுப்ப போல' (கலி. 28) என நின்றனபோல எதிர்காலத்து வரும் பகரம் ஊர்ந்து நின்ற அகர ஈறாதலின் அஃறிணைச் சொல்லேயாம் என்பது. [2]செய்யுளாகலின், தகைப்பன கொடுப்பன என்னுஞ் சொற்கள் தகைப்ப கொடுப்ப என விகார வகையான் அவ்வாறு நின்ற வாகலான், வழக்கு முடிவிற்கு அவை காட்டல் நிரம்பா தெனின் :—தகைத்தன, தகையா நின்றன, தகைத்த, தகையா நின்ற எனவும், கொடுத்தன, கொடாநின்றன, கொடுத்த, கொடா நின்ற எனவும் இறந்த காலத்தும் நிகழ் காலத்தும் அகர ஈறு முதனிலைக் கேற்றவாற்றான் அவ்வக் காலத்துக்குரிய எழுத்துப் பெற்று அன் பெற்றும் பெறாதும் முடியுமாறு போல, எதிர் காலத்தும் முதனிலைக்கு ஏற்றவாற்றான் அக்காலத்துக்குரிய எழுத்துப் பெற்று அன் பெற்றும் பெறாதும் முடியும். எதிர்

---

1. தகைப்பன = தகை + ப் + ப் + அன் + அ = தகைப்பன. அன் நீங்கின் தகைப்ப.
2. கானந்தகைப்ப, "நயந்து தாம் கொடுப்ப" எனச் செய்யுளில் வந்தவற்றை உதாரணம் காட்டினமையின் இவ்வினா எழுந்தது. உலக வழக்குக்கு அவ்வாறு தகைப்ப, கொடுப்ப என அன் பெறாது வராது என்பது வினாவினான் கருத்து. அதற்கு விடையாகச் செய்யுளி லும் வழக்கிலும் வரும் என்று காரணம் காட்டப் பட்டது.

காலத்துக்குரிய எழுத்தாவன பகரமும் வகரமுமாம். அவற்றுட் பகரம் பெற்று அன் பெற்றும் பெறாதும் முடிவுழித் தகைப்பன தகைப்ப, கொடுப்பன கொடுப்ப எனவும், வகரம் பெற்று அவ்வாறு முடிவுழி வருவன வருவ, செல்வன செல்வ எனவும் இவ்வாறு முடியுமாகலின், தகைப்ப கொடுப்ப என்பன விகாரம் எனப்படா, இயல் பெயாம் என்பது. [3]கொடுப்பன யாவை அவை போல, என உவமை கருதாது அவை தம்மையே சுட்டி நிற்றலின் கொடுப்ப என்பது பெயரன்மையறிக.

அன்பெறாது எதிர்காலத்து வரும் வகர ஒற்று ஊர்ந்து நின்ற அகரமாய் வகர ஈறு அடங்கும் எனின், வினை கொண்டு முடிதல் ஒழித்து [4]மார் ஈற்றிற்கு உரைத்தது உரைக்க. அவ்வாறு

---

3. கொடுப்ப போல என்பதற்குக் கொடுப்பனவற்றைப் போல என உவமைப் பொருள் கொண்டால் கொடுப்ப என்பது வினையாலணையும் பெயராம். இங்கு கொடுப்ப போல என்பது உவமை கருதாது கொடுப்பன என்றே பொருளிருந்தலின் வினை முற்று; பெயரில்லை. போல என்பது தற்குறிப் பேற்றப் பொருளில்வந்த இடைச் சொல். இதற்கு தெய்வச்சிலையார் கூறும் காரணம் சிறப்புடையது. பார்க்க.

4. மார்ஈற்றிற்கு உரைத்தது உரைத்தலாவது: உண்குவ என்பதை உண்+கு+வ்+அ எனப்பிரிக்க வகரமெய் இடைநிலை என்றாகும். இடைநிலை பகுதிக்கேற்ப மாறுபடும். இவ் வகர ஒற்று அப்படி வேறுபடுதல் இன்றி எல்லாப்பகுதிகளோடும் உண்குவ தின்குவ வருகுவ காண்குவ என வரும். அதனால் வகரம் விகுதி என்றே கொள்ளுதல் வேண்டும். உண்குவ முதலியவற்றில் உள்ள 'கு' சாரியை.

இங்குச் சேனாவரையர் கு சாரியை பெறுமிடத்து வகர விகுதியே வரும் என்று கூறுவதை நோக்கின் உண்குப தின்குப என்றாற் போன்ற சொற்கள் வாரா என்பது அவர் கருத்தாகத் தோன்றுகிறது. அல்லது தொல்காப்பியர் வகர விகுதி கூறினமையால், அதற்கேற்ப இவ்வாறு அமைத்துக் கொள்ளுதல் வேண்டும் என்று கருதி இவ்வாறு உரைத்தன ராதல்வேண்டும்—பூவராகம்பிள்ளை.

உரைக்கவே குகரம் பெற்ற வழி அன்பெறற்கு ஏலாமையின், உண்குவ, தின்குவ என்னுந் தொடக்கத்தன வகர ஈறேயாம். வருவ செல்வ எனக் குகரம் பெறாதவழி வகர ஈறாதலும் அகர ஈறாதலும் என இருநிலைமையும் உடையவாம. என்னை? எல்லா வினைக்கண்ணும் சேறன் மாலைத்தாகிய வகர ஈறு ஆண்டு விலக்கப் படாமையானும், அத்தன்மைத்தாகிய அகர ஈறும் ஆண்டு வந்து அன் பெறாத வழிக் காலவகரம் ஊர்ந்து அவ்வாறு நிற்றலுடைமையானும் என்பது.

'வரும்' என்னும் உகரம் விகாரவகையான் நீண்டு நின்றது. ஈற்று வகையான் மூன்றாகிய சொல் என்பார் 'அப்பால் மூன்று' என்றார்.

தெய்.

பலவறி சொல் ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ—ள்: பலவற்றை உணர வருஞ்சொல் அ, ஆ என்னும் உயிரெழுத்தினையும், வ என்னும் உயிர்மெய் எழுத்தினையும் ஈறாகவுடைய அக்கூற்று மூன்று, எ—று.

உ—ம்: உண்டன, உண்ணா நின்றன, உண்பன, உண்ணா, உண்குவ இவை வினை. கரிய, நெடிய இவை வினைக்குறிப்பு. பல, சில, யா, வருவ இவை பெயர்.

வ என்பது அகரத்துள் அடங்காதோஎனின், அடங்காது. என்னை? உண் என்னுந் தொழிற்சொல் இறந்த காலங்குறித்துழி உண்டு எனவும், நிகழ்காலங்குறித்துழி உண்கின்று எனவும், எதிர்காலங்குறித்துழி உண்பு எனவும் நின்று, அன், அள், அர், அது, அ என்னும் பாலுணர்த்தும் எழுத்தோடு கூடிப் புணருழி, அன்சாரியை மிக்கும், இயல்பாகியும் இறந்த காலத்துக்கண் உண்டனன், உண்டனள். உண்டனர், உண்டது, உண்டன, உண்ட எனவும், நிகழ்காலத்துக்கண் உண்கின்றனன், உண்கின்றனள், உண்கின்றனர், உண்கின்றது, உண்கின்றன உண்கின்ற எனவும், எதிர்காலத்துக்கண் உண்பன், உண்பள், உண்பர், உண்பது, உண்பன, உண்ப எனவும் வரும். 'உண்கு' என நின்ற எதிர்காலச் சொல் பன்மை யுணர்த்தும் அகரம் ஏறிய வழி 'உண்க' என வியங்கோட் பொருண்மைப்படும் ஆகலின் ஆங்கு 'உண்குவ' என வகர உயிர்மெய் கொடுக்க வேண்டுதலின் 'வகரம்' என ஓதல் வேண்டும் என்க.

நச்.

இஃது அஃறிணைக்கண் பல அறிசொல் உணர்த்துகின்றது.

இ—ள்; பல அறிசொல்—ஒருவன் பலவற்றை அறியும் சொல்லாவன, அ ஆ வ என வரூஉம் இறுதி அப்பால் மூன்று—அ ஆ வ என வரூஉம் இறுதியையுடைய அக்கூற்று மூன்று சொல்லாம், எ—று.

உ—ம்: அ—உண்டன, உண்ட, உண்ணாநின்றன, உண்ணா நின்ற, உண்பன, உண்ப, கரியன, கரிய, கோட்ட எனவரும்.

உண்ப என்பது பலர் அறிசொல் அன்றோ? எனின், தகைத்தன, தகையா நின்றன, தகைப்பன என 'அன்' பெற்றும், தகைத்த, தகையாநின்ற' தகைப்ப என அன்' பெறாதும் நின்றாற்போலவும், 'கானந்தகைப்ப செலவு' (கலி, ஓ: 22) என்றாற் போலவும் 'உண்ப' என்பதும் 'அன்' பெறாது நின்ற அகர ஈற்றுப் பல அறிசொல்; பகர ஈற்றுப் பலர் அறிசொல் அன்று.

ஆ—உண்ணா, தின்னா எனவும், வ—உண்குவ தின்குவ எனவும் வரும்.

இவை 'அன்' பெறாது எதிர்காலத்து வரும் வகர ஒற்று ஊர்ந்து நின்ற அகர ஈறு ஆகாவோ எனின், குகரம் பெறுதலின் வகர ஈறேயாம். வருவ, செல்வ எனக் குகரம் பெறாதவழி அகர ஈறு ஆதலும், பெற்றவழி வகர ஈறு ஆதலும் உடையவாம்.

கல்.

(அஃறிணைக்கண்) பலவறி சொல்லாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ—ள் : அ ஆ வ என்று சொல்லவருகிற இறுதிகளை யுடைய அக்கூற்று மூன்று சொல்லும், பலவற்றை யறியுஞ் சொல், எ—று.

உ—ம் : உண்டன, உண்ணாநின்றன, உண்பன, குறிய, கரிய, செய்ய என் இவைகள் அகர ஈற்றன. உண்ணா, தின்னா என இவை ஆகார ஈற்றன. உண்குவ தின்குவ என இவை வகர ஈற்றன.

அகரம் மூன்று காலமும் வினைக் குறிப்பும் கோடலின் முன் வைக்கப்பட்டது. ஆகாரம் எதிர்காலமாகிய ஒரு காலமே கோடலானும், எதிர்மறை வினைக்கணல்லது வாராமையானும் அதன் பின் வைக்கப்பட்டது.

வகரமும் அகரம் என அடங்குமே யெனினும் அவ் அகரம் போல் மூன்று காலத்தும் வினைக் குறிப்பின் கண்ணும் வாராது, உண்டல் தின்றல் இவை முதலாகிய தொழில் தொறும் உண்குவ தின்குவ என எதிர்காலம் பற்றி வேறோர் வாய்பாட்டான் வருதலான், அவ்வகரத்தோடு அடங்கா நிலைமைச் சிறப்புடைய அகரத்தை முன்கூறி, இதனை அதன்பின் வைத்தார் என்பது. இக்கடா ஈற்றிற்கும் ஒக்கும்.

'பலவறி சொல்' என்னும் எழுவாய்க்கு இறுதி' என்பது பயனிலையாக்கின் 'அப்பால் மூன்று' என்பது நின்று வற்றுமாகலின், மூன்று என்பதையே பயனிலையாக்கி இறுதி என்பதனை இறுதியையுடைய மூன்று எனப் பயனிலைக்கு அடையாக்கி உரைக்க.

ஒரு.

உ—ம்: உண்டன, உண்ணா நின்றன, உண்பன, கரிய, செய்ய எனக் காலங்களானும் வினைக் குறிப்பானும், உண்ணா, தின்னா என்னும் முற்றுச் சொல்லானும், உண்குவ தின்குவ என எதிர் காலத்தானும் ஆக அ ஆ வ என்னும் அம்மூன்று சொல்லானும் பன்மையானும் உணரப்படும் என அறிக.

மேல் கூறப்பட்ட பதினோரெழுத்தும் வினைக்கண் வருதல்

10. இருதிணை மருங்கின் ஐம்பால் அறிய
[1]ஈற்றுநின் றிசைக்கும் பதினோ ரெழுத்தும்
தோற்றந் தாமே வினையொடு வருமே.

ஆ. மொ:

இல.

These eleven letters which stand at the end of the words denoting five genders in two classes appear with the verbs;

க. சு:

All the eleven suffixes which stand occuring at the end (of words) denoting the five genders in the two classes appear invariably with verbs.

பி. இ. நா.

நேமி. சொல். 4.

அன்ஆனும் அள்ஆளும் அர்ஆரும் பவ்வீறுமாய்
முன்னை உயர்திணைப்பால் மூன்றற்கும்—தன்வினை
கொண்டு
ஆய்ந்த துறுடுவும் அஆ வவ்வீறுமாம்
ஏய்ந்த அஃறிணைப்பாற் கீங்கு.

இளம்.

இச்சூத்திரம் என்னுதலிற்றோவெனின், மேல் பாலுணர்த்தப்பட்ட எழுத்து இனைத்து என்பதூஉம் அவை வினைக்கணின்று உணர்த்தும் என்பதூஉம் உணர்த்துதல் நுதலிற்று.

உரை: இருதிணையிடத்து ஐந்து பாலையும் அறிய இறுதிக்கண் நின்று உணர்த்தும் பதினோரெழுத்தும் வினையொடு வந்து புலப்படும் எ—று.

'வினையொடு வருமே' என்றார், பெயர்க்கண் திரியவும் நிற்கும் திரியாமையும் நிற்கும் ஆகலான் என்பது. [1]உண்டான் என்றக்கால் திரிவில்லை கொற்றன் என்றது இருதிணையொருமைப்பாற்கும் ஏற்கும் என்பது.

[2]மற்றுப் பதினோரெழுத்தும் என்றது என்னை? னஃகான்

1. உண்டான் — உண்டவனாகிய ஒருவன் என்னும் பொருளில் வினையாலணையும் பெயர். இப்பெயரில் னகர ஈறு ஐயமற உயர்திணை ஆண்பால் உணர்த்துகிறது. கொற்றன் என்பது உயர்தினண ஆணுக்கும் அஃறிணை ஆணுக்கும் பொதுப்பெயர். இதில் னகர ஈறு ஐயமற திணைஉணர்த்தவில்லை ஆதலின் திரிய நின்றது.
2. ஆறெழுத்தாய் அடங்குமாறு: ன், ள், ர், உகரம் (குற்றுகரம்), அ, ஆ என்னும் ஈற்றவாய் அடங்குதல். ரகர

ஒற்றும், ளஃகானொற்றும், ரஃகானொற்றும். குற்றுகரமும், அஃ வும், ஆவும் என அவை ஆறெழுத்தான் அடங்கும் பிறவெனின் அடங்கும்; அடங்குமே யெனினும், ஈண்டுப் பதினொன்றென்று வேண்டினார். என்னை? [3]பளிங்கு செம்பஞ்சி யடுத்தாற் செம் பளிங்கு எனப்படும்; கரும்பஞ்சி யடுத்தாற் கரும்பளிங்கு எனப் படும்; அது போலச் சார்ந்து வந்தவற்றது வேற்றுமைபற்றி வேறுபெயர் கொள்ளப்பட்டது என்பது.

சேனா.

இ—ள்: உயர்திணை அஃறிணை யென்னும் இரண்டு திணைக்கண்ணும் உளவாகிய ஒருவன் ஒருத்தி பலர் ஒன்று பல என்னும் ஐந்து பாலும் அறிய அவ்வச் சொல்லின் இறுதிக் கண் நின்று ஒலிக்கும் பதினோர் எழுத்தும் புலப்படுதற்கண் வினைச் சொற்கு உறுப்பாய்ப் புலப்படும், எ—று.

[4]திணை இரண்டே பால் ஐந்தே என வரையறுத்தற்கு 'இருதிணை மருங்கின் ஐம்பால்' என்றார்.

ஈற்றில் மார் என்பதும், அகர ஈற்றில் ப, வ என்பனவும் அடங்கும்.

3. பளிங்கு தான் சார்ந்த பஞ்சியின் நிறம் பெற்று செம் பளிங்கு கரும்பளிங்கு எனப் பெயர் பெற்றது போல, ரகர ஒற்றே, அர் ஆர் என அகர ஆகாரங்களுடன் சார்ந்தபோது ஒரு நிலையும், மார் என மா என்னும் எழுத்துடன் சார்த்தபோது வேறுநிலையும் அடைதலின் ரகர ஈறாகவும் மார் ஈறாகவும் தனித்தனிக் கூறப் பட்டது.

அகரம் பலவின்பாற் படர்க்கைக்கு வரினும் அது வகர ஒற்றுடன் சேரும்போது ஒரு நிலையும், பகர ஒற்றுடன் சேரும்போது வேறுநிலையும் பெறுவதால் அது பகர ஈறு வகரஈறு எனத் தனித்தனிக் கூறப்பட்டது- தெய்வச் சிலையாரும் சேனாவரையரும் நூற்பா 7, 9. இல் இவைபற்றி விளக்கியதைக் காண்க.

4. முதல் நூற்பாவால் திணை யிரண்டென்பதும், 2,3, ஆம் நூற்பாக்களால் பால் ஐந்தென்பதும் அறியப்படவும் ஈண்டு இருதிணை ஐம்பால் என்றது வரையறுத்தற் கென்க.

[5]னகாரமும் ளகாரமும் ரகாரமும் மாரும் இறுதி நின்றுணர்த்தும் என்பதற்கு ஈற்றினின்றிசைக்கும் பதினோர் எழுத்தும் என்பது ஞாபகமாயிற்று; அல்லனவற்றிற்கு அனுவாதமாயிற்றென்க.

[6]தாமே என்பது கட்டுரைச் சுவைபட நின்றது. வினை எனப் பொதுப்படக் கூறினாராயினும், ஏற்புழிக் கோடல் என்பதனால் படர்க்கை வினை என்று கொள்ளப்படும்.

[7]இவை பெயரொடு வருவழித் திரிபின்றிப் பால் விளக்காமையின் 'வினையொடு வரும் என்றார்.

தெய்.

மேல் பால் உணர்த்தப் பட்ட எழுத்திற்கெல்லாம் உரியதோர் இலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று.

இ—ள் : இரண்டு திணைக்கண்ணும் ஐந்து பாலும் விளங்க இறுதிக்கண் நின்று ஒலிக்கும் பதினோர் எழுத்தும் தாம் தோற்றமாக வினையொடு வரும், எ—று.

---

5. ஞாபகம்—நினைவுபடுத்துவது. அநுவாதம்— மீண்டும் கூறுவது. ன், ள், ர், மார் என்பன ஈற்றில் வரும் என்பது அவ்வந் நூற்பாக்களில் கூறப்படவில்லை. அதனால் ஈற்றினின் றிசைக்கும் என்று இங்குக் கூறுவது அவை அவ்வாறு வரும் என்பதை நினைவுபடுத்துவதாயிற்று. பகர இறுதி என்றும், (7) துறுடுக் குன்றியலுகரத்திறுதி என்றும் (8) அ ஆ வ என வருஉம் இறுதி என்றும் (9) கூறலின் ப, து, று, டு, அ, ஆ, வ என்பனவற்றுக்கு ஈற்றினின்றிசைக்கும் என்றது அனுவாதமாயிற்று.

6. தன்மை உயர்திணைக்கேயுரியதாதலாலும், முன்னிலை இருதிணைக்கும் பொதுவானதாதலாலும் அவை யொழியப் படர்க்கை வினையே கொள்ளப்பட்டது.

7. சாத்தன் என்னும் பெயரில் னகர வீறு, வந்தான் என உயர்திணையையும், வந்தது என அஃறிணையையும் வினைமுடிபுக்கு ஏற்பத் திரிந்து விளக்குதலின் வினையொடு வரும் என்றார். வந்தான் எனின் உயர் திணையையும் வந்தது எனின் அஃறிணையையும் தெளிவாக விளக்குதல் காண்க.

‡தோற்றமாக என்பது பெரிதாக என்பது குறித்து நின்றது. எனவே பெயரொடு வருகை சிறு வரவிற்று என்று கொள்ளப் படும், ஆடூஉ மகடூஉ மக்கள் மரம் அவை எனப் பெயர்க்கட் பிறவாற்றானும் வரும் ஆதலின். உதாரணம் மேற் காட்டப் பட்டன.

நச்.

இது மேல் பாலுணர்த்திய எழுத்து இனைத் தென்றும், அவைவினைக்கண் நின்று உணர்த்தும் என்றும் உணர்த்து கின்றது.

இ—ள் : இருதிணை மருங்கின் ஐம்பால் அறிய—உயர்திணை அஃறிணை என்னும் இரண்டு திணைக்கண்ணும் உளவாகிய ஒருவன் ஒருத்தி பலர் ஒன்று பல என்னும் ஐந்து பாலினையும் அறிய, ஈற்று நின்று இசைக்கும் பதினோர் எழுத்தும்—அவ்வச் சொல்லின் இறுதிக்கண் நின்று ஒலிக்கும் பதினோர் இடைச் சொற்களும், தோற்றந்தாமே வினையொடு வருமே—பால் உணர்த்துதற்குப் புலப்படுதற்கண் வினைச் சொற்கு ஈறாய்ப் புலப்படும், எ—று.

[1]பதினோரிடைச் சொல்லையும் எழுத்து என்றார், எழுத்தினால் சொல் ஆதல் பற்றி. இது கருத்து ஆதல் 'மாரைக் கிளவி' (கிளவி. 7) என்றதனாற் பெற்றாம். ஈற்றின் நின்று

---

‡. தோற்றம்—பெரிது—மிகுதி. ஆடூஉ, மகடூஉ, அவை என்பன பெயரேயாயினும் ன், ள், அ என்ற பாலீறுகள் உடையனவல்ல. மேற்காட்டப்பட்ட உதாரணங்கள்: ன் = பாண்டியன், மாயவன். ள்—அவள், திருவினாள். ர்—நம்பியர் தங்கையர் முதலியன. து—அது. று—ஒன்று. டு—இரண்டு . அ—பல இல. ஆ—யா.

1. ன், ள் முதலியன பால் உணர்த்தும் இடைச் சொற்கள். அவற்றை இந்நூற்பாவில் எழுத்து என்றார். காரணம் சொல் தோற்றத்துக்கு எழுத்து காரணம் ஆதலின். ன், ள் முதலியவற்றைச் சொல் என்றே கொள்ள வேண்டும் என்பதற்கு ஆசிரியர் மார் என்பதை 'மாரைக்கிளவி' என்பது சான்றாகும்.

இசைக்கும் என்றது, னகரம் முதலிய [2]இரண்டற்கும் ஞாபகம்; அல்லனவற்றிற்கு அனுவாதம். அவை னகாரமும் ளகாரமும் ரகாரமும் பகாரமும் மாரும் துவ்வும் றுவ்வும் டுவ்வும் அவ்வும் ஆவும் வவ்வும். [3]இது விரித்தது தொகுத்தது. வினையியலுள் வினைக்கு ஈறுபற்றி ஓதிப் பெயரியலுள் பெயர்கள் தம்மை எடுத்து ஓதினமையானும், இப்பதினோர் ஈறும் பெயர்க்கண் திரிபுடையவாய் வருதலானும் பெயர்க்கு இவ்வீறுகள் கோடல் ஆகாமை உணர்க.

கல்.

என்—எனின், மேற் பாலுணர்த்தும் எனப்பட்ட எழுத்து இனைத் தென்பதூஉம், இவை வினைக்கண் நின்றுணர்த்தும் என்பதூஉம், வினைக்கண்ணும் ஈற்றுநின் றுணர்த்தும் என்ப தூஉம் உணர்த்துதல் நுதலிற்று.

இரண்டு திணையிடத்தும் உளவாகிய ஐந்து பாலினையும் அறியும்படி. மொழியதீற்றுக்கண்ணே நின்றுணர்த்தும் மேற் சொல்லப்பட்ட பதினொரு வகை யெழுத்தும் அவை தம் பாலு ணர்த்தற்குப் புலப்படுமிடத்து வினைச் சொல்லொடு வந்து புலப்படும், எ—று.

பதினொரு எழுத்து மாவன: னஃகான் ஒற்றும் ளஃகான் ஒற்றும், ரஃகான் ஒற்றும், பகரமும், மாரும், துவ்வும், றுவ்வும், டுவ்வும், அவ்வும், ஆவும், வவ்வும் என இவை. இசைக்கும் என்பது செய்யும் என்னும் முற்றுச்சொற் பெயரெச்சமாக உணர்த்தும் என்னும் பொருள்படும்.

மேற்கூறிய திணையினையும் பாலினையும் ஈண்டு வரை யறுத்து 'இருதிணை மருங்கின் ஐம்பால்' எனக் கூறிய காரணம் என்னையெனின், உயர்திணைப் பொருள் தேவரும் நரகரும் எனவும், உயர்திணைப் பாலுட் பேடியும் அலியும் என விரிந்து நின்றனவும் பொருட்கள் உண்மையின், இப்பொருட் பகுதி யெல்லாம், சொற்பகுதி பிற இன்மையின் ஐந்தாய் அடங்கினவே

2. நான்கற்கும் என்றிருத்தல் வேண்டும்.
3. னஃகான் ஒற்றே (4) என்பது முதல் அ ஆ வ என (9) என்பது வரை தனித்தனியாக (விரிவாக)க் கூறப்பட்டன வற்றை இந்நூற்பாவில்' பதினோரெழுத்து' என்று தொகை கொடுத்துக் கூறினார்; இது விரித்தது தொகுத்தல் என்பதாகும்.

எனினும், அப்பொருட் பாகுபாடு பற்றி நூலகத்து வேறு திணையும் பாலுமாக விளங்கவும் கூடுங் கொல்லோ என்று மாணாக்கன் ஐயுறுவானாயினும் என்று, இவையல்ல தில்லையென *விரித்துத் தொகுத்தல் என்னும் இலக்கணத்தான் வரையறுத்து இருதிணை ஐம்பால் என்றாராகக் கொள்க.

முதற் சூத்திரத்துட் கூறபபட்ட சொல் இலக்கணம் எட்டினுள்ளும் திணை பால் என்பனவற்றது இலக்கணமே இத்துணையும் கூறியதெனவுணர்க.

முன்னின்ற நான்கு சூத்திரமும் திணையும் பாலும் சொல்லும் பொருளும் வரையறை யிலக்கணமும் கூறின எனவும், பின்னின்ற ஆறும் அத்திணையும் பாலும் உணர்த்துஞ் சொற்களின் இலக்கணங் கூறின எனவும் உணர்க.

ஒரு.

என்பது, உயர்திணையிடத்தும் அஃறிணையிடத்தும் ஒருவன். ஒருத்தி, பலர், ஒன்று, பல என்னும் ஐந்து பாலும் அறிய இறுதியினின்றுணர்த்தும் பதினோரெழுததும் புலப்படுமிடத்து வினையொடு நடக்கும். அவையாவன: னகாரமும் ளகாரமும் ரகாரமும் பகாரமுமாகும். தவ்வும், றவ்வும், டவ்வும், அவ்வும், ஆவும், வவ்வும் என இவை முன்சொன்ன சூத்திரங்களின் வினையொடு நடக்குமாறு கண்டு கொள்க.

வெள்.

இருதிணைக் கண்ணும் ஐந்துபாலும் விளங்க இறுதியில் நின்றொலிக்கும் பதினோரெழுத்தும் வினைச் சொல்லிடத் தேதான் தெளிவாகப் பாலுணர்த்துவன என்றும், இவை பெயரொடு வருவழித் திரிபின்றி ஐம்பாலை விளக்கும் ஆற்றலுடையன அல்ல என்றும் ஆசிரியர் இச்சூத்திரத்தில் தெளிவுபடுத்தியுள்ளார். இதனால் இருதிணை ஐம்பால்களையும் ஒருவன்

---

* "உயர்திணை என்மனார்" (1) என்பது முதல்" அ ஆவ என" என்பது வரை (9) உள்ள சூத்திரங்களால் விரிவாகக் கூறி, இச்சூத்திரத்தில் இருதிணை ஐம்பால், பதினோரெழுத்து எனத் தொகுத்துக் கூறியது விரித்துத் தொகுத்தல் என்னும் இலச்சணம். இதனை விரித்துக் கூறல் என்றும் தொகுத்துச் சுட்டல் என்றும உத்திகளாகக் கூறுவர்.

சொல்லகத்து அறியுமாறு இவ்வாறென ஆசிரியர் விளக்கினமை காணலாம்.

இச்சூத்திரப் பொருளையுங் கொண்டு இருதிணை ஐம்பாலுணர்த்தும் விகுதிகளை வினையியலில் வைத்தோதிய பவணந்தி முனிவர், தன்மை முன்னிலை படர்க்கையென்னும் மூன்றிடத்தும் சொல் தன்னையும் இருதிணை ஐம்பாற் பொருள்களையும் உணர்த்தும் முறையினை,

படர்க்கை வினைமுற்று நாமம் குறிப்பின்
பெறப்படும் திணைபால் அனைத்தும் ஏனை
யிடத்தவற் றொருமைப் பன்மைப் பாலே (265)

எனவருஞ் சூத்திரத்தால் விளக்குவர்.

பாலறிகிளவிகள் மயங்கல்கூடா

11. வினையின் தோன்றும் பாலறி கிளவியும்
பெயரின் தோன்றும் பாலறி கிளவியும்
மயங்கல் கூடா தம்மர பினவே.

ஆ. மொ.

இல.

The gender-denoting words of predieates and the gener-denoting words of subjects must not disagree in a sentence, and they must agree with one another occording to their usage.

க. சு.

The gender-number denoting element in the verb (predicate) must not disagree with the gender -number denoting element in the noun (-subject); they should conform to usage.

பி. இ. நூ.

நேமி. சொ 5.

பாலே திணையே வினாவே பகர்மரபே
காலமே செப்பே கருதிடமே—போலும்
பிறழ்வும் சினைமுதல் ஒவ்வாப் பிறசொல்
உறழ்வும் சிதைந்த வுரை.

நன். 375.

> திணையே பால்இடம் பொழுது வினாஇறை
> மரபாம் ஏழும் மயங்கினாம் வழுவே.

இல. வி 295

> திணையே பாலிடம் பொழுது வினாஇறை
> மரபாம் ஏழும் வழாஅல் ஓம்பல்

தொன். வி. 127.

> வழுவாம் உரிமை மயங்கிக் கெடினவை
> இடம்பால் திணைபொழுது இறைவினா மரபுஏழே.

இளம்.

இச்சூத்திரம் என்னுதலிற்றோ வெனின், வழுக்காத்தல் நுதலிற்று. வழுக்காக்கு மிடத்து, 'வழுவற்க' என்று காத்தலும் 'வழீஇ யமைக' என்று காத்தலும் என இரண்டு. அவற்றுள் இது வழுவற்க என்று காத்தது.

உரை: வினையிற் றோன்றும் பாலறி கிளவியும் என்பது வினையிற் பாலறியப் படும் பொருளும் என்றவாறு; ஈண்டுப் பொருளைக் கிளவி என்றார் என உணர்க. பெயரிற் றோன்றும் பாலறி கிளவியும் என்பது பெயரினாற் பாலறியப்படும் பொருளும் என்றவாறு; மயங்கல் கூடா என்பது அவை விராதல் பொருந்தா என்றவாறு; தம்மரபினவே என்பது தத்தம் இலக்கணத்தனவே யாகும் என்றவாறு.

அவை தம்மரபினான் வருமாறு: உண்டான் அவன், உண்டாள் அவள், உண்டார் அவர், உண்டது அது, உண்டன அவை என இவை வினை நின்று பெயர்மேற் றத்தம் மரபினான் வந்தன. இனிப் பெயரை முன் நிறீஇ வினையைப் பின்னே கொணர்ந்து காட்டினும் அமையும்.

இனி 'மயங்கல் கூடா' எனவே மயக்கமும் உண்டு என்பது சொல்லப்பட்டதாம். அம் மயக்கம் எழுவகைப்படும்: திணை மயக்கம், பால்மயக்கம், இடமயக்கம், காலமயக்கம், மரபுமயக்கம், செப்புமயக்கம், வினாமயக்கம் என. மயக்கம் எனினும் வழு எனினும் ஒக்கும். அவை வருமாறு: அவன் வந்தன, அவன்

வந்தது, அவள் வந்தன, அவன் வந்தது, அவர் வந்தன அவர் வந்தது, இவைஉயர்திணை அஃறிணைமேற் சென்று வழீஇயின.

இனி அஃறிணை உயர்திணைமேற் சென்று வழீஇயின வருமாறு: அது வந்தான், அது வந்தாள், அது வந்தார் எனவும் அவை வந்தான், அவை வந்தாள், அவை வந்தார் எனவும் வரும். இவை பண்ணிரண்டுந் திணை வழு.

இனிப்பால் வழு வருமாறு: அவன் வந்தாள், அவன் வந்தார், அவள் வந்தான், அவள் வந்தார் என இவை உயர்திணைப் பால் வழூஉ. அது வந்தன, அவை வந்தது என இவை அஃறிணைப் பால் வழூஉ. இவையெல்லாம் பெயர் நின்று வினை மேல் வழீஇய. *இவ்வாறு வினை நின்று பெயர்மேல் வழீஇயன வினை முன் நிறீஇப் பெயர் பின்தந்து கூட்டி யுரைத்துக் கொள்க.

இச்சூத்திரம் பொருள் மேல் மயங்கற்க என்றான் ஆதலான் [1]அவற்றுக்கட் கிடந்த எல்லா மயக்கமும் வேண்டினமை கூறினாம் என்பது. அவை திணை பற்றியும் பால்பற்றியும் அன்றி வருமாறில்லை. செப்பு வழூஉ, வினாவழூஉ முன்னர்ச் சொல்லுதும். ஒழிந்தது ஈண்டுக்காட்டுதும்.

இடவழூஉ வருமாறு: உண்டேன் நீ, உண்டேன் அவன், உண்டாய் யான், உண்டாய் அவன், உண்டான் யான், உண்டான் நீ என இவை.

இனிச் காலவழூஉ வருமாறு: செத்தானைச் சாம் என்றலும், குளம் நீர் புகுந்து நிறையும் எனற்பாலதனை நிறைந்தது என்றலும் ஆம்.

இனி மரபு வழூஉ வருமாறு: மேய்த்தல் ஒப்புமையான் யானை மேய்ப்பானை இடையன் என்றும், ஆடு மேய்ப்பானைப் பாகன் என்றும் சொல்லுதல்.

சேனா.

ஒருதிணைச்சொல் ஏனைத் திணைச் சொல்லோடு முடியுந் திணை வழுவும், ஒருபாற்சொல் அத்திணைக்கண் ஏனைப்பாற்

---

* அவன் வந்தான் என்பதை வந்தாள் அவன் என மாற்றி யுரைத்துக் கொள்க. பிறவும் அங்ஙனே.

1. அவற்றுக்கண் — பொருள்களில்

சொல்லோடு முடியும் பால்வழுவும், பிறிதோர் காரணம் பற்றாது ஒரு பொருட்குரிய வழக்கு ஒரு பொருள்மேற் சென்றது எனப்படும் மரபு வழுவும், வினாயதற்கு இறையாகாச் செப்பு வழுவும், வினாவப் படாத பொருள் பறறி வரும் வினாவழுவும், ஓர் இடச்சொல் ஓர் இடச்சொல்லோடு முடியும் இடவழுவும், காலக் கிளவி தன்னோடியையாக் காலமொடு புணரும் காலவழுவும் என வழு எழுவகைப்படும். 'வழுவற்க' என்றலும் 'வழுவமைத்தலும்' என வழுக்காத்தல் இருவகைப் படும். குறித்த பொருளை அதற்குரிய சொல்லாற் சொல்லுக என்றல் வழுவற்க என்றலாம். குறித்த பொருட்குரிய சொல்லன் றாயினும் ஒருவாற்றான் அப்பொருள் விளக்குதலின் அமைக என்றல் வழுவமைத்தலாம்.

இச்சூத்திர முதலாக இவ்வோத்து வழுக்காக்கின்றது.

இ—ள்: கூறப்பட்ட பதினோரீற்றவாய் வினை பற்றி வரும் பால் அறி சொல்லும், அவன் இவன் உவன் என்பன முதலாகப் பெயர் பற்றி வரும் பாலறி சொல்லும் தம்முள் தொடருங்கால், ஒரு பாற்சொல் ஏனைப் பாற் சொல்லோடு மயங்கா; தம்பாற் சொல்லோடு தொடரும், எ—று.

எனவே, பிறபாற் சொல்லோடு தொடர்வன வழு என்பதாம்.

[1]ஈண்டுப் பெயர் என்றது பொருளை. திணையுணராக்கால் அதன் உட்பகுதியாகிய பால் உணர்தலாகாமையின், பால் அறி கிளவி எனவே திணையறிதலும் பெறப்படும்: படவே, மயங்கல் கூடா என்றது திணையும் பாலும் மயங்கற்க என்றவாறாம்.

இன்னும் 'மயங்கல் கூடா' என்றதனால், வினைப் பாலறி சொல்லும் பெயர்ப் பாலறி சொல்லும், பாலறி சொல்லுள்

---

1. பெயரில் தோன்றும்பால் அறி கிளவி என்பதற்குப் பெயர்ச் சொல்லில் தோன்றும் பாலறிவிக்கும் சொல் எனப்பொருள் கொள்ளக்கூடாது. சொல்லில் சொல் தோன்றுதல் என்பது தவறு. அதனால் அவன் இவன் முதலிய பொருளில் தோன்றும் பாலுணர்த்தும் சொல் எனக்கொள்ளல் வேண்டும். வினையில் தோன்றும் என் பதற்கு வினைச்சொல் என்றே கொள்க. ஒரு சாரன = வினையாலணையும் பெயர்கள்.

[2]ஒரு சாரனவும் இடமும் காலமும் உணர்த்துமாகலின், அவ்வாறு உணர்த்துவனவற்றாலும் மயங்கற்க என்றவாறாம். ஆகவே, இடமும் காலமும் மயங்காது வருதலும் கூறப்பட்டதாம்.

உ-ம்: அவன் வந்தான், அவள் வந்தாள், அவர் வந்தார், அது வந்தது, அவை வந்தன எனவும், நெருநல் வந்தான் எனவும் திணையும் பாலும் இடமும் காலமும் வழுவாது முடிந்தவாறு. அல்வாறன்றி அவன் வந்தது, அவன் வந்தாள், யான் வந்தான், நாளை வந்தான் என மயங்கி வருவன வெல்லாம் வழுவாம்.

'சிறப்புடைப் பொருளைத் தானினிது கிளத்தல்' என்பதனால் ஐம்பால் உணர்த்துதற் சிறப்புடைய படர்க்கை வினை பற்றி ஓதினாரேனும், 'தன்மைச் சொல்லே அஃறிணைக் கிளவி' (கிளவி. 43) என்றும், 'முன்னிலை சுட்டிய ஒருமைக் கிளவி (சொல். 462) என்றும் [2]பெயர் வழு அமைப்பராகலின் தன்மை முன்னிலைப் பாலறி கிளவியும் மயங்கற்க என்பது ஈண்டைக் கொள்ளப்படும்.

உ—ம்: யான் வந்தேன், யாம் வந்தேம் எனவும், நீ வந்தாய் நீயிர் வந்தீர் எனவும் வரும். யான் வந்தேம், நீயிர் வந்தாய் என்னுந் தொடக்கத்தன வழுவாம்.

'மயங்கல் கூடா' என்றது மயங்குதலைப் பொருந்தா என்றவாறு. [3]மயங்கல் கூடா, தம் மரபினவே என்பனவற்றுள் ஒன்றனது ஆற்றலான் ஏனையதன் பொருளும் உணரப்படுதலின் ஒன்றே அமையும் எனின், சொல் இல்வழியது உய்த்துணர்வ தென்க.

'தம் மரபினவே' என்பதனைப் பிரித்து வேறோர் தொடராக்கிச் சொற்கள் மரபு பிறழா தம் மரபினவே என மரபு வழுக்

2. பெயர் வழு—தன்மை முன்னிலைப் பெயர் வழுக்கள்.

3. மயங்கல் கூடா என்பதால் தம் மரபின என்பதும், தம் மரபின என்பதால் மயங்கல் கூடா என்பதும் உய்த்துணரப் படுமாதலின் ஒன்று கூற அமையும்; இரண்டும் கூறவேண்வதேன் என்பது வினா. உய்த்துணர்வது தேவையான சொல் இல்லாத வழியே; இங்கு உய்த்துணரப்படுவதும் வெளிப்படையாகச் சொல்லப்பட்டது. ஆதலின் வினா தேவையில்லை என்பது கருத்து.

காத்ததாக உரைக்க. ⁴இதுயோக விபாகம் என்னும் நூற் புணர்ப்பு முன இரு பொருள்பட உரைப்பன எல்லாம் இந்நூற் புணர்ப்பாகக் கொள்க.

உ.ம்: யானை மேய்ப்பானைப் பாகன் என்றலும், யாடு மேய்ப்பானை இடையன் என்றலும் மரபு. மேய்த்தல் ஒப்பு மையான் யானை மேய்ப்பானை இடையன் என்றலும், யாடு மேய்ப்பானைப் பாகன் என்றலும் மரபு வழு.

செப்பு வழாநிலையும் வினா வழாநிலையும் சிறப்பு வகையான் ஓதப்படும் இட வழாநிலையும், இவ்வாறு ஓதப்படும் மரபு வழாநிலையும் ஒழித்து ஒழிந்தன இச்சூத்திரத்தாற் காத்தார்.

தெய்.

வழுப்படாமல் கூறுமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ—ள். இல்வோத்தினுட் செப்பும் வினாவும் வழுவாமற் கூறுதல் பயனாகலின், அவை வழுவாமற் கூறுங்கால் வினையிற் றோன்றும் பாலறி சொல்லும். பெயரிற்றோன்றும் பாலறி

---

4. யோகம் — கூட்டல், விபாகம் — பிரித்தல். முன்னர்க் கூட்டிப் பொருளுரைத்துப் பின்னர்ப் பிரித்துப் பொருளுரைப்பது யோக விபாகம். இது இலக்கண நூலிற் புணர்க்கப்படுவது. 'மயங்கல் கூடா, தம் மரபினவே' என்னும் தொடர்களை முதலில் 'வினைப் பாலறி கிளவியும் பெயர்ப் பாலறி கிளவியும் மயங்கல் கூடாவாய்த் தம்மரபில்வழாத இலக்கணத்தனவாம்' எனப் பொருளுரைப்பது யோகப்புணர்ப்பாக உரைப்பதாம். பின்னர், வினைப்பாலறி கிளவியும் பெயர்ப்பாலறிகிளவியும் மயங்கல் கூடா என ஒரு தொடராக்கி அச்செய்தியை வேறாகவும், தம் மரபின என்பதைப் பொதுவாகச் சொற்கள்யாவும் தத்தம் மரபுக்கேற்பத் திரியாமல் (வழுவாமல்) வருவன என வேறு தனிச் செய்தியாகவும் கொள்வதுவிபாகப்புணர்ப்பாகக் கொள்வதாம். இவ்விரு நிலையில்கொள்ளுமாறு 'மயங்கல் கூடா தம் மரபின' என்றதொடர் அமைந்திருத்தலின் இது யோக விபாகம் என்னும் நூற்புணர்ப்பாம்.

சொல்லும் தம்முள்மயங்குதல் பொருந்தா, தத்தம் மரபினை யுடைய வாதலான்,எ—று. ஆதலால் என்பது எஞ்சி நின்றது.

பெயர் என்றதனால் தன் பொருண்மையாகிய திணை பெறுதும். பாலறி சொல் என்றதனால் பால் பெறுதும். வினை யென்றதனால் அதற்கு இன்றியமையாத காலமும் இடனும் பெறுதும். தம் மரபின என்றதனால் மரபு பெறுதும். மயங்கல் கூடா என்றதனால் வழூஉப்படுதல் குற்றம் என்பது பெறுதும்.

திரிபின்றிப் பால் உணர்த்துவது வினையாதலிற் சிறப்பு நோக்கி முற்கூறினார். அன்றியும் மேல் நின்ற சூத்திரம் வினையதிகாரப்பட்டு வருதலின் அதனோடு சேரவைத்தார் எனினும் அமையும்.

உ—ம் : அவன் நெருநல் உண்டான் என்பது. இதனுள் அவன் என்னும் உயர்திணைப் பெயர் உயர்திணை வினை கொண்டு முடிதலின், திணை வழுவாதாயிற்று. ஆடூஉப் பெயர் ஆடூஉ வினை கொண்டு முடிதலின் பால் வழுவாதாயிற்று. படர்க்கைப் பெயரோடு படர்க்கை வினை முடிதலின் இடம் வழுவாதாயிற்று. நெருநல் என்னும் இறந்த காலப் பெயரோடு இறந்தகாலவினை முடிதலின் காலம் வழுவாதாயிற்று. உண்டல் தொழிற்கு உரியானை உண்டான் என்றமையான் மரபு வழுவாதாயிற்று. பிறவும் அன்ன.

இனி வழுவாமாறு : உயர்திணை மூன்றுபாலும் அஃறிணை யிரண்டு பாலோடு மயங்குதல் திணைவழுவாம். அவை தம்முட் டாம் மயங்குதல் பால் வழுவாம். தன்மை முன்னிலை படர்க்கை என்னும் மூன்றிடமும் ஒன்றோ டொன்று மயங்குதல் இட வழுவாம். இறந்தகாலம் நிகழ்காலம் எதிர்காலம் என்னும் மூன்று காலமும் தம்முள் மயங்குதல் கால வழுவாம். எல்லாப் பொருளையும் பயின்ற மரபினாற் கூறாதது மரபு வழுவாம்.

உ-ம் : அவன் உண்டது திணைவழூஉ. அவன் உண்டனள் பால் வழூஉ. நீ உண்டனன் இடவழூஉ. நாளை உண்டேன் கால வழூஉ. அவன் மேய்ந்தான் மரபு வழூஉ. பிறவு மன்ன. [1]திணை வழூஉப் பன்னிரண்டு; பால் வழூஉ எட்டு; இடவழூஉ ஆறு; கால வழூஉ ஆறு; மரபு வழூஉ வரம்பில.

---

1. உயர்திணை $3 \times$ அஃறிணை $2 = 6$, அஃறிணை $2 \times$ உயர் திணை $3 = 6$ $6 + 6 = 12$. பால்வழு 8: உயர்திணை

நச் :

இது 'வழுவற்க' என்று காத்தலும், 'வழுவி அமைக' என்று காத்தலுமாகிய இரண்டனுள் வழுவற்க என்று காக்கின்றது.

இ—ள் : வினையின் தோன்றும் பால் அறி கிளவியும்—வினைச்சொல்லான் விளங்கும் பால் அறியப்படும் பொருளும், பெயரின் தோன்றும் பால் அறி கிளவியும்—பெயர்ச் சொல்லான் விளங்கும் பால் அறியப்படும் பொருளும், மயங்கல் கூடா—ஒன்றோடொன்றை மயங்கச் சொல்லுதல் பொருந்தா, தம் மரபின—தத்தம் இலக்கணத்தாலே சொல்லுதல் உடைய, எ—று.

சொல் என்றார், அதனான் உணரும் பொருளை. பால் மயங்காது எனவே, திணை மயங்காமை கூறிற்றாம்.

உ—ம் : உண்டான் அவன், உண்டாள் அவள், உண்டார் அவர், உண்டது அது, உண்டன அவை. இவை வினை நின்று பெயர்மேல் தத்தம் மரபினான் வந்தன.

அவன் உண்டான், அவள் உண்டாள், அவர் உண்டார், அது உண்டது, அவை உண்டன இவை பெயர் நின்று வினை மேல் தத்தம் பிரபினான் வந்தன.

வினைச் சொல்லான் விளங்கும்' எனவே அதனிலுள்ள காலமும் இடமும் மயங்காமையும் பெற்றாம். அவை : உண்டேன் நெருநல், உண்ணாநின்றேன் இன்று, உண்கு நாளை, யான் வந்தேன், நீவந்தாய், யாம் வந்தோம், நீயிர் வந்தீர் எனவரும்.

இனி, உய்த்துக் கொண்டுணர்தல் (மரபியல் 111) என்பதனால் தம்மரபின என்பதனைப் பிரித்து வேறோர் தொடராக்கி மரபு மயங்காமையும் கொள்க. அவை, யானை மேய்ப்பானைப் பாகன் என்றலும் யாடு மேய்ப்பானை இடையன் என்றலுமாம்

இச்சூத்திரத்தால், திணையும் பாலும் இடமும் காலமும் மரபும் வழுவாமல் காத்தார்.

உயர்திணை முப்பாலும் தம்முள் மயங்க 6. அஃறிணையிருபாலும் தம்முள் மயங்க 2.6+2=8.

இடவழுஉ 6 : மூவிடங்களும் தனித்தனிப் பிற இரண்டுடன் மயங்க 6.

காலவழு 6 : முக்காலமும் தனித்தனிப் பிற காலங்களுடன் மயங்க 6.

*இனி 'மயங்கல்கூடா' என்பதனானே மயங்குதலும் உண்டு என்பது பெற்றாம். அம்மயக்கம் எழுவகைய என்பது உரையிற் கோடும். அவை திணைமயக்கமும், பால்மயக்கமும், காலமயக்கமும், இடமயக்கமும், செப்புமயக்கமும், வினாமயக்கமும், மரபுமயக்கமும் என ஏழாம். இவை மயங்கும் எனவே வழுவாதல் பெற்றாம்.

உண்டான் அது, உண்டான் அவை, உண்டாள் அது உண்டாள் அவை, உண்டார் அது, உண்டார் அவை, உண்டது அவன், உண்டன அவன், உண்டது அவள், உண்டன அவள், உண்டது அவர், உண்டன அவர்—இவை திணை வழு.

உண்டான் அவள், உண்டான் அவர்; உண்டாள் அவன் உண்டாள் அவர்; உண்டார் அவன், உண்டார் அவள்; உண்டது அவை; உண்டன அது—இவைபால் வழு இவை வினை நின்று பெயர்மேல் வழீஇயின.

அவன் வந்தது, அவன் வந்தன; அவள் வந்தது, அவள் வந்தன; அவர் வந்தது, அவர் வந்தன; அது வந்தான், அவை வந்தான், அது வந்தாள், அவை வந்தாள், அது வந்தார், அவை வந்தார்—இவை திணைவழு. அவன் வந்தாள். அவன் வந்தார் அவள் வந்தான், அவள் வந்தார்; அவர் வந்தான் அவர் வந்தாள், அது வந்தன, அவை வந்தது—இவை பால்வழு—இவை பெயர் நின்று வினைமேல் வழீஇயின.

செத்தானைச் சாம் என்றல் கால வழு. யான் உண்டான், யான் உண்டாய் என்றாற் போல்வன இடவழு, இவை பெயர்.

†வினைகளைப் பற்றிவரும் விகற்பமும் கொள்க.

யானை மேய்ப்பானை இடையன் என்றலும், யாடு மேய்ப்பானைப் பாகன் என்றலும் மரபுவழு.

செப்பும் வினாவும் வழுவாமையும், வழுவுமாறும் மேலே கூறுப. வினையியலுள் கடைக்கண்காலவழுமைதியும், மரபியலுள் மரபு வழுவமைதியும் கூறி, ஏனைய வழீஇ அமையுமாறு இவ் வோத்தினுள் கூறுப.

---

* இப்பகுதி இளம்பூரணருரையைக் கொண்டது.

† வினைகளைப்பற்றி வரும் விகற்பம் வந்தான் அவள் என்பது முதலியவாகக் கண்டு கொள்க.

கல்.

என்—எனின், வழுக்காத்தல நுதலிற்று.

வழுக்காக்குமிடத்து வழுவற்க என்று காத்தலும் வழுவமைக என்று காத்தலும் என இரண்டாம். அவற்றுள், இது வழுவற்க என்று காத்தது.

பொருள் : வினைச்சொல்லான் அடங்கும் பால் அறியப் படும் பொருளும், பெயர்ச் சொல்லான் அடங்கும் பால் அறியப் படும் பொருளும் என இவ்விருவகைப் பொருளும் ஒன்றோடு ஒன்றை மயங்கச் சொல்லுதல் பொருந்தா; தத்தம் இலக்கணத் தானே சொல்லுதலுடைய, எ—று.

உ—ம் : உண்டான் அவன், உண்டாள் அவள், உண்டனர் அவர், உண்டது அது, உண்டன அவை என வரும். இவை வினை.

அவன் உண்டான், அவள் உண்டாள், அவர் உண்டார், அது உண்டது, அவை உண்டன என வரும். இவை பெயர். பாலறி கிளவி என்றதனை ஈண்டும் பொருள்மேற் கொள்க. அவ்வாறு பொருள் மேற்கொள்ளவேபொருட்பற்றி நிகழும் வழுவெல்லாம் படாமற் கூறுக என்பதாம். அவ்வழுக்களுடைய பெயரும் முறை யும் தொகையும் ஓரிடத்துங் கூறிற்றிலரேயாயினும் உரையிற் கோடல் என்பதனான் இச்சூத்திரத் துரையுட் கொள்ளப் படும். அவையாவன :—

திணைவழூஉ, பால்வழூஉ, இடவழூஉ, காலவழூஉ, மரபு வழூஉ, செப்புவழூஉ, வினாவழூஉ என இவையாம்.

இவையெல்லாம் மரபுவழு என ஒன்றேயாகற்பால எனின், அவ்வாறு ஒன்றாய் அடங்குமே எனினும் அம்மரபினைப் பகுத்து, திணைபற்றிய மரபினைத் திணை யென்றும், பால் பற்றிய மரபினைப் பால் என்றும், இடம் பற்றிய மரபினை இடம் என்றும், காலம் பற்றிய மரபினைக் காலம் என்றும், செப்பு பற்றிய மரபினைச் செப்பு என்றும், வினாபற்றிய மரபினை வினா என்றும் பகுத்து, இவ்வாறு ஒன்றனையும் பற்றாது வருவதனை மரபு என ஒன்றாக்கி இலக்கணமும் வழுவும் கூறினார் என்பது.

அவற்றுள் திணை வழூஉ, உயர்திணைப்பால் மூன்றும் அஃறிணைப்பால் இரண்டனோடு மயங்கி உயர்திணை வழூஉ

மூவிரண்டாறாம். இனி அஃறிணைப்பால் இரண்டும் உயர் திணைப்பால் மூன்றனோடு மயங்கி அஃறிணைத்திணை வழூஉ இருமூன்றாறாம். இவை பெயர், வினையென்னும் இரண்டனோடு உறழ இருபத்து நான்காம்.

உ—ம் : அவன் வந்தது, அவன் வந்தன என்றாற் போல்வன பெயர் பற்றிய உயர்திணைத் திணை வழூஉ. அது வந்தான், அது வந்தாள், அது வந்தார் என்றாற் போல்வன பெயர் பற்றிய அஃறிணைத் திணை வழூஉ.

இனி, வந்தான் அது, வந்தான் அவை என்றாற் போல்வன வினைபற்றிய உயர்திணைத் திணைவழூஉ, உண்டது அவன், உண்டது அவள், உண்டது அவர் என்றாற் போல்வன வினை பற்றிய அஃறிணைத் திணை வழூஉ.

இனிப் பெயரொடு பெயர் பற்றிய திணை வழூஉ வினையொடு வினைபற்றிய திணை வழூஉ என விகற்பிக்கப் பலவுமாம். அவன் அது, அவன் அவை என்றாற்போல்வன பெயரொடு பெயர் பற்றிய திணை வழூஉ.

உண்டான் நின்றான் ஓடினான் சாத்தன் என ஒருவன் மேற் பலவினை கூறுகின்றுழி, உண்டான் நின்றான் ஓடினான் பாடினான் என்றாற் போல்வன வினையொடு வினைபற்றிய திணை வழூஉ.

இனிப் பால் வழூஉ. உயர்திணைப் பால் மூன்றும் ஒன்று இரண்டினோடு மயங்கி மூவிரண்டாறாம். அஃறிணைப்பால் இரண்டும் ஒன்றோடு ஒன்று மயங்கி ஓரிரண்டாயின. ஆகப்பால் வழூஉ எட்டுவகைப்படும். அவை வினை, பெயர் என்னும் இரண் டனோடு உறழப் பதினாறாம்.

உ—ம் : அவன் உண்டான், அவன் உண்டார் என்பன உயர்திணைப் பெயர் பற்றிய பால் வழூஉ. அது வந்தன. அவை வந்தது என்பன அஃறிணைப் பெயர் பற்றிய பால் வழூஉ. உண்டான் அவள் உண்டான் அவர் எனிபன உயர்திணை வினை பற்றிய பால் வழூஉ. வந்தது அவை, வந்தன அது என்பன. அஃறிணை வினை பற்றிய பால் வழூஉ.

இனிப் பெயரொடு பெயரும் வினையொடு வினையும் பற்றி வழூவாவனவும் உள :

அவன் யாவள், அது யாவை என இவை பெயரொடு பெயர் பற்றிய பால்வழூஉ: உண்டான், தின்றாள், ஓடினான், பாடினாள் சாத்தன் எனவும், உண்டது, தின்றன, வந்தது, கிடந்தன ஓர் எருது எனவும் இவை வினையொடு வினைபற்றிய பால் வழூஉ,

இனி இட வழூஉ: தன்மை முன்னிலை படர்க்கை என்னும் மூன்றும் ஒன்றொன் றிரண்டனோடு மயங்கி மூவிரண்டாறாம்.

உ—ம்: யான் உண்டாய், யான் உண்டான் என்பன. பெயர் வினைகளைப் பற்றி வரும் விகற்பம் இவற்றிற்கும் ஒக்கும் என உணர்க.

கால வழூஉ: இறந்தகாலம் நிகழ்காலம், எதிர்காலம் என்ற மூன்றும் ஒன்று இரண்டனோடு மயங்கி மூவிரண்டாறாம்.

உ—ம்: செத்தானைச் சாகின்றான் எனவும், சாவான் எனவும் கூறினாற் போல வருவன. இவையிற்றிற்கும் பெயர் வினைகளைப் பற்றி வரும் விகற்பங் கொள்க.

மரபு வழூஉ: ஒரு பொருட்குரிய மரபினை ஒருபொருட் குரித்ததாகச் சொல்லுதலாம்.

உ—ம்: யானைமேய்ப்பானை இடையன் என்றும், ஆடு மேய்ப்பானைப் பாகன் என்றும், யானையுட் பெண்ணை ஆ என்றும், ஆவினுட் பெண்ணைப் பிடி என்றும் கூறினாற் போல்வன.

செப்பு வழுவிற்கும் வினா வழுவிற்கும் உதாரணம் மேல் வருகின்ற 'செப்பும்வினாவும்' என்னும் சூத்திரத்தால கொள்ளப் படும்.

எழுவகை வழுவும் இச்சூத்திரத்துள் மயங்கல் கூடா என்றதனால் பெறுதும் எனின், மேல் 'செப்பும் வினாவும் வழாஅலோம்பல்'' எனச் செப்பு வழுவும் வினாவழுவும் கூறல் அமையாதெனின், இதனுள் அடங்கினவற்றையே உலகத்துச் சொல்லாம் உயர்திணைச்சொல் அஃறிணைச் சொல் என வரையறையுற்றாற்போல் வினாவுரையும் செப்பு உரையும் என இரண்டாக வறையறைப்படுத்து ஓர் நிலைமை கண்டதனை உணர்த்துதற் பொருட்டு, மீண்டும் விளங்கக் கூறினார் என்று சொல்லுப எழுவகை வழுவிற்கும் இஃதோர் பொதுவிதி கூறிய

தெனவும், சிறப்பு விதி வேறு வேறு கூறிற்றெனவும் உரைக்கப் படும்.

செப்பு வினா ஒழிந்தவற்றிற்குச் சிறப்புவிதி யாதோ வெனின், வினையியலுட் கடைக்கண் கால வழுவிற்கு விதி பெறுதும். மரபு வழுவிற்கு விதி பொருளதிகாரத்து மரபியல் என்னும் ஒத்தினிடையும் கண்டு கொள்ளப் பெறுதும்.

ஒழிந்த திணை பால் இடங்கட்கு விதி 'னஃகான் ஒற்று' முதலிய சூத்திரங்களால் கூறிற்றெனவுணர்க. இவ்வாறு நூல் நயமாதல் இச்சூத்திரத்துரையினுட் கண்டு கொள்க.

இவ்வதிகாரத்துக் கூறப்படும் விதி மாணாக்கன் ஒரு பொருளைக் கூறுந்திறனறியாது இடர்ப்படுதல் நோக்கி இன்ன பொருளை இன்னவாறு கூறுக என்று அதன் இலக்கணங் கூறு தலும், அதனை அவ்வாறொழியவும் கூறுதலும் என்று கருதினும் கருதற்க என்று அதனை வழுவற்க என்று காத்தலும், அவ்வாறு வழுப்படக்கூறிய வழக்கினுட் சிலவற்றை அதனகத்து அவ்வாறு அதற்கோர் பொருட்காரணங்கண்டாதல், அதுவன்றிப் பலரும் பயில வழங்குதல் கண்டாதல் அமைதி கூறு தலும் என முவகை. அவற்றுள் இச்சூத்திரம் வழுவற்க என்னும் விதி கூறிற்றெனவுணர்க.

ஒரு.

என்பது வினையினாற் பாலறியப்படும் பொருளும் பெயரி னாற் பாலறியப்படும் பொருளும் மயங்குதலைப் பொருந்தா. அவை தத்தம் இலக்கணத்தனவாயே வரும்.

உ—ம்: உண்டான் அவன், உண்டாள் அவள், உண்டார் அவர், உண்டது அது, உண்டன அவை என இவை வினை நிற்பப் பெயர் மேல் தந்த மரபினான் வந்தன. அவன் உண்டான், அவள் உண்டாள், அவர் உண்டார், அது உண்டது, அவை உண்டன என இவை பெயர் நிற்ப வினைமேல் தந்த மரபினான் வந்தன.

இனி மயங்கல் கூடா எனவே அவற்று மயக்கம் உன்டென்பது சொல்லப்பட்டதாம். அம்மயக்கம் எழு வகைப்படும். அவை யாவன... திணை, மயங்கி வந்துழி வழுவென்றுணர்க.

ஆதி.

வினையில் நின்று பாலை அறிவிக்கும் விகுதியும் பெயரில் நின்று பாலை அறிவிக்கும் விகுதியும் மாறுபடக் கூடாது; மரபு தழுவி வரல்வேண்டும்.

அவன் வந்தான்
அவள் வந்தாள் — எழுவாயின் பாலுக்கு ஏற்றபடி
அவர் வந்தார் — வினையின் பாலும் நிற்கக் காண்க.
அது வந்தது
பல வந்தன

ஒருத்தி வந்தாள் — அவை வந்தன
பெண் பாடினாள் — மங்கை சிரித்தாள்
கன்னி நின்றாள் — குரு அமர்ந்தார்
தந்தை நல்லர் — தாய் நல்லள்
வில்லிவந்தான் — குழந்தை நடக்கிறது
மாணவி படிக்கிறாள் — குரிசில் எழுந்தான்

இங்கு எல்லாம் எழுவாய் ஈறும் வினையின் ஈறும் ஒவ்வாமை காண்க. இதனையே மரபு தழுவிவரல் வேண்டும் என்றார். நான் நாம் நீ நீர் இவை பால் அறிவிப்பதில்லை. ஆதலின் அதுபற்றி இங்கு யாதும் வேண்டாம்.

ச. வே. சுப்பிரமணியன்

பெயரில் உள்ள பால் உணர்த்தும் சொல்விற்குத் தக, அப் பெயருக்குரிய வினையாக அமையும் வினைச் சொல்லில் அமையும் பாலுணர்த்தும் சொல்லும் ஒத்த நிலையில் அமைத்தல் வேண்டும். இதை மொழியியலார் Cross reference எனக் கூறுகின்றனர். தொல்காப்பியம் பாலறி கிளவி மயங்கல் கூடா என்று பேசுகிறது. உரையாசிரியர்கள் திணை இடம் காலம் மரபு இவைகளைச் சேர்த்தனர். நேமி. நன். இ—வி. தொ—வி. இவை உரையாசிரியர் கருத்துகளைச் சேர்த்து நூற்பாவாக்கி விட்டன. Concord என்பதும் இதை யொட்டியதே. சில மொழிகளில் பெயரடை பெயருக்குத்தக மாற்றம் அடைகின்ற நிலையைப் பார்க்கின்றோம். காட்டாக, நல்ல பையன், நல்ல பையன்கள் எனத் தமிழில் அமையும் போது 'பையன்கள்' என்று பன்மையில் கூறும்போது, பெயரடை ஒருமைக்கும் பன்மைக்கும் 'நல்ல' என்றே அமைகின்

றது. ஆயின் ஸ்பேனிஷ் மொழியிலும் லத்தீன் மொழியிலும் பெயருக்குத்தக பெயரடையிலும் மாற்றம் அடைவதைக் காண்கிறோம்.

நல்ல பையன்	—	தமிழ்	—	நல்ல பையன்கள்
good boy	—	ஆங்கிலம்	—	good boys.
muchacho bueno	—	ஸ்பேனிஷ்	—	muchachos buenos
pure bonus	—	லத்தீன்	—	Purei boni

இருவழக்கு அடிப்படையில் தமிழுக்கு இலக்கணம் அமைந்துள்ளமையால் 'வழு' என ஒன்றையும் அமைத்துள்ளது. யானை மேய்ப்பானைப் பாகன் என்றலும் யாடுமேய்ப்பானை இடையன் என்றலும் மரபு. *

பேடி முடிபு

**12. ‡ஆண்மை திரிந்த பெயர்நிலைக் கிளவி
ஆண்மை அறிசொற்கு ஆகிடன் இன்றே**

ஆமோ.

இல.

The words of noun, denoting hermophro dite will not be the word denoting masculin gender.

கசு:

A word which is a noun (only) tending towards the male will not be used as word denoting masculine (gender)

இளம்.

இச்சூத்திரம் என்னுதலிற்றோ எனின் [1]எய்தியது விலக்குதல் நுதலிற்று.

---

* இலக்கணத் தொகை (சொல்) பக். 27.

‡ இதற்கு மாறாக

"பெண்மைதிரிந்த பெயர்நிலைஎ கிளவி
பெண்மை யறிசொற் காகிட னின்றே"

எனக் கொள்ளலாம். பேடு வந்தான் என ஆண்பாற்கும், ஆகிடன் இன்று என்றதனால் பேடுவந்தாள் எனப் பெண்பாற்கும் கொள்ளலாம்.

1. எய்தியது: 'பெண்மைசுட்டிய' என்னும் நூற்பாவில்

உரை: ஆண்மையில் திரிந்து பெண்மை நோக்கி நின்ற பெயர்ப் பொருள் ஆண்மகனை அறிவிக்கும் ஈற்றெழுத்தினாற் சொலற்பாட்டிற்கு ஏலாது என்றவாறு. [2]ஒழிந்த இரண்டு பெயர்க்கும் ஒக்கும் என்பதாம்,

[3]'ஆகிட னின்றே' என்பதனால் சிறுபான்மை 'பேடி வந்தான்' எனவும் ஆண்பாற்கும் ஏற்கும்.

சேனா.

இ—ள்: உயர்திணை மருங்கிற் பால்பிரிந் திசைக்கும்' (கிளவி. 4) என்று மேற் கூறப்பட்ட ஆண்மை திரிந்த பெயர் நிலைக் கிளவி ஆடூஉ வறி சொல்லோடு புணர்தற்குப் பொருந் தும் இடனுடைத்தன்று, எ—று.

'ஆண்மையறி சொற்கு ஆகிடம் இன்று' என்ற விலக்கு, [1]ஆண்மையறி சொல்லோடு புணர்தல் எய்தி நின்ற பேடிக்கல்லது ஏலாமையின், அலி மேற் செல்லா தென்க.

பேடி என்பது உயர்திணையில் பிரிந்திசைக்கும் எனப் பொதுவில் முப்பாலுக்கும் (ஆண், பெண், பலர்) உரியது போலக் கூறப்பட்டு அமைந்தது. விலக்குதல்: இந்நூற் பாவில் அது ஆண்மையறி சொற்கு ஆகாது என்பது.

2. ஒழிந்த இரண்டு பெயர்: பேடு அலி.

3. 'ஆகிடனின்றே ... ஏற்கும்' எனவரும் இளம்பூரணர் உரையிற் காணப்படும் குறிப்பு, வழுவற்க என வழுக் காக்கும் தொல்காப்பியர் கருத்துக்கு ஏற்புடையதாகத் தோன்றவில்லை — வெள்ளை வாரணனார். ஆகிடன் இன்றே என்றதனால் சிறுபான்மை வரும் எனக் கொண்டதனால் 'பெண்மை சுட்டிய' என்னும் சூத்திரத் தில் பேடி வந்தான் என்னும் உதாரணமும் காட்டினார் இளம்பூரணர்.

1. பெண்மை சுட்டிய (4) என்னும் நூற்பாவில் 'பேடி' என்பது உயர்திணை முப்பாலிலும் வரும் எனவே ஆண்மையறி சொல்லோடும் புணர்தல் எய்தி நின்றமை யின் அப்பேடி என்பதும்வ ஆண்மையறி சொற்கு ஆகாது என விலக்கப்பட்டது. விளக்கம். தெய்வச் சிலையார் உரையிற் காண்க.

இச்சூத்திரத்தைப் 'பெண்மை சுட்டிய என்னும் சூத்திரத்தின் (4) பின்வையாது ஈண்டு வைத்தார், இது வழுவற்க என்கின்றதாகலான்.

தெய்.

ஐயம் அறுத்தலை நுதலிற்று.

இ—ள் : மேல் உயர்திணை மருங்கிற் பால் பிரிந்திசைக்கும் என்று ஓதப்பட்ட பேடி என்னும் பெயர்க்கண் நிற்கும் சொல் ஆண்மையறி சொற்கு ஆகும் இடன் இலது, எ—று. எனவே, பெண்மையறி சொற்கு ஆகும் என்றவாறாம்.

உ—ம் : 'பெண் அவாய் ஆணிழந்த பேடி யணியாளோ கண்ணவாத் தக்க கலம்' (நாலடியார் 251) எனவரும்.

ஆண்மை திரிந்த பெயர் நிலைக் கிளவி பெண்மையறி சொற்கு ஆகும் என்னாது, 'ஆண்மை அறிசொற்கு ஆகும் இடம் இன்று, என எதிர்மறை வாய்பாட்டாற் கூறினமையாற் *சிறுபான்மை ஆடூஉ வறிசொல்லால் வருவன உளவேற் கொள்க.

இச்சூத்திரம் 'பெண்மை சுட்டிய' எனும் சூத்திரத்தின் பின் வையாது ஈண்டுக் கூறியது என்னையெனின், பெயரும் வினையும் மயங்காமற் கூறுக என்றாராகலின் (11) பேடி என்பது இவ்வாறு சொல்லத்தகும் என இறந்தது காத்தல் ஈண்டு ஓதப்பட்டது.

நச்.

இதுவும் அது.

இ—ள்: ஆண்மை திரிந்த பெடர் நிலைக் [1]கிளவி—உயர்திணை மருங்கிற் பால் பிரிந்திசைக்கும் (4) என மேற்கூறிய ஆண்மை திரிந்த பெயர்ச்சொல்: ஆண்மை அறி சொற்கு ஆகிடன் இன்று —ஆடூஉ அறிசொல்லோடு பொருந்தும் இடனுடைத்தன்று, எ—று.

[2]இது வழுவற்க என்கின்ற தாதலின், ஈண்டுப் போதந்து வைத்தார்.

---

* இது இளம்பூரணர் கூறியதை உட்கொண்டது.

1. பாடவேறுபாடு—கிளவியும். இது தவறு
2. இதன் விளக்கம் சேனாவரையர், தெய்வச் சிலையார் உரைகளிற் காண்க.

கல்.

என்—எனின், எய்தியது விலக்கிப் பிறிது விதியுணர்த்துதல் நுதலிற்று. மேல் பெண்மை சுட்டிய என்றதனுள் பேடியை முப்பாலானும் சொல்லுக என்னும் விதியுள் ஒரு கூற்றை விலக்கியது என உணர்க.

பொருள்: உயர்திணையிடத்துப் பெண்மையைக் கருத வேண்டி ஆண்மைத் தன்மை நீங்கிய பேடி என்னும் பெயராற் சொல்லப்படும் பொருண்மையான மகனையறியுஞ் சொல்லாற் சொல்லுதற்கு ஆம் இடம் இல்லை, என்றவாறு. எனவே பெண்பாலானும் பன்மைப் பாலானும் சொல்லுக என்றவாறு.

உ—ம்: பேடி வந்தாள், பேடியர் வந்தார் என இவை.

'இடன்' என்ற மிகுதியான் பேடி வந்தான் என்பதும் சிறுபான்மை அமையும் என்பது. அவ்வாறமையும் என †விலக்கிப் பெற்றது. என்னையெனின், பெரும்பான்மை சிறுபான்மையுணர்த்துதல் என வுணர்க.

இதனைப் 'பெண்மை சுட்டிய' என்றதன் பின் வையாது இத்துணையும் போதந்து மேற் கூறப்படுகின்ற வழுவமைதிகளோடு சொல்லிவைத்த முறையன்றிக் கூற்றினாற் 'பெண்ணும் ஆணும் அல்லாததனை அவ்வப்பாற் சொல்லாற் சொல்லுதலும் வழுவமைதி, என்பது பெறப்பட்டது.

வழுவமைதிகள் தாம் இலக்கணம் உள்வழிக் கூறும் வழுவமைதியும், இலக்கணம் இல்வழிக் கூறும் வழுவமைதியும் என இருவகைப்படும். அவற்றுள் இஃது இலக்கணம் இல்வழிக் கூறிய வழுவமைதி யெனவுணர்க. இது பால் பற்றிப் பிறந்த தோர் மரபு வழுவமைதி என்க.

ஒரு.

என்பது ஆண்மையிற் றிரிந்து பெண்மை நோக்கி நின்ற பெயர்ப்பொருள் ஆண்மைகளை அறிவிக்கும் ஈற்றெழுத்தினாற் சொல்லுதற் கேலாதாம். எனவே பெண்பாலானும் பன்மைப் பாலானும் சொல்லுக என்பதாம்.

---

† விலக்கிப் பெற்றது—நூற்பாவின் கருத்துப்படி விலக்கிப் பின் இடன் என்னும் இலேசினாற் பெற்றது.

உ—ம் : பேடி வந்தாள், பேடியர் வந்தார் எனவரும். 'ஆகிடனின்றே' யென்றமையாற் சிறுபான்மை பேடி வந்தான் என ஆண்பாலுங் கொள்க.

ஆதி.

ஆண்மையின் மாறிய (அலி எனும்) பெயர்ச்சொல் (வினையினால்) ஆண்பாலை அறிவிப்பதற்கில்லை. அலி செல்கிறான் என்று ஆண்பால் விகுதி பெற்ற வினை சேர்த்தற்கில்லை. அலியை மட்டும் 'ஆண்மையிற்றிரிந்த பெண்மை' என்று விதந்து கூறியமையால், அடுத்த பெண்மை மிகுந்த 'பேடி' பெண்மை வினை கொள்ளும்எனக் கருத வேண்டியதாகிறது. 'பேடி அணியாளோ கண் அவாத் தக்க கலம்' என்பது இலக்கியம்.

செப்பு, வினா வழுவற்க.

13. செப்பும் வினாவும் வழாஅல் ஓம்பல்.

ஆ. மொ.

இல.

The answer and question must be appropriate in form and sense

க. சு.

Question and answer should be uttered without erroı

பி. இ. நூ.

நன். 386.

சுட்டு மறைநேர் ஏவல் வினாதல்
உற்ற துரைத்தல் உறுவது கூறல்
இனமொழி எனும்எண் இறையுள் இறுதி
நிலவிய ஐந்தும் அப்பொருண்மையின் நேர்ட.

இல. வி. 308

வினாய பொருளறி வுறுப்பது செப்புஅது
செவ்வன் இறையும் இறைபயப் பதுவும்

எனஇரு வகைத்தாம் அவற்றுள்இறை பயப்பது
வினாஎதிர் வினாதலும் ஏவலும் மறுத்தலும்
உற்றது உரைத்தலும் உறுவது கூறலும்
நேர்தலும் சொற்றொகுத் திறுத்தலும் என்னத்
தேரின் ஓரேழ் திறனுடைத் தென்ப.

நேமி. சொல். 6.

ஓதும் எதிர்வினா உற்ற துரைத்தலும்
ஏவல் உறுவது கூற்று இந்நான்கும்—பேதாய்
மறுத்தல் உடம்படுதல் அன்றெனினும் மன்ற
இறுத்தலே போலும் இவை.

நன். 385.

அறிவு அறியாமை ஐயுறல் கொளல்கொடை
ஏவல் தரும்வினா ஆறும் இழுக்கார்

இல. வி. 305.

அறியல் உறவு வெளிப்படுவது வினா அஃது
அறியாமை ஐயம் அறிகொடை கொளல்
ஏவலின் வரூஉம் இவ்விரு மூன்றனுள்
கடைநிலை நான்கும் முதல்நிலை அனைய.

இளம்.

இச்சூத்திரம் என்னுதலிற்றோவெனின் செப்பு வழுவும் வினா வழுவும் காத்தல் நுதலிற்று.

உரை; செப்பும் வினாவும் வழாஅல் ஓம்பல் என்பது, செப்பினையும் வினாவினையும் இழுக்குதலைப் போற்றுக, எ—று.

அவை வழுவாது வருமாறு: நுந்நா டியாது என்றால், 'தமிழ்நாடு' என்றல்.

[1]இச்செப்புதான் ஆறுவகைப்படும்: வினா எதிர் வினாதலும், ஏவுதலும், மறுத்தலும், உற்றது உரைத்தலும், உறுவது கூறலும், உடம்படுதலும் என.

---

1. செப்பு அறுவகைப்படும் என்னும் இக்கருத்தைச் சேனாவரையர் மறுப்பார் எனினும் அவரே வினா எதிர் வினாதல், ஏவல், உற்றதுரைத்தல், உறுவது கூறல் என்பனவற்றிற்கான உதாரணங்களையும் காட்டுகிறார்.

அவற்றுள் மறுத்தலும் உடம்படுதலுமே ஈண்டுச் செப்பிலக்கணமாவன; [2]ஒழிந்தனவற்றை முன்னமைத்துக் கூறுக என்றவாறு.

வினா ஐந்து வகைப்படும்: அறியான் வினாதல், அறிவு ஒப்புக்காண்டல், ஐயம் அறுத்தல், [3]அவனறிவு தான் கோடல், மெய்யவற்குக் காட்டல் என.

அவை வழுவாமற் சொல்லுக எனவே வழுவுதலும் உண்டு என்பதாம்.

அவை வருமாறு: கருவூர்க்கு வழியெது என்றாற்குப் 'பருநூல் பன்னிரு தொடி' என்பது செப்பு வழூஉ. ஒருவிரல் காட்டி, 'நெடிதோ குறிதோ?' என்பது வினாவழூஉ. இதுவும் சொற்றொகை யுணர்த்தியவாறு

சேனா.

இ—ள்: செப்பினையும் வினாவினையும் வழுவாமற்போற்றுக, எ—று.

செப்பு என்பது வினாய பொருளை அறிவுறுப்பது. அஃது இரண்டு வகைப்படும், செவ்வன் இறையும் இறை பயப்பதும் என. உயிர் எத்தன்மைத்து என்று வினாய வழி உணர்தல் தன்மைத்து என்றல் செவ்வன் இறையாம். உண்டியோ என்று வினாய வழி 'வயிறு குத்திற்று' என்றல் 'உண்ணேன்' என்று பயந்தமையின் இறை பயப்பதாம்.

கருவூர்க்குச் செல்லாயோ சாத்தா எனப் பருநூல் பன்னிரு தொடி என்பது செப்பு வழுவாம். [1]சொல் எப்பொருள் உணர்த்

ஆதலால் அவர் மறுப்பு அத்துணைப் பொருத்தமுடைத்தன்று என்று தெளியலாம்—கு. சுந்தரமூர்த்தி.

2. முன்னமைத்தல்: வினா எதிர் வினாதவை 'வினாவும் செப்பே' என்னும் சூத்திரத்திலும், உற்றது உரைத்தல், உறுவது கூறல், ஏவல் ஆகியவற்றை செப்பே வழீஇயினும்' என்னும் சூத்திரத்திலும் அமைத்துக் கூறுதல்.

1. சொல் எப் பொருள் உணர்த்தும் எனக் கேட்பவன் சொல் பொருள் உணர்த்தும் என்ற உண்மையுணர்ந்து அது எப் பொருள் என அறியக் கேட்கின்றான் ஆதலின் ஒரு பொருளும் உணர்த்தாது என்பது விடைவழுவாம்.

தும் என்று வினாய வழிச்சொல் ஒரு பொருளும் உணர்த்தாது என்பதும் அது; வினாய பொருளை வினாவால் உணர்ந்து வினாய பொருளையன்றித் தான் குறித்த பொருளைச் செப்பால் உணர்த்துகின்றான் ஆகலின் என்பது.

[2]வினா இன்றியும் செப்பு நிகழ்தலின், வினாய பொருளை எனல் வேண்டா எனின், 'வினாய பொருளை' என்னாது 'அறி வுறுப்பது செப்பு' எனின், அறியலுற வினை அறிவுறுத்தலின் வினாவும் செப்பாய் அடங்குதலானும், செப்பு என்பது உத்தரம் என்பதனோடு ஒரு பொருட் கிளவி யாகலானும், வினாய பொருளை யறிவுறுத்தலே இலக்கணமாம் என்பது. குமரியாடிப் போந்தேன் சோறு தம்மின் என வினா இன்றி நிகழ்ந்த சொல் யாண்டடங்கு மெனின்:— அறியலுறுதலை யுணர்த்தாது ஒன்றனை அறுவுறுத்து நிற்றலின் செப்பின்பாற்படும்.

வினாஎதிர் வினாதல், ஏவல், மறுத்தல், உற்றதுரைத்தல், உறுவது கூறல், உடம்படுதல் எனச் செப்பு அறுவகைப்படும் என்று உரையாசிரியர் கூறினாரால் எனின்:—[3]உயிர் எத்தன்

கேட்டவன் கேள்வியை உணர்ந்தும் — அதாவது சொல் பொருள் உணர்த்தும் என்பதை உணர்ந்தும் அதற்குரிய விடையைக் கூறாமல் தான் வேண்டுமென்றே தான் எண்ணியதைக் கூறுதலினால் செப்புவழுவாம்.

2. செப்பு என்பதன் பொருள் வினவிய பொருளை அறிவு றுப்பது 'இப்படிச் சொல்லாமல் அறிவுறுப்பது செப்பு' என்று சொல்லி விட்டால், வினாவுகின்றவனும் தன் ஐயத்தைத் தெரிவிக்கவே வினாவுகிறான் ஆதலின் அவன் வினாவும் அறிவுறுப்பதாகச் செப்பு ஆகிவிடும்; வினா ஆகாது. அதனால் வினாய பொருளை அறிவுறுப் பது செப்பு என்றே சொல்லவேண்டும்.

வினாவுக்கு விடையை உத்தரம் என்பர் வடநூலார். உத்தரத்துக்கு ஏற்பச் செப்பும் கொள்ளவேண்டும். உத்தரம் செப்பு ஒருபொருட் கிளவிகள். குமரியாடி... செப்பின்பாற்படும்:— குமரியாடிப் போந்தேன் சோறு தம்மின் என்பவன் தன்னையும் தன்பசியையும் அறு வுறுத்துகிறான் ஆதலின், வினா இல்லை யென்றாலும் செப்பில் அடக்கவேண்டும் அவன் கூற்றை.

3. உயிர் எத்தன்மைத்து என்றவழி உணர்தல் தன்மைத்து என்பதை ஆறனுள் உற்றது உரைத்தல் என்பதில் சேர்க் கலாம். உற்றது உரைத்தல் என்பதற்குத் தனதுகுற்றக்

மைத்து என்ற வழி உணர்தல் தன்மைத்து என்றல் முதலாயின அவற்றுள் அடங்காமையானும், மறுத்தலும் உடம்படுதலும் வினாவப்பட்டார் கண் அன்றி *ஏவப்பட்டார் கண்ணும் ஆகலானும், அறுவகைப்படும் என்று பிறர்மதம் மேற்கொண்டு கூறினார் என்பது.

வினாவாவது அறியலுறவு வெளிப்படுப்பது. அது மூவகைப்படும். அறியான் வினாவும், ஐய வினாவும், அறிபொருள் வினாவும் என. அறியான் வினா உயிர் எத்தன்மைத்து என்பது. ஒருபுடையானும் அறியப்படாத பொருள் வினாவப்படாமையின் பொதுவகையான் அறியப்பட்டுச் சிறப்பு வகையான் அறியப்படாமை நோக்கி அறியான் வினாவாயிற்று. ஐயவினா குற்றியோ மகனோ தோன்றுகின்ற உருவென்பது. அறிபொருள் வினா அறியப்பட்ட பொருளையே ஒரு பயன் நோக்கி [4]அவ்வாய்ப்பாட்டின் ஒன்றான் வினாவுவது. பயன் வேறு அறிதலும் அறிவுறுத்தலும் முதலாயின. [5]கறக்கின்ற எருமைபாலோ சினையோ என்பது வினாவழுவாம். ஒரு பொருள் காட்டி இது நெடிதோ குறிதோ என்பதும் அது.

எனப் பொருள் கொள்வதால் சேனாவரையர் மறுத்தார். தன்னிடமோ பொருளிலோ (சொல்லிலோ) உற்றது எனக் கொண்டால் மறுப்புத் தேவையில்லை.

மறுத்தலும் உடம்படுதலும் வினாவினவனுக்குப் பதிலாகும்; தன்னை ஏவினவனுக்கும் பதிலாகும். இங்கே வினாவிடை என்பனவே பேசப் படுதலின் மறுத்தல் உடன்படல் என்பன வினாவுக்குரியன எனக் கொள்ள வேண்டுமேயன்றி ஏவலுக்குரியன என்று மறுக்கவேண்டுவதில்லை எனவே இம்மறுப்புப் பொருந்தவில்லை—சிவ.

*சு.வே: ஏவப்பட்டார் கண்ண

4. அவ்வாய்பாடு=குற்றியோ மகனோ என்பதுபோலும் ஐய வினாச் சொல்.
5. கறக்கின்ற என்னும் அடைமொழியே பால் எருமை என்பது தெரிவிதலின் பாலோ என வினவுவது குற்றம். எருமை இரண்டு மூன்று மாதச் சினைப்பருவத்தும் கறக்கும் ஆதலின் சினையோ என வினவுவதுதான் பொருந்தும். எருமை என்பதற்குப் பதில் பசு என்றிருப்பது சிறக்கும். எருமை சினைப்பட்டபின் கறக்க எளிதில் ஒருப்படாது.

உரையாசிரியர் அறிபொருள் வினாவை அறிவொப்புக் காண்டலும், அவனறிவு தான் [6]காண்டலும் மெய் அவற்குக் காட்டலும் எனவிரித்து ஏனைய கூட்டி ஐந்தென்றார்.

இருவகைச் செப்பினும் மூவகை வினாவினும், செவ்வன் இறையும் அறியான் வினாவும், ஐய வினாவும் [7]வழாநிலையாக லின், வழாஅல் ஓம்பல் என்பதனாற் கொள்ளப்படும். ஏனைய வழுவமைப்புக் காணப்படும்.

[8]வினா வழீஇயினவிடத்து அமையாது என்று உரையாசிரியர் கூறினாரால் எனின் :— அற்றன்று; 'யாதென வரூஉம் வினாவின் கிளவி (கிளவி. 34) எனவும், 'வன்புறவரூஉம் வினாவுடை வினைச் சொல்' (சொல். 244) எனவும் முன்னர் வழுவமைப்பர் ஆகலான், அதுபோலியுரையென்க.

---

6. காண்டல் என்பதற்குப் பதில் கோடல் என்பது இளம்பூரணத்திற் காணப்படுகிறது.

7. வழாநிலை—குற்றமிலாத்தன்மை

8. "செப்பே வழீஇயினும்" என்பதன் உரையில் கூறினார். யாது என்னும் வினாச்சொல், அறியப்படாத பொருளை அறிய வினாவப்படும் சொல் என (31) முன்னர்க்கூறிய ஆசிரியர், அடுத்து அறிந்த பொருளி லும் வினாஆவதற்கு வரும் என வழுவுதல் கூறி, அப்படி வருமானால் அறிந்ததன் தொடர்பான ஐயம் நீக்கிக் கொள்ளவே வரும் ஆதலின் அவ்வழு அமைக எனக்கூறு கின்றார். இது வினாவழுவமைதியாகும்.

"கள்ளுண்டுக் களிததவன் பிறன் ஒருவனை அம் மயக்கத்தால் வைதான்; அவன் தெளிந்தபின் என்னை நீ வைதாயே என அவ்வொருவன் கேட்க, இல்லையென்று வற்புறுத்தும் வகையில் நானா வைதேன்? நானாவை தேன்? என்று எதிர் வினா வினாவுவான். வைததது உண்மை; வையவில்லை என்னும் பொருள்பட வினாவு வது வழு; எனினும் களித்த காலத்தில் வைததைத் தெளிந்தகாலத்தில் மறந்தமையான் இல்லையென வற் புறுத்தவேண்டி அவ்வாறு வினாவுகிறான். அதனான் அது அமைக" என "வன்புறவரூஉம்" என்னும் சூத்திரத் தில் ஆசிரியர் கூறுவதும் வினாவழுமைதியே ஆதலின் அது போலியுரையே.

தெய்.

இதுவும் வழுப்படாமற் கூறுமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ—ள் : செப்பினையும் வினாவினையும் வழுவாமற் கூறுக, எ—று.

உலகத்துப் பொருளுணர்த்தும் சொல் எல்லாம் வினாவும் செப்பும் ஆகிய பொருள்மேல் நிகழ்தலின், அவை வழுவாமற் கூறல் வேண்டும் என்றவாறாயிற்று.

எனவே வழு எழுவகையாம் என்பது பெற்றாம். செப்புவருமாறு :— அச்செப்பு நான்கு வகைப்படும். துணிந்துகூறல், கூறிட்டு மொழிதல், வினாவி விடுத்தல், வாய் வாளாதிருத்தல் என. துணிந்து கூறலாவது, தோன்றியது கெடுமோஎன்றவழிக் கெடும் என்றல். கூறிட்டு மொழிதலாவது செத்தவன் பிறப்பானோ என்றவழி பற்றறத் துறந்தானோ பிறனோ என்றல். வினாவி விடுத்தல் என்பது முட்டை மூத்ததோ பனை மூத்ததோ என்றவழி எம்முட்டைக்கு எப்பனையென்றல். வாய் வாளாமையாவது ஆகாயப்பூ நன்றோ தீதோ என்றாற்கு உரையாடாமை (மணி. 30: 235—249)

இனி அவற்றுள் வினாவழுவாவது வினாவிய சொல்லாற் பயனின்றி நிற்பது. அஃது ஒருவிரல் காட்டி நெடிதோ குறிதோ என்றலும், ஆகாயப்பூ நன்றோ தீதோ என்றலும்.

செப்பு வழுவாவது, துணிந்து கூறும் வழித் 'தோன்றியது கெடுமோ' என்றார்க்குக் 'கெடாது' என்றலும், ஒலி செவிக்குப் புலனன்று என்றலும், என்தாய் மலடி என்றலும் பிறவும் இந் நிகரனவும். இனிக் கூறிட்டு மொழியவேண்டும் வழியும், வினாவி விடுக்க வேண்டும் வழியும், வாளாதிருக்க வேண்டும் வழியும் துணிந்து கூறின் வழுவாம்.

*வினா இன்றியும் வருதலிற் செப்பு முற்கூறப்பட்டது.

---

* செப்பு என்பது விடையாதலின் வினா இன்றி விடையில்லையாதலின் வினாமுற்கூறப்பட வேண்டும். ஆனால் செப்பு முற்கூறப்பட்டது ஏன் என்பதற்கு இத்தொடர் விடை.

அது, 'யான் குமரியாடிப் போந்தேன்; ஒருபிடி சோறு தம்மின்' எனவரும்.

நச்.

இதுவும் அது.

இ—ள்; செப்பும் வினாவும்—வினாய பொருளை யறிவுறுப் பதனையும் அறியலுறவு வெளிப்படுப்பதனையும், வழாஅல் ஓம்பல்—வழுவாமல் போற்றுக, எ—று.

செவ்வன் இறையும். இறைபயப்பதுவும் எனச் செப்பு இரு வகைத்து. அவற்றுள் இறைபயப்பன தாம் வினாவெதிர் வினா தலும், ஏவுதலும், மறுத்தலும், உற்றது உரைத்தலும், உறுவது கூறலும், உடம்படுதலும், சொல் தொகுத்து இறுத்தலும், சொல் லாது இறுத்தலும் எனஎண் வகை. 'உயிர் எத்தன்மைத்து' என்று வினாயவழி'உணர்தல் தன்மைத்து எனறல் செவ்வன் இறையாம். 'உண்டியோ?' என்று வினாயவழி, வயிறு குத்திற்று என்றலும், உற்றது உரைத்தலாய் 'உண்ணேன்' என்பது பயத்தலின் இறை பயப்பதாம். கடம்பூர்க்கு வழியாதோ எனில், இடம்பூணி என் ஆவின் கன்று என்றல் செப்பு வழுவாம்.

அறியான் வினாவும், ஐய வினாவும், அறிபொருள் வினாவும் என வினா மூவகைத்து. உயிர் எத்தன்மைத்து என்றல் அறியான் வினா. ஒரு வாற்றானும் அறியப்படாத பொருள் வினாவப்படா மையின், பொதுவகையான் உணர்ந்து, சிறப்பு வகையான் அறி யாமையின வினாவினான் என்றுணர்க. குற்றியோ மகனோ தோன்றுகின்ற உரு என்பது ஐயவினா. அறியப்பட்ட பொருளை வேறு அறிதலும் அறிவுறுத்தலும் முதலிய பயன் நோக்கி வினாதல் அறிபொருள் வினா. இவ்வறிபொருள் வினாவின் கண்ணே அறிவு ஒப்புக்காண்டலும், அவன் அறிவுதான் காண் டலும், மெய் அவற்குக் காட்டலும் அடங்கின.

ஒரு விரல் காட்டி நெடிதோ குறிதோ என்றலும், கறக்கின்ற எருமை பாலோ சினையோ என்றலும் பிறவும் வினா வழுவாம்.

*செப்பு ஆசிரியன் கண்ணது ஆகலானும், வினா இன்றியும் செப்பு நிகழ்தலானும் செப்பு முற்கூறினார்.

செவ்வன் இறையும் அறியான் வினாவும் ஐயவினாவும் வழாநிலையாதலின் 'வழாஅல் ஓம்பல்' என்பதனால் கொள்க. ஏனைய வழு அமைப்புழிக் காண்க.

கல்.

என்—எனின், செப்பு வழுவும் வினாவழுவும் காத்தல் நுதலிற்று.

இ—ள்: செப்பினையும் வினாவினையும் வழுவாமல் ஓம்புக என்றது பரிகரித்துக் கூறுக என்றவாறு.

உ—ம்: சாத்தா சோறுண்ணாயோ என்றாற்கு உண்பேன் என்றலும், உண்ணேன் என்றலும் எனக் கொள்க. செப்பு, வினா என்னுமவற்றுட் செப்பு, மறுத்தலும் உடன்படுதலும் என இரண்டு வகைப்படும். நுந்நாடு யாது என்றாற்குப் பாண்டி நாடு என்றாற்போல் வன இவ்விரண்டினுள் அடங்கா வெனினும் [1]ஒரு வகையான் அடக்கிக் கொள்ளப்படும்.

இனி வினா ஐந்து வகைப்படும். அறியான் வினாதல், அறிவொப்புக் காண்டல், ஐயமறுத்தல், அவன் அறிவு தான் கோடல், மெய் அவற்குக் காட்டலும் என. ஆங்ஙனம்,

---

* செப்பு ஆசிரியன் கண்ணது—இது விளங்கவில்லை. "ஆசிரியன் மாணவனுக்குப் பாடம் பயிற்றுவிக்கும் பொழுது இருவரும் ஒருவர்க்கொருவர் வினாவியும் விடையிறுத்துக் கொண்டும் இருப்பரேனும், மாணவன் அறியாதும் ஐயப்பட்டும் கேட்கும் வினாக்களுக்கு ஆசிரியனே விடையிறுத்துத்தெருட்டும் பொறுப்புடையன் ஆதலின் அப்பொறுப்பும் சிறப்பும் நோக்கிச் செப்பு ஆசிரியன் கண்ணது என்றார்" கு சுந்தரமூர்த்தி.
இவ்விளக்கம் அமைதி தானே தவிர உண்மையாகாது. ஏன் எனின் செப்பு என்பது ஆசிரியர் மாணவர் அளவில் நிற்பதில்லை—சிவ.

1. அங்ஙனம் அமைத்துக் கொள்ளின் உடன்படுதல் என்ற வகையுள் தான் இதனை அடக்கிக் கொள்ள வேண்டும், எனினும் இது பொருந்தாது—கு. சுந்தரமூர்த்தி.

"அறியான் வினாதல். அறிவொப்புக் காண்டல்
ஐய மறுத்தல் அவன் அறிவுதான் கோடல்

மெய்யவற்குக் காட்டலோ டைவகை வினாவே'
என்பதுங்கண்டு கொள்க.

என இவை 'வழாஅல் ஓம்பல்' எனவே வழுவுதலும் உண்டு என்பது பெறப்பட்டது. அவற்றுள் செப்பு வழூஉ, வினா எதிர் வினாதலும், ஏவுதலும், உற்றது உரைத்தலும், உறுவது கூறலும், சொற்றொகுத் திறுத்தலும், சொல்லா திறுத்தலும், பிறிதொன்று கூறலும் என எழுவகைப்படும்.

உறுகின்றது கூறல் என்னும் ஒன்றுண்டேல் உற்றது உணர்த்தலுள் அடங்கும் எனக் கொள்க. அவற்றுட் பிறி தொன்றுகூறல் அமையா வழூஉ எனப்படும். கருவூர்க்கு வழியாதெனப் பருநூல் பன்னிருதொடி யென்றாற் போல்வன. மற்றைய ஆறும் அமையும் வழு எனப்படும்.

அவற்றுள் வினாவெதிர் வினாதல் 'வினாவும் செப்பே' (14) என்ற வழிக் கொள்ளப்படும்.

ஏவலும், உற்ற துரைத்தலும், உறுவது கூறல என்னும் மூன்றும் 'செப்பே வழீஇயினும்' (15) என்புழிக் கொள்ளப்படும்.

சொற்றொகுத் திறுத்தல் எப்பொருளாயினும் (35) என்புழியும், அப்பொருள் கூறின் (36) என்புழியும் கொள்ளப்படும்.

சொல்லா திறுத்தலாகிய 'பெருமா! உலறினீரால்' என்றார்க்கு வாளாதே 'உலறினேன்' என்றாற்போல்வன அதிகாரப் புறனடையாகிய 'செய்யுள் மருங்கினும்' (எச்ச. 61) என்புழிக் கொள்ளப்படும்.

வினாவழூஉ, தான் வினாவுகின்றதனைக் கேட்டான் இறுத்தற்கிடம் படாமல் வினாதல் என ஒன்றேயாம்.

உ—ம் : ஒரு விரல் காட்டி இது நெடிதோ குறிதோ என்றாற் போல்வன.

[2]வினாவிற் கமையா வழுவல்லது அமையும் வழூஉ என்ப தொன்றில்லை.

---

2 இது வினாவழீஇயின விடத்து அமையாது' என்ற இளம்பூரணர் கருத்தைக் கொண்டது.

இனி, 'வழாஅல்' என்பது, வழுவி என்னும் செய்தென் எச்சத்து எதிர்மறையாகிய 'வழாமல்' என்னும் சொல் குறைக்கும் வழிக் குறைத்தல் என்பதனால் இடை நின்ற மகரம் குறைந்து நின்றதெனவுணர்க.

[3]செப்பு ஆசிரியன் கண்ணதாகலானும் வினாவினையறி விப்பது அது வாகலானும் வினாவின்றியும் அது நிகழுமாக லானும், [4]வழுஉப்பன்மை அதன் கண்ணது ஆகலானும் முற்கூறப் பட்டது,

வினாவுரையும் செப்பு நிகழ்தலிற் செப்பென ஒன்றேயாய் அடங்காதோ எனின், அங்ஙனம் அடங்குமாயினும் ஒன்றனை யறியாது கூறல் வினாவென்றும், ஒன்றனை யறிவித்தற்குக் கூறல் செப்பென்றும் இரண்டாகப் பகுத்து ஆராய்ந்தார் என வுணர்க.

---

3 இப்பகுதி தெய்வச் சிலையார் நச்சினார்க்கினியர்க்குப் பிற்பட்டவர் கல்லாடர் என்பதைக் காட்டுவதுடன் செப்பு முற்கூறப்பட்டதன் காரணப் பெருக்கத்தையும் காட்டுகிறது.

வினாவினை அறிவிப்பது செப்பு = 'ஒன்றுமேயறியா தவன் எதனையும் வினாவுதற்குரியன் அல்லன் ஆதலின் அங்ஙனம் வினாவுதற்கேற்ற செய்தியுடைமையைத் தோற்றுவிப்பது செப்பே—கு. சுந்தரமூர்த்தி. இவர் விளக்கம் வினா எழுப்புதற்குமுன் அறிந்த செய்தி செப்பின்பாற்படும் என்பதை அடிப்படையாகக் கொண்டது போலும் இதற்கு வினாஇன்றியும் செப்பு நிகழும் என்பதற்குக் கூறப்படும் உதாரணத்தையே காட்டலாம். 'கங்கையாடிப் போந்தேன் சோறு தம்மின்' என்றால் நீயார்? ஏன் கங்கையாடினாய்? என்று ஆடினாய்? போலும் வினாக்களுக்கு அதுவே காரணமாய் அமைதலின் வினாவுக்கேற்ற செய்தியாக அமைந்தது அவ்வுதாரணம் என்னலாம்—சிவ.

வழுஉப்பன்மை = வினாவுக்கு வழுப்பன்மையும் வழு வமைதிப்பன்மையும் இல்லை. செப்புக்கு ஆறு வழுவமை திகள் உண்டு.

ஒரு.

என்பது செப்பினையும் வினாவினையும் வழுவாமற் போற்றிச் சொல்லுக.

அவை வருமாறு : நுந்நாடு யாது என்றக்கால் பாண்டி நாடு என்பது. இது வினாவானும் சொல்லானும் வழுவாது வந்தது.

'வழாஅல்ஓம்பல்' எனவே செப்பு ஆறு வகைப்படும்; வினாவெதிர் வினாதலும், ஏவலும், மறுத்தலும், உற்றது உரைத்தலும், உறுவது கூறலும், உடம்படுதலும் என.

அவற்றுள் வினா எதிர் வினாதலாவது, சாத்தா சோறு உண்ணாயோ என்றால் உண்ணேனோ என்பது.

ஏவலாவது சாத்தா சோறுண்ணாயோ என நீ உண், என்பது.

மறுத்தலாவது சாத்தா சோறுண்ணாயோ என உணணேன் என்பது.

*உற்றது உரைத்தலாவது சாத்தா சோறு உண்ணாயோ என வயிறு குத்தும் என்பது.

உடம்படுதலாவது சாத்தா சோறு உண்ணாயோ என உண்பேன் என்பது.

அவற்றுள் மறுத்தலும் உடம்படுதலும் செப்பு இலக்கணமாகக் கொள்க,

வழுவாமற் சொல்லுக எனவே வழுவாதலும் உண்டு. அது வருமாறு :

கருவூர்க்கு வழி எதோ எனப் பருநூல் பன்னிரண்டு தொடி என்பது. இது வினாவிற்கு இறைபட வாராமையின் வழுவாயிற்று. இத்தொடக்கத்தன சொல்லற்க.

---

* உறுவது கூறலுக்கு வயிறுகுத்தும் என்பது பொருந்தும் அது கூறப்பட வில்லை. உற்றது உரைத்தலுக்கு வயிறு குத்திற்று என்பதே பொருந்தும்

இனி முன்னை இலேசினால் வினா ஐந்து வகைப்படும்.

அறியான் வினாதல் அறிவொப்புக் காண்டல்
ஐயம் அறுத்தல் அவனறிவு தான் காண்டல்
மெய்யவற்குக் காட்டலோ டைந்து

அவற்றுள் அறியான் வினாதலாவது இச்சூத்திரத்திற்குப் பொருள் என்னையோ என்பது.

அறிவாப்புக் காண்டலாவது இச்சூத்திரத்திற்குப் பொருள் யானறிந்தாங்கே அறிந்தான் கொல்லோ என்று அறிதற்கு வினாதல்.

ஐயமறுத்தலாவது இச்சூத்திரப் பொருள் கேட்டுத் துணியாது நின்றான் அறிந்தானை வினாவியறிதல்.

அவனறிவுதான் காண்டலாவது இவன் இச்சூத்திரத்திற்குப் பொருந்துமாறு உரைத்தல் காண்பல் என்று அவன் உணர்வின் பகுதி தான் ஆராய்வான் வினாதல்.

மெய்யவற்குக் காட்டலாவது இவன் இச்சூத்திரத்தின் பொருளைத் திரியக் கொண்டான் என்பதனைத்தான் அறிந்தான் அவன் பிழைத்து உரைத்தக்கால், அப்பிழையைத் தெருட்டித் தான் நன்கு உரைப்பான் வினாதல்.

இவை ஐந்தும் வினாவுதலேயாம்.

இனி வினாவழு வருமாறு: கருவூரோடு காவிரிப்பூம்பட்டினத்திடை என் உண்டு என்பது, காதமே அறியலுறுவது எனின், எனைத்துக் காதம் உண்டு எனற்பாற்று. அவ்விடைப் பொருளை அறியலுறுவதெனின், 'என்னுள' எனற்பாற்று. அவ்வாறு சொல்லாமையின் வழுவாயிற்று. ஆகையால் இத்தொடக்கத்தன வினாவற்க.

வினாவும் செப்பாதல்

14. வினாவும் செப்பே வினாஎதிர் வரினே

ஆ. மொ.

இல.

The question may become an answer if it comes in reply to a question.

க. சு.

Even a question (may become) an answer if it comes in reply to a qpestion

பி. இ. நா.

நேமி. சொல். 6.

எதிர்வினா......இறுத்தலே போலும்

நன். 386

வினாதல்......இறை,

இல. வி. 308

......இறைபயப்பது
வினாஎதிர் வினாதல்.

இளம்.

இச் சூத்திரம் என்னுதலிற்றோ வெனின், வினாவும் இறையாகும் ஒரோ வழி என்பது உணர்த்துதல் நுதலிற்று.

உரை ; வினாவும் செப்பே வினாவெதிர் வரினே என்பது வினாவும் இறையாகும் அதற்கு இறைபடவரின், எ—று.

[1]அது வினா எதிர் வினாதல் என்னும் குற்றப்படாததன் கருத்து.

---

1. இவ்வாக்கியம் பிழைபட உள்ளது. வினாவெதிர் வினாதல் எனினும் குற்றமில்லை; அதுவும் செப்பின் பாற்படுதலின் என்பது கருத்தாகக் கொள்க— கு. சுந்தரமூர்த்தி. பிழைபட உள்ளதாகக் கருதவேண்டுவதில்லை. "(அது =) வினா எதிர் வரும் வினாவானது செப்பாகும் என்பது, வினா எதிர் வினாதல் என்னும் குற்றம் பொருந்தாததன் கருத்தையுடையதாகும்" எனக்கொண்டால் பிழைபடாததாகும், வினா எதிர் வினாதல் என்பது ஓர் குற்றம்; அது உண்டியோ என வினாவிய வழி, செப்பு நிலையில் இல்லாமல் தானும் ஓர் வினாவாக உண்பேனோ என்பது போல வினாவுவது. —சிவ

(வ—று) சாத்தா வுண்ணாயோ என்று வினாயினாற்கு உடம்படுதல், மறுத்தல் என்றிரண்டினுள் ஒன்று ஏற்றற்பாலது. உண்ணேனோ என்று வினாவினான் வினா, உண்பல் என்னும் பொருட் பட்டமையின் வினாத்தானும் செப்பு ஆயிற்று.

சேனா.

இ—ள்: வினாய பொருளை ஒருவாற்றான் அறிவுறுத்து வினாவிற்கு மறு மொழியாய் வரின், வினாவும் செப்பாம், எ—று.

உ-ம்: சாத்தா வுண்டியோ என்று வினாயவழி உண்ணேனோ எனவரும்.

வினா வாய்பாட்டான் வந்ததாயினும், உண்பல் என்பது கருத்துப் பொருளாகலின் செப்பெனப்படும். உண்டியோ என்று வினாய வழி உண்பல் உண்ணேன் என்று இறாது தானொன்றை வினாவுவான் போலக் கூறலின், வழுவமைதியாயிற்று.

[1]இது செப்பு வழுவமைதியேல் 'செப்பே வழீஇயினும்' என்புழி

---

1. சாத்தா உண்டியோ என்று வினாயவழி நேர் விடையாக—செப்பாக உண்டேன் என்றோ இல்லையென்றோ கூறவேண்டும். அவ்வாறின்றி உண்டேன் என்ற நேர் விடை கிடைக்கும் வகையில் உண்ணேனோ என்று ஓர் வினாவைக் கூறுவது வினாவுக்கு வினா என்பது போல் அமைந்தாலும் வினாவுக்கு விடையாகவே — செப்பாகவே அமைகிறது, அதனால் இங்கு வினாவே செப்பாகிறது. "செப்பே வழி இயினும்" என்னும் சூத்திரத்தில் செப்பு வழீஇப்பிறிதொரு செப்பாகவே அமைகிறது உண்டியோ என்றால் நீ உண என்பது நேர் விடை செப்பு இல்லலயாயினும் நான் உண்டேன்; நீ யுண் எனப்பிறிதுவகையில் வரும் செப்பாய் அடங்கும். இங்கு செப்பே வழீஇச் செப்பாக வருகிறது. அதனால் வினாச் செப்பாய் வரும் வினாவழுவினைத் தனியே கூறினார்.

"இச்சூத்திரம் வினவாக்கியத்தால் விடை கூறுவதைப் பற்றிக் கூறுகின்றது. அடுத்த சூத்திரம் (15) ஒரு வினாவுக்குரிய விடையை மற்றொருவினாவிற்கு (செவ்வனிறையாகாமல் இறைபயப்பதாக) விடையாகக் கூறுவதைப் பற்றிக் கூறுகின்றது. ஆதலின் இருகருத்துகளும் ஒரு சூத்திரத்தில் அமையாவென்க"—பூவாரகம்

யடங்கு மெனின்:— ஒன்றன் செப்பு ஒன்றற் காவதன்றி வினாச் செப்பாயினமையின், வேறு கூறினார்.

தெய்.

செப்பின் கட் கிடந்ததோர் வழுவமைத்தலை நுதலிற்று

இ—ள்: வினாவும் செப்பாம் நிலையைப் பெறும், வினாவப் பட்ட சொற்றன்னானே யெதிர்த்து வருமாயின், எ—று.

உ—ம்: சாத்தா உண்ணாயோ என வினாயவழி உண் ணேனோ என்பது உண்ணேன், உண்பல் எனச் செப்பாது உண்பன் என்னும் பொருள்படச் செப்பினமையான் வழுவமைதியாயிற்று.

நச்.

இது வழுவமைக்கின்றது.

இ—ள்: வினா எதிர் வரின்—வினாப் பொருளை ஒருவாற் றான் அறிவுறுத்து வினாவிற்கு மறுமொழியாய் வரின், வினாவும் செப்பு—வினாத்தானும் செப்பாம், எ—று.

சாத்தா உண்டியோ என்று வினாயவழி உண்ணேனோ என வரும் வினா, வினாவாய்பாட்டால் வந்ததேனும், உண்பேன் என்னும் பொருள்பட வருதலின் செப்பு ஆயிற்று. இது, வினா வெதிர் வினாதல்.

கல்.

என்—எனின் செப்பு வழுவமைதி கூறுதல் நுதலிற்று. (இ—ள்) வினாவென்று சொல்லப்படுகின்றதும் ஒரோவழிச்செப் பென்று சொல்லப்படும்; ஒருவன் ஒன்றனை வினாவத் தானும் அதற்கு எதிர் ஒன்றனை வினாவி இறைப்பொருள் படுத்துமே யெனின், எ—று.

உ—ம்: சாத்தா சோறு உண்ணாயோ என்றாற்கு உண் ணேனோ என்பது.

இது வினா வழுவமைதியன்றோ எனின், பிறிதோர் வினா வந்து வினாப் பொருள் பயவாது செப்புப்பொருள் பயப்ப நிற் றலின், செப்பு வழுவமைதியென அடக்கினார்.

ஒரு.

என்பது வினாவும் செப்பாகும் அதற்கு இறைபட வரின்.

உ—ம்: சாத்தா கருவூர்க்குச் செல்லாயோ என்று வினாவி னாற்குச் செல்லேனோ என்று வினாவவே செல்வேன் என்னும் பொருட்பட்டமையின் வழுவே ஆயினும் செப்பாயிற்று. இது வழுவமைதி.

செப்பு வழுவமைதி

15. செப்பே வழீஇயினும் வரைநிலை யின்றே
அப்பொருள் புணர்ந்த கிளவி யான

ஆ. மொ.

இல.

The reply being not in the proper form is not forbidden if it gives the answer relating to the question.

க. சு.

It is not objectionable for the reply to be in an irregular from if the words (used) are connected with that matter (pertinent to the question)

பி. இ. நூ.

நன். 386

.........ஏவல்......
உற்ற துரைத்தல் கூறுவது கூறல்
இனமொழி...அப்பொருண்மையின் நேர்ப.

இல. வி. 308

.........இறைபயப்பது
...ஏவலும் மறுத்தலும்
உற்ற துரைத்தலும் உறுவது கூறலும்
நேர்தலும் சொல்தொகுத் திறுத்தலும்.

இளம்.

இச்சூத்திரம் என்னுதலிற்றோ வெனின், இதுவும் [1]அவ்வழி அமையுமாறு உணர்த்துதல் நுதலிற்று.

உரை : செப்பேவழீ இயினும் வரை நிலையின்றே என்பது செப்புத்தான் வழீஇயின விடத்தும் வரைந்து மாற்றப்படாது என்றவாறு; ஏகாரம் பிரிநிலையேகாரம்; வழீஇயினும் என்ற உம்மை சிறப்பும்மை எனவே வினாவழீஇயின விடத்து அமையாது என்பது. அப்பொருள் புணர்ந்த கிளவியான என்பது அப்பொருட்கு இயைபு படவரின், எ—று

அவ்வாறு வழீஇ அமையும் செப்பாவன : உற்றது உரைத்தலும் உறுவது கூறலும் ஏவுதலும் என இவை.

அவற்றுள், உற்றது உரைத்தல் என்பது, சாத்தா உறையூர்க்குச் செல்லாயோ எனின், கால் முள் குத்திற்று, தலை நோகின்றது என்பது. இனி உறுவது கூறல் என்பது, சாத்தா உறையூர்க்குச் செல்லாயோ எனின் 'கடமுடையார் வளைப்பர்; பகைவர் எறிவர் என்பது. இனி ஏவுதல் என்பது சாத்தா உறையூர்க்குச் செல்லாயோஎனின், 'நீ செல்' என்பது.

இவை மூன்றும் வழீஇ அமைவன; வழுஉவே யெனினும் அப்பொருள்பட வந்தமையின் அமைக என்பது. மற்றுள்ளனவும் மேலே அடங்கின.

சேனா.

இ—ள் : செவ்வன் இறையாகாது செப்பு வழுவிவரினும் கடியப்படாது, ஒருவாற்றான் வினாய பொருட்கு இயைபுபட்ட கிளவியாதற்கண், எ—று.

உ-ம் : சாத்தா உண்டியோ என்று வினாயவழி 'நீ உண்' என்றும், வயிறு குத்தும் என்றும், பசித்தேன் என்றும், பொழுதாயிற்று என்றும் வரும். இவை செவ்வன் இறை அல்லவேனும்,

---

1. அவ்வழு என்றிருக்க வேண்டுவது தவறாக எழுதப் பட்டது போலும். அவ்வழி என்பதே பாடமாயின் அச்செப்பு வழு வரும் வழி எனப் பொருள் கொள்க.

வினாய பொருளை ஒருவாற்றான் அறிவுறுத்தலின், அமைந்த வாறு கண்டு கொள்க.

அஃதேல் இவை 'தெரிபு வேறு நிலையலும் குறிப்பின் தோன்றலும்' (சொல். 157) என்புழிக் குறிப்பின் தோன்றுதலாய் அடங்குமாகலின், ஈண்டுக் கூறல் வேண்டா எனின் :—அவ்வாறு அடங்குமாயினும், 'செப்பும் வினாவும் வழாஅல் ஓம்பல்' (சொல். 13) என்றதனான் இவையெல்லாம் வழுவாதல் எய்திற்று; அதனான் அமைக்க வேண்டும் என்பது.

தெய்.

இதுவும் அது.

இ—ள்: செப்பு வழீஇயினும் நீக்கப்படாது; அச்செப்பு தற்குப் பொருண்மையைப் பொருந்திய சொல்லின் கண், எ—று.

[1]ஏகாரம் சிறப்புப் பற்றி வந்தது அதிகாரப் புறனடையாற் கொள்ளப்படும்.

உ—ம்: உண்ணாயோ சாத்தா என்றவழி, நீயுண் எனவும், வயிறு குத்தும் எனவும் இவ்வாறு வருவன. இவையும் உண்ணேன், உண்பல் என வராமல் உண்ணேன் என்னும் பொருள்பட வருதலின் வழுவமைதியாயின.

நச்.

இதுவும் அது.

செப்பே வழீஇயினும் வரைநிலை இன்று—செவ்வன் இறை ஆகாது செப்பு வழுவிவரினும் கடியப்படாது, அப்பொருள் புணர்ந்த கிளவியான—ஒருவாற்றான் அவ்வினாய பொருட்கு இயைபுபட்ட கிளவியாதற்கண், எ—று.

---

1. தேற்றம் வினாவே பிரிநிலை எண்ணே ஈற்றிசை இவ் வைந் தேகாரம்மே" (இடையியல் 9) என்னும் நூற் பாவில் ஏகாரத்துக்குச் 'சிறப்புப்' பொருள்படாமையின் அதிகாரப்புறனடையாற் கொள்ளப்படும் என்றார். பிரிநிலை என்பர் இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும்.

சாத்தா உண்டியோ என்று வினாயவழி வயிறு குத்திற்று என, உற்றது உரைத்தலும், வயிறு குத்துகின்றது என மறுத்தலும், நீ யுண் என ஏவுதலும், வயிறு குத்தும் என உறுவது கூறலும், பசித்தேன் என்றும், பொழுது ஆயிற்றென்றும் உடம்படுதலும் ஒருவாற்றான் வினாய பொருளை அறிவுறுத்தின. குமரி ஆடிப்போந்தேன்; ஒரு பிடி சோறு தம்மின் என்பது சொல்லாது இறுத்தல். [1]சொல் தொகுத்திறுத்தல் எப்பொருளாயினும் (சொல் 35) என்புழியும் அப்பொருள் கூறின் (சொல். 36) என்புழியும் கூறுப.

செப்பே என நின்ற ஏகாரம் பிரிநிலை ஏகாரம். வினா நிற்பச் செப்பை வாங்கிக் கொண்டு அமைத்தலின் உம்மை, சிறப்பும்மை. [2]செப்பு வழுவினும் அமைக. வினா வழீஇயின விடத்து அமையாதாம்.

கல்.

என்—வெனின், இதுவும் செப்பு வழுவமைதியாமாறு உணர்த்துதல் நுதலிற்று என்பது,

பொருள் : செப்பென்று சொல்லப்பட்டது வழுவி வரினும் வரைந்து மாற்றப்படாது : எவ்விடத்தெனின், வினாப் பொருண்மையோடு பொருந்திய சொல்லிடத் தென்றவாறு.

உ-ம் : உறையூர்க்குச் சொல்லாயோ சாத்தாவென நீசெல் என்பதேவுதல். உறையூர்க்குச் செல்லாயோ சாத்தாவென என்கால் [3]முடங்கிற் றென்றல் உற்றதுணர்த்தல். உறையூர்க்குச் செல்லாயோ சாத்தா எனக் கடமுடையார் வளைப்பர்; பகைவர் எறிவர் என்றல் உறுவது கூறல். செப்பே என்புழி

1, சொல் தொகுத்தல் = பயறுளவோ வணிகீர் என்றாற்கு, "ஐயா உழுந்து உண்டு; பயறு இல்லை" எனக் கூற நினைத்த வணிகன் உழுந்து அல்லது இல்லை எனச் சுருக்கமாகச் சொல்வதும் (சூ. 35) முன் இருப்பதைச் சுட்டிக்காட்டி இதுவல்லது இல்லை (36) எனச் சொல்லுவதும் தொகுத்து நிறுத்தலாம்.

2. இளம்பூரணரும் இக்கருத்தினரே. இதைச் சேனாவரையர் மறுக்குமாற்றை அவர் உரையிற்காண்க.

சு. வே : 3. முட்குத்திற்று.

ஏகாரம் பிரிநிலை. அதனைப் பிரித்து வழுவமைதி கூறினமை யின் வினாவிற்கு வழுவமைதி யில்லை யென்பது பெறப்பட்டது. வழீஇயினும் என்ற உம்மை இழிவுசிறப்பும்மை.

இம்மூன்று சூத்திரத்துள் முன்னைய வழுவற்க என்னும் விதி: பின்னைய விரண்டும் செப்பு வழுவமைதி கூறுயவென உணர்க.

ஒரு.

என்பது சூத்திரம் செப்புதல் வழீஇயின விடத்து மாற்றப் படாது, பொருளொடும் புணர்ந்த சொல்லாயின்.

உதா : சாத்தா கருவூர்க்குச் செல்லாயோவெனக் கால் முள் குத்திற்று, தலை நோகின்றது என்றுவரும். சாத்தா கருவூர்க்குச் செல்லாயோவெனக் கடனுடையார் வளைப்பர்; பகைவர் எறிவர் எனச் சொல்லுதலும், சாத்தா கருவூர்க்குச் செல்லாயோ வென நீ செல் என்பதும் வழுவேயாயினும், உற்றதுரைத்தலும் உறுவது கூறலும் ஏவலுமாய் வந்து செல்லேன் என்னும் பொருள்பட்ட மையின் அமைக. இதுவும் வழுவமைதி.

ஆதி.

வினாய பொருளுக்குப் பொருத்தமாக அமையின் பதில் மாற்றம் முறை தவறினும் கடிதற்கில்லை.

பள்ளிக்குஏன் போகவில்லை? வினா. வீட்டில் சமைக்க நேர மாயிற்று—விடை. சமைக்க நேரமானதால் உண்ண நேரமாகி அதனால் பள்ளிக்குப் போகக் காலந்தாழ்த்ததால் பள்ளிக்குப் போகவில்லை என அறிவிப்பதால்—வழுவும் முறைமையா யிற்று.

செப்பினும் வினாவினும் சினைமுதற் கிளவி

16. செப்பினும் வினாவினும் சினைமுதற் கிளவி
அப்பொரு ளாகும் உறழ்துணைப் பொருளே.

ஆ.மோ.

இல.

Both in reply and question, the part and the whole can be compared or contrasted with the same.

கூசு.

Both in replies and in questions, parts and wholes may be compared or contrasted (only) with the same.

பி. இ. நூ.

நேமி. சொல். 53.

பிறழ்வும் சினைமுதல் ஒவ்வா,

நன். 387.

வினாவினும் செப்பினும் விரவா சினைமுதல்

இல. வி. 309,

செப்பினும் வினாவினும் சினைமுதற் கிளவிக்கு
அப்பொரு ளாகும் உறழ்துணைப் பொருளே.

இளம்.

இச்சூத்திரம் என்னுதலிற்றோ வெனின் செப்புவானொடு வினாவுவானிடைக் கிடந்ததோர் இலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று.

உரை : செப்பினும் வினாவினும் என்பது செப்புமிடத்தும் வினாவுமிடத்தும் என்றவாறு; சினைமுதற்கிளவி என்பது சினைக் கிளவிக்கும் முதற்கிளவிக்கும் என்றவாறு; அப்பொருளாகும் உறழ்துணைப் பொருளே என்பது முதலொடு முதலே பொரூஉக; சினையொடு சினையே பொரூஉக என்றவாறு.

வரலாறு : கொற்றன் மயிர் நல்லவோ சாத்தன் மயிர் நல்லவோ என்று வினாவினவிடத்துக் கொற்றன் மயிரிற் சாத்தன் மயிர் நல்ல; சாத்தன் மயிரிற் கொற்றன் மயிர் நல்ல என்று இறுக்க. இது சினையொடு சினை பொரீஇயினவாறு.

இனிக் கொற்றன் நல்லனோ சாத்தன் நல்லனோ என்று கூறியவிடத்துக் கொற்றனிற் சாத்தன் நல்லன்; சாத்தனிற் கொற்றன் நல்லன் என்றிறுக்க. இது முதலொடு முதல் பொரீஇயினவாறு. அப்பொருளானாகும் என்றதனான் அவ்வச் சினைக்கு அவ்வச் சினையே பொரூஉக என்பது. இது முதற்கும் ஒக்கும்.

இனி, சினை முதற்கூறிய முறையன்றிக் கூற்றினான் முதலும் சினையும் உறழ்ந்து வருவனவும் உள குணமருங்கு பற்றி.

வரலாறு : இம்மகள் கண் நல்லவோ இக்கயல் நல்லவோ என்பன போல்வன.

*இனி அப்பொருளாகும் உறழ்பொருள் என அமையும்; துணையென்பது மிகையெனில், [1]துணைக்கும் என்பது உவமித்தல், அவ்வுமத்துக் கண்ணும் அவ்வினைப் பொருளேயாக என்பது.

உவமம் நாலுவகைப்படும் : வினை, பயன், மெய், உரு என. புலி பாய்ந்தாங்குப் பாய்ந்தான் என்பது வினையுவமம். மழைபோலும் வண்கை யென்பது பயன் உவமம். துடி போலும் நடு என்பது மெய்யுவமம். பொன்போலும் மேனி என்பது உரு உவமம்.

இன்னும் துணையென்றதனான், எண்ணுமிடத்தும் இனம் ஒத்தனவே எண்ணுக; முத்தும் மணியும் பொன்னும் என.

சேனா.

இ—ள் : செப்பின் கண்ணும் வினாவின்கண்ணும் சினைக் கிளவிக்கும் முதற்கிளவிக்கும் [2]உறழ் பொருளும் துணைப் பொருளும் அவ்வப் பொருளுக்கு அவ்வப் பொருளேயாம்,எ—று.

எனவே சினையும் முதலும் தம்முள் மயங்கி வருதல் வழு என்பதாம்.

உறழ் பொருளாவது ஒப்புமை கூறாது மாறுபடக் கூறப் படுவது; துணைப் பொருளாவது ஒப்புமை கூறப்படுவது.

---

* உறழ், துணை என்பனவற்றிற்குச் சேனா. உரைகாண்க.

1. துணை என்றிருக்கலாம்—கு. சுந்தரமூர்த்தி.
2. உறழ்துணைப் பொருள் என்பதை உறழ் பொருள் என்றே கொண்டு துணை என்பது மிகை என்றார் இளம்பூரணர் முதலியோர்.
நச்சினார்க்கினியர் சேனாவரையர் கருத்தினர்.
உறழ்துணை—ஒத்த இணை என்பர் ஆதித்தர்.

உ—ம் : இவள் கண்ணின் இவள் கண் பெரிய, நும் அரசனின் எம் அரசன் முறை செய்யும் எனவும், இவள் கண்ணின் இவள் கண் பெரியவோ, எம் அரசனின் நும் அரசன் முறை செய்யுமோ எனவும், இவள் கண் ஒக்கும் இவள் கண், எம் அரசனை ஒக்கும் நும் அரசன் எனவும், இவள் கண் ஒக்குமோ இவள் கண், எம் அரசனை ஒக்குமோ நும் அரசன் எனவும் வரும்.

'அவன் கோலினும் தண்ணிய தடமென் தோளே' (பட்டினப். 300—301) எனவும், 'துளிதலைத் தலைஇய தளிரன் னோளே' (குறுந். 222) எனவும் மயங்கி வந்தன வழுவாம் பிறவெனின் :—அவை செய்யுள் பற்றி வரும் உவம வழு ஆகலின் ஈண்டைக்கு எய்தா; அணியியலுள் பெறப்படும்.

இம்மகள் கண் நல்லவோ கயல் நல்லவோ என வழக்கின் கண்ணும் மயங்கி வருமால் எனின் :—உண்மை யுணர்தற்கு வினாயதன்றி ஐயவுவமை வாய்பாட்டால் கண்ணைப் புனைந் துரைத்தல் கருத்தாகலின், அன்னவை யெல்லாம் உரை யென்னும் செய்யுளாம் என்பது. இந்நங்கை முலையின் இந்நங்கை கண் நல்ல என்னுந் தொடக்கத்தன மயக்கம் இன்மையின் இலக்கண வழக்காம் பிற எனின் :—அற்றன்று; ஒத்த பண்பு பற்றி யன்றே பொருவுவது; கண்ணொடு முலைக்கு ஒத்த பண்பின்மையால் பொருவுதல் யாண்டையது? ஒத்த பண்பு பற்றிய பொருவுதற் கண்ணது இவ்வாராய்ச்சி யென்பது.

காக்கப் பட்டன செப்பு வழாநிலையும் வினாவழா நிலையும் என்பார் செப்பினும் வினாவினும் என்றார். 'வழாஅல் ஓம்பல்' (சொல். 1?) என்புழி அடங்குமாயினும் நுண்ணுணர்வுடையார்க் கல்லது அதனால் உணர்தலாகாமையின் விரித்துக் கூறியவாறு.

தன்னின முடித்தல் என்பதனால் [2]'பொன்னுந் துகிரும் முத்தும் மணியும்' (புறம் 218) என எண்ணுங்காலும் இனமாய பொருளே எண்ணப்படும் என்பது கொள்க.

---

2. இவற்றைத் 'துணை' என்னும் மிகையினால் கொள்வர் இளம்பூரணர், கல்லாடர் ஆகியோர்.

தெய்.

செப்பின் கண்ணும் வினாவின் கண்ணும் உறழ் பொருட்கண் வரும் வழுக் காத்தலை நுதலிற்று.

இ-—ள்: சினையும் முதலுமாகிய பொருளுணர்த்தும் சொற்குச் செப்பின்கண்ணும் வினாவின்கண்ணும் உறழப்படும் பொருள் அப் பொருளாகும், எ—று.

துணை யென்பதிணை. முதல் என்றதனாற் பண்புந் தொழிலும் காலமும் இடனும் பொருளும் கொள்க. சினை பற்றி யுறழ்தல் பெரும்பான்மை யாகலான் முற்கூறப்பட்டது. அப் பொருள் என்றது அவ்வப் பொருட்கு அவ்வப் பொருளே யுறழப் படுவது, எ—று.

அவை யொரு பொருட்கண்ணும் பிற பொருட்கண்ணும் ஒத்தன கொள்ளப்படும்.

அவை வினாவின்கண் வருமாறு :— வலமுலையோ இட முலையோ பெரிதெனத் தன் பொருட்கண் வந்தது. இவள் முலையோ அவள் முலையோ பெரிதெனப் பிற பொருட்கண் வந்தது; இவை சினை. இந்நிறமோ அந்நிறமோ நல்லது —இது பண்பு. இந்நடையோ அந்நடையோ நல்லது—இது தொழில். இன்றோ நாளையோ வாழ்வு—இதுகாலம். இந்நிலமோ அந்நிலமோ விளைவது—இஃதுஇடம். இவளோ அவளோ கற்புடையாள்—இது பொருள்.

இனிச் செப்பு வருமாறு :—இம்முலையின் அம்முலை பெரி தென்றானும் ஒக்கும் என்றானும் வரும். பிறவு மன்ன.

இனி அப்பொருளெல்லாப் பிறிது பொருளோடு உறழ்தல் வருகின்ற சூத்திரத்தான் அமைக்கப்படும்.

நச்.

இது செப்பிற்கும் வினாவிற்கும் மரபு கூறுகின்றது.

இ—ள்: செப்பினும் வினாவினும்—செப்பின் கண்ணும் வினாவின் கண்ணும், சினை முதல் கிளவிக்கு—சினைக் கிளவிக்கும் முதற் கிளவிக்கும், உறழ் துணைப் பொருளே—ஒப்புமைகருதாது

மாறுபடக் கூறும் பொருளும் ஒப்புமை கூறப்படும் பொருளும், அப்பொருள் ஆகும்—அவ்வப் பொருளுக்கு அவ்வப் பொருளே யாம், எ—று.

உ—ம்: இவள் கண்ணின் இவள்கண் பெரிய: நும் அரசனின் எம் அரசன் முறை செய்யும்; இவள் கண்ணின் இவள் கண் பெரியவோ, எம்மரசனின் நும்மரசன் முறை செய்யுமோ; இவள் கண் ஒக்கும் இவள்கண், எம் அரசனை ஒக்கும் நும் அரசன்; இவள்கண் ஒக்குமோ இவள்கண், எம் அரசனை ஒக்குமோ நும் அரசன் எனவரும்.

தன்னின முடித்தல் என்பதனால் எண்ணுங்காலும் துகிரும் முத்தும் பொன்னும் என இனம் ஒத்தன எண்ணுக; முத்தும், கருவிருந்தையும், காணங்கோழியும், பொன்னும் என்று எண்றற்க

கல்.

என்—எனின், செப்புவானொடு வினாவுவானிடைக் கிடந்த தோர் மரபிலக்கணங் கூறுதல் நுதலிற்று.

பொருள் : செப்பின்கண்ணும் வினாவின் கண்ணும், சினைக்கிளவிக்கும் முதற்கிளவிக்கும் அவ்வப் பொருளுக்கு அவ்வப் பொருளேயாம்; ஒன்றினோடொன்றைப் பொருவிக் கூறுமளவிற்றாகிய பொருள், என்றவாறு.

உ-ம் : கொற்றன் மயிர் நல்லவோ சாத்தன் மயிர் நல்லவோ என வினாவினவிடத்துக் கொற்றன் மயிரிற் சாத்தன் மயிர் நல்ல; சாத்தன் மயிரிற் கொற்றன் மயிர் நல்ல என்று இறுக்க. பிறவுமன்ன. இது சினைக்கிளவி.

கொற்றன் நல்லனோ சாத்தன் நல்லனோ என வினாவின விடத்துச் சாத்தனிற் கொற்றன் நல்லன்; கொற்றனிற் சாத்தன் நல்லன என இறுக்க. இது முதற்கிளவி. சினை என்பது உறுப்பு. முதல் என்பது அவ்வுறுப்பினையுடையது. அப்பொருளாகும் என்றதற்குப் பொருள், சினைக்குச் சினையும் முதற்கு முதலும் என்பதன்று அவ்வச் சினைக்கு அவ்வச் சினையும் அவ்வமுதற்கு அவ்வ *முதலும் என்பது கொள்ளப்படும்.

* சு. வே : முதல்

சினை முதற் கூறியவதனான் அவ்வச் சினைக்கு அவ்வச் சினை கூறாது முதலொடு கூறுதலும் உள என்பது கொள்ளப் படும்.

உ-ம் : இவள்கண் நல்லவோ கயல் நல்லவோ எனவரும்,

உறழ்பொருள் என்னாது துணையென்றவதனால் உவமத் தின்கண்ணும் சினைமுதல்கள் தம்மின் மயங்காமற் கூறுக என்பது கொள்ளப்படும்.

இன்னும் அதனானே இச்சினை முதற் பொருள்களை யெண்ணுமிடத்தும் இனமொத்தனவே யெண்ணுக என்பதூஉம் கொள்ளப்படும்.

உவமம் வினை, பயன், மெய், உருவென நான்கு வகைப் படும். உ-ம் : புலி பாய்ந்தாங்குப் பாய்ந்தான், மழைவண்கை, துடிபோலும் இடை, பொன் போலும் மேனியென வரும். இவற்றுள் சினை முதல் மயங்கக் கூறினவும் இவ்விலேசான் அமைத்துக் கொள்ளப்படும்.

இனி எண் : முத்தும் மணியும் பவளமும் பொன்னும் என எண்ணுக. இதற்கு அமைதியுண்டேனும் கொள்க.

இச்சூத்திரத்தாற் சொல்லியது, செப்பினையும் வினாவினை யும் பற்றிப் பொருவின்கண்ணும் உவமத்தின்கண்ணும் எண்ணின்கண்ணும் பிறக்கும் மரபிலக்கணமும் மரபுவழூஉ வமைதியும் எனவுணர்க.

பொருவென்பது ஒன்றையொன்றனோடு ஒக்கும் என்ப தன்றி, அதனின் இது நன்றென மிகுத்துக் கூறுவது. உவமம் என்பது ஒப்புணர்த்தல் எனவுணர்க.

ஒரு.

என்பது செப்பு மிடத்தும் வினாவுமிடத்தும் சினைக் கிளவிக்கும் முதற்கிளவிக்கும் முதலொடுமுதலும் சினையொடு சினையும் பொரூஉக.

உ—ம் : கொற்றன் மயிர் நல்லவோ சாத்தன் மயிர் நல்லவோ என்று வினாவினவிடத்துக் கொற்றன் மயிரிற் சாத்தன் மயிர் நல்ல; சாத்தன் மயிரிற் கொற்றன்மயிர் நல்ல

என்று செப்புக. இந்நங்கை முலை நல்லவோ அந்நங்கை முலை நல்லவோ வென்று வினாவின விடத்து, இந்நங்கை முலையில் அந்நங்கை முலை நல்ல; அந்நங்கை முலையில் இந்நங்கை முலை நல்ல வென்று செப்புக. கண் பல்லென்னும் தொடக்கத்தன வுமவை. சினையொடு சிலை பொரீஇயவாறு. இனிக் கொற்றன் நல்லனோ சாத்தன் நல்லனோ வென்று வினாவின விடத்துக் கொற்றனிற் சாத்தன் நல்லன், சாத்தனிற் கொற்றன் நல்லன் என்று செப்புக. அரசர் முதலாயினோரையும் இத்தன்மை கொள்க.

இனி 'அப்பொருளாகும் உறழ்துணைப் பொருள்' என்றமை யால் இந்நங்கை கண் நல்லவோ அந்நங்கை முலை நல்லவோ வென்றும், எம்மூரரசன் நல்லனோ உம்மூர்க் கோலிகன் நல்லனோ வென்றும் சினையும் முதலும் பிறழப் பொருஉ வற்க.

1. உப்பக்க நோக்கி யுபகேசி தோள்மணந்தான்
உத்தர மாமதுரைக் கச்சென்ப—விப்பக்க
மாதாநு பங்கி மறுவில் புலச்செந்நாப்
போதார் புனற்கூடற் கச்சு (திருவள்ளுவமாலை. 12)

2. நறுநீல நெய்தலும் கொட்டியும் தீண்டிப்
பிற நாட்டுப் பெண்டிர் முடிநாறும் பாரி
யற நாட்டுப் பெண்டி ரடி.

3. மேற்றா னிருந்த வுயர்சினைக் கொன்றானிற்
றேற்றா வொழுக்கம் படுவனகொல்—மாற்றா
ருறுமுரண் சாய்த்தா னுயர்குடத்தை யாட்டிச்
சிறுமருங்குல் செற்ற முலை.

என்னும் பாட்டுக்கள் முதலும் சினையும் பிறழ்ந்தன வாயினும் பிறழ் வல்ல வென்று இத்துணையன பொருஉக. இநநங்கைகண் நல்லவோ கயல் நல்லவோ எனவும், புலிபோலப் பாய்ந்தா னெனவும், மழை வண்கை யெனவும், துடிபோலும் இடை எனவும், வேய் போலுந் தோள் எனவும், பொன்போலும் மேனி, முத்துப்போலும் பல் எனவும் வந்தனவால் எனின், அவை பிறழ் வல்லவாக, "வினை பயன் மெய்யுரு வென்ற நான்கே வகைபெற வந்த வுவமத் தோற்றம்" (பொருள். உவம. 1.) என்பதனான் உணர்க. அப்பொருளாகும் என்றதனால் எண்ணுமிடத்து முத்தும் பவளமும் மணியும் பொன்னும் என் றெண்ணுக; முத்தும் கருவிளம்பரலும் மணியும் காணங்கோழியும் பொன்னும் என் றெண்ணற்க.

1, 2 ,3 இப்பாக்கள் பிறர் உரைகளிற் காணப்படாதவை

தகுதியும் வழக்கும்

**17. தகுதியும் வழக்கும் தழீஇயின வொழுகும்
பகுதிக் கிளவி வரைநிலை யிலவே**

ஆ. மொ.

இல.

The words of propriety in usage are not forbidden even if they are against the rules of grammar.

கரு:

Certain expressions, even if they are against the rules are not prohibited if sanctioned by usage of propriety.

பி. இ. நூ.

நேமி. சொ. 10.

வழக்கும் தகுதியுமாய் வந்தொழுகும் சொற்கள்
இழுக்கல்ல முன்னை யியல்பு

நன். 276.

இலக்கணம் உடையது இலக்கணப் போலி
மரூஉ என்றாகும் மூவகை யியல்பும்
இடக்கர் அடக்கல் மங்கலம் குழூஉக் குறி
எனுமுத் தகுதியோ டாறாம் வழக்கியல்.

இல. வி. 168. ஷை ஷை

முத்து. **பெ.**

14. இயல்பும் தகுதியும் எனவழக் கிருமைய

15. அவற்றுள்
இயல்பு மரூஉ இலக்கண முடையன இலக்
கணப்போலி என்மனார் கற்றுணர்ந் தோரே.

16. தகுதி குழூஉக்குறி மங்கலம் இடக்கர்
அடக்கல் என்மனார் அறிந்திசி னோரே.

,, ஓ. 54. தகுதியும் வழக்கையும் தக்கோர் வரையார்.

இளம்.

இச்சூத்திரம் என்னுதலிற்றோ வெனின், இதுவும் வழீஇ யமையுமாறு உணர்த்துதல் நுதலிற்று.

உரை : தகுதி பற்றியும் வழக்குப் பற்றியும் பெருந்தி நடக்கும் இலக்கணத்திற் பக்கச் சொல் கடியப்படா, எ—று.

தகுதி என்பது மூன்று வகைப்படும். மங்கல மரபினாற் கூறுதலும், இடக்கரடக்கிக் கூறுதலும், குழுவின் வந்த குறிநிலை வழக்கும் என.

செத்தாரைத் துஞ்சினார் என்றலும், சுடுகாட்டை நன்காடு என்றலும் மங்கல மரபினாற் கூறுதல்.

இடக்கரடக்கிக் கூறுதல் வருமாறு : கண் கழீஇ வருதும், கண்குறியராயிருந்தார், பொறையுயிர்த்தார் எனவும் வரும்.

இனி, குழுவின் வந்த குறிநிலை வழக்கு : பொற் கொல்லர் பொன்னைப்பறி என்றும், வண்ணக்கர் காணத்தை நீலம் என்றும் வரும்.

வழக்காறு இருவகைப்படும், இலக்கண வழக்கும், இலக்கணத் தோடு பொருந்தின மரூஉ வழக்கும் என.

இல் முன் என்பதனை முன்றில் என்று தலைதடுமாறச் சொல்லுதல் இலக்கணத்தொடு பொருந்திய மரூஉ வழக்கு

இனி, சோழனாடு என்பதனைச் சோணாடு என்பது மரூஉ வழக்கு.

வழக்காறு இத்துணை யென்பதில்லை; சிதைந்தும் சிதையாதும் பொருந்தி நடப்பன வெல்லாம் அவை யெனப்படும் என்றலும் ஒன்று.

தகுதி—இப்பொருளை இச் சொலலால் கூறுவது தகுதி யன்று என்று அதனைவிலக்கிப்பிறிதொரு சொல்லால் கூறுவது. இறந்தாரைச் செத்தார் என்னாமல் தூங்கினார் என்பது.

வழக்கு—வழிவழியாக வழங்கப் பட்டு வருவது. காரணம் கருதவேண்டாதது : உழவரை வெண்களமர் என்றும் வீரரைக் கருங்களமர் என்றும் வழங்குவது.

சேனா.

இ—ள். தகுதி பற்றியும் வழக்குப் பற்றியும் நடக்கும் இலக்கணத்திற் பக்கச் சொல் கடியப்படா, எ-று.

தகுதியென்பது அப்பொருட்குரிய சொல்லாற் சொல்லுதல் நீர்மையன்று என்று அது களைந்து தக்கதோர் வாய்பட்டால் கூறுதல். அது, செத்தாரைத் துஞ்சினார் என்றலும், சுடுகாட்டை நன்காடு என்றலும், ஓலையைத் திருமுகம் என்றலும், கெட்டதனைப் பெருகிற்று என்றலும் என இத்தொடக்கத்தன.

வழக்கு என்பது, காரணம் இன்றி வழங்கற்பாடேபற்றி வருவது. பண்பு கொள் பெயராயினும் பண்பு குறியாது சாதிப் பெயராய் [1]வெள்யாடு வெண்களமர் கருங்களமர் என வருவனவும், குடத்துள்ளும் பிற கலத்துள்ளும் இருந்த நீரைச் சிறிது என்னாது சில என்றலும், அடுப்பின் கீழ்ப்புடையை மீயடுப்பு என்றலும், பிறவும் வழக்காறாம்.

எப்பொருளை எச்சொல்லாற் குறித்தோமோ அப் பொருளை அச்சொல்லாலேயே குறித்தல் இயல்பு. அது வன்றி அப்பொருளைப் பிறிதொரு சொல்லால் உணர்த்தின் அது பக்கச் சொல். இல்லத்தின் முன் இடம் என்பது இயல்பு அவ்விடத்தை முன் இல்லம் என்பது (முன்றில்) இயல்பின் பக்கச் சொல். இயல்பு இலக்கணம் அமைந்தது. இலக்கணம் இல்லையென்றாலும் இலக்கணத்திற் சார்த்திக் கொள்ளப் படுவது பக்கச்சொல்.

இலக்கணத்திற் பக்கச்சொல்—இலக்கணத்தில் சார்த்திக் கொள்ளப்படும் சொல் இயல்பு வழக்குக்கு இயல்புச் சொல், பக்கச் சொல் என இரண்டும் உண்டு தகுதிக்கு பக்கச் சொல் மட்டும் உண்டு.

1. வெள்யாடு = வெள்ளாடு. இது வெண்மை காரணம் பற்றி வந்தது அன்று. வழிவழியாக ஒருவகை யாட்டிற்கு வழங்கப்பட்டு வருவது வெண்களமர்—உழவர், கருங்களமர்—வீரர். சிறிது என்பதன் பொருளும் சில என்பதன் பொருளும் வேறு வேறு; எனினும் சிறிது நீரைச் சில நீர் என்பது வழங்கப்பட்டு வருகிறது.

[2]பொற்கொல்லர் பொன்னைப்பறி என்றலும், வண்ணக்கர் காணத்தை நீலம் என்றலும் முதலாகிய குழுவின் வந்த குறிநிலை வழக்கும், கண் கழீஇ வருதும் கால்மேல் நீர் பெய்து வருதும் என்னும் தொடக்கத்து இடக்கரடக்கும் தகுதி என்றும், மரூஉ முடிபை வழக்காறு என்றும் உரையாசிரியர் அமைத்தாரால் எனின் ;—குழுவின் வந்த குறிநிலை வழக்குச் சான்றோர் வழக்கின்கண்ணும் அவர் செய்யுட் கண்ணும் வாராமையின் அமைக்கப்படா வாகலானும், இடக்கரடக்கு 'அவையல் கிளவி' (சொல். 442) எனவும், 'மறைக்குங்காலை' (சொல். 443) எனவும் முன்னர் அமைக்கப் படுதலானும், மரூஉ முடிபு எழுத்ததிகாரத்துக் கூறப்பட்டமையானும் அவர்க்கது கருத்தன் றென்பது.

[3]கருமை முதலாயின ஒரு நிகரன அன்மையின் காக்கையொடு

---

2. குழுவின் வந்த குறிநிலை வழக்கு—குழூஉக்குறி. இச்சூத்திரத்துக் கூறப்படும் தகுதி, வழக்கு என்பன வேறெங்கும் சொல்லப்படாதன. குழூஉக்குறி என்பது ஒரு கூட்டத்தாரிடையே வழங்கப்படுவது. உலக வழக்கில் யாவரிடமும் வழங்கப்படாதது : செய்யுளிலும் வராதது. அதனால் அவ்வழக்கைத் தகுதி வழக்கு என்று வழுவமைக்கக் கூடாது இடக்கரடக்கல் சொல்லதிகாரத்து 'அவையல் கிளவி', 'மறைக்குங்காலை' என்னும் சூத்திரங்களிற் சொல்லப்பட்டன. அதனால் அவற்றை இங்குத் தகுதியில் கூறவேண்டா. மரூஉ முடிபு எழுத்ததிகாரத்தில் கூறப்பட்டது. அதனால் அதுவும் இங்குக் கொள்ள வேண்டுவதில்லை.

3. இப்பகுதி இளம்பூரணத்திற் காணப்படாதது. உரையாசிரியர் இளம்பூரணர் அல்லர் என்பதற்கு இதுவும் ஒரு சான்று. இவ்வுரையாசிரியர் கூற்றைப் பின்வருமாறு அமைத்துக் கொள்ள வேண்டும்.

"காக்கையிற் கரிது களம்பழம் என்றால், களம்பழம் கரிது என்றும் காக்கை வெண்மை நிறம் என்றும் பொருள்படும் ஆதலால் வழு; உறையூருக்கு மேற்குக் கருவூர் என்றும் வஞ்சிக்குக் கிழக்குக் கருவூர் என்றும் கூறினால் கருவூர் ஒன்றே மேற்கென்றும் கிழக்கென்றும் கூறப்படுதல் வழு; சிறுவெள்வாய் என்பதில் சினைக்கு இரண்டடைமொழி கொடுத்தது வழு; ஆயினும் இவை

சார்த்திக் களம்பழத்தை விதந்த துணையல்லது காக்கைக்கு வெண்மை நேராமையிற் 'காக்கையிற் கரிது களம்பழம்' என்புழிக் கரிது வெளிதாயிற்றன்று. ஆதலால் வழுவன்று. கிழக்கு மேற்கு என்பன வரையறையின்றி ஒன்றனோடு சார்த்திப் பெறப்படுவன வாதலின், ஒன்றற்குக் கீழ்ப்பாலதனைப் பிறிதொன்றற்கு மேற்பால தென்றலும் வழுவன்று. சிறு வெள்வாய் என்பது இடுகுறி. அதனால் இவை வழக்காறெனவமைக்கப்படா வாயினும் உரையாசிரியர் பிறர் மதம் உணர்த்திய கூறினார் என்பது

தத்தமக்குரிய வாய்பாட்டானன்றிப் பிறவாய்பாட்டாற் கூறுதல் வழுவாயினும் அமைக என மரபு வழுவமைத்தவாறு.

தெய்.

மேற் சொல்லப்பட்ட உறழ்பொருட்கண் வரும் வழுவமைத் தல் நுதலிற்று.

*இ—ள் : சினைமுதலாகிய பொருள்களை அவ்வப்

உலக வழக்காக இருத்தலால் வழக்காறு என்று அமைத்துக் கொள்ளுதல் வேண்டும்''—பூவராகம்பிள்ளை. இதன் மறுப்புச் சுருக்கம்: காக்கையைக் காட்டிலும் களம்பழம் கரிது. காக்கை அதனால் வெள்ளையாகி விடாது. கருவூரே மேற்கும் கிழக்குமாவதில்லை. உறையூரை நோக்க மேற்கு; வஞ்சியை நோக்கக் கிழக்கு; அவ்வளவே சிறுவெள்வாய் என்பது காரணப் பெயரில்லை. ஒரு வாயை யுணர்த்தும் இடுகுறிப்பெயர். சிறிய வெண்மையான வாய் எனப் பொருள் கொள்ள லாகாது. கொண்டால்தான் இரண்டு அடைமொழி யாகும். எனவே இவையெல்லாம் வழுவில்லை. இவற்றை வழக்காறு என உரையாசிரியர் கூறியது பிறர் மதம் கூறவேண்டி. சிறுவெள்வாய் என்பது மயிரினைக் குறிப்பதாகக் கல்லாடர் கூறுவர்.

* இவ்வுரை மற்றையோர் உரைக்கு முற்றிலும் மாறு பட்டது. 'பகுதிக்கிளவி' என்பதற்குப் பிறரெல் லாம் 'இலக்கணத்திற் பக்கச் சொல்' எனப் பொருள் கூற, இவர் 'ஒருகூற்றுச்சொல்' என்றார்.

பொருளோடு உறழ்தலேயன்றித் தகுதியையும் வழக்கினையும் தழுவினவாய் நடக்கும் ஒரு கூற்றுச் சொல் விலக்கும் நிலைமையில, எ—று.

சினைமுதற்கிளவியும், உறழ்பொருளும் அதிகாரத்தான் வந்தன.

தகுதியாவது இதற்கிது தகுமோ வெனப் பண்பினானாதல் தொழிலினானாதல் உறழ நிற்பது. வழக்காவது ஒப்புமையின்றி உலகத்தார் பயில வழங்கப்படுவது.

அவற்றுள் தகுதி பற்றி வந்த வினா :—இந்நங்கை கண் நல்லவோ இக்கயல் நல்லவோ என வருவது; இது பண்பு இம்முகிலோ இவன் கையோ கொடுக்க வல்லது; இது தொழில்.

செப்புவருமாறு :—கயலிற் கண் நல்ல என்றானும், ஒக்கும் என்றானும் உரைப்பது.

இனி வழக்குப் பற்றி வினாவருமாறு :—கரிதோ வெளிதோ, இருப்பேனோ போவேனோ, ஊரோ காடோ, பகலோ இரவோ எனவும், தேவராய் வாழ்தல் நன்றோ நரகத்துள் உறைதல் நன்றோ எனவும், பிறவும் இவ்வாறு ஒன்றினொன்று பொருத்தமின்றி உலக வழக்கின்கண் வருவன கொள்க.

செப்பு வருமாறு :—கரிதன்று வெளிதென்றானும், வெளிதன்று கரிதென்றானும் இவ்வாறே பிறவாற்றானும் உரைப்பன.

இவை மேற்சொல்லப்பட்ட இலக்கணத்தின் வழுவுதலின் அமைதியாயிற்று.

நச்.

இது மரபு வழு அமையுமாறு கூறுகின்றது.

இ—ள் : தகுதியும் வழக்கும் தழீஇயின ஒழுகும்—ஒரு பொருட்கு உரிய சொல்லால் பட்டாங்கே சொல்லுதல் நீர்மை

"இவ்வாறு கூறியதற்குக்காரணம் மங்கல மரபு முதலியற்றைக் குறிப் பெச்சத்துள் அவர் அடக்கியதேயாகும்"—சுப்பிரமணிய சாஸ்திரியார்.

இப்பொருளைச் சேனாவரையர் மறாததால் அவர் இவர்க்கு முற்பட்டவர் என்பதையறியலாம்.

யன்று என்று அது களைந்து அதற்குத் தக்கதோர் வாய்பாட்டாற் கூறுதலையும் ஒரு காரணம் இன்றி வழங்கற் பாடே பற்றி வருவதனையும் பற்றி நடக்கும். பகுதிக் கிளவி— இலக்கணத்திற் பக்கச் சொல், வரை நிலை இல—கடியப்படா, எ—று.

செத்தாரைத் துஞ்சினார் என்றலும், ஓலையைத் திருமுகம் என்றலும், சுடுகாட்டை நன்காடு என்றலும், கெட்டதனைப் பெருகிற்று என்றலும் போல்வன தகுதி.

பண்பு குறியாது சாதிப் பெயராய் வெள்யாடு வெண்களமர் கருங்களமர் என வருவனவும் குடத்துள்ளும் பிற கலத்துள்ளும் இருந்த நீரைச் சிறிது என்னாது சில என்றலும், அடுப்பின் கீழ்ப்புடையை மீயடுப்பு என்றலும் போல்வன வழக்காம்.

கல்.

என்—எனின், மரபு வழீஇயமையுமா றுணர்த்துதல் நுதலிற்று.

பொருள் : தகுதியினையும் வழக்கினையும் பொருந்தி நடக்கும் இலக்கணத்திற் பக்கச்சொல் நீக்கு நிலைமையுடைய வல்ல, எ—று.

தகுதியென்பது மங்கல மரபினாற் கூறுதலும், இடக்கரடக் கிக் கூறுதலும், குழுவின்வந்த குறுநில வழக்கும் என மூன்று [1]வகைப்படும்.

உ-ம் : செத்தாரைத் துஞ்சினார் என்றலும், ஓலையைத் திருமுகம் என்றலும் மங்கலமரபு. கண்கழீஇ வருதும், கால்மேல் நீர் பெய்து வருதும், கை குறியராய் இருந்தார், பொறையுயிர்த் தார், புலி நின்றிறந்த நீரல் ஈரத்து, கருமுகமந்தி செம்பின் ஏற்றை என்பன இடக்கரடக்கிக் கூறல். பொற் கொல்லர் பொன்னைப் பறியென்றலும்; வண்ணக்கர் காணத்தை நீலம் என்றலும், யானைப்பாகர் ஆடையைக் காரை என்றலும் குழுவின் வந்த குறுநில வழக்கு.

வழக்காறு இலக்கணத்தோடு பொருந்திய மரூஉ வழக்கும், மரூஉ வழங்கும் என இருவகைப்படும்.

உ-ம் : முன்றில், மீகண் என்பன இலக்கணத்தொடு பொருந்திய மரூஉ வழக்கு. அருமருந்தன்னானை அருமருந்தன்

சு. வே : 1. கூறுபடும்.

என்றலும், நட்டு வியந்தானை நட்டியந்தான் என்றலும், பொதுவில் என்பதனைப் பொதியில் என்றலும் மலையமான் நாட்டை மலாடு என்றலும், சோழ நாட்டைச் சோணாடு என்றலும் என இவை மரூஉ வழக்கு.

*இவ்வாறு சொற்சிதையச் சொல்லுவனவன்றிப் படு பொருள் சிதையச் சொல்லுவனவும் மரூஉ வழக்கு என்று கொள்ளப்படும். கரிய மயிரினைச் சிறு வெள்வாய் என்றும், களமருட் கரியாரை வெண்களமர் என்றும், புலைக் களமருட் செய்யாரைக் கருங்களமர் என்றும் நீரினையும் பாலினையும் ஒரோ வழிச் சில பலவென்றும், அடுப்பின் கீழ்ப்புடையை மீயடுப்பு என்றும் கூறுவன.

இலக்கண வாய்பாடின்றி மருவிய வாய்பாடும் தாமே இலக்கணமாகக் கூறுவன இலக்கணத்தோடு பொருந்திய மரூஉ எனப்படும். இலக்கண வாய்பாடும் உள்வழிச் சொற்சிதையவும் வருவன மரூஉ வழக்கு எனப்படும்.

தகுதி என்பது பட்டாங்குச் சொல்லுதல் நீர்மையின்மை நோக்கி அவ்வாய்பாடு களைந்து இவ்வாறு சொல்லுதும் என்று உடம்பட்டுச் சொல்லி வருவது.

வழக்காறென்பது வழங்கற்பாடே மேற்கொண்டு ஒரு காரணம் நோக்காது வாய்பாடு பகுத்துப் பயிலச் சொல்லி வருவது.

இச்சூத்திரத்தாற் சொல்லியது பரந்துபட்ட மரபு வழூஉக் களுள் சிலவற்றைப் பொருட் காரணம் பற்றியும், நன்மக்கள் தாம் பயில வழங்குதலாகிய காரண வழக்குப் பற்றியும் வழு வமைத்தவாறு என வுணர்க.

இவற்றுள் தகுதியென்றது பொருள்பற்றியமைந்தது. வழக்காறு வழங்குதல் பற்றியமைந்தது. யானை, யாறு, யாடு என்னும் இன்னோரன்னவற்றை ஆனை, ஆறு, ஆடு என்னும் இன்னோரன்னவாகக் கூறுதலும் வழக்காறெனவ இதனுட் கொள்ளப்படும். பிறவு மன்ன. அவை சான்றோர் சொன்ன செய்யுளுட் பெரும்பான்மை காணப்படாமையின் இதனுட் கொள்ளாது 'கடிசொல் இல்லை காலத்துப்படினே' (எச்ச. 50) யென்புழிக் கொள்ளப்படும்.

---

*இதுமுதலாகவுள்ளன கல்லாடனாரின் விரிவுகள்.

ஒரு.

என்பது தகுதி பற்றியும் வழக்குப் பற்றியும் பொருந்தி நடக்கும் இலக்கணப் பகுதிச் சொல் கடியப்படா.

தகுதி இரண்டு வகைப்படும். மங்கல மரபினாற் கூறுதலும், இடக்கர் அடக்கிக் கூறுதலும் என.

செத்தாரைத் துஞ்சினார் என்றலும், சுடுகாட்டை நன்காடு என்றலும் ஓலையைத் திருமுகம் என்றலும், விளக்குப் பெருகிற்று என்றலும் இத்தொடக்கத்தன மங்கல மரபு.

கண்கழீஇ வருதும், கால்மேல் நீர் பெய்து வருதும், அந்தி தொழுது வருதும், கைக்குறியராய் இருந்தார், பொறையுயிர்த் தார் என்னும் தொடக்கத்தன இடக்கரடக்கு.

இனி வழக்காவது நான்கு வகைப்படும். அவை, இலக்கண வழக்கு, இலக்கணத்தோடு பொருந்திய மரூஉ வழக்கு, மரூஉ வழக்கு, குழுவின்வந்த குறுநில வழக்கு என

அவற்றுள் நிலம், நீர், தீ வளி, ஆகாயம், சோறு, கூழ் பால், பாளிதம், மக்கள், மரம், தெங்கு, கமுகு இத்தொடக்கத்தன இலக்கண வழக்கு.

இல்முன் என்பதனை முன்றில் என்றும், கண்மீ என்பதனை மீகண் என்றும், யாவர் என்பதனை யார் என்றும் வருதல் இலக் கணத்தோடு பொருந்திய மரூஉ வழக்கு.

அருமருந்தன்னான் என்பதனை அருமருந்தான் என்றும், பொதுவில் என்பதனைப் பொதியில் என்றும் மலையமானாடு என்பதனை மலாடு என்றும் சோழநாடு என்பதனைச் சோணாடு என்றும் சொல்லுதல் மரூஉ வழக்கு

பொற்கொல்லர் பொன்னைப் பறி என்றலும், வண்ணக்கர் காணத்தை 'நீலம் என்றலும், யானைப்பாகர் ஆடையைக்கூறை என்றலும், இழிசினர் சோற்றைச் சொன்றி என்றலும் குழுவின் வந்த குறுநில வழக்கு.

இனி ஒருசாரார் குழுவின் வந்த குறுநில வழக்கும், இடக்க ரடக்கலும், மங்கல மரபினாற் கூறுதலும் என்ற இம்மூன்றையும்

தக்கவாறு சொல்லுதலான் தகுதி என்றாக்கி, ஒழிந்தவற்றை யெல்லாம வழக்காறு என்ப.

இனி அவர் வழககாறு சொல்லும்படி :—கரிது வெளிது என்கையும், கிழக்கு மேற்கு என்கையும், சிறிது பெரிது என்கையும், கருமை செம்மையாகிய பண்பினாலன்றி வெள்ளாளரை வெண்களமர் எனறும, புலையரைக் கருங்களமர் என்றும், சாதி பற்றி வெள்ளாடு என்றும் சொலலுதல் வழுவனறு; செவ்வழக்கு என்ப; 'தழீஇயின ஒழுகும்' என்றமையால என்ப.

ஆதி.

*தகுதி வழக்கு இயல்பு வழக்கு தழுவி வரும் சொல் முறையில் அடைமொழி சேர்வதும் கடிவதற்கில்லை.

தகுதி—இடக்கரடக்கல், மங்கலம், குழூஉக்குறி.

வழக்கு—இலக்கணமுடையது, போலி, மரூஉ.

பகுதிக்கிளவி—பெயரின் ஒரு பகுதியாக ஒட்டி நிற்கிற அடைமொழிகள். இருவகை வழக்கிலும் சொற்கள் அடைமொழி பெற்று நிற்கலாம் என்பது கருத்து.

செங்கருடன்—செம்மை—பகுதிக்கிளவி
மைப்புட்டில்—மை— ,,
வெட்டரிவாள்—வெட்டு— ,,
பச்சைக்கிளி—பச்சை ,,

தகுதி வழக்கும் இயல்பு வழக்கும் பற்றிய செய்திகள் யாண்டும் கூறாமையின் அவைபற்றியே இங்குக் கூறப்பட்டுள்ளது எனக்கொள்வதே பொருந்தும். தெய்வச்சிலையார் தவிர மற்றையோர் கொண்ட உரையே பொருந்தும். செங்கருடன் என்னும் வழக்கு இல்லை. செய்யுளில் அடைசேர்த்து வழங்கப்படலாம். மைப்புட்டில் என்பது காரணப்பெயர். மையில்லை யென்றாலும் மைநிரப்புதற்குரியது ஆதலின் வழக்கில் வருகிறது. வெட்டரிவாள், பச்சைக்கிளி என்பன வழக்கில் அடைமொழிக்காரணம் கருதாது வழங்கி வருவன. எனவே இவையாவும் வழக்காறு என்பதில் அடங்கும். எனவே இச்சூத்திரம் அடைமொழிகளைப்பற்றிவந்ததன்று. சிவ.

கருடன் எல்லாம் செம்மையாயினும், அரிவாள் எல்லாம் வெட்டுவ ஆயினும், கிளியெல்லாம் பச்சையாய் இருப்பினும் செம்மை வெட்டு பச்சை என்னும் சொற்கள் யாது குறிப்புமின்றிப் பெயர்களோடு ஒட்டி நின்றன. மையில்லாதிருப்பினும் அது மைப்புட்டில் என அடைமொழியுடன் நிற்கிறது. சிறு குரும்பல் கருங்குழலார்—இவற்றில் சிறு, கரு பகுதிக்கிளவியாம். குரும்பல் இயல்பே சிறியது. கூந்தல் இயல்பே கரியது; ஆயினும் அவற்றை அடைமொழியாக்கிச் சொல்லுதல் மரபாயிற்று.

சுப்பிர.

சேனாவரையர் மங்கலமரபினாற் கூறுதலை மட்டும் ஏற்றுக் கொண்டு இடக்கரடக்கிக் கூறுதலும் குழுவின் வந்த குறிநிலை வழக்கும் உரையாசிரியர் சொல்வது பொருத்தமில்லை யெனக் கூறி, அதற்குக் காரணம் "குழுவின் வந்த குறிநிலை...... அவர்க்கது கருத்தன் றென்பது" என்று கூறுகின்றார், குழுவின் வந்த குறிநிலை வழக்குச் சான்றோர் செய்யுட்கண் காணப்படாவிடினும், அவர்தம் வழக்குக்கண் வரா என்று கொள்வதற்கு இடமின்மையான் சேனாவரையர் சொல்லுவது பொருந்துமா?—ஓ. ஏ. உரைகாரர் அதனை வழக்கின்கண் கொண்டார். இடக்கரடக்கிக் கூறுதலைப் பற்றி "அவையல் கிளவி" என்னும் சூத்திரத்தில் கூறினாராயினும் இச்சூத்திரத்திற் கூறியுள்ள பொருளுக்கும் அச்சூத்திரத்திற் கூறியுள்ள பொருளுக்கும் சிறிது வேறுபாடுளது. "அவையல் கிளவி" என்னும் சூத்திரத்தில் அவையிற் கூறத்தகாத சொற்களைக் கூறக்கூடாது என்பது சிறப்புப் பகுதி; இச்சூத்திரத்திலோ அச்சொற்களுக்காகக் கூறுந் தகுதிச் சொற்கள் தள்ளத்தக்கன வல்ல என்பது சிறப்புப்பகுதி. அவையல் கிளவி என்னுமிடத்து மறைத்தலைச் சிறப்புப் பகுதியாகக் கொள்ளாக்கால் மறைத்தல், வேறொன்று கிளத்தல் என இரண்டு விதேயங்கள் கொள்ள வேண்டிவரும் அது வாக்கிய பேதம் என்னும் குற்றத்திற்கு இடனாம். இனி இச்சூத்திரத்தானே அவையல் கிளவியைக் கிளக்க வேண்டும் முறை பெறப்படுதலான் அவையல் கிளவி என்ற சூத்திரம் வேண்டா பிற எனின்,—செத்தார் என்னும் அமங்கலச் சொல்லும் இலக்கணமாகக் கொண்டு வழங்கப்படுதல் போல் அவையல் கிளவி தகுதிச் சொல்லான் வழங்கப்படுவதன்றி மறைக்கட்படாமலே வழங்குவதும் இலக்கணமாய் விடும் ஆதலால் அதனை விலக்குதற்கு அவையல் கிளவியென்ற சூத்திரமும் வேண்டும் என்க.

....

சேனாவரையர் இலக்கண வழ்க்கை மட்டும் உடன்பட்டு மரூஉ முடிபு எழுத்ததிகாரத்துட் கூறப்பட்டமையான் இச் சூத்திரத்துக்கு விஷயமாக உரையாசிரியர் உரைத்தது பொருத்த மில்லை யெனக் கருதினர். மரூஉவைப் பற்றி எழுத்ததிகாரத்தில் இரண்டு சூத்திரங்கள் உள. அவையாவன:—

முன்னென் கிளவி முன்னர்த் தோன்றும்
இல்லென் கிளவிமிசை நகரம் ஒற்றல்
தொல்லியல் மருங்கின் மரீஇய மரபே (எழு 355)

என்பதும்,

கிளந்த வல்ல செய்யுளுள் திரிநவும
வழங்கியல் மருங்கின் மருவொடு திரிநவும்
விளம்பிய இயற்கையின் வேறுபடத் தோன்றின்
வழங்கியல் மருங்கின் உணர்ந்தனர் ஒழுக்கல்
நன்மதி நாட்டத் தென்மனார் புலவர் (எழு.483)

என்பதும் ஆம், முற்சூத்திரத்தில் 'முன்' என்னும் சொற்கு முன்னர் 'இல்' என்னும் சொல்வரின் இல்லுக்கு மேல் நகரஒற்றுத் தோன்றும் என்பதே (முன் + இல் = முன்றில்) உணர்த்தப் பட்டது. இல்லும் முன்னும் தொகையாகுங்கால் தலை தடுமாறி 'முன்றில்' என ஆகும் என்று அச்சூத்திரத்திற் செல்லப்படவில்லை. "கிளந்த வல்ல செய்யுளுள் திரிநவும்" என்னும் சூத்திரத்தில், எழுததிகாரத்தில் முக்கியமாய்க் கூறப் பட்ட புணர்ச்சியிற் சொல்லப்படாதவற்றை ஆராய்ந்து கொள்ளல் வேண்டும் என்பதே கூறியுள்ளது. இல்லும் முன்னும் தொகை மொழியாகுங்கால் உண்டாம் மாறுதல் எழுத்ததிகாரத் துக்கு விஷயம் அன்று; சொல்லதிகாரத்துக்குத் தான் விஷயம். எச்சவியலில் தொகையைப் பற்றிச்சொல்லுமிடத்தே சொற் கள் தடுமாறி வருவதைப் பற்றிச் சொல்ல வில்லை ஆகையால் உரையாசிரியர் இலக்கணத்தொடு பொருந்தின மரூஉ வழக்கை இச்சூத்திரத்தின்கண் அடக்கியது பொருத்தம் என்றே தோன்றுகின்றது. ஆனால் "இனிச் சோழனாடு என்ப தனைச் சோணாடு என்பது மரூஉ வழக்கு; வழக்காறு இத்துணை யென்பதில்லை; சிதைந்தும் சிதையாதும் பொருந்தி நடப்பன வெல்லாம் அவையெனப்படும் என்றலும் ஒன்று." என்ற சொற் றொடர் இளம்பூரணத்தில் உளது. இது முற்கூறப்பட்ட

'கிளந்த வல்ல செய்யுளுள்திரிநவும்' என்ற சூத்திரத்துக்கு விஷய மாதலால் இங்குச் சொல்லியிருப்பது பொருத்தமில்லை. ஆனால் மாணாக்கன் படிக்கும்போது இலக்கணத்தொடு பொருந்திய மரூஉ வழக்கைத் தவிர வேறு மரூஉ வழக்கு உண்டுகொல் என்று ஐயுற, ஆசிரியன் மேற்சொன்ன வாக்கியத்தைச் சொல்லியிருக்க லாம். அதனையும் ஏட்டில் மாணவன் எழுதப் பின்னர் அதுவும் மூலத்தோடு சேர்ந்திருக்க வேண்டும் என்பது எனது துணிபு.

இனச் சுட்டில்லாப் பண்பு கொள் பெயர் செய்யுட்கே.

***18. இனச்சுட் டில்லாப் பண்புகொள் பெயர்க்கொடை**
வழக்கா றல்ல செய்யு ளாறே.

ஆ. மொ.

இல.

The nouns having adjectives which do not denote the opposite nature are allowed not in spoken dialect but in poetry.

க. சு.

The use of qvalifier-nouns which are not restrictive is allowed in poetry not in the current spech

பி. இ. நூ.

நன் 401

பொருள்முத லாறாம் அடைசேர் மொழியினம்
உள்ளவும் இல்லவும் ஆமிரு வழக்கினும்.

---

* இனம் சுட்டாதும் பெயரடைகள் வரலாம். அவை வழக்கில் வருவதில்லை செய்யுளிலேயே அமைகின்றன. தொல்காப்பியம் பண்பு அடியாக அமையும் பெயரடைகளை மட்டுமே குறிக்கின்றது. நன்னூல், இலக்கண விளக்கம் போன்றவை பொருள் இடம் காலம் சினை குணம் தொழில் இவ்வாறு நிலைகளிலும், பெயரடைகள், இனம் உள்ளவற்றிற்கும், இனம் இல்லா தனவற்றிற்கும் வருவதோடு, செய்யுளிலும் வழக்கிலும் அமையலாம் எனப்பேசுகின்றன—ச.வே. சுப்பிரமணியன், இலக்கணத் தொகை—சொல்.

இல. வி. 312

பொருள்முத லாறாம் அடைசேர் மொழியினம்
உள்ளதற் குரித்தில் லதற்கும் ஒரோவழி.

இளம்.

இச்சூத்திரம் என்னுதலிற்றோவெனின், செய்யுட் காவதோர் முடிவு கூறுதல் நுதலிற்று.

உரை : தமக்கு இனஞ்சுட்டாவாகிப் பண்பு கொண்டு நின்ற பெயர்ச் சொற்களவை வழக்கினது நெறியல்ல செய்யுட்கு நெறி, எ—று.

[1]வரலாறு : "மாக்கடல் நிவந்தெழுதரு செஞ்ஞாயிற்றுக் கவினைமாதோ" (புறம்-4) எனவும், "வெண்கோட்டியானை சேனை படியும்" (குறு-75) எனவும் வரும்.

[2] வழக்காறல்ல என்ற விதப்பினான், 'வடவேங்கடந் தென்குமரி' என்பன கொள்க. இதுவும் ஒருசார் ஆசிரியன் உரை.

[3] இனி ஒருவன் சொல்லுவது : வழக்காறல்ல' என்பதனை, 'வழக்காற்றின் அல்ல' என ஐந்தாம் உருபு விரித்து, 'அல்ல' என்பதனைப் பெயர்ப்படுத்துக் கூறும்; கூறவே வழக்கிற்கும் இனமில் பண்பு கொள் பெயர்கள் உள என்பது போநததாம்

---

1. செஞ்ஞாயிறு—கருஞாயிறு இல்லை.

வெண்கோட்டுயானை—கருங்கோட்டுயானை இல்லை

2. இளம்பூரணருக்கு முன்னர் ஒருசார் ஆசிரியர் இச்சூத்திரத்துக்குப் பண்பு அடைகொடாது வடவேங்கடம் தென்குமரி எனத் திசையடை கொடுத்துக் கூறுவனவற்றையும் உதாரணமாகக் காட்டினர் போலும். பண்பு அடையின்மையின் இவ்வுதாரணம் பொருந்தாதது என்பர் சேனாவரையர்.

3. அல்ல—அல்லாதனவான சொற்கள் என வினையாலணையும் பெயர் ஆகும் இது. வழக்காற்றினின்றும் அல்லாதன (நீங்கின)வான சொற்கள் செய்யுளாற்றில் வரும் என்பது 'வழக்காறல்ல செய்யுளாறு' என்பதன் பொருளாம்.

[4] வ-று : பெருங்கொற்றன், பெருங்கூத்தன் என்பன போல்வன. வழக்கிடைப் பண்புப்பெயர் வருங்கால் குணமின்றி விழுமிதாகச் சொல்லுதற்கு வந்து நிற்கும்.

சேனா.

இ—ள்; இனப் பொருளைச் சுட்டுதலின்றிப் பண்படுத்து வழங்கப்படும் பெயர் வழக்கு நெறியல்ல செய்யுள் நெறி எ—று.

உ.ம் : "செஞ்ஞாயிற்று நிலவு வேண்டினும், வெண்திங்களுள் வெயில் வேண்டினும்" (புறம் 38) என வரும்.

பல பொருட்குப் பொதுவாகிய சொல்லன்றே ஒருபொருட் குச் சிறந்த பண்பான் விசேடிக்கப்படுவது; ஞாயிறு திங்கள் என்பன பொதுச் சொல் அன்மையின், செஞ்ஞாயிறு என்றும் வெண்திங்கள் என்றும் விசேடிக்கப்படாவாயினும், செய்யுட்கு அணியாய் நிற்றலின் அமைக்க என்றார்.

*பெருங் கொற்றன் பெருஞ்சாத்தன் என இல்குணம் அடுத்து வழக்கின் கண்ணும் இனஞ் சுட்டாது வருதலின் செய்யுளா றென் றல் நிரம்பாதெனின்:— அவை இனஞ் சுட்டாமையின் வழுவா யின வல்ல; இல்குணம் அடுத்தலின் வழுவாயின இனஞ் சுட்ட லாவது இனத்தைச் சுட்டி அவற்றினின்றும் விசேடிக்கப்படுதல். வெண்மை முதலாயின விசேடித்தலாவது அக்குணம் இல்லா இனப் பொருளின் நீக்கி அக்குணம் உடையதனை வரைந்து சுட்டு வித்தலன்றே? சுட்டப்படுவதன் கண் அக்குணம் இல்லையாயின் வரைந்து சுட்டுவிக்குமாறு என்னை? அதனால் விசேடிக்கற் பாலது விசேடியாது நின்ற தன்றாகலின் ஈண்டைக்கு எய்தா; 'வழக்கின் ஆகிய வுயர் சொற்கிளவி' (சொல். 27) என்புழி ஒன்றென முடித்தல் என்பதனால் அமைக்கப்படும்.

---

4. பெருங்கொற்றன் என்பதில் உள்ள 'பெரும்' என்பது பெருமை என்னும் பொருளில் இன்றிச் சிறப்பு என்னும் பொருளில் வந்தது. இதனைச் சேனாவரையர் மறுப்பர்.

* சிறு கொற்றன் என்பவனில்லாதிருக்கவும் வழக்கில் பெருங் கொற்றன் என்ற வழக்கு உண்டு அதனால் இனச்சுட்டில்லாப் பண்பு கொள்பெயர் வழக்குச் செய் யுட் கேயுரியது என்றது ஏன் என்பது வினா. விடை:— இச்சூத்திரம் வழுவமைப்பது. பெருங் கொற்றன் என்று உலகில் வழங்கி வருவது பெருமைக் குணம் கருதாமல்

குறுஞ்சூலி, குறுந்தடி என்னுந் தொடக்கத்தன, சூலி, தடி எனப் பிரிந்து நில்லாமையிற் பண்பு கொள் பெயர் எனப்படா. பண்படாது வடவேங்கடந் தென்குமரி, முட்டாழை கோட்சுறா எனத் திசையும் உறுப்பும் தொழிலும் முதலாய அடையடுத்து இனஞ்சுட்டாது வருவன ஒன்றென முடித்தல் என்பதனால் செய்யுளாறென அமைத்துக் கொள்ளப்படும்

ஒன்றனதாற்றலான் ஒன்று பெறப்படுதலின், வழக்காறல்ல என்றானும் செய்யுளாறென்றானும் கூற அமையுமெனின் உய்த்துணர்வது சொல்லில் வழி என மறுக்க.

பண்புகொள் பெயர் இனங்குறித்து வருதல் மரபு; அம்மரபு வழக்கின் கண் வழுவற்க என்றும், செய்யுட்கண் வழுவமைக்க என்றும் காத்தவாறாயிற்று.

தெய்.

உலகத்துப் பொருளெல்லாம் இனச்சுட்டுடையனவும், இனச் சுட்டில்லனவும் என இருவகைப்படும். அவற்றுள் இனச்சுட்டு

வழங்கப்படுதலின் அது வழுவன்று; உலகில் உயர்த்திச் சொல்லும் நோக்குடன் வருவது; ஆதலின் வழுவமைப்புக் கூறும் இச்சூத்திரத்தில் காட்டப்படுவது தவறு. 'ஒருவரைக் கூறும் பன்மைக்கிளவியும் என்னும் சூத்திரத்தில் 'வழக்கினாகிய உயர் சொற்கிளவி' என்பதில் ஒன்றென முடித்தல் என்னும் உத்தியால் அமைக்கப்படும். செந்தாமரை என்பதில் செம்மை என்பது தாமரைகளுள் செம்மையுடையதை வரைந்து (தன்னிடம் சேர்த்து) சுட்டுகின்றது. செஞ்ஞாயிறு என்பதில் செம்மை என்பது ஞாயிறு ஒன்றேயாதலின் பலவற்றுள் ஒன்றைத் தன்னிடம் சேர்த்துச் சுட்டுதல் இல்லை. அதனால் இது இனம் சுட்டுவதில்லை. எனவே இது வழு செய்யுளில் வருதலின் அமைக்கவேண்டும். பெருங்கொற்றன் என்பதில் பெரும் என்பது குணத்தையே குறிக்கவில்லை; குணத்தைக் குறிப்பதாக இருந்தால் வழு என்னலாம். ஆனாலும் குணம் குறியாது அடையாக வந்துவிட்டது. இது இவ்வகையில் வழுவாயினும் உயர்த்தற் பொருட்டு வந்தமையின் 'வழக்கினாகிய உயர் சொற்கிளவி' என்பதில் அமைக்கவேண்டும்,

டையன உறழ்ச்சி வகையுள் அடங்குதலின், இனச்சுட்டில்லாத பொருள்மேற் செப்பு வழீஇ யமையுமா றுணர்த்துதல் நுதலிற்று.

இ—ள் : ஒரு பொருட்கு இனச்சுட்டில்லாத பண்பு கொள் பெயரைக் கொடுத்தல் வழக்கு நெறியல்ல; செய்யுள் நெறி, எ—று.

[1]பொருட்கு' என்னும் வேற்றுமை யேற்ற பெயர் எஞ்சி நின்றது. 'அல்ல' என்பது வழக்குப பன்மை குறித்து வந்தது. செய்யுணெறியென அமையும, வழக்குநெறி யல்ல வெனல் வேண்டாவெனின் நன்கு மறுத்தற்குக் கூறினார் என்க.

இனச்சுட்டில்லாத பொருளாவன :—ஞாயிறு, திங்கள், தீ என்பன. அவை 'மாக்கடல் நிவந்தெழு செஞ்ஞாயிற்றுக் கவினை '(புறம். 4) எனவும் ''நெடு வெண்டிங்களும் ஊர் கொண்டன்றே'' (அகம். 2) எனவும், 'வெவ்வெரி கொளீஇ' எனவும் வரும். இவை வழக்கின்கண்வரின் கருஞாயிறும், கருந்திங்களும், தண்ணெரியும் உள போலத் தோன்றும். ஆயினும் செய்யுட்கண் அமையும் என்றவாறு.

[2]செம்போத்து என வழக்கின்கண் இனஞ்சுட்டாது வந்ததால் எனின் அப்பொருட்கு அது பெயர் என்க. பெருவண்ணான், பெருங்கொல்லன் என வழக்கின் கண் இனஞ்சுட்டாது வந்ததால் எனின், பண்பாவது தமக்குள்ளதோர் இயல்பு; ஈண்டு அப்பெருமை இயல்பன்மையான் அஃது உயர்த்துச் சொல்லுதற் கண் வந்த தென்க.

---

1. பண்புகொள் பெயர் கொடுத்தல் எதற்கு என்னும் வினாவிற்கு 'ஒரு பொருட்கு' என்பது விடையாதலின் அது எஞ்சி நின்றது.

   வழக்காறு—ஒருமை: அல்ல—பன்மை. ஒருமை பன்மையுடன் வந்தது; வழு. அதற்கு அமைதி : வழக்கு பலவாதலின் அன்று என்பதற்குப் பதிலாக அல்ல என்பது வந்தது.

2. செம்போத்து என்பது ஒரு பறவைப் பெயர். செம்மை நிறங்காரணமாக வந்ததன்று. பெருவண்ணான் பெருங் கொற்றன் முதலியவற்றுக்குச் சேனாவரையர் மறுப்பும் இங்கு நோக்கத்தக்கது.

பண்பு கொள் பெயர் என்று விசேடித்தமையால், ஏனைப் பெயர்கள் இருவகை வழக்கினும் இனம் சுட்டாது வரப்பெறும் எனக் கொள்க.

நச்.

இது செய்யுட்கு மரபு வழுவமைதி கூறுகின்றது.

இ—ள் : இனச்சுட்டு இல்லாப் பண்பு கொள் பெயர்க் கொடை—இனத்தைச் சுட்டி அவற்றினின்றும் விசேடிக்கப் படுதல் இல்லாத பண்பு அடுத்து வழங்கப்படும் பெயரை ஒரு பொருட்குக் கொடுத்தல், வழக்கு ஆறு அல்ல செய்யுள் ஆறு—வழக்கு நெறியல்ல செய்யுள் நெறி, எ—று.

> செஞ்ஞாயிற்று நிலவு வேண்டினும்
> வெண்டிங்களுள் வெயில்வேண்டினும் (புறம். 38)

என இதைக் கருஞாயிறும் கருந்திங்களுமாகிய இனம் இன்மை யின் விசேடிக்கப்படாவாயினும், செய்யுட்கு அணியாய் நிற்றலின் அமைத்தார். எனவே, வழக்கின்கண் பண்புகொள் பெயர் இனம் குறித்து வருதல் மரபு என்பதூஉம் செய்யுட்கண் வழீஇ அமைதல் மரபு என்பதூஉம் கூறியவாறாயிற்று.

பண்பு அடாது 'வடவேங்கடந் தென்குமரி', முட்டாழை, கோட்சுறா எனத்திசையும் உறுப்பும் தொழிலும் முதலிய அடையடுத்து இனஞ்சுட்டாது வருவன ஒன்றென முடித்தலால் செய்யுளாறென அமைக்க

கல்.

என்—எனின், இதுவும் வழக்கிற்கும் செய்யுட்கும் மரபு வழீஇ யமையுமாறு உணர்த்துதல் நுதலிற்று.

பொருள் : தமக்கு இனஞ்சுட்டுதலில்லாத பண்பு கொண்டு நின்ற பெயர்ச்சொற்கள் வழக்கினகத்து நெறியல்லாத செய் யுட்கு நெறியாம், என்றவாறு.

[1] உ—ம் : வழக்காறாவன : பெருங்கொற்றன், பெருங் கூத்தன் என்றாற் போல்வன. இவை சிறியான் ஒருவனை நோக்கி வந்தனவல்ல. பண்பின்றி யுயர்த்திச் சொலலிய வென்பது.

---

1. இச்சூத்திரத்துக்குத் தந்த உதாரணம் அன்று இது, இனிச் செய்யுளாறாவன என்னும் பகுதியே உதாரண மாம்.

இனிச் செய்யுளாறாவன: "மாக்கடல் நிவந்தெழுதரு செஞ்ஞாயிற்றுக் கவினை மாதோ" எனவும், "வெண்கோட்டு யானைச் சேனைப்படியும்" எனவும், "நெடுவெண்டிங்களும் ஊர் கொண்டன்றே" எனவும் வரும் கருஞாயிறும் கருங் கோட்டியானையும் குறுங்கருந்திங்களும் உண்மை கண்டு சொல்லினான் அல்லன் என்பது. வழக்கினுட் பண்புகொள் பெயர் வருங்காற் குணமின்றி விழுமியதாகச் சொல்ல வந்து நிற்கும் செய்யுளுள் வருங்காற் குணந் தன்கண் உடையவாய் வந்து நிற்கும். [2] இடுகுகவுண் மடப்பிடி என்றும், நால்வாய் வேழம் என்றும், மறப்புலி என்றும், மடப்பிணை என்றும், வடவேங்கடந் தென்குமரி என்றும் இன்னிலப் பண்பு கொள் பெயரேயன்றி இன்னிலத் தொழில் கொள் பேரும், இன்னிலப் பெயர் கொள் பேருமாய் வருவன வுளவால் எனின், அவ்வாறு வருவனவற்றையும் ஒன்றின முடித்தல் என்பதனான் இதனகத்துச் செய்யுள் விதியாக அமைக்கப்படும்.

'பண்புப் பெயர்' என்னாது 'பண்பு கொள் பெயர்' என்றார், கரியது கரியன எனப் பண்பினைப் பிரியாது வருவன வொழியப் பண்பினைக் கொண்டு செஞ்ஞாயிறு எனவும், பண்பினைக் கொள்ளாது ஞாயிறு எனவும் வருவனவற்றின் மேற்று இவ்வராய்ச்சியென்றறிக வென்பது.

இவ்வாறு பண்பு கொள் பெயர் என்று கூறவே, குறுஞ்சூலி [1]குறுந்தடி, குறுமுக்கி, செம்போத்து என்பன அப்பண்பினைப் பறறி அச் சூலி [2]தடி முக்கி போத்து என்று வழங்குதலின்மையின் அது வாளாது பெயர் எனப்படும்.

இதனாற் சொல்லியது வழக்கிடத்தும் செய்யுளிடத்தும் பண்பு இடனாகப் பிறப்ப தோர் வழுவமைதியும், பண்பு பற்றிப் பிறக்கும் இனனில் விதப்பும், இனனுடைய விதப்பும் என்னும் இருவகைச் செய்யுள் விகாரமும் சொலலிய தெனவுணர்க.

---

2. இப்பகுதி உதாரணங்களைச் சேனாவரையர் 'வழக்கினாகிய உயர் சொற்கிளவி' என்பதில் (27) அடக்குவர்.

சு. வே 1. குறுந்தகடி
2. தகடி

செஞ்ஞாயி றென்புழிச் செம்மை யென்னும் பண்பிற்குக் கருமை வெண்மை யென இனமுளவே யெனினும், ஞாயிறோடு அடுத்தமையான் இனமின்றாய் இனனில் விதப்பாயிற்று. ஞாயி றென்பது இனமிலதேனும் செம்மை யென்னும் பண்பு அடுத்த மையிற் கரியது மொரு ஞாயிறுளது போல வினமுடைத்தாய் இனனுடை விதப்பாயிற்று.

ஒரு.

என்பது இனத்தைச் சுட்டாது பண்பு கொண்டு நின்ற பெயர்ச் சொற்கள் வழக்கு நெறியல்ல; செய்யுள் நெறியாம்,

உ—ம் : செஞ்ஞாயிற்றுக்கவின், வெண் கோட்டியானை. நெடுவெண்டிங்கள், வெண் முத்தம் எனச் செய்யுளுள் வரும். இனிக் குறுஞ்சூலி, நெடுந்தகடி, குறுமுக்கி, குறும்பூழ் என்பனவும் இனஞ்சுட்டாது வழக்கினில் வந்தனவால் எனின், அவை அவற்றின் பேரே; இனஞ் சுட்டாது வந்தன வல்ல; வென்று மறுக்க.

ஆதி.

தனித்து ஒன்றைச் சுட்டிக் காட்டாத முறையில், பண்பு களைப் பெயர்க்கு அடைமொழியாக்குதல் உலக வழக்கில் இல்லை; செய்யுள் நெறியில் உண்டு.

சூத்திரம் 17, பெயர்கள் அடைமொழி கொள்ளும் என அறிவித்தது. அடைமொழி உலக வழக்கில் ஒன்றைச் சுட்டுவதற் காக வருவது. உழுந்தவடை எனின் மசால்வடையன்று எனக் காட்டி நிற்கும். தசதராமன் எனின் பரசுராமன் அல்லன் எனக் காட்டும். ஆயின் ஒன்றைச் சுட்டிக் காட்டுதல் இல்லா அடை மொழிகள் (உலக வழக்கில் வாரா) செய்யுளில் வருவனவாம்.

'குளிர் வெண் திங்கள்' — குளிர்ச்சி பொது; ஒரே திங்கள் தான்.

*''சேலை கட்டிய மாதர்—சேலை கட்டல் பொது இயல்பு.

*''கதிர் இளம்பரிதி''—கதிர் பரிதிக்கு இயல்பு—ஒரே பரிதி. இவ்வாறு பொதுமுறையில் அடைமொழிகள் செய்யுட்கே பொருந்தும்.

---

* இவ்வுதாரணங்களில் பண்புச் சொல்லடையில்லை. இவைகளை ஒன்றென முடித்தலால் கொள்ளலாம். இளம் பரிதி என்பதைக் கொள்ளலாமே எனின் காலைப்

பூவரராகம் பிள்ளை

(சேனாவரையத்தில்) "இனஞ்சுட்டலாவது இனத்தைச் சுட்டி அவற்றினின்றும் விசேடிக்கப்படுதல்" என்ற வாக்கியம் பிழைபட் டிருப்பதாகத் தோன்றுகிறது. "இனஞ்சுட்டலாவது" என்றதற்கேற்ப 'விசேடித்தல்' என்றிருத்தல் பொருத்தம். விசேடிக்கப்படுதல் என்றிருப்பது பொருத்தமில்லை விசேடிப்பது அடைமொழி; விசேடிக்கப்படுவது அடைகொளி. செந்தாமரை என்பதில் செம்மை விசேடிப்பதாகிய அடைமொழி. தாமரை விசேடிக்கப்படுவதாகிய அடைகொளி. இங்கு 'இனஞ்சுட்டலாவது' என்று எடுத்துக் கொள்ளப்பட்டது விசேடிப்பதாகிய அடைமொழியே.

இனி அவற்றினின்றும் என்பது அதனினின்றும் என்றிருப்பது பொருத்தம். மகரவீற்று அஃறிணைச் சொற்கள் பெரும்பாலும் ஒருமைப் பொருளுணர்த்தும் போது அத்துச்சாரியை பெறுவதே முறை. 'இனத்தைச்சுட்டி' என்றதற்கேற்ப 'அதனினின்றும்' என்றிருப்பதே பொருத்தம். ஆகவே இந்த வாக்கியம், "இனத்தைச் சுட்டி அதனினின்றும் விசேடித்தல்" என்றிருப்பது பொருத்தமாகும். 'ஈண்டைக் கெய்தாது' என்றிருப்பது பொருத்தம்.

கணேசய்யர்.

சேனாவரையர் கருத்தின்படி விசேடணத்தை, இனம்சுட்டும் விசேடணம் (விசேடிப்பது), இனம் சுட்டா விசேடணம் (விசேடியாதது). இரண்டும் அல்லா விசேடணம் (இல் குண விசேடணம் அஃதாவது விசேடிப்பதும் விசேடியாததும் அல்லாதது) என மூன்றாகப் பகுக்கலாம். உதாரணம் முறையே வெண்டாமரை, செஞ்ஞாயிறு, பெருங் கொற்றன்.........

பெருங்கொற்றன் என்புழிப் பெருமை என்னும் குணம், கொற்றனுக்கு இல்லாத (புனைந்து சொன்ன) குணமாதலின் (செஞ்ஞாயிற்றிற்போல இயற்கையாகவுள்ள குணமல்ல

பரிதி அவ்வாறு கூறப்பட்டதாதலின் கொள்ளவேண்டுவதில்லை. சேலை கட்டிய மாதர் என்பது செய்யுளிலும் வருவதில்லை. வரின் இழித்தற் பொருளில் வருவதாம்.

வாதலின்) இரண்டுமல்லாத விசேடணமாயிற்று என்க. இன்னும் அதனைச் சுருங்கக் கூறின் இனம் சுட்டுவது விசேடிப்பது; இனம் சுட்டாதது விசேடியாதது; இரண்டுமல்லாதது விசேடிப்பதும் விசேடியாததும் அல்லாதது என்னலாம்.

இயற்கைப் பொருள்மேல் செப்பு

19. இயற்கைப் பொருளை யிற்றெனக் கிளத்தல்

ஆ. மொ.

இல.

Natural object should be described depicting their true (without giving reason)

க. சு.

Objeets of nature (should be) described (simply) as they are

பி. இ. நூ.

நன். 404.

இயற்கைப் பொருளை இற்றெனக் கிளத்தல்.

முத்து. ஒ. 55. ஷ ஷ

இளம்.

இச்சூத்திரம் என்னுதலிற்றோவெனின், உலகத்துப் பொருள்கள் எல்லாம் இருவகைப்படும், இயற்கைப் பொருளும் செயற்கைப்பொருளும் என; அவற்றுள் இயற்கைப் பொருள் மேற்சொல் நிகழற்பாலவாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

உரை : உலகத்து இயல்பாகி வாரா நின்ற பொருளைச் சொல்லுமிடத்து இத்தன்மைய என்று சொல்லுக, எ—று.

வ—று : நிலம் வலிது; நீர் தண்ணிது எனவரும்.

சேனா.

இ—ள் : தன்னியல்பில் திரியாது நின்ற பொருளை அதனியல்பு கூறுங்கால் ஆக்கமும் காரணமும் கொடாது இற்று எனச் சொல்லுக எ—று.

இயல்பாவது பொருட்குப் பின் தோன்றாது உடன் நிகழுந் தன்மை.

உ—ம்: நிலம் வலிது, நீர் தண்ணிது, தீ வெய்து, வளி உளரும் உயிர் உணரும் என வரும்.

[1]இற்று என்பது வினைக்குறிப்பு வாய்பாடாயினும் உளரும் உணரும், என்னுந் தெரிநிலை வினையும் இற்று என்னும் பொருள்பட நிற்றலின், இற்றெனக் கிளத்தலேயாம்.

[2]நிலம் வலிதாயிற்று என இயற்கைப் பொருள் ஆக்கம் பெற்று வருமால் எனின்:— கல்லும் இட்டிகையும் பெய்து குற்றுச் செய்யப்பட்ட நிலத்தை வலிதாயிற்றெனின், அது செயற்கைப் பொருளேயாம் நீர் நிலமும் சேற்றுநிலமும் முன் மிதித்துச் சென்று வன்னிலம் மிதித்தான், நிலம் வலிதாயிற்றென்ற வழி, மெலிதாயது வலிதாய் வேறுபட்டதென ஆக்கம் வேறுபாடு குறித்து நிற்றலின் இயற்கைப் பொருள் ஆக்கமொடு வந்த தன்றாம். அல்லது நிலத்திற்கு வன்மை விகாரம் என்று ஓர்ந்து நிலம் வலிதாயிற்று என்னுமாயின், திங்கள் கரிது என்பதுபோலப் பிறழ உணர்ந்தார் வழக்காய் ஆராயப்படாதென்க.

---

1. இற்று—இத்தன்மைத்து. சூத்திரத்தில் இற்று எனக் குறிப்பு வினைமுற்று வாய்பாட்டால் கூறப்பட்டிருப் பினும் 'வளி உளரும்' என்பதில் உளரும் என்பது தெரி நிலை வினைமுற்றாக வருவதையும் கொள்ளலாம்; ஏன் எனின் உளரும் என்பது உளரும் தன்மையது என்னும் பொருளாக அதாவது இற்று என்பதன் பொருள் போல நிற்றலினால் என்க.

2. நிலம் வலிதாயிற்று — இத்தொடரைக் கூறுபவர் மூவகையினர்:

1. கல்லும் இட்டிகையும் பெய்து குற்றுச் செய்யப்பட்ட நிலத்திலிருந்து கூறுபவர்.
2. சேற்று நிலம் முன் மிதித்து வன்னிலம் வந்து நிற்பவர்.
3. திங்கள் கரிது என்பவர் போல் பிறழ உணர்ந்தவர்.

முதலவர் மிதித்த நிலம் செயற்கை நிலம். வலிதாயிற்று என்பது ஆகும்.

தெய்.

உலகத்துப் பொருளெல்லாம் இயற்கைப் பொருள், செயற்கைப் பொருள் என அடங்குதலின், அவற்றுள் இயற்கைப் பொருள் மேற் செப்பு நிகழுமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ—ள் : [1]இயற்கைப் பொருள் என்பது காரணப் பொருள், அதனை இத்தன்மைத்து எனச் சொல்லுக, எ—று.

அவை நிலம், நீர், தீ, வளி, ஆகாயம் உயிர் என்பன. அவற்றை நிலம் வலிது, நீர் தண்ணிது, தீ வெய்து, வளியுளரும், ஆகாயம் நிற்கும், உயிர் உணரும் எனக் கூறுக.

[2]நிலம் வலிதாயிற்று எனக் கூறலாகாது. என்னை? ஆக்கங் கொடுப்பின் அதற்கு இயல்பு பிறிதாவான் செல்லுமாகலின் வழுவாம்.

நச்.

இஃது இயற்கைப் பொருட்கண் மரபு வழுவாமை கூறுகின்றது.

இ—ள் ; இயற்கைப் பொருளை—பொருட்குப் பின் தோன்றாது உடன் நிகழும் தன்மைத்தாய பொருளை அதன் இயல்பு கூறுங்கால், இற்று எனக்கிளத்தல் — ஆக்கமும் காரணமும் கொடாது இற்று எனச் சொல்லுக எ—று.

இரண்டாமவர் மிதித்த நிலம் வலிதாக ஆகவில்லை இயல்பிலேயே வலிது அதனால் வலிதாயிற்று என்பது தவறு.

மூன்றாமவர் திரிய வுணர்ந்தவராதலின் அவர்கூற்று ஏற்கப்படாது.

1. நிலம் தீ நீர்வளி விசும்போ டைந்தும், கலந்த மயக்கம் உலகம் என்ப ஆதலின உலகத்தோற்றத்துக்கு அவை (நிலம், நீர் முதலியன) காரணமாயின் உடல் தோன்றுதற்கு உயிர் காரணம் ஆதலின் அதுவுட் காரணப் பொருளாயிற்று—கு—சுந்தர மூர்த்தி.
இயற்கையே செயற்கையாக மாறுதலின் இவ்வாறு கூறினார்.

2. இதன் விளக்கம் சேனாவரையர் உரையிற் காண்க.

உ—ம் : நிலம் வலிது, நீர் தண்ணிது, தீ வெய்து, வளி யுளரும், உயிர் உணரும் எனவரும்.

[1]சேற்று நிலம் மிதித்து வன்னிலம் மிதித்தான் 'நிலம் வலி தாயிற்று' என்ற வழி, மெலிதாயது வலிதாய் வேறுபட்டது என ஆக்கம் வேறுபாடு குறித்து நிற்றலின், இயற்கைப் பொருள் ஆக்கமொடு வந்ததன்றாம்.

கல்

என்னுதலிற்றோ வெனின், உலகத்துப் பொருள் எல்லாம் இருவகைப்படும்; இயற்கைப் பொருளும் செயற்கைப் பொருளும் என. அவற்றுள் இயற்கைப் பொருள் மேல் மரபிலக்கணம் வழா மற் சொல் நிகழற்பாலவாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ—ள் : இயற்கையாகிய பொருளை இத்தன்மைத் தெனச் சொல்லுக, எ—று.

உ—ம் : நிலம் வலிது, நீர் தண்ணிது, தீ வெய்து, வளியுள ரும் எனவரும்.

இயற்கைப் பொருள் செயற்கைப் பொருள் என்கிறது அவ்வியற்கை செயற்கை யென்னும் பண்பினையோ அப்பண் படைந்த பொருளினையோ எனின், பண்படைந்த பொருளினை யெனவுணர்க.

அஃதேயெனின், இயற்கைப் பொருள் இது, செயறகைப் பொருளிது என வேறுபட நில்லாது, நிலம் வலிது என்ற வழக்கத்தானே கல்லும் இட்டிகையும் பெய்து குற்றுச் செய்யப் பட்ட விடத்து, நீர் நிலமும் சேற்று நிலமும் மிதித்து அவ்வயின் நின்றான் ஒருவன், அந்நிலமல்லாத நிலம் மிதித்தவிடத்து நிலம் வலிதாயிற்றென்றும் வருமால் எனின், ஒரு பொருள்தானே இயற்கையான பண்படுத்தவிடத்துஇயற்கையென்றும்,செயற்கை யான பண்படுத்த விடத்துச் செயற்கை யென்றும் பண்பால் வேறு படுதல் அல்லது பொருளால் வேறல்ல என்றுணர்க.

*முன் நீர்நிலம் மிதித்தான் கூறும் வழக்கினுள் பொருட்கு உண்மை வகையான் வன்மையின்றே யெனினும், அவன் மனக் குறிப்புப் பற்றி, அதுவும் வண்மையாயிற்று எனவுணர்க.

---

1. விளக்கம் சேனா. உரையிற்காண்க.

*இவர் உரை சேனாவரையர் உரையைத் தழுவியது. எனினும் இப்பகுதி அவரினும் வேறு பட்டது காண்க.

இவ்விலக்கணம் கூறிப்பயந்தது என்னையெனின், மேற் செயற்கைப் பொருளகத்து மரபு வழூஉ அமைத்தற் பொருட்டாய் உலகத்துப் பொருளை இயற்கை செயற்கை என இருபாகுபாடு செய்து அவற்றைக் கூறும் மரபிலக்கணம் அறிவித்தார் எனக் கொள்க.

ஒரு..

என்பது உலகத்தியல்பாகி வாராநின்ற பொருள்களைச் சொல்லுமிடத்து இத்தன்மை யென்றே சொல்லுக.

உ—ம் : நிலம் வலிது, நீர் தண்ணிது, தீ வெய்து, வளி உளரும், உயிர் உணரும் என இவ்வாறு சொல்லுவது.

இனி, நிலம் வலிதாயிற்று, நீர் தண்ணிதாயிற்று என்று சொல்லற்க. மற்று நிலம் வலிதாயிற்று என்றும் சொல்லுபவால் எனின், அஃது இயல்பன்று; சேற்று நிலம் மிதித்து வன்னிலம் மிதிக்கையால் விகாரம் என்பது.

செயற்கைப் பொருள்மேல் செப்பு.

20. செயற்கைப் பொருளை ஆக்கமொடு கூறல்.

ஆ.மோ.

இல.

The objects which have undergone changes should be described using the verb drived from 'āku' which means to become' indicating change.

கசு:

Objects of culture (should be) described by (being followed by from of the verb) āku (to become).

பி. இ. நா.

முத்து. ஒ. 56.

செயற்கைப் பொருளை ஆக்கமொடு செப்பல்.

இல. வி. 313.

செயற்கைப் பொருளை ஆக்கமொடு கூறலும்.

இளம்.

இச்சூத்திரம் என்னுதலிற்றோவெனின், செயற்கைப் பொருள்மேற் சொல் நிகழற்பாலவாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

உரை: செயற்கையினாகிய பொருள்களையெல்லாம் ஆக்கம் கொடுத்துச் சொல்லுக, எ—று.

வ—று: மயிர் நல்ல ஆயின; பயிர் நல்ல ஆயின என வரும் ஆயின என்பது ஆக்கம்.

சேனா.

இ—ள்: காரணத்தால் தன்மை திரிந்த பொருளை, அத் திரிபு கூறுங்கால், ஆக்கங் கொடுத்துச் சொல்லுக, எ—று.

[1]'ஆக்கமொடு கூறல்' என்பதனால், திரிபு கூறுதல் பெற்றாம். என்னை? அதன்கண் அல்லது வாராமையின்.

[2]இயற்கைப் பொருள் செயற்கைப் பொருள் என்பன, இரு பெயரொட்டுப் பண்புத்தொகை.

தெய்.

செயற்கைப் பொருள் மேற் செப்பு நிகழுமாறு உணர்த்துதல் நுதலிற்று.

---

1. உரையில் 'திரிபு கூறுங்கால்' என்பதை வருவித்துக் கொண்டதற்குக் காரணம் 'ஆக்கமொடு கூறல்' என்பதனாலாம்; பொருளின் திரிபினால்தான் ஆக்கம் வரும் ஆதலின்.

2. "இயற்கையென்பதே இயற்கைப்பொருளையுணர்த்தும், செயற்கை யென்பதே செயற்கைப் பொருளை யுணர்த்தும் என்பது சேனாவரையர் கருத்தாகிறது. அதனால் இயற்கைப்பொருள் செயற்கைப்பொருள் என்பன இருபெயரொட்டுப் பண்புத்தொகை என்கின்றார். (இயற்கைப் பொருள் செயற்கைப்பொருள் என்பன பண்புத்தொகை என்றிருந்தது இடைச்செருகலாக இருபெயரொட்டுப் பண்புத்தொகை என்று மாற்றப்பட்டிருக்கலாம்)"—பூவராகம் பிள்ளை.

இ—ள்: செயற்கைப் பொருளாவது காரியப் பொருள்; அதனை ஆக்கச் சொல்லொடு படுத்துக் கூறுக, எ—று.

செயற்கையாய்த் தன்னியல்பின் வேறுபடுவன வெல்லாம் செயற்கைப் பொருளென்று கொள்க.

உ—ம்: மண் குடமாயிற்று, நூல் ஆடையாயிற்று, மரங் கதவாயிற்று எனவும், பைங்கூழ் நல்லவாயின, மயிர் நல்லவாயின எனவும் வரும்.

அஃதேல் பைங்கூழ் நல்ல, மயிர் நல்ல என ஆக்கமின்றியும் வருமால் எனின், அவை *யக்காலத்தியறகைபற்றிக் கூறப்பட்டன; முன்பு நின்ற நிலை கண்டு கூறப்பட்டன வல்லவென்க. அதனானே யன்றே வருகின்ற சூத்திரங் கூறவேண்டியது?

நச்.

இது செயற்கைப் பொருள்மேல் மரபு வழுவாமை கூறுகின்றது.

இ—ள்: செயற்கைப் பொருளை—காரணத்தால் தன்மை திரிந்த பொருளைத் திரிபு கூறுங்கால், ஆக்கமொடு கூறல்—ஆக்கங் கொடுத்துச் சொல்லுக, எ—று.

கல்.

என் எனின், செயற்கைப் பொருள்மேல் மரபு இலக்கணம் வழாமல் சொல் நிகழற்பால வாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ—ள்: செயற்கையாகிய பொருளை ஆக்கம் என்னும் வாய்பாட்டோடு சொல்லுக, எ—று.

உ-ம்: மயிர் நல்லவாயின, பைங்கூழ் நல்லவாயின எனவரும்.

மேற்கூறிய 'இற்றெனக்கிளத்தல்' இதற்கு அதிகாரத்தான் வருவித்துக் கொள்க.

ஒரு.

என்பது செயற்கையாகிய பொருள்களை எல்லாம் ஆக்கம் கொடுத்துச் சொல்லுக.

---

* அக்காலத்தியற்கை. பைங்கூழும் மயிரும் ஒருவன் பார்த்தபோது நல்லவாக விளங்கியிருந்த இயல்பு. அதனால் நல்ல என ஆக்கம் இல்லாது கூறினான் என்க.

உ-ம்: மயிர் நல்லவாயின, பைங்கூழ் நல்லவாயின எனச் சொல்லுக. ஆயின என்பது ஆக்கம்.

மேலதற்குப் புறனடை

21. ஆக்கந் தானே காரண முதற்றே.

ஆ. மொ.

இல.

The indication of change in a object is preceded by the reason for the change

க. சு.

The forms of the āku (which indicate change) are preceded by the reason (for the change).

பி இ நூ.

நன். 405.

காரண முதலா ஆக்கம் பெற்றும்
............இயலும் செய்யும் பொருள்.

இல. வி. 313.

ஆக்கம் காரண முதற்றே யாகலும்

முத்து. ஒ. 57.

ஆக்கந் தானே காரண முதற்றே

இளம்.

இச்சூத்திரம் என்னுதலிற்றோ வெனின், மேலதற்கோர் புறனடையுணர்த்துதல் நுதலிற்று.

உரை : அவ்வாக்கந்தனைச் சொல்லுமிடத்துக் காரணம் முன் வைத்துச் சொல்லுக, என்றவாறு.

வ—று : கடுவும் கைபிழி யெண்ணெயும் பெற்றமையான் மயிர் நல்லவாயின எனவரும்*

---

* கடு = கடுக்காய்

மயிர்—பொருள். கடுவும்...பெற்றுமையால்—காரணம். நல்லவாயின—ஆக்கம்

சேனா.

இ—ள்: செயற்கைப் பொருளை ஆக்கமொடு கூறுங்கால் காரணத்தை முற்கூறி, அதன் வழி ஆக்கங் கூறுக, எ—று.

தானே என்பது செய்யுட்சுவை குறித்து நின்றது

உ—ம்: கடுக்கலந்த கைபிழி யெண்ணெய் பெற்றமையான் மயிர் நல்லவாயின; எருப் பெய்து இளங்களை கட்டு நீர்கால் யாத்தமையான் பைங்கூழ் நல்லவாயின; நீர்கலத்தலால் நிலம் மெலிதாயிற்று, தீச்சார்தலால் நீர் வெய்தாயிற்று என வரும்.

மயிர் நல்ல, பயிர் நல்ல எனச் செயற்கைப் பொருள் ஆக்கம் பெறாது வந்தனவால் எனின், அந்நன்மை பொருட்குப் பின் தோன்றாது உடன் தோன்றிற்றேல் இயற்கையேயாம்; அவ் வாறன்றி முன்தீயவாய்ப் பின் நல்லவாயினவேனும், தீய நிலைமை காணாதான் மயிர் நல்ல, பயிர் நல்ல என்றாற்படும் இழுக்கென்னை? அது செயற்கையாவது உணர்ந்தான் ஆக்கங் கொடாது சொல்லினன்றே வழுவாவது என்க.

[1]செயற்கைப் பொருளை ஆக்கமும் காரணமும் கொடுத்துச் சொல்லுக என்பதே கருத்தாயின் சூத்திரம் ஒன்றாகற் பாற் றெனின், அவ்வாறோதின் ஆக்கமும் காரணமும் செயற்கைப் பொருட்கண் ஒத்தவாயின என்பது பட்டுக் ''காரணமின்றியும் போக்கின்று'' (சொல் 22) என்பதனோடு மாறு கோடலானும்

---

1. செயற்கைப் பொருளை ஆக்கச் சொல்லோடு கூற வேண்டும் என்பது முன் சூத்திரம். இச்சூத்திரம் ஆக்கச் சொல் காரணத்தை முதலில் கொண்டு வரும் என்பது. இப்படி இரண்டு சூத்திரமாக இருப்பதால் முதல் சூத்திரம் செயற்கை ஆக்கம் பெறவேண்டும் எனச் செயற்கைக்குச் சிறப்புத் தருகிறது. இச்சூததிரம் ஆக்கம் முதலில் காரணம் பெற்று வரும் என ஆக்கத் துக்குச் சிறப்புத் தருகிறது. இரண்டும் ஒரு சூத்திரமாக அமையின் செயற்கைப் பொருளுக்கு ஆக்கம் காரணம் இரண்டும் சிறந்தன எனப்படும்; அதாவது இரண்டும் செயற்கைப் பொருளுக்குத் தேவை எனப்படும். படவே காரணம் இல்லாமலும் செயற்கைப் பொருள் வரலாம் என வரும் அடுத்த சூத்திரத்தோடு மாறுபடும். ஆத

காரணம் செயற்கைப் பொருளதோ ஆக்கத்ததோ என ஐயுறப்படுதலானும், ஆக்கந் தானே காரண முதற்றெனப் பிரித்துக் கூறினார் என்பது.

இயற்கைப் பொருள் ஆக்கமும் காரணமும் பெறாது வருதலும் செயற்கைப் பொருள் அவை பெற்று வருதலும் இலக்கணம் எனவே, இவ்வாறன்றி வருவன மரபு வழு வென்பதாம்.

[2]நுண்ணுணர்வுடையார்க்குத் 'தம் மரபினவே' (சொல் 11) என அடங்குவதாயினும், ஏனையுணர்வினாற்கு இவ்வேறுபாடு உணரலாகாமையின் விரித்துக் கூறினார்.

தெய்.

*மேலதற்கோர் புறனடை யுணர்த்துதல் நுதலிற்று.

இ—ள்: மேற்சொல்லப்பட்ட ஆக்கக் கிளவி காரணத்தை [1]முதலாக வுடைத்து, எ—று.

வின் இரண்டு சூத்திரமாமவே அமைந்தது. அன்றியும் காரணம் ஆக்கத்துக்குரியதா செயற்கைப் பொருளுக்குரியதா என்ற ஐயமும் ஏற்படும் ஆக்கத்துக்கே காரணம் என்பது இச்சூத்திரம் தனியே கூறப்படுவதால் பெறப்படும்.

2. இயற்கைப் பொருளை இற்றெனக் கிளத்தல் வேண்டும் என்பதும் செயற்கைப் பொருளை ஆக்கமொடு கூற வேண்டும் என்பதும் ஆக்கம் காரண முதற்று என்பதும் அடுத்து வரும் சூத்திரக் கருத்தும் ஆகியயாவும் மரபாக வருவன ஆதலின் "தம் மரபினவே" (சொல் 11) என்று முன்னர்க் கூறியதில் அடங்குமே ஈண்டு விரிவாகக் கூறியதேன் என்னும் வினாவிற்கு விடை நுண்ணுணர்வினார்க்கே அது புரியும் ஏனையுணர்வினார்க்குப் புரியாது ஆதலின் அவர்க்காக விரித்துக் கூறினார் என்பது.

1. முதலாக—முதன்மையாக—இன்றியமையாததாக. பிறவுரையாளர்யாவரும் முதற்று என்பதற்கு முதற்கண் உடையது எனப் பொருள் கொண்டனர்.

* இது உரைக்கோவையில் காணப்பட்டிலது.

[2]செயற்கைப் பொருளெல்லாம் ஆக்கங் கொடுத்துக் கூறப்படா; காரணம் உள்வழியே ஆக்கங் கொடுப்பது என்றவாறாயிற்று.

நச்.

இது மேலதற்கோர் புறநடை.

இ—ள்: ஆக்கந்தானே—செயற்கைப் பொருளை ஆக்கமொடு கூறுங்கால் அவ்வாக்கச் சொல்தான், காரண முதற்று—காரணச் சொல்லை முன்னாக வுடைத்து, எ—று.

உ-ம்: கடுக்கலந்த கைபிழியெண்ணெய் பெற்றமையின் மயிர் நல்லவாயின; எருப்பெய்து இளங்களை கட்டு நீர்கால்யாத்தமையான் பைங்கூழ் நல்லவாயின எனவரும்.

மயிர்நல்ல, பைங்கூழ் நல்ல என ஆக்கமின்றி வந்தது பொருட்குப் பின் தோன்றாது உடன் தோன்றி நிற்றலின் இயற்கைப் பொருளாம். அவ்வாறன்றி, முன் தீயவாய்ப் பின் நல்ல ஆயினவழி அத்திமை காணாதான் மயிர்நல்ல பைங்கூழ் நல்ல எனினும் இழுக்கின்று, அச் செயற்கையுணராமல் கூறலின்.

கல்.

என்—எனின், மேலதற்கோர் புறனடை யுணர்த்துதல் நுதலிற்று.

மேற்கூறிய ஆக்கச் சொற்றானே காரணச் சொல்லை முன்னாகவுடைத் தென்றவாறு.

உ—ம் ; கடுவும் கைபிழி யெண்ணெயும் பெற்றமையான் மயிர் நல்லவாயின; எருப் பெய்து இளங்களை கட்டு நீர் கால் யாத்தமையான் பைங்கூழ் நல்லவாயின என வரும். ஆக்கம் முற்கூறிக் காரணம் பிற்கூறியும் வருமால் எனின், பெரும்பான்மையும் முற்கூறிக் கூறப்படுதலின் முதற்றென்றார் போலும். †இனி முதல் என்பதனைக் காரணம் ஆக்கிக் கூறலும் ஒன்று

2. உதாரணம் அடுத்த சூத்திரத்துக் காண்க.

† காரணம் ஆக்குதலாவது காரணமாகிய முதல் என்பது.

ஒரு.

என்பது அவ்வாக்கந்தனைச் சொல்லுமிடத்துக் காரணம் முன் வைத்து ஆக்கத்தைப் பின் வைத்துச் சொல்லுக.

உ—ம் : கடுவும் கைபிழியெண்ணெயும் பெற்றமையான் மயிர் நல்ல வாயின எனவும், எருப்பெய்து இளங்களை கட்டு நீர் கால் யாத்தமையான் பைங்கூழ் நல்ல வாயின எனவும் சொல்லுக. கடுவும் கைபிழி யெண்ணெயும் காரணம்; மயிர் நல்லவாயின என்பது ஆக்கம்.

இதுவுமது

22. ஆக்கக் கிளவி காரணம் இன்றியும்
போக்கின் றென்ப வழக்கி னுள்ளே

ஆ. மொ.

இல.

The word which indicates chang may used in usage without giving reason for the change.

க. சு:

It is stated that, in current usage, expressions with the forms of the verb ̄aku (indicating change) do occur without any reason(being given)

பி. இ. நூ.

நன். 405

காரணம் இன்றி ஆக்கம் பெற்றும்
ஆக்கம் இன்றிக் காரணம் அடுத்தும்
இருமையும் இன்றியும் இயலும் செயும்பொருள்.

இல வி. 313.

ஆக்கம் காரணம் இன்றியும் வழக்கிடைப்
போக்கின் றாதல் போற்றினர் கொளலே

முத்து. ஒ. 58.

வழக்கினுள் ஆக்கம் காரணம் இன்றியும்
வருஉம் ஆராயும் காலத் தானே.

இளம்.

இச்சூத்திரம் என்னுதலிற்றோ வெனின் எய்தியது விலக்கு தல் நுதலிற்று.

உரை : ஆக்கக் கிளவி காரணம் இன்றியும் சொல்லப்படும் வழக்கினுள் என்றவாறு. போக்கு என்பது குற்றம்.

வ—று : மயிர்நல்ல வாயின. உம்மை எதிர்மறை. மற்று, †வாளாதோதுஞ் சூத்திரம் எல்லாம் வழக்கே நோக்கும்; செய்யுட் காயின் கிளந்தே யோதும். அதனால் 'வழக்கினுள்' என வேண்டா; அம்மிகுதியான் ஆக்கமும் காரணமும் இன்றி வருதலும், காரணம் கொடுத்து ஆக்கமின்றி வருதலும் என இரண்டுங் கொள்ளப்படும்.

வ—று : பைங்கூழ் நல்ல எனவும், எருப்பெய்து இளங்களை கட்டு நீர்கால் யாத்தமையால் பைங்கூழ் நல்ல எனவும் வரும்.

சேனா.

இ—ள்: காரண முதற்றெனப்பட்ட ஆக்கச்சொற் காரண மின்றி வரினும் குற்றமின்று, வழக்கினுள், எ—று.

உ—ம்: மயிர் நல்லவாயின; பயிர் நல்லவாயின என வரும். வழக்கினுள் காரணமின்றியும் வரும் எனவே, செய்யுளுள் காரணம் பெற்றே வரும என்பதாம்.

உ—ம்: பரிசிலர்க் கருங்கலம் நல்கவும் குரிசில், வலியவாகு நின் தாள் தோய் தடக்கை(புறம்.14) எனவும்,

> தெரிகணை யெஃகம் திறந்தவா யெல்லாம்
> குருதிபடிந் துண்ட காகம் — உருவிழந்து
> குக்கிற் புறத்த சிரல்வாய செங்கண்மால்
> தப்பியா ரட்ட களத்து (களவழி-5)

எனவும்,

> வருமழைய வாய்கொள்ளும் வாடாச்சீர் வண்கைக்
> கருமுருகன் சூடிய கண்ணி - திருநுதால்
> இன்றென் குரற் கூந்தற் பெய்தமையால் பண்டைத்தன்
> சாயல வாயின தோள்.

---

† செய்யுட் கென்றோ வழக்குக்கு என்றோ விதந்து சொல்லாது ஓதப்படும் சூத்திரங்கள் எல்லாம வழக்குக்கு மட்டும் பொருந்தும்.

எனவும் காரணம் பெற்று வந்தவாறு கண்டு கொள்க குக்கிற் புறத்த சிரல்வாய என ஆக்கமின்றி வந்தனவால் எனின் தொகுக்கும் வழித் தொகுத்தல் என்பதனான் ஆண்டு ஆக்கந் தொக்குநின்ற தென்பது.†

அரியகானம் சென்றோர்க்கு, எளிய வாகிய தடமென் தோளே (குறு-73) எனவும், "நல்லவை யெல்லாம் தீயவாம் தீயவும், நல்லவாம் செல்வம் செயற்கு (குறள் 375) எனவும் செயற்கைப் பொருள் செய்யுளுட் காரணம் இன்றி வந்தனவால் எனின், களவுக் காலத் தரியன இக்காலத் தெளிய வாயின என் பது கருத்தாகலான், இக்காலங் காரணம் என்பது பெறப்படுத லானும், ஊழால் என்பது அதிகாரத்தான் வருமாகலானும் அவை காரணமின்றி வந்தனவெனப் படாவென்பது.

தெய்.

மேலதற்கோர் புறனடையுணர்த்துதல் நுதலிற்று.

இ—ள்: ஆக்கச்சொல். காரணமின்றியும் வரும் வழக்கினுள் எ—று.

எனவே செய்யுளகத்து வரப்பெறா என்ற வாறாம். †போக்கின் றென்பது போகுதல் இன்று (போகுதல் இல்லை) என்றவாறு. எனவே வரும் என்ற பொருளாயிற்று. உம்மை இறந்தது தழீஇயிற்று.

---

† குக்கிற் புறத்த ஆயின; சிரல்வாய ஆயின என ஆக்கம் கொடுத்துக் கூறவேண்டுவன ஆக்கம் தொகுத்துக் கூறப்பட்டன என்பது.

† போக்கு இன்று என்பதற்குப் பிறரெல்லாம் குற்றம் இன்று எனப் பொருள் கொண்டனர். அவ்வாறு கொண்டதால் தொடர் ஒழுங்கமையாமையின் இளம் பூரணர் 'சொல்லப்படும்' என்பதையும், சேனாவரை யரும் நச்சினார்க்கினியரும் 'வரினும்' என்பதையும், கல்லாடர் 'சொல்லுதலும்' என்பதையும் ஒருவர் 'சொல்லுதல்' என்பதையும் வருவித்தனர். தெய்வச் சிலையார் உரை சூத்திரத்தின் அமைப்புக்கேற்ப அமைந் தது. இதனைப் பற்றிச் சேனாவரையர் குறிப்பிடாமை யால் அவர்க்கு இவர்பிற் காலத்தவர் என அறியலாம்.

ஆடை நன்றாய் இருந்தது; மணி நன்றாயிருந்தது என நன்றாதற்குக் காரணம் குறியாது வந்தன. பைங்கூழ் நல்லவாயின வென இடமும் காலமும் இனமும் சுட்டாது கண்ட காலத் தியற்கை பற்றி வரும் வழக்குக் கொள்க.

நச்.

இஃது எய்தியது விலக்கிற்று.

இ—ள் : ஆக்கக் கிளவி—காரணமுதற்று என்ற ஆக்கச் சொல், காரணம் இன்றியும் போக்கு இன்று என்ப—காரணம் இன்றி வரினும் குற்றம் இன்று என்று கூறுப, வழக்கினுள்ளே—வழக்கிடத்து, எ—று.

உ—ம் : மயிர் நல்ல ஆயின; பயிர் நல்லவாயின என வரும். எனவே, செய்யுட்குக் காரணம் பெற்றே வருமாயிற்று.

வருமழைய வாய்க்கொள்ளும் வாடாச்சீர் வண்கைக்
கருமுருகன் சூடிய கண்ணி—திருநுதாஅல்
இன்றென் குரற்கூந்தற் பெய்தமையால் பண்டைத்தன்
சாயல வாயின தோள்.

என இது காரணமும் ஆக்கமும் பெற்றது.

குருதி படிந்துண்ட காகம் உருவிழந்து
குக்கிற் புறத்த சிரல்வாய (களவழி-5)

என இதற்கு ஆக்கம் விகாரத்தால் தொக்கது என்று உணர்க.

அரிய கானம் சென்றோர்க்கு
எளிய வாய தடமென் தோளே (குறுந்-77)

இதற்குக் 'கற்புக் காலத்தால் தோள் எளிய ஆயின' என அக் காலம் காரணம் ஆயிற்று. உம்மை எதிர்மறை யாகலான் காரணம் கொடுத்துச் சொல்லுதலே வலியுடைத்து.

கல்.

என்னுதலிற்றோ வெனின் எய்தியது விலக்குதல் நுதலிற்று.

பொருள் : மேற்கூறிய ஆக்கச் சொற்றான் காரணத்தை யொழியச் சொல்லுதலும் குற்றமில்லை யென்று சொல்லுப வாசிரியர், வழக்கினிடத்து என்றவாறு, உம்மை எதிர்மறை யாகலாற் காரணங் கொடுத்துக்கூறல் வலியுடைத்து.

உ-ம்: மயிர் நல்லவாயின, பைங்கூழ் நல்லவாயின எனவரும்.

*செல்யுள் விதி யுள்வழிச் செய்யுள் என்றுகூறி, வாளாதே யோதும் சூத்திரம் எல்லாம் வழக்கே நோக்குதற்கிடையாகலின் வழக்கத்தினுள் என்பது மிகை. அதனால் செயற்கைப் பொருள் காரணங் கொடுத்து ஆக்கங் கொடாதே சொல்லுதலும், காரண மும் ஆக்கமும் இரண்டும் கொடாதே சொல்லுதலும் கொள்ளப் படும்.

கடுவுங் கைபிழி யெண்ணெயும் பெற்றமையான் மயிர், [1]நல்ல, பைங்கூழ் [2]நல்ல. எனவே செயற்கைப் பொருள் காரண மும் ஆக்கமும் கொடுத்தலும், காரணம் ஒழிய ஆக்கம் கொடுத் தலும், ஆக்கம் ஒழியக் காரணம் கொடுத்தலும், ஆக்கமும் இரண்டும் கொடாதே சொல்லுதலும் என நான்கு வகைத்து. இவற்றுள் முன்னைய விதியொன்றும் மரபிலக்கணம். பின்னைய மூன்றும் மரபு வழுவமைதி. இவை அவற்றுள் இச்சூத்திரத்தாற் கூறியது பெரும்பான்மை, இலேசினாற் கூறிய இரண்டும் சிறு பான்மையென வுணர்க. இவை யமைதற்குக் காரணம், உணர் வார் உணர்வு வகை பற்றிப் போலும்.

ஒரு.

என்பது ஆக்கமொடு புணர்ந்தபொருளைக் காரணம் இன்றியும் சொல்லுதல் வழக்கினுட் குற்றம் இல்லை.

உ—ம்: மயிர் நல்லவாயின பைங்கூழ் நல்லவாயின எனக் காரணம் இன்றியே வந்தன. உம்மையாற் காரணங் கொடுத்துச் சொல்லுதல் வலிவுடையது. இனி, போக்கின்றென்ப வழக்கி னுள்ளே யென்ற விதப்பாற் செய்யுளகத்தாயிற் காரணமும் ஆக்கமும் கொடுத்துச் சொல்லுக என்பதாம்.

வ-று: வெண்பா

வருமழை வாய்க்கொள்ளும் வாடாச்சீர் வண்கைக்
கருமுருகன் சூடிய கண்ணி - திருநுதா
லின்றென் குரற் கூந்தற் பெய்தமையாற் பண்டைத்தன்
சாயல வாயின தோள்

இதனுள் கருமுருகன் சூடிய கண்ணி பெய்தமையான் என்பது காரணம். பண்டைத் தம் சாயல வாயின தோள் என்பது ஆக்கம்

---

* இளம்பூரணர் கருத்தும் இதுவே—பார்க்க.

௸. வே: 1. நல்ல எனவும்.
2. நல்ல எனவும் வரும்.

ஆதலால் இது காரணமும் ஆக்கமும் கொடுத்து வந்தது. அவை இரண்டும் உடன் வரவும் ஒன்று வரவும் பெறும்.

பால்ஐயம்

23. பான்மயக் குற்ற ஐயக் கிளவி
தானறி பொருள்வயின் பன்மை கூறல்.

ஆ. மெ.

இல.

When the gender of an object (at a distance) is in doubt the plural verb is to be used.

க.சு:

When a speaker is in doubt or confusion about an object as to the (exact) knowledge of its gender, he (should) use the plural (verb)

பி. இ. நூ.

நேமி. சொ. 7.

ஐயந் திணைபால் தோன்றுமேல் அவ்விரண்டும்......
......ஒருபேர்ப் பொதுச்சொல்
பன்மை...உரைத்தல் பண்பு.

நன். 376.

ஐயந் திணைபால் அவ்வப் பொதுவினும்

இல. வி. 296,

திணைமயக் குற்ற ஐயப் பொருளையும்
பால்மயக் குற்ற ஐயப் பொருளையும்
...பன்மை...கட்டலும் செவ்விய என்ப.

முத்து. ஒ. 59

திணை துணிந்த தன்பால் துணியப் படாத
ஐயக் கிளவி அவ்வப் பொருள்வயின்
பன்மை கூறல் என்மனார் புலவர்.

இளம்.

இச்சூத்திரம் என்னுதலிற்றோ வெனின், [1] உயர்திணைப் பால் ஐயத்துக்கண் சொல் நிகழுமாறு உணர்த்துதல் நுதலிற்று.

உரை : திணையறிந்து பால் ஐயந்தோன்றிய வதனை அத் திணைப் பன்மைமேல் வைத்துச் சொல்லுக, எ—று.

வ—று : ஒருவன் கொல்லோ ஒருத்தி கொல்லோ தோன்றா நின்றார் எனவரும்

[2] இனி, உயர்திணைப் பால் ஐயம் என்பதோர் ஒப்பிற் கொள்க.

சேனா.

இ—ள் : திணை துணிந்து பால் துணியாத ஐயப்பொருளை அவ்வத்திணைப் பன்மையாற் கூறுக, எ—று.

---

1. இக்கருத்துடையோர் நச்சினார்க்கினியர், கல்லாடர், ஒருவர். இருதிணைப் பால் ஐயத்துக்கண் சொல் நிகழுமாறு உணர்த்துவது என்பது சேனாவரையர், தெய்வச்சிலையார் கருத்தாகும். சூத்திரத்தில் உயர் திணை என்பதில்லாமையே காரணம். இளம்பூரணர், முதலானோர் உயர்திணைப்பால் ஐயம் எனக்கொண்ட மைக்குக் காரணம், அடுத்துவரும் சூத்திரத்தில் திணை ஐயம் பற்றிக்கூறுவதுடன் அஃறிணைப் பால் ஐயமும் கூறப்படுகின்றது; அதனுல் இச்சூத்திரம் உயர்திணைப் பால் ஐயமே கூறும் என்னும் அவர்தம் கொள்கையாம்.

2. உயர்திணைப் பால் ஐயம் என்பது எதனாற் பெறப் பட்டது எனின் அடுத்து வரும் சூத்திரத்தோடு ஒப் பிட்டுப் பார்த்தலாற் கொள்க என்பது இத்தொடரின் பொருள். இத்தொடர் கு. சுந்தரமூர்த்தி விளக்கவுரை யுடன் வெளிவந்துள்ள கழகப் பதிப்பில் காணப்பட வில்லை. அடுத்த சூத்திரத்து உரையில் இது போலும் தொடர் காணப்படுதலின் இத்தொடர் உண்டு எனக் கொள்ளலாம்—சிவ.

[1]கிளவி என்பது ஈண்டுப் பொருளை. ஐயப் பொருளாவது சிறப்பியல்பாற் றோன்றாது பொது வியல்பாற் றோன்றிய பொருள்.

உ—ம் : ஆண் மகன் கொல்லோ பெண்டாட்டி கொல்லோ இஃதோ தோன்றுவார் எனவும், ஒன்றோ பலவோ செய்புக்கன எனவும் வரும்.

திணைவயின் என்னாது தானறி பொருள்வயின் எனப் பொதுப்படக் கூறியவதனான், ஒருவன் கொல்லோ பலர் கொல்லோ கறவை யுய்த்த கள்வர் எனவும், ஒருத்திகொல்லோ பலர் கொல்லோ இக் குருக்கத்தி நிழல் வண்டலயர்ந்தார் எனவும், திணையோடு ஆண்மை பெண்மை துணிந்த பன்மை யொருமைப்பால் ஐயமும் கொள்ளப்படும்.

ஒருமையாற் கூறின் வழுப்படுதல் நோக்கிப் பன்மை கூறலென வழாநிலை போலக் கூறினாரேனும், ஒருமையைப் பன்மையாற் கூறுதலும் வழுவாதலின், ஐயப் பொருள்மேற் சொன்னிகழுமா றுணர்த்திய முகத்தாற் பால் வழுவமைத்த வாறாம்.

தெய்.

மேற் சொல்லப்பட்ட [1]இருவகைப் பொருட்கண்ணும் ஐயக் கிளவி உணர்த்துகின்றா ராகலின், இச்சூத்திரம் அதன் பகுதி யாகிய பால் ஐயம், திணை ஐயம் என்னும் இரண்டனுள்ளும் பால் ஐயம் உணர்த்துதல் நுதலிற்று.

இ—ள்: தானறிந்த பொருட்கண் பான்மயக்குற்ற ஐயப் பொருண்மையை (யப்) பன்மையாற் கூறுக, எ—று.

தானறிபொருள் என்றமையால் திணையறிந்து பால் அறி யாத வழி என்பது பெறப்படடது. பால் ஐயம் பெருவழக்கிற்று ஆதலின் முற்கூறப்பட்டது. சேய்மைக்கண் தோன்றுவதோர் மக்கட் பிழம்பு கண்டு, ஒருவன் கொல்லோ ஒருத்தி கொல்லோ

1. கிளவி என்பது சொல்லுக்குரியது. அது ஈண்டு சொல்லால் உணர்த்தப் படும் பொருளுக்குரியதா யிற்று. சிறப்பியல்பு=ஆணோ பெண்ணோ, ஒன்றோ பலவோ என்பன.

1. இருவகைப் பொருள்=இயற்கைப் பொருள் செயற்கைப் பொருள்.

என ஐயுற்றான், அதனைத் தோன்றுவான் எனவும் ஆகாது; தோன்றுவாள் எனவும் ஆகாது; ஆயிடைத் தோன்றுவார் என்க.

பைங்கூழ் அழிவு கண்டான், ஒன்று கொல்லோ பல கொல்லோ செய்புக்கன என்க.

நச்.

இதுமேல் இயற்கை செயற்கை யெனப் பகுத்த பொருள்களுள் திணையுணர்ந்து பால்ஐயம் தோன்றியவழி அவ்வையப் பொருள் மேல் சொல் நிகழ்த்துமாறு கூறுகின்றது.

இ—ள்: பால் மயக்குற்ற ஐயக்கிளவி-திணை துணிந்து பால் துணியாது நின்ற ஐயப்பொருளை, தான் அறி பொருள் வயின் பன்மை கூறல்- தான் அறிந்த உயர்திணைப் பொருளிடத்துப் பன்மையால் கூறுக, எ—று.

ஐயப் பொருளாவது சிறப்பியல்பால் தோன்றாது பொது இயல்பால் தோன்றிய பொருள்.

ஆண்மகன் கொல்லோ பெண்டாட்டி கொல்லோ தோன்றுகின்றவர் எனவரும்.

'திணைவயின்' என்னாது 'தான் அறி பொருள் வயின்' எனப் பொதுப்படக் கூறிய அதனால் ஒருவன் கொல்லோ பலர் கொல்லோ இக்கறவையுய்த்த கள்வர்; ஒருத்தி கொல்லோ பலர் கொல்லோ இக்குறுக்கத்தி நிழல் வண்டல் அயர்ந்தார் எனத் திணையோடு ஆண்மை பெண்மை துணிந்த பன்மை ஒருமைப் பால் ஐயமும் கொள்க.

அப்பொருட்கு இருபாலுமாய் நிற்றல் இன்மையின் தான் ஒன்றாகிய பொருளைப் பன்மையாகக் கூறினும் அமைக என வழுவமைத்தார்.

கல்.

என்-எனின், இன்னும் உலகத்துப் பொருள்தான் ஐயுறும் பொருளும் துணியும் பொருளும் என இரு வகைத்து; அவற்றுள் ஐயுறும் பொருட்கண் உயர்திணைப்பால் ஐயத்துக்கட் பால் வழீஇ யமையுமாறு உணர்த்துதல் நுதலிற்று.

[1]பொருள்: ஒருசாத்தன் திணையறிந்து பான் மயங்கலுற்ற ஐயச்சொல் எனப்படும் சொற்றான் அறிந்த உயர்திணைப் பொருளிடத்துப் பன்மையாகக் கூறுங் கூற்று, எ—று.

உ—ம்: ஒருவன் கொல்லோ ஒருத்தி கொல்லோ இதோ தோன்றுவார் என்பது. [2]இவ்வையம கண்டவிடத்து ஐயமும், காணாவிடத்து ஐயமும் என இருவகைத்து. [3]காணாவிடத்து ஐயமும் இவ்வாறு கொள்க.

இனிக் காணாதவழி ஒருவனோ ஒருத்தியோ என்பதன்றி ஒருவனோ பலரோ என்று ஐயுறும் பால் மயக்கமும் கொள்க. இது தான அறியானாகுவ தல்லது அப்பொருள் இருபாலுமாய் நிற்றல் இல்லை. [4]பிறமத் தோற்றாகியவப பொருளைப் பன்மையாற் கூறுதல் வழூஉமன்: வழூஉ எனினும் அமைகவெனப் பால்வழூஉ வமைத்தவா றாயிற்று.

இவ்வையத்துக்கு இலக்கண வழக்கென வேறு காணாமை யின் இதுதான் இலக்கணமாகற் பாற் றெனின், வேறு வழக் கில்லையே யெனினும் இது பொருள்வகை தொக்க வழூஉ வெனப்படும். ஒருவனோ ஒருத்தியோ தோன்றுகின்றார் எனப்

---

1. 'ஒரு சாத்தன்' என்பதும், 'எனப்படும் சொல்' என்பதும் கழகப் பதிப்பில் காணப்படவில்லை. கழகப்பதிப்பே பொருந்தும்.

2. பிறர்யாரும் இவ்வாறு இருவகைப் படுத்தவில்லை; இஃதோர் சிறப்பு.

3. இத்தொடர் கழகப்பதிப்பில் இல்லை.

4. 'பிறமத்தோற்றாகிய'—இது தெளிவில்லை என்னும் குறிப்பு, உரைக் கோவையில் காணப்படுகின்றது- 'பிறமற்றொன்கிய' என்பது கழகப்பதிப்பில் காணப் படுகின்றது. பிறமற்று என இரு சொற்கள் இணைந் திருத்தலின் இதுவும் தெளிவற்றதே. பிற என்பது முன் தொடரில் உள்ள நிற்றல் இல்லை என்பதுடன் சேர்ந்து 'நிற்றல் இல்லை பிற' என்றமைய வேண்டுவது. மற்று ஒன்றாகிய அப்பொருளை எனத் தொடர் அமையின் பொருள் தெளிவாதல் காணலாம்.—சிவ.

பொதுவாகக் கூற இலக்கண வழக்காம் பிறவெனின், அவ்வாறு கூறுவார் இன்மையானும், 'ஆர்' என்பது ஆண்பாற் கல்லது ஏலாமையானும் ஆகாதெனை மறுக்க.

ஒரு.

ஒருவன் திணையறிந்து பால் மயக்குற்ற வழி ஐயப் பொருளைத் தான் உயர்திணை யென்ப தறிந்தோன் அதனை அத்திணைப் பன்மைமேல் வைத்துச் சொல்லுக.

உ—ம் : சேய்த்தாய்த் தோன்றுவதோர் மக்கட் பிழம்பு கண்டு மக்கள் என்பதுணர்ந்து ஆண்பால் பெண்பால் உணராத வழிப் பெண்டாட்டி கொல்லோ ஆண் மகன் கொல்லோ தோன்றுகின்றவர் என்று பன்மையாற் சொல்லுக; அஃது இருபாற்கும உரித்தாகலான். திணையின் என்னாது 'தானறி பொருள்வயின்' எனப்பொதுப்படக் கூறியவதனான் ஒருவன் கொல்லோ பலர் கொல்லோ கறவை யுய்த்த கள்வர்; ஒருத்தி கொல்லோ பலர் கொல்லோ குருக்கத்தி நிழல் வண்டலயர்ந்தார் எனததிணையோடு ஆண்மைப் பெண்மை துணிந்த பன்மை யொருமைப்பால் ஐயமும் கொள்க.

[1]இதற்கு வேறுமொரு காரணம்காட்டுதும். ஒரு மக்கட்டலை யோடு காட்டுட் கிடந்தது கண்டு, பெண் தலை, ஆண் தலை யென்றுணராதான் 'பெண்டாட்டி தலை கொல்லோ, ஆண் மகன் தலை கொல்லோ இஃதோ கிடந்த மக்கட்டலை' யென்க; மக்கள் என்பது இருபாற்கும் பொது வாகலான். ஐயப்படுமிடத் தொருபாற்குரிய சொல்லாற் சொல்லா தொழிக; பன்மையாற் சொல்லுக

ஒருவரைக் கூறும் பன்மைக் கிளவியும்
ஒன்றனைக் கூறும் பன்மைக் கிளவியும்
வழக்கி னாகிய வுயர்சொற் கிளவி
இலக்கண மருங்கிற் சொல்லா றல்ல (சொல். 27)

என வழுவமைக்கு மாகலான் என்ப. மயக்குற்றதனைக் கிளவி மேல் வையாது ஒருவன் மயக்குற்றவிடத் தென்க.

---

1. வேறு மோர் உதாரணம் என்பது கழகப்பதிப்பிற் காணுவது. இதுவே பொருத்தம், வேறுமோர் காரணம் காட்டப்படாமல் உதாரணமே காட்டப் பட்டமை யின். இவ்வுதாரணம் பிறர் காட்டாதது.

[2]ஒருவரைக் கூறும்—என்னும் சூத்திரம் ஈண்டும் 27—வது சூத்திரமாகவும் கூறினார்.

ஆதி.

ஆண் பெண் என்றோ, ஒன்று பல என்றோ பால் ஐயப்பாட்டுடன் மயங்கி நிற்கத் தக்க பொருளைத்—தான் அறிபொருள் பற்றிய பன்மையால் கூறுக.

அங்குப் போகிற அவர் ஆணோ பெண்ணோ?
ஒருவரோ பலரோ அங்குச் சண்டையிட்டவர்?
ஒன்றோ பலவோ அவர் பெற்றவை?

போகிறவர், சண்டையிட்டவர், பெற்றவை—தான் அறிந்த பன்மைப் பெயர்: இவை முறையே ஆண் பெண், ஒருவர், பலர் ஒன்று பல என ஐயப்பாடு உற்ற இடத்தில் அவ்வாக்கியத்தை முடித்து நின்றன.

திணைஐயம், அஃறிணைப் பால்ஐயம்

24. [1]உருவென மொழியினும் அஃறிணைப் பிரிப்பினும்
இருவீற்றும் உரித்தே சுட்டுங் காலை

(1. உருபென—சேனா. தெய்வ படம்.)

ஆ. மெ.

இல.

When the word 'Urupu' is used, and when the natural plural is given, it is to be undrstood that there exists doubt regarding the 'thinai' of an object

க. சு:

When the word urupu (is used) or when the category of akṟiṇai (is used) (it is to be understood that there is doubt) when referring (to objects) as to which of the two (tiṇais) they belong.

---

2. இக்குறிப்பு பொருந்துவதாக இல்லை; விளக்கமும் இல்லை. ஏடெழுதியோரால் செருகப்பட்டதாகலாம்.

பி இ. நூ.

நேமி. சொ. 7.

ஐயந் திணைபாலில் தோன்றுமேல் அவ்விரண்டும்
எய்தும் பொது மொழியால்

நன். 376.

ஐயந் திணைபால் அவ்வப் பொதுவினும்
..................விளம்புப.

இல. வி. 296.

திணைமயக் குற்ற ஐயப் பொருளையும்
பால்மயக் குற்ற ஐயப் பொருளையும்
உருவே......அஃறிணைப் பிரிப்பின்
அறைதலும்......செவ்விய என்ப.

தொன். 127.

ஐயம் திணைபால் அணையும் பொதுவே

முத்து. ஒ. 60.

ஐயமாம் இருதிணை யகத்தும் உருபைச்
செப்பினும் என்மனார் தெளிந்திசி னோரே.

இளம்.

இச்சூத்திரம் என்னுதலிற்றோ வெனின், திணை ஐயத்துக் கண்ணும், அஃறிணைப் பால் ஐயத்துக் கண்ணும் சொல் நிகழுமாறு உணர்த்துதல் நுதலிற்று.

உரை: திணை ஐயம் தோன்றிணவழி ஒருவடிவு சொல்லக் கருதினும், அஃறிணையை ஒன்று பல என்று பிரித்துச் சொல்லினும் மேல் எடுத்தபோலப் பொதுவினானே சொல்லுக, எ—று.

வ—று: குற்றிகொல்லோ மகன் கொல்லோ தோன்றுகின்ற உரு எனவரும். இது திணைஐயம். ஒன்று கொல்லோ பல கொல்லோ செய்புக்க பெற்றம் எனவரும். இஃது அஃறிணைப்

பால்ஐயம். உருவெனவே திணை ஐயம் என்பதோர் [1]ஒப்பிற் பெற்றாம். பால்ஐயமாயின் தத்தம் பகுதியொடு முடியும் என்பது.

சேனா.

இ—ள்: உருபெனச் சொல்லுமிடத்தும் ஒருமையும் பன்மையுமாகப் பிரிக்கப்படும் அஃறிணைப் பொதுச் சொற்கண்ணும் இவ்விரு கூற்றினும் ஐயப்புலப் பொதுச் சொல்லாதல் உரித்து, எ—று.

எனவே, ஆண்மகன் கொல்லோ பெண்டாட்டி கொல்லோ தோன்றா நின்றவுருபு எனவும், ஒன்று கொல்லோ பல கொல்லோ செய்புக்க உருபு எனவும், குற்றிகொல்லோ மகன் கொல்லோ தோன்றா நின்ற உருபு எனவும், ஒன்று கொல்லோ பல கொல்லோ செய்ப்புக்க பெற்றம் எனவும் சொல்லுக என்பதாம்.

'ஐயக்கிளவி' என்பது அதிகாரத்தாற் பெற்றாம்.

'உருபினும்' என்னாது 'உருபென மொழியினும்' என்றதனான் உருபின் பொருள வாகிய வடிவு, பிழம்பு, பிண்டம் என்னும் தொடக்கத்தனவும் கொள்க.

பன்மை கூறல் உயர்திணைப் பால்ஐயத்துக்குரித் தென்றும், உருபென மொழிதல் திணை ஐயத்துக்குரித் தென்றும் உரையாசிரியர் கூறினரால் எனின்:— அவை அவற்றிற்கு உரியவாயின் அஃறிணைப் பிரிப்பென்றாற்போல உயர்திணைப் பால் மயக்குற்றவென்றும் திணைஐயத் தென்றும் விதந்தோதுவார் ஆசிரியர்; அவ்வாறோதாமையானும் [2]நடையுள் அவை பொதுவாய் வருதலானும் அவை போலியுரை யென்க.

---

1. ஒப்பிற் பெற்றதாவது:—முன் சூத்திரம் உயர்திணைப் பால்ஐயம் உணர்த்தியது. இச்சூத்திரத்தில் அஃறிணைப் பிரிப்பு என அஃறிணைப பால்ஐயம் உணர்த்தியது இடைப்பட்ட உரு என்பது எதைக் குறிப்பது என ஒப்பிட்டுப் பார்க்குமிடத்துத் திணைஐயக் குறிப்பதாக அமையுப் எனப் பெற்றது.

2. நடையுள் அவை பொதுவாய் வருதல்:— உலக வழக்கில் உயர்திணைப் பால் மயக்கத்துக்கு மட்டுமன்றி அஃறிணைப்பால் மயக்கத்துக்கும் பன்மை கூறுதல்

ஒருவன் கொல்லோ பலர் கொல்லோ என்றற் றொடக்கத்து உயர்திணை யொருமை பன்மைப்பால் ஐயத்துக்கு உருபு முதலாயினஏலாமையும், திணை ஐயத்திற்கும ஏனைப் பால் ஐயத்திற்கும் ஏற்புடைமையும் சுட்டியுணர்க என்பது போதரச் 'சுட்டுங் காலை' என்றார். சுட்டுதல்--கருதுதல்.

தெய்.

திணை ஐயத்தின்கண் சொல் நிகழுமாறு உணர்த்துதல் நுதலிற்று.

[1]இ—ள்: **உயர்திணை அஃறிணை யென்னும் இரண்டு வேறு பாட்டினையும் சுட்டி ஐயப்படுங்காலத்து உருபு எனச் சொல்லினும் உரித்து. அஃறிணை யொருமையாற் *கூற்றும் உரித்து அப்பொருள்,** எ—று

மேல் தானறி பொருள் என்றமையானும் ஈண்டு இருவீற்றும் என்றமையானும் திணை ஐயம் என்பது பெற்றாம். ஐயம் என்பது அதிகாரத்தான் வந்தது. 'இருவீற்று முரித்து' என் பதனை 'உரித்திருவீற்றும்' என்று மொழி மாற்றுக. [2]அஃறிணைப் பிரிப்பு என்றதனால் பொதுமையிற் பிரிவது

உண்டு: உயர்திணை அஃறிணை மயக்கத்துக்கு மட்டு மின்றிப் பால் மயக்கத்துக்கும் உருபு எனக் கூறுதல் உண்டு உதாரணம்: ஒன்றோ பலவோ செய்புக்கன என அஃறிணைப் பால் ஐயம் பன்மையில் கூறப்பட்டது ஆணோ பெண்ணோ தோன்றும் உருபு என உருபு என்பது உயர்திணைபால் ஐயத்துக்கும் வந்தது.

1. மற்றையோரினும் தனிப்பட்ட உரையிது. அஃறிணைப் பிரிப்பு என்பதற்கு, அஃறிணையில் ஒருமையும் பன்மையு மாகஉள்ள இரண்டனுள் பிரிக்கப்பட்டதாகிய ஒன்று எனப் பொருள் கொண்டு, அவவொன்று என்பது ஒரு மைக்குரிய அது' என்னும் சொல எனப் பொருள் கொண்டார் தெய்வச்சிலையார்.

* சு. வே: கூறலும் உரித்து.

2 இத்தொடர் அஃறிணைப் பிரிப்பு என்பது பன்மையை நீக்கி ஒருமையைக் குறித்ததற்குக் காரணம் கூறியது, இச்சூத்திரப் பொருளைச் சேனாவரையர் மறாமையால் அவர்க்கு இவர் பிற்பட்டவர் என்பது புலப்படும்.

(பன்மையிற் பிரிவது இ—எ) ஒருமையாதலின் ஒருமை சொல்லாற் சொல்லினும் என்றாராகக் கொள்க.

குற்றியோ மகனோ என ஐயுற்றுழி,குற்றியோ மகனோ தோன்றா நின்ற உருபு, தோன்றுகின்ற அது என்க.

உருபு என்றதனான் அப்பொருள் பயக்கும் பிழம்பு, வடிவு பிண்டம் என்பனவும் கொள்க.

நச்.

இதுவும் ஐயப் பொருள்மேல் சொல் நிகழ்த்துமாறு கூறுகின்றது:

இ—ள்: இரு ஈற்றும் சுட்டும் காலை—திணைஐயத்துக் கண்ணும் அஃறிணைப் பால்ஐயத்துக் கண்ணும் கூறும் மரபு கருதுமிடத்து, உருவென மொழியினும்—திணை ஐயத்துக்கண் உருவெனச் சொல்லுமிடத்தும், அஃறிணைப் பிரிப்பினும்—ஒருமையும் பன்மையுமாகப் பிரிக்கப்படும் அஃறிணை இயற்பெயராகிய பொதுச் சொற்கண்ணும், உரித்து—ஐயத்தைப் புலப்படுத்தும் பொதுவாகிய தன்மை உரித்து, எ—று.

குற்றி கொல்லோ மகன் கொல்லோ இத்தோன்றா நின்றவுரு, ஒன்று கொல்லோ பல கொல்லோ இச்செய் புக்கபெற்றம் என வரும்.

உருவினும் என்னாது உருவென மொழியினும் என்ற தனான் உருவின் பொருளவாகிய வடிவு, பிழம்பு, பிண்டம் என்னும் தொடக்கத்தனவும் கொள்க. உரு முதலியன உயர்திணைப் பன்மை ஒருமைப் பால் ஐயத்திற்கு ஏலாமையும் ஏனைத்திணை ஐயத்திற்கு ஏற்புடைமையும் தோன்றச் சுட்டுங்காலை யென்றார்.

[1] உருபு எனப் பகர வுகரமாகப் பாடம் ஓதில், அது வேற்றுமையுருபிற்கும் உவம உருபிற்கும் பெயராய் வடிவையுணர்த்தாது என்று உணர்க.

---

1. உருவு என்பது பொருளின் வடிவத்துக்குரியதாகவும், உருபு என்பது வேற்றுமை, உவமைகளை உணர்த்த வரும் இடைச் சொற்களுக்குரியதாகவும் ஆளப்படுதல் நோக்கி இவ்வாறு மறுப்புக் கூறினார்.

"அது வென் உருபு கெட்" (வேற். மய 1) எனவும், "உருபி னும் பொருளினும் மெய் தடுமாறி" (வேற்.மய 18) எனவும், ' உருபு தொடர்ந்தடுக்கிய" (வேற் மய 19) எனவும் உருபு தொக வருதலும் (வே.ம.20 எனவும் "மெய் யுருபு தொகாஅ" (வேற்.மய 22) எனவும், "யாதன் உருபின்" (வேற் மய.23) எனவும் பிறாண்டும் வேற்றுமைக்கு உருபு என்றே சூத்திரம் செய்தவாறு காண்க 'உவம உருபு' என்றல் அவ்வோத்திற் கூறிய உரை களான் உணர்க.

அன்றியும், சான்றோர் செய்யுட்களிலும் 'உருவுகிளர் ஒளி யினை, எனவும், 'ஞாயி ற்றுருவு கிளர் வண்ணங் கொண்ட (பதிற். 52: 29, 30) எனவும், "உருவக் குதிரை" (அகம். 1, 2) எனவும், "வேண்டுருவம் கொண்டதோர் கூற்றங் கொல்" (கலி-5:9) என வும் பிறாண்டும் கூறுமாற்றான் உணர்க.

உருவு என்பது உடல், உயிர்கூட்டப் பொதுமையாகிய 'மக்கள்' என்னும் பொதுமைக்கு ஏலாது உடலையே உணர்த்து தலானும், பெற்றம் என்பது இயற்பெயராயினும் ஒருபால் சொல்லுதற் கண் ஒருபால் மேல் நில்லாது இருபால் மேல் நிற்ற லானும் வழுவமைதி ஆயிற்று.

கல்.

என்—எனின், திணை ஐயத்துக் கண்ணும், அஃறிணைப்பால் ஐயத்துக் கண்ணும் வழீஇயமையுமாறு உணர்த்துதல் நுதலிற்று.

பொருள்: உருவெனச் சொல்லுமிடத்தும், அஃறிணைப் பிரிப்பின் கண்ணும் இவ்விரண்டு கூற்றின்கண்ணும், ஐயமுரித்துக் கருதுங்காலத் தென்றவாறு என்றது. திணை ஐயந் தோன்றிய வழி 'உருபு' என்று சொல்லுக. அஃறிணைப்பால் ஐயந் தோன்றிய வழி அஃறிணை யியற் பெயராகிய பொதுப்பெயராற் சொல்லுக என்றவாறு. ஒருமையும் பன்மையும் வினையாற் பிரிக்கப்படுதலின், ஆகுபெயரான் அஃறிணை யியற்பெயர் பிரிப்பெனப்பட்டது. ஐயம் என்பது அதிகாரத்தான் வருவிக்க. திணை ஐயம், அஃறிணைப்பால் ஐயம் என்பன சூத்திரத்துள் இல்லையாயினும் 'உருவு' என்றும் 'அஃறிணைப்' பிரிப்பு என்றும் கூறிய வாய்ப்பாட்டான் உய்த்துணர்ந்து கொள்ளப்படும்.

உ—ம்: குற்றி கொல்லோ மகன் கொல்லோ இதோ தோன்றுகின்ற உரு என்பது. ஒன்றென முடித்தல் என்பதனான்

உருவேயன்றி வடிவு, பிழம்பு, பிண்டம் என்பனவற்றானும் சொல்லுக. இதற்குங்காணாதவிடத்து ஐயமும் கொள்க

இனி அஃறிணைப் பால் ஐயம், ஒன்று கொல்லோ பல கொல்லோ செய்புக்க பெற்றம் என்பது. இதற்குக் கண்ட விடத்து ஐயம் என்பதில்லை. இதனுட்டிணை ஐயத்துக் கூறிய உருவு என்னும் வழக்கு உடலுயிர் கூட்டப் பொருண்மையாகிய மகன் என்னும் நிலைமைக்கேலா அவன் உடலைப் பிரிய நின்றுணர்த்தினமையான், அதுவும் ஓர் திணை வழுவமைதி யெனப்படும்.

அஃறிணைப்பால் ஐயத்துக் கூறிய வியற்பெயர் பொது வெனினும், ஓர் சொல்லுதற்கண் ஒருபான் மேல் நிற்கற்பாலது. அவ்வாறு நில்லாது இருபால் மேலும் நின்றமையின் இதுவும் ஓர் மரபு வழுவமைதியெனக் கொள்க.

ஒரு.

என்பது திணை ஐயம் தோன்றியவழி உருவென்று சொல்லுதலும், அஃறிணையை ஒன்று பலவென்று பிரித்துச் சொல்லுதலும் இவையும் மேலதே போலப் பொதுவினானே சொல்லுதலாம். இருவீற்று முரித்தே சுட்டுங்காலை யென்பது உயர்திணைக்கும் அஃறிணைக்கும் ஒருமைக்கும் பன்மைக்கும் உரித்தான பொதுச் சொல்லாற் சொல்லுக, சுட்டிச் சொல்லுமிடத்து

உ-ம்: மும் முழங் கையரைப்போல [1]ஒக்கலும் அதற்குத் தக்க பிழம்பும் [2]மாலைப் பொழுது கண்டு ஐயுற்றான், குற்றி கொல்லோ மகன் கொல்லோ தோன்றுகின்ற வுருவென்று இருதிணைக்கும் பொதுவாகச சொல்லுக உருவினும் என்னாது உருவென மொழியினும் என்றதனான் உருவின் பொருளவாகிய வடிவெனினும், பிண்டமெனினும், பிழம்பெனினும் ஒக்கும். தோன்றுவான் தோன்றுவாள் தோன்றுவது என்று சொல்லற்க.

இனி அஃறிணைப் பால் ஐயத்துக்கண் சொன்னிகழுமாறு: ஒருவன், செய்புக்குத் தின்ற பெற்றச் சுவடு பல வாய்க் கிடந்தன கண்டான், ஒன்று, பல சுவடுபடத் திரிந்து

சு. வே: 1. ஓக்கமும்
2. மம்மர் மாலைப்.

தின்னினும், பல ஒருங்கு புக்குத் தின்னினும் சுவடுபலவாகும் ஆதலான் ஐயுற்று நின்ற வழி, ஒன்று கொல்லோ பல கொல்லோ செய்புக்க பெற்றம் என்க. பெற்றம் என்பது இருபாற்கும் உரித்தாகலின் புக்கன புக்கது வென்னற்க உருவென மொழியி னும் என்பதற்குத் திணை ஐயம் என்பது ஒப்பினாற் கொள்க.

ஆதி.

"தான் அறிபொருளில் ஐயுற்று" ஒன்றைச் சுட்டி உரு என்று கூறுமிடத்து, அஃறிணையில் (இனப்) பாகுபாடு கொண்ட பெய ரிடத்தும்—இருவகைப் பெயர்களும் குறிப்பிடற் குரியன.

அவ்வுரு ஆணோ பெண்ணோ (பால் ஐயம்—உயர்திணை)
அவ்வுரு மனிதனோ மரக்கட்டையோ (திணை ஐயம்)
அத்தொழுவின் பெற்றம் பசுவோ காளையோ (அஃறிணை யினப்பிரிவு)

அக்கூட்டின் கோழி சேவலோ பெட்டையோ	(,,)
அங்கு உலாவும் மான் கலையோ பிணையோ	(,,)
தொட்டியின் மீன் ஒருவகையோ பலவகையோ	(,,)
கூடைக் கனிவகை ஒன்றோ பலவோ	(,,)

ஐயம் துணிந்துழிச் சொல்லும் மரபு

25. தன்மை சுட்டலும் உரித்தென மொழிப
அன்மைக் கிளவி வேறிடத் தான

ஆ. மோ.

இல.

The word indicating negativeness may have the gender of the object other than the ascertained one.

க. சு:

The word anmai denoting negation may take the gender of the objeet to which it refers though used along with the word deaoting another objeet.

பி. இ. நூ.

நேமி. சொ. 7

ஐயந் திணைபாலில் தோன்றுமேல்......
அன்மை துணி பொருள் மேல் வைக்க

நன் 3/6.

ஐயம் திணைபால்.........
மெய் தெரிபொருள் மேல் அன்மையும் விளம்புப.

இல-வி 296:

திணைமயக் குற்ற ஐயப் பொருளையும்
பான்மயக் குற்ற ஐயப் பொருளையும்
....
துணிந்துழி அன்மை அல்லாமை
மறுப்பதன் மருங்கினும் மற்றதன் இடத்தும்
திறப்படச் சுட்டலும் செவ்விய என்ப.

முத்து ஓ.1

ஐயுற்றுத் துணிதரும்வழி அன்மைத்
தன்மையைச் சுட்டலும் உரிய வாகும்.

இளம்.

[1]இச்சூத்திரம் என்னுதலிற்றோ வெனின், ஐயப்பட்ட அப்பொருளைத் துணிந்தவழிச் சொல் நிகழுமாறு உணர்த்துதல் நுதலிற்று.

உரை : அன்மைத் தன்மையைச் சொல்லுதலும் உரித்து ஐயத்திற்கு வேறாய்த் துணி பொருளிடத்து, எ—று.

ஒருத்தி யெனத்துணிந்த வழி ஒருவன் அல்லள் ஒருத்தி என வரும்; ஒருவன் எனத்துணிந்த வழி ஒருத்தியல்லன் ஒருவன் எனவரும். இஃது உயர்திணைப் பால் ஐயத்துக்கண் துணிபு தோன்றியவழிச் சொல் நிகழுமாறு. மற்றையனவும் அன்ன.

[2]இனி ஒருவன், வேறிடம் என்பதனைத் துணியப்படும் பொருட்கு வேறாகி நிற்கும் பொருள் என்னும். அவன் உதாரணங்காட்டுமாறு: குற்றிகொல்லோ மகன் கொல்லோ என ஐயமுற்றான், மகன் என்று துணியின் குற்றியன்று மகன் எனவும், குற்றியென்று துணியின், மகன் அல்லன் குற்றி எனவும் வரும் என்னும்.

---

1. சூத்திர உரைகளின் இறுதியில் இதன் விளக்கம் காண்க.
2. இதைத்தான் சேனாவரையர் கொண்டார்.

[3]இனி, அல்லாத தன்மையுடையது துணியப்படும் பொருளன்றே? அதனான், அதன் கண்ணே அன்மையை வைத்துச் சொல்லுப என்ப, முன்னை யுதாரணங் காட்டுவர். [4]குற்றியல்லன் மகன் என்புழிக் குற்றியின் அல்லன் என்று ஐந்தன் உருபு விரித்துரைக்க.

சேனா.

இ—ள் : ஐயுற்றுத் துணியும் வழி அன்மைக்கிளவி அன்மைத் தன்மையைச் சுட்டி நிற்றலும் உரித்தென்று சொல்லுவர். துணிந்து தழீஇக் கொள்ளப்பட்ட பொருளின் வேறாய பொருளிடத்து, எ—று.

என்றது, குற்றி கொல்லோ மகன் கொல்லோ என்றானும், ஒருவன் கொல்லோ ஒருத்தி கொல்லோ என்றானும், ஒன்று கொல்லோ பல கொல்லோ என்றானும் ஐயம் நிகழ்ந்தவழித் துணிதலும் உண்டு பிற.

நடையுட் டுணிந்தவழி மறுக்கப்படும் பொருள்மேல் அன்மைத் தன்மை யேற்றினும் அமையும் என்றவாறு.

உ-ம் : மகன் என்று துணிந்த வழிக்குற்றியன்று மகன் எனவும குற்றியென்று துணிந்த வழி மகனல்லன் குற்றியெனவும், ஆண் மகன் என்று துணிந்த வழிப் பெண்டாட்டியல்லள் ஆண்மகன் என்வும், பெண்டாட்டியென்று துணிந்தவழி ஆண் மகன் அல்லன் பெண்டாட்டியெனவும் ஒன்றென்று துணிந்தவழிப் பல வல்ல ஒன்றெனவும், பல வென்று துணிந்தவழி ஒன்றன்று பல வெனவும் மறுக்கப்படும் பொருள்மேல் அன்மைக்கிளவி அன்மைத் தன்மையைச் சுட்டி நின்றவாறு.

---

3. இவ்வுரை வேறு போல் தோன்றினும் இளம்பூரணர் கருத்துடையதே.

4. இத்தொடர் இங்கிருப்பதால், உதாரணம் காட்டிய விடத்து 'ஒருத்தி யெனத் துணிந்தவழி' எனத் தொடங்கு முன் "மகன் எனத்துணிந்த வழிக் குற்றியல்லன் மகன் எனவரும். குற்றியெனத் துணிந்த வழிமகனன்று குற்றி எனவரும்" என்னும் தொடர்கள் இருத்தல் வேண்டும்—சிவ.

உய்மை யெதிர் மறையாகலான் வேறிடத்துச் சுட்டாமையே பெரும்பான்மை யென்பதாம். ஆகவே [1]இவ்வுருபு குற்றியன்று மகன் என ஐயப்புலமாகிய பொதுப் பொருள்மேலானுங் குற்றியல்லன் மகன் எனத் துணி பொருள் மேலானும் அன்மைக்கிளவி அன்மை சுட்டி நிற்றல் பெரும்பான்மை யென்பதாம்; என்னை? வேறிடத்துச் சுட்டாமையாவது ஈண்டுச் சுட்டலேயாகலான்.

[2]குற்றியன்று மகன் என்றவழி மகன் என்பது நின்று வற்றும் எனின்,

எவ்வயிற் பெயரும் வெளிப்படத் தோன்றி
அவ்வியல் நிலையல் செல்வி தென்ப (சொல்.68)

என்பதனான், எழுவாய் வெளிப்படாது நிற்றலும் உண்மையான் வெளிப்படாது நின்ற இவன் என்னும் எழுவாய்க்கு அது பயனிலையாகலின் நின்று வற்றுதல் யாண்டைய தென்க. அல்லனவற்றிற்கும் ஈது ஒக்கும்.

---

1. இவ்வுருபு குற்றியன்று மகன் — என்பதில் அன்று என்பது உருபு என்பதன் பயனிலையாதலின் அன்மை ஐயத்தைப் புலப்படுக்கப்பயன் படுத்தப்படும் பொதுப் பொருளாகிய உருபு என்பதன் மேல் நின்றது. 'இவ்வுருபு குற்றியல்லன் மகன்' என்ற இடத்தில் அல்லன் என்பது மகன் என்னும் துணி பொருளாகிய எழுவாய்க் குரியதாயது. வேறிடத்தைச் சுட்டாமையாவது ஈண்டுச் சுட்டுதலே = துணியப்பட்ட பொருளின் வேறாய இடத்தைச் சுட்டவில்லை யென்றால் துணியப்பட்ட பொருளையே சுட்டும் என்பது.

2. இங்குக் கூறப்பட்ட வினாவிடை 'இவன் குற்றியன்று மகன்' என்னும் உதாரணத்துக்காகும் இவன் என்னும் தோன்றா எழுவாய்க்கு மகன் என்பது பயனிலையாயின் இத்தொடரில் அன்று என்பதற்கு எழுவாய் இல்லாமல் போகும். குற்றி என்பதைக் கொள்ளின் இவன் மகன் என ஒரு எழுவாய்த் தொடரும், குற்றியன்று என வேறொரு எழுவாய்த் தொடரும் என இரு தொடராகிக் குற்றப்படும். அதனால் 'இவ்வுரு குற்றியன்று மகன்' என்னுந் தொடருக்கே இவ்வினா விடை பொருந்தும்.

[3]குற்றியலன் என்புழிக் குற்றி என்பது அல்லன் என்னும் சொல்லோடியைந்தவா றென்னை யெனின், இவ்வுருபு குற்றி யாம் என்ற வழி ஆம் என்பதனோடு குற்றியென்பதூஉம் எழு வாயாய் நின்றே இயைந்தாற் போல, இவன் குற்றியல்லன என் புழி ஆம் என்பதன் எதிர்மறையாகிய அன்மைக்கிளவியோடும் குற்றியென்பது எழுவாயாய் நின்றே இயையும் என்பது. எழு வாய் இயைதலினன்றே [4]'யான் நீ யல்லன்' என்புழி, நீ என்பது வேற்றுமைக்கேற்ற செய்கை பெறாது நின்றதென்க.

தெய்.

மேல் ஐயப்பட்ட பொருள் துணியப் பட்டவழிச் சொல் நிகழுமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ—ள்: துணியப்பட்ட பொருளின் வேறாகிய பொருட்கண் வரும் அன்மைக் கிளவி, துணியப்பட்ட பொருளைச் சுட்டலும் உரித்தென்று சொல்லுவர் புலவர், எ—று.

தன்மை யென்பதனான், அப்பொருட்கு இயல்பு என்பது பெற்றாம். பெறவே துணியப்பட்ட பொருளாயிற்று. வேறிடத்து

---

3. குற்றியல்லன்—குற்றி அஃறிணை; அல்லன் உயர்திணை. எனவே குற்றியென்பது அல்லன் என்பதோடு இயை யாது. இயைந்தவாறு என்னை என்பது வினா—விடை: குற்றியல்லன் என்பதைப் பிரிக்காமல் இவ்வுருக் குற்றி யாம் என்றவிடத்துக் குற்றி என்பது ஆம் என்பதோடு இயைந்து குற்றியாம் என ஒரு சொல் நிலையில் நின்று இவ்வுரு என்பதற்குப் பயனிலையாய் அமைவதுபோல, இவன் குற்றியல்லன் என்பது குற்றியல்லன் என நிற்ற லின் இவன் என்னும் தோன்றா எழுவாய்க்குக் குற்றி என்பது ஆம் என்பதன் எதிர்மறையாகிய அல்லன் என் பதுடன் இயைந்து குற்றியல்லன் என ஒரு சொல் நிலை யில் நின்று பயனிலையாம் என்பது. யான் என்னும் தன்மைெ யாருமை எழுவாய்க்கு அல்லன் என்னும் தன்மை யொருமைப் பயனிலையில் நீ என்னும் முன் னிலை ஒருமைப் பெயர் சேர்ந்து நீயல்லன் எனப் பயனி லையானது போலக் கொள்க.

4 'நான் நீயல்லன்' என்பது 'யான் நீயல்லேன்'
என்றிருத்தல் நலம் — 'அன்' விகுதி
தன்மை யொருமை விகுதிக்கு வருதல்
தொல்காப்பியர் கருத்தன்று'' — பூவராகம் பிள்ளை

அன்மைக்கிளவி தன்மை சுட்டலும் உரித்தெனக் கூட்டுக. உம்மை யெதிர்மறை யாதலால் சுட்டாமை பெரும்பான்மை.

உ-ம்: [1]குற்றியல்லன் மகன், மகன் அன்று குற்றி, பெண்டாட்டியல்லன் ஆண் மகன், ஆண்மகள் அல்லள் பெண்டாட்டி, ஒன்றல்ல பல, பலவன்று ஒன்று—இவை [2]துணியப்பட்ட பொருளைச் சுட்டி வந்தன.

குற்றியன்று மகன்; மகனல்லன் குற்றி; பெண்டாட்டியல்லள் ஆண்மகன்; ஆன்மகன் அல்லன் பெண்டாட்டி; ஒன்றன்று பல; பலவல்ல ஒன்று—இவை துணியப்படாத பொருளைச் சுட்டி வந்தன. (இப்பகுதி உரைக் கோவையில் காணப்படவில்லை)

குற்றியல்லன் மகனே எனத் தேற்றேகாரங் கொடுத்துழி அன்மை துணியப்பட்ட பொருளைச் சுட்டின் குறறி நின்று வற்றும்; ஆதலால் அன்மைக்கிளவி அல்லாத பொருளைச் சுட்டுதல் ஆசிரியர் மதம் என்று கொள்க.

நச்.

இது முன்னர்க் கூறிய பால் ஐயத்தையும் திணை ஐயத்தையும் துணிந்து கூறும் வழி, அவற்றிற்கு அன்மைத் தன்மை கூறும் மரபு கூறுகின்றது.

இ—ள்: தன்மைச் சுட்டலும் உரித்து—ஒருவர்க்குப் பால் ஐயமும் திணை ஐயமும் நிகழ்ந்துழி அங்ஙனம் ஐயுறவே அன்றி

---

1. குற்றியல்லன் மகன். இதில் துணியப்பட்ட பொருள் மகன்; வேறான பொருள் குற்றி. அன்மைச் சொல் வேறான பொருளாகிய குற்றி என்பதனோடு சேர்ந்து குற்றியல்லன் என வந்தது. வந்தாலும் துணியப்பட்ட மகனைச் சுட்டுகிறது. எப்படிஎனின் அல்லன் என்பதன் இறுதி அன் ஆண்பாலுக்குரியதாகலின் மகனைச் சுட்டியதாகும். இவ்வாறு வருவது சிறுபான்மை. குற்றியன்று மகன் என வழங்குவதே பெரும்பான்மை—இவ்வாறே இளம்பூரணர் முதலியோர் கொள்வர். சேனாவரையர் மட்டில் மாறுபடுவர்.

2. துணியப்படாத என்பது உரைக் கோவைப்பாடம். இது தவறு.

அவர்க்கு அப்பொருள்களின் உண்மைத்தன்மையைக் கருதுதலும் உரித்து, அன்மைக் கிளவி வேறு இடத்தான என மொழிப— ஆண்டு ஒரு பொருள் ஒரு பொருள் அல்லவாம் தன்மை யுணர்த்தும் சொல் ஐயத்துக்கு வேறாய்த் துணிந்து தழீஇக் கொண்ட பொருளின்கண்ண என்று கூறுவர் ஆசிரியர், எ—று

உ—ம்: இவன் பெண்டாட்டி அல்லன்; ஆண்மகன். இவள் ஆண்மகன் அல்லள்; பெண்டாட்டி. இவன் குற்றி அல்லன்; மகன்.

இவ்வுருமகன் அன்று; குற்றி. இப்பெற்றம் பலவன்று; ஒன்று. இப்பெற்றம் ஒன்றல்ல; பல எனவரும்.

இவன் என்னும் எழுவாய் அல்லன் என்பதனோடு முடிந்தது. மகன் என்பது இவன் என்னும் சுட்டுப் பெயர்க்குப் பெயர்ப் பயனிலையாய் நின்றது. இவற்றிற்கு ஐந்தாம் உருபு விரித்தலும் ஒன்று, பெண்டாட்டியின் அல்லன என.

இனிச் சேனாவரையர் முன்னிற் சூத்திரத்தில் உருவென்ப தனை ஆண்மகன் கொல்லோ பெண்டாட்டி கொல்லோ இத் தோன்றா நின்ற உருபு எனப்பால் ஐயத்திற்கு உருவு என்னும் ஐயப்புலப் பொதுச்சொல் உரித்து என்று உதாரணம் காட்டி இச்சூத்திரத்தில் அன்மைக்கிளவி மறுக்கப்படும் பொருள் மேல் ஆம் என்று கூறினாரால் எனின், அவர் உதாரணம் காட்டிய வற்றில் ஆண் மகன் என்று துணிந்த வழிப் பெண்டாட்டியல்லள் ஆண் மகன் என்றும், பெண்டாட்டி என்று துணிந்த வழி ஆண் மகன் அல்லன் பெண்டாட்டி என்றும் மறுக்கப்படும் பொருள் மேல் அன்மை கூறி அவற்றிற்கு இவ்வுருவு பெண்டாட்டி அல்லள் ஆண் மகன் என்றும், இவ்வுரு வாண் மகன் அல்லன் பெண்டாட்டி என்றும் உருவு என்னும் சொல் கூட்டியே பொருள் முடிக்க வேண்டுதலின் உருவு என்னும் அஃறிணைப் பெயர் அல்லன் அல்லள் என்னும் உயர்திணை வினைக் குறிப்போடு முடியாமையுணர்க. அன்றியும் இவன் பெண்டாட்டி அல்லள் ஆண்மகன், இவள் ஆண் மகன் அல்லன் பெண்டாட்டி என அவர் சொல் முடித்தற்குக் கூட்டிய சுட்டுப் பெயர் கூட்டி னும் *முடியாமையும் உணர்க.

---

* முடியாமை—எழுவாயும் பயனிலையுமாய் முடியாமை. இவன் அல்லன் என்பதோடு முடியாமை காண்க.

இனிக் குற்றியோ மகனோ என்று ஐயுற்றான் மகன் என்று துணிந்தது, மக்கள் தன்மையை ஆண்டுப் பெற்றன்றே? அது பெறவே குற்றிததன்மை ஆண்டு இல்லையாயிற்று. ஆண்டு இல்லாத குற்றித்தன்மையன் அல்லன் மகன் ஆதலான் அஃது அல்லாதான் மேல் அன்மை ஏற்றுதலே ஆசிரியா கருத்து என்றுணர்க. இனிக் குற்றி யென்று துணியினும் இஃது ஒக்கும். உம்மை எண்ணும்மை.

கல்.

என்—எனின், துணி பொருட்கண் மரபிலக்கணம் கூறுதல் நுதலிற்று.

பொருள் : தனது தன்மையாகிய அன்மைத் தன்மையைச் சொல்லுதலும் உரிதது என்று செலலுப ஆசிரியர்; அது அன்மைப் பொருள் எவ்விடத்தெனின், ஐயததுககு மறுதலையாகிய துணி விடத் தென்றவாறு. தன்மை சுட்டல் என்புழி இன்ன தன்மை யென்பது இன்றேனும் மேல் அன்மைக் கிளவி என்றதனான் அன்மைத் தன்மை என்பது ஓர் ஒபபிற் கொள்க. கிளவி என்பது பொருள்.

உ. ம் : பெண்டாட்டியல்லன் ஆண் மகன். ஆண் மகன் அல்லள் பெண்டாட்டி. குற்றியல்லன் மகன், மகனன்று குற்றி. பலவன்று ஒன்று, ஒன்றல்ல பல என்பன.

பெண்டாட்டியல்லன் ஆண் மகன் என்புழி, ஆண்மகன் என்னும் பெயர் எழுவாயாய், அல்லன் என்னும் வினைக் குறிப் பினைப் பண்பு கொள வருதல் என்னும் பயனிலையாக முன்னே கொண்டு நின்றமையின், பெண்டாட்டி யென்னும் பெயர்க்கு முடிவில்லையெனின், அதற்கு உருபு தொகையாக்கி, நீக்கப் பொருட்கண் ஐந்தாவதனைப் பெண்டாட்டியின் அல்லன் என விரித்து முடிவு கொள்க. இதனால் சொல்லியது என்னையெனின், இரு பொருளை ஐயுற்றுத துணியும் வழி அவ்வையுற்ற பொருட் டன்மை இத்துணி பொருளிடத்து இன்மையும், துணிபொருட்கட் டன்மை அவ்வையப் பொருட் கண் இன்மையும் காணுமன்றே? கண்டுழி இஃதன்மை அதற்கும் அஃதன்மை இதற்கும் அன்மை, யாதானும் ஒன்றன்மேல் ஆக்கிக் கொடுப்பினும் அமையும் என்று கருதுக. இஃதன்மை யதற்கும் உண்டேயெனினும் துணிந்தவழி

யுள் பொருளாய் நின்று காணப்பட்டது அஃதன்மையாதலின் இதன் மேல் இறுக்கும் என மரபிலக்கணம் கூறியவாறாயிற்று.*

ஒரு.

என்பது உண்மைத்தன்மையான பொருளைச் சுட்டல் உரித் தாம் என்பர், அன்மைச் சொல்லைத் துணிந்த பொருள் மேல் வைத்துச் சொல்லின்.

உ—ம்: வேற்றிடந் துணிந்த பொருள் ஆண்மகன் கொல்லோ பெண்டாட்டி கொல்லோ என்றையுற்றால், ஆண் மகன் என்று துணிந்து சொல்லுமிடத்துப் பெண்டாட்டியல்லள் ஆண்மகன் எனக.

இனிப் பெண்டாட்டி யென்று துணிந்தவழி, ஆண்மகன் அல்லன் பெண்டாட்டி யென்க. இது உயர்திணைப் பால் ஐயம். குற்றி மகன் எனத் திணை ஐயம் தோன்றியவழி மகனன்று குற்றியென்றும், குற்றியல்லன் மகன் என்றும் சொல்லுக. அஃறிணைப்பால் ஐயத்துக்கண், ஒன்றல்ல பலவென்றும், பல வன்று ஒன்றென்றும் சொல்லுக. ஐயப்பட்டுத் துணிந்துழிஇ யெல்லாத்துணி பொருளிடத்தும் அ= மைச் சொல்லை வைத்துச் சொல்லுக. இவ்வாறு சொல்லுங்கால் ஐந்தாம் உருபு புலப் படாது நீக்கத்தின் கண்ணே நிற்கும் என்று கொள்க. யாதோ நின்றவாறெனின், பெண்டாட்டி யல்லன் என்புழி பெண்டாட்டி யின் அல்லன் என்றும், குற்றியல்லன் என்புழிக் குற்றியின் அல்லன என்றும், ஒன்றின் அல்ல என்றும் இவ்வாறு மற்றை யனவும் அறிக.

இனியொருசார் அன்மைச் சொல்லை ஐயப்பொருளின் கண் வைத்துச் சொல்லுப. சொல்லு மாறு: பெண்டாட்டி யல்லள் ஆண்மகன் என்றும், ஆண்மகன் அல்லன் பெண்டாட்டி யென்றும், ஒன்றன்று பலவென்றும், பலவல்ல ஒன்றென்றும் சொல்லுப. அவர் சொன்முறையறியாராதலான் அஃதுரை யன்மை யறிக. இது அம்மூன்றிடத்தும் துணிவு தோன்றியவழிச் சொல் நிகழுமாறு கூறிற்று.

ஆதி.

ஐயுற்று ஒன்றை அன்று என அறிவிக்குஞ் சொல் அதற்கு வேறான அடுத்ததின் தன்மையைக் குறித்து நிற்பதும் ஆகும்.

---

* இப்பகுதி அத்துணைத் தெளிவின்று.

அன்மைக்கிளவி—அன்று என மறுக்குஞ் சொல். அது குற்றி அன்று (மனிதன் எனச் சுட்டுகிறது) அவ்வுரு ஆண் அன்று (பெண் எனச் சுட்டுகிறது) எனமொழிப—அசைநிறை

வேறிடத்து அன்மை சுட்டலும் உரித்து என்றதனால்—தன் உண்மை இயல்பையும் சுட்டும் என அறிவிக்கின்றது.

அவன் தீயவன் அல்லன்—(இவனே தீயவன் என்று அடுத்தானை அறிவிப்பதோடு) அவன் நல்லன் என்றும் அறிவிக்கின்றது.

இங்குள்ள சோறு சுவையன்று—அங்குள்ள சோறுதான் நல்லது என அடுத்ததை அறிவிப்பதுடன—(இங்கு சோறு சுவையில்லை) மற்றக் காப்பி பண்டங்கள் சுவையானவை என்று, இதன் இயல்பையும் அறிவிக்கின்றது.

இவன் இப்பொழுது படிக்கின்றானல்லன்— முன்னர்ப் படித்தான் என்று அவனைப் பற்றியும் (இவன் படிக்கின்றான் அல்லன்) அவன் படிக்கின்றான் என அடுத்தவனை அறிவிப்பதும் காண்க

சிவ.

இச்சூத்திரம், ஐயுற்ற பொருள்களில், ஒன்று துணியப்படும் போது ஒன்று அன்று என்ன வேண்டும்; அந்த அன்று என்னும் சொல்லை எப்படி ஆளவேண்டும் என்பது உணர்த்துகிறது.

குற்றியோ மகனோ—திணை ஐயம்
ஆணோ பெண்ணோ—உயர்திணைப்பால் ஐயம்.

ஒன்றோ பலவோ—அஃறிணைப்பால் ஐயம்.

இம்மூன்றனுள் முதலில் உள்ள திணை ஐயம் பற்றிக்காணலாம். குற்றியோ மகனோ என்ற ஐயத்தில் துணிவு முறபடும்போது

குற்றியன்று மகன்
குற்றியல்லன் மகன்

என இருவகையிலும் வழங்கப்படும். இவற்றுள் அன்று அல்லன் என்பன அன்மைக்கிளவிகள். தழீஇக் கொள்ளப்பட்ட பொருள் மகன்; அதற்கு வேறான பொருள் குற்றி.

'குற்றியன்று மகன்' என்பதில் தழுவிக் கொள்ளப்பட்ட பொருளாகிய மகனுக்கு வேறான பொருளாகிய குற்றியைச் சுட்டுவது 'அன்று' என்பது.

குற்றியல்லன் மகன் என்பதில் தழுவிக்கொள்ளப்பட்ட பொருளாகிய மகனைச் சுட்டுவது அல்லன் என்பது.

இவ்விரண்டுதாரணங்களுள் எது பற்றியது இச்சூத்திரம் என்பதில் உரையாளர்களுள் மாறுபாடுண்டு.

மேலும் இல்விரண்டனுள் பெருவழக்கு எது; சூத்திரத்திற் கூறியவாறு அருகிய வழக்கு எது என்பதிலும் மாறுபாடுண்டு.

அதனால் இச்சூத்திரத்தில் உள்ள வேறிடம் என்பதற்குக் கொள்ளும பொருளிலும் மாறுபட்டனர் அவர்.

இளம்பூரணர் வேறு இடம் என்பதற்கு ஐயத்துக்கு வேறாகத் துணியப்பட்ட இடம் எனப்பொருள் கொண்டார். ஐயம் துணிபு என்னும் இரண்டனுள் ஐயத்துக்கு வேறானது துணிபு ஆதலின் அவ்வாறு கொண்டார். குற்றியல்லன் மகன் என்பதில் மகன் என்பது துணியப்பட்டது. அதில் வைக்கப்பட்டது அல்லன் என்பது. அல்லன் என்பதற்கு எழுவாய் மகன் ஆதலின் அன்மைச் சொல் மகனிடம் வைக்கப் பட்டதாம். இவ்வாறு கூறுவது அருகிய வழக்கு. சுட்டலும் என்பதன் உம்மை எதிர் மறையாக லான் இவ்வழக்கு அருகியது. அதனால் குற்றியன்று மகன் எனத் துணியப்பட்ட பொருளுக்கு மாறான பொருளில் அன்மை வைத்துச் சொல்வதே பெருவழக்கு.

குற்றியல்லன் மகன்—அல்லன் என்பதன் எழுவாய் மகன் இது அருகிய வழக்கு

குற்றியன்று மகன்—அன்று என்பதன் எழுவாய் குற்றி இது பெருவழக்கு.

சேனாவரையர் 'வேறிடம்' என்பதற்கு துணியப்பட்ட பொருளுக்கு வேறுபட்ட இடம் எனப் பொருள் கொண்டார். குற்றி மகன் என்னும் இரண்டனுள் மகன் துணியப்பட்ட பொருளாயின் அதற்கு வேறான இடம் குற்றியாகும். அவ்வேறான இடத்தில் அன்மைச் சொல் வைத்துச் சொல்லு தலை இச்சூத்திரம் குறிப்பிடுகிறது. அதாவது குற்றியன்று மகன் எனக்கூற வேண்டும் என்பது பற்றியது இச்சூத்திரம். இது சிறுபான்மை வழக்கு சுட்டலும் என்பதில் உள்ள எதிர்மறை உம்மையால் சுட்டாமையே பெருவழக்கு ஆதலின் குற்றியல்லன் மகன் எனக் கூறலே பெருவழக்கு.

குற்றியன்று மகன்—அன்று என்பதற்கு எழுவாய் குற்றி. இது அருகிய வழக்கு.

குற்றியல்லன் மகன்—அல்லன் என்பதன் எழுவாய் மகன் பெருவழக்கு.

சேனாவரையர் தவிர மற்றையோர் ஒத்த கருத்தினரே.

வண்ணச் சினைச் சொல் மரபு

26. அடைசினை முதலென முறைமூன்று மயங்காமை
நடைபெற் றியலும் வண்ணச் சினைச்சொல்

ஆ. மொ.

இல.

When the colour or the size or a part of the whole is given, the order is the adjective which indicates the colour, the size and the part of the whole in a sentence.

க. சு.

In an utterance (denoting a whole, its limb, and the quality of the limb), the word denoting the limb invariably follows the qualifier and precedes the word denoting the whole.

பி. இ. நூ.

நேமி. சொ. 4.

......அடையும் சினையும் முதலுமாய்
வண்ணச் சினைச்சொல் வரும்

நன். 403.

அடை சினை முதல் முறை அடைதலும் ஈரடை
முதலோ டடைதலும் வழக்கியல் ஈரடை
சினையோடு செறிதலும் வயங்கலும் செய்யுட்கே

இல. வி. 314.

ஷை ஷை

தொன். வி. 3.

ஷ ஷ

முத்து. ஒ. 62.

பண்பும் சினையும் முதலும் முறையே
மயங்கா தியலும் வண்ணச் சினைச்சொல்

இளம்.

இச்சூத்திரம் என்னுதலிற்றோ வெனின், இதுவும் ஒரு சொல்லுதல்-வன்மை யுணர்த்துதல் நுதலிற்று

உரை: அடை சினை முதல் எனப்பட்ட மூன்றும் முறை மயங்காது வருவன வண்ணச் சினைச் சொல் எ—று

அடை யென்பது ஒரு பொருளது குணம்; சினை என்பது உறுப்பு; முதல் என்பது அவ்வுறுப்பினையுடையது.

வ—று: பெருந்தலைச் சாத்தன், செங்கால் நாரை எனவரும்

அடை சினை முதல்என வரூஉம் மூன்றும் என்னாது, முறை என்றதனான் இருகுணம் அடுக்கி முதலொடு வருதலும் இரு குணம் அடுக்கிச் சினையொடு வருதலும் கொள்க.

முதலொடு குணமிரண் டடுக்குதல் வழக்கியல்
சினையொ டடுக்கல் செய்யு ளாறே

என்பது புறச் சூத்திரம்.

உ-ம்: இளம் பெருங் கூத்தன், எனவரும் வழக்கினுள். "சிறுபைந்தூவிச் செங்காற் பேடை" (அகம். 57) எனவரும் செய்யுட்கண்.

இளம் பெருங் கூத்தன் என்றக்கால், இளமை பெருமையை நோக்கி நின்றதன்று; கூத்தன் என்னும் பெயரையே நோக்கி நின்றதென வுணர்க [1]நடைபெற்று இயலும்' எனல் வேண்டா எனின், நடையென்பது வழக்கு; வழக்கினுள் மயங்காது வரும் என்பதாம்; செய்யுளுள் மயங்கி வரும் என்பதாம். [2]வ-று: பெருந் தோட் சிறு மருங்குற் பேரமர்க்கட் பேதை எனவரும்

---

1. நடைபெற்று இயலும்—வழக்கினுள் கூறப் பெற்று அமையும். வாளாகூறினாலே உலகவழக்கு பெறப்படும். அதனால் நடை என்பது மிகை எனக்கருதினர் இளம்பூரணர்.

2. சேனாவரையர் இவ்வுதாரணத்தை மறுப்பர்.

சேனா.

இ—ள் : பண்புச் சொல்லும் சினைச்சொல்லும் முதற் சொல்லும் என மூன்றுங் கூறப்பட்டமுறை மயங்காமல் வழக்கைப் பொருந்தி நடக்கும், வண்ணச்சொல்லோடு தொடர்ந்த சினைச் சொல்லை யுடைய முதற்சொல், எ—று.

வடிவு முதலாகிய பிறபண்புமுளவேனும் வண்ணப்பண் பினது வழக்குப் பயிற்சி நோக்கி வண்ணச் சினைச் சொல் என்றார்.

உ-ம் : செங்கால் நாரை, பெருந்தலைச் சாத்தன் என வரும். கால் செந்நாரை, தலைப் பெருஞ் சாத்தன் என முறை மயங்கிவரின் மரபு வழுவாம் என்க.

வழக்கினுள் மயங்காது வரும் எனவே,
செவிசெஞ் சேவலும் பொகுவலும் வெருவா
வாய்வன் காக்கையும் கூகையுங் கூடி (புறம். 238)

எனச் செய்யுளுள் மயங்கியும் வரப்பெறும் என்ற வாறாம் செவிசெஞ் சேவல், வாய்வன் காக்கை என்பன செஞ்செவிச் சேவல், வல்வாய்க் காக்கை என்னும் பொருள்பட நின்றமையின் வண்ணச் சினைச் சொல் மயக்கமாயின. அஃதேல் சினையடை யாகிய செம்மையும் வன்மையும் முதலடையாயினவா றென்னை யெனின் சினையொடு முதற் கொற்றுமை யுண்மையான் அவை முதலொடும் இயைபுடைய வென்பது.

[1] "பெருந்தோட் சிறுநுசுப்பிற் பேரமர்க்கட் பேதை" என் புழி மூன்றாம் வழி முதல் கிடவாது பின்னும் அடையும் சினையும் புணர்த்தமையான் வண்ணச் சினைச் சொல் செய்யுளுள் மயங்கி வந்ததென்று உரையாசிரியர் கூறினாரால் எனின், மூன்றாம் வழிப் புணர்க்கப்படும் பேதை என்னும் முதற் சொல் பேரமர்க் கண் என்னுந் தொகையோடு வேற்றுமைப் பொருள்படத் தொக்கு, அத்தொகை சிறுநுசுப் பென்னுந் தொகை

1\. 1. பேதை என்பது, முதல். அது பேரமர்க்கண் என்னும் அடை சினைகளுடன் சேர்ந்து பேரமர்க்கண் பேதை ஆயிற்று. பேரமர்க்கண் பேதை என்பது முதல்; அது சிறுநுசுப்பு என்னும் அடைசினைகளுடன் சேர்ந்து சிறு நுசுப்பிற் பேரமர்க்கண் பேதை என நின்று முதலா யிற்று. அம்முதல் பெருந்தோள் என்னும் அடைசினை

யோடும் அப்பொருள்படத் தொக்கு ஒரு சொல்லாய் பெருந்தோட் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி என்றாற் போல் மூன்றாம் வழிப் பிற சொல்லடுத்துப் பேதை என்னும் முதல் கிடந்தது எனவே படுதலின், மயக்கம் இன்மையான், அவர்க்கது கருத்தன்றென்க. அன்றிப் பெருந்தோள் முதலாகிய மூன்றும் பலபெயர் உம்மைத்தொகை படத் தம்முள் தொக்கு ஒருசொல்லாய்ப் பின் பேதையென்பதனோடு வேற்றுமைத் தொகை படத் தொக்கன வெனினும், அவை உம்மைத் தொகை படத் தொகாது நின்று பேதை யென்பதனோடு வேற்றுமைத் தொகைபட ஒருங்கு தொக்கன எனினும், தம்முள் இயையாது பேதை என்பதனோடு இயைதலின் ஆண்டும் மயக்கம் இன்மை யறிக. அஃதேல், இவ்வாறு வருதல வழக்கிற்கும் உரித்தோ வெனின், அடுக்கிய அடையும் சினையும் பொதுமை நீக்குதற் கன்றி அணிகுறித்து நிற்றலிற் செய்யுட்கே யுரித்தென்பது[2]

'சிறுபைந்தூவி' எனச் சினையொடு குணம் இரண்டடுக்கி வருதல் செய்யுட்குரித் தென்றும், 'இளம் பெருங் கூத்தன்' என முதலொடு குணம் இரண்டடுக்கி வருதல் வழக்கிற் குரித் தென்றும் பிறர் மதம் மேற்கொண்டு கூறினார். ஒன்றாக பல வாக இனஞ்சுட்டாதன செய்யுட்குரியவாம். இனஞ்சுட்டி நின்றன வழக்கிற்குரியவாம் என்பதே உரையாசிரியர் கருத் தென்க. அன்றிப் பிறநூல் முடிந்தது தானுடம்படுதல் என்பத னாற் சினையொடு குணம் இரண்டடுக்கல் செய்யுளாறென்று கொள்ளினும் அமையும்.

களுடன் சேர்ந்து பெருந்தோட் சிறுநுசுப்பின் பேரமர்க்கட் பேதை என்றாயிற்று.

(2) பெருந்தோள் சிறுநுசுப்பின் பேரமர்க்கண்-இவை ஒரு தொடராய் உம்மைத் தொகையில் அமைந்து அடையும் சினையுமாகிப் பேதை என்பதுடன் (முதலுடன்) சேர்ந்தது.

(3) பெருந்தோட் பேதை, சிறுநுசுப்பிற் பேதை, பேரமர்க் கண் பேதை எனவும் இயையும். இவற்றால் செய்யுளில் மயங்கி வந்தன வல்ல என்க.

(2) இக்காரணங்கள் எல்லாம் அடை சினை முதல் என அமையாமைக்குக் கூறப்படுதலின் வழுவே என்றும் செய்யுளாதலின் அமையும் என்றும் கொள்வதே பொருந்தும்.

முதலொடு குணமிரண் டடுக்கல் வழக்கியல்
சினையோ டடுக்கல் செய்யு ளாறே

என்றாராகலின்.

வண்ணச் சினைச்சொல் என்றதனால் வண்ணமும் சினையும் முதலும் கூறுதற் கண்ணது இவ்வாராய்ச்சியென்பதாம். எனவே, இளம் பெருங் கூந்தன், பெரும் :லாக்கோடு என்னுந்தொடக்கத்தன வேண்டியவாறு வரப்பெறும் என்றவாறு. மயங்காது வருக என மரபு வழுக்காத்தவாறு

தெய்

ஒரு சார் மரபு வழுக்காத்தலை நுதலிற்று.

இ—ள் : வண்ணம் பெற்ற சினையையுடைய பெயர்ச் சொல் முற்பட அடையும், அதன்பின் சினையும், அதன்பின் முதலுமாகி அம்முறை மயங்காமை வழக்குப் பெற்றியலும், எ—று

வண்ணச் சினைச் சொல் மயங்காமை நடைபெற்றியலும் எனவே, வண்ணமுதற் சொல் மயங்கியல்லது நடவாதென்றவாறாம்.

இதனாற் பெற்ற பொருள் என்னையெனின், பொருட்கு உளதாகிய பண்பும, சினையும் பொருளொடு அடுத்துக் கூறக் கருதுவானாயின், பொருண்மேற் செல்லாது சினைமேற் செல்லும் அறிவித்தற் என்பது கொள்க.

உ. ம்: செங்கால்நாரை : வண்ணம் சினை மேல் ஏறி முதலொடு முடிந்தது. கருங் கோட்டியானை எனப் பண்பினை முதலொடு அடுத்துக் கூறக் கருதுவானாயின் கருமை யானையின் மேற் செல்லாது கோட்டின் மேற் செல்லுதலின் இம்முறை நடைபெறாதாயிற்று.

வந்தது கொண்டு வாராதது முடித்தல் என்பதனால் வடிவு முதலாய பண்பும் கொள்ளப்படும். உம்—ம்: சிறு கண் யானை.. பிறவு மன்ன.

அடையென்று பொதுப்படக் கூறியவதனால் ஒரு பொருள் மேல் அடையிரண்டு வருதலும் கொள்க. கருநெடுங் கூந்தற காரிகை என வரும்.

முறை மயங்காமை என்றதனால் மயங்குமாயின் குறித்த பொருள்மேற் செல்லா தென்க.

உ. ம்: பெருந்தலைப் புல்லார் நல்லார் என்றவழிப் பெருந்தலை என்பது புல்லோர்ச் சார்ந்து வருதலிற் சொல்லுவான் குறிப்புள் ஒன்றாயினும் அதன்மேற் செல்லாதாயிற்று

''கவி செந்தாழிக் குவிபுறத்திருந்த, செவிசெஞ் சேவலும்'' (புறம் 238) என முறைமயங்கி வந்ததால் எனின் ஆண்டுச் செஞ்செவி என்பது மொழி மாறி நின்றதென்க.

நச்.

இது வண்ணச் சினைச் சொற்கண் மரபு கூறுகின்றது.

இ—ள்: அடைசினை முதல் என மூன்றும்—பண்புச் சொல்லும் சினைச்சொல்லும் முதற் சொல்லும் என்ற மூன்றும், முறை மயங்காமை நடைபெற்று இயலும்—கூறப்பட்ட முறை மயங்காமை வழக்கைப் பொருந்தி நடக்கும். வண்ணச் சினைச் சொல்—வண்ணம் முதலாகிய பண்புகளோடு தொடர்ந்த சினைச் சொல்லை உடைய முதற் சொல். எ—று.

மீட்டும் வண்ணச் சினைச் சொல் என்றது, அச் சொற்குப் பெயர் கூறிற்று

உ—ம்: செங்கால் நாரை, பெருந்தலைச் சாத்தன் என வழக்கினுள் மயங்காது எனவே, செய்யுளுள்,

''கவிசெந்தாழிக் குவிபுறத்திருந்த
செவிசெஞ் சேவலும் பொகுவலும் வெருவா
வாய்வன் காக்கையும் கூகையும் கூடி''

என மயங்கியும் வருமாயிற்று. சினையொடு முதற்கு ஒற்றுமையுடைமையான் முதலொடும் இயைந்தன.

பெருந்தோள் சிறு நுசுப்பின் பேரமர்க்கண் பேதை என்பதும் அவ்வாறே மயங்கி வந்தது. செய்யுளாதலின். பெருவழுதுணங்காய் என்பது பெருமை முதல்மேலே கூறுதலின் சொல்லுவான் கருத்து வேறாயிற்று இன்னும் வழக்கினுள் மயங்காது என்றதனாம் சிறு பைந்தூவி எனச் சினையொடு குணம் இரண்டு அடுத்தல் செய்யுள்ளாறு என்க

இளம் பெருங்கூத்தன் என்பது சினையின்மையின் வேண்டியவாறு வந்தது.

கல்.

என்-எனின், வண்ணச் சொல்லதோர் மரபு கூறுதல் நுதலிற்று.

பொருள்: பண்பினையுணர்த்தும் சொல் முன்னர், பண்பினை யுடைய சினைப் பொருளை யுணர்த்தும் சொல் அதற் பின், அச்சினையையுடைய முதற் பொருளை யுணர்த்தும் சொல் அதன் பின்னதென்று கேட்டான் அடைவு கருதும்படி அம் மூன்றும் அமமுறைமையில் மயங்காமல் வழக்குப் பெற்று நடக்கும் யாத்து வண்ணச் சினைச்சொல் என்றவாறு.

உ-ம்: பெருந்தலைச் சாத்தன், செங்கால் நாரை எனவரும். பெரும்பலாக்கோடு, பெருவழுதுணங்காய் என மயங்கியும் வருமாலோ எனின், *அவை சொல்லுவான் கருத்துவேறு; பெரும்பலா, பெருவழுதுணை எனப் பெருமை முதல் மேல் நோக்கி நின்றமையின்.

பெருந்தலைப் புல்லாநல்லேறு எனவும், நெட்டிலை விளவின் கட்டெங்கு எனவும் மயங்கியும் வருமாலோ எனின், அவ்வாறு மயங்கக் கூறுவன கண்டன்றே இவ்விலக்கணம் எழுந்தது. இதனால் அதனை அழிவழக் கென்று மறுக்க. பெருந்தலையினை யுடையதும் வெறும் புல்லா நல்லேறும் வேறு பொருள் கொண்டி யையுமால் அதுவும் எனின், அவ்வாறு பொருள் கோடல் செய்யுட் கல்லது இன்றென்று மறுக்க. முறை என்றதனானே, ஒரு முதற் பொருட்கண் இரண்டு பண்பு அடுத்து வருவனவும் வழக்கினுள் உளவென்று அமைத்துக் கொள்ளப்படும்

[1]உ-ம்: இளம் பெருங் கூத்தன், சிறு கருஞ்சாத்தன் என வரும். இளமை யென்னுஞ் சொல் பெருமை யென்பதனோடு இன்றாய்க் கூத்தன் என்பதனோடு இயைபு கோடல் மரபு இன்மையின் அமைக்கப்பட்டது.

---

* அவ்வாறு மயங்கி வருவன கண்டன்றே இவ்விலக்கணம் எழுந்தது; இதனால் அதனை அழிவழக்கென்று மறுக்க. பெருந்லையானையுடையதும் வெறுமபுல்லா நல்லேறும் (?) வேறு பொருள் கொண்டு இயையுமாவதும் எனின்— அவ்வாறு பொருள் கோடல் செய்யுட்கலலது இன்றென்று மறுக்க—கழகப்பதிப்பு. விளக்கமில்லை.

1\. இளம் பெருங்கூத்தன் என்பதில் சினைச் சொல இல்லாமையால் வேண்டியவாறு வரப்பெறும் என்றார் நச்சினார்க்கினியர்.

இன்னும் இவ்விலேசானே, சினைப் பொருட்கண் இரண்டு பண்பு அடுத்து வருவனவும் செய்யுளுள் உள என்றும் அமைக்கப்படும்.

உ-ம்: சிறுபைந்தூவி, செங்காற்பேடை எனவரும். நடைபெற்று என்றதனான் அவ்வடைசினை முதல்கள் செய்யுட் கண் முறைமை மயங்கியும் வரப்பெறும் என்பது கொள்ளப்படும்

உ-ம்: பெருந்தோட் சிறுநுசுப்பிற் பேரமர்க்கட் பேதை எனவரும்.

அடை சினை முதல் [1]என்றும், பின்பும் வண்ணச் சினைச் சொல் என்றது என்னை யெனின், முற்கூறியது இலக்கண வாய்ப் பாடாகலான் அவ்விலக்கணமுடையது இது என வேண்டுதலின் அவ்விலக்கணத்தான் அவ்விலக்கணமுடைய பொருட்குக் குறி யிட்டார் என வுணர்க.

இதனாற் சொல்லியது என்னை யெனின், அடை சினை முதற் பொருள்களைக் கூறுங்கால் இன்னவாறு கூறுக வென்று அவற்றது மரபிலக்கணமும் அவ்வழி மரபு வழூஉவமைதியும் கூறியவாறாயிற்று.

ஒரு.

என்பது, வண்ணச் சினைச் சொல்லாவது அடையுஞ் சினையு முதலு மூன்று மயங்காமை, யடைவே வழக்குப் பெற்று நடக்கும். அடையென்ப தொரு பொருளது குணம்; சினை யுறுப்பு; முதல் அவ்விரண்டையும் உடைய பொருள்.

உ-ம்: பெருந்தலைச் சாத்தன், பெருந்தோள் மண்ணை, நெட்டிலைத்தெங்கு, செங்கண் வரால், செங்கால் நாரையென வரும். அடை சினை முதல் என மூன்று மென்னாது முறை யென் றதனான் அம்முறையின்றி நடத்தலும் உடைய. அவை வழக்கினுட் குணமிரண்டடுக்கி முதலொடு வருதலும், செய்யுளுட்குணம் இரண்டடுக்கிச் சினையொடு வருதலும் என.

1. என்றும் கூறியிருந்தும்—என்று.

அவை வருமாறு: இளம்பெருங் கொற்றன், சிறுகருஞ்சாத்தன் இது வழக்கு: சிறுபைந்தூவி, செங்காற்பேடை இது செய்யுள். [1]பிறவும் அன்ன

முதலொடு குணம் இரண்டடுக்குதல் வழக்கியல்
சினையோ டடுக்குதல் செய்யுளாறே

இது பிற சூத்திரம். அதனான் அவ்விலேசு கொள்க

பால் திணை வழுவமைதி

27. ஒருவரைக் கூறும் பன்மைக் கிளவியும்
ஒன்றனைக் கூறும் பன்மைக் கிளவியும்
வழக்கி னாகிய வுயர்சொற் கிளவி
இலக்கண மருங்கிற் சொல்லா றல்ல.

ஆ. மொ.

இல.

The use of plural to denote a person or a thing is allowed in speech to indicate respect : but is not in accordance with the rules of grammar.

க. சு.

The use of plural in speech to denote onə person and the use of plural in speech to denote one thing is allowed in comman usage to indiɔate respect; it is not in accordance with the rules of grammar.

பி. இ. நா.

முத்து. ஒ.63;

ஒருவரை யுரைக்கும் பன்மைக் கிளவியும்
ஒன்றனை யுரைக்கும் பன்மைக் கிளவியும்
வழக்கினுள் உயர்த்தல் வழுவா காவே.

---

1. பிறவும் அன்ன என்பது கழகப் பதிப்பில் இல்லை.

இளம்.

இச்—வெனின், வழீஇயமைமயுமாறு உணர்த்துதல் நுதலிற்று.

உரை: உயர்திணை ஒருவரைப் பன்மையாற் சொல்லுதலும், அஃறிணை யொன்றினைப் பன்மையாற் சொல்லுதலும் வழக்கினகத்து உயர்த்துச் சொல்லப்படும்; இலக்கண முறைமையாற் சொல்லுமிடத்து நெறியல்ல, எ—று.

ஒருவனையும் தாம் வந்தார் என்ப; ஒன்றனையும் தாம் வந்தார் என்ப, மற்று இலக்கண மருங்கிற் சொல்லாறல்ல *என வேண்டாவாகல், உயர்திணையை அஃறிணை போலச் சொல்லுதலும் அஃறிணையை உயர்திணை போலச் சொல்லுதலும் கொள்க.

வ—று: என்பாவை வந்தது, போயிற்று என ஒருத்தியையும், என் அன்னை வந்தாள், போயினாள் என ஓர் ஆவினையும் காதல் மிகுதியான் இவ்வாறு கூறுக எனக் கொள்க.

இனி, வழக்கினாகிய என்றதனான் [1]கன்னியெயில், கன்னி ஞாழல் என்பன கொள்க.

சேனா.

இ—ள்: ஒருவனையும் ஒருத்தியையும் சொல்லும் பன்மைச் சொல்லும், ஒன்றனைச் சொல்லும் பன்மைச் சொல்லும் வழக்கின்கண் உயர்த்துச்சொல்லும் சொல்லாம்; இலக்கண முறையாற் சொல்லு நெறியல்ல, எ—று.

---

* என வேண்டாவால்; அங்ஙனம் வேண்டாது கூறியவதனால் உயர்திணையை அஃறிணையை உயர்திணை போலச் சொல்லுதலும் கொள்க—கழகப்பதிப்புப் பாடம்— தவறு

1. கன்னி எனும் சொல் பெண்பாற்குரியது. அழியாமை எனும் பொருளும் உடையது. எயில் அழியாதது என்பதற்கு அடைமொழியாகக் கூறப்படும் கன்னி என்பது பெண்பாற் சொல்லோ எனும் ஒரு நிலையில் காணப்படுதலின் இவ்வாறெழுதினார்.

உ.ம் : யாம் வந்தேம், நீயிர் வந்தீர், இவர் வந்தார் என வரும். [1]உயர் சொல்—உயர்க்குஞ் சொல். உயர் சொற் கிளவி என்புழிக் கூறியது கூறலன்மை பண்புத் தொகை யாராய்ச்சியுட் சொல்லுதும். (எச்ச ௨0)

'தாம் வந்தார் தொண்டனார்' எனப் பன்மைக்கிளவி இழித் தற் கண்ணும் வந்ததால் எனின், ஆண்டு உயர்சொற்றானே குறிப்பு நிலையால் இழிபு விளக்கிற்றென்பது.

இலக்கண மருங்கிற் சொல்லாறல்ல வென்றதனான் இலக்கண மன்மையும், வழக்கினாகிய வுயர் சொற் கிளவி என்றதனான் வழுவன்மையும் கூறினார்; கூறவே வழுவமைதி யென்றவாறாம். [2]அஃதேல் வழக்கினாகிய உயர் சொற் கிளவி யெனவே வழு வமைதியென்பது பெறுதும்; இலக்கண மருங்கிற் சொல்லாறல்ல வெனல் வேண்டாவெனின், அங்ஙனங் கூறிற்செய்யுள் வரைந்த வாறோ வழுவமைந்தவாறோ வென ஐயமாக்கலின் அவ்வாறு கூறல்வேண்டும் என்பது.

---

1. உயர்த்தல் என்பது உயர் என நின்றது; உயர்சொல்= உயர்த்தற்கு வரும் சொல் என நான்கன் உருபும் பயனும் உடன் தொக்கத் தொகை. உயரும் சொல் என வினைத்தொகையோ உயர்வாகிய சொல் எனப்பண்புத் தொகையோ அன்று.

2. வழக்கினாகிய உயர்சொற் கிளவி என்பது மட்டில் கூறினால் ஒருவரைக் கூறும் பன்மைக்கிளவியும் ஒன்றினைக் கூறும் பன்மைக்கிளவியும் வழக்கிலேயே வருவன; செய்யுளில் வருதல் இல்லை என்பது பெறப்படும். அதனால் இச்சூத்திரம் செய்யுள் வரைந்தவாறு (செய்யுளில் வரக்கூடாது என்று நீக்கியவாறு) என்பது பெறப்படும்; வழுவமைதி என்பதுபெறப்படாது. இலக்கண மருங்கிற் சொல்லாறல்ல என்பதால்,— இலக்கண மருங்கிற் சொல்லப்படாதது வழுவாதலின் வழக்கில் வரினும் வழுவாம்; எனினும் அமைக்க என்பது பெறப்படும்; எனவே இரண்டும் தேவை. "இலக்கணத் துக்கு மாறுபட்ட சொற்களும் செய்யுளில் வழுவமைதி யாக்கிக் கொள்ளப்படுதல் உண்டு ஆதலின் செய்யுள் மருங்கிற் சொல்லாறல்ல என்னாமல் இலக்கண மருங்கிற் சொல்லாறல்ல என்றார்" எனின் இன்னும் சிறக்கும்—சிவ

'பன்மைக் கிளவியும்' எனப் பொதுவகையாற் கூறினாரேனும், உயர்த்தற்கண் வழங்கப் பட்டு வரும் உயர்திணைப் பன்மையும் [3]விரவுப் பன்மையுமே கொள்ளப்படும் என்றதற்கு 'வழக்கினாகிய' வென்றார்.

[4]தன்னின முடித்தல் என்பதனான் எருத்தையும் ஆவையும் எந்தை வந்தான், எம் அன்னை வந்தாள் என வுயர்திணையா வுயர்த்து வழங்கலும், ஒன்றென முடித்தல் என்பதனாற் ''கன்னிஞாழல்'' (சிலப். கானல். 18)), 'கன்னியெயில்' என அஃறிணையாய் நின்று உயர்திணை வாய்பாட்டாற் கூறப் படுதலும், பண்புகொள் பெயர்க்கொடை வழக்கினகத்தும் பெருங் கொற்றன், பெருஞ்சாத்தன் என இல்குணம் அடுத்து உயர்சொல்லாய் வருதலும் கொள்க.

தெய்.

ஒருசார் பால்வழுவும் திணைவழுவும் அமைத்தலை நுதலிற்று.

இ—ள்: ஒருவரைச் சொல்லும் பன்மைச் சொல்லும் ஒன்றனைச் சொல்லும் பன்மைச் சொல்லும் இலக்கண மருங்கிற் சொல் நெறியல்ல; வழக்கினாகிய வுயர் சொற் கிளவி, எ—று.

---

3. விரவுப்பன்மை = விரவுத்திணைப் பன்மை, நீயிர், இவர். இக்கூற்றால் பலவின்பாற்சொல் உயர்த்திக் கூறவருவதன்று என்க.

4. எருத்து, ஆ என்பவை உயிருள்ளன; அஃறிணையன. அதனால் விரவுப் பெயரிலும் அஃறிணையமைதலின் தன்னின முடித்தலால் கொள்ளப்பட்டன. தன்னின முடித்தல்: இனப் பண்புள்ளனவற்றின் ஒப்புமையால் முடித்தல். ஒன்றென முடித்தல் என்பது இனம் கருதாது ஒப்புமை ஒன்றே கருதி (இதுவும் அதுவும் ஒன்றுபோல்வனவே எனக்கருதி) முடிப்பது. எயில் உயிரில்லா அஃறிணை எனவே உயிருள்ள அஃறிணையோடு இனமாகக் கொள்வதற்கில்லை. எனினும் கன்னி என்னும் உயர்திணைப் பெண்பாற் சொல்லால் கூறப் படுதலின் (உயர்த்தியதாக்கப்படுதலின்) ஒன்றனைக் கூறும் பன்மைக் கிளவியோடு ஒத்திருத்தலின் ஒன்றென முடித்தலால் கொள்ளப்பட்டது.

[1]உயர் சொற்கிளவி—இருபெயரொட்டுப் பண்புத்தொகை.

உ—ம்: அவர் வந்தார் எனவரும் ஒருவரையும் ஒருத்தியையும் ஒனறினையும் இவ்வாறு கூறுதல் வழுவாயினும், உயர்வு குறித்துச் சொன்மையான் அமைதியாயிற்று.

[2]இயற்பெயர் முன்னர் ஆரைக் கிளவி
பலர்க்குரி யெழுத்தின் வினையொடு முடிமே (இடை 92) என்புழியடங்காதோ வெனின், ஆண்டு நம்பி, நங்கை, சாத்தன் என்னும் பெயர்தானே பால் காட்டுதலான் அதன் மேல் ஓர் இடைச சொல்லாயிற்று. ஈண்டுப் பன்மைச்சொற்றானே ஒருமைக்கு வருதலின் அடங்காதாயிற் றென்க. வந்தது கொண்டு வாராதது முடித்தல் என்பதனால் ஒரு பசுவை எம் அன்னை வந்தாள் எனவும், பெருங்கொல்லன் பெருவண்ணான் எனவும் வருவன (வுங்) கொள்க.

நச்.

இது பால் வழுவும் திணை வழுவும் அமைக்கின்றது.

இ—ள்: ஒருவரைக் கூறும் பன்மைக்கிளவியும்—ஒருவனையும் ஒருத்தியையும் சொல்லும் பன்மைச் சொல்லும், ஒன்றனைக் கூறும் பன்மைக்கிளவியும்—ஒன்றனை யுயர்திணைப் பன்மை யாகச் செல்லும் பன்மைச் சொல்லும், வழக்கின் ஆகிய உயர் சொற்கிளவி—வழக்கின் உளவாகிய உயர்த்துச் சொல்லுஞ் சொல்லாம்; இலக்கண மருங்கிற் சொல் ஆறு அல்ல—இலக்கண முறைமையால் சொல்லும் நெறியல்ல, எ—று.

---

1. உயர் சொல்லாகிய கிளவி.
2. நம்பி என்னும் இயற்பெயர் ஆர் சேர்ந்து நம்பியார் என வரும். எனினும் அது ஒருமையாதலின் கொண்டு முடியும் வினை ஒருமையில் அமையுமா எனின் பன்மையில் அமையும் என்பது இச்சூத்திரத்தில் கூறப்பட்டது. எனவே இச்சூத்திரம் ஒருமை காட்டும் இயற்பெயர், மேலும் ஒரு பன்மையிடைச்சொல் பெற்றுப் பன்மைக்கு வருவது பற்றியது. ஒருவரைக் கூறும் என்னும் சூத்திரம் அவன் எனும் ஒருமைச் சொல்லையே மேலும் ஓர் பன்மை காட்டும் இடைச்சொல் சேர்க்காமல் அவர் எனத் திரித்தலைக் கொண்டு கூறுவது. இது தம்முள் வேற்றுமை.

'வழக்கின் ஆகிய' எனவே வழுவமைதி பெற்றாம் உயர் சொல்—உயர்க்கும் சொல். ஒருவனையும் தாம் வந்தார் என்ப; ஒருத்தியையும் தாம் வந்தார் என்ப; ஒன்றனையும் தாம் வந்தார் என்ப.

உ. ம்: யாம் வந்தேம், நீர்வந்தீர், இவர் வந்தார் என வரும்.

'தாம் வந்தார் தொண்டனார்' என்பது உயர் சொல் குறிப்பு நிலையின் இழிபு விளக்கிற்று.

'இலக்கண மருங்கிற் சொல் ஆறு அல்ல' என்ற மிகையான், ஓர் எருத்தை 'எந்தை வந்தான்' எனவும், ஓர் ஆவை 'எம் அன்னை வந்தாள்' எனவும், "கொடுங் கோல் கோவலர் பின்னின் றுய்த்தர, இன்னே வருவர் தாயர்" (முல்லைப் 15,16) எனவும் ஒப்புமை கருதாது காதல் பற்றி உயர்த்து வழங்கலும், 'கன்னி நறுஞாழல்' 'கன்னியெயில்' எனவும், ஓர் எருத்தை 'நம்பி' எனவும், ஒருகிளியை 'நங்கை' எனவும் அஃறிணையை உயர் திணை வாய்பாட்டால் கூறலும், பண்புகொள் பெயர்க் கொடை வழக்கினகத்தும் 'பெருங் கொற்றன்' 'பெருஞ் சாத்தன்' என இல்குணம் அடுத்து உயர்த்துக் கூறலும் கொள்க. 'என் பாவை வந்தது' என்பது ஆகுபெயர்; அஃது ஒப்புள் வழிக் கூறியது.

கல்.

என்—எனின், உயர்திணைப் பால் வழுவமைதியும், அஃறிணைத் திணை வழுவமைதியும் உடன் கூறுதல் நுதலிற்று.

பொருள் : உயர்திணையிடத்து ஆண்பாலினையும் பெண் பாலினையும் அத்திணைப் பன்மைப் பாலாற் சொல்லும் சொல்லும், அஃறிணை யொன்றனை உயர்திணைப் பன்மைப் பாலாற் சொல்லும் சொல்லும் இவையிரண்டும் வழக்கின் கண்ணே யுளவாகிய உயர்த்துச் சொல்லுதற் பொருண்மைக்கண் வரும் சொல்லாம்; இலக்கணத்திடத்துச் சொல்லு நெறியல்ல, எ—று.

உ—ம் ; தாம் வந்தார் என்பது. இலக்கண மருங்கிற் சொல்லாறல்ல என்ற மிகையாற் காதல் மிகுதியான் உயர்திணை அஃறிணையாகவும் அஃறிணை உயர்திணையாகவும் கூறுவன வும் அமைத்துக் கொள்க.

உ—ம் : என்பாவை வந்தது, போயிற்று; என்யானை வந்தது, போயிற்று என இவை உயர்திணை அஃறிணையாயின.

இனி ஓர் ஆவினை எம் அன்னை வந்தாள், போயினாள் எனவும், ஓர் எருத்தினை எந்தை வந்தான், போயினான் எனவும் கூறுவன அஃறிணை உயர்திணையான் வந்தனவாம். மற்று அவை ஆகுபெயர் அன்றோ வெனின், ஒப்புள் வழிச்சொல்வது ஆகுபெயர்; இது காதல் உள்வழிக் கூறுவதென உணர்க. இதனுள் உயர்திணை அஃறிணையான வந்தன, குடிமை ஆண்மை என்புழிச் சிறப்பு என்புழிப் பட்டடங்குமால் எனின் அவை காதலின்றிச் சிறப்பித்துச் சொல்லுவன என வேற்றுமை யுணர்க.

'வழக்கினாகிய' என்றதனான் பிறவும் உயர்திணைப் பெயர்களை அஃறிணைமேல் வைத்துச் சொல்லுவனவும் செய்யுட்கண் அமைத்துக் கொள்க.

உ—ம் : கன்னி நறுஞாழல், கன்னியெயில், *கதிர் மூக்காரல், கரிவனாகம் என்பது போல்வன.

இதனாற் சொல்லியது வழக்கின்கண்ணும் செய்யுட் கண்ணும் ஒரோ ஓர் காரணங்களைப் பற்றிப் பாலினையும் திணையினையும் மயங்கக் கூறுவன கண்டு அவற்றிற்கு அமைதி கூறியவாறாயிற்று.

ஒரு.

என்பது உயர்திணை ஒருவரைப் பன்மையாற் சொல்லு தலும், அஃறிணை ஒன்றனைப் பன்மையாற் சொல்லுதலும் என இவை, வழக்கினகத்து உயர்த்துச் சொல்லப்படும்; இலக்கண முறைமையாற் சொல்லுமிடத்து நெறியல்ல.

உ—ம்: ஒருவனையும் தாம் வந்தார் என்ப; ஒருத்தியையும் தாம் வந்தார் என்ப; ஒன்றனையும் தாம் வந்தார் என்ப. இது வழுவேயாயினும் அமைக.

---

* கதிர் மூக்கு என்பது உயர்திணை வழக்காய் இருந் திருத்தல் வேண்டும் என்பது இதனால் தெரிகிறது. கரிவன் நாகம் என்பதில் கரிவன் என்பது கரியவன் என்பதன் திரிபாகும்.

அன்றியும் யாம் வந்தேம், நீயிர் வந்தீர், இவர் வந்தார் என ஒருவனையும் ஒன்றனையும் உயர்த்திச் சொல்லியவாறு. 'தாம் வந்தார் தொண்டனார்' என்பது உயர்சொற் குறிப்பு நிலையாயின், இழிவு விளக்கிற்று.

'இலக்கண மருங்கிற் சொல்லாறல்ல' என்றதனால், உயர்பினும் இழிபினும்] உவப்பினும் சிறப்பினும் உயர்திணையை அஃறிணையே போலச் சொல்லுதலும், அஃறிணையை உயர்திணையே போலச் சொல்லுதலும் வழக்கினுள் வரும். குரிசில் வந்தது என்பது உயர்பு; பொறியிலி வந்தது என்பது இழிபு.

ஒருத்தியை என்பாவை வந்தது என்றும், ஓர் எருத்தினை 'என் எந்தை வந்தார்' என்றும், ஒரு பசுவினை 'என் அன்னை வந்தாள்' என்றும் சொல்லுதல் உவப்பு. சாத்தனார் வந்தார், நரியார் வந்தார் எனல் சிறப்பு. இவற்றில் திணைபால் மயக்கம் காண்க.

செலவு வரவு தரவு கொடை பற்றியன.

*28 செலவினும் வரவினும் தரவினும் கொடையினும்
நிலைபெறத் தோன்றும் அந்நாற் சொல்லும்
தன்மை முன்னிலை படர்க்கை யென்னும்
அம்மூ விடத்தும் உரிய வென்ப.

ஆ.மோ.
இல.

The words derived from 'Selavu', 'Varairi', 'tharavu' and 'Kodai' belong to the three persons, first, second and third.

---

* வினைகளைச் செயப்படுபொருள் குன்றியவினை, செயப்படு பொருள் குற்றாவினை என வகைப்படுத்து வது உண்டு கால இடை நிலைகள் அடிப்படையிலும் வகைப்படுத்துவதுண்டு. ஆயின் பயிற்சி நோக்கி இவை தன்மை முன்னிலைக்கு வரும்; இவை படர்க்கைக்கு வரும் என உணர்த்துவது கூர்ந்து நோக்கிய தன்மையைப் புலம்படுத்துகிறது. காலத்தால் பயிற்சியில்

க. சு.

It is said that the words derived from the four words, eelavu 'going' , Varavu 'eoming', taravu 'giving' and Kotai 'giving' are appropriatly used in the three persons, the first, the seeond, and the third.

பி. இ. நா.
இல. வி. 301.

தரல்வரல் கொடை செலவு என இவை நான்கும்
ஒருமூவிடத்திற்கும் உரிய

இளம்.

இச்—வெனின், இடவழுக் காத்தல் நுதலிற்று.

உரை: செல்லும் வரும் தரும் கொடுக்கும் என நிலை பெற்றுப் புலப்பட்டு நின்ற இந்நான்கு சொல்லும் தன்மை, முன்னிலை, படர்க்கை என்னும் மூன்றிடத்திற்கும் உரிய, எ—று.

அவையாமாறு முன்னர்ச் சொல்லுதும்.

சேனா.

இ—ள்: செலவு முதலாகிய நான்கு தொழிற்கண்ணும் நிலைபெறப் புலப்படாநின்ற அந்நான்கு சொல்லும், தன்மை முன்னிலை படர்க்கை யென்னும் அம்மூவிடத்திற்கும் உரியவாய் வரும், எ—று.

[1]செலவு முதலாகிய தொழிற்கண் சிறப்பு வகையால் நிலை பெறாது பொதுவாய் வரும் இயங்குதல் ஈதல் என்னும் தொடக்

ஏற்பட்ட மாற்றங்களை நூற்பாக்கள்(28, 29, 30) உணர்த்துகின்றன—ச.வே. சுப்பிரமணியன் இலக்கணத் தொகை—சொல்.

1. இயங்குதல், செலவு வரவு என்பனவற்றுப் பொதுப் பெயர். ஈதல், தரவு கொடை என்பனவற்றுப் பொதுப் பெயர். செலவுபற்றிய வாய்பாடுகள்: சென்றான், சென்ற, சென்று, செல்தல், சென்றவன். வரவுபற்றியன வந்தான், வந்த வந்து, வரல், வந்தவன். தரவுபற்றியன:

கத்தனவற்றின் நீக்குதற்கு 'நிலைபெறத் தோன்றும்' என்றார். முற்றும் எச்சமும் தொழிற்பெயருமாகி அத்தொழில்பற்றி வரும் வாய்பாடு பலவாயினும், அவையெல்லாம் இந்நான்கு தொழிலும் பற்றித் தோன்றுதலின் 'நான்கு சொல்' என்றார். பொருள் வகையான் முன்னறியப் பட்டமையான் 'அந்நாற் சொல்லும், என்றார்.

[2]இச்சூத்திரத்துள் ஈங்கு முதலாயின தன்மைக்கண்ணும் ஆங்கு முதலாயின படர்க்கைக் கண்ணும் அடக்கப்பட்டன.

வினைச்சொல் மூன்றிடத்திற்கும் உரியவாதல் வினையியலுள் பெறப்படுதலின் ஈண்டுக் கூறல் வேண்டாவெனின், ஆண்டுப் பால் உணர்த்தும் ஈற்றான் இடத்திற்குரிமை கூறினார்; ஈண்டு ஈற்றானறிச் செலவு முதலாயின முதனிலை தாமே இடங்குறித்து நிற்றலுடைமையான் இவ்வேறுபாடு ஆண்டுப் பெறப்படாமையின், ஈண்டுக் கூறினார் என்பது.

அஃதேல், 'தருசொல் வருசொல் ஆயிருகிளவியும் தன்மை முன்னிலை யாயி ரிடத்த, படர்க்கை யிடத்த கொடைச் சொல் லும் செலவுச் சொல்லும்' என ஓதுக; இச்சூத்திரம் வேண்ட வெனின்:— அங்ஙனம் ஓதின் இடஞ் சுட்டும் முதனிலை இந் நான்குமே என்னும் வரையறை பெறப்படாமையின், இது வேண்டுமென்பது.

அஃதேல், போதல் புகுதல் என்னும் தொடக்கத்தனவும் இடஞ்சுட்டுதலின் நான்கென்னும் வரையறை அமையா தெனின்:— அவை இக்காலத்துச் சிலவிடத்துப் பயின்று வருமாயி னும் மூன்றிடத்திற்கும் பொதுவாகலினன்றே ஆசிரியர் 'அந்நாற்

தந்தான், தந்த, தந்து, தரல், தந்தவன். கொடை பற்றியன: கொடுந்தான், கொடுத்த, கொடுத்து, கொடுத்தல், கொடுத்தவன்.

2. 'உன்பேச்சு இங்கு செல்லாது அங்குதான் செல்லும், என்பது உலக வழக்கில் காணப்படுவது. இங்கு என்பது சொல்பவனாகிய தன்னையும் அங்கு என்பது மூன்றா மவனாகிய பிறனையும் குறிப்பது காண்க. என்னிடம் அவனிடம் என்பன இங்கு அங்கு எனப்பட்டன. இதனால் இவ்வாறு எழுதினார்,

சொல்லும்' என இவற்றையே வரைந்து ஓதுவாராயிற்று என்பது.[3]

தெய்

28,29,30 ஆம் சூத்திரங்களை ஒரே சூத்திரமாகக் கொண்டு உரையெழுதினாராகலின் இவருரையினை 30 ஆம் நூற்பாவின் உரைப்பகுதியிற் காண்க.

நச்.

இஃது இடம்பற்றி நிகழும் சொற்களுக்குப் பொதுவிதி கூறுகின்றது.

இ—ள்: செலவினும் வரவினும் தரவினும் கொடையினும் நிலைபெறத் தோன்றும் அந்நாற் சொல்லும்—செலவு முதலிய நான்கு வினையானும் இடம்நிலை பெறப் புலப்படா நின்ற அந் நான்கு சொல்லும், தன்மை முன்னிலை படர்க்கை யென்னும் அம் மூவிடத்தும் உரிய என்ப—தன்மை முன்னிலை படர்க்கை என்னும் அம்மூவிடத்திற்கும் உரியவாம் என்று கூறுவர் புலவர், எ—று.

'ஈங்கு முதலியன தன்மைக்கண்ணும் 'ஆங்கு' முதலியன படர்க்கைக் கண்ணும் அடக்கப்பட்டன.

வினைச்சொல் பால் உணர்த்தும் ஈற்றால் மூன்றிடத் திற்கும் உரிமை வினையியலுள் கூறிச் செலவு முதலியன முதல் நிலைதாமே இடம் உணர்த்தி நிற்றலின் ஈண்டுக் கூறினார், அவற்றுள் அடங்காமையின்.

கல்.

என்-எனின், இடம் பற்றி நிகழும் சொற்களுட் சிலவற்றிற்கு இலக்கணங் கூறுவான், அச்சொற்களதும் இடங்களதும் பெயரும் முறையும் கூறிய முகத்தான் அவற்றிற்குப் பொது இலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று.

பொருள்: செலவுப் பொருண்மைக்கண்ணும், வரவுப் பொருண்மைக்கண்ணும்' தரவுப் பொருண்மைக்கண்ணும்.

3. இதனால் ஆசிரியர் தொல்காப்பியர் காலத்து தரவு வரவு கொடை, செலவு என்னும் சொற்கள் உலக வழக்கிலும் செய்யுள் வழக்கிலும் இடப்பிரிவுகளுடன் ஆளப் பட்டன என்பது பெறப்படும்.

கொடைப்பொருண்மைக்கண்ணும் நிலைபெற்றுத் தோன்று கின்ற செலவு, வரவு, தரவு, கொடை என்னும் நான்கு சொல்லும் தன்மை முன்னிலை படர்க்கை யென்று சொல்லப் பட்ட அம்மூன்றிடத்திற்கும் பொது வகையான் உரிய, எ—று.

உதாரணம் சிறப்பு வகையாற் கூறும்வழிக் காட்டுதும்.

ஒரு.

என்பது செல்லும் வரும் தரும் கொடுக்கும் என நிலை பெற்று பலப்பட்டு நின்ற அந்நான்கு சொல்லும், தன்மை முன்னிலை படர்க்கை யென்னும் அம்மூன்றிடந்திற்கும் உரியன. உதாரணம் முன்னர்க் காட்டுதும்.

தரவு வரவு பற்றிய செய்தி

29. **அவற்றுள்,**
தருசொல் வருசொல் ஆயிரு கிளவியும்
தன்மை முன்னிலை ஆயீ ரிடத்த.

ஆ. மொ.

இல.

Among these,
the words radiating from 'tharu' and 'Varu' belong to the first and seeond persons.

க. சு.

Among them, the two words taru to give and varu 'to eome' are used (only) in the first and second persons.

நன். 382.

தரல் வரல் கொடைசெலல் சாரும் படர்க்கை
எழுவாய் இரண்டும் எஞ்சிய ஏற்கும்.

இல வி. 301

தரல்வரல் தன்மை முன்னிலை யையும்
.... எய்தும் என்ப.

தொன். வி. 122.

வரல்தரல் மூவிடம் மருவுதற் குரிய

முத்து. ஒ. 64.

தரல்வரல் கொடைசெலல் சாரும் படர்க்கை
எழுவாய் இரண்டும் எஞ்சிய ஏற்கும்.

இளம்.

இச்—சூத்திரம் என்னின், எய்தியது விலக்குதல் நுதலிற்று.

உரை: தரும் வரும் என்னும் சொல் தன்மைக்கும், முன்னிலைக்கும் உரியவாம்; படர்க்கைக்கு ஆகா, எ—று.

வ—று: எனக்குத் தரும் காணம், எனக்கு வரும் காணம்: நினக்குத் தரும் காணம், நினக்கு வரும் காணம் என வரும்.

சேனா.

இ—ள்: கூறப்பட்ட நான்கு சொல்லுள், தரு சொல்லும் வரு சொல்லுமாகிய இரண்டும், தன்மை முன்னிலையாகிய இரண்டிடத்திற்கும் உரிய, எ—று.

உ—ம்: எனக்குத் தந்தான் நினக்குத் தந்தான்; என்னுழை வந்தான் நின்னுழை வந்தான் எனவும், ஈங்குவந்தான் எனவும் வரும்.

தரப்படும் பொருளை ஏற்பான் தானும் முன்னின்றானு மாகலானும், வரவு தொழில் தன்கண்ணும் முன்னின்றான் கண்ணும் சென்று முடிதலாலும், ஈற்றானன்றி இவ்விரு சொல் லும் தன்மை முன்னிலைக்குரிய வாயினவாறு கண்டு கொள்க

"நிலை பெறத் தோன்றும் அந்நாற் சொல்லும், தன்மை முன்னிலை படர்க்கை யென்னும் அம்மூவிடத்தும் உரிய" (சொல். 28) என்று மூன்றிடத்திற்கும் வரைவின்றியாம் எனவும் கொள்ளவைத்தமையான், "[1]பெருவிரல மரர்க்கு வென்றி தந்த" (புறம். 55) எனவும், "தூண்டில் வேட்டுவன் வாங்க வாராது" (அகம். 36) எனவும் மயங்கி வருவனவும் அமைக்கப்படும். அஃதேல் படர்க்கைச் சொல் மயக்கமும் எய்துமால் எனின்:—

---

1. 'அமரர்க்குத்தந்த' என்பதில்' தருதல் அமரர்க்கு எனப் படர்க்கையில் வந்தது. 'வேட்டுவன் வாங்க வாராது' என்பதில் வாராது என்னும் வரவுச் சொல் 'வேட்டுவனிடம் வாராது' எனப் படர்க்கைக்கு வந்தது.

[2]அஃது எச்சவியலுட் பெறப்படுதலின் ஈண்டுக் கொள்ளப்படா தென்க.

ஒருவன் சேய் நிலத்து நின்றும் அணிநிலத்துப் புகுந்தானாயிற் சேய்நிலம் நோக்க அணிநிலம் ஈங்கு எனப்படுதலின் அவன் இவண் வந்தான், ஆங்கு வந்தான் என்பன இலக்கணமேயாம்.

[3]இந்நான்கும் கொடைப் பொருளன என்று உரையாசிரியர் கூறினாரால் எனின் :—தூண்டில் வேட்டுவன் வாங்கவாராது என்பதனை அமைத்தாராகலின் அவர்க்கது கருத்தன் றென்க.

தரவு வரவை உணர்த்துவனவற்றைத் தருவதும் வருவதும் போலத் தருசொல் வருசொல் என்றார்.

நச்.

இஃது அவற்றுட் சிலவற்றிற்குச் சிறப்பிலக்கணம் கூறுகின்றது.

இ—ள் : அவற்றுள் தருசொல் வருசொல் ஆஇரு கிளவியும்—முற்கூறிய நான்கு சொல்லினுள் தருசொல்லும் வருசொல்லும் ஆகிய இரண்டு சொல்லும், தன்மை முன்னிலை ஆ ஈரிடத்த —தன்மை முன்னிலையாகிய அவ்விரண்டிடத்திற்கும் உரிய, எ—று.

உ—ம் : எனக்குத் தந்தான், நினக்குத் தந்தான்; என்னுழை வந்தான், நின்னுழை வந்தான்; ஈங்கு வந்தான் என ஈற்றான் அன்றித் தரவும் வரவுமாகிய வினை, தன்கண்ணும் முன்னின் றான்கண்ணும் சென்றன. முன்னிற் சூத்திரத்துப் பொது விதியான் மூன்றிடத்தும் வரைவின்றி ஆம் எனவும் கொள்ள வைத்தமையான், "பெருவிறல் அமரர்க்கு வென்றி தந்த" (புறம் 55)

---

2. எச்சவியலில் (5 2) 'கொடு' என்பது பற்றி மட்டும் வழுவமைதி கூறப்பட்டது 'சொல்' பற்றிக் கூறப்படவில்லை.

3. இந்நான்கும் கொடைப் பொருளன என்று இளம்பூரணர் கூறவில்லை அதனால் உரையாசிரியர் இளம்பூரணர் அல்லர் என்பதற்கு இதுவும் ஓர் சான்று. அன்றியும் இளம்பூரணர் "இனி இச்சூத்திரம் கொடுத்தல்

[1]"புனல்தரு பசுங்காய் தின்ற" (குறுந். 292) "தூண்டில் வேட்டுவன் வாங்க வாராது" (அகம். 36), "அரிமலர் ஆய்ந்தகண் அம்மா கடைசி, திருமுகம் திங்களும் செத்துத்—தெருமந்து, வையத்தும் வானத்தும் செல்லா தணங்காகி, ஐயத்துள் நின்ற தரவு" (யாப். வி. சூ. 57 உரை மேற்கோள்) என மயங்குவனவும் அமைக்க. தரவு வரவு உணர்த்தும் சொல் என்பது பொருள்.

கல்.

என்—வெனின், மேற்கூறிய சொற்களுட் சிலவற்றிற்குச் சிறப்புவகையான் இடவிலக்கணம் கூறுதல் நுதலிற்று.

பொருள்: மேற்கூறப்பட்ட நான்கு சொல்லுள்ளும் 'தரும்,' 'வரும்' என்னும் சொல்லிரண்டும் தன்மை முன்னிலைக்குமாம்; படர்க்கைக் காகா, எ—று.

கோடற் பொருண்மை மூன்றிடத்தும் சொல் நிகழுமாறு கூறியது என்பாரும் உளர்" என எழுதியது உரையாசிரியரைக் குறித்தாகலாம் எனக் கொள்ளவும் இடம் இருக்கிறது.

"கொடைப்பொருளன' என்பதற்குக் கொடை என்பது படர்க்கைக்கு வருதலின் நான்குமே கொடையின் பொருளாகிய படர்க்கைக்கு வருதல் என்பதைப் பெறும் எனப் பொருள் கொள்ளலாம். உரையாசிரியர் 'தூண்டில் வேட்டுவன் வாங்க வராது' என்பதில் வரவு வேட்டுவனை நோக்கிப் படர்க்கைக்கு வந்தது அமைதி (வழுவமைப்பு) என்றாராகலின் நான்குமே படர்க்கைக் குரியன என்பது பொருந்தாததாகும்—இவ்வாறு இப்பகுதிக்கு விளக்கம் காண்க.

இளம்பூரணர் தரும் உதாரணங்கள் கொடைப் பொருளுக்கேற்ப அமைத்துள்ளன எனினும் அவ்வாறு கருதிக் காட்டினார் என்பதற்கில்லை. —சிவ.

1. புனல்கொடு என்பதுபுனல்தரு எனவும், வையத்தும் வானத்தும் வாராது என்பது செல்லாது எனவும் வந்தன மயக்கம்.

[1]உ-ம்: எனக்குத் தருங்காணம், எனக்கு வருங்காணம் நினக்குத் தருங்காணம், நினக்கு வருங்காணம் எனவரும்.

ஒரு.

உ-ம்: எனக்குத் தருங்காணம் நினக்குத்தருங்காணம் எனக்கு வருங்காணம், நினக்கு வருங்காணம் என வரும்.

செலவு கொடை பற்றிய செய்தி

30. ஏனை யிரண்டும ஏனை யிடத்த

ஆ. மொ.

இல.

The other two belong to the other person (third)

க.சு:

The remaining two are used with the other (–third) person.

பி இ. நா.

நன். 381

தரல் வரல் கொடை செலல் சாரும் படர்க்கை

இல வி. 301

ஏனைய ஏனையிடத்தையும் எய்தும்

தொன். 122

செலல் கொடை சேரும் படர்க்கை

இளம்.

இச்-வெனின், இதற்கு மேல் எய்தியது விலக்குதல் நுதலிற்று.

உரை: செல்லும் கொடுக்கும் என ஒழிந்து நின்ற இரண்டும் படர்க்கைக் காம்; தன்மைக்கும் முன்னிலைக்கும் ஆகா, எ—று.

வ—று: அவற்குச் செல்லும் காணம், அவர்க்குக் கொடுக்குங்காணம் என வரும்.

---

1. கழகப்பதிப்பில் எனக்குத் தருங்காணம், நினக்கு வருங்காணம் என்றே காணப்படுகின்றது. கு. சுந்தர மூர்த்தி விளக்கவுரையில் மேற்கண்டவாறே அமைய வேண்டும் எனக் குறிப்பிட்டார்.

[1]இனிச் செலவும் கொடையும் தரவும் வரவும் என்று சூத்திரம் செய்யற்பாலான் எற்றுக்கு? செல்லுங்காணம், கொடுக்குங்காணம் என்பன இரண்டும் படர்க்கைக்குரிய; தரும் வரும் என்பன இரண்டும் தன்மைக்கும் முன்னிலைக்கும் உரிய; ஆகலான், அவ்வாறு கூறாது மயக்கங் கூறியவதனான், செல்லும் என்னும் சொல்லாற் சொல்லப்படுவதனை, வரும் என்னும் சொல்லானும் சொல்லுப; கொடுக்கும் என்னும் சொல்லாற் சொல்லப்படுவதனைத் தரும் என்னும் சொல்லினானும் சொல்லுப என்றலைக் குறித்தற்கு என்க.

வ—று: ''தூண்டில் வேட்டுவன் வாங்க வாராது'' (அகம்36) எனவும், ''புனல் தரு பசுங்காய் தின்ற'' (குறுப 292) எனவும் வரும்.

[2]இனி இச்சூத்திரம் கொடுத்தல் கோடற் பொருண்மை மூன்றிடத்தும் சொல் நிகழுமாறு கூறியது என்பாரும் உளர்,

சேனா.

இ—ள்: செலவுச் சொல்லும் கொடைச் சொல்லும் படர்க்கைக்குரிய, எ-று.

உ-ம்: அவன்கட் சென்றான், ஆங்குச் சென்றான், அவற்குக் கொடுத்தான் எனவரும்.

செலவுத் தொழில் படர்க்கையான்கட் சென்றுறுதலானும், கொடைப்பொருள் ஏற்பான் படர்க்கையான் ஆகலானும் ஈற்றானன்றி அவ்விரு சொல்லும் படர்க்கையிடத்திற் குரிய வாயினவாறு கண்டு கொள்க.

தெய். (28, 29, 30 ஆம் நூற்பாக்களின் உரை.)

ஒருசார் வினைச் சொற்கு இலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று.

இ—ள்: செலவு வரவு தரவு கொடையென்னும் தொழிற் கண் நிலைபெறத் தோன்றும் அந்நாற் சொல்லும் தன்மை

---

1. இனிச்...செலவும் எற்றுக்கு—இது 'செலவினும் வரவினும்' என்னும் சூத்திரத்தை நோக்கியது.
2. இப்பகுதி சேனாவரையரால் உரையாசிரியர் கூற்றாகக் கொண்டு மறுக்கப்பட்டுள்ளது. (சூ. 29ல் பார்க்க)

முன்னிலை படர்க்கை யென்னும் அம்மூன்றிடத்தும் உரிய வென்ப ஒருசாரார்.

அவற்றுள் தருசொல் வருசொல் ஆயிருகிளவியும் தன்மை முன்னிலை என்னும் இரண்டிடத்தினும் வரும். ஏனையிரண்டும் படர்க்கைக்கண் வரும், எ—று.

உ. ம் : எனக்குத் தந்தது, எனக்கு வந்தது; நினக்குத் தந்தது நினக்கு வந்தது; அவர்க்குச் சென்றது, அவர்க்குக் கொடுத்தது எனவரும்.

இந்நான்கு சொல்லும் மூன்றிடத்தும் வரும் என்பார் உதாரணம் காட்டுமாறு:— எனக்குச் சென்றது, எனக்குக் கொடுத்தது; நினக்குச் சென்றது நினக்குக் கொடுத்தது; அவர்க்குத் தந்தது அவர்க்கு வந்தது எனக் காட்டுவர்.

இவற்றுள் கொடு என்பதனை,

> கொடுவென் கிளவி படர்க்கையாயினும்
> தன்னைப் பிறன்போல் கூறும் குறிப்பின்
> தன்னிடத் தியலும் என்மனார் புலவர் (எச்ச 49)

என எடுத்து வழுவமைக்கிறார் ஆகலானும் பிறவும் இத்துணைச் சிறப்பிலவாதலானும், இலக்கண வழக்கு மேற்காட்டப்பட்ட ஆறு காரணமுமே. ஏனைய ஆறும் ஒருமுகத்தான் வழுவமைத்த வாறாகக் கொள்க.

நச்.

இ—ள்: ஏனை இரண்டும்—செலவுச் சொல்லும் கொடைச் சொல்லும், ஏனை இடத்த—படர்க்கைக்குரிய, எ—று.

உ—ம்: அவன் கட் சென்றான், ஆங்குச் சென்றான், அவர்க்குக் கொடுத்தான் என ஈற்றான் அன்றிச் செலவுத் தொழிலும் கொடைப் பொருளும் படர்க்கையான்கண் சென்றுற்றன.

கல்.

என்—வெனின், இதற்கும் விதி ஒக்கும் என்றவாறு.

பொருள்: ஒழிந்த செல்லும் கொடுக்கும் என்னும் சொல் இரண்டும், ஒழிந்த படர்க்கையிடத்திற்கு உரிய, தன்மைக்கும் முன்னிலைக்கும் ஆகா, எ—று.

உ-ம்: அவர்க்குச் செல்லும் காணம், அவர்க்குக் கொடுக்கும் காணம் எனவரும்.

[1]பொதுச் சூத்திரத்துத் தன்மைக்கும் முன்னிலைக்கும் உரிய தரவினையும் வரவினையும் தரவு வரவு என்றோதாது வரவினைச் செலவினோடு இயைபு படுத்திக் கூறியும், படர்க்கைக்குரிய கொடுக்கும் என்பதனோடு செல்லும் என்பது கூறாது தரவு என்பதனை இயைய வைத்துக் கூறியும், நின்ற முறைமையன்றிக் கூற்றினாற் கொடைப் பொருட்கட் கொடுக்கும் என்பதனைத் தரும் என்றும், செல்லும் என்பதனை வரும் என்றும் கூறுவன வற்றை இடவழுவாக்கி யமைத்துக் கொள்ளப்படும்.

[2]செலவு வரவு என்பன கொடைக்கண் நிகழுமாறு என்னை யெனின்:—அக் கொடுக்கப்படுகின்ற பொருள் செலவு வரவினை மேவிட்ட கொடையைக் கூறுங் கருத்தினாகலிற் கொள்ளப்படும் என்பது.

வரவு தரவு என்பன தம்முள் இயைபுபட நின்றவால் எனின்: — தம்முள் இயைபுடைய எனினும் முன்கூறிய செலவி னோடும் வரவு பொருளான் இயைபு படுதலின் இத்தரவினோடு

---

1. சூ. 29-ல் இப்பகுதி பிறர் கூறாதது.

2. இப்பகுதி சேனாவரையரால் குறிக்கப்பட்ட உரை யாசிரியர் கூற்றோடொத்ததாக வுளது. செலவு தரவு வரவு கொடை இந்நான்கும் கொடைப் பொருள் என்பது உரையாசிரியர் கூற்றாம். அதாவது இந் நான்கும் கொடுத்தல் பொருண்மைக்கண் ஆளப்படுவன என்பதாம். ஒரு பொருள் ஒருவனால் ஒருவனிடம் செலுத்தப்படும், வருவிக்கப்படும், தரப்படும், கொடுக் கப்படும் என்ற கருத்தில் அச்சொற்கள் ஆளப்படுமாறு (28, 29, 30) இம்மூன்று சூத்திரங்களும் கூறுகின்றன என்பது உரையாசிரியர் கொள்கைபோலும். அதை உடன்பட்டே கல்லாடனார் எழுதினார். (இப்பகுதி கழகப்பதிப்பில் இல்லை.)

இயைபின் றாயிற்றென வுணர்க. '[3]புனல்தரு பசுங்காய்தின்ற' அவர்க்கு வருங்காணம் என்றாற் போல்வன கொடைத் தொழிலிடை மயக்கமாகக் கொள்க.

[4] இன்னும் வரவினோடு செலவு கூறிய முறையன்றிக் கூற்றுல் அக்கொடைத் தொழிலல்லாச் செலவு வரவின்கண்ணும் இடைமயக்கம் கூறுவன அமைத்துக் கொள்ளப்படும்.

உ—ம் : "தூண்டில் வேட்டுவன் வாங்க வாராது"
"யான்எய்த அம்பு நின்மேற் செல்லும்"
"அரிமல ராய்ந்தகண் அம்மா கடைசி
திருமுகமும் திங்களும் செத்துத்—தெருமந்து
வையத்தும் வானத்தும் செல்லா தணங்காகி
ஐயத்துள் நின்ற தரா

இந்நிகரன எல்லாம் கொள்க.

இந்நான்கு சொல்லுமே இடமயக்கமாய் ஆராய்ந்தது என்னை? எல்லாப் பெயர்களும் வினைகளும் இடத்தொடு பட்டால் வருவதெனின், வேற்றுமையுண்டு. அவ்வாறு தத்தம் இடங்கள்மேல் நின்ற சொற்கள் ஒன்றனோ டொன்று சேரு மியல்பு கூறுதல் இந்நான்கிற்குமல்லது இன்மையின் இவற்றையே கூறினார் என்பது

செலவு முதலிய சொல் நான்கும் படர்க்கையேயெனினும் வரும் தரும் என்னும் இரண்டும் படர்க்கையாயும், தன்மை முன்னிலைகளோடு இயைபுபட்டும், செல்லும் கொடுக்கும் என்னும் இரண்டும் தமக்கேற்ற படர்க்கையோடு இயைபு பட்டும் நின்றவாறு கண்டுகொள்க.

இவற்றாற் சொல்லியது ஓரிடத்துச் சொல் ஓரிடத்துச் சேருமிடத்துப் பிறக்கும் இடஇலக்கணமும் இடவழுவமைதியும் என்பது.

---

3. புனல் வரு பசுங்காய், அவர்க்குக் கொடுக்குங்காணம் என்பன புனல் தரு பசுங்காய், அவர்க்கு வருங்காணம் எனவருவது கொடைத் தொழிலிடை வந்த மயக்கம்.

4. வரவு கூறிச் செலவு கூற வேண்டும்; அவ்வாறு கூறாத முறையின்றிக் கூற்றால்.

ஒரு.

என்பது சொல்லும் கொடுக்கும் என்பன படர்க்கையிடத்தன.

உ-ம்: அவர்க்குச் செல்லுங்காணம், அவர்க்குக் கொடுக்குங் காணம் எனவரும். ''அந்நாற் சொல்லும் தன்மை முன்னிலை படர்க்கை யென்னும் மூவிடத்தும் உரிய என்ப'' என்றதனான் அவை மயங்கி வரவும் பெறும். ''தூண்டில் வேட்டுவன் வாங்க வாராது'', ''புனல்தரும் பசுங்காய் தின்ற தன்தப்பல்'' எனவும்,

அரிமல ராய்ந்தகண் அம்மா கடைசி
திருமுகமும் திங்களும் செத்துத்—தெருமந்து
வையத்தும் வானத்தும் செல்லா தணங்காகி
ஐயத்து நின்ற தரவு

எனவும் மயங்குவன அமைக்க. கடைசி யென முன்னிலை யாக்குக.

யாது எவன் பற்றிய செய்தி

31. யாதெவன் என்னும் ஆயிரு கிளவியும்
அறியாப் பொருள்வயின் செறியத் தோன்றும்.

ஆ. மொ.

இல.

The two words 'yathu' and 'evan' appear when questioning about uukown objects.

க. சு.

The two words yatu and evan appear when questioning about unknown objects.

பி. இ. நா.

இல-வி. 306.

யாதெவன் என்னும் ஆயிரு கிளவியும்
அறியாப் பொருள்வயின் செறியத் தோன்றும்.

முத்து. ஓ. 65.

யாதுஎவன் அறியாப் பொருளொடு சிவணும்

இளம்.

இச்—வெனின், அறியாத பொருளை அறியுங்காற் சொலற் பால வாமாறு இது என்பது உணர்த்துதல் நுதலிற்று.

உரை : யாது எவன் என்ற இரண்டு சொல்லும், தன்னால் அறியப்படாத பொருட்கண் வினாவாய்த் தோன்றும், எ—று.

வ—று: நுந்நாடியாது,? இப்பண்டியுள்ளது எவன்? எனவரும் செறிய என்பது யாப்புறுத்தல்: இஃது யாப்புறத் தோன்றும் என்ப: பிறயாப்புறாமற் றோன்றுவனவும் உள என்பதாகும்.

[1]வ—று: யாவன், யாவள், யாவர், யாது, யாவை என்பன ஐந்துபாலும் அறியலுற்று வாரா; வினாமாத்திரத்திற்கு வரும்.

சேனா.

இ—ள்: யாது எவன் என்னும் இரண்டு சொல்லும் அறியாப் பொருளிடத்து வினாவாய் யாப்புறத் தோன்றும், எ—று.

உ—ம்: இச்சொற்குப் பொருள்யாது, இச் சொற்குப் பொருள் எவன் எனவரும்.

எவ்வகையானும் அறியாப் பொருள் வினாவப்படாமையின் ஈண்டறியாப் பொருள் என்றது பொதுவகையான் அறியப் பட்டுச் சிறப்புவகையான் அறியப்படாத பொருளையாம்.

யா, யாவை, யாவன், யாவள், யாவர், யாண்டு, யாங்கு என்னுந் தொடக்கத்தன திணையும் பாலும் இடமும் முதலாகிய சிறப்பு வகையானும் சிறிதறியப்பட்ட பொருளன வாகலின், அறியாப் பொருள் வயின் செறியத் தோன்றாமையான்,

---

1. இவை யைந்தும் ஈற்றான் பாலுணர்த்த வருவன எனினும் பாலுணர்த்தாமல் வினாமாத்திரத்திற்கு வருதலும் உண்டு என்று கருதினார் இளம்பூரணர்; இதைச் சேனாவரையரும் நச்சினார்க்கினியரும் மறுப்பர்.

இவற்றையே விதந்து ''அறியாப் பொருள்வயின் செறியத் தோன்றும்'' என்றார். இவையும் திணையும் பாலும் குறித்து வருதலிற் சிறப்பு வகையானும் அறியப்பட்ட பொருளன வன்றோ எனின், அற்றன்று: இச்சொற்குப் பொருள் யாது, எவன் என்று வினாயவழி இறுப்பானும் அஃறிணையொருமையும் பொதுமையும் துணிந்து அவற்றுட்பகுதியறிதற்கு வினாவு கின்றான் அல்லன்; பொதுவகையான் வினாவுகின்றான் என்று உணரும் ஆகலின். அவ்வாறாதல் வழக்கினகத்து வினா வுவானதும் இறுப்பானதும் குறிப்பொடு படுத்துணர்க.

* முன்னர் வழுவமைத்தற்கு அவை இன்ன பொருட்குரிய வென அவற்றது இலக்கணம் கூறியவாறு.

தெய்.

வினாவழுக் காத்தலை நுதலிற்று.

இ—ள்: யாது எவன் என்று சொல்லப்பட்ட இரண்டு சொல்லும் அறியாத பொருட்கண் பொருந்தத் தோன்றும், எ—று.

நின்னாடு யாது, இப்பண்டியுள்ளது எவன் எனவரும்.

ஏனைப்பால் உணர்த்தும் வினாச்சொற்கள் எல்லாம் கூறாது, இவ்விரண்டினையும் வகுத்துக் கூறியது என்னையெனின் *ஆண்டுளதோர் வழுவமைத்தற் பொருட்டென்க.

நச்.

இஃது அறியாப் பொருள்மேல் சொல் நிகழ்த்தும் மரபு கூறுகின்றது.

இ—ள்: யாது எவன் என்னும் ஆ இருகிளவியும்—யாது எவன் என்று சொல்லப்படும் அவ்விரண்டு சொல்லும், அறியாப் பொருள்வயின் செறியத் தோன்றும்—அறியாப் பொருளிடத்து ஒருவன் வினாவும் வினாவாய் யாப்புறத் தோன்றும், எ—று.

---

* முன்னர் = 31 ஆம் சூத்திரம்.

* வழுவமைப்பு அடுத்துவரும் சூத்திரத்துக் காண்க.

உ-ம்: இச்சொற்குப் பொருள்யாது? இச்சொற்குப் பொருள் எவன்? இது, பொது வகையான் உணரப்பட்டுச் சிறப்பு வகையான் உணரப்படாத பொருளாம். இக்காலத்து எவன் என்பது என் என்றும் என்னை என்றும் மருவிற்று.

யாவன், யாவள், யவர், யார், யா, யாவை, யாண்டு யாங்கு எப்பொருள் என்பன திணைபால் முதலியன உணர்த்தலின் அறியாப் பொருள்வயின் செறியத் தோன்றாவாயின. ஆயின் யாது எவன் என்பனவற்றிற்கும் அவையுளவால் எனின் வினாவுகின்றான் அஃறிணை யொருமையும் பன்மையும் துணிந்து அவற்றின் பகுதியறிதற்கு வினாவுகின்றான் அல்லன்; பொது வகையான் வினாவுகின்றான் என்று அறிவுறுக்குமாறு வழக்கு நோக்கி உணர்க.

கல்.

என்—எனின், உலகத்துப் பொருள்தான் அறிந்த பொருள் என்றும் அறியாப் பொருள் என்றும் இரண்டு வகைத்து. அவற்றுள் அறியாப் பொருள்மேல் நிகழும் சொல்லது இலக்கணம் கூறுதல் நுதலிற்று.

பொருள்: யாது எவன் என்று சொல்லப்படும் அவ்விரண்டு சொல்லும் தன்னால் அறியப்படாத பொருளிடத்து வினாச் சொல்லாய் யாப்புறத் தோன்றும், எ—று.

உ-ம்: நுந்நாடுயாது, இப்பண்டியுள்ளது எவன் எனவரும். இவற்றுள் எவன் என்பது இக்காலத்து என் என்றும், என்னை யென்றும் மருவிற்று. '*யாப்புற' என்றதனால் பிறவும் அவ்வினாப் பொருளிடத்து வருவன கொள்ளப்படும்.

உ-ம்: யாவன், யாவள், யவர், யாவை, யா, எப்பொருள் என இவை.

எவன் என்பது அஃறிணையிருபாற்கும் உரிய வினாவே யெனினும், ஒருமைப்பால்மேல் வருவதே பெரும்பான்மை யென்பது உரையிற் கோடல் என்பதனால் கொள்ளப்படும்.

---

* இக்கருத்து இளம்பூரணரைத் தழுவியது. செறிய என்றதனால் என்பதும் பாடம்—இதுவே பொருந்தும்.

ஒரு.

என்பது, யாது எவன் என்னும் இரண்டு சொல்லும் தன்னால் அறியப்படாத பொருட்கண் வினாவாய்த் தோன்றும்.

உ-ம்: நுந்நாடியாது, இப்பண்டி யுள்ள தெவன்; மடியுள்ள தியாது, மடியுள்ள தெவன்; கையுள்ளதியாது கையுள்ள தெவன் எனவரும். இச்சொற்குப் பொருள்யாது இச்சொற்குப் பொருள் எவன் எனவும் வரும். 'எவன்' என்பது இக்காலத்துள் 'என்' என்றும் 'என்னை' என்றும் திரிந்து நடக்கும். * 'செறிய; என்ற தனால் யாவன், யாவள், யவர், யாது, யாவை எனவும், யாங்கு, யாண்டு, எப்பொருள் என இவையும், திணைபால் முதலியனவும் அறியப்படாதான விடத்துத் தோன்றும் என்பது கொள்க.

சுப்பிர.

இச்சூத்திரத்திற்கு உதாரணமாகச் சேனாவரையர், நச்சினார்க்கினியர் இருவரும் இச்சொற்குப் பொருள் யாது' என்பதை உணர்த்தியுள்ளனர். இங்கு பொருள் என்பதற்கு அருத்தம் எனப் பொருள் கொண்டு, பொருள் என்பதும் யாது என்பதும் அஃறிணையே யாதலான் ஈண்டு வழுவமைதி எவ்வாறு எனின், பொருள் என்பதற்கு உயர்திணை அஃறிணை இரண்டிற்கும் பொதுவாகிய விஷயம் என்பதே பொருளாம் என்க. அஃதாவது 'இராமன் என்ற சொல்லுக்குப் பொருள் யாது' என்ற வாக்கியத்திற்கு 'இராமன் என்ற சொல்லாற் குறிக்கப்படுபவன் யாவன், என்பது பொருள்; அவ்வாறாயின் ஈண்டுப் பொருள் என்பது உயர்திணையாகையால், 'இராமன் என்ற சொல்லுக்குப் பொருள் யாவன்' என்றுதான் கூறவேண்டும் என்பது பெறப்பட அதனை விலக்கி அங்கு யாது என்றும் கூறலாம் என்பது கருத்து.

யாது பற்றி மேலும் ஓர் செய்தி

32. அவற்றுள்
யாதென வரூஉம் வினாவின் கிளவி
அறிந்த பொருள்வயின் ஐயந் தீர்தற்குத்
தெரிந்த கிளவி [1]யாகலும் உரித்தே.

---

* இளம்பூரணர் கருத்து.

(1. யாதலும் : சேனா.நச். பாடம்)

ஆ மொ.

இல.

Of these
the interrogative word 'yathu' may
be used when elearing the doubt about
the objeet already kown.

க. சு.

Of them, the interrogative word yatu may be used whieh doubts are to be eleared regarding the objeet known (already.)

பி. இ. நா.

இல. வி. 307

அவற்றுள்
யாதென வரூஉம் வினாவின் கிளவி
அறிந்த பொருள்வயின் ஐயந் தீர்தற்குத்
தெரிந்த கிளவி யாதலும் உரித்தே.

முத்து. ஒ. 66

அவற்றுள்
யாது ஐயம் நீக்கற் பொருளொடு நிலையும்.

இளம்.

இச்—வெனின், இறந்தது காத்தல் நுதலிற்று.

உரை: அவற்றுள், யாது என்பது தன்னான் அறியப்பட்ட பொருட்கண் ஐயப்பட்டதனைத் தெளிதற்குச் சொல்லவும் பெறும், எ—று.

வ—று : நம் எருத்தைந்தனுள் யாது கெட்டது என வரும். உம்மை எதிர் மறை.

மற்று, இதுவும் அறியாப் பொருளாதல் ஒக்கும் பிற வெனின், முன்யாதும் உணராததன்கட் சொல்லினான்; அது முற் சூத்திரத்தோடு இதனிடை வேற்றுமை. [1]முன்னர்ச் சூத்திரம் எவன் யாது என்று கூறற்பாலன; எற்றுக்கு யாது எவன் எனக் கூறினான் எனின், யாது என்பதனைப் பின்னரும் இங்குக் கொணர்ந்து ஆராய்தலின் என்க. அவ்வாறு கூறாது குறிப்புக் கொண்டதனான்,[2]நமருள் யாவர் போயினார், அவற்றுள் எவ் வெருது கெட்டது என்பன கொள்க.

சேனா.

இ—ள்: கூறப்பட்ட இரண்டனுள் யாது என்னும் வினாச் சொல் அறியாப் பொருள் வினாவாதலேயன்றி அறிந்த பொருட் கண் ஐயம் நீக்குதற்கு ஆராய்ந்த சொல்லாதலும் உரித்து, எ—று.

உ—ம்: இம்மரங்களுட் கருங்காலியாது, நம் எருதைந்தனுள் கெட்ட எருதுயாது எனவரும்.

நமருள் யாவர் போயினர், அவற்றுள் எவ்வெருது கெட்டது எனப் பிறவும் அறிந்த பொருள்வயின் ஐயந்தீர்தற்குத் தெரிந்த கிளவியாய் வருதலின், அவையும் ஈண்டமைக்கற் பால வெனின், அவை அறிந்த பொருள் வயின் ஐயந்தீர்தற் கல்லது யாண்டும் வாராமையின் ஈண்டமைக்கப்படா வென்பது. இதனால் வினாவழுவமைத்தார்.

தெய்.

வினாவழு வமைத்தலை நுதலிற்று.

இ—ள் : மேல் சொல்லப்பட்டவற்றுள் யாது என்று சொல்லப்பட்ட அறியாத பொருண்மைக்கண் நிகழும் சொல்

---

1. ''முன்னர்ச்சூத்திரம் ...... ஆராய்தலின் என்க''— இத் தொடர் ''யாது என்பதனைப் பின்னரும் இங்குக் கொணர்ந்து ஆராய்தலின் முன்னர்ச் சூத்திரம் எவன் யாது எனக் கூறற் பாலன; எற்றுக்கு யாது எவன் எனக் கூறினான் எனின்'' என்றிருக்கவேண்டும். கல்லாடனார் இக்கருத்துப்பட எழுதுவதை அவர் உரையிற்காண்க.
2. இதனைச் சேனாவரையர் மறுப்பர்.

அறிந்த பொருட்கண் ஐயந்தீர்தற் பொருட்டு ஆராய்ந்த சொல்லாகலும் உரித்து, எ—று.

உம்மை யெச்சவும்மை யாகலான், ஐயம் அறுத்தலே யன்றி அறிவொப்புக் காண்டற் பொருட்டும் வினாவப்படும் என்றும் கொள்க. ஐயம் அறுத்தலாவது, இச் சொற்குப் பொருள் இதுவென வுணர்ந்தான் ஒருதலையாகத் துணித லாற்றாது அஃதறிவான் ஒருவனை வினாதல். அறிவொப்புக் காண்டலாவது சொல் இலக்கணம் அறிவான் ஒருவன், அஃது அறிவான் ஒருவனை 'இதற்குப் பொருள்யாது' என வினாதல். பிறவும் அன்ன. இவ்வாறு அறிந்த பொருளை வினாதல் வழுவாயினும் அமைக என றவாறு.

நச்.

இஃது அவற்றுள் ஒன்று, அறிந்த வழியும் வரும் என்று அறிந்து காக்கின்றது; எனவே மரபு கூறிற்றாம்.

இ—ள்: அவற்றுள் யாதுஎனவரூஉம் வினாவின் கிளவி— அக்கூறப்பட்ட இரண்டனுள் யாது என்னும் வினாச் சொல் அறியாப் பொருளை வினாதலேயன்றி, அறிந்த பொருள்வயின் ஐயந்தீர்தற்குத் தெரிந்த கிளவி ஆதலும் உரித்து—அறிந்த பொருட்கண் ஐயம்தீர்த்தற்கு ஆராய்ந்த சொல் ஆதலும் உரித்து, எ—று.

உ–ம்: நம் எருது ஐந்தனுள் கெட்ட எருதுயாது எனவரும். இஃது அறிந்த பொருட்கண் ஐயம் தீர்த்தலின் வருவமைதியன்று.

முன்னிற் சூத்திரத்துள்யாது என்பதனை இச்சூத்திரத்தோடு பொருந்தப் பின்வையாததனால், செறியத் தோன்றாதனவற் றிலும் வருவன கொள்க.

நமருள் யாவன் போயினான் என எல்லாவற்றோடும் ஒட்டுக.

இனி, "கடிசொல் இல்லை" (எச்ச.55) என்பதனால், நமருள் எவன் போயினான், அவற்றுள் எவ்வெருது கெட்டது என்பனவும் கொள்க.

உம்மை எதிர்மறை ஆகலான், ஐயத்தாய் நிற்றல் வலி யுடைத்து.

கல்.

என்-எனின், மேல் அறியாப் பொருள்மேல் நிகழும் என்று மரபிலக்கணம் கூறிய சொற்களுள் ஒன்றற்குச் சிறிதறிந்த வழியும் வரும் மரபு உண்டென்று அறிந்தது காத்தல் நுதலிற்று.

பொருள்: மேல் வினாவப்பட்ட இரண்டனுள்ளும், யாது என்று சொல்ல வருகின்ற வினாப் பொருளை யுணர நின்ற சொல், அறிந்த பொருளிடத்துண்டாகிய ஐயந்தீர்தற்கு ஆராய்ந்த சொல்லாகலும் உரித்தென்றவாறு.

உ-ம்: ஒருவன் ஐந்து எருது உடையான் காப்பக் கொடுப்ப வற்றுள் ஒன்று கெட்டது என்று காப்பானிடைச் சொல்லின விடத்து, எருதுடையான் வெள்ளை, காரி என்னும் ஐயந்தீர்தற் பொருட்டு அவற்றுள் யாது என்று வினாதல் என்பது.

*மேற் சூத்திரத்துப் 'பின்தொடர்புடையது என்பதனைப் பின் வைக்கற்பாற்று' என்பதனான் இத்தோடியையுடைய தென்பதனை எவனின் பின்வையாது முன்வைத்த முறையன்றிக் கூற்றினான் அச்சூத்திரத்தோத்தானும், இலேசானும் அறியாப் பொருளிடத்து வந்தனவெல்லாம் அறிந்த பொருளிடத்து ஐயந் தீர்தற்கும் வருமெனக் கொள்க.

உ-ம்: நமருள் யாவன் போயினான், அவற்றுள் எவ்வெருது [1]கெட்டது என்றாற்போல் வன.

இச்சூத்திரத்தாற் கூறியது வழுமைதியன்றோ வெனின் முன்பறியாப் பொருள் என்றதும் ஒருவகையானும் அறியாமை யென்பதின்மையின், அதனைப் பார்க்க இது சிறுபான்மை யென்பதல்லது வழுவென வாகாதென வுணர்க.

இவற்றாற் சொல்லியது வினாப் பொருண்மேல் நிகழும் சொற்களது பெரும்பான்மை சிறுபான்மை மரபிலக்கணமென வுணர்க.

---

* பின் தொடர்புடையது என்பதனைப் பின் வைக்கற் பாற்று' என்பது ஒரு விதிபோலும்.

1. ச.வே: கோட்பட்டது.

ஒரு.

என்பது யாதென்னும் வினாச் சொல், அறியாப் பொருளை வினாவுதலே யன்றி யறிந்த பொருட்கண் ஐயந்தீர்தற்கு ஆராய்ந்த சொல்லாதலும் உரித்து.

உ-ம்: நம் எருது ஐந்தனுள் கெட்ட எருதுயாது என வரும். தெரிந்தகிளவி யாதலும் உரித்தென்றதனால் நமருள் யாவன் போயினான் என ஐந்திேனாடும் ஒட்டுக. 'கடிசொல் இல்லை' என்பதனால் நமருள் எவன் போயினான், அவற்றுள் எவ்வெருது கெட்டது என்பனவும் கொள்க.

சினை முதற் சொல் உம்மை பெறல்.

33. இனைத்தென அறிந்த சினைமுதற் கிளவிக்கு
வினைப்படு தொகுதியின் உம்மை வேண்டும்.

ஆ. மொ.

இல.

The partıcular 'Um' must be added to the words which denote the lımbs and the whole when the number of them is well known and when they are followed by the verbs.

க. சு.

The (partiele)-um should be (used) after the groups of words which qualify the verb, denoting a whole, or a part of a whole when the number is known.

பி. இ. நு.

நேமி. 11.

......................எண்ணி
இனைத்தென் றறிந்த சினைமுதற் பேர்க்கெல்லாம்
வினைப் படுப்பின் உம்மை மிகும்.

நன். 399.

இனைத்தென் றறிபொருள்......
வினைப்படுத் துரைப்பின் உம்மை வேண்டும்'

இல. வி. 315.

இனைத்தென் றறிபொருள்.........
வினைப்படு தொகுதிக்கண்ணும்.........
முற்றும்............உம்மையும்
தெற்றெனப் பெறுதல் செவ்வி தென்ப.

தொன். வி. 135.

வரைப்படும் எண்ணும்.........
வினைப்படின் உம்மை வேண்டும்.

முத்து. ஒ. 67.

இனைத்தென அறிந்த சினைக்கும் முதற்கும்
வினைப்படு தொகுதியின் உம்மைவேண்டும்.

இளம்.

இச்—வெனின், வரையறைப் பொருட்கண் சொல் நிகழுமாறு உணர்த்துதல் நுதலிற்று; மரபு வழுக்காத்தது எனினும் அமையும்.

உரை : இத்துணை யென்று வரையறுக்கப்பட்ட சினைக் கிளவிக்கும் முதற்கிளவிக்கும் வினைப்படுத்துச் சொல்லுமிடத்து இறுதி உம்மை கொடுத்துச் சொல்லுக; எ—று.

வ—று : நம்பி கண்ணிரண்டும் நொந்தன, நங்கை முலையிரண்டும் வீங்கின எனவரும்.

[1]சினைக் கிளவி உம்மை கொடாவிடிற் பிற கண்ணும் முலையும் உளவாவன செல்லுமாகலான், உம்மையன்றிக் கூறுதல் மரபன்று.

இனி முதற்கிளவி வருமாறு : தமிழ் நாட்டு மூவேந்தரும் வந்தார் என வரும்.

---

1. நம்பிகண் இரண்டு நொந்தன எனின் நம்பிக்குக் கண் இரண்டுக்குமேலும் பலவுள; அவற்றுள் இரண்டு நொந்தன எனப் பொருள்படுமாதலின் உம்மை கொடுத்துக் கூறவேண்டும்.

'இருதிணை மருங்கின் ஐம்பாலும் அறிய' என்னாது, 'இருதிணை மருங்கின் ஐம்பால் அறிய' (கிளவி. 10) என்று சூத்திரம் செய்தானா லாசிரியனேனும், செய்யுட்கண் உம்மை யின்றி வருதற்கு உடம்பொடுபுணர்த்தான் என்றலும் ஒன்று. இனிச் சூத்திரதிற் சினை முதற் கூறிய முறையன்றிக் கூற்றி னுள் உம்மையன்றி வருவனவும் உள என்பது பற்றி உம்மை யைத் தொகுத்துக் கூறினான் என்பாரும் உளர்.

சேனா.

இ—ள்: கேட்போரான் இத்துணை யென்றறியப்பட்ட சினைக் கிளவிக்கும், முதற் கிளவிக்கும் வினைப்படு தொகுதிக்கண் உம்மை கொடுத்துச் சொல்லுக, எ—று.

உ—ம்: 'பன்னிருகையும் பாற்படவியற்றி' (திருமுருகா. 118) எனவும், "முரசு முழங்கு தானை மூவிருங் கூடி" (பொருந. 54) எனவும் வரும்.

[1]அறிந்த சினைமுதற்கிளவி எனவே முன் அறியப்படாக்கால் முருகற்குக் கை பன்னிரண்டு, தமிழ்நாட்டிற்கு வேந்தர் மூவர் என உம்மை பெறாது வரும என்பதாம்.

---

1. பன்னிரண்டு=பன்னிரண்டு உள; வேந்தர் மூவர்= வேந்தர் மூவர் உளர் எனக்கொள்க. போர்க்கு வந்த தமிழ்நாட்டு வேந்தர் எத்துணையர் என்னும் வினா விற்குத் தமிழ்நாட்டு வேந்தர் மூவரும் வந்தார் என்றால் பதில் சொல்பவனுக்குத் தமிழ்நாட்டின் வேந்தர் மூவரே என்பது அறிந்ததாகும். அதனால் அவன் மூவரும் என உம்மை கொடுத்துக் கூறினான். தமிழ்நாட்டு வேந்தர் இத்துணையார் என அறியாமல் பலர் எனக் கொண்டவன் 'மூவர் வந்தார்' எனின் அது தவறில்லை. அதனால் உம்மை பெறாமல் வந்த தற்குக் காட்டிய உதாரணம் பொருந்தும். ஆனால் முருகனுக்குக் கை எத்துணை என அறியாதவன் முருகனுக்குக் கை பன்னிரண்டு என்னான். முருகன் சிலையைப் பார்த்தவன் கை பன்னிரண்டிருப்பது கண்டானாயின், முருகன் கை பன்னிரண்டே என முன்னர் அறிந்திரானாயின், அவனும் முருகன் கை பன்னிரண்டு என்னான். எனவே இவ்வுதாரணம் இங்குக்

[2]ஐந்தலை நாகம் உடன்றது, நான் மறை முதல்வர் வந்தார் என்புழி, இனைத்தென வறிந்த சினைமுதற் கிளவியாயினும் வினைப்படு தொகுதியன்மையின், உம்மை பெறாவாயின. அஃதேல், பன்னிருகையும் என்புழியும் தொகுதிப் பெயர் வினை யொடு தொடராது கை என்பதனோ டொட்டி நிற்றலின் வினைப்படு தொகுதி யன்றாம் பிற வெனின், ஒட்டி நின்ற தாயினும், ஐந்தலை நாகம், நான் மறை முதல்வர் என்பன போலாது இரு சொல்லும் ஒரு பொருள்மேல் வருதலின் கை என்பதனோடியைந்த இயற்றி என்னும் வினை, தொகுதிப் பெயரோடும் இயைந்ததாம்; அதனான் அது வினப்படு தொகுதி யாம் என்பது.

அஃதேல், கண்ணிரண்டும் குருடு, எருதிரண்டும் மூரி எனப் பெயர் கொண்டவழி உம்மை பெறுமாறு என்னை யெனின். பெயராக வினையாக முடிக்குஞ் சொல்லோடு படுதலை ஈண்டு வினைப்படுதல் என்றாராகலின், அவையும் வினைப்படு தொகுதியாம் என்க. ஐந்தலை நான்மறை என்பனவற்றிற்கு நாகம், முதல்வர் என்பன முடிக்குஞ் சொல் அன்மையின் வினைப்படு தொகுதியாகாமையுணர்க.

காட்டுவது பொருந்தவில்லை. முருகனுக்குக் கை பன்னிரண்டு என்பது அறியாதவனுக்கு அறிவிக்கும் அத்துணையே; தவறில்லை.

2. ஐந்தலைநாகம் உடன்றது: நாகம் எழுவாய், உடன்றது பயனிலை-ஐந்தலை அடைமொழி. நான்மறை முதல்வர் வந்தார்: முதல்வர் எழுவாய்; வந்தார் பயனிலை; நான் மறை அடைமொழி. பன்னிருகையும் இயற்றி: பன்னிரு கை இருபெயரொட்டுப் பண்புத்தொகை. இது ஒன்றாகி இயற்றி என்னும் வினையுடன் முடிந்தது. கை பன்னிரண்டும் இயற்றி என மாறலாம். நாகம் ஐந்தலை உடன்றது என்றோ முதல்வர் நான்மறை வந்தார் என்றோ மாறாமையுணர்க. ஐந்தலையையுடைய நாகம் எனவும், நான்மறையில் வல்ல முதல்வர் எனவும் வேற்றுமைப் பொருளும், பன்னிரண்டாகிய கை எனப் பண்புத்தொகைப் பொருளும் வேறுபாடு காண்க.

[3]சிறப்புடைப் பொருளைத் தானினிது கிளத்தல் என்பதனால் சினை முதற் கிளவி என்றாராயினும் சிறவாத பண்பு முதலாயினவும் கொள்ளப்படும்.

உ-ம்: சுவையாறும் உடைத்திவ் வடிசில; கதியைந்தும் உடைத்து இக்குதிரை எனவரும்.

[4]இருதோள் தோழர் பற்ற எனவும், ஒண்குழை யொன்றொல்கி யெருத்தலைப்ப எனவும் உம்மையின்றி வந்தன வாலெனின், ஆண்டும்மை செய்யுள் விகாரத்தாற் றொக்கு நின்றனவென்பது.

தெய்.

ஒருசார் செப்பு வழுக் காத்தலை நுதலிற்று.

இ—ள்: இத்துணை யென வரையறுக்கப்பட்ட சினைக் கிளவியும் முதற்கிளவியும் தொழிற்படு தொகுதிக்கண் உம்மை பெறல் வேண்டும்; எ—று.

எனவே தொழிற்படாத தொகை இயல்பாகி வரப்பெறும் என்பது பெறுதும்.

---

3. பல பொருள்களுள் சிறந்ததைத் தான் விதந்து (இனிது) சொல்லுதல். இனைத்தென அறியக்கூடிய பொருள்கள் சினை, பண்பு, தொழில் எனப்பலவுள. அவற்றுள் சினைப்பொருள் சிறத்தலின் அதையே ஆசிரியர் எடுத்துக் கூறினார். எனினும் மற்றையவற்றையும் கொள்ளலாம். சிறப்புடைப் பொருளைத் தானினிது கிளத்தல்' என்பது ஓர் இலக்கணவிதி போலும்.

4. இருதோள் தோழர் பற்ற என்பதில் தோள் இரண்டேயாதலின் 'உம்' இன்றி வந்தது செய்யுள் விகாரம். 'ஒண்குழை யொன்று ஒல்கி எருத்தலைப்ப' என்பதில் ஒன்று என்பது எண்ணாயின் இரண்டனுள் ஒன்று எனப்படுதலின் உம் இல்லாதது வழுவன்று; ஆதலின் செய்யுள் விகாரம் என்று அமைக்க வேண்டுவதில்லை. அதனால் இவ்வுதாரணம் பொருந்தாது—சிவ.
இவ்வுதாரணம் இரண்டும் நன்னூல் சூத்திரம் 398-ல் மயிலைநாதர் உரைமேற்கோள்.

உ—ம்: தேவர் முப்பத்து மூவரும் வந்தார், நங்கை முலையிரண்டும் நல்ல இவை தொழிற்பட்ட தொகை. தேவர் முப்பத்து மூவர், ஆவிற்கு முலை நான்கு இவை தொழிற்படாத தொகை. கடுவன் முது மகன் கல்லா மூலற்கு—வதுவை வந்த வன்பறழ்க் குமரி—இருதோள் தோழர் பற்ற "என்புழி உம்மை வந்ததன்றால் எனின், ஆண்டு எஞ்சி நின்றது என்க.

நச்.

இது வரையறையுடையது தொகை பெறும் வழிப் படுவதோர் மரபு கூறுகின்றது.

இ—ள்: இனைத்து என அறிந்த சினை முதற் கிளவிக்கு—கேட்போரால் இத்துணை என்று அறியப்பட்ட சினைக் கிளவிக்கும் முதற்கிளவிக்கும், வினைப்படு தொகுதியின் உம்மைவேண்டும்—முடிக்குஞ் சொல்லொடுபடும் தொகுதிக்கண் உம்மை கொடுத்துச் சொல்லுக, எ—று.

உ—ம்: நம்பி கண் இரண்டும் நொந்தன, தமிழ் நாட்டு மூவேந்தரும் வந்தார் எனச் சினை முதற் கிளவிகள், தாமே வினைப்பட்டமையின் உம்மை வேண்டின.

"பன்னிருகையும் பாற்படவியற்றி" (திருமுருகா. 118) இது பிறவினைப் படுத்தினது.

"முரசு முழங்கு தானை மூவிருங்கூடி" (பொருந. 54) இது தானே வினைப்பட்டது. பன்னிரண்டென்னும் தொகுதியும் கையும் இயற்றி என்பதன்மேல் வருதலின், கையென்பதனோடு இயைந்த இயற்றி என்னும் வினை, தொகைப் பெயரோடும் இயைந்ததாம். ஐந்தலை நாகம் உடன்றது என்பதற்கு நாகம் வினைப்படு தொகுதியன்று, முடிக்கும் சொல் அன்மையின்.

இனிக் கண்ணிரண்டும் குருடு, எருதிரண்டும் மூரி எனப் பெயர் கொண்டவழிப் பெயரும் முடிக்கும் சொல்லேயாம். சுவையாறும் உடைத்து இவ்வடிசில், கதி ஐந்தும் உடைத்து இக் குதிரை எனச்சிறவாத பண்பு முதலியன பற்றி வருவனவும் கொள்க.

"இருதோள் தோழர் பற்ற" (நன். 398.மயிலை. உரை.மேற்) என்பது பிறரால் வினைப்படுக்கப்பட்டது. இதற்கு உம்மை விகாரத்தால் தொக்கது, செய்யுளாதலின். இத்துணையென்று அறியாக்கால் முருகற்குக் கை பன்னிரண்டு என்று உம்மை

பெறாதாம். "ஒண்குழை ஒன்றொல்கி எருத்தலைப்ப." (நன் 398. மயிலை. உரை. மேற்) என்பது ஒன்றேனும் இனைத்தென அறிந்தபின் உம்மைவேண்டும்; அது விகாரத்தால் தொக்கது.

கல்-

என்—எனின், இன்னும் உலகத்துப் பொருள்தான் வரையறை யுள்ளதும் இல்லதும் என இருவகைத்து. அவற்றுள் வரையறை யுள்ளது தொகைபெறும்வழிப் படுவதோர் மரபிலக்கணம் கூறுதல் நுதலிற்று.

பொருள்: இத்துணை யென்று வரையறுக்கப்பட்ட சினைக் கிளவியும் முதற்கிளவியும் தம்மை மேல் ஒரு வினையொடு படுத்துச் சொல்லுவதாவதற்குத் தொகை கொள்ளுமிடத்து அத் தொகைச்சொல் இறுதிக்கண் உம்மை கொடுத்துச் சொல்லு தலை வேண்டும் என்றவாறு.

உ—ம்: நம்பி கண் இரண்டும் நொந்தன, நங்கை முலை இரண்டும் வீங்கின—இவை சினைக் கிளவி. தமிழ்நாட்டு மூவேந்தரும் வந்தார், முப்பத்துமூவரும் வந்தார் என்பன முதற் கிளவி.

வினைப்படு தொகுதி என்றமையான் தொகை கொடாத வினை, பாட்டின்கண் உம்மையின்றி 'நம்பிகண் நொந்தது, நொந்தன' என வரும்.

இருதோள் தோழர் பற்ற எனவும், ஒண்குழை ஒன்று ஒல்கி எனவும் உம்மையின்றி வந்தனவும் உளவால் எனின், அவை செய்யுளுள் தொகுக்கும்வழித் தொகுத்தல் என்பதினால் தொக்கு நின்றன; அவ்வாறு வழக்கினுள் இல்லையென் றுணர்க.

'இருதிணை மருங்கின் ஐம்பாலறிய' என்ற சூத்திரத்துள் உம்மையின்றி வந்தன, உடம்பொடு புணர்த்தல் என்பதனாற் செய்யுளுள் உம்மையின்றி வருவனவும் உளவென்றலும் ஒன்று; இது சிறுபான்மை.

இனி வினைப்படாத பெயர் பாட்டின்கண் 'தமிழ்நாட்டு மூவேந்தர் இவர்' எனினும் அமையும் என்பது.

ஒரு.

என்பது. இத்துணை யென்று வரையறுக்கப்பட்டு நின்ற சினைக் கிளவிக்கும் முதற் கிளவிக்கும் வினைப்படுத்துச் சொல்லு மிடத்து இறுதி யும்மை கொடுத்துச் சொல்லுக.

உ—ம்: நம்பி கண்ணிரண்டும் நொந்தன, நங்கை முலை யிரண்டும் வீங்கின—சினைக் கிளவி உம்மை பெற்றவாறு. தமிழ்நாட்டு மூவேந்தரும் வந்தார், முப்பத்து மூவரும் வந்தார். நமர் நால்வரும் வந்தார்-முதற்கிளவி உம்மை பெற்றவாறு.

அன்றியும் "பன்னிருகையும் பாற்பட வியற்றி" யெனவும், "முரசு முழங்கு தானை மூவருங் கூடினார் எனவும் வரும். †எருமை நாற்காணிற் கீழ வரும் எனவும், இருதோள் தோழர் பற்ற எனவும்,

*கண்களியாச் சென்றமர்ப்பக் கைநாஞ்சின் மேலசைஇ
யொண் குழையொன் றொல்கி யெருத்தலைப்ப-வெண்
சுடர்ப்புண்
ஏர்மலர்த் தார்ஐவர் நீர்மை யுடைத்தரோ
நீர்மணிப்பூண் வெள்ளை நிலை

எனவும் இவை உம்மை யில்லையால் எனிற் செய்யுளாதலாற் றொக்க தென்க.

மன்னாப் பொருள் உம்மை பெறல்

34. மன்னாப் பொருளும் அன்ன வியற்றே

ஆ. மொ.

இல.

The same rule is to be followed in the case ot transient object also.

க. சு.

That same (rule) should be observed also (with words denoting) non existent (or tronsient) objects.

---

†* இவ்வுதாரணங்கள் பிறரால் காட்டப்படாதன.

பி இ. நூ.

நன். 399

.........உலகி னிலாப் பொருள்
வினைப்படுத் துரைப்பின் உம்மை வேண்டும்

இல. வி. 315

.........உலகி னிலாப் பொருள்
வினைப்படு தொகுதிக் கண்ணும்...
.........எச்சமும்......உம்மையும்
தெற்றெனப் பெறுதல் செவ்வி தென்ப

தொன். வி. 135.

.........வையகத் தில்லவும்
வினைப்படின் உம்மை வேண்டும்

முத்து. ஒ. 68.

இல்லாப் பொருளும் அன்ன இயற்றே.

இளம்.

இச்—வெனின், இதுவும் மரபு வழுக் காத்தல் நுதலிற் று.

உரை: மன்னாப் பொருள் என்பது இல்லாப் பொருள் என்ப அதனையும் சொல்லுமிடத்து உம்மை கொடுத்துச் சொல்லுக; எ—று.

வ—று: 'பவளக் கோட்டு நீலயானை சாதவாகனன் கோயிலுள்ளும் இல்லை' எனவரும்.

* உம்மை பெறுதல் ஒப்புமை நோக்கியே முதற்சூத்திரத் தொடு மாட்டெறிந்த தெனக் கொள்க.

சேனா.

இ—ள்: இல்லாப் பொருட்கும் இடமும் காலமும் பொருளும் முதலியனவற்றோடு படுத்து இன்மை கூறுதற்கண் உம்மை கொடுத்துச் சொல்லுக; எ—று.

---

* முன்சூத்திரத்தில் சொல்லப்பட்ட உம்மை முற்றும்மை; இதிற் சொல்லப்படுவது எச்ச உம்மை. அன்ன இயற்று என்னும் (ஒப்புமை) மாட்டேறு உம்மை பெறுதல் என்பதற்கேயன்றிமுற்றும்மை பெறுதல் என்பதற்கன்று. சாதவாகனன் கோயிலுள்ளும் என்ற உம்மை வேறிடங் களில் இல்லாமையேயன்றி என்பதைத் தழுவுதலின் எச்ச உம்மை.

உ-ம்: 'பவளக் கோட்டு நீலயானை சாதவாகனன் கோயிலுள்ளும் இல்லை' யெனவும், 'குருடு காண்டல் பகலு மில்லை' எனவும, "உறற்பால நீக்கலுறுவார்க்கு மாகா" (நாலடி. 104) எனவும் வரும். இல்லாப் பொருட்கு ஒருகாலும் நிலையுறுதல் இன்மையின் 'மன்னாப் பொருள்' என்றார்.

இடம் முதலாயினவற்றொடு படுத்தற்கண் என்பது ஏற்புழிக் கோடல் என்பதனாற் பெற்றாம். அவற்றொடு படாதவழிப் 'பவளக் கோட்டு நீலயானை யில்லை' என உம்மையின்றி வரும் என்பதாம்.

முற்றும்மையும் எச்ச வும்மையுமாகிய வேறுபாடுடைய வேனும் உம்மை பெறுதல் ஒப்புமையான் அன்னவியற்று என்றார்.

இரண்டு சூத்திரத்தானும் மரபு வழுக் காத்தவாறு.

தெய்.

இது மரபு வழுக் காக்கின்றது.

இ-ள்: பொருந்தும் பொருளும் பொருந்தப் பொருளும் உறழ வேண்டும் இடத்தும், பொருந்தும் பொருள் கூறுமிடத்தும் உம்மை கொடுத்துச் சொல்ல வேண்டும். எ—று.

†வேதாகமத்துணிவு ஒருவர்க்கு உணர்த்துமிடத்து உலகும் உயிரும், பரமும் அனாதி; பதியும், பசுவும், பாசமும் அனாதி எனவரும். உலகும் உயிரும் பரமும் பசுவும் பொருந்தும் பொருளானவாறும், பாசமும், பதியும் இவற்றோடு பொருந்தாத பொருள் ஆனவாறும் காண்க. 'உடம்பும் உயிரும் வாடியக் கண்ணும்' எனவும், 'நோயும் இன்பமும்' எனவும் கூறியவாறுங் காண்க. *'மன்னிக்கழிகின்றேன்' என்றான்; மன்னுதல் பொருத்தமும் மன்னாமை பொருந்தாமையும் ஆனவாறு காண்க.

---

† உலகு உயிர் பரம் எனின் ஒன்றில் ஒன்று பொருந்தும் தன்மையனவாவன. அதாவது உலகில் உயிரும் பரமும் பொருந்துவன. பதியும் பாசமும் எனின் ஒன்றை ஒன்று இயையாதன ஆதலின் பொருந்தாதன. பொருந்துவனவற்றையோ, பொருந்தாதனவற்றையோ எண்ணிச் சொல்லும்போது உம்மை வேண்டும் என்பது கருத்து.

* மன்னுதல் எனின் பொருந்துதல் என்னும் பொருளதாகும் என்பதற்குக் காட்டப்பட்ட மேற்கோள் 'மன்னிக் கழிகின்றேன் என்றான்' என்பது.

‡இரண்டாவதோர் ஏட்டிற் காணும் பொருள் வருமாறு

இ-ள்: இதுவும் அது. நிலையாத பொருள் உம்மை பெறல் வேண்டும், எ-று.

அவையான இளமை, செல்வம், யாக்கை யென்பன.

உ-ம்: சக்கரவர்த்தி இளமையும் நில்லாது, சக்கரவர்த்தி செல்வமும் நிலையாது, சக்கரவர்த்தி யாக்கையும் நிலையாது 'ஏமமாக இந்நிலம் ஆண்டோர் சிலரே', 'பெருங்கேளினி..னாளும் பலரேயத்தை யஃதறியாதோரே', 'அன்னோர் செல்வமும் மன்னி நில்லா எனவரும்

இல்லாப் பொருளென உரைப்பவால் எனின், இல்பொருள் வழக்கின்றென மறுக்க. உம்மை கொடாக்கால் வரும் குற்றம் என்னையெனின், பிற நிலையாமையும் செல்வமும் யாக்கையும் நிற்கும் எனப் பொருள் படுதலான் கொடுக்க வேண்டும் எ்க.

நச்.

இது நிலையாப் பொருட்கண் மரபு நிகழ்த்துமாறு கூறுகின்றது.

இ—ள்: மன்னாப் பொருளும்—உலகத்து நிலையில்லாத பொருளும், அன்ன இயற்று—அதுபோல உம்மையான் கொடுத்துக் கூறுதல் வேண்டும், எ—று.

பொருளும் என்ற எச்ச உம்மையான் உலகத்து இல்லாத பொருளும், இடமும், காலமும் பொருளும் முதலியன வற்றோடு படுத்துக் கூறுதற்கண் உம்மை கொடுத்துச் கூறுதல் வேண்டும் என்று பொருள் உரைத்துக் கொள்க.

யாக்கையும் நிலையாது எனவே, 'இளமையும் செல்வமும் நிலையா' என்னும் பொருளும் உணர்த்தி எச்ச உம்மையாய் நிற்கும், உம்மை பெறுதல் ஒப்புமையான். முற்றும்மையோடு எச்ச உம்மையை மாட்டெறிந்தார்.

இனிப் 'பவளக் கோட்டு நீல யானை சாதவாகனன் கோயி லுள்ளும் இல்லை,' 'குருடு காண்டல் பகலும் இல்லை,' உறற்பால

---

‡ முதற்பொருள் யாரோ பாடம் கேட்டவர் எழுதி வந்தது இடைச்செருகலாய் வந்திருக்கும். இரண்டாவது உரையே மேற்கொள்ளத் தக்கதாம். முதற்பொருளில் தரப்பட்ட உதாரணம் எண்ணும்மைக்கு ஏற்றதாகி, சொல். 255 ஆம் நூற்பாவின்படி அமைவதாகும்.

நீக்கல் உறுவார்க்கும் ஆகா' (நாலடி 104) என இல்லாப் பொருள் களும் எச்சவும்மை பெற்றவாறு காண்க. இடம் முதலியவற் றோடு வாராத வழி உம்மை பெறா.

"மன்னுக பெருமநீ நிலமிசை யானே" (புறம். 6) எனவும், "மன்னா வுலகத்து மன்னுதல் குறித்தோர்" (புறம். 165) எனவும், "மன்னாப் பொருட்பிணி முன்னி" (நற். 71) எனவும் மன்னாமை நிலையாமையை யுணர்த்துதல் அன்றி இன்மையை யாண்டும் உணர்த்தாமை காண்க.

கல்.

என்—எனின், இன்னும் உலகத்துப் பொருள் இல்லதும் உள்ள தும் என இருவகைத்து. அவற்றுள் இல்லதன்மேற் பிறக்கும் மரபிலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று.

பொருள் : உலகத்தில்லாப் பொருளும் மேலதனோடு ஒத்த இயல்பினை யுடைத்து, எ—று.

அன்ன வியல்பு என்பது, மேலும் பிறபொருள் ஒழிந்தன வுள வெனப்படுதற் கஞ்சி முற்றும்மை கொடுக்க வென்றான். அதுபோல் ஈண்டும் ஒழிவதஞ்சி எச்சவும்மை கொடுக்க வென்பான் 'அன்ன வியற்று' என்றான் என்பது.

உ-ம் முயற்கோடும், ஆமைமயிர்க் கம்பலமும், அம்மிப் பித்தும், துன்னூசிக் குடரும் சக்கரவர்த்திக் கோயிலுள்ளும் இல்லையென வரும்.

மேற்சூத்திரத்து முற்றும்மையோடு இச்சூத்திரத்தை மாட்டேற்றலின் முயற்கோடும், ஆமை மயிர்க்கம்பலமும் யாண்டும் இல்லை என்பது உதாகரணமாகற் பாற்றெனின், யாண்டும் என்னாது இல்லை யெனவும் வழக்கமைதலின் இதுவே பொருளன்மையை வாளாதே இல்லை யென்பதன்றி ஓர் இடத்தொடு படுத்து இல்லை யென்புழி எச்ச வும்மை கொடாது விடிற் பிறவிடத் துண்மை சொல்லின் மாட்டேற்றொரு புடைச் சேறல் என்பதாகக் கொண்டு, மேற்காட்டிய வுதாரணமாகற் பால வென்பது.

ஒரு.

என்பது, மன்னாப் பொருள் இல்லாப் பொருள்.

உ-ம்: பவழக் கோட்டு நீலயானை சாதவாகனன் கோயிலுள்ளும் இல்லை; முயற்கோடும், யாமைமயிர்க்கம்பலமும் அம்மிப் பித்தும் துன்னூசிக் குடரும் சக்கரவர்த்திக் கோயிலுள்ளும் இல்லை எனவும், எந்நங்கையும் மயிரில்லை, இக்கழுதைக்குங் கோடில்லை யெனவும் உம்மை கொடுத்துச் சொல்லுக. உம்மை கொடாது சொல்லிற் பிறாண்டுண்டெனச் செல்லும். பிறாண்டு-வோரோரிடம். உம்மை யெச்ச வும்மை.

ஆதி.

பொருள் : (இத்துணை யென்று அறிந்த பெயருடன் வினை சேர உம் சேர்ந்தது போல) உலகில் நிலை நில்லாப் பொருள் பற்றிச் சொல்லும் போது 'உம்' சேர்த்தல் வேண்டும்,

அங்கு வாத்து முட்டை கிடைக்கும
கோழி முட்டை கிடைக்கும்--இதுமுறை.

‡பூனை முட்டை கிடைக்கும் எனக் கூற வேண்டின் அது உலகில் இல்லாப் பொருள் ஆதலின், 'பூனை முட்டையும் கிடைக்கும்' என எழுதுதல் வேண்டும். அதன் கருத்து அது உலகில் இல்லாப் பொருள் என்பதே.

நாடகத்தில் பத்துத்தலை மனிதரும் உளர்,
மலையைப் பெயர்க்கும் மனிதரும் உளர்
கடலைத் தாண்டும் மனிதரும் உளர்
பறக்கும் மனிதரும் உளர்

எனக் கூறின் இவை உலகில் இல்லாப் பொருள் ஆகும்; 'உம்' இல்லாது பத்துத்தலை மனிதர், கடல் தாண்டும் மனிதர், பறக்கும் மனிதர் ஆங்கு உளர் எனின் அது உள் பொருளாகும்.

உயர்வுச் சிறப்புக்கு உம் சேர்வதுபோல இல்லாப் பொருட்கும் உம் சேரவேண்டும்.

பெருவயிற்றில் வாயரையும் கண்டேன் கண்டேன்
பிறை நெற்றிக் கண்ணரையும் கண்டேன் கண்டேன்
வெரிநிலுறு முகத்தரையும் கண்டேன் கண்டேன்
வாழையிரு குலை கொளலும் கண்டேன் கண்டேன்

---

‡ பூனை முட்டையும் கிடைக்கும் என்று கூறுவது எவ்விடத்து? நாடகத்தில் பத்துத்தலை மனிதரும் உளர் என்பது பொருந்தும்.

உயர் வெளவால் முட்டையையும் கண்டேன் கண்டேன்
நரிக்கொம்பும் பொன்மானும் கண்டேன் கண்டேன்
நாடகத்தில் கனாவுலகில் கண்டேன் யானே
(மன்னாப் பொருள்)

திங்களில் வெயிலும், வெங்கதிரில் நிலவும் பெற வல்லான் நலங்கிள்ளி. இங்கெல்லாம 'உம்' மன்னாப் பொருளில் சார்ந்து நிற்பன வுணர்க.

செப்பு வழுவமைதி

35. எப்பொரு ளாயினும் அல்லது இல்லெனின்
அப்பொருள் அல்லாப் பிறிதுபொருள் கூறல்

ஆ. மொ.

இல.

when the phrase ·allathu 'il' is
used to denote the seareity of anything (by a merehant)
it is to be used along with the other theing available of the same əategory

க. சு.

When (the ˋexpression) allst—il is used Coneerning (the absenee of) any eommodity, (one should) mention another (available) not that eommodity

பி. இ. நூ.

நன். 406

தம்பால் இல்லது இல்லெனின் இனனாய்
உள்ளது கூறி மாற்றியும்.........
.... உரைப்பர் சொற் சுருங்குதற்கே.

இல. வி. 310

இல்லது அல்லது இல்லதனால் இல்லெனின்
அப்பொருள் அல்லாப் பிறிது பொருள் கூறியும்
....
.... மாற்றுவர் சொற்சுருங் குதற்கே.

முத்து. ஒ. 69

யாதெனும் ஒருபொருள் அல்லதில் என்பான்
அஃதல பிறபொருள் அறைவது வழக்கே.

இளம்.

இச்-எனின், [1]மறித்துச் சொற் பல்காமைத் தொகுத்திறுக்கும் இலக்கணம் இஃது என்பது உணர்த்துதல் நுதலிற்று.

உரை: எவ்வகைப்பட்ட பொருளாயினும், தன்னுழை யுள்ளது அல்லதனை இல்லையென ஒறுமே யெனின், அவன் கூறிய பொருளல்லாத பிறிது பொருள் கூறி இல்லையென்க, எ—று.

[2]தன்னுழையுள்ள தன் உண்மை கூறி இல்லை என்க என்பது கருத்து.

வ-று: 'பயறுளவோ வணிகீர்' என்றால், 'உழுந்தல்லதில்லை' என்க, தன்னுழை அவை உளவாயின். இதன் கருத்து, அவன் வினாவப்பட்ட பொருட்கு இனமாய பிறிது பொருள் கூறுக என்பது.

---

1. *மீளவும் சொல் பெருகாதிருக்க வேண்டிச் சுருங்கக் கூறும் இலக்கணம் இஃது என்பது உணர்த்துதல் நுதலிற்று. மறித்துச் சொல்பல்குதலாவது:— பயறு உண்டோ என்று ஒருவன் கேட்பின் (பயறு இல்லையாயின்) பயறு இல்லை என்றால் மீண்டும் உழுந்துண்டோ என்பான். உழுந்திருப்பின் உண்டு என்னல் வேண்டும். இவ்வினாவிடைகளில் (1) பயறு உண்டோ (2) பயறு இல்லை (3) உழுந்துண்டோ (4) உண்டு என நான்கு தொடர்கள் உள. பயறுண்டோ என்னும் வினாவுக்கு உழுந்தல்லதில்லை என்றால் இரண்டே தொடர்கள் உள. நான்கு தொடர்களில் மீளவும் உழுந்துண்டோ என்பதும் உண்டு என்பதும் மறித்தும்சொல் பல்கியனவாம்.*

2. *வணிகன் தன்னிடம் உள்ளதைக் கூறி இல்லாததை இல்லை யென்க.*

[3]இச்சூத்திரம் "செப்பும் வினாவும்" (கிளவி. 13) என்பதனுள் அடங்காதாயிற்று, அவன் வினாவிற்குச் செவ்வன் இறையாகவன்றிப் பிறிதும் ஒன்று கொணர்ந்து இறுத்தமையின்.

சேனா.

இ—ள்: யாதாயினும் ஒரு பொருளையாயினும் ஒருவன் [1]'அல்லதில்' என்னும் வாய்பாட்டான் இல்லை யெனலுறின், அப்பொருள் தன்னையே கூறாது அப்பொருளல்லாத பிறிது பொருள் கூறுக, எ—று.

உ-ம்: 'பயறுளவோ வணிகீர்' என்று வினாயவழி, 'உழுந்தல்ல தில்லை,' 'கொள்ளல்ல' தில்லை' என 'அல்லதில்' என்பான் பிறிது பொருள் கூறியவாறு கண்டு கொள்க.

[2]'அல்லதில் எனின்' எனப் பொருள்பற்றி யோதினாராகலின், அல்லதில் என்னும் வாய்பாடே யன்றி, 'உழுந்தன்றி யில்லை, உழுந்தேயுள்ளது' என அப்பொருள் படுவன வெல்லாங் கொள்க. 'உழுந்தல்ல தில்லை' யெனப் பிறிது பொருள் கூறாது, 'பயறல்லதில்லை' யென அப்பொருள்கூறின், பயறுள்ள; அல்லன இல்லையென மறுதலைப் பொருள்பட்டுச் செப்பு வழுவா மாறறிக.

---

3. 'செப்பும் வினாவும் வழாஅல் ஓம்பல் என்பதில் கூறப் பட்ட செப்பின் வகைகளில் இது அடங்காமையின் அதாவது பிறிதான இனப்பொருள் கூறுவது அடங் காமையின் தனியே கூறப்பட்டது.

1: 'அல்லது இல் எனின்' என்பதற்குச் சொற்பொருளாகத் "தன்னிடம் உள்ளது அல்லாத பொருளை இல்லை என்ன வேண்டின்" என இளம்பூரணர் பொருள் கொள்ள, இவர் அஃதொரு வாய்பாடு எனக் கொண்டார். உதாரணத்தால் இருவரும் ஒத்தவரே.

2. 'அல்லதில்' என்பது வாய்பாடாயினும் தன்னிடம் உள்ளது அல்லாததை இல்லை யெனப் பொருள் தருமளவில் கூறியிருத்தலால் அப்பொருள் படவரும் 'அன்றி', தேற்றேகாரம் முதலிய வாய்பாட்டுச் சொற்களாலும் கூறலாம்.

யாதானும் ஆக, அல்லதில் எனின் பிறிது பொருள் கூறுக என எஞ்சாமல் தழீஇ யாப்புறுத்தற்கு எப்பொருளாயினும் என்றார்.

[3]அல்லதில் என்பதற்குத் 'தன்னுழை யுள்ளது அல்லது' என்றும், அப்பொருளல்லாப் பிறிதுபொருள் கூறல் என்பதற்கு 'இனப்பொருள் கூறுக' என்றும் உரைத்தாரால் உரையாசிரியர் எனின், பயறுளவோ என்று வினாயவழிப் பயறில்லை என்றாற் படும் வழுவின்மையானும், உள்ளதல்லது என்றல் கருத்தாயின், ஆசிரியர் அல்லது எனக் குறித்த பொருள் விளங்காமையின் அகப் படச்சூத்திரியார் ஆகலானும், [4]பாம்புணிக் கருங்கல்லும், பயறும் விற்பான் ஒருவனுழைச் சென்று 'பயறுளவோ' என்றவழிப் பாம்புணிக் கருங்கல் அல்லது இல்லை' என்றால் இனப் பொருள் கூறாமையாற்பட்ட இழுக்கின்மையானும் அவை போலியுரை யென்க. அல்லதூஉம் இனப்பொருள் கூறுக என்பதே கருத் தாயின் அப்பொருளல்லா இனப்பொருள் கூறல் என்னாது பிறிது பொருள் கூறல் என்னார் ஆசிரியர்: அதனானும் அஃதுரை யன்மையுணர்க.

தெய்.

செப்பு வழுவமைதி யுணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்: யாதானும் ஒரு பொருளாயினும் 'அல்லது' என்னும் சொல்லொடு கூட்டி 'இல்லை' எனக் குறித்தானாயின், அவன் வினாய பொருள் அல்லாத பிறிதாகிய பொருளைச் சொல்லுக, எ—று.

---

3. இப்பகுதிக்குச் சூத்திர உரைகளின் இறுதியின் கு. சுந்தர மூர்த்தி விளக்கம் பார்க்க. இங்கு 'அல்லதில்' என்பதற்குப் பதில் 'அல்லது' என்பதும், 'பயறுளவோ' என்பதற்குப் பதிலாகப் 'பயறுளதோ' என்பதும் இருத்தல் வேண்டும் என்பர் பூவாரகம்பிள்ளை. ஏன் எனின் 'அல்லதில்' என்பதில் இல் என்பதற்கு உரை யில்லை. மேலும் பயறுளவோ என்ற பன்மைக்கு உழுந்தல்ல தில்லை என ஒருமையில் பதில் வருகிறது.

4. இப்பகுதியை நச்சினார்க்கினியர் மறுப்பது சுவையாக வுள்ளது.

எனவே அதனோடு கூட்டிச் சொல்லுக என்றவாறாம். அப் பொருளல்லாப் பிறிது என்றமையான், அதற்கு இனமாகிய பொருளையே சொல்லப்படும்

'பயறு உளவோ வணிகீரே' என்றார்க்கும் 'உழுந்தல்லது இல்லை' யென்க. 'கொல்லவன் பட்டுளவோ' என்றால் 'கோசிகம் அல்லது இல்லை' என்க. எனவே அவன் கருத்திற் கேற்று வினாய பொருளை இல்லை யென்னாது பிறிது ஒன்று கூறுதல் வழுவாயினும் அப்பொருள் பயத்தலின் அமைதி யாயிற்று.

நச்.

இது வினாயதன் புறத்துச் சொல் பல்காமல் சொல் தொகுத்து இறுத்தல் என்னும் செப்பு ஆமாறு கூறுகின்றது.

இ—ள்: எபபொருளாயினும் — யாதானும் ஒரு பொருளை யாயினும், அல்லது இல் எனின்—தன்னுழையுள்ள தல்லதனை இல்லையெனல் உறுமேயெனின், அப்பொருளல்லாப் பிறிது பொருள்கூறல்—அவன் வினாய பொருள் தன்னையே கூறாது அதற்கு இனமாய பிறிது பொருளைக் கூறி, 'இல்லை' யென்க. எ—று.

'நூறு விற்கும் பட்டாடையுளவோ' என்று வினாயினார்க்கு 'ஐம்பது விற்கும் கோசிகம் அல்லது இல்லை' என்றும், 'பயறு உளவோ வணிகீர் என்றார்க்கு, 'உழுந்தல்லதில்லை; கொள் அல்லது இல்லை' என்றும், தன்னுழை உள்ளது அல்லதனை இல்லை யென்பான், பிறிது பொருளைக் கூறினான்.

*'பயறுளவோ' என்றவழி அல்லது என்பது ஒழியவும், 'பயறு இல்லை, உழுந்து உள' என்றால்படும் இழுக்கு என்னை யெனின், 'எப்பொருளாயினும்' என்றது ஐம்பாற் பொருளை யாகலானும், 'அல்லது' என்பது அஃறிணை ஒருமைப்பாற்கு உரித்தேனும் மற்றை நான்கு பாற்கண்ணும் பால் வழுவாயும் திணை வழு வாயும் மயங்குதலானும், அதுகண்டு அதனை அமைத்தற்கு 'எப்பொருளாயினும் அல்லதில்' என்றார். அவன் அல்லது அவள் அல்லது அவர் அல்லது அது வல்லது அவையல்லது எனவரும்,

---

* இக்கருத்தைக் கல்லாடனார் ஒருவர் ஏற்றுள்ளார். காண்க.

"நாணும் நட்பும் இல்லோர்த் தேரின்
யானல தில்லையிவ் வுலகத் தானே" (அகம் 268,9)

எனச் சான்றோர் செய்யுளுள் பயின்று வருமாறும் உணர்க. 'அவன் அல்லது பிறன் இல்லை' என மேல் வரும் சொல்லோடு படுத்து வழுவமைதியாதல் அறிக.

பயற்றான் முடிக்குங் குறை உழுந்தான் முடித்தலன்றிப் பாம்புணிக் கருங்கல்லான் முடிக்கல் ஆகாமையின்,' பயறு உளவோ' என்றார்க்குப் 'பாம்புணிக் கருங்கல் அல்லது இல்லை' என்றல் பொருந்தாமை யுணர்க.

கல்.

என்—எனின், 'சொற்றொகுத்து இறுக்கல்' என்னும் செப்பு ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

பொருள் : எவ்வகைப் பட்ட பொருளாயினும் தன்னுழை யுள்ளதல்லதனை இல்லையென லுறுமே யெனின், அவன் வினாவின பொருள் அல்லாத பிறிது பொருள் கூறி இல்லை யென்க, எ—று.

உ—ம் : 'பயறுளவோ வணிகீர்' என்றக்கால், 'உழுந்தல்ல தில்லை' யென்க. பயறுளவோ வென்றால் அல்லது என்பது ஒழியவும், 'பயறில்லை, உழுந்துள'' என இந்நிகரனவும் சொல்லுபவாகலான் 'அல்லது' என்பது வேண்டாவெனின்: 'அல்லது' என்பது அஃறிணை யொருமைப்பாற்குரியதே யெனினும் மற்றை நான்குபாற்கண்ணும் பால் வழுவாயும் திணைவழுவாயும் சென்று மயங்கல் கண்டு, அதனைக் காத்தற் பொருட்டாகச் சொல்லினார் என்பது.

உ-ம்: அவனல்லது, அவள் அல்லது, அவர் அல்லது, அது வல்லது, அவையல்லது எனவரும்.

அவனல்ல தென்புழி, [1]அவனல்ல தென்பதனைப் பின் பிறனில்லை யென்று வருவதனோடு படுத்து வழுவாதல் அறிக.

அப்பொருளல்லா என்பது மிகை: அதனாற் பிறிது பொருள் கூறும் வழியும் அவன் வினாயதற்கு இனமாயவற்றையே கூறுக என்றவாறு.

க. வே: 1. அல்லது என்பதனை

இதனாற் சொல்லியது செப்பின்கட் பிறப்பதோர் வழுக் கண்டு அதனை அமைத்தற்குக் கூறியவாறாயிற்று. இதனுள் வழுவென்பது என்னை யெனின், அவன் வினாயதனை மறுப்பதன்றி, அவன் வினாவாத பிறிதொன்றனையும் உடம் பட்டுக் கூறினமையின் என்பது. வழுவமைதியேற் பிறிது பொருள் கூறுகவென விதிக்கற் [2]பாற்றன வெனின் அவ்வாறு கூறலாகா தென மறுத்து [3]நின்றவும் இது இவ்வாறு கூறுக என்பதோர் விதி நீர்மைத்தது வென்பது.

ஒரு.

என்பது எவ்வகைப்பட்ட பொருளாயினும் தன்னுழையுள்ள தல்லதனை இல்லை யென்று சொல்லின் அவன் கூறிய பொருளல்லாப் பிறிது பொருள்கூறி இல்லை என்க. தன்னுழை உள்ள தன் உண்மை கூறி 'யில்லை' என்பது இதன் கருத்து.

உ—ம் : 'பயறுளவோ வணிகீர்' என்றக்கால் 'உழுந்தல்ல தில்லை, கொள்ளல்ல தில்லை' யென்றும், 'நூறுவிற்கும் பட்டாடையுளவோ என்றார்க்கு, 'ஐம்பதுவிற்கும் கோசிக மல்லதில்லை' என்றும் சொல்லுக. இஃது அஃறிணை யொருமைப்பாற் குரித்தேனும் 'எப்பொருளாயினும்' என்றமை யால் இருதிணை ஐம்பாற் கண்ணும் 'அல்லது' என்னும் சொற்கொடுத்துச் சொல்லுக.

வ—று : அவனல்ல தில்லை, அவளல்ல தில்லை, அவரல்ல தில்லை, அது வல்லதில்லை, அவையல்ல தில்லை யென்று சொல்லுக. "நாணு நட்பும் இல்லோர்த் தேரின், யானலதில்லை யில் வுலகத் தானே" எனச்சான்றோர் செய்யுளுட் பயின்று வருமாறு காண்க. பயறுளவோ வென்றார்க்கு அதற் கினமாகின உழுந்தான் முடித்தலன்றி, அதற்கின மாகாப் பாம்புணிக் கருங்கல்லால் முடியற்க.

ஆதி.

(1) எப்பொருள் பற்றிய தாயினும் 'அல்லது இல்' எனக் கூற நேரின் அப்பொருள் இல்லாப் பிறபொருளுடன் 'அல்லது இல்' சேர்த்துக் கூறுக.

---

2. பாற்று அன்றெனின்
3. நிற்றவும் இது என்பது கழகப் பதிப்பில் இல்லை.

சர்க்கரை கையிருப்பிற் கொள்ளா வணிகனிடம்—சர்க்கரை இருக்கிறதோ என வினாவின், அவன் 'வெல்லம் அல்லது இல்லை' எனக்கூறுதல் வேண்டும். (இருக்கிற பொருளுடன் 'அல்லது இல்லை' சேர்த்து இல்லாததைக் குறிப்பால் அறிவிப்பது மரபு)

(2) மறுபொருள்: எப்பொருள் பற்றியதாயினும் தன்னிடம் இல்லாததை 'இல்லை' என அறிவிக்க நேரின், அப்பொருள் அல்லாத பிற பொருள் (இருப்பதாகக்) கூறுக.

சர்க்கரை இருக்கிறதோ?—வெல்லம் இருக்கிறது.

கடலைப் பருப்பு இருக்கிறதோ?—துவரம் பருப்பு இருக்கிறது.

இலக்கணம் வாக்கிய அமைப்புப் பற்றியது. ஆதலின் 'அல்லது இல்' என்ற சொற்றொடர் அமைக்கும் முறை பற்றிய முதல் பொருளே சிறந்தது.

பிற குறிப்புகள்

சுப்பிரமணிய சாஸ்திரியார்

உரையாசிரியரும் (இளம்பூரணர்) நச்சினார்க்கினியரும் 'அல்லதில் எனின்' என்பதற்குத் 'தன்னுழை யுள்ளதல்லதனை இல்லையெனலுறுமே யெனின்' என்று பொருள் கொண்டனர். அவ்வாறாயின் 'பயறுளவோ வணிகீர்' என்றால் 'உழுந்து இல்லை' என்று உதாரணம் கூறியிருத்தல் வேண்டும். அவ்வாறு கூறின் அது விடை வழுவாம். அதனால் அவ்விருவரும் சேனாவரையர் தெய்வச்சிலையார் இல்விருவர் போல 'அல்லது' என்னும் சொல்லைக் கூட்டி 'உழுந்தல்லதில்லை' என்று கூறினர். சேனாவரையர் 'அல்லதில்' என்னும் வாய்ப்பாட்டான் இல்லையெனலுறின்' என்றும் தெய்வச்சிலையார் 'அல்லது என்னும் சொல்லொடு கூட்டி இல்லையெனக் குறித்தானாயின்' என்றும் கூறுதலின் இவ்விருவர் கொள்கையே பொருத்தமானது.

உரையாசிரியரும் நச்சினார்க்கினியரும் தெய்வச்சிலையாரும் பிறிதுபொருள் என்பதற்கு இனப்பொருள் என்று கொண்டதன் காரணம் சூத்திரத்திலுள்ள அல்லது என்ற சொல்லே. பயறல்லது என்றால் பயறு போன்றதும் பயற்றின் வேறுபட்டதுமான பொருள் என்பதே கருத்தாம். பாம்புணிக்கருங்கல்லும் பயறும் வியாபாரப் பொருள் என்ற தன்மையில் ஒப்புமைப்படுவதால் இனம் என்று கொள்வதற்கு இடனுண்டு.

கு. சுந்தரமூர்த்தி.

அல்லதில் என்பதை வாய்பாடாகக்கொண்ட சேனாவரையர் பிறபொருள் என்பதற்குப் பிறிதுபொருள் என உரை கண்டார்.

இளம்பூரணர், அல்லது—தன்னிடத்து உள்ள தல்லதை, இல் எனின்—இலலையெனின் என உரைகண்டார், உள்ள தல்லது—இல்லாதது. எனவே தன்பால் இல்லாததை இல்லையெனின் என்றும், பிறிது பொருள் என்பதற்கு, இனப்பொருள் என்றும் உரைகண்டார் இளம்பூரணர்.

ஒருவன் ஒரு பொருளைத் தன்னிடத்துக் கேட்பின் அது உள்ள தாயின் அது உள்ளது எனக் கூறி விற்றுவிடலாம். ஆனால் அவன் தன்னிடத்துக் கேட்கும் பொருள் இல்லையாயின் அவ் வில்லாமையை 'அல்லதில்' என்னும் வாய்பாட்டால் இல்லை யெனக் கூற விரும்பின், அவன் கேட்ட பொருளால்லாத பிற பொருளின்கண் அவ் அல்லதில் என்னும் வாய்பாட்டை வைத்து இல்லை யெனக் கூறுக என்பர் சேனாவரையர்.

இளம்பூரணர் "ஒருவன் ஒரு பொருளைத் தன்னிடத்துக் கேட்பின், அது தன்பால் இல்லையாயின், அவன் கேட்டதற்கு இனமாய பொருளைக் கூறி இது வல்லது இல்லை என்க" எனப் பொருள் கண்டனர்.

சேனாவரையர் இளம்பூரணர் உரையை நான்கு காரணங் களால் மறுக்கின்றார்.

(1) ஒருவன் ஒரு பொருளைக் கேட்பின், அது தன்னிடத்து இல்லையாயின் இல்லையென்றே கூறிவிடலாம். இனப் பொருள் தான் கூறவேண்டும் என்ற நியதியில்லை. அற்றேல், சேனா வரையர் கருத்தின்படி பிற பொருளின் கண் அல்லதில் என்னும் வாய்பாட்டை வைத்துக் கூறவேண்டுவதுதான் என்ன நியதி எனின், கூறுதும். சேனாவரையர் இவ்வினா வரும் என்றே மிகவும் விழிப்பாகத் தன்பால் இல்லாத பொருளை இல்லை என்னும் ஒருவன் அல்லதில் என்னும் வாய்பாட்டால் இல்லையென விரும் பின், இங்ஙனம் பிறபொருளின் மேல் வைத்துக் கூறுக என்றார். எனவே அல்லதில் என்னும் வாய்பாட்டால் வைத்து இல்லை என விரும்பாது, இல்லாத பொருளை இல்லை யென்றே கூற விரும் பின் அங்ஙனமே கூறி விடலாம். அதனால் இழுக்கில்லை யென்பது சேனாவரையர் கருத்து)

(2) அல்லதில் என்னும் சொல் தன்னிடத்துள்ளது அல்லதை இல்எனின் என்னும் பொருளைக் குறிக்காது; குறிக்குமேல், ஆசிரியர் அச்சொல்லை மயங்கக் கூறலாகச் சூத்திரித்துள்ளார் என்னும் குற்றம் தங்கும்.

(3) பாம்புணிக் கருங்கல்லும் பயறும் விற்பானிடத்துச் சென்று பயறு உண்டோ எனின், 'அவன் பாம்புணிக் கருங்கல் அல்லது இல்லை' என்று கூறுவானாயின் அங்ஙனம் கூறியமை யால் வரும் வழு இல்லை.

(4) இனப் பொருள்கூறுக என்பதே ஆசிரியர் கருத்தாயின், 'அப்பொருளல்லா இனப்பொருள் கூறல்' என்றே யாத்திருப்பர், அங்ஙனம் யாக்காமையின், ஆசிரியர்க்கும் இனப்பொருள் கூறுக என்பது கருத்தன்றாயிற்று.

(இவ்வாறு சேனாவரையர் உரைக்குக் கருத்து விளக்கம் கூறியவர் தம் கருத்தாகக் கூறுவது வருமாறு:—)

எனினும் இக்கருத்துப் பொருந்துவதன்றாம். ஆசிரியர் தொல்காப்பியர் வழக்கு செய்யுளாகிய இரண்டையும் நன்கு ஆய்ந்து இந்நூலைச் செய்தாராதலானும், இந்நூற்பா மிகுதியும் வணிகரையே நோக்கிக் கூறியதாகலானும், வணிகர் தம்மிடத்து இல்லாத பொருளை இல்லை யென்னாது அதற்கு இனப் பொருளைக் கூறலே மரபாகக் கொண்டவராதலானும், சேனா வரையர் கூறுமாறு போல பாம்புணிக் கருங்கல்லும் பயறும் விற்பார் ஒரோவழியாண்டேனும் அருகியிருப்பினும், அவ்வருகிய வணிகரை நோக்கி யிந்நூற்பா செய்தாரென்றல் பொருந்தாமை யானும், இனப் பொருளைக் கூறலை மறுக்கும் சேனாவரையரும் தாம் எடுத்துக்காட்டும் எடுத்துக் காட்டில் பயறுளவோ என்று வினாவினார்க்கு உழுந்தல்ல தில்லை, கொள்ளல்ல தில்லை என இனப்பொருளைக் காட்டுகின்றாரேயன்றிப் பயறுளவோ என வினாவினார்க்குப் பாம்புணிக் கருங்கல் அல்லது இல்லை என்றலை எடுத்துக் காட்டாமையானும், தொல்காப்பிய உரையாசிரியர் அனைவர்க்கும், நன்னூலார்க்கும் இனப்பொருள் கூறலே கருத்தாதலானும் சேனாவரையர் கூறும் மறுப்பு எட்டுணையும் பொருந்துவதன்றாம்.

மேலதற்குப் புறனடை

36. அப்பொருள் கூறிற் சுட்டிக் கூறல்

ஆ. மொ.

இல.

If the same thing asked for is denoted along with the phrase 'allathil' it must be preeeded by demonstrative

க. சு.

If (one) mentions that thing, (one should) use the demons—trative.

பி. இ. நூ.

நன். 406.

உள்ளது சுட்டியும் உரைப்பர் சொற்சுருங் குதற்கே.

இல. வி. 310

அப்பொருள் கூறி அகற்றின் அப்பொருளினைச்
சுட்டியும் மாற்றுவர் சொற்சுருங் குதற்கே.

இளம்.

இச்-எனின், இதுவும் ஓர் இறுத்தல் வகைமை யுணர்த்துதல் நுதலிற்று, மேலதற்கு ஓர் புறநடையும் என்பது.

உரை: அவன் வினாயின அப்பொருளையே சொல்ல லுறுமே யெனிற் சுட்டிக் கூறுக, எ-று.

[1]வ-று: இவையல்லது பயறில்லை, இப்பயறல்லது இல்லை எனவரும்.

---

1. இவையல்லது பயறில்லை = உழுந்து, கொள்ளு முதலிய இவையல்லது நீ கேட்கும் பயறு என்பது இல்லை. இப்பயறல்லது இல்லை– இங்குக் காணப்படும் இப்பயறு தவிர வேறு பயறு இல்லை. முன்னதில் பயறு இல்லை என்னும் விடையும், பின்னதில் பயறு தரத்தில் இத் தரமேயுளது வேறு தரமுடையது இல்லை என்னும் விடையும் காண்க. முன்னதில் அப்பொருளைத் என்பது

சேனா.

இ-ள்: 'அல்லதில்' என்பான் பிறிது பொருள் கூறாது அப்பொருள்தன்னையே கூறுமாயின், இப்பயறல்ல தில்லை யெனச் சுட்டிக் கூறுக, எ-று.

'பயறுளவோ' என்றவழிச் சுட்டாது 'பயறல்லதில்லை' எனின் பயறுள; உழுந்து முதலியன இல்லையெனப் பிறிது பொருள் ஏற்பித்துச் செப்பு வழுவாம் என்பது.

அல்லதில் என்பது அதிகாரத்தாற் பெற்றாம்,

தன்னின முடித்தல் என்பதனால் பசும்பயறல்லதில்லை, பெரும்பயறல்லதில்லை எனக் கிளந்து கூறுதலுங் கொள்க.

[2]செப்பும் வினாவும் (சொல். 13) என்றதனான் இவ்வேறு பாடு இனிது விளங்காமையானும் 'பொருளொடு புணரச்சுட்டு' (சொல். 37). என வழுவமைக்கின்றாராகலானும் இவற்றை விதந்து கூறினார்.

தெய்.

செப்பின் கண் வழுக் காத்தலை நுதலிற்று.

இ—ள்: வினாவிய பொருளையே சொல்லி அல்லதில்லை யெனின், சுட்டிக் கூறுக, எ—று.

இப்பயது அல்லதில்லை, இப்பட்டு அல்லதில்லை என்க எனவே, அவன் கருத்திற்கேற்ற பயறும் பட்டும் இல, என்ற வாறாம்.

தன்னிடம் உள்ள பொருள் என்னும் பொருளைத் தருவ தாகும். அவ்விரண்டையும் இளம்பூரணர் கொண்டார். ஆதித்தரும் இவ்விரண்டும் கூறுவர்.
சேனாவரையர் கேட்டவன் பொருளே அப்பொருள் என்பது, என்னும் கருத்தினர்.

2. 'செப்பும் வினாவும்' என்னும் சூத்திரத்தில் வணிக வினாவிடை பற்றித் தெளிவாகக் குறிப்பிடற்கில்லை யாதலினாலும், அடுத்து வரும் சூத்திரம் சுட்டு பற்றிய வழுவமைப்புக் கூறுதலாலும் தனித்துக் கூறப்பட்டது

நச்.

இது மேலதற்கோர் புறனடை ஆயதோர் இறுத்தல் வகைமை கூறுகின்றது.

இ—ள் : அப்பொருள் கூறின்—அல்லது இல் என்பான் பிறிது பொருள் கூறாது அப்பொருள்தன்னையே கூறுமாயின், சுட்டிக் கூறல்—முன்னர்க் கிடந்த பொருளைச் சுட்டிச் சொல்லுக, எ—று.

‡இவையல்லது இல்லை, இப்பயறல்லது இல்லை எனவரும். வினாயினான் பயற்றின் நன்மையும் தீமையும் உணர்ந்து, கோடற்கும், தவிர்தற்கும் இவ்வாறே கூறுக என்றார். சுட்டாது 'பயறு அல்லது இல்லை' எனின், 'பயறு உள; உழுந்து முதலிய இல்லை' எனப் பிறிது பொருள் ஏற்பித்துச் செப்பு வழுவாம்.

தன்னின முடித்தல் என்பதனால் 'பெரும் பயறு அல்லது இல்லை, பசும் பயறு அல்லது இல்லை' எனக் கிளந்து கூறுதலும் கொள்க.

கல்.

என்—எனின், இதுவும் மேலதற்கோர் புறநடையாயதோர் இறுத்தல் வகைமை கூறுதல் நுதலிற்று.

பொருள் : அவன் வினாவின பொருள் தன்னைச் சொல்லு மிடத்துச் சுட்டி இல்லையென்று சொல்லுக, எ—று

உ—ம். இப்பயறல்லதில்லை, இவையல்லது பயறில்லை என வரும்.

ஒரு.

என்பது வேறொரு பொருள்கூறாது வினாயின பொருளையே கூறிற் றன்முன்னர்க் கிடந்த பொருளைச் சுட்டிச் சொல்லுக. உ-ம்: இப்பயறல்லதில்லை யென்க. வினாயின பயறின் நன்மையும், தீமையும் உணர்ந்து, கோடற்குந் தவிர்தற்குமாக இவ்வாறே கூறுக. தன்னின முடித்தல் என்பதனால் பெரும் பயறல்லதில்லை, பசும்பயறல்லதில்லை யெனக் கிளந்து கூறுதலும் கொள்க.

‡ இளம்பூரணரைத் தழுவியது.

வெள்ளை.

வினாயினான் பயற்றின் நன்மையும் தீமையும் உணர்ந்து அதனைக் கோடற்கும் தவிர்தற்கும் வேண்டி, அவன் வினாய பொருளைச் சுட்டிக் கூறுக என்றார் ஆசிரியர். பண்டமாற்றின் கண் சொற்பல்காமைப் பொருட்டுச் சுருக்கங் கூறும் முறையினை அறிவுறுத்தும் இவ்விரு சூத்திரப் பொருளையும் தழுவியமைந்தது "தம்பால் இல்லது இல்லெனின் இனனா உள்ளது கூறி மாற்றியும், உள்ளது சுட்டியும் உரைப்பர் சொற் சுருங்குதற்கே" (நன். 405) எனவரும் நன்னூற் சூத்திரமாகும்.

ஆதி.

(1) (கேட்ட) பொருள் இருப்பதாகக் கூறின் (அதன் இனம் தரம் விலை) சுட்டிக் கூறுக.

அரிசி இருக்கிறதோ?—நெல்லூர் அரிசிதான் இருக்கிறது; கிலோ ரூ. 3—00

(2) மறுபொருள்:

அல்லது இல் என வேறுபொருள் கூறாது, அப்பொருள் பற்றிக் கூறின் 'இது அல்லது இல்லை' எனச் சுட்டிக் கூறுக.

அரிசி இருக்கிறதோ?—இந்த அரிசி அல்லது இல்லை— இம்முறை பெருவழக்கில் இல்லை.

சிவ.

"எப்பொருளாயினும்" என்னும் சூத்திரத்துக்குச் சொல் லோட்ட நிலையில் பின் வருமாறு பொருள் கொள்ளலாம்.

"ஒருவணிகன், தன்னிடம் ஒருவன் வந்து பயறுண்டோ எனக் கேட்டால், அவன் கேட்ட பயறு தன்னிடம் இல்லையென்றால், அதனை இல்லையென்று அவனுக்குத் தெரிவிக்க நினைத்தால், அவன் கேட்ட பயறுக்குப் பிறிதான ஒன்றைக் கூறித் தெரிவித்து விடுக" என்பது சூத்திரத்தின் பொருளாம்.

பயறு உண்டோ என்றால் உளுந்து உண்டு என்பது இதற்கு உதாரணம்.

வணிகர், கூலவாணிகன், அறுவை வாணிகன் எனப்பலர். அக்காலத்தில் ஓரினப் பொருள்களைக் கொண்ட வணிகராயிருந்தனர். அதனால் வேறுபொருள் (பிறிது பொருள்) கூறுவது

என்பதற்கு இனப்பொருள் கூறுவது என்ற பொருள் பொருத்த மாகும்.

பலவேறு இனப் பொருள்களை விற்பவரும் உண்டு, அவர் கடையினைப் பலசரக்குக் கடை என்பர். அத்தகைய வணி கரிடம் பயறுண்டோ என்றால் அவரும் பயறுவகைகள் இருத் தலின் இனப்பொருளே கூறலாம்.

பயறும் பருத்திக்கொட்டையும் ஆகிய இரண்டு மட்டுமே விற்கும் பெருவணிகராயின் (whole saler) பயறுண்டோ என்னும் வினாவிற்குப் பருத்திக்கொட்டை யுண்டு என்று விடையிறுக்க லாம். பருத்திக் கொட்டை இனப்பொருளாகாமல் பிறிது பொருளாகும்.

இவற்றால் "எப்பொருளாயினும்" என்னும் சூத்திரத்தில் வரும் 'அல்லது' என்பதற்குத் 'தன்னுழையுள்ளது அல்லது' என்றும், பிறிது பொருள் என்பதற்கு இனப்பொருளோ அன்றி வேறு பொருளோ என்றும் பொருள் கொள்ளலாம் என்பது பெறப்படும்.

சேனாவரையர் 'அல்லது இல்' என்பதை ஒருவாய் பாடாக வும், பொருள் என்பதை வேறு பொருளாகவும் கொண்டார். இனப்பொருள் என்பதை மறுத்தார். இப்பகுதிக்குச் சுந்தர மூர்த்தியவர்களின் கருத்துரையே பொருந்தும். சேனாவரையர் கருத்து ஏற்புடைத்தன்று.

இனி 'அப்பொருள் கூறிற் சுட்டிக்கூறல்' என்பதில் அப்பொருள் என்பது வாங்க வந்தவன் கேட்ட பொருளையும், பிறிதுபொருளையும் குறிக்கும் என்பது. இது அவரவர் உதாரணங்களால் அறியப்பட்டது.

பயறுண்டோ என்று கேட்டவுடன், 'இவையல்லது பயறு இல்லை' என்ற விடையில் இவை என்னும் சுட்டு பயறல்லாத பிறவற்றைக் குறிக்கும். அதாவது வணிகனிடம் உள்ள பொருளைக் குறிக்கும் (பயற்றைக் குறிக்காது).

இப்பயறல்லது இல்லை என்று சொன்னால் பயறு என்பது வணிகனிடம் உள்ள பயிற்றை அதாவது கேட்டவன் குறித்த பயறு அல்லாத பயற்றைக் குறிக்கும்; உளுந்து, கடலை, துவரை, கொள்ளு முதலியன பயறு வகையைச் சார்ந்தன ஆதலின். பொதுவில் பயறு என்பது துவரம் பயிற்றையே குறிக்கும்.

பயறுண்டோ என்பதற்கு இப்பயறல்லது இல்லை என்றால் உளுத்தம்பயறல்லது (இப்படியே பிறவும்) இல்லை என்பதாகும். இதுவும் வணிகனிடம் உள்ள பிறிது பொருளையே குறித்ததாகும்.

இவ்விரண்டு வகையிலும் சுட்டு வணிகனிடம் உள்ள பொருளையே குறித்தலின் அப்பொருள் என்றது வினாய பொருளன்று என்பது தெளிவு.

இனி இப்பயறல்லதில்லை என்பதில் பயறு என்பது வினாவினான் குறித்த பயறையே குறிக்கும் எனின், வினாவினான் பயற்றின் தரம் பலவற்றுள் வணிகனிடம் உள்ள ஒருதரப் பயிற்றைக் குறித்ததாகக் கொள்ளவேண்டும். இப்பதிலின் நோக்கம் நினக்குத் தேவையாயின் கொள்க என்று கூறுவதாகும்.

எனவே, அப்பொருள் கூறின் சுட்டிக்கூறல் என்பதற்குப்பிறிது பொருளைக் கூற நினைந்தால் அல்லது வினாய பொருளைக்கூற நினைந்தால் சுட்டிக் கூறுக (சுட்டுச் சொல்லாற் கூறுக) என்பது பொருள் எனக் கருதலாம்.

ஆதித்தர் 'சுட்டி' என்பதற்குக் குறிப்பிட்டு' எனப் பொருள் கொண்டார். கேட்டவன் பொருளையே கூறுவதானால் இனம் தரம் விலை முதலியவற்றைக் குறிப்பிட்டுக் கூறுக எனப்பொருள் கொண்டு,

'அரிசி இருக்கிறதோ எனக்கேட்டால் நெல்லூர் அரிசிதான் இருக்கிறது கிலோ ரூ3/–

என உதாரணம் காட்டுவர். வணிகரிடம் இவ்வாறும் வினா விடை நிகழ்தலின் இப்பொருளை ஏற்பதே நன்று. 'அல்லது இல்' என்பதை வைத்து 'இந்த அரிசி அல்லது இல்லை' என்னும் உதாரணத்தைப்பற்றி 'இம்முறை பெருவழக்கில் இல்லை' என்பர் அவர்.

இனிச்சுட்டிக் கூறப்படும் பொருள் சேனாவரையர் கருத்துப் படி வினாவினான் குறித்த பொருளையே குறிக்கும் என்பது சிறவாது. எப்பொருளாயினும் என்னும் சூத்திரத்தில், வந்து கேட்டவனிடம் அவன் கேட்ட பொருள் இல்லை என்று சொல்வது பற்றிக் கூறப்பட்டது. அடுத்து இச்சூத்திரம் சுட்டிக் கூற வேண்டும் என்று கூறுவது. கேட்ட பொருள் தன்னிடம் இல்லை.

யென்ற போது சுட்டிக்கூறுவது எப்படி? உள்ள பொருளைத் தானே சுட்ட முடியும் ? கேட்ட பொருள் பயறு; அது தன்னிடம் இல்லை. அதனை இப்பயறு எனச் சுட்டுவது எப்படி? எனவே சுட்டிக் கூறவேண்டுவது தன்னிடம் உள்ள பொருளே யாதல் வேண்டும். பயறுண்டோஎனத் துவரம் பயற்றைக் கேட்ட வனுக்கு வேறு பயற்றுவகையையே சுட்டி இப்பயறல்லது இல்லை என்பதே பொருத்தமாகும். கேட்டவன் சொல்லையே சுட்டிச் சொல்லப்பட்டது என்பது பொருந்துவதாம்.

இதுவும் மேலதன் புறனடை

37. பொருளொடு புணராச் சுட்டுப்பெய ராயின்
பொருள்வேறு படாஅது ஒன்றா கும்மே.

ஆ. மொ.

இல.

Though the demonstrative does not point out the thing asked for in particular, the sense is the same.

சு. சு.

Even though the demonstrative element is not associated with the word (denoting) the thing (asked for), the sense will not be different but the same.

இளம்.

இச்—எனின், இதுவும் ஒரு சொல்லுதல் வகைமை யுணர்த் துதல் நுதலிற்று. மேலதற்கோர் புறநடை எனவுமாம்.

உரை: பொருளொடு புணராது நின்ற சுட்டுப் பெயாரமே யெனினும், அப்பொருட்கு இயைபுபட வருமேயெனின் அமையும், எ—று.

வ—று: இவையல்லது பயறில்லை என்புழிப் பயறு என்னும் சொல்லாற் [1]பயன் உணரப்பட்டது. 'அல்லது' என்னும் சொல்லே

1. பயனாவது இவை என்பது பயற்றின் இனமாய உளுந்து முதலியவற்றைக் குறித்தல்.

எதிர்மறுத்து நின்றது. இல்லையென்னும் சொல்லான் இன்மை உணரப்பட்டது.

[2]இனி இவை என்னும் சொல் பொருளின்றால், அஃது என் செய்யும் என்றார்க்கு அதுவும் பயற்றினையே சுட்டிற்றாகலான் அமைக என்பது கருத்து.

[3]இஃது ஒருபொருள் மேல் இருபெயர் வழுக் காத்தவாறு.

சேனா.

இ—ள்: [1]சுட்டானன்றிப் பொருள் வரையறுத்துணர்த்தாச் சுட்டுப்பெயராற் கூறினும், பொருள் வேறாகாது இப்பயறு எனச்சுட்டிக் கூறிய பெயரேயாம். எ—று.

என்சொல்லிய வாறோ வெனின், 'இவையல்ல தில்லை' என்றவழி, இவை என்பது பயற்றையே சுட்டாது உழுந்து முதலாயினவற்றிற்கும் பொதுவாய் நிற்றலின் வழுவா மன்றே? ஆயினும், முன்கிடந்த பயறு காட்டி, 'இவை' என்றானாகலின், அவற்றையே சுட்டு முதலான் அமைக்க எனச்செப்பு வழுவமைத்தவாறு.

சாதியும் பண்பும் தொழிலும் முதலாயின பற்றி ஒரு பொருளை வரைந்துணர்த்தாது எல்லாப் பொருள் மேலும் சேறலின் பொருளொடு புணராச்சுட்டுப் பெயர் என்றார்.

'வேறுபடாது', 'ஒன்றாகும்' என்பனவற்றுள் ஒன்றே யமையும் எனின், பொருள் வரைந்துணர்த்தும் பெயரொடு பொருள் வரைந்துணர்த்தாச் சுட்டுப் பெயர் வேறுபாடுடைத்

---

2. இவை என்னும் சொல் பொருள் இன்று என்பது, இவை என்னும் சொல் குறிப்பிட்ட பொருளுடையதில்லை என்பதை உணர்த்தும், அஃது என் செய்யும் என்பது, அது எதை உணர்த்தும் என்பதாம்.
3. பயறு என்பதற்கு 'இவை' என்பதும் 'பயறு' என்பதும் வந்ததைக் குறிக்கும்.
1. சுட்டானன்றி = பொருளொடு சுட்டிச் சொல்வதாலன்றி —இப்பயறு. பொருள் வரைந்துணர்த்தாச் சுட்டுப் பெயர்— இது, இவை.

தேனும், ஒரு பொருள் மேல் முடிதலின் ஒரு பொருட்டாம் என்பது விளக்கிய 'பொருள் வேறுபடாது ஒன்றாகும்' என்றார்.

அப்பொருள் கூறுதற்கண் என்னாது பொதுப்படக் கூறிய வதனால், பிறிது பொருள் கூறும் வழியும் 'இவையல்லதில்லை' எனச் சிறுபான்மை சுட்டுப் பெயராற் கூறினும் அமையும் என்பதாம்.

[2]யானைநூல் வல்லான் ஒருவன் காட்டுட் போவுழி ஓர் யானை அடிச்சுவடு கண்டு, 'இஃது அரசுவா வாதற்கோர் இலக்கணம் உடைத்து' என்றவழியும் 'இஃதோர் செல்வற் கொத்தனம் யாம் என மெல்ல என்மகன் வயிற்பெயர் தந் தேனே' (அகம்—26) என்புழியும் சுட்டுப் பெயர் பொருளொடு புணராது நிற்றலின், அவற்றையே அமைக்கின்றது இச்சூத்திரம் என்பாரும் உளர்.

தெய்.

செப்பு வழு வமைத்தலை நுதலிற்று. மேலதற்கோர் புறனடை எனினும் அமையும்.

இ—ள்: வினாவப்பட்ட பொருளோடு புணராச் சுட்டுப் பெயரைச் சொல்லினும், பொருள் வேறு படாது ஒன்றாகும், எ—று.

இப்பயறல்லது, *இப்பட்டல்லது இல்லை என்னாது, இவை யல்லது இல்லை யெனினும் பொருள் வேறு படாவாறு கண்டு கொள்க.

---

2. இச்சூத்திரம் 'எப்பொருளாயினும்', 'அப்பொருள் கூறின்' என்னும் சூத்திரங்களுடன் தொடர்புபடுத்தாமல் தனிப் பொருளதாகக் கூறுவார் கூற்று இது.
'இஃது' இரண்டனுள் முன்னது இச்சுவடு என்பதையும் பின்னது இம்மகன் என்பதையும் உணர்த்தும். இச்சுவடு, இம்மகன் பொருளொடு புணர்ந்த சுட்டுகள். இஃது பொருளொடு புணராச் சுட்டு.

* (35, 36, 37 ஆம் சூத்திரங்களில் பட்டுபற்றிய செய்தி தெய்வச்சிலையார் உரையேடுகளுள் ஒன்றில் காணப் படவில்லை கழகப்பதிப்பு)

நச்.

இது, திணைவழு அமையுமாறும், ஒரு பொருட் பெயர் சுட்டாய் நின்று அப்பொருள் உணர்த்துவதோர் மரபு வழு வமைதியும் உணர்த்துகின்றது,

இ—ள்: சுட்டுப் பொருளோடு புணரா ஆயினும் ஆகும்—ஒரு சுட்டுத் தான் உணர்த்துதற்கு உரிய அஃறிணைப் பொருளை உணர்த்தாது உயர்திணைப் பொருளை உணர்த்தி நிற்குமாயினும் ஆம், பெயர் பொருளொடு புணரா ஆயினும் சுட்டுப் பொருள் வேறு படாது ஒன்றாகும்—சில பொருட் பெயர் சுட்டுப் பொருளை உணர்த்தா வாயினும் தாம் சுட்டுவதோர் பொருளிடத்து வேறுபட நில்லாமல் அப்பொருளையே உணர்த்தி நிற்கும், எ—று.

[1]"இஃது தொத்தன்" (கலி. 84:18) என்ற வழி: 'இஃது' என்ற அஃறிணைப் பொருளை உணர்த்திய சுட்டு, 'இவன் ஒருத்தன்' என உயர்திணைப் பொருளை யுணர்த்தி நின்றவாறு காண்க. "இஃதோர் செல்வற் கொத்தனம் யாம் என" (அகம் 26) என்பதும் அது. "நாயுடை முது நீர்" என்னும் அகப்பாட்டினுள் (16)

> நாணி நின்றோள் நிலைகண்டு யானும்
> பேணினென் அல்லனோ மகிழ்ந வானத்து
> அணங்கருங் கடவுள் அன்னோள் நின்
> மகன்தாய் ஆதல் புரைவதாங் கெனவே"

---

1. இஃது ஒத்தன் என்பதில் இஃது என்னும் அஃறிணைச் சுட்டு ஒருத்தன் என்னும் உயர்திணையைக் குறிக்கும். இஃது ஓர் செல்வன் என்பதில் இஃது, செல்வன் என்னும் உயர்திணையைக் குறிக்கும்

அணங்கருங் கடவுள் அன்னோள் என்னும் பெயர் வேறொருத்தியைக் குறிக்காமல் முதலில் உள்ள நாணி நின்றோள் என்பதையே குறித்தலின் அப்பெயர் சுட்டுப் பொருள் நிலையில் வந்தது ஆகும். அவள் என்பதே வானத்தணங்கருங் கடவுள் அன்னோள் என வந்தது என்க.

இச்சூத்திரத்துக்கு நச்சினார்கினியர் கருத்து தனிப் பட்டிருந்தலைக் காண்க. அஃறிணைச் சுட்டு உயர்

என்புழி 'நாணி நின்றோள்' என்னும் பொருட்பெயர் தன் தொடர்ப் பொருளைக் கொண்டு முடிந்த பின்னர், அப்பொருட் பெயர்மேல், ஒரு காரியம் கூற வேண்டிய வழி 'அவள்' எனச் சுட்டிக் கூறுதல் வேண்டும். அங்ஙனம் கூறாது 'வானத்தணங் கருங் கடவுளன்னோள்' என எல்லார்க்கும் பொதுவாயதோர் பெயரால் கூறினாளாயினும், கூறுகின்றாள்' பரத்தையைக் கருதுதலின்'அக்கடவுளன்னோள்' என்ற பெயரும் சுட்டுப்பெயர்த் தன்மையாய் நின்றவாறு காண்க.

'அளிநிலை பெறாஅது (அகம் 5) என்னும் அகப்பட்டினுள்(4) ஒண்ணுதல்... உயிர்த்தலை பாமலர் மணியுரு விழந்த... தோற்றம் கண்டே கடிந்தனம் என முடித்த பின்னர், அவள்மேற் பின்னரும் ஒரு காரியம் கூறக்கருதிய தலைவன், ஒண்டொடி' எனப் பொதுப் பெயரால் கூறினானேனும் அப்பெயர், 'அவள்' என்னும் பொருள் தந்து நின்றவாறு காண்க.

கொய்தளிர்த் தண்டலைக் கூத்தப் பெருஞ்சேந்தன்
வைகலும் ஏறும் வயக்களிறே—கைத்தொழுவாம்
காலேக வண்ணனைக் கண்ணாரக் காணவெம்
சாலேகம் சார நட (நன்.397 சங்கர. உரை மேற்கோள்)

பொற்பூண் சுமந்த புணர்மென் முலைக் கோடு போழ
நற்பூண் கழலான் இருதிங்கள் நயந்த வாறும்
கற்பா டழித்த கனமாமணித் தூண் செய் தோளான்
வெற்பூ டறுத்து விரைவின் நெறிக்கொண்ட வாறும்
(சீவக. 19)

என்றாற் போலப் பிற செய்யுட்களுள் பொருட்பெயர் சுட்டுப் பெயர்ப் பொருளவாய் வருதல் பெரும்பான்மையென்றுணர்க.

வையைக் கிழவன் வயங்குதார் மாணகலம்
தையலாய் இன்றுநீ நல்கினை—நல்காயேல்
கூடலார் கோவோடு நீயும் படுதியே
நாடறியக் கவ்வை யொருங்கு (நன். 397. சங்கர உரை

திணையைச் சுட்டுவதும், சுட்டில்லாமல் ஒரு பெயரே முன்னுள்ள பொருளைச் சுட்டுவதும் ஆகிய இரு கருத்துகள் இச்சூத்திரத்துக் கூறப்படுவதாக இவர் கொண்டார்.

மேற்கோள்).
என்புழிக் 'கூடலார்கோ' என்றாற் போலப் பின் பொருட்பெயர் பொதுவாய் நில்லாது அப்பொருளையே விளக்கிச் சுட்டாய் நிற்பனவும் ஒன்றென முடித்தலால் கொள்க.

இச்சூத்திரத்திற்குப் பலரும் கூறும் பொருளெல்லாம் முன்னிற் சூத்திரத்தால் பெற்றவாறு காண்க.

உம்மை சிறப்பும்மை. அது வேறு பொருள் படுதல் மாலைத்து ஆயினும் பொருள் வேறுபடாது ஒன்றாகும் என்றவாறு.

கல்.

என்—எனின், இஃது ஒரு பொருள்மேல் இருபெயர் வழுக் காத்தல் நுதலிற்று.

மேல், இவையல்லது பயறில்லை என்பதனைப் பற்றிப் பிறத்தலான் மேலதற்கே புறனடையெனினும் அமையும்.

பொருள்: பொருளொடு பொருந்தாச் சுட்டுப் பெயராயினும் பொருள் வேறுபடாது ஒரு பொருளேயாகும், எ—நு.

உ—ம்: 'இவையல்லது பயறில்லை' எனவரும். இவை என்பது பயறேயெனினும் பயறென்பது பின் உண்மையின் தன் மேற்செல்லாது பிறிதொன்றினைச் சொல்லியது போலும் நோக்குடைத்தே யெனினும் அமைக என்றவாறு.

இதனாற் சொல்லியது, ஒரு பொருள் மேல் இருபெயரும்' பல பெயரும் கூறுதல் இலக்கணமே யெனினும் இயைபு படக் கூறவேண்டும் என்று அவ்வழி யியைபில்லது கண்ட மரபு வழுவினை அமைத்தவாறாயிற்று.

ஒரு.

இஃதொருத்தன் என்றவழி, 'இஃது' என்று அஃறிணைப் பொருளை யுணர்த்திய சுட்டு, இவன் ஒருத்தன் என உயர் திணைப் பொருளை யுணர்த்தி நின்றவாறு காண்க.

இன்னும் ஓர் கருத்து: பெயர்ப் பொருளோடு புணரா வாயினும் சுட்டுப் பொருள் வேறுபடாது ஒன்றாகும். இதன் கருத்து, சில பொருட் பெயர் சில சுட்டுப் பொருளை யுணர்த்தா

வாயினும் தாம் சுட்டுவதோர் பொருளிடத்து வேறுபட நில்லாமல் பொருளையே யுணர்த்தி நிற்கும்.

உ-ம்: "கொய்தளிர்த் தண்பட லைக் கொற்றப் பெருஞ் சேந்தன், வைகலும் ஏறும் வயக்களிறே—கைதொழுவல், காலேக வண்ணனைக் கண்ணாரக் காணவெஞ், சாலேகம் சார நட"—இதனுள் என்னை எனவும் அவனை எனவும் சுட்டிக் கூறுதல் காண்க.

ஆதி.

இக்கடலை என்ன விலை?—பொருளொடு புணர்ந்த சுட்டு. இது கிலோ 3 பணம்—பொருளொடு புணராச் சுட்டு; 'இது' கடலையையே குறிக்கின்றது.

*இந்த மனிதப்பிறவி ஆறறிவு படைத்தது—பொருளொடு புணராச் சுட்டு. ஆயினும் சுட்டுப் பொருள் அதற்குண்டு.

இயற்பெயரும் சுட்டுப் பெயரும்

38. இயற்பெயர்க் கிளவியும் சுட்டுப் பெயர்க் கிளவியும்
வினைக்கொருங் கியலும் காலந் தோன்றிற்
சுட்டுப்பெயர்க் கிளவி முற்படக் கிளவார்
இயற்பெயர் [1]வழிய என்மனார் புலவர்.

(1 வழீஇய—ஒரு. பாடம்)

ஆ. மொ.

இல.

When the proper noun and the demonstrative
pronoun eome together in a sentenee
along with the predieate, the demonstrative
pronoun must not preeede the proper
noun and it must follow the proper. noun.

---

* பொருள் என்பதற்கு உருவுடைய பொருளைக் கொண்டதால் இவ்வாறு எழுதினார் போலும். இந்த என்பது மனிதப் பிறவியைத் சார்ந்து அதைச் சுட்டுதலின் இதுவும் பொருளொடு புணர்ந்த சுட்டேயாம்.

க. சு.

When a proper noun and a demonstrative pronoun appear together in a sentenee along with the predieate, it is said by the seholars that the demonstrative pronoun never preeedes the proper noun but follows it.

பி· இ· நூ·

நன். 394

> படர்க்கை முப்பெயரோ டணையிற் சுட்டுப்
> பெயர்பின் வரும்வினை யெனின் பெயர்க்கு எங்கும்
> மருவும் வழக்கிடை.

இல. வி. 316 ஷ ஷ

முத்து. ஒ. 70.

> இயற்பெயர் சுட்டுப் பெயரும் இரண்டும்
> வினைகொளற் கொருங்கியல் காலத் தானே
> சுட்டுப் பெயரை முற்படக் கிளவார்.

இளம்.

இச்—எனின், இதுவும் ஒரு பொருள் மேல் வழுக்காத்தல் நுதலிற்று.

உரை: இயற் பெயர் எனபன இரண்டு திணைக்கும் உரிய பெயர். சுட்டுப் பெயர், மூன்று சுட்டு முதலாக வரும் பெயர். அவ்விரண்டும் வினைக்கண் ஒருங்கு நடப்பதோர் காலந் தோன் றுமே யெனின், இயற் பெயர் முன் கூறிச் சுட்டுப் பெயரதனைப் பின் வைத்துக் கூறுக, எ—று.

வ—று: கொற்றன் வந்தான், அவற்குச் சோறு கொடுக்க எனவரும்.

மற்றுச் சுட்டுப் பெயர்க் கிளவி முற்படக் கிளவார்' எனவே இயற்பெயர் வழியே கிளப்ப என்பது முடிந்தது; பின்னை, 'இயற் பெயர் வழிய' எனல் வேண்டா; அதனால் உயர்திணைப் பெயர் வழியும் அஃறிணைப் பெயர் வழியும் வைத்துக் கூறுக அச் சுட்டுப் பெயர்களை என்றதாம்.

வ—று: நம்பி வந்தான், அவற்குச் சோறிடுக; எருது வந்தது, அதற்குப் புல்லுக் கொடுக்க எனவரும்.

இனி, 'வினைக்கியலும் காலம் தோன்றின்' என அமையும். 'ஒருங்கு' என்ற மிகையதனான் அகர இகரச் சுட்டே கொள்க.

இனி வினைக் கொருங்கியலும் காலந்தோன்றிற் சுட்டே கிளக்க என்பதனான், பெயர்க்கு யாது முன் கூறினும் அமைக என்பதாம்.

வ—று: சாத்தன் அவன், அவன் சாத்தன் என வரும்.

[1]இனி ஒருவன் இயற்பெயர் எனவே உலகத்து இயன்று வரும் பெயரெல்லாம் அடங்கும் என்னும்.

சேனா.

இ—ள்: இயற் பெயரும் சுட்டுப் பெயரும் ஒன்றனை யொன்று கொள்ளாது இரண்டும் பிறிது வினை கோடற்கு ஒருங்கு நிகழும் காலம் தோன்றுமாயின், உலகத்தார் சுட்டுப் பெயரை முற்படக் கூறார்; இயற்பெயர்க்கு வழியவாகக் கூறுவர் என்று சொல்லுவர் புலவர், எ—று.

வினைக்கு ஒருங்கு இயலுங்கால் அப்பெயர் எழுவாயும் உருபேற்றும் நின்றனவெல்லாம் கொள்ளப்படும்.

வினைக்கு என்புழி அவ்விரு பெயரும் ஒருவினை கோடலும் தனித்தனி வினை கோடலும் கொள்க. ஒருங்கியலும் என்றதனால் அவை ஒரு பொருள்மேல் வருதல் கொள்க,

உ—ம்: சாத்தன் அவன் வந்தான், சாத்தன் வந்தான் அவன் போயினான் எனவும், சாத்தி வந்தாள் அவட்குப் பூக்கொடுக்க எனவும் வரும்.

1- விரவுப் பெயரைஇயற் பெயர் என இளம்பூரணர் கொண்டமையால், உலகத்து இயன்று வரும் உயர் திணைப் பெயர், அஃறிணைப் பெயர், விரவுப் பெயர் ஆகிய அனைத்தையும் இயற்பெயர் எனப் பிறர் கூறுவதைக் கொண்டு இவ்வாறு எழுதினார்.

பிற உரையாசிரியர்களும் இயற் பெயர் என்பது விரவுப் பெயரையே எனக்கொண்டனர்.

[1] அவன்றான் வந்தான், அவன் ஒருவனும் அறங்கூறும், ஈதொன்றுகுருடு என இயற்பெயரல்லா விரவுப் பெயக்கும், உயர்திணைப் பெயர்க்கும், அஃறிணைப் பெயர்க்கும் வரையறையின்றிச் சுட்டுப் பெயர் முற்கிளக்கவும் படுதலின் 'இயற்பெயர்க் கிளவி' யென்றார். அவ்வாறவை முற்கிளக்கப்படுவது ஒருவினை கோடற்கண்ணே என்பது. அன்றேல், அவை, முடவன் வந்தான் அவற்குச் சோறு கொடுக்க; நங்கை வந்தாள் அவட்குப் பூக்கொடுக்க: குதிரை வந்தது அதற்கு முதிரை கொடுக்க எனத் தனித்தனி வினை கோடற்கண் சுட்டுப் பெயர் பிற்கிளக்கப்படுதல் [2]முன்னையதற்குத் தன்னின முடித்தலினாலும், ஏனையிரண்டற்கும் இயற்பெயர் என்ற மிகையானும் கொள்க.

பிறிதுவினை கோடற்கண் எனவே, அவன் சாத்தன், சாத்தன் அவன் என ஒன்றற்கொன்று பயனிலையாதற் கண்ணும், ஒருபொருள்மேல் நிகழும் எனவே, அவனும் சாத்தனும் வந்தார், சாத்தனும் அவனும் வந்தார் என வேறு பொருளவாய் வருதற்கண்ணும் யாது முற்கூறினும் அமையும் என்பதாம். [3]வினையென்றது முடிக்குஞ் சொல்லை,

சுட்டுப்பெயர் யாண்டும் இயற்பெயர்வழிக் கிளக்கப்படும் என யாப்புறுத்தற்கு, முற்படக்கிளவார் என்றும், இயற்பெயர் வழிய என்றும் கூறினார்.

---

1 தான்—விரவுப்பெயர்; ஒருவன்— உயர்திணைப் பெயர்; ஒன்று—அஃறிணைப் பெயர். இவற்றின்முன் சுட்டுப் பெயர் வந்தன.

2 முன்னையது முடவன் வந்தான் அவற்குச் சோறு கொடுக்க என்பது. முடவன் என்பது சினைப் பெயராதலின் முதற்பெயருக்கு இனமாகித் தன்னினமுடித்தலால் கொள்ளப்பட்டது. இயற்பெயர் என்பதை விரவுப் பெயராகக் கொண்டமையால் நங்கை என்னும் உயர்திணைப் பெயரும் குதிரை என்னும் அஃறிணைப் பெயரும் இயற்பெயர் என்னும் மிகையால் கொள்ளப் பட்டன. 'சுட்டுப் பெயர்க்கிளவி முற்படக்கிளவார்' என்றாலே இயற்பெயர் முற்படக்கிளக்கப்படும் என்பது பெறப்படுதலின் இயற்பெயரென்றது மிகையாம்.

3 வினையென்றதும் வினைச் சொல் என்பதையன்று முடிக்கும் சொல் என்பதை.

சுட்டுப்பெயர் என்றாராயினும் அகர இகரச் சுட்டுப்பெயரே கொள்க. இதுவும் ஓர் மரபு வழாநிலை.

தெய்.

ஒருபொருள்மேற் பலபெயர் வருவழிச் செப்பு வழுக் காத்தலை நுதலிற்று.

இ-ள்: ஒரு பொருள் மேல் வரும் இயற்பெயர்ச்சொல்லும் சுட்டுப் பெயர்ச் சொல்லும் வினை கோடற்கு ஒருங்கு இயலுங் காலந்தோன்றின், சுட்டுப்பெயர்ச்சொல்லை முற்படச் சொல்லார்; இயற்பெயர் வழியவாகக் கூறப்படும் என்று சொல்லுவர் புலவர், எ—று.

'வழிய' எனப் பன்மை கூறியது சுட்டுப்பெயர் பல ஆகலின். இயற்பெயராவன: சாத்தன், கொற்றன், சாத்தி, கொற்றி என்பன. சுட்டுப் பெயராவன: அவன் இவன், அவள் இவள் என்பன. இயற்பெயர் என்றாராயினும் வந்தது கொண்டு வராதது முடித்தல் என்பதனான் ஒரு பொருட்குப் பெயராகி வரும் நிலப்பெயர் முதலாயினவும் கொள்க. 'ஒருங்கு இயலும் காலந் தோன்றின்' என்பதனால் ஒரு பெயர் ஒரு வினையொடு முற்றிநில்லாது பல சொல்லோடு தொடருங்காலத்து இவ்வாறு வருவது என்று கொள்க.

சாத்தன் வந்தான் அவற்குச் சோறு கொடுக்க; சாத்தி வந்தாள் அவட்குப் பூக் கொடுக்க எனவரும். பிறவும் அன்ன.

சுட்டுப்பெயர் முற்கூறின் ஒரு பொருளாதல்தோன்றாதாம்.

நச்.

இஃது ஒரு பொருளை யுணர்த்தும் இருபெயர் வழுக்காக் கின்றது.

இ—ள்: இயற்பெயர்க் கிளவியும் சுட்டுப் பெயர்க் கிளவியும்—இயற்பெயராகிய சொல்லும் சுட்டுப்பெயராகிய சொல்லும், வினைக்கு ஒருங்கு இயலும் காலம் தோன்றின்— ஒன்றனை ஒன்று கொள்ளாது இரண்டும் *பிறிது வினை

* வினைக்கு என்பதற்குப் 'பிறிது வினை கோடற்கு' எனப் பொருள் எழுதியது பொருந்தாது என்பதனை 41 ஆம்

கோடற்கு ஒருங்கு நிகழும் காலம் தோன்றுமாயின், சுட்டுப் பெயர்க் கிளவி முற்படக்கிளவார்—உலகத்தார் சுட்டுப் பெய ராகிய சொல்லை முற்படக் கிளவார், இயற்பெயர் வழிய என் மனார் புலவர்-இயற்பெயர்க்குப் பின்னாகக் கூறுவர் என்று சொல்லுவர் புலவர், எ-று.

'ஒருங்கியலும்' என்றதனான் ஒரு பொருளை உணர்த்துதல் கொள்க. 'வழிய' என்றதனான், இயற்பெயர் வழியே நிற்றற் குரிய அகர இகரச் சுட்டே கொள்க.

சாத்தன் வந்தான், அவன்குச் சோறு கொடுக்க; சாத்தி வந்தாள் அவட்குப் பூக்கொடுக்க எனவரும்

அவன் வந்தான் சாத்தற்குச் சோறு கொடுக்க எனின், அவனும் சாத்தனும் வேறாய், அவன் வருந்துணையும் சாத்தன் சோறு பெறாதிருந்தானாவான் செல்லும்; அங்ஙனம் கூறற்க.

இனி 'இயற்பெயர் வழிய' என்ற மிகையான் இயற்பெயர் எல்லா உயர்திணைப் பெயர்க்கும் அஃறிணைப் பெயர்க்கும் சுட்டுப் பெயர் பின் வருதல் கொள்க. நம்பி வந்தான் அவற்குச் சோறு கொடுக்க. நங்கை வந்தாள் அவட்குப் பூக்கொடுக்க; எருது வந்தது அதற்குப் புல் இடுக; குதிரை வந்தது அதற்கு முதிரை கொடுக்க எனவரும்.

தன்னின முடித்தல் என்பதனால் விரவுப் பெயருள் இயற் பெயர் ஒழிந்தனவும் கொள்க. முடவன் வந்தான் அவற்குச் சோறு கொடுக்க; முடத்தி வந்தாள் அவட்குக் கூறை கொடுக்க எனவரும்.

'வினைக்கு ஒருங்கு இயலும்' என்று வினை கூறுதலான் பெயர்க்கு இயலாது முன் கூறினும் அமைக என்பதாம்.

உ—ம்; சாத்தன் அவன், அவன் சாத்தன் எனவரும்.

கல்.

என்—எனின் இதுவும் ஒரு பொருள்மேல் இருபெயர் வழுக் காத்தல் நுதலிற்று.

சூத்திரத்து உரைகளின் இறுதியில் சுப்பிரமணிய சாஸ்திரியார் எழுத்திலிருந்து அறியலாம். பார்க்க

இ—ள்: இயற்பெயராகிய சொல்லும் சுட்டுப் பெயராகிய சொல்லும் வினைச் சொற்கண்ணே கூடவருங்காலந் தோன்ற அவற்றுட்சுட்டுப் பெயர்க் கிளவியை முற்படச் சொல்லார்; இயற்பெயர்க்குப் பின் வைத்துச் சொல்லுக என்று சொல்லுவர் ஆசிரியர் எ—று.

உ-ம்: சாத்தன் வந்தான் அவற்குச் சோறு கொடுக்க; கொற்றி வந்தாள் அவட்குச் சோறு கொடுக்க என்றாற்போல் வன.

தன்னின முடித்தல் என்பதனானே விரவுப் பெயர்களின் இயற் பெயர் ஒழிந்தனவும் கொள்ளப்படும்.

உ-ம்: முடவன் வந்தான் அவற்குச் சோறு கொடுக்க என்றாற் போல்வன.

'இயற்பெயர் வழிய' என்ற மிகையான் உயர்திணைப் பெயர்க்கும் அஃறிணைப் பெயர்க்கும் சுட்டுப் பெயர் பிற்கூறுக என்பது கொள்ளப்படும்.

உ-ம் நம்பி வந்தான் அவற்குச் சோறு கொடுக்க; எருது வந்தது அதற்குப் புல் இடுக என வரும்.

'ஒருங்கியலும்' என்ற மிகையான் இம்மூவகைப் பெயர்க்கும் சுட்டுப்பெயர் கூறும்வழி அகரச் சுட்டே கிளக்க என்பது கொள்ளப்படும்.

'வினைக் கொருங்கியலும்' என்று வினைக்கே கூறுதலால் பெயர்க்கு யாது முற்கூறினும் அமையும் என்பது.

உ-ம்: சாத்தன் அவன், அவன் சாத்தன் எனவரும். இதனாற் சொல்லியது பொருட் பெயர்களோடு சுட்டுப் பெயர் கூறும்வழி, பிற்கூறாது முற்கூறிற் பிற பொருள் மேலே நோக்குப்பட நிற்பது கண்டு அவ்வாறு கூறற்கவென மரபு [1]வழுவற்க என்ற வாறு.

ஒரு.

என்பது, இயற் பெயரும் சுட்டுப் பெயருமாகிய விரண்டும் ஒன்றனை யொன்று கொள்ளாது இரண்டும் பிறிதுவினை கோடற்கு ஒருங்கு நிகழும் காலம் தோன்றுமாயிற் சுட்டுப் பெயரை முற்படச் சொல்லார், இயற்பெயர்க்குப் பின்னார்ச் சொல்லுவர்.

க. வே: 1. வழுக்காத்தவாறு

உ-ம் சாத்தன் வந்தான் அவற்குச் சோறு கொடுக்க; சாந்து கொடுக்க; சாத்தி வந்தாள் அவட்குச் சாந்து கொடுக்க, பூக் கொடுக்க. ஒருங்கியலும் என்றதனால் ஒரு பொருளை யுணர்த்து தல் கொள்க. இயற்பெயர் வழிஇய என்றதனால் விரவுப்பெயர் அன்றி உயர்திணைப் பெயர்க்கும் அஃறிணைப் பெயர்க்கும் சுட்டுப் பெயர் பின்வருதல் கொள்க.

உ-ம்: நம்பி வந்தான் அவற்குச் சோறு கொடுக்க; நங்கை வந்தாள் அவட்குப் பூக் கொடுக்க; எருது வந்தது அதற்குப் புல் இடுக; நாய் வந்தது அதற்குச் சோறிடுக; குதிரை வந்தது அதற்கு முதிரை கொடுக்க எனவரும். 'வினைக்கொருங்கியலும்' என்றதனால் பெயர்க்குச் சுட்டாயினும் இயற்பெயராயினும் ஒன்று முற்கூறினும் அமையும். சாத்தனவன்; அவன் சாத்தன் எனவரும்.

சுட்டுப் பெயர் முற்பட வருமிடம்

39. முற்படக் கிளத்தல் செய்யுளுள் உரித்தே.

ஆ. மோ.

இல.

In poetry it may preeede the proper noun.

ச. சு.

In poetry (eeyyul) it is proper
(for the pronoun) to be uttered
preeeding (the noun).

பி. இ. நா

நன். 394

.........செய்யுட்கு ஏற்புழி.

இல. வி. 316

.........செய்யுட்கு ஏற்புழி

முத்து. ஒ. 17.

முற்படக் கூறல் யாப்பினுள் உரித்தே.

இளம்.

இச் — எனின், இஃது எய்தியது விலக்குதல் நுதலிற்று.

உரை : செய்யுளகத்து ஆமேயெனிற் சுட்டுப் பெயர் முன் சொல்லி, இயற்பெயர் பின்வைத்துக் கூறினும் அமையும், எ — று.

வ — று: அவனணங்கு நோய் செய்தான் ஆயிழாய் வேலன்
விறன்மிகுதார்ச் சேந்தன்பேர் வாழ்த்தி — முகனமர்ந்து
அன்னை யலர்கடப்பந் தாரணியில் என்னை கொல்
பின்னை யதன்கண் விளைவு.
(நன். 394 சங்கர. உரைமேற்.)

எனவரும். இதனுள் 'அவன்' என்பது சுட்டு; 'சேந்தன்' என்பது இயற்பெயர்

சேனா.

இ — ள் : இயற்பெயரும் சுட்டுப்பெயரும் வினைக்கு ஒருங்கு இயலும் வழிச் சுட்டுப் பெயரை முற்படக் கூறுதல் செய்யுளுள் உரித்து, எ — று.

உ — ம்: அவனணங்கு நோய் செய்தான் ஆயிழாய் வேலன்
விறன்மிகுதார்ச் சேந்தன்பேர் வாழ்த்தி—முகனமர்ந்து
அன்னை யலர்கடப்பந் தாரணியில் என்னை கொல்
பின்னை யதன்கண் விளைவு.

எனவரும் இதனுள் சேந்தன் என்பது இயற்பெயர்.

ஒருவினை கொள்வழிச் சுட்டுப் பெயர் முற்கிளத்தல் வந்தவழிக் கண்டுகொள்க. இது செய்யுளிடத்து மரபு வழுவமைத்தவாறு.

தெய்.

எய்தியது விலக்கிப் பிறிது விதி வகுத்தல் நுதலிற்று.

இ—ள்: மேலைச் சூத்திரத்துப் பிற்படக் கூறப்படும் என்று சொல்லப்பட்ட சுட்டுப்பெயரை முற்படக்கூறுதல் செய்யுட் கண் ஆம், எ—று.

உ-ம்: *"அவனணங்கு... சேந்தன் பேர்... விளைவு" இதனுள் சேந்தன் என்பதும், அவன் என்பதூஉம், ஒரு பொருளாகியவாறும், சுட்டு முன்வந்துழியும் வேறுபடாமையும் கண்டு கொள்க.

அஃது அற்றாக சுட்டுப்பல வாகலின் உரிய எனப் பன்மையிற் கூறாதது என்னையெனின், ஈண்டு அகரச் சுட்டே வருதலின் ஒருமையாகக் கூறப்பட்டது: †வந்தது கொண்டு வராதது முடித்தல் என்பதனாற் கொள்க. 'நாயுடை முதுநீர்க் கலித்த' (அகம் 16) என்னும் அகப்பாட்டினுள் 'கூர் எயிற்றரிவை குறுகினள், செத்தனள், கொண்டனள், நாணி நின்றோள், அணங்கருங் கடவுள் அன்னோள்' என ஒரு பொருள்மேற் பல பெயர் சுட்டியவாறு காண்க.

நச்·

இஃது எய்தியது விலக்கிற்று.

இ-ள்: முற்படக் கிளத்தல்—இயற்பெயரும் சுட்டுப் பெயரும் வினைக்கு ஒருங்கு இயலும் வழிச் சுட்டுப் பெயரை முற்கூறுதல், செய்யுளுள் உரித்து-செய்யுளிடத்து உரித்து, எ-று.

*உ-ம்: "அவனணங்கு... சேந்தன்பேர்... விளைவு" சேந்தன் இயற்பெயர்.

கல்.

என்-எனின், எய்தியது விலக்கியது நுதலிற்று.

பொருள்: மூவகைப்பெயர்களுள் சுட்டுப்பெயரை முற்படச் சொல்லுதல் செய்யுளிடத்தாயின் அமையும், எ-று.

---

† சு. வே. அதனைப் பல்பொருட்கேற்பின் நல்லது கோடல் என்பதனாற் கொள்க. இதன் பிற்பகுதி இரண்டாவது ஏட்டில் இல்லை. (கடிதம்)

*உ-ம்: "அவனணங்கு...சேந்தன் பேர்...விளைவு" என வரும். பிறவும் வந்தவழிக் கண்டுகொள்க.

இதனாற் சொல்லியது, முற்கூறலாகாது எனப்பட்ட சுட்டுப் பெயர் மொழிமாற்றியும் பொருள் கொள்ளும் நயம் செய்யுட் கண் உண்மையான் அதனகத்தாயின் அமையும் என்று நேர்ந்தவாறாயிற்று.

ஒரு.

*உ-ம்: "அவனணங்கு... சேந்தன்பேர்... விளைவு" இதனுள் அவன் என்பது சுட்டுப்பெயர்; சேந்தன் என்பது இயற்பெயர்.

சுட்டு முதற்காரணக்கிளவி.

40. சுட்டுமுத லாகிய காரணக் கிளவியும்
சுட்டுப் பெயர் இயற்கையிற் செறியத் தோன்றும்

ஆ. மொ.

இல.

The word of reason derived form the demonstrative — 'Atha*n*āl' — will appear in a sentenee) as in the nature of a demonstrative pronoun.

க. சு.

And the word eommeneing with a demonstrative (root) and denoting eause (kāraṇam) will be used in the same manner as demonstrative nouns (euṭṭuppeyar).

பி. இ. நா.

முத்து. ஒ. 72

சுட்டுமுத லாகிய காரணப் பெயரும்
முற்படக் கிளத்தல் முறையன் றாகும்.

---

* இப்பாடல் யாவராலும் தரப்படலின் இங்கு முழுப் பாடலையும் தரவில்லை.

இளம்.

இச்— எனின், ஒரு பொருள் மேல் இருபெயர் வழக்காத்தல் நுதலிற்று.

உரை : மேற் சுட்டுப்பெயர், இயற்பெயரின் வழியே கிளக்க எனப்பட்டது போலச் சுட்டு முதலாகிய காரணப் பெயரையும் இயற்பெயர்க்கு வழியே வைத்துச் சொல்லுக எ—று.

வ—று : சாத்தன் கையெழுதுமாறு வல்லன்; அதனால் தன் ஆசிரியன் உவக்கும்; தந்தையுவக்கும் என வரும்.

அதிகாரத்தான், வழிக்கிளத்தல், வினைக்கொருங்கியலும் வழிக் கொள்க. எழுதுமாறு என்பது வினை.

*முதற்சூத்திரம் பொருள்வழி வந்தது; இது பொருளது குணத்து வழி வந்தது.

சேனா.

இ—ள் ; சுட்டை முதலாகவுடைய காரணப் பொருண் மையை யுணர்த்தும் சொல்லும் சுட்டுப் பெயர்போலத் தன்னாற் சுட்டப்படும் பொருளையுணர்த்தும் சொற்குப் பின் கிளக்கப் படும், எ—று.

ஈண்டுச் சுட்டப்படும் பொருள் தொடர்மொழிப் பொருள்

உ—ம் : சாத்தன் கையெழுதுமாறு வல்லன்; அதனால் தந்தை யுவக்கும், சாத்தி சாந்தரைக்குமாறு வல்லள்; அதனால் கொண்டான் உவக்கும் எனவரும்.

[1]சுட்டு முதலாய காரணக்கிளவி உருபேற்று நின்ற சுட்டு முதற் பெயரோடு ஒப்பதோர் இடைச்சொல்லாகலின் 'சுட்டுப்

---

* இதற்கு மறுப்பு சேனாவரையா உரையிற் காண்க.

1. அதனால்—சுட்டு முதலாகிய காரணக்கிளவி. அது + அன் + ஆல் = அதனால் இது உருபேற்ற சுட்டுப் பெயர். முன்னதை 'அதனால்' என எவ்வெழுத்திலும் ஒசை வேறுபாடோ பிரித்திசைப்பதோ இன்றிக் கூற வேண்டும். பின்னதை, அதனால் என ஆல் உருபு விளங்குமாறு பிளவுபட இசைக்கலாம். எது போல

பெயரியற்கையிற் செறியத்தோன்றும் என்றார். செயற்கு என்னும் வினையெச்சம், உருபேற்று நின்ற தொழிற் பெயரோடு ஒப்புமையுடைத்தாயினும், உருபும் பெயரும் ஒன்றாகாது பகுப்பப் பிளவுபட்டிசையாது ஒன்று பட்டிசைத்தலான் அதனின் வேறாயினாற்போல, இதுவும் உருபேற்ற சுட்டுப் பெயரோடு ஒப்புமையாயினும் பிளவு பட்டிசையாது ஒன்று பட்டிசைத்த லான் வேறாகவே கொள்ளப்படும் என்பது.

அஃதேல் சாத்தன் வந்தான்; அஃது அரசற்குத் துப்பாயிற்று எனத் தொடர்மொழிப் பொருளையும் சுட்டிவரும் சுட்டுப் பெயர் கூறாது காரணக் கிளவியே கூறியது என்னை யெனின் அவ்வாறு வருவன தன்னின முடித்தல் என்பதனான் அடங்கும். ஈண்டுச் சுட்டப்படும் பொருளை யுணர்த்துவது பெயரன்மையின், சுட்டுப் பெயரியற்கை யென்றது, வழக்கி னகத்து சுட்டப்படும் பொருளை யுணர்த்தும் சொற்குப் பின்னிற்றலும் செய்யுளகத்து முன்னிற்றலும் ஆகிய அத்துணை யேயாம். செய்யுட்கண் முன்னிற்றல் வந்த வழிக்கண்டு கொள்க.

[2]பொருள் பற்றாது பண்பு முதலாயின பற்றி வந்த சுட்டா தலின் வேறோதப்பட்டது என்று உரையாசிரியர் கூறினாரால் எனின் :—சாத்தன் வந்தான் அஃது அரசற்குத்துப்பாயிற்று

எனின் செயற்கு என்பது வினையெச்சமாகவும் செய்தலுக்கு என்ற பொருளில் நான்கன் உருபேற்ற பெயராகவும் இசைத்தல் போல. வினையெச்சத்தைச் செயற்கு எனச் சேர்த்தே பிளவு படாமல் இசைக்க வேண்டும். உருபேற்ற பெயரை செயல்கு எனப் பிளவு பட இசைக்கலாம், அதுபோலஎன்க.

2. இளம்பூரணர் சுட்டுமுதலாகிய காரணக்கிளவியை (அதனால் என்பதை) சுட்டுப் பெயர் (3 ஆம் உரு பேற்ற சுட்டுப் பெயர்) என்றே கொண்டார். அப்படி யாயின் மேற் சூத்திரத்திலேயே அடக்கலாமே ஏன் தனித்துக் கூறவேண்டும் என்பது அவர்வினா. அதற்கு அவர் விடை. முன்சூத்திரத்துள்ள சுட்டுப் பெயர் பொருள் பற்றியது; இச்சூத்திரத்தில் உள்ள சுட்டுப் பெயர் பண்பு முதலியனபற்றியது. இதுவே காரணம் என்பர். இதைச் சேனாவரையர் மறுக்குமாறு:—

எனவும், கிழவன் பிரிந்தான்; அதனைக் கிழத்தி புணர்ந்திலள் எனவும், எழுவாயாயும் ஏனை வேற்றுமை யேற்றும் அச்சுட்டுப் பயின்று வருதலாற் பண்பு முதலாயின வற்றைச் சுட்டும் சுட்டு எனப் பொதுவகையாற் கூறாது 'காரணக் கிளவி' என ஒருசார் வேற்றுமைக்குரிய வாய் பாடு பற்றி யோதுதல் குன்றக் கூறலாகலானும், சுட்டுப் பெயராயிற் 'சுட்டு முதலாகிய காரணக்கிளவி' யென்றும் 'சுட்டுப் பெயரி யற்கையிற் செறியத் தோன்றும்' என்றும் கூறுதல் பொருந் தாமையானும் அது போலியுரை யென்க.

''சுட்டு முதலாகிய காரணக் கிளவி சுட்டுப் பெயரே யாயின், அது மூன்றனுருபேற்ற சுட்டுப் பெயராதல் வேண்டும். அச்சுட்டுப் பெயர் பண்பு முதலாயின பற்றி வந்த தெனின், பண்பு முதலாயினபற்றி வரும் சுட்டுப் பெயர் எழுவாய் வேற்றுமையிலும் பிறவேற்றுமை யிலும் பயின்று வருகின்றன. ஆதலின் சூத்திரத்திற் 'பண்பு முதலாயின சுட்டும் சுட்டு' எனப்பொதுவாகக் கூறுதல் வேண்டும்; மூன்றாம் வேற்றுமைக்கு மட்டும் உரிய முறையில் 'காரணக் கிளவி' என்று கூறுதல் பொருந்தாது.

''மேலும் சுட்டு முதலாகிய காரணக் கிளவி சுட்டுப் பெயராயின் அதனைச் சுட்டுப் பெயர் போல (சுட்டுப் பெயரியற்கையின்) வரும் என்றதும் பொருந்தாது. ஒரு சுட்டுப் பெயரை எடுத்து இது சுட்டுப் பெயர் போல வரும் என்பது பொருந்தாது. சுட்டுப் பெயரல்லாத ஒருவாறு சுட்டுப்பெயரை ஒத்த பிற பெயரை எடுத்துச் சுட்டுப் பெயர் போல வரும் என்று கூறுவது பொருத்த மாகும்''—பூவராகம்பிள்ளை.

''இச்சூத்திர வுரையில் ''உருபும் பெயரும் ஒன்றா காது, பகுப்பப் பிளவுபட்டிசையாது ஒன்று பட்டிசைத் தலான்'' என்ற பகுதியில் ''உருபும் பெயரும் ஒன்றாகாது பகுப்ப'' என்ற வரையிலும் வேண்டாத தாக உள்ளது. அல்லது ''ஒன்றாகாது'' என்றதைத் தள்ளிவிட்டுப் 'போல' என்றதைச் சேர்த்து ''உருபும் பெயரும் போல'' என்று படிக்கலாம்''—பூவராகம்பிள்ளை.

இதனான் வழக்கின் கண் மரபு வழாநிலையும் செய்யுட்கண் மரபு வழுவமைதியும் உணர்த்தினான்.

தெய்.

செப்பு வழுக் காத்தலை நுதலிற்று.

இ—ள்: சுட்டெழுத்து முதலாகிய காரணச் சொல்லும், சுட்டுப் பெயர் இயற்கைபோலப்பொருந்தத் தோன்றும், எ—று. என்றது பிற்படக் கூறப்படும், எ— று.

உ–ம்: மழை பெய்தது; அதனால் யாறு பெருகும். பிறவும் அன்ன.

இது சுட்டுப் பெயருள் அடங்காதோ எனின் பொருளைச் சுட்டாது தொழிலைச் சுட்டுதலாலும், காரணக்கிளவி கருவி யாதலாலும் வேறு ஓதப்பட்டது.

நச்.

இதுவும் அச்சுட்டு ஆராய்ச்சியே கூறுகின்றது.

இ—ள்: சுட்டு முதல் ஆகிய காரணக் கிளவியும்—சுட்டுப் பெயர் முதலாகிய காரணப் பொருண்மையை உணர்த்தும் சொல்லும் (உம்மையால் காரணம் இன்றி வரும் சுட்டுப்பெயரும்) சுட்டுப் பெயர் இயற்கையின் செறியத் தோன்றும்—சுட்டுப் பெயர் போலத் தன்னால் சுட்டப்படும் தொழிலையுணர்த்தும் சொற்குப் பின் கிளக்கப்படும், எ— று.

சுட்டுப் பெயர் இயற்கை யெனவே வழக்கிற்குப் பின்னும் செய்யுட்கு முன்னும் நிற்கும் என்பது பெற்றாம்.

சாத்தன் கையெழுதுமாறு வல்லன்; அதனால் தந்தை உவக்கும், சாத்தி சாந்து அரைக்குமாறு வல்லள்; அதனால் கொண்டான் உவக்கும். இவற்றுள் சுட்டு முதலாகிய காரணக் கிளவி உருபு அன்று; உருபு ஏற்ற சுட்டுப் பெயரோடு ஒப்ப தோர் இடைச் சொல்; என்னை? பிளவு படாது ஒன்று பட்டிசைத் தலின். [1]சாத்தன் வந்தான்; அஃது அரசற்குத்துப்பு ஆயிற்று, கிழவன் பிரிந்தான்; அதனைக் கிழத்தி உணர்ந்திலன் என இவை காரணம் இன்றி வந்தன.

---

1. இவற்றைத் தன்வினை முடித்தல் என்பதனாற் கொள்வர் சேனாவரையர்,

கல்.

என்—எனின், இதுவும் சுட்டுப் பெயர் ஆராய்ச்சியே கூறுவது நுதலிற்று.

இ—ள்: சுட்டெழுத்து முதலாகவுடைய காரணப் பொருளை உணர நின்ற சொல்லும் மேற்கூறிய சுட்டுப் பெயர் இயல்பு போலப் பெயர்ப் பின்னே யாப்புறத் தோன்றும், எ—று.

உ—ம்: சாத்தன் கையெழுதுமாறு வல்லன்; அதனால் [3]தந்தையுவக்கும். சாத்தி சாத்தரைக்கு மாறு வல்லள்; அதனால் கொண்டான் உவக்கும் எனவரும்.

*மேற்கூறிய வகைகள் எல்லாம் இதற்கும் ஒக்கும். இதுவும் ஆண்டே அடங்காதோ எனின், ஆண்டுச் சுட்டு, பொருள் வழி வந்தது; ஈண்டு அப்பொருளது குணத்துவழி வந்தது என உணர்வது.

ஒரு.

என்பது சுட்டுப் பெயர் இயற்பெயரின் பின் கிளக்கப் பட்டது போலச் சுட்டு முதலாகிய காரணச் சொல்லையும் இயற் பெயரின் பின் வைத்துச் சொல்லுக.

உ-ம்: சாத்தன் கையெழுதுமாறு வல்லன்; அதனால் தம் ஆசிரியன் உவக்கும், சாத்தி சாந்தரைக்குமாறு வல்லள்; அதனால் கொண்டான் உவக்கும் எனவரும். சுட்டு முதலாகிய காரணக்கிளவியீது வினைக் கொருங்கியலும்வழி வரும் என்று கொள்க.

ஆதி.

சுட்டெழுத்தை முதலாகவுடைய (அதனால் †இதனால்) போன்ற காரணத்தைக் குறிக்கும் சொற்களும் சுட்டுப் பெயர்கள் போன்றே முற்றும் வருவன வாகுக.

சு. வே: 2 தன் ஆசிரியன்.

* இளம்பூரணர் கருத்தைக் கொண்டது இப்பகுதி மறுப்பு சேனாவரையத்தில் காண்க.

† இதனால் என்னும் வழக்கு அருகியே காணப்படும்; அதனால் என்னும் காரணச் சொல்லே பெருவழக்கு

கண்ணன் நன்கு படித்தான்; அதனால் தேறினான்.
முருகன் உழைத்தான்; அதனால் உரம் பெற்றான்.

இயற் பெயர் முதலினும், 'அதனால்' காரணச்சுட்டுப் பின்னரும் வந்துள்ளன.

சுட்டு செய்யுளில் முன் வரலும் உண்டு—என்ற முறையில் காரணச் சுட்டும் முன்வரலாம். இதனைக் குறிக்கவேசெறியத் தோன்றும் என்றார்.

இயற்பெயரும் சிறப்புப் பெயரும்

41. சிறப்பின் ஆகிய பெயர்நிலைக் கிளவிக்கும்
இயற்பெயர்க் கிளவி முற்படக் கிளவார்.

ஆ. மொ.

இல.

The proper name must not preeede the
word of distinetion or title.

க. சு.

And the word (denoting) proper name should not be uttered before the word denoting the name of distinetion.

பி. இ. நா

நேமி. சொ. 15

சாதி முதலாம் சிறப்புப்பேர் தன்முன்னர்
ஓதார் இயற்பெயரை யுய்த்து,

நன். 39 .

திணைநிலம் சாதி குடியே யுடைமை
குணம் தொழில் கல்வி சிறப்பாம் பெயரொடு
இயற்பெயர் ஏற்றிடின் பின் வரல் சிறப்பே.

உதாரணம் காட்டியவர் 'இதனால்' என்பதற்குக் காட்டாமையே சான்றாம்—சிவ.

இல. வி. 317

திணைநிலம் சாதி குடியே யுடைமை
தவம் தொழில் கல்வி சினைகுணம் சிறப்போடு
இயற்பெயர் ஏற்றிடின் பின்வரல் இயல்பே.

முத்து. ஒ. 73.

வினைக்கொருங் கியலும் விழுமிய பொருட்கும்
இயற்பெயர் முற்பட இயல்பினாம் வழுவே.

இளம்.

இச்-எனின், இதுவும் ஒரு பொருள்மேல் இருபெயர் வழுக் காத்தது நுதலிற்று.

உரை: சிறப்புப் பெயரும் ஒருவற்கு உளவாயின், அவ் விடத்து அவனைப் பெயர் கொடுக்குங்கால், அவன் சிறப்புப் பெயரை முன்கூறி, இயற்பெயரைப் பின் கூறுக எ—று.

வ-று: ஏனாதி நல்லுதடன், சோழன் நலங்கிள்ளி எனவரும்

[1]உம்மையாற் பிறப்பினாகிய பெயர்க்கும், தொழிலினாகிய பெயர்க்கும், கல்வியினாகிய பெயர்க்கும் இயற்பெயர்களை வழியே வைத்துச் செல்லுக.

வ-று: பார்ப்பான் கண்ணன், வண்ணான் சாத்தன் என வரும். [2] கல்வியினாகிய காரணம் வந்த வழிக் கண்டு கொள்க. சிறப்புப்பெயர் என்பன சிறப்புடைய மன்னராற் பெறுவன.

சேனா.

இ-ள்: வினைக் கொருங்கியலும்வழிச் சிறப்பினாகிய பெயர்க்கும் இயற்பெயரை உலகத்தார் முற்படக்கிளவார்; பிற் படக்கிளப்பர், எ-று,

---

1. உம்மையால் உறுப்பினாகிய பெயர்க்கும் கல்வியினாகிய பெயர்க்கும் கொள்க. உதாரணம் வந்தவழிக் கண்டு கொள்க. பிரதிபேதம் (—தொல். சொல். உரைக் கோவையிற் கண்டது)

2. இதற்குத் தெய்வப்புலவன் திருவள்ளுவன் என்பதைக் கொள்க.

வினைக் கொருங்கியலும் என்பது ஏற்புழிக் கோடல் என்பதனாற் பெற்றாம். ஈண்டுச் சிறப்பாவது மன்னர் முதலாயினாராற் பெறும் வரிசை. உ-ம்: ஏனாதி நல்லுதடன், காவிதிகண்ணந்தை என வரும்.

உம்மையால், தவம், கல்வி, குடி, உறுப்பு முதலாயினவற்றானாகிய பெயருங் கொள்ளப்படும். அவை முனிவன் அகத்தியன் எனவும், தெய்வப்புலவன் திருவள்ளுவன் எனவும், குருடன் கொற்றன் எனவும் வரும்.

திரு வீரவாசிரியன், மாந்தக் கொங்கேனாதி என இயற்பெயர் முன் வந்தனவால் எனின், அவை தொகைச்சொல் ஆகலான் அவற்றின் கண்ணது அன்று இவ்வாராய்ச்சி யென்பது. [3]ஆண்டியற்பெயர் முன்னிற்றல் பண்புத்தொகையாராய்ச்சிக்கட் பெறுதும் (சொல் 416)

தெய்.

இதுவும் அது.

இ—ள்: மன்னர் முதலாயினராற் பெற்ற சிறப்பினான் ஆகிய பெயர்ச் சொற்கும், உம்மையான் நிலப் பெயர் முதலாகிய பெயர்க்கும் இயற்பெயர்ச் சொல்லை முற்படக் கூறார் ஆசிரியர், எ—று.

சிறப்பினான் வந்தன: ஏனாதி, வாயிலான், படைத்தலைவன். அவை, ஏனாதிநல்லுதடன், வாயிலான் சாத்தன், படைத்தலைவன் கீரன் என்பன. இக்காலத்து உடையார் தேவர் என்பனவும் சிறப்பினான் ஆகிய பெயர். அருவாளன் சாத்தன், பாண்டியன் மாறன், முனிவன் அகத்தியன், ஆசிரியன் சாத்தன். பிறவும் அன்ன.

---

3. பண்புத்தொகையாராய்ச்சியில் இதுபற்றிக் கூறப்படவில்லை, திருவீரன் + ஆசிரியன், மாந்தன் + கொங்கு + ஏனாதி என்பன சேர்ந்து ஒரு சொல்லாய்ப் பண்புத் தொகையாயின. அதனால் பிரிக்கப்படா. பிரிக்கப் படாவாதலின்முன்பின் என்றற்கில்லை இதுபற்றி நச். உரை பார்க்க.

நச்.

இதுவும் ஒரு பொருளை யுணர்த்தும் இரு பெயர் வழுக்காக்கின்றது.

இ—ள்: சிறப்பின் ஆகிய பெயர் நிலைக் கிளவிக்கும்— வினைக்கு ஒருங்கு இயலும்வழிச் சிறப்பின் ஆகிய பெயராய் நிற்றலையுடைய சொற்கும் (உம்மையான் தவம் கல்வி குடி உறுப்பு முதலியவற்றான் ஆகிய சொற்கும்), இயற் பெயர்க் கிளவி முற்படக் கிளவார்—இயற்கைப் பெயராகிய சொல்லை உலகத்தார் முற்படக் கிளவார் பிற்படக் கிளப்பர், எ-று.

சிறப்பு, மன்னர் முதலியோரின் பெறும் வரிசை.

உ—ம்: ஏனாதி நல்லுதடன், முனிவன் அகத்தியன், தெய்வப் புலவன் திருவள்ளுவன், சேரமான் சேரலாதன், சோழன் வண் கிள்ளி, பாண்டியன் மாறன், குருடன் கொற்றன் என வரும்.

தச்சக் கொற்றன்—தொழிலினானாய பெயர். திருவீர ஆசிரியன் என்றாற்போல இயற் பெயர் முற்கூறுவன பிறவும், இக்காலத்தார் மயங்கக் கூறுவன பிறவும் 'கடி சொல் இல்லை' (எச். 56) என்பதனாற் கொள்க.

கல்.

என்—எனின், இதுவும் ஒரு பொருள் மேல் இருபெயர் வழுக் காத்தலை நுதலிற்று.

இ—ள்: சிறப்பினாகிய பெயர்ச் சொற்கும், உம்மையாற் பிற பெயர்க்கும் இயற் பெயராகிய சொல்லை முற்படச் சொல்லார், பிற்படச் சொல்லுவர் ஆசிரியர், எ—று.

உ-ம் : ஏனாதி நல்லுதடன், வாயிலான் சாத்தன், படைத் தலைவன் கீரன் என இவை சிறப்புப் பெயர். பிறவும் என்றது குலத்தினானாய பெயரும், கல்வியினானாய பெயரும், தொழிலினானாய பெயரும் பிறவும் என்பது.

உ—ம்: சேரமான் சேரலாதன், சோழன் நலங்கிள்ளி பண்டியன் மாறன் — இவை குலப் பெயர். ஆசிரியன் சாத்தன்— என்றாற் போல்வன கல்வியினானாய பெயர். வண்ணாரச் சாத்தன், தச்சுக் கொற்றன், நாவிதன்மாறன்—இவை தொழிலினான் ஆய பெயர்.

இதனாற் சொல்லியது ஒரு பொருட்கு இருபெயர் கூறும் வழி யாது முற்கூறினும் அமையும் என்று கூறலாகாது; மேற் றொட்டுங் கூறி வந்த மரபானே கூறாவிடின் அப்பொருள் மேற் செல்லாது பிறபொருள் மேல் நோக்கப்படும் என மரபு வழு வற்க என்றவாறாயிற்று.

*இவ்வாறன்றி இக்காலத்து மயங்கக் கூறுவன உளவாயின் அவற்றைக் கடிசொல் இல்லை காலத்துப் படினே' என்பதனாற் கொள்ளப்படும்.

ஒரு.

என்பது, சிறப்பினாகிய பெயர்க்கு முன் இயற் பெயரை வைத்துச் சொல்லார். உம்மையான் தவம், கல்வி, குடிப்பிறப்பு முதலியனவும் கொள்க. ஏனாதி நல்லுதடன், வாயிலான் சாத்தன், படைத்தலைவன் கீரன், சேரமான் சேரலாதன், சோழன் நலங்கிள்ளி, பாண்டியன் மாறன், முனிவன் அகத்தியன், தெய்வப்புலவன் திருவள்ளுவன், பார்ப்பான் கண்ணன், வேளாளன் கொற்றன், வண்ணான் சாத்தன், கோலிகன் சாத்தன், தச்சன் கொற்றன், †கோவலான் செய்யான், நாவிதன் மாறன் என வரும்.

ஆதி.

இயற் பெயரைத் தொடர்ந்து சிறப்புப் பெயர் வருவதாயின் அது மாமூல் என்றும், அதனால் சிறப்பு இல்லை என்றும் கருத லாம். முருகேச பண்டிதர், குமாரசாமிப் புலவர். ஆயின் அண்ணாமலை மருத்தர், வசிட்ட முனிவர், தசரத மன்னர் என்ற சொற்களில் இயற்பெயரே முதலில் நிற்கக் காண்கிறோம். சிறப்புப் பெயர் முதல் நிற்பின் அது அவர்தம் சிறப்பைக் காட்டுகிறது.

சுப்பிர.

சேனாவரையரும் நச்சினார்க்கினியரும் 'வினைக் கொருங் கியலும்' என்பதை ஏற்புழிக்கோடலாற் கொள்ளுகின்றனர். ஆனால் ஏனாதிநல்லுதடன் முதலிய உதாரணத்தில் வினை

---

* இப்பகுதி கழகப்பதிப்பில் இல்லை

† சு. வே. கொல்லன் செய்யான்

காணப்படவில்லை. அது தொக்குள்ளது போலும். 'வினைக் கொருங்கியலும் என்பதற்கு 38-வது சூத்திரவுரையில் 'வினைக் கென்புழி அவ்விரு பெயரும்ஒரு வினை கோடலும் தனித்தனி வினைகோடலும் கொள்க' என்று சேனாவரையர் கூறியுள்ளமை யால், இச்சூத்திர வுதாரணத்தில் ஒருவினை கோடல் உண்மை பற்றி வினைக்கொருங்கியலும் வழி என்பது ஒருவாறு பொருந் தும். நச்சினார்க்கினியர் அங்கு அச்சொல்லுக்கு 'ஒன்றனை யொன்று கொள்ளாது இரண்டும் பிறிதுவினை கோடற்கு ஒருங்கு நிகழும் காலந்தோன்றுமாயின்' என்று பொருள் கொடுத்தமை யாற் பிறிதுவினை கோடல் இல்லாத இங்கு வினைக் கொருங் கியலும் என்பதைக் கொண்டது எவ்வாறு பொருந்தும்?†

மாந்தக்கொங்கேனாதி முதலிய சொற்களில் இயற்பெயர்க் கிளவி முற்படக்கிளந்ததற்குச் சேனாவரையர் 'அவை தொகைச்சொல் ஆகலான், அவற்றின்கண்ணதன்று இவ்வாராய்ச்சி' என்றார். பிற்காலத்து வழக்காகையால் "கடிசொல் இல்லை காலத்துப் படினே" (சொல் 552) என்னுஞ் சூத்திரத்தாற் கொள்ளப்படும் என்று நச்சினார்க்கினியர் கூறியவாறே அவர் கூறியிருப்பின் நன்றாம்.

ஒரு பொருட் பல்பெயர் முடியுமாறு

42. ஒருபொருள் குறித்த வேறுபெயர்க் கிளவி
தொழில்வேறு கிளப்பின் ஒன்றிடன் இலவே.

ஆ. மொ.

இல.

The different names when indieating one
objeet must have one predieate,
when they have different predieates,
they fail to denote one and the same object.

---

† வினாநன்று. நச்சினார்க்கினியர் 38 ஆம் சூத்திரத்தில் 'வினைக்கு' என்பதைப் 'பிறிதுவினை கொள்ளுதற்கு, எனப் பொருள் கொண்டது பொருத்த மற்றதே.

க. சு.

Different words (being) names denoting one objeet eannot (denote) one and the same (objeet) it (they) take different predieates.

நேமி. சொ. 12.

ஒருபொருள்மேல் பல்பெயர் உண்டானால்
அவற்றிற்கு
ஒருவினையே சொல்லுக ஓர்ந்து.

நன். 392.

ஒருபொருள் மேல்பலபெயர் வரின் இறுதி
ஒருவினை கொடுப்ப தனியும் ஒரோவழி.

இல. வி. 318

ஒருபொருள் குறித்த வேறுபெயர்க் கிளவி
தொழில்வேறு கிளப்பின் ஒன்றிடன் இலவே.

முத்து. ஒ. 74.

ஒருபொருள் குறித்த பலபெயர்க் கிளவி
ஒருவினை முடிபறை யாதப் பெயர்தொறும்
வேறொரு வினைதந் துரைப்பது விதியே.

இளம்.

இச்-எனின், ஒரு பொருள்மேற் பல பெயர் வழுக்காத்தல் நுதலிற்று. மரபு வழுக் காத்தலும் ஆகும்.

உரை: ஒரு பொருளைக் கருதி வேறு வேறு பெயர் வரும் எனின், அப்பெயர் வேறு வேறு தொழில் கோடற்கு வரும்; பெயரெல்லாம் சொல்லிய பின்னைத் தொழில் கொடுக்க; அங்ஙனம் கொடுக்க வந்த பெயரெல்லாம் அதற்கு ஒன்றும்; அல்லாக்கால் அதற்கு ஒன்றிடன் இல, எ—று.

வ—று: ஆசிரியன் பேரூர்கிழான் செயிற்றியன் இளங் கண்ணன் சாத்தன் வந்தான் எனவரும்.

மற்று எந்தை வருக, எம்பெருமான் வருக எனவும் ஒரு பொருட்கு ஒன்றுமால் எனின், அதனை 'ஞாபகங்கூறல்

(மரபியல் 111) என்னும் உத்தி வகையான் உணர்க. என்னை? 'தொழில் வேறுகிளப்பின் ஒன்றிடன் இலவே' என்றார்; அத் தொழில் வேறு கிளத்தல்தான் இருவகைப்படும்; பெயர் தொறும் ஒருதொழில் கிளத்தலும், வேறு கிளத்தலும் ஆம். [1]பெயர் தொறும் வேறாய்த் தொழில் கிளத்தலும் வேறு கிளத்த லாம். அதனால் இச்சூத்திரத்துப் பெயர் தொறும் தொழில் கிளத்தலைத் 'தொழில் வேறு கிளப்பின் ஒன்றிடன் இல' என்றது.

[2]அங்ஙனம் ஞாபகத்தாற் கொள்வதனையும் ஒரு பொருட்கு ஒன்றும் என்று, மற்றுவரும் பெயரெல்லாம் சொல்லிப் பின்னைத் தொழில் கிளப்பதனை எடுத்தோத்தினாற்கூறி, அவ் வப்பெயர் தோறும் ஒரு தொழில் கிளப்பதனை உத்திவகையாற் கொண்டது என்னையெனின், 'எந்தை வருக எம்பெருமான் வருக மைந்தன் வருக' என்றவிடத்து ஒரு பொருள் மேலும் நிற்கும்; மற்றையதாயின் ஒரு பொருட்கே திரிபுபடாது ஒன்றும். அதனால் அதனை எடுத்தோத்தினானும், இதனை யுக்தி வகை யானும் கொண்டான் என்பது.

சேனா.

இ-ள்: ஒரு பொருளைக் குறித்து வந்த பல பெயர்ச் சொற்கள், ஒரு தொழிலே முடிபாகக் கூறாது பெயர்தோறும்

---

1. இத்தொடர் கழகப்பதிப்பில் காணப்படவில்லை. விடு பட்டது போலும்.
2. ஆசிரியன் பேரூர்கிழான்...வந்தான் என்பதைச் சூத்திரத்து எடுத்தோதியதாலும், எந்தை வருக... மைந்த வருக என்பதை ஞாபகத்தாலும் கொள்ளவேண் டுவதேன் என்பது வினா. அதற்கு விடை:—'எந்தை என்பதில் தனித்தனிக் கொடுக்கப்பட்ட வினை ஒன்றா யினும் பெயர்கள் வேறுபட்டு விடுதலும் ஆம்— அதாவது எந்தை, எம்பெருமான் முதலியனபலரைக் குறிக்கவும் கூடும். ஒருவரையே குறிப்பதும் உண்டு. ஒருவரைக் குறிக்கும் வகையில் இங்கு ஞாபகத்தால் கொள்ளப்பட்டது. ஆசிரியன் பேரூர் கிழான் முதலியனஇறுதியில் ஒருவினை கொடுப்பதால் ஒரு வரையே குறிக்கும். இது ஆசிரியர் எடுத்தோதியதால் பெறுவது.

வேறாகிய தொழில்களைக் கொடுத்து முடிப்பின் ஒரு பொருள வாய் ஒன்றா, எ—று.

'ஆசிரியன் பேரூர்கிழான் செயிற்றியன் இளங்கண்ணன் சாத்தன் வந்தான்' என்னாது, ஆசிரியன் வந்தான், பேரூர் கிழான் உண்டான், செயிற்றியன் சென்றான் என வேறு வேறு தொழில் கிளந்தவழி, வந்தானும் உண்டானும் சென்றானும் ஒருவனாகாது வேறாய்த் தோன்றியவாறு கண்டு கொள்க.

'எந்தை வருக எம்பெருமான் வருக மைந்தன் வருக மணாளன் வருக' என்புழிக் காதல் முதலாயின பற்றி ஒரு தொழில் பலகால் வந்தமை யல்லாது வேற்றுத் தொழிலன் மையான், ஒரு பொருள் கிளத்தலேயாம் என்பது.

ஈண்டுத் தொழில் என்பது முடிக்குஞ் சொல்லை. ஆசிரியன் வந்தான் என்று ஒருகாற் கூறி இடையிட்டு, அவனையே பின் ஒருகாற், பேரூர் கிழான் சென்றான் என்று கூறியவழி ஒரு தொடரன்மையான் ஆண்டாராய்ச்சி யில்லையென்பது. அஃதேல் ஆசிரியன் வந்தான், பேரூர் கிழான் உண்டான், செயிற்றியன் சென்றான் என இடையீடின்றி நின்றனவும் ஒரு தொடரன்மையின் ஆராய்ச்சியின்றாம் பிறவெனின், அற்றன்று; உட்டொடர் பலவாயினும், அவற்றின் தொகுதியாய் அவன் தொழில் பலவும் கூறுதற் பொருண்மைத்தாகிய பெருந்தொடர் ஒன்றெனவே படும் என்பது.

ஆசிரியன் பேரூர்கிழான் செயிற்றியன் இளங்கண்ணன் சாத்தன் வந்து உண்டு சென்றான் என்னாது, ஆசிரியன் வந்தான், பேரூர் கிழான் உண்டான், செயிற்றியன் சென்றான் எனப் பெயர் தோறும் வேறு தொழில் கிளத்தல் மரபின்மையின் மரபு வழுக்காத்தவாறாயிற்று.

தெய்.

இதுவும் அது.

இ—ள்: ஒரு பொருள் குறித்த வேறு வேறாகிய பெயர்ச் சொல் தொழிலைப் பெயர் தோறும் வேறு வேறு கிளப்பின் ஒரு பொருளாகி ஒன்றும் இடம் இல, எ—று.

எனவே பல பெயர் அடுக்கி வரின் ஒருவினையான் முடித்தல் வேண்டும் என்றவாறாம்.

'ஆசிரியன் பேரூர்கிழான் செயிற்றியன் இளங்கண்ணன் சாத்தன் வந்தான்' எனவரும்.

ஆசிரியன் வந்தான், பேரூர்கிழான் வந்தான், செயிற்றியன் இளங்கண்ணன் சாத்தன் வந்தான் எனின், ஒரு பொருள் ஆதல் தோன்றாதாம். ''விளைந்து முதிர் கொற்றத்து விறலோன் வாழி கடற்கடம் பெறிந்த காவலன் வாழி, விடர்ச்சிலை பொறித்த பூந்தண் பொருநைப் பொறையன் வாழி, மாந்தரஞ்சேரல் மன்னவன் வாழி, கேள்' என்ற வழி ஒரு பொருள் குறித்த பெயர் தோறும் வினைவந்ததால் எனின், இச்சூத்திரத்தில் தொழில் வேறு கிளப்பின் என்பதற்கு *மொழிந்த பொருளோடு ஒன்ற வைத்தல் என்பதனான் வேறு வேறு வினை கிளப்பின் ஒன்றிடன் இல வெனப் பொருள் உரைக்கப் பெயர் தோறும் ஒரு வினைவரின் ஒன்றும் என்பது பெற்றாம். அதனானே இவ்வாறு வருவன அமைத்துக் கொள்க. விளைந்து முதிர் கொற்றத்து விறலோன் வாழ்க, கடற்கடம் பெறிந்த காவலன் கெடுக எனின் வழுவாம்.

நச்.

இஃது ஒரு பொருளை உணர்த்தும் பலபெயர் வழுக்காக்கின்றது.

இ--ள்: ஒரு பொருள் குறித்த வேறு பெயர்க்கிளவி—ஒரு பொருளை உணர்த்துதலைக் குறித்து வந்த பலபெயர்ச் சொற்கள், தொழில் வேறு கிளப்பின்—ஒரு தொழிலையே முடிபாகக் கூறாது பெயர்தோறும் வேறாகிய தொழில்களைக் கொடுத்து முடிப்பின், ஒன்று இடன் இல—ஒரு பொருளனவாய் ஒன்றுதல் இல, எ—று.

கிளவி கருவிக் கருத்தாவாய் நின்றது. ஆசிரியன் பேரூர் கிழான் செயிற்றியன் இளங்கண்ணன் சாத்தன் வந்தான் என்னாது, ஆசிரியன் வந்தான், பேரூர் கிழான் உண்டான்,

---

*இப்பகுதியை ஞாபகம் கூறல் என்பதால் கொள்வர் இளம்பூரணர்.

செயிற்றியன் சென்றான் என வேறு வேறு முடிக்கும் சொல் கொடுப்பின் ஒருவன் ஆகாது வேறு வேறு பொருளாம்.

எந்தை வருக எம்பெருமான் வருக என்றாற் போல்வன காதல் பற்றிப் பலகால் ஒரு தொழிலே வந்தனவாம்.

கல்.

என்-எனின், ஒரு பொருள் மேல் பலபெயர் வழூஉக் காத்தல் நுதலிற்று.

இ—ள்: ஒரு பொருளைக் கருதிய வேறு வேறாகிய பெயர்ச் சொற் பெயர்க்கு வரும் வினையை வேறுபடச் சொல்லின் ஒரு பொருட்குப் பொருந்தும் இடம் இல்லை; அதனான் வரும் பெயரையெல்லாம் சொல்லிப் பின் தொழில் சொல்லுக, எ-று.

உ-ம்: ஆசிரியன் பேரூர்கிழான் செயிற்றியன் இளங் கண்ணன் சாத்தன் வந்தான் எனவரும்.

இனி, இரட்டுற மொழிதல் என்னு ஞாபகத்தான் ஒரு பொருளைக் கருதிய வேறு வேறாகிய பெயர்ச்சொற்கள் வேற்றுப் [1]பொருளைப் பெயர் தோறும் சொல்லின் ஒரு பொருட்குப் பொருந்தும் இடம் இல என, வேறல்லாத ஒரு தொழிலைப் பெயர் தோறும் சொல்லின் ஒரு பொருட்குப் பொருந்தும் இடனுடையதூஉம் கொள்ளப்படும்.

*உ—ம்: ஆசிரியன் வந்தான் பேரூர்கிழான் வந்தான் செயிற்றியன் வந்தான், இளங்கண்ணன் வந்தான், சாத்தன் வந்தான் எனவரும்.

இதனாற் சொல்லியது ஒரு பொருள் மேல் வரும் பல பெயர்க்கண் மரபிலக்கணமும், மரபு வழுவமைதியும் கூறியவா

---

1. சு. வே: தொழிலை - (கழகப் பதிப்பு) இதுவே பொருந்தும்.

* இதனை எந்தை வருக எம்பெருமான் வருக என ஒரு வரையே தனித்தனிக் கூறியது போலக் கொள்ள வேண்டும்.

றாயிற்று. ஞாபகத்தான் கண்டது மரபு வழுவமைதி. அதனை வழூஉ என்றது என்னையெனின், ஒரு நிலைக்கண் அது தானே பலபொருள் மேலும் சேறலான் என்பது.**

ஒரு.

ஒரு பொருள் கருதி வந்த பல சொற்களுக்கு ஒரு தொழிலே முடிபாகக் கூறாது பெயர் தோறும் வேறு தொழில் கொடுப்பின் ஒரு பொருளவாய் ஒன்றுதல் இலவாம்.

உ-ம்: ஆசிரியன் பேரூர்கிழான் செயிற்றியன் இளங் கண்ணன் சாத்தன் வந்தான் என்று சொல்லுக. இனி, ஆசிரியன் வந்தான், பேரூர்க்கிழான் இருந்தான், செயிற்றியன் கிடந்தான், கண்ணன் போனான், சாத்தன் நின்றான் என்னற்க. அன்றியும் ஆசிரியன் வந்தான், பேரூர் கிழான் வந்தான் எனப் பெயர் தோறும் ஒருவினை கொடுப்பினும் வேறு வேறு பொருளாம். இனி இத்தன்மைய கொள்க: 'எந்தை வருக எம்மான் வருக மைந்தன் வருக மணாளன் வருக பைந்தொடிப் பணைத் தோட் கிழவன் வருக, எனக் காதல் பற்றிப் பலகால் ஒரு தொழில் வந்தன கொள்க.

அன்றியும் இனித் 'தொழில் வேறு கிளப்பின் ஒன்றிடன் இலவே' என்பதனால் வேறு தொழில் கொடாது ஒரு தொழிலே கொடுப்பின் ஒன்றிடனாம் எனப் பெயர்தோறும் ஒருவினை கொடுத்துத் துதியிடத்துச் சொல்லுக.

உ-ம்: தேமலர் அங்கட் டிருவே புகுதுக
மாமலர்க் கண்ணி மணாளன் புகுதுக
காமன் புகுதுக காளை புகுதுக
நாமவெழில் விஞ்சை நம்பி புகுதுக

என்பன கொள்க.

திணை வழுவமைதி

43. தன்மைச் சொல்லே அஃறிணைக் கிளவியென்று
எண்ணுவழி மருங்கின் விரவுதல் வரையார்.

**ஒரு நிலைக்கண் பல பொருள் மேலும் சேறலான் வழு; அதனை அமைக எனக் கோடலின் அமைதியாயிற்று எனக் கருத்துக் கொள்க.

ஆ. மொ.
இல.

When counting, the joining of the first personal pronoun with the neuter gender is not prohibited.

க சு.

When counting, it is not prohibited to join akrinai with the first personal pronoun.

பி இ. நு.

நேமி. சொ. 9.

எண்ணும் இருதிணையும் எய்தும் அஃறிணையா
எண்ணி வியங்கொள்க இருதிணையும்—எண்ணினால்
தன்மையாய் அஃறிணையும் சொன்னமொழி
தன்னினத்தை
உன்னி முடித்தலும் உண்டு.

முத்து ஒ 76.

உயர்திணைத் தன்மையும் அஃறிணைப் பெயரும்
தொகைவயின் விரவி வரப்பெறும் என்ப.

இளம்.

இச்-எனின், இது திணை வழுவாமை உணர்த்துதல் நுதலிற்று.

உரை: தன்மைச் சொல்லும், அஃறிணைச் சொல்லும் அவை எண்ணுமிடத்து விராஅய் வரப்பெறும் எனக் கொள்க, எ—று.

தன்மைச் சொல் எனவே உயர்திணைச்சொல் எனப் பெறும்.

வ-று: 'யானும் என் எஃகமும் சாறும்' எனவரும்.

*'மருங்கு' என்ற மிகையான், நீயும் நின் படைக்கலமும் சாலீர், அவனும் தன் படைக்கலமும் சாலும் எனவும் வருதல் கொள்க.

* தெய்வச் சிலையார் இதனை மறுப்பர்.

சேனா.

இ-ள்: தன்மைச் சொல்லும் அஃறிணைச் சொல்லும் எண்ணுதற்கண் விராய் வரப்பெறும், எ—று.

என் சொல்லியவாறோவெனின், உயர்திணைச் சொல்லும் அஃறிணைச் சொல்லும் எண்ணுதற்கண் விராய் வந்து உயர் திணை முடிபு கொள்ளினும் அஃறிணை முடிபு கொள்ளினும் வழுவாம் ஆகலின், 'மயங்கல் கூடா தம்மரபின' (சொல் 11) எனவே அவை விராய் எண்ணப்படாமையும் எய்தி நின்றது. தன்மைப் பன்மைச் சொல்லாய் அஃறிணைச் சொல்லும் முடியும் ஆகலான், தன்மைச் சொல்லும் அஃறிணைச் சொல்லும் விராய் வந்து உயர்திணை முடிபு கொள்ளினும் அமையும் எனத் திணைவழுக் காத்தவாறு.

உ-ம்: யானும் என் எஃகமும் சாறும் எனவரும்.

பன்மைத் தன்மை வினைகோடல் எற்றாற் பெறுதுமோ எனின், 'தன்மைச் சொல்லே, என்றதனானும்,

பன்மையுரைக்கும் தன்மைக் கிளவி
எண்ணியல் மருங்கின் திரிபவை யுளவே (சொல். 209) என்பதனானும் பெறுதும் என்பது.

அஃதேல் 'எண்ணியல் மருங்கிற் றிரிபவை யுளவே' என்பதனான் விராய் வந்து உயர்திணை முடிபு கோடலும் பெறப் படுதலின் இச்சூத்திரம் வேண்டா எனின், உய்த்துணர்த்திடர்ப் படுவது எடுத்தோத்தில் வழியென மறுக்க.

தெய்.

திணைவழு வமைத்தலை நுதலிற்று.

இ—ள்: தன்மைப் பெயர்ச் சொல்லும் அஃறிணைப் பெயர்ச் சொல்லும் எண்ணுமிடத்தில் விரவுதல் நீக்கார், எ—று.

உ-ம்: யானும் என் எஃகமும் சாறும், அவனுடைய யானைக்கும் சேனைக்கும் போர் எனவரும். நீயும் நின்படைக் கலமும் சாலீர், அவனும் அவன் படைக்கலமும் சாலும் என ஏனையிடத்தும் வருமால் எனின், முன்னிலை வினை இரு திணைக்கும் பொதுவாகலினானும், படர்க்கை வினைக்கண் செய்யும் என்னும் முற்றுச்சொல் இருதிணைக்கும் பொதுவாய் வருதலானும் அவை ஆண்டு அடங்கும் என்க.

நச்.

இஃது எண்ணின்கண் திணைவழு அமைக்கின்றது.

இ—ள் : தன்மைச் சொல்லே அஃறிணைக் கிளவி என்று— தன்மைச் சொல்லும் அஃறிணைச் சொல்லும் என்று கூறிய இரண்டும், எண்ணுவழி மருங்கின் விரவுதல் வரையார்— எண்ணும் இடமாகிய இடத்து விராய் வந்து தன்மைப் பன்மைச் சொல்லான் அஃறிணைச் சொல் முடி தலை நீக்கார் ஆசிரியர் எ—று.

மேல் ''பன்மையுரைக்கும் தன்மைக் கிளவி'' (வினை. 12) என்பதனானும் பன்மைத் தன்மை பெற்றாம்.

யானும் என் எஃகமும் சாறும், அவனுடைய யானைக்கும் சேனைக்கும் போர்—இஃது இருதிணையும் விராய் எண்ணி அஃறிணை யுயர்திணையோடு முடிந்தது.

கல்

என்—எனின், எண்ணின்கண் திணைவழு அமையுமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ—ள்: தன்மையாகிய சொல்லினையும் அஃறிணையாகிய சொல்லினையும் விரவி யெண்ணு [1]மிடமாகிய விடத்து உண்டாகிய திணைவிராய் வருதலை நீக்கார், கொள்வர் ஆசிரியர், எ—று.

என்று என்பது எண் அசை.

உ—ம்: யானும் என் எஃகமும் சாறும், அவனுடைய யானைக்கும் சேனைக்கும் போர் எனவரும்.

இதனுள் அவன் வந்தது என்றாற்போலும் திணை வழு வில்லை யெனின், அதுவேயல்ல; திணை வழூஉ எண்ணுமிடத்தும் இனம் ஒத்தனவே எண்ணுக என முன் சொல்லினமை யானும், திணை வழுவாவது பொருந்தாது விடுவது என்பதாகலானும், இதுவும் திணை வழூஉ எனப்படும். இவ்வாறு இடர்ப்படுகின்றது என்னை? இதனை மரபு வழுவமைதி என்று கூறுக எனின், வியங்கோள் எண்ணுப்பெயர் திணைவிரவு வரையார்' (கிளவி 45)

1. சு வே: எண்ணுமிடத்து

என ஆசிரியர் மேற் கூறுகின்றமையின் இதற்கும் அதுவே கருத்து என்பது பெறுதும்.

இனிச் சொல்லொடு சொல் முடித்தலே திணை வழு வெனினும் 'சாறும் என்னும்' உயர்திணை முற்றுச் சொல்லை 'எஃகம்' என்னும் அஃறிணை வினையும் உளப்படுத்தமையின் வழுவும் இதன் கண் உண்டென வுணர்வது.

'மருங்கின்' என்ற மிகையான் முன்னிலையோடு அஃறிணை யெண்ணுதலும், படர்க்கையோடு அஃறிணை எண்ணுதலும் கொள்க.

உ-ம்: நீயும் நின் படைக்கலமும் சாலீர்; அவனும் தன் படைக்கலமும் சாலும் எனவரும்.

இவற்றுள் எண்ணு வழு வல்லது முடிபு வழு வில்லை. இதனாற் சொல்லியது எண்ணுப் பொருட்கண் திணைபற்றிப் பிறக்கும் மரபு வழுவமைதி யென உணர்க. சிறுபான்மை திணை வழுஉ வமைதியும் எனவுணர்க.

ஒரு.

என்பது தன்மைச் சொல்லும் அஃறிணைச் சொல்லும் அவை எண்ணுமிடத்து விராய் வருதலை நீக்கார்.

உ-ம்: யானும் என் எஃகமும் சாறும், அவனுடைய யானைக்கும் சேனைக்கும் போர் என வரும். இது இருதிணையும் விராய் எண்ணி அஃறிணையுயர்திணையோடு முடிந்தது. எண்ணு வழி மருங்கென்றதனால் நீயும் நின் படைக்கலமும் சாலீர், அவனுந் தன்களிறும் சாலும் என முன்னிலையினும் படர்க் கையினும் கொள்க.

ஆதி.

தன்மையிடத்துப் பெயரும் அஃறிணைப பெயரும் சேர்ந்து வினைகொள்ளலாம் என்பது கருத்து. யானும்மாடும் வயலுக்குப் போகிறோம், நாங்களும் ஏர்மாடுகளும் முதலிற் போகிறோம். இவ்வாக்கிய முறை ஓரளவு ஏற்புடைத்து என்றறிவிக்க விரவுதல் ஆகும் என்று கூறாமல் 'வரையார்' என்றார்.

எண்ணுவழி-அஃதும் இஃதும் என எண்ணுதல். நீயும் மாடு களும் செல்லுங்கள், அவர்களும் குதிரைகளும் நாளை வருவார் கள் என முன்னிலை படர்க்கை இடங்களில் அஃறிணைப் பெயரைச் சேர்த்துச் சொல்லுதல் முறையன்று.

சுப்பிர.

இச்சூத்திரத்திற்கு நால்வரும் (இளம். தெய். சேனா. நச்.) காட்டிய உதாரணம் 'யானும் என் எஃகமும் சாறும்' என்பதே யாயினும், பொருளில் உரையாசிரியர் தெயவச் சிலையார் இவ்விருவர் கொள்கைக்கு ஏனையோர் கொள்கை மாறுபட்டது. உரையாசிரியர் தெய்வச் சிலையார் இவ்விருவரும் தன்மைப் பெயர்ச் சொல்லும அஃறிணைப் பெயர்ச் சொல்லும் உம்மை முதலியவற்றால் எண்ணப்படினும் வழுவன்று என்று கொள்ளு கின்றனர். பொதுவாய் ஓர் இனமாகிய பொருள்களை எண்ணுவதே வழக்கு. ஆதலால் இவ்வாறு தன்மைப் பெயரையும் உடன் எண்ணுவது வழுவன்றுஎன்று கூறவேண்டும். அது வேறு சூத்திரத்தால் கூறப்படாமையானும், அவை தன்மைப் பன்மை வினை கொள்ளும் என்பது 'பன்மையுரைக்கும் தன்மைக்கிளவி' என்ற சூத்திரத்தால் பெறப்பட்டமையானும், ஆங்குக் கூறப்பட்டது வழுவன்றென்று இக்சூத்திரம் உணர்த்து கின்றது எனச் சேனாவரையர் கூறுவது பொருந்தாது. சேனா வரையருக்கு இவ்வாறு கருத்தென்பது 'வியங்கோள் எண்ணுப் பெயர்' (சொல் 45) என்ற சூத்திரத்தினடியில் அவர் எழுதிய உரையால் நன்கு விளங்கும். ஆகவே, உரையாசிரியர் தெய்வச் சிலையார் இவ்விருவர் கூறும் பொருளே பொருத்தமானது.

சிவ.

பலவயி னானும் எண்ணுத்திணை விரவுப்பெயர்
அஃறிணை முடிபின செய்யு ளுள்ளே (51)

என்னும் சூத்திரம் உயர்திணைப் பெயரும் அஃறிணைப் பெயரும் எண்ணப்படின், முடிக்கும் வினை அஃறிணை வினை யாகும் என்கிறது. இவ்விதி செய்யுளுக்குரியது. (சிறுபான்மை உயர்திணை வினையும் கொண்டு முடிக்கப்படும்.)

அச்சூத்திரத்தில் கூறப்பட்ட உயர்திணைப் பெயர் என்பது படர்க்கைப் பெயராம்.

தன்மையாகிய உயர்திணைப் பெயரும் அஃறிணைப் பெயரும் எண்ணப்படலாம்; நீக்க வேண்டுவதில்லை என்று கூறுவது இச்சூத்திரம். மேலும் முடிக்கப்படும் சொல் உயர் திணைச் சொல். அதனால் தனிச் சூத்திரம் கூறப்பட்டது.

இளம்பூரணர், தெய்வச்சிலையார் கல்லாடனார், ஒருவர் ஆகியோர் இச்சூத்திரம் தன்மைப் பெயரும் அஃறிணைப்

பெயரும் விரவிவரலாம் என்பது கூறுவதாகக் கொண்டனர். இவர்கள் கருத்து விரவுதல் பற்றியது.

சேனாவரையரும் நச்சினார்க்கினியரும் இச்சூத்திரம் தன்மைச் சொல்லும் அஃறிணைக்கிளவியும் விரவிவரின் எச்சொல்லால் முடியும் என்பது கூறுவது என்னுங்கருத்தினர்.

சூத்திரப் போக்கு முடிக்கும் சொல்லைப் பற்றியதாக இல்லாமல் விரவுதல் பற்றியிருத்தலின் முன்னவர் கொள்கையே ஏற்புடையதாம்.

முடிக்கப்படும் சொல் தன்மைப் பன்மையாகத்தான் இருக்க வேண்டும் என்பதற்குச் சேனாவரையர் கூறும் காரணங்கள் இரண்டினுள் முன்னதாகிய 'தன்மைச்சொல்லே என்றதனானும்' என்பது பொருந்துவதன்று. தன்மைச் சொல்லும் அஃறிணைக் கிளவியும் என எண்ணுதல் பற்றிக் கூறவந்த ஆசிரியர் தன்மைச் சொல்லே என்னாமல் வேறு எவ்வாறு கூறுவர்? தன்மைச் சொல் என்றதனால் தன்மைப் பன்மை எனக் கொள்ளலாம் எனின் அஃறிணைக்கிளவி என்றதனால் அஃறிணைப் பன்மையும் கொள்ளலாமே? தன்மைச் சொல் (பெயர்) எண்ணப்படின் எண்ணுதலும் வினை முடிபு செய்தலும் தன்மையான் செயலே யாகும். அவன் தன் செயலால் கூறும்போது தன் வினையாலேயே கூறுவான். எண்ணிக் கூறுதலான் உளப்படுத்திக் கூறுவான்; எனவே தன்மைப் பன்மை வினையாலேயே முடிப்பான். 'பன்மை யுரைக்கும் தன்மைக் கிளவி' என்னும் சூத்திரமும் தன்மைப் பன்மையே முடிக்க வேண்டும் என்பதற்குத் துணைபுரியும்.

ஒருவன் ஒருத்தி பற்றிய மரபு.

44. ஒருமை யெண்ணின் பொதுப்பிரி பாற்சொல்
ஒருமைக் கல்லது எண்ணுமுறை நில்லாது.

ஆ. மொ.

இல.

The gender - denoting words of singular
number (oruvan and oruthi) will not
stand in the order of counting

க். சு.

The words which mean respeetive by one man and one woman and have eaeh a gender - number suffix will not be used in eounting.

பி. இ. நூ.

நேமி. 12—1

பொதுப் பிரி பால் எண் ஒருமைக் கண்ணன்றிப் போகா.

முத்து. ஒ. 76

ஒருமை யெண் ஒருமைக்கண் அல்லது இயலா.

இளம்.

இச்—எனின், வழுக்காத்தல் நுதலிற்று.

[1]உரை : ஒருமை எண்ணின் பொதுப் பிரிபாற் சொல் என்பது—ஓர் எண்ணாய் இரண்டு பாற்கும் பொதுவாய் ஒருவன் ஒருத்தி எனப்பிரிந்து நின்று பால் வேறுபடுவதாயிற்று; அஃது யாதோவெனின், ஒருவர் என்பது. அஃது இருபாற்கும் பொதுவாய் நிற்பினும், ஒருவர் இருவர் என்று எண்ணும் பொழுதாயின்' ஒருபாற்கேயுரித்தாம் என்பது.

[2]அப்பொதுமையிற் பிரிந்த பாற்சொல் ஒருவன் ஒருத்தி என்பன. அவை தத்தம் ஒருமை விளங்கி நிற்கும் துணையல்லது அப்பால்மேல் எண்ணு முறையோடா என்பது.

---

1 பொதுப்பிரிபாற்சொல் = பொதுமையினின்றும் பிரிதற்குக் காரணமாக இருக்கும் பாற்சொல். அது ஒருவர் என்னும் பலர்பாற் சொல். இதனிலிருந்து ஒருவன் ஒருத்தி என்னும் பாற்சொற்கள் பிரியும். அதனால் ஒருவர் என்பது பொதுப்பிரி பாற்சொல்லாம். இது ஒருவர் இருவர் என எண்ணுகின்றபோது ஆண் பாலுக்கோ அன்றிப் பெண்பாலுக்கோ ஒரு பாலுக்கே எண்ணப்படும். ஆண் பெண் இருபாலையும் சேராது. இதுவே உரையின் விளக்கம்.

2 பொதுப்பிரிபாற்சொல்: பொதுமைச் சொல்லிலிருந்தும் பிரிந்தபாற் சொற்கள்; அவை ஒருவன் ஒருத்தி என்பன. பொதுமைச்சொல் ஒருவர் என்பது. அச்சொற்கள் எண்ணும்போது ஒருவன் என்பது இருவன் மூவன்

[3]இனி, எண்ணுதலைக் களைந்து ஒருவர் என்றக்கால் இருபாலையும் தழீஇ நிற்கும்; இதுவும் ஒருசார் ஆசிரியர் உரைப்ப.

[4]இனி ஒருமை எண்ணின் பொது என்பஒருசார் என்பது.

சேனா

இ—ள் : ஒருமை யெண்ணினை யுணர்த்தும் பொதுப் பிரிபாற் சொல்லாகிய ஒருவன் ஒருத்தி என்னும் சொற்கள், ஒருமைக்கண் அல்லது இருமை முதலாகிய எண்ணுமுறைக் கண் நில்லா, எ—று.

எனவே பொதுப்பிரிபாற் சொல்லாகிய ஒருவர் என்னும் சொல் இருவர் மூவர் என எண்ணுமுறைக்கண்ணும் நிற்கும் என்பதாம்.

[1]பொதுப்பிரிபாற் சொல் என்றாரேனும், ஒருவன் ஒருத்தி என்பவற்றது பால் உணர்த்தும் ஈறே கொள்ளப்படும். என்னை? எண்ணுமுறை நில்லாவென்று விலக்கப்படுவன அவையே யாகலின் என்பது.

என்றும், ஒருத்தி என்பது. இருத்தி முத்தி என்றும் எண்ணப்படுதல் இல்லை — இது ஓர் உரை. இவ்விரண்டாம் உரையையே பிற உரையாசிரியர் யாவரும் கொண்டனர்.

4. இவ்விருசார் கருத்துகளும், இச்சூத்திரத்தோடு அவை பொருந்துமாறும் விளங்கவில்லை.

1. பாலுணர்த்தும் ஈறு. ன், இ என்பன. பாலுணர்த்தும் ஈறு பொருள் இடம் காலம் முதலியவற்றின் அடிப்படையாக வரும் சொற்களின் இறுதியில் வரும். பொன்னன், மலையன், ஆதிரையான் முதலியவாகக் காண்க. அவ்வாறே ஒன்று இரண்டு என எண்ணின் அடிப்படையில் வரும் சொற்களிலும் ஆண்பாலுணர்த்தும் ன் வருமோ எனின் ஒன்று என்னும் எண்ணில் மட்டும் ஒருவன் என வரும். இரண்டு மூன்று முதலியவற்றுக்கு இருவன் மூவன் என வருதலில்லை. (இப்படியே இகர ஈற்றுக்கும் கொள்க) எனவே விலக்கப்படுவன னகர இகர ஈறுகளே.

[2]மகன், மகள் என்னுந் தொடக்கத்துப் பெயர்ப் பொதுப் பிரிபாற் சொல்லின் நீக்குதற்கு ஒருமையெண்ணின் என்றும், ஒருவர் ஒன்று என்பனவற்றின் நீக்குதற்குப் பொதுப்பிரிபாற் சொல் என்றும் கூறினார்.

[3]ஒருவர் என்னும் ஆண்மைப் பெண்மைப் பொதுவிற் பிரிதலிற் பொதுப் பிரிபாற் சொல் என்றார்.

[4]பொதுப்பிரிபாற் சொல் என்னும் ஒற்றுமையான் நில்லாதென ஒருமையாற் கூறினார்.

ஒருவன் ஒருத்தியென ஒருமைக்கண் நிற்றலும், இருவன் மூவன் இருத்தி முத்தி என எண்ணு முறைமைக்கண் நில்லாமையும் கண்டு கொள்க.

ஒன்றென முடித்தல் என்பதனான் ஒருவேன், ஒருவை யென்னும் தன்மை முன்னிலையீறும் எண்ணுமுறை நில்லாமை கொள்க. இதுபால் வழுக்காத்தவாறு.

தெய்.

உயர்திணைப் பொருள்மேல் எண்ணுமுறை நிகழுமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ—ள்: ஒருமை யெண்ணின் பொதுமையாகிய ஒருவர் என்னும் சொல்லினின்றும் பிரிந்த ஒருவன், ஒருத்தி என்னும் சொல், அவ்வொருமைக் கல்லது எண்ணுமுறைக்கண் ஓடாது, எ—று.

---

2. பொதுப்பிரி பாற்சொல் என்றவுடன் மக அல்லது மக்கள் என்னும் பொதுச் சொல்லிலிருந்து பிரியும் மகன், மகள் என்பனவற்றைக் கொள்ள நேரும். அதை விலக்க ஒருமை எண் என்பது கூறப்பட்டது. ஒருமை எண்ணின் சொல் என்றால் ஒருவர் ஒன்று என்பனவும் ஒருமைச் சொற்களாதலின் அவற்றைக் கொள்ள நேரும். அவற்றை நீக்கப் பொதுப்பிரிபாற் சொல் என்பது கூறப்பட்டது.

3. பிரிவன ஒருவன் ஒருத்தி என்பன.

4. பொதுப் பிரிபாற் சொற்கள் ஒருவன் ஒருத்தி என இரண்டுள. அதனால் 'நில்லா' எனப் பன்மையிற் கூற வேண்டும். அவ்விரண்டையும் பொதுப் பிரிபாற் சொல் என ஒருமையில் கூறியதனால் நில்லாது என ஒருமை முடிவு கொடுத்துக் கூறினார்.

எனவே எண்ணுமுறைக்கண் ஆண்பாலாயினும் பெண் பாலாயினும் ஒருவர் இருவர் மூவர் என எண்ணினல்லது பால் தோன்ற எண்ணப்படாது, என்றவாறாம்.

நச்.

இஃது எண்ணு வகையால் கூறும் ஒருவகைச் சொல் நிகழ்ச்சி கூறுகின்றது.

இ—ள்: ஒருமை எண்ணின் பொதுப் பிரி பாற்சொல்—ஒருமை எண்ணினை உணர்த்தும் சொல்லாகிய ஒருவர் என்னும் பொது மையினின்றும் பிரிந்த பால் உணர்த்தும் ஒருவன் ஒருத்தி என்னும் சொல், ஒருமைக்கு அல்லது எண்ணு முறை நில்லாது— ஒருமைக்கண் அல்லது இருமை முதலிய எண்ணு முறைக்கண் நில்லாது, எ—று.

[1]எனவே பொதுப் பிரியாப் பாற் சொல்லாகிய 'ஒருவர்' என்னும் சொல், இருவர் மூவர் என எண்ணு முறைமைக்கண் நிற்பதாயிற்று இருவன் மூவன் எனவும், இருத்தி முத்தி எனவும் னகர வீறும் இகர வீறும் இயைபு இன்மையானும், ரகர வீறு இயைபு உண்மையானும் இங்ஙனம் கூறினார்.

ஒன்றென முடித்தல் என்பதனால், ஒருவேன், ஒருவை என்னும் தன்மை முன்னிலை யீறும் எண்ணுமுறை நில்லாமை கொள்க.

கல்.

என்—எனின், எண்ணும் வகையாற் சொல்லும் ஒருவகைச் சொல் நிகழ்ச்சி உணர்த்துதல் நுதலிற்று.

பொருள் : ஒருமைப் பொருட்குரிய எண்ணாய் உயர்திணை யிருபாற்கும் பொதுவாகிய ஒருவர் என்னும் சொல்லினின்றும் பொதுமை கெடப் பிரித்துணரப்படும் ஒருவன் என்னும் சொல்

---

1. ஒருவர் என்பதில் ரகர வீறு பலர்பாலுக்குரியதாதலின் இருவர் மூவர் எனப் பலர்பாலுக்கு வருவதாயிற்று. னகர ஈறும் இகர வீறும் ஒருமைக்கே வருதலின் இரண்டு முதலிய பன்மை எண்களோடு சேர்ந்து இருவன் இருத்தி முதலியவாக வருதல் இல்லை.
கல்லாடனார் விளக்கமும் பார்க்க.

லாயினும் ஒருத்தி யென்னும் சொல்லாயினும் எண்ணாத பொழுது தன் ஒருமை விளங்குந்துணையல்லது எண்ணு முறைக் கண் முதல் எண்ணுங்காலும் அவ்வாறே யெண்ணுக.

உ-ம். ஆண் மக்கள் பலர் நின்றாரை எண்ணுங்காலும் ஒருவர் இருவர் நால்வர் என்று எண்ணுக; பெண்டிர் பலரை எண்ணுங்காலும் அவ்வாறே எண்ணுக.

ஒருவன் என்பதும் ஒருத்தி என்பதும் ஒருமை யெண்ணே: எண்ணு முறைமைக் கண்ணும் ஆகாமை யென்னை யெனின், பொருளான் ஆகாமையில்லை. ஒருவன் என்பதற்குகேற்ப மேலும் இருவன் மூவன் என னகர வீற்றியைபு இன்மையானும், ஒருத்தி என்பதற்கேற்ப இருத்தி முத்தி என இகர வீற்றியைபு இன்மையானும்,மேல் வருகின்ற ரகர வீற்றோடு ஒருவர் என்பது சொல்லியைபுடைமையின் அதுவே கொள்ளப்பட்டது. இதனாற் சொல்லியது எண்ணின்சட் பிறக்கும் மரபிலக்கணம் என வுணர்க.

ஒரு.

என்பது, ஒருமை எண்ணினை யுணர்த்தும் 'ஒருவர்' என்னும் பொதுமையினின்றும் பிரிந்து பால் உணர்த்தும் சொல்லாகிய ஒருவன் ஒருத்தி என்னும் சொல் ஒருமைக் கல்லது இருமை முதலிய எண்களின் ஓடாது. பொதுவாவது ஒருவர்; அது இருபாற்கும் பொது. அது பிரியாக்கால் ஒருவர் இருவர் மூவர் நால்வர் என எவ்வளவும் எண் ஓடுமாறு காண்க. அப்பொதுப் பிரிந்து ஒருவன் என நிற்பின் இருவன் மூவன் என ஆகாது. ஒருத்தி என நிற்பின் இருத்தி முத்தியெனவும் ஆகாது. இவ்வாறு கூறியது னகர வீறும் இகர வீறும் எண்ணுதற்கியை பின்மை யானும் ரகர வீறு இயைபுடைமையானும் என்க.

வெள்ளை.

ஒருமை யெண்ணினை யுணர்த்தும் பொது என்றது, உயர் திணைக்கண் ஆண் ஒருமையினையும் பெண் ஒருமையினையும் உணர்த்துவதாய், அவ்விருபாற்கும் பொதுவாய் நின்ற ஒருவர் என்னும் சொல்லின் அர் விகுதி.

பொதுப் பிரிபாற் சொல் என்றது ஒருவர் எனப் பலர்பாற் குரிய 'அர்' ஈற்றதாய் நின்ற அப்பொதுமையினின்றும் பிரிந்து

ஒருவன் என ஆண் பாலையும், ஒருத்தி எனப் பெண் பாலையும் சுட்டி நிற்கும் அன் விகுதியினையும் இகர விகுதியினையும். பொதுப் பிரி பாற் சொல்லாகிய இவற்றின் பாலுணர்த்தும் ஈறுகள் ஒருமைக்கண் அல்லது இருமை முதலிய எண்ணுமுறைக் கண் நில்லா எனவே, பொதுப் பிரியாப் பாற் சொல்லாகிய ஒருவர் என்பதன் பாலுணர்த்தும் ஈறாகிய அர் விகுதி இருவர் மூவர் என எண்ணு முறைக்கண் நிற்கும் என்பதாம்.

சுப்பிர.

உரையாசிரியர் தெய்வச்சிலையார் இருவர் கொள்கையும் ஒன்றே. அதுவே பொருத்தமானது. ஏன் எனின், இச்சூத்திரத் திற்கு முற்சூத்திரமும் பிற்சூத்திரமும் எண்ணும் போதுள்ள சொல் நிகழ்ச்சியைப் பற்றிக் கூறுவதால் இதுவும் அதனையே கூற வேண்டும். ஓர் ஆணைக்குறிக்க வழங்கும் ஒருவன் என்ற சொல் லும் ஒரு பெண்ணைக் குறிக்க வழங்கும் ஒருத்தி என்ற சொல் லும் எண்ணும் போது ஒருவன் இருவர் மூவர், ஒருத்தி இருவர் மூவர் என்று வர இடனுண்டாக, அதனை விலக்கி, ஒருவர் இருவர் மூவர் என்றே வரவேண்டும் என்று இச்சூத்திரம் விதிப்ப தாகும்.

சேனாவரையர் நச்சினார்க்கினியர் கொள்கையில் இரண்டு குற்றங்கள் உள:— இருவன் இருத்தி என்னுமிடத்துப் பகுதியே பன்மைப் பொருளை உணர்த்துவதால், ஆண் பெண் ஒருமை விகுதிகளாகிய ன், இ இவ்விரண்டும் அங்குவர இடனின்று. இடனிருப்பின் அன்றோ அதனை விலக்கவேண்டும்? மேலும் பொதுப் பிரிபாற் சொல் என்பதனால் 'ஒருவன் ஒருத்தி யென் பன வற்றின் பாலுணர்த்தும் ஈறே' எனக் கொள்ள வேண்டி யுளது.*

சிவ.

பொதுப்பிரிபாற் சொல் என்பதற்கு உரையாசிரியர்களின் கருத்துகளைக் கீழ் வருமாறு வகைப்படுத்தலாம்.

(1) பொதுத்தன்மையினின்றும் பிரிக்கப்படற்குக் காரண மாக அமையும் ஒருவர் என்பது.

---

* சொல் முழுமையும் கொள்ளவேண்டும் என்பது இவர் கருத்து போலும்.

(2) ஒருவர் என்னும் பொதுச் சொல்லிலிருந்து பிரியும் பாற்சொல்; அது இருவகை. ஒருவன், ஒருத்தி என்பன.

இவ்விரண்டனுள் முன்னதற்கு இளம்பூரணர் ஒருவரால் மற்றையோர் கொள்ளாத கருத்துக் கூறப்படுகின்றது. அதாவது, ஒருவர் இருவர் என்று எண்ணும் போது ஒருவர் என்பது ஒருவனையோ அன்றி ஒருத்தியையோ எண்ணுதற்குக் குறிக்குமேயன்றித் (தான் இருபாற்கும் பொதுவாயினும்) ஒருவனையும் ஒருத்தியையும் சேர்த்து எண்ணு முறையில் குறியாது.

பின்னதன் கருத்து, ஒருவன் ஒருத்தி என்பன இருவன் இருத்தி என எண்ணுமுறைக்கண் வாரா என்பதாகும். இவ்விடத்தில் ஒருவன் ஒருத்தி என்னும் சொற்களையே கொள்பவரும் அச்சொற்களின் இறுதி னகர இகர எழுத்துகளைக் கொள்பவரும் என இருபிரிவினர் உளர். எனினும் இவர் யாவரும் உதாரணத்திலும் கருத்திலும் ஒத்தவராவர்.

இனி மூன்றாவதும் ஓர் கருத்துக் கூறப்பட்டதும் காணலாம்

(3) "பொதுப்பிரியாற் சொல் — ஒருவன் ஒருத்தி என்பதை உயர்வின் ஒருவர் என்று கூறும் சொல்."

இக்கருத்தைக் கூறியவர் இளவழகனார்.* அவர் இச்சூத்திரத்துக்குக் கூறும் பொருளாவது.

"இங்கே ஒருவர் என்பது இருவர் மூவர் என்பதுபோல எண்ணும் வகையிற் பொதுவாய் நின்றதன்று. அப்பொதுமையிலிருந்து பிரிந்து ஆண் அல்லது பெண் என்று பால் உணர்த்தி உயர்வில் வந்ததாதலின், பொதுப்பிரிபாற்சொல் எனப்பட்டது. ஒருமைக்கு இங்ஙனம் வருமல்லது இருவர் மூவர் முதலியவாக எண்ணுமுறைக்கண் இவ்வுயர்வுச் சொல் நில்லாதென்க"

இளவழகனாரின் கருத்து விளக்கம் வருமாறு:—

ஒருவர் என்னும் சொல் இருவகையில் ஆளப்படுகிறது. எண்ணுகிறபோது ஒருவர் இருவர் மூவர் என அது ஆளப்படுவது ஒருவகை. ஒருவனையோ ஒருத்தியையோ உயர்வுகுறித்து ஒருவர்

* தொல்காப்பிய மூலம் விளக்கக் குறிப்புகளுடன் — சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழக வெளியீடு 344 (1967)

என ஆளப்படுவது மற்றொருவகை இவ்விருவகையில் பொதுப்பிரிபாற்சொல்லாக இரண்டாவது வகையைக் கொள்ளவேண்டும். எப்பொதுவினின்றும் பிரிந்தது என்றால், முதல்வகையில் எண்ணும்போது உள்ள பொதுவிலிருந்து பிரிந்தது. எண்ணும் போதுள்ள பொது என்பது இருவர் மூவர் போலத்தானும் ஒருமையையுணர்த்தி நிற்கும் எண்நிலை. எண்ணும்போது ஒருவன் இருவர் மூவர் என்றோ ஒருத்தி இருவர் மூவர் என்றோ எண்ணுவதில்லை. பின்வரும் பன்மைகளுக்கேற்பப் பன்மை வாய்ப்பாட்டால் அமைந்த ஒருவர் என்பதை வைத்தே ஒருவர் இருவர் மூவர் என எண்ணுவர். இங்கு ஒருவர் என்பது எண்ணுநிலையில் சிறப்பில்லாமல் மற்றை எண்கள் பன்மையில் அமையத்தான் (ஒன்று என்ற பொருளில்) ஒருவர் என நின்றது; அவ்வளவே. இப்பொது நிலையிலிருந்து பிரிந்தது என்பது அவ்வெண்ணுநிலை நீங்கி ஒருவனையோ ஒருத்தியையோ உயர்த்த வருதலாம்.

உயர்வு குறித்துவரும் இவ்வொருவர் என்பது ஒருவனையோ ஒருத்தியையோ உயர்வு குறித்து வழங்க வருவதோடு நிற்கும். இருவர் மூவர் என எண்ணத் தொடங்கும்போது உயர்வுப் பொருளில் முதலில் ஒருவர் என்பது எண்ணுமுறையில் வராது. இதுவே விளக்கமாகும். இவ்விளக்கத்துக்கேற்ப நூற்பாவின் பதவுரை வருமாறு:—

''எண்ணின் பொதுப்பிரி=ஒருவர் இருவர் மூவர் என எண்ணின் கண் நிற்கும் பொதுத்தன்மையினின்றும் பிரிந்த

ஒருமைப்பாற்சொல்—ஒருவன் ஒருத்தியை உயர்வாகக் குறிக்கும் ஒருவர் என்னும் சொல்,

ஒருமைக்கு அல்லது— அவ்வொருவன் ஒருத்தி என்னும் ஒருமைப்பாலுக்கு உயர்த்த வருவதல்லது

எண்ணுமுறை நில்லாது— அவ்வுயர்த்தற் பொருளிலேயே ஒருவர் இருவர் மூவர் என எண்ணும்முறையில் நில்லாது.''

மேலே காட்டிய மூன்று வகையான பொருள்களுள் ஒன்றைச் சூத்திரம் நுதலிய பொருளாகவும் மற்றவற்றினை ஒன்றின முடித்தல் ஒன்றென முடித்தல் என்னும் உத்திகளால் பெறுவனவாகவும் கொள்ளுதல் வேண்டும். எவ்வாறு?

(1) பொதுப் பிரிபாற் சொல்லாகிய ஒருவர் என்பது எண்ணும், போது ஒருவர் இருவர் மூவர் எனவந்தாலும், ஒருவன் ஒருத்தி

என்னும் இருபாலார்க்கும் எண்ணப்படாது (அதாவது ஒருவர் என்பது இருபாலையும் குறிக்க வாராது) இக்கருத்து ஏற்பதற்கில்லை. ஏன்எனின் எண்ணுகின்றவர் ஒருவர் என்று தொடங்கும் போது ஒருவனையோ ஒருத்தியையோதான் கருதித் தொடங்குவார். இருவரையும் கருதுதல் இல்லை. ஒருவர் என்பது ஒருமைக்குரியதாதலின் இருவரையும் சேர்த்து எண்ணுதற்குவரும் என்பதுகருதுதற்கில்லை. அதனால் இச்சூத்திரம் பொதுப்பிரிபாற் சொல்லாக 'ஒருவர்' என்பதை நுதலி வந்ததாகாது.

(2) பொதுப் பிரிபாற் சொற்களாகிய ஒருவன் ஒருத்தி என்பன இருவன் இருத்தி முதலியவாக மேலே எண்ணும் முறையில் நடவா என்னும் கருத்தைப் பார்ப்போம் இக்கருத்தை ஏற்றதால் நன்னூலார், "ஒருவன் ஒருத்தி பெயர் மேல் எண்ணில" என்றார்.

ஒருவன் என்பது னகரவீற்றின் காரணமாக, எண்ணின் அடிப்படையில் வந்த உயர்திணை ஆண்பாற் சொல். னகர ஈறு ஒருமைக்குரியது. இதுவே பன்மையில் வரும்போது னகர ஈறு நீங்கி ரகரவீறு சேர்ந்து ஒருவர் எனவரும். (இவ்வாறே எங்கும் ஒருத்தியும் கொள்க) இப்பன்மை உயர்த்தற் காரணத்தான் வருவது. ஈற்றுனகரம் ஒருமைக்குரியது என்பது பெயரியலில் (12) வரையறுக்கப் பட்டது ஈற்று ரகரம் பன்மைக் குரியது என்பதும் அங்கு வரையறுக்கப்பட்டது. அதனால் எண்ணும் போது ஒருமை எண்ணைத் தவிரப் பன்மை எண்ணைக் கூறும் போது ரகர ஈறாகவே கூறவேண்டும் என்பது பெறப்படும். அதனால் இரண்டு ஆடவரைக் குறிக்க நேரின் ஆடவர் என்பதற்காக னகர ஈறுகொடுத்து இருவன் என்பது தவறு; வழக்கிலும் அவ்வாறு வருவதில்லை வாராத ஒன்றை இருவன் என எண்ணக் கூடாது என்று விதிப்பது தேவையற்றதாகும். வாராததை வரக்கூடாது என்பானேன்? அன்றியும் இருவன் என்பதில் பகுதியே (இரு) பன்மையையுணர்த்துதலின் அதற்கேற்ப ரகர வீறே வருவதல்லது னகர வீறு வருவதும் இல்லை.

எனவே இச்சூத்திரம் நுதலிய பொதுப்பிரி பாற்சொல் ஒருவன் ஒருத்தி என்பன ஆகா என்னலாம்.

(3) இனி மூன்றாவதான், 'உயர்த்தற் பொருளில் வரும் ஒருவர் என்பது, ஒருவனையோ ஒருத்தியையோ உயர்த்தற்கு வருமேயன்றிப் பலரை உயர்த்தற்கண் ஒருவர் இருவர் மூவர் என எண்ணு முறையில் வாராது' என்னும் கருத்தைக் காணலாம்.

ஒருவர் என்பது ஒருவர் இருவர் மூவர் என எண்ணு முறையில் நிற்பின் எண்ணைக் குறிப்பது பொதுநிலை; அதிலிருந்து உயர்த்தற் பொருளில் வரும் ஒருவர் என்பது பிரிகிறது என்பது பொருந்துவதுபோல் தோன்றினும் இரண்டி லும் ஒருமை (ஒன்று) எண்ணேயிருத்தலின் எண்ணின் அடிப் படையிலேயே சூத்திரத்துப் பொருளைக்காணுதல் வேண்டுமாத லின் அக்கருத்து ஏற்பதற்கில்லை ஏன்எனின், உயர்த்தற் பொருளிலேயே ஒருவர் இருவர் மூவர் என எண்ணும் வழக்கில்லை. உயர்ந்தார் பலரை எண்ணும்போது ஒருவர் இருவர் மூவர் என எண்ணுவதில் தவறில்லை. ஒருவர் என்பது உயர்த்தற் பொருளில் இருப்பதால், ஒருவர் இருவர் மூவர் என எண்ணும்போது, ஒருவர் என்பது உயர்ந்தோரையும் மற்றைய இரண்டும் பொதுவாகப் பிறரையும் உணர்த்தும் என்று யாரும் கொள்ளமாட்டார்.

எனவே இச்சூத்திரத்துக்கு நுதலிய பொருளாக மூன்றாவது கருத்தும் பொருந்தாது.

இனி இம்மூன்றும் மறுக்கப்படுமானால் ஏதேனும் ஒன்றைக் கொண்டாக வேண்டும் என்ற கட்டாயத்துக்குவர வேண்டியுளது. ஏன்எனின், இம்மூன்றுக்கு மேற்பட்ட கருத்து இல்லையாகலின். மூன்றனுள் இரண்டாவது கருத்தை சூச்சூத்திர நுதல் பொருளாகக் கொள்ளலாம்.

ஒருவர் என்பதில் பகுதியால் ஒருமையும் விகுதியால் பன்மையும் விளங்குதல்போல் இருவன் என்பதில் பகுதியால் பன்மையும் விகுதியால் ஒருமையும் இருத்தலாகாதோ என்னும் வினா எழுவது இயல்பு. அன்றியும் ஆடவருள் ஒருமையை யுணர்த்த ஒருத்தன் என்னும்போது னகர ஈறு ஆண்பாலை யுணர்த்துதல்போல, இருவன் என்பதில் பகுதி பன்மையையும் விகுதி ஆண்பாலையும் உணர்த்தலின் இருவன் என்பதை ஆடவர் பன்மைக்குக் கொள்ளலாமே என்றும் கேட்கத்தோன்றும். இதற்குக் கூடாது என்று பதில் செல்லியாகவேண்டும். அப்பதில் சொல்லத்தான் இச்சூத்திரம் அமைந்தது எனவே இச்சூத்திரம், பொதுப்பிரிபாற்சொல் ஒருவன் ஒருத்தி என்பனவாகக் கொண்டு சேனாவரையர் கூறிய கருத்தே நுதலியதாகக் கொள்ளல்தகும்.

ஒன்றின முடித்தல் என்பதனால் ஒருவன் ஒருத்திப் பால்கள் பிரிதற்குக்காரணமான ஒருவர் பற்றிய கருத்தைக் கொள்ளலாம். இனம் என்பது இங்கு ஒன்றை ஒன்று நோக்கியதன்மை. (ஒருவர் → ஒருவன் ஒருத்தி; ஒருவன் ஒருத்தி → ஒருவர்)

எண்ணுமுறையில் வரும் ஒருவர் உயர்த்தற்கண் வரும் ஒருவர் எனஒருவர் என்பதை இருவேறு நிலையில் கொண்டு முடிக்கும் கருத்தை ஒன்றென முடித்தலால் கொள்ளலாம்.

வியங்கோள் எண்ணுப்பெயர்

45. வியங்கோள் எண்ணுப்பெயர் திணைவிரவு வரையார்

ஆ. மொ.

இல.

The joining of High class nouuns with
Non-class nouns by conjunctive 'um' is not forbidden
When such conjoining is followed by the optalive mood.

க. சு.

It is not prohibited to connect noun of (the two different) gender classes by and, (if followed by) optalive mood.

பி. இ. நா

நேமி. சொ. 92.

எண்ணி வியங்கொள்க இருதிணையும்

முத்து ஒ. 77.

வியங்கோ ளொடுதொடர் எண்ணுக் கிளவி
திணைவிரவியும் வரும் செப்புங் காலே.

இளம்.

இச்—எனின், இதுவும் திணை வழுக் காத்தல் நுதலிற்று.

உரை: வியங்கோளுடைய எண்ணுப் பெயர் திணை விரவுதல் கடியப்படா, எ—று.

வ—று: 'ஆவும் ஆயனும் செல்க' எனவரும். இஃது இனமல்ல தனோடு எண்ணினமையின் வழுவாயிற்று. இனி, ஆவும் ஆயனும் செல்க' என்றவிடத்துச் 'செல்க' என்னும் வியங் கோள் வினை இருதிணைக்கும் முடிபு ஏற்றமையின் திணை வழுவமைதியாம்.

மற்று, இன்ன எண் என்பது சூத்திரத்துப் பெற்றிலாமையின் 'உய்த்துணர வைத்தல்' என்னும் உத்தி வகையான், 'உம்'மை எண்ணும் 'என' என் எண்ணும் எனக் கொள்க. என்னை? இவ்விரண்டெண்ணும் தொகை பெற்றும் பெறாதும் முடியும் மற்றை எண்ணுக்கள் எல்லாம் தொகை பெற்றே முடியும்; ஈண்டுத் தொகை பெறும் எண்ணினாற் கூறிற்றிலர் தினை வழு வாகலான், என்பது.

சேனா.

இ—ள்: வியங்கோளொடு தொடரும் எண்ணுப்பெயர் திணை விராய் வருதல் வரையார், எ—று.

உ—ம்: ஆவும் ஆயனும் செல்க எனவரும்.

[1]தன்மைப் பன்மை வினை போலாது வியங்கோள் இரு திணைக்கும் உரிய சொல்லாகலான் இருதிணைச் சொல்லையும் முடிக்குமன்றே? அதனான், 'ஆவும் ஆயனும் செல்க' என்புழி வழுவின்மையின் அமைக்கற் பாற்றன்றெனின், இரு திணைப் பொருட்கும் உரித்தேனும், ஒரு திணைப் பொருளைச் சொல்லுதற்கண் இருதிணைப் பொருளும் உணர்த்தாமையின் ஒரு திணையே யுணர்த்தல் வேண்டும்; ஒரு திணை யுணர்த்திய வழி ஏனைத் திணைப் பெயரோடு இயையாமையிற் றிணை வழு வாம் அதனால் அமைக்கல் வேண்டும் என்பது.

'எண் என்றா உறழ் என்றா ஆயிரண்டும் இனன் ஒன்றல் வேண்டும்' என்பது இலக்கணம் ஆகலான், 'யானும் என் எஃகமும் சாறும்' என்புழியும், 'ஆவும் ஆயனும் செல்க' என்புழி யும் இனன் அல்லன உடன் எண்ணப்படுதலின் வழு என்றாரல் உரையாசிரியர் எனின், திணை வேறுபாடுண்டேனும் 'யானும் என் எஃகமும்' என்புழி [2]வினைமுதலும் கருவியுமாகிய இயைபும், 'ஆவும் ஆயனும்' என்புழி மேய்ப்பானும் மேய்க்கப் படுவனவு

---

1 ஆவும் ஆயனும் செல்க—இதில் செல்க என்பதை ஆவுக்கு ஏற்றும் போது அஃறிணை வினை முற்றாம். ஆயனுக்கு ஏற்றும் போது உயர்திணை வினைமுற்றாம். எனவே செல்க என்பது ஒன்றே அஃறிணையாகவும் உயர்திணையாகவும் வருதலின் வழு; அதுவே பொது வினையாதலின் அமைதி.

2. இயைபிருந்தால் இனமாகக் கொள்ளலாம் என்பது சேனாவரையர் கருத்து.

மாகிய இயையும் உண்மையான் உடன் எண்ணப்படுதலானும், [3]'யானை தேர் குதிரை காலாள் எறிந்தான்' என முன்னர் உதாரணம் காட்டுப ஆதலானும், பிறாண்டும் 'எண்ணுத்திணை விரவுப் பெயர் அஃறிணை முடிபின' (சொல். 51) என ஆசிரியர்க்கு ஆராய்ச்சி, முடிவு கோடற் கண்ணதாகலானும் அவர்க்கது கருத்தன் றென்க. அல்லதூஉம் திணை விராய் எண்ணல் வழுவென்பதே கருத்தாயின்,

நெடுநல் யானையும் தேரும் மாவும்
படையமை மறவரும் உடையம்யாம் (புறம்-72)

எனவும், இருமனப் பெண்டிரும் கள்ளும் கவறும் (குறள் 920) எனவும் படர்க்கைச் சொல்லும், அஃறிணைக் கிளவியும் விராய் எண்ணுதல் வழக்குப் பயிற்சியுடைமையான் அவையும் அடங்க [4]உயர்திணைச் சொல்லே அஃறிணைக் கிளவியெனப் பொதுப் பட ஓதாது தன்மைச் சொல்லே அஃறிணைக் கிளவி (சொல். 43) எனத் தன்மைச் சொல்லையே விதந்தோதல் குன்றக் கூறலாம் ஆகலானும் அவர்க்கது கருத்தன்மையறிக.

ஆவும் ஆனியற் பார்ப்பன மாக்களும்
பெண்டிரும் பிணியுடை யீறும் பேணித்
தென்புல வாழ்நர்க் கருங்கட னிறுக்கும்
பொன்போற் புதல்வர்ப் பெறா தீரும்
எம்மம்பு கடிவிடுதும் நும்மரண் சேர்மின் (புறம். 9)

எனத்திணை விராய் வந்து முன்னிலை வினை கோடல் ஏற்றாற் பெறுதும் எனின், அந்நிகரன செய்யுள் முடிவு எனப்படும்; அவற்றை அதிகாரப் புறனடையாற் கொள்க. திணை விராய் எண்ணப்படும் பெயர் வியங்கோள் அல்லா விரவு வினையொடு தொடர்ந்து வருவன வழக்கினுள் உளவேல் ஒன்றென முடித்தல் என்பதனாற் கொள்க.

---

3. இடையியல் 43 ஆம் சூத்திரம்.

4. இங்கு இவர் குறிப்பிடும் கருத்து ''பல வயினானும்'' (51) என்னும் சூத்திரத்தில் அடங்குதலின் இங்கும் உயர் திணைச் சொல்லே அஃறிணைக் கிளவி எனக் கூற வில்லை ஆதலின் இம்மறுப்பு எற்பதற்கில்லை.

தெய்.

ஐயம் அறுத்தல் நுதலிற்று. என்னை? வினையியலுள் வியங்கோள் இருதிணைக்கும் பொது என்றாராயினும் எண்ணுங்கால் தனித்தனி எண்ணல் வேண்டுமோ விரவி எண்ணல் வேண்டுமோ என்ன நின்ற ஐயம் நீக்குதலின். இது திணை வழுவமைதியுமாம்.

இ—ள் : வியம் கொள்ளும் எண்ணுப் பெயர் திணை விரவுதல் நீக்கார், எ—று.

உ—ம் : 'ஆவும் ஆயனும் செல்க' என வரும்.

நச்.

இஃது எண்ணின்கண் திணை வழு அமைக்கின்றது.

இ—ள் : வியங்கோள் எண்ணுப் பெயர் — வியங்கோளோடு தொடரும் எண்ணுப் பெயர், திணை விரவு வரையார்—திணை விராய் வருதலை நீக்கரர் ஆசிரியர், எ—று.

ஆவும் ஆயனும் செல்க என்றது எண்ணும்மை யாதலின் சேறல் தொழில் இரண்டிற்கும் எய்துதலின் வழு இன்றேனும், அஃறிணையேவல் தொழிலை முற்ற முடியாமை கருதி வழு அமைத்தார்.

'ஆவும் ஆனியல் பார்ப்பன மாக்களும்' (புறம். 9) என எண்ணி, 'நும் அரண் சேர்மின்' என முன்னிலை வினை கோடல் செய்யுள் முடிவு என்பது அதிகாரப் புறனடையாற் (எச் 67) கொள்க.

'ஆவும் ஆயனும் சென்ற கானம், செல்லும் கானம்' என வியங்கோள் அல்லா விரவு வினையான் வருதல் தன்னின முடித்தலான் கொள்க.

கல்.

என்-எனின், எண்ணின்கண் திணை வழுவமையுமாறு உணர்த்துதல் நுதலிற்று.

பொருள்: வியங்கோட்கண் எண்ணப்படும் பெயரைத் திணை விராய்வரும் வரவினை நீக்கார், கொள்வர் ஆசிரியர், எ—று.

உ-ம்: ஆவும் ஆயனும் செல்க என வரும்.

தன்னின முடித்தல் என்பதனான் வியங்கோளில்லாத விரவு வினைக்கண்ணும் சிறுபான்மை வருவன கொள்க. அவை ஆவும் ஆயனும் சென்றகாணம்' என்பது போல்வன.

இதனாற் கூறியது எண்ணின்கண் திணை பற்றிப் பிறக்கும் மரபு வழுவமைதி யெனவுணர்க.

ஒரு.

என்பது வியங்கோளோடு தொடரும் எண்ணுப் பெயர் இரு திணையும் விராய் வருதலை நீக்கார். உ-ம்: 'ஆவும் ஆயனும் செல்க', 'யானையும் பாகனும் வருக' எனவரும். உம்மை யெண்ணும்மை.

வேறுவினைப் பொதுச்சொல் முடியுமாறு

46. *வேறுவினைப் பொதுச்சொல் ஒருவினை கிளவார்.

ஆ. மொ.

இல.

A common term which denotes different kinds must not have a predicate which belongs to one kind.

அடிசில் என்ற பெயர்ச்சொல் உண்பன, தின்பன, பருகுவன, நக்குவனவாய் அமைந்த உணவுப் பொருள்கள் அனைத்தையும் அடக்கும். அவ்வாறு அமைவதால் அடிசில் அயின்றார் என்று கூறலாமே தவிர, அடிசில் உண்டார் அல்லது தின்றார், பருகினார் என்று கூறுவது பிழை பொதுப் பெயர்ச் சொல்லிற்குப் பொதுவினைச் சொல்லே முடிக்கும் சொல்லாக அமைதல் வேண்டும். பொதுப் பெயர்ச் சொல்லிற்குத் தனி வினைச்சொல் முடிக்குஞ் சொல்லாக அமைதல் கூடாது. தனிச்சொற்கள் சிலவற்றைச் சேர்த்து முடிக்கும் போதும் பொது வினையால் முடிக்க எனப் பேசுகின்றது தொல்காப்பியம். ஏனைய நூல்கள் வழி மொழிகின்றன— ச. வே. சுப்பிரமணியன், இலக்கணத் தொகை.

க. சு.

A predicate denoting different individual actions will not be used with a commen noun

பி. இ. நா.

நேமி. சொ. 12-2.

பொதுத்தொழிலை ஒன்றாற் புகலார்

நன். 389

வேறுவினைப் பல்பொருள் தழுவிய பொதுச்சொலும்
............ஓர் பொதுவினை வேண்டும்.

இ.லெ.வி. 319 ௸ ௸

முத்து. ஒ. 78.

வேறுவினைப் பல்பொருட்குப் பொதுபபெயர்
பொதுவினை கொடுத்துப் புகல்வது நெறியே.

இளம்.

இச்-எனின், இதுவும் மரபு வழுக் காத்தல் நுதலிற்று.

உரை: வேறு வேறு வினையை யுடையவாய் நின்ற சொற்களை ஒரு வினையாற் சொல்லற்க என்பது: எனவே பொது வினையாற் கிளக்க என்பதாம்.

*இனி, 'ஒருவும் வினை' என்பது 'ஒரூஉ வினை' என்றாயிற்று என்றலும் ஒன்று: ஒரூஉதல் என்பது நீங்குதல். அவை அடிசில், அணிகலம், இயமரம் என்பன. அவற்றைப் பொதுவினையாற் கூறுமாறு: அடிசில் அயின்றார், அணிகலம் அணிந்தார், இயமரம் இயம்பினார் என்னுந் தொடக்கத்தன கொள்க. மற்று, 'ஊன்துவை கறிசோறு உண்டு வருந்தும்.' (புறம். 14) என வந்ததால் எனின், அது பாடம் அறிந்து திருத்திக் கொள்க.

சேனா.

இ—ள்; வேறுபட்ட வினையையுடைய பல பொருட்குப் பொதுவாகிய சொல்லை ஒன்றற்குரிய வினையாற் கிளவார், எ—று

---

* இதனால் 'வேறுவினைப் பொதுச்சொல் ஒருஉவினை கிளவார்' என்னும் சூத்திரம் உண்டு போலும் எனக் கொள்ளலாம்.

எனவே பொது வினையாற் கிளப்பர் என்றவாறாம். அவை அடிசில், அணி, இயம், படையென்னுந் தொடக்கத்தன.

அடிசில் என்பது உண்பன, தின்பன, பருகுவன, நக்குவன என்னும் நால்வகைக்கும், அணி என்பது கவிப்பன கட்டுவன செறிப்பன பூண்பன என்னும் தொடக்கத்தனவற்றிற்கும், இயம் என்பது கொட்டுவன ஊதுவன எழுப்புவன வென்னும் தொடக்கத்தனவற்றிற்கும், படை யென்பது எய்வன எறிவன வெட்டுவன குத்துவன வென்னும் தொடக்கத்தனவற்றிற்கும் பொதுவாகலின், *அடிசில் அயின்றார், மிசைந்தார், எனவும்; அணியணிந்தார்; மெய்ப்படுத்தார் எனவும்; இயம் இயம்பினார், படுத்தார் எனவும்; படைவழக்கினார் தொட்டார் எனவும்; பொது வினையாற் சொல்லுக. அடிசில் தின்றார் பருகினார் எனவும், அணிகவித்தார் பூண்டார் எனவும், இயங் கொட்டினார் ஊதினார் எனவும், படையெறிந்தார் எய்தார் எனவும், ஒரு சார்க்குரிய வினையாற் சொல்லின் மரபு வழுவாம் என்பது. பொருளின் பொதுமையைச் சொன்மேல் ஏற்றி வேறு வினைப் பொதுச்சொல் என்றார்.

தெய்.

மரபு வழுக்காத்தலை நுதலிற்று.

இ-ள்: பலவினையையுடைய பொதுப்பெயரை ஒரு வினையாற் கூறார் அறிவார். எ—று. எனவே, பொது வினையாற் கிளத்தல் வேண்டும் என்றவாறாம். அது, இயம் என்பது கொட்டுவனவும் எறிவனவும் ஊதுவனவுமாம். அதனை இயம் கொட்டினார், ஊதினார், எறிந்தார் என்னற்க; பொது வினையான் இயம் இயமபினார் என்க, பிறவும் அன்ன.

நச்.

இது மரபு வழுக்காக்கின்றது.

இ—ள்: வேறு வினைப் பொதுச் சொல்—வேறுபட்ட வினையையுடைய பல பொருட்குப் பொதுவாகிய சொல்லை,

---

அடிசில் அயின்றார், மிசைந்தார் என்னும் இவ்வுதாரணத்தை நச்சினார்க்கினியர் மறுப்பர். அயின்றார்—விழுங்கினார், மிசைந்தார்,— தின்றார் எனச் சிறப்புப் பொருளில் வருவன அவை என்பது அவர் கருத்து.

ஒருவினை இலவார்—அவற்றுள் யாதானும் ஒரு வினையால் கூறார்; எனவே அவற்றையெல்லாம் உள்ளடக்கி நிற்கும்பொது வினையால் கூறுவர், எ—று.

அடிசில் என்பது உண்பன தின்பன நக்குவன பருகுவன வற்றிற்கும், அணி என்பது கட்டுவன கவிப்பன செறிப்பன பூண்பனவற்றிற்கும், இயம் என்பது கொட்டுவன ஊதுவன எழுப்புவனவற்றிற்கும், படையென்பது எய்வன எறிவன வெட்டுவன குத்துவனவற்றிற்கும் பொதுவாதலின் அடிசில் உண்டார் கைதொட்டார் எனவும், அணி அணிந்தார் மெய்ப்படுத்தார் எனவும், இயம் இயம்பினார் படுத்தார் எனவும், படை வழக்கினார் தொட்டார் எனவும் பொது வினையால் கூறுப இவற்றை ஒருவினையால் கூறின் வழுவாம்.

"மூங்கில் மிசைந்த முழந்தாள் இரும்பிடி" (கலி. 50 : 2) எனவும்,

"நளிபுகை கமழாது இறாயினீர் (இறானீர்) மிசைந்து. (மலை. 249) எனவும்'

இடம்படின் வீழ்களிறு மிசையாப் புலியினும் சிறந்த (கலி, 29 : 2, 3) எனவும்,

"கடவுள் ஒரு மீன் சாலினி ஒழிய
அறுவர் மற்றையோரும் அந்நிலை அயின்றனர்" (பரிபா. 5: 44, 45)

எனவும் இவை தின்றெனவும் விழுங்கியெனவும் பெரும்பான்மை வருதலின் மிசைந்தார் அயின்றார் என்பன உதாரணம் காட்டல் பொருந்தாமையுணர்க.†

இனி,

"உண்டற் குரிய வல்லாப் பொருளை
உண்டன போலக் கூறலும் மரபே" (பொருளியல். 19)

எனும் பொருளியற் சூத்திரத்தான் உண்டல் தொழில் எல்லா வற்றிற்கும் பெரும்பான்மை வருதல் பெற்றாம்.

---

† பொதுவினையான மிசைதல் முதலியவற்றைச் சிறப்புப் பொருளில் வந்தன என்று கொண்டாற் குற்றம் என்னை?—சுப்பிரமணிய சாஸ்திரியார் பொது வினையைச் சிறப்புவினையாக ஆளலாம்; சிறப்பு

"அறுசுவை யடிசில் அணியிழை தருதலின்
உறுவயி றார ஓம்பாது தின்றென"

என்பது இழித்தற்கண் வருதலின் வழுவன்று.

கல்.

என்—எனின், வேறுவினைப் பொதுச் சொற்களது மரபு வழுக்காத்தல் நுதலிற்று.

இ—ள்: வேறு வினையுடையவாகிய பல பொருளையும் பொதிந்து நின்ற பொதுச் சொல்லை ஒருபொருளது வினையாற் சொல்லார் உலகத்தார்; அதனான், அவற்றிற்கெல்லாம் பொதுவாகிய வினையானே சொல்லுக; எ—று.

உ—ம்: அடிசில் கைதொட்டார், அயின்றார்; அணிகலம் அணிந்தார், மெய்ப்படுத்தார்; இயம் இயம்பினார், படுத்தார் எனவரும்.

இதனாற் சொல்லியது பல பெயர்க்குரிய பொதுப் பெயர்ச் சொல்லை எடுத்து மேலதன் வினை கூறும்வழி மரபு வழுவற்க என்றவாறு.

இஃது இலக்கணமாகப் பல பொருளும் ஒருசொல்லாதற்கண் அடங்கி நில்லாது வேறுவேறு அடிசில் எனவும், அணி எனவும் வரும்; வரவும் ஒன்றன் வினை ஒன்றற்கு வரும்; வரவும் வழுவாக்கிச் 'செய்யுள் மருங்கினும்' (எச்ச 61) என்னும் அதிகாரப் புறனடையான் அமைத்துக் கொள்க என்பது.

ஒரு.

என்பது வெவ்வேறு வினையையுடைய பலபொருட்குப் பொதுவாகிய சொல்லை யாதானும் ஒரு வினையாற் கூறார் எனவே யெல்லாவற்றையும் உள்ளடக்கி நிற்கும் பொது வினையாற் கூறுவர் என்பதாம்.

வினையைப் பொதுவினையாக ஆளல் இல்லை. சாப்பாடு சாப்பிட்டான், தண்ணீர் சாப்பிட்டான், எனவருவதும், சாப்பாடு தின்றான், பருகினான் என வராமையும் காண்க. இதனால் அவர் வினா பொருந்துவதே.—சிவ

உ-ம்: அடிசில் என்பது உண்பன தின்பன நக்குவன பருகுவனவற்றிற்கும் பொது; அணியென்பது கட்டுவன கவிப்பன செறிப்பன பூண்பனவற்றிற்கும் பொது; இயம் என்பது கொட்டுவன ஊதுவன எழுவனவற்றிற்கும் பொது; படையென்பது எய்வன எறிவன வெட்டுவன குத்துவனவற்றிற்கும் பொது; ஆதலின், அடிசில் உண்டார் கை தொட்டடர் எனவும், அணியணிந்தார் மெய்ப்படுத்தார் எனவும், இயம் இயம்பினார் படுத்தார் எனவும், படைவழங்கினார் தொட்டார் எனவும் பொது வினையாற் கூறுக. அல்லது அடிசில் குடித்தார் பருகினார் என்றும், அணி கவித்தார் கட்டினார் என்றும், இயம் கொட்டினார் ஊதினார் என்றும், படையெடுத்தார் குத்தினார் என்றும் ஒன்றன் தொழிலாற் கூறற்க.

அறுசுவை யடிசில் அணியிழை தருதலின்
உறுவயி றார வோம்பாது தின்றென

என வேறு வினையால் வந்ததால் எனின் இழித்தற்கண் வந்ததென்க.

ஆதி.

ஒன்றின் பலவகை வினைகளை—அவற்றுக்கான பொது வினை ஒன்றால் அறிவித்தலாகாது.

கை குத்திற்று, பற்றியது, எழுதியது, அடித்தது, ஒடித்தது; கிள்ளியது என்று இடங்கண்டு கூறவேண்டுமேயன்றி, கை வேலை செய்தது எனப் பொதுப்பட ஒருவினையாற் கூறலாகாது.

உண்டான் பருகினான், நக்கினான், சுவைத்தான், கொரித்தான் என இடங்கண்டு தனிநிலையால் கூறவேண்டுமேயன்றித் தின்றான் என ஒரு வினையால் கூறலாகாது.

சிவ.

இச்சூத்திரத்துக்கு உரையாசிரியர் யாவரும் ஒருமுகமாகவே உரை வகுத்தனர். ஆதித்தர் வேறுரை வகுத்தார். அவர் கருத்துக்கேற்பச் சூத்திரப் பதவுரை வருமாறு:—

வேறுவினை—ஒரு பொருளின் பலவேறு வினைகளை

ஒரு பொதுவினைச்சொல்—அவற்றுக்கான பொதுவினை ஒன்றால்

இளவார்—கூறார்

கையென்னும் பொருள் பல வினைகளைச் செய்வது. குத்துவது பற்றுவது எழுதுவது முதலியன அவை. அவ் வினைகளையெல்லாம் சேர்த்துப் பொதுச்சொல் கூறுவ தென்றால் செய்வது எனலாம். ஆனால் கையெழுதியது என்று கூற வேண்டியபோது கைசெய்தது என்று கூறலாகாது.

சிறப்பு வினையால் கூற வேண்டுவதைப் பொது வினையால் கூறலாகாது என்பது கருத்து.

இவ்வுரை பொருந்துமாறில்லை சூத்திரக்கிடக்கை அவ்வாறு பொருள் கொள்ளுமாறில்லை. அவர் காட்டிய உதாரணத்தில் கைவேலை செய்தது என்பதும் பொருந்துவதன்று செய்தது என்பது இனம் பிரிந்த பல சிறப்பு வினைகளுக்குரிய பொது வினையன்று; எல்லா வினைகளுக்கும் பொது வாய்பாட்டில் அமைந்த பொதுவினை, அதனால் அவ்வுதாரணம் சிறவாது.

அடுத்து, 'உண்டான், பருகினான்...தின்றான் என ஒரு பொது வினையால் கூறலாகாது' என்னும் தொடரில் உள்ள தின்றான் என்பது பொது வினையன்று; அது பருகுதல், நக்குதல் போலும் வினைகளுக்கு வாராது. தண்ணீர் தின்றான் என வாராதது காண்க.

பூவரரகம்பிள்ளை

(சேனாவரையத்தில்) "பொருளின் பொதுமையைச் சொன மேல் ஏற்றி வேறு வினைப் பொதுச் சொல் என்றார்" என்ற வாக்கியம் பொருத்த முடையதாகத் தோன்றவில்லை. சோறு, கறி, பால், தேன் ஆகிய பொருள்கட்குப் பொதுவாக அடிசில் என்ற பொதுச் சொல்லும், அதற்கேற்ற பொது வினையும் உண்டு ஆனால் அடிசில் என்ற பொதுச் சொல்லால் உணர்த்தப்படும் பொதுப் பொருள் ஒன்றில்லை. பொதுப் பொருள் ஒன்றிருந்து அதனைக் கூறவேண்டிய இடத்தில் பொதுச் சொல் ஒன்று கூறினால், 'பொருளின் பொதுமையைச் சொன்மேல் ஏற்றிப் பொதுச்சொல் என்றார்' என்று கூறலாம்.

அரசன் மக்கட்கெல்லாம் பொதுவாக இருத்தற்குரியவன்; அவனைப் பொது மனிதன் எனலாம் ஆனால் அவனை உணர்த்தும் அரசன் என்னும் சொல் பொதுச் சொல் அன்று. அரசன்

என்னும் பொது மனிதன் என்று கூறவேண்டிய இடத்தில், அரசன் என்னும் பொதுச்சொல் என்று கூறினால் 'பொருளின் பொதுமையைச் சொன் மேல் ஏற்றிப் பொதுச் சொல் என்றார்' என்று கூறலாம். இச்சூத்திரத்தில் வந்துள்ள பொதுச்சொல் அவ்வாறில்லை; இங்கும் பொதுச் சொல் உண்டு; பொதுப் பொருள் இல்லை ஆதலால் மேற்கூறப்பட்ட வாக்கியம் பொருத்தமாக இல்லை. அவ்வாக்கியம் இடைச்செருகலாக இருக்கலாம்.

அது எண்ணில் வருமாறு

47. எண்ணுங் காலும் அதுஅதன் மரபே.

ஆ மொ:

இல.

Even in counting (different kinds)
the same rule is to be observed.

க. சு.

The same rule should be observed even in counting.

பி. இ. நூ.

நன். 389

வேறவற் றெண்ணும் ஓர் பொதுவினை வேண்டும்

இல. வி. 316

,,

முத்து. ஒ. 79

எண்ணுழியும் பொதுவினையான் இயலும்

இளம்.

இ-சி—எனின், இதுவும் மரபு வழுக்காத்தலை நுதலிற்று.

உரை: வேறுவேறு வினையையுடைய சொற்களை எண்ணுங் காலும் பொது வினையாற் சொல்லுப, எ—று.

வ—று : யாழுங் குழலும் பறையும் இயம்பினார் எனவரும்.

சேனா

இ—ள் : வேறு வினைப்பொருள்களைப் பொதுச்சொல்லாற் கூறாது பிரித்தெண்ணுமிடத்தும் அதன் இலக்கணம் ஒரு வினையாற் கிளவாது பொதுவினையாற் கிளத்தலேயாம், எ—று

உ—ம் : சோறும் கறியும் அயின்றார்; யாழும் குழலும் இயம்பினார் எனவரும். சோறும் கறியும் தின்றார்; யாழும் குழலும் ஊதினார் எனின் வழுவாம். அஃதேல் 'ஊன் துவை கறிசோறு உண்டு வருந்து தொழிலல்லது' (புறம். 14) என்புழி உண்டு' என்பது ஒன்றற்கேயுரிய வினையாகலின் வழுவாம் பிறவெனின்,'உண்டல் என்பது உண்பன தின்பன எனப்பிரித்துக் கூறும்வழிச் சிறப்பு வினையாய்; பசிப்பிணி தீரநுகரப்படும் பொருளெல்லாம் உணவு எனப்படுமாகலின் பொதுவினையுமாம்; அதனான் அது வழுவன்றென்பது. கறியொழித்து ஏனைய வற்றிற்கெல்லாம் உண்டற்றொழில் உரித்தாகலிற் பன்மை பற்றிக்கூறினார் எனினும் அமையும்.

தெய்.

மேலதற்கு எய்துவதோர் இலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று.

இ—ள்: வேறுவேறு வினையையுடைய பொருளைப் பொதுப் பெயராற்கூறுதலன்றி எண்ணுமிடத்தும் அதன் மரபு பொது வினையாற் கிளத்தல், எ—று.

உ-ம் அம்பும் வேலும் தண்டும் வாளும் வழங்கினார் என்க. எறிந்தார் எய்தார் என ஒருவினையாற் கிளவற்க.

'ஊன் துவை கறிசோறுண்டு வருந்து தொழிலல்லது பிறிது தொழில் அறியா வாகலின்' (புறம். 14) என்ற வழி, உண்டு என ஒரு வினையான் வந்ததால் எனின், அது பொது வினையென்று கொள்க; என்னை 'உண்ணுநீர் வேட்டேன் என வந்தாற்கு (கலி குறி. 15) எனவும், 'பாலும் உண்ணான் பழங்கண் கொண்டு, (அகம் 48) எனவும், 'கலைப்புற வல்குல் கழுகு குடைந்துண்டு, (மணிமே 6: 41 112) எனவும், கள்ளுண்ணாப் போழ்து (குறள் 930) எனவும், உண்ணாமை வேண்டும் புலாஅல்' (குறள் 257) எனவும் வருதலின்.

நச்.

இதுவும் அது

இ—ள் : எண்ணுங்காலும்—அவ்வேறு வினைப் பொருள் களைப் பொதுச்சொல்லாற் கூறாது பிரித்து எண்ணுமிடத்தும், அது அதன் மரபே—அதன் இலக்கணம் ஒருவினையால் கிளவாது பொது வினையால் கிளத்தலேயாம்; எ—று.

சோறும் கறியும் நன்றென்றுண்டார்; யாழும் குழலும் பறையும் இயம்பினார் எனவரும். தின்றார் ஊதினார் என்றால் வழுவாம் 'ஊன் துவை கறி சோறு உண்டு வருந்து தொழில் அல்லது' என்புழி நுகரப்படும் பொருள் எல்லாவற்றிற்கும் உண்டல் தொழில் வந்தவாறு காண்க.

கல்.

என்—எனின், இதுவும் அது.

இ—ள் : வேறு வினைப் பொதுச் சொற்களைப் பொதுமை யிற் பிரித்தெண்ணுங் காலத்தும் ஒன்றன் வினையாற் கிளவாது பொது வினையாற் கிளத்தலதற் கிலக்கணம், எ—று.

உ—ம் : யாழும் குழலும் பறையும் இயம்பினார் எனவரும்.

இதனாற் சொல்லியது அப்பொதுச் சொற்களைப் பிரித் தெண்ணும் வழியும் வினைமுடிபின் மரபும் வழுவாமற் சொல்லுக வென்பதாயிற்று.

ஒரு.

என்பது வேறு வினைப் பொதுச் சொற்களைப் பொதுச் சொல்லாற் கூறாது பிரித்தெண்ணுமிடத்தும் ஒரு வினையாற் கிளவாது பொது வினையாற் கிளக்க.

உ—ம் : சோறும் கறியும் நன்று என்றுண்டார், யாழும் குழலும் பறையும் இயம்பினார் என்க தின்றார் ஊதினார் என் னற்க. 'ஊன்றுவை கறிசோறுண்டு வருந்தும்' என்புழி யெல்லா வற்றிற்கும் உண்டு எனப் பொது வினை வந்தவாறு காண்க.

ஆதி.

†வகைப்படுத்தி எண்ணி நிற்பின், ஒவ்வொன்றும் மரபு தழுவி நிற்றல் வேண்டும்.

குழல் ஊதினார்	நீர் குடித்தேன்
மேளம் கொட்டினார் (வாசித்தார்)	நெல் கொறித்தேன்
யாழ் இசைத்தார் (வாசித்தார்)	சந்தனம் பூசினேன்
சோறு உண்டேன்	சிகைக்காய் தேய்த்தேன்

கு· சுந்தர மூர்த்தி(ஆய்வுரை)

(நூற்பா 46, 47)

ஊன்துவை கறிசோறுண்டு, வருந்துதொழில் அல்லது பிறிது தொழில் அறியாவா கலின் (புறம் 14) என்றவிடத்து 'உண்டல்' என்ற பொதுவினை உளது. இதுபற்றி உரையாசிரியர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாகக் கருதுகின்றனர். அவற்றை ஆராய்வோம்.

இளம் பூரணர் 'உண்டல்' என்பது சிறப்பு வினையாதலையும் அது ஊன், துவை, கறி, சோறு ஆகிய நான்கற்கும் பொது வாய் வருதல் வழுவாதலையும் கருதி அதனைப் பாடம் அறிந்து திருத்திக் கொள்க என்றனர். எனவே இவர் கருத்தின் படி உண்டு என்பதற்கு மாறாக 'அயின்று' அல்லது 'மிசைந்து' என்ற சொல் இருக்க வேண்டும் என்று தெரிகிறது. சேனாவரையர் இச்சொல்லை வழு என்று கூற மனமில்லாது இருவகையாகச் சமாதானம் கூறினர். (1) 'உண்டல்' என்பது உண்பன தின்பன எனப்பிரித்துக் கூறும் வழிச் சிறப்பு வினை யாம்; பசிப் பிணிதீர நுகரப்படு பொருளெல்லாம் உணவெனப் படுமாகலின் பொது வினையுமாம். அதனால் அது வழு அன்று என்பது (2) கறியொழித்து ஏனையவற்றிற்கெல்லாம் உண்டல் தொழில் உரித்தாகலின் பன்மை பற்றிக் கூறினார் எனினும்

---

† எண்ணுங் காலும் என்பதற்கு 'வகைப்படுத்தி எண்ணி நிற்பின்' என்று பொருள் எழுதியவர் 'குழல் ஊதினார்' எனக் குழல் ஒன்றையே கூறுதல் பொருத்தம் இல்லை. அன்றியும் உதாரணங்களில் வகைப்படுத்தியவாறும் புலப்படவில்லை. வகைப்படுத்துதலும் எண்ணுதலும் இன்மையறிக—சிவ.

அமையும் என்பது. புறநானூற்று உரையாசிரியரும் இதற்கு இரு வகையாகச் சமாதானம் கூறினர். (1) சேனாவரையர் இரண்டாவதாகக் கூறிய சமாதானத்தை முதற்கண் கூறினர். (2) இத்தொடருக்கு ஊன், துவை, கறியோடு கூடிய சோற்றை உண்டு எனப் பொருளுரைப்பின் பொருந்தும் என்பது. (இவ்வுரையில் 'பொது வினை யென்றுரைப்பாரும் உளர்' என்ற குறிப்பும் காணப்படுகின்றது) இவற்றான் மூவருடைய உரையையும் காணும்போது 'உண்டல்' என்பது சிறப்பு வினையேயென இளம்பூரணர் அழுத்தமாகக் கூறியது போல, ஏனைய இருவரும் கூறாராயினும் அவர்களுடைய மனமும் 'உண்டல்' என்பதைச் சிறப்பு வினையாகக் கொள்ளுதலே பொருத்தம் எனக் கருதிற்று எனத் தெரிகின்றது.

ஆனால் தெய்வச்சிலையார் தம் புலமை தோன்ற 'உண்டல்' என்பது பொது வினையே என்று கூறி அதற்குத்தக்க மேற்கோளையும் காட்டுவர் ‡.....நச்சினார்க்கினியர் "உண்டற்குரிய அல்லாப் பொருளை உண்டனபோலக் கூறலும் மரபே" என்னும் பொருளியற் சூத்திரத்தான் உண்டற் றொழில் எல்லாவற்றிற்கும் பெரும்பான்மை வருதல் பெற்றாம்" என்பர். எனவே 'உண்டு' என்பது பொது வினையாதல் இவர்க்கும் கருத்தாகும் ஆதலின் இவர்கள் கருத்தே பொருத்தமுடைத்து.

இரட்டைக் கிளவி அமையுமாறு

48. இரட்டைக் கிளவி *இரட்டுப் பிரிந்திசையா

ஆ. மொ:
இல.

The doublets cannot express their
aparopriate senses if they are separated.

---

‡ இப்பகுதியைத் தெய்வச்சிலையார் உரையிற் காண்க.

* பா—ம: இரட்டிற்.
இரட்டு — இரட்டுதல் — தொழிற் பெயர் இரட்டுப் பிரிந்து — இரட்டு தலினின்றும் பிரிந்து என ஐந்தன் உருபு நீக்கப் பொருளில் தொக்கது இரட்டிற் பிரிந்து— ஐந்தன் உருபு விரிந்தளது; அவ்வளவே.

க. சு.

Iterative words do not bring out (their oppropriate meaning) if they are separated

பி. இ. நூ
நன். 3?6

இரட்டைக் கிளவி இரட்டிற் பிரிந்திசையா

இல வி. 325	டிெ	டிெ
முத்து. ஒ. 80	டிெ	டிெ

இளம்.

இச் - எனின், இதுவும் மரபு வழுக்காத்தல் நுதலிற்று.

உரை: இரட்டித்துச் சொல்லும் சொற்கள் அவ்விரட்டுதலிற் பிரித்துச் சொல்லப்படா. எ—று.

வ-று: சுருசுருத்தது, சுறுசுறுத்தது. கறுகறுத்தது என இசையும் குறிப்பும்† பண்பும் பற்றிவரும்.

சேனா.

இ-ள்: இரட்டித்து நின்று பொருளுணர்த்தும் சொற்கள் இரட்டித்து நிற்றலிற் பிரிந்து நில்லா; எ—று.

உ—ம்: சுருசுருத்தது மொடுமொடுத்தது என இசைபற்றியும், கொறுகொறுத்தார் மொறுமொறுத்தார் எனக்குறிப்புப் பற்றியும், குறுகுறுத்தது கறுகறுத்தது எனப்பண்பு பற்றியும் இரட்டித்து வந்தன பிரிந்து நில்லாமை கண்டு கொள்க. அஃதேல் குறுத்தது குறுத்தது எனப் பிரிந்தும் வந்தனவால் எனின் அற்றன்று. குறுத்தது என்பதோர்சொல் குறு என்பதோர் சொல்லடுத்துக்குறுகுறுத்தது எனநின்று குறுமைமிகுதியுணர்த்திற்றாயின், குறுத்த தென்பது குறுமையுணர்த்தக் குறு என்பது மிகுதியுணர்த்திற்றாதல் வேண்டும். குறுவென்பது மிகுதியுணர்த்தாமையிற் குறுகுறுத்த தென்பது ஒரு சொல்லாய் நின்று அப்பொருளுணர்த்திற் றெனவேபடும்; அதனாற்றான் அக்குறுமை மாத்திரம் உணர்த்தி நிற்பது அதனின் வேறாம்

‡ பண்பு—நிறப்பண்பு

என்பது. கறுகறுத்த தென்பதற்கும் ஈது ஒக்கும். ‡‡கறுத்தது கறுத்தது, குறுத்தது குறுத்தது எனச்சொல் முழுதும் இருமுறை வாராமையின் அடுக்கன்மையறிக.

சண்டிரட்டைக்கிளவி யென்றது மக்கள் இரட்டை விலங்கிரட்டைபோல வேற்றுமை யுடையன †வயன்றி, இலையிரட்டையும் பூவிரட்டையும்போல ஒற்றுமையும் வேற்றுமையும் உடையனவற்றையென்றுணர்க.

இரட்டித்து நின்று பொருளுணர்த்துவனவற்றைப் பிரித்து வழங்கல் மரபன்மையின் மரபுவழுக் காத்தவாறு.

தெய்.

இது செப்புவழுக் காத்தலை நுதலிற்று.

இ—ள்: இரட்டித்துச் சொல்லப்படும் சொற்கள் அவ்விரட்டித்தலிற் பிரிந்து ஒலியா, எ—று.

*உ—ம்: ஒன்றொன்றாக வந்தன; இரண்டிரண்டாக நீக்குக எனவரும். இவை ஒன்றாக வந்தன இரண்டாக நீக்குக என்ற வழிப்பொருண்மை படாமையால் பிரிந்தொலியா வாயின.

நச்.

இஃது உரிச்சொற்கண் மரபுவழுக் காக்கின்றது.

இ—ள்: இரட்டைக்கிளவி—இரட்டித்து நின்று பொருள் உணர்த்தும் சொற்கள், இரட்டிற் பிரிந்து இசையா—இரட்டித்து நிற்றலிற் பிரிந்து நில்லா, எ—று,

சுருசுருத்தது, மொடு மொடுத்தது என இசை பற்றியும் கொறு கொறுத்தார் மொறுமொறுத்தார் எனக் குறிப்புப்

---

‡‡ இதுகொண்டு சொல்முழுதும் வருவது அடுக்கு என்றாலும் சளசள கலகல என்பனவும் சொல்முழுதும் வந்தமையின் அவையும் அடுக்கு எனக்கொள்ளலாகாது. ஏன் எனின் சள, கல எனப்பிரிப்பின் பொருளில்லை.

† இதனைச் சேனாவரையர் மறாமையின் தெய்வச்சிலையார்க்கு முற்பட்டவர் அவர் என்பது அறியப்படும்.

பற்றியும், குறுகுறுத்தது கறுகறுத்தது எனப் பண்பு பற்றியும் இரட்டித்துப் பிரியாது நின்றன.

இவை குறுத்தது குறுத்தது என ஒருசொல் முழுவதும் இருமுறை வாராமையின் அடுக்கு அன்று. இவை மக்கள் இரட்டையும் விலங்கிரட்டையும் போல வேற்றுமையின்றி, இலையிரட்டையும் பூவிரட்டையும் போல ஒற்றுமையும் வேற்றுமையும் உடையவாம். குறு என்னும் சொல் அடுத்துக் குறுத்தது என்பது மிகுதியுணர்த்திற்றேல், குறு என்பது யாண்டும் மிகுதியுணர்த்தல் வேண்டும்; அஃது உணர்த்தாமையின் இரண்டும் ஒரு சொல்லேயாயிற்று.

கல்.

என்—எனின், உரிச்சொற் கண்ணதோர் மரபுவழுக் காத்தல் நுதலிற்று.

இ—ள்: இரட்டித்துச் சொல்லப்படும் சொற்கள், அவ்விரட்டித்துச் சொல்லுதலிற் பிரித்துச் சொல்லப்படா, எ—று.

உ—ம்: அது இசை குறிப்பு பண்பு எனமூன்று வகைப்படும்.

சுருசுருத்தது, மொடுமொடுத்தது என இவை இசைபற்றி வந்தன.

கொறு கொறுத்தன, மொறு மொறுத்தன என்பன குறிப்புப் பற்றி வந்தன.

குறுகுறுத்தார் கறுகறுத்தார் என்பன பண்பு பற்றியும் வந்தன.

இதனாற் சொல்லியது ஒருபொருட்கண் இருசொல்லினை ஒருபொருள் வேறுபாடு குறியாது கூறின், மரபல்ல வெனினும் அவ்வாறு இரட்டிக் கூறலே அவற்றிற்கு அடிப்பாடாகலின் இனியதனை மரபு வழுவற்கவென மரபு கூறியவாறாயிற்று.
இது மரபு வழுவமைதி போலும்.

ஒரு.

என்பது இரட்டித்து நின்று பொருளுணர்த்துஞ் சொற்கள் இரட்டித்து நிற்றலிற் பிரிந்து நில்லா.

உ—ம் அவை வருங்கால் இசையும் குறிப்பும் பண்பும் பற்றி வரும். சுருசுருத்தது மொடுமொடுத்தது என்பன இசை. கொறு கொறுத்தார் மொறுமொறுத்தார் என்பன குறிப்பு. குறு குறுத்தது கறுகறுத்தது என்பன பண்பு. இவை குறுத்தது குறுத்தது என ஒரு சொல் முழுவதும் வாராமையின் அடுக்கன்று. இவை மக்களிரட்டையும் விலங்கிரட்டையும் போலன்றிப் பூ விரட்டையும் காயிரட்டையும் இலையிரட்டையும் போல ஒற்றுமையும் வேற்றுமையும் உடையவாய் வரும்.

ஆதி.

இரட்டைச்சொற்கள் இரட்டையாய் இருப்பதிலிருந்து (ஒன்றுமட்டும் தனியாகப்) பிரிந்து வழங்கல் இல்லை. சளசள வென மழை பொழிந்தது. குடுகுடு என ஓடுகிறான். வழவழ வெனப் பேசுகிறான். சள, குடு, வழ எனத்தனித்து வழங்காமை அறிக.

(இரட்டையிலை, இரட்டைப் பழம் போல இது ஒட்டியிருக்கும்)

பிறகுறிப்புகள்:

கொறு கொறுத்தார், மொறு மொறுத்தார் என்பன இக்காலத்து வழங்கும் முணுமுணுத்தார் என்பது போன்றன.

> "கொறு கொறுத்தார் — கோபித்தார். அஃது அப்பொருட்டாதல், 'இனிச் சிறிது எழுந்து வீங்கின் இட்டிடை கோறும் நாங்கள் எனக் கொறு கொறுப்ப (சிந். 2040), கொறு கொறுத்தார் என்றொருவர் கூறுங்கால் உள்ளம் துடி துடித்து நீங்கிவிடும். (நன் — 95 — மயிலை — மேற்) என்பனவற்றான் அறிக."—

"வில்வம்போன்ற இலைகள் பார்ப்பவற்கு மூவிலை போலத் தெரியினும், அது ஒரு இலையேயாகும். அது போல இவ் விரட்டைக்கிளவியும் பார்ப்பதற்கு இருசொல் போல இருப்பினும் சொல் ஒன்றேயாம். பார்ப்பதற்கு இருசொல் போல இருத்தலின் இதனை இரட்டைக் கிளவி யென்றார்."— கு. சுந்தரமூர்த்தி

ஒருபெயர்ப் பொதுச் சொல் சொல்லுமாறு.

49. ஒருபெயர்ப் பொதுச்சொல் உள்பொருள் ஒழியத்
தெரிபுவேறு கிளத்தல் தலைமையும் பன்மையும்
† உயர்திணை மருங்கினும் அஃறிணை மருங்கினும்.

ஆ. மொ:
இல.

Choosing one name excluding others to denote a group of different persons or things must take place either on the basis of superiority or on that of majority in High class (uyarthinai) and non - class (Aஃrinai)

க. சு.

Choosing one word excluding other words to denote a group of different persons or objects must be performed so that they denote prominence or majority in the uyartinai and akrinai classes.

பி. இ. நூ.

இல. வி. 323

ஒருபெயர்ப் பொதுச்சொல் உள் பொருள் ஒழியத்
தெரிபு வேறு கிளத்தல் தலைமையும் பன்மையும்
உயர் திணை மருங்கினும் அஃறிணை மருங்கினும்

முத்து ஒ. 81.

அஃறிணை உயர்திணை யாமிரு மருங்கினும்
ஒருபொரு ளாய்ப்பல பெயர்க்குப் பொது மொழி
பொதுமைவே றியம்பல் புலவோர் நெறிமே

இளம்.

இ-ள்—எனின், இதுவும் மரபு வழுக் காத்தல் நுதலிற்று.

† தெய்வச்சிலையார் இவ்வரியினை அடுத்து வரும் நூற்பாவில் சேர்த்துக் கொள்வர்.

உரை: ஒரு பெயர்ப்பட நின்ற பொதுச் சொற்களைச் சொல்லுங்கால் ஆண்டுள்ள பொருள் எல்லாம் எடுத்துச் சொல்லாது தெரிபு வேறு கிளந்து தலைமையானும் பன்மையானும் கூறுக இருதிணைக் கண்ணும், எ—று.

வ—று: சேரி என்பது பலர் இருப்பது மன்; ஆயினும் ஆண்டுச் சில பார்ப்பனக் குடி உளவேல் அதனைப் பார்ப்பனச் சேரி என்பது: இஃது உயர்திணைக் கண் தலைமைபற்றி வந்தது.

'அத்திணைக்கண் பண்மைபற்றி வருமாறு: [1]எயின நாடு, குற்றிளை நாடு எனவரும்.

இனி அஃறிணைக்கண் தலைமைபற்றி வருமாறு: கமுகந் தோட்டம் எனவரும். மற்றைப் பொருள் பயின்று கமுகு ஒன்றிரண்டு உண்மை நோக்கிச் சொன்னாரேல் தலைமையாம். இனிக் கமுகு ஆண்டு நெருங்கி மற்றைய சிலவாதல் கண்டு சொன்னாரேல் அதுதே பன்மையாற் பெற்ற பெயருமாம்.

[2]ஒடுவங்காடு, காரைக்காடு என்பன பன்மையாற் பெற்ற பெயர்.

சேனா.

இ—ள்: உயர்திணைக் கண்ணும் அஃறிணைக் கண்ணும் ஒரு பெயராய்ப் பலபொருட்குப் பொதுவாகிய சொல்லைப் பிற உள்பொருள் ஒழியத் தெரிந்து கொண்டு பொதுமையின் வேறாகச் சொல்லுக; தலைமையானும், பன்மையானும்; எ—று.

தெரியும் என்பதற்குச் செயப்படுபொருள் தலைமையும் பன்மையுமேயாம்.

பிறரும் வாழ்வார் உளரேனும், பார்ப்பனச்சேரி என்றல் உயர்திணைக்கண் தலைமை பற்றிய வழக்கு. எயினர் நாடு என்பது அத்திணைக்கண் பன்மை பற்றிய வழக்கு. பிறபுல்லும் மரனும் உளவேனும் கமுகந்தோட்டம் என்றல் அஃறிணைக்கண் தலைமை பற்றிய வழக்கு ஒடுவங்காடு என்பது அத்திணைக்கண்

1. எயின நாடு — எயினர் தம் நாடு. குற்றிளை நாடு — குற்றிளையர் என்பார் வாழும் நாடு.
2. ஒடு, காரை என்பன மரங்கள்.

பன்மை பற்றிய வழக்கு, பார்ப்பார் பலராயினும் கமுகு பலவாயினும் அவை தாமே பன்மை பற்றிய வழக்காம்.

[1]பல பொருள் ஒரு சொல்லின் நீக்குதற்கு ஒரு பெயர் என்றார்.

ஒன்றென முடித்தல் என்பதனான், [2]அரசர் பெருந்தெரு, வயிர கடகம், ஆதீண்டுகுற்றி, ஆன்அதர், எருத்து இல் எனப் பொதுச்சொல் இன்றி வருவனவும் கொள்க.

உள்பொருள் எல்லாம் கூறாது ஒன்றனை யெடுத்துக் கூறுதல் மரபு அன்றாகலின் பொதுச் சொன்மேற் சொல் நிகழுமாறுணர்த்திய முகத்தான் மரபுவழுக் காத்தவாறு.

தெய்.

மரபு வழுவமைத்தல் நுதலிற்று.

இ—ள் : ஒரு பெயராகிப் பல பொருட்கும் உரித்தாகிய பொதுச்சொல்லை வகுத்துக் கூறுதல் தலைமையானும் பன்மையானும், எ—று.

எனவே தலைமையும் பன்மையும் இல்வழி, பொதுச் சொல்லாற் கிளக்க என்றவாறாம்.

உ—ம் : பார்ப்பார் வேதம் என்பது அரசர்க்கும் வணிகர்க்கும் பொதுவாயினும், பார்ப்பார்வேதம் எனத் தலைமை பற்றி வந்தது எயினர் நாடு என்பது பிறவும் குடி உளவாயினும் பன்மை பற்றி வந்தது. ஆமேய்ப்பான் என்பதும் அது. இளமரக்கா என்பது தலைமையும் பன்மையும் இல்வழிப் பொதுவாய் வந்தது. பிறவும் அன்ன.

---

1 பல பொருள் ஒரு சொல் 'மா' என்பது போல்வன. அவையும் பொதுச் சொல்லாம். அவற்றை நீக்க வேண்டி ஒருபெயர்ப் பொதுச் சொல் என்றார் இதன் பொருள், பல பொருளுக்கும் பொதுவாக ஒரு பொருளுக்குரிய சிறப்புச் சொல்லால் குறிக்கப்படும். என்பது.

2. பிறரும் செல்வாராயினும் அரசர் செல்லும் சிறபபு நோக்கி அரசர் பெருந்தெரு என்பது வழக்கு; இப்படியே பிறவும் கொள்க.

நச்சி.

இஃது ஒருபெயர்ப் பொதுச்சொல்லை மரபு வழுக்காக் கின்றது.

இ — ள்: உயர்திணை மருங்கினும் அஃறிணை மருங்கினும்— உயர்திணைக் கண்ணும் அஃறிணைக் கண்ணும், ஒரு பெயர்ப் பொதுச் சொல்—ஒரு பெயராய்ப் பல பொருட்குப் பொதுவாகிய சொல்லை, உள்பொருள் ஒழியத் தெரிபு வேறு கிளத்தல்— பிற உள்பொருள் ஒழியத் தெரிந்துகொண்டு பொதுமையின் வேறாகச் சொல்லுக, தலைமையும் பன்மையும்—தலைமையானும் பன்மை யானும் எ—று.

பிறரும் வாழ்வார் உளரேனும் 'பார்ப்பனச் சேரி' என்றல் உயர்திணைக் கண் தலைமை பற்றிய வழக்கு. 'எயினர் நாடு' என்பது அத்திணைக்கண் பன்மை பற்றிய வழக்கு. பிற புல்லும் மரமும் உளவேனும் 'கமுகந்தோட்டம்' என்றல் அஃறிணைக் கண் தலைமை பற்றிய வழக்கு. பார்ப்பார் பலராயினும். கமுகுபலவாயினும் அவை தாமே பன்மை பற்றிய வழக்காம்.

ஒன்றென முடித்தலான் அரசர் பெருந்தெரு, ஆதீண்டு குற்றி, வயிர கடகம் என்னும் பொதுச் சொல் அல்லனவும் கொள்க.

பலகுடி சேர்ந்தது சேரி. பலபொருள் தொக்கது தோட்டம்

கல்.

என் — எனின், ஒரு பெயர்ப் பொதுச் சொற்கண் மரபு வழுக்காத்தல் நுதலிற்று.

இ — ள்: ஒரு பெயர்ப்பட நின்ற பொதுச் சொல் ஆண்டுள்ள பொருளொழிய உயர்திணைக்கண்ணும் அஃறிணைக்கண்ணும் தெரிந்து கொண்டு வேறே கிளத்தற்குக் காரணம் அப்பொருட் கண் தலைமையும் பன்மையும், எ — று.

உ — ம்: பார்ப்பனச்சேரி என்பது உயர்திணைக்கண் தலைமை பற்றி வந்தது.

எயினர் நாடு என்பதும் குற்றிளை நாடு என்பதும் அத்திணைக்கண் பன்மைபற்றிய வழக்கு.

கழுகந்தோட்டம் என்பது அஃறிணைக்கண் தலைமை பற்றி

வந்தது. இதுதானே பன்மையுள் வழிப் பன்மை பற்றி வந்ததூஉம் ஆம்.

ஒடுவங்காடு, காரைக்காடு என்பன பன்மை பற்றி வந்தன. சேரி என்பது பலகுடியும் சேர்ந்திருப்பது. தோட்டம் என்பது பல பொருளும் தொக்கு நின்றவிடம். பிறவும் அன்ன.

இதனாற் சொல்லியது பலபொருளும் உள்வழிப் பிறப்பதோர் பெயர்ச் சொல்லினை அப்பலபொருளினையும் உடன் கூறியன்றே கூறற்பாலது? அவ்வாறன்றி அப்பொருட்டலைமையும் பன்மையும் பற்றிச் சொல்தொகுத்திறுத்தல் கண்டு அம்மரபு வழுவமைத்தற் கூறியவாறாயிற்று

ஒரு.

என்பது ஒரு பெயர்ப்பட நின்ற பொதுச் சொற்களைச் சொல்லுங்கால் ஆண்டுள்ள பொருளெல்லாம் எடுத்துச் சொல்லாது உயர்திணையிடத்தும் அஃறிணையிடத்தும் தெரிந்து வேறாகத் தலைமையானும் பன்மையானும் கூறுக. ஒரு பெயர்ப் பொதுச் சொல்லாவது ஒரு பெயருமாய்ப் பொதுச் சொல்லுமாய் வருவது. அது சேரி, நாடு, தோட்டம், காடு என்பன. சேரி, நாடு உயர்திணைப் பொதுச்சொல். தோட்டம் காடு அஃறிணைப் பொதுச் சொல்.

உ—ம்: சேரி என்பது பலரும் இருப்பது. அதனுட் சில பார்ப்பனக்குடி யுளவேல் அதனைப் பார்ப்பனச்சேரி ‡யென; பார்ப்பாரது தலைமை பற்றி; இது உயர்திணைக்கண் தலைமை பற்றி வந்தது. எயினர் நாடு, குற்றிளைஞர் நாடு என்பன பிறரும் ஆண்டுறைவார் உளர் ஆயினும் எயினர் குற்றிளைஞர் பலராதலான் உயர்திணைக்கண் பன்மை பற்றி வந்தன. தோட்டம் என்பது பல பொருளுந் தொக்கது. அதனுட் பிற புல்லும் ஆறும் உளவேனும் கமுகாயினும் தெங்காயினும் சிலவுளவாகிற் கமுகந்தோட்டம், தெங்கந்தோட்டம் என்பன அஃறிணைக்கண் தலைமை பற்றி வந்தன.

---

‡ சு. வே: என்பர். கழகப்பதிப்பு. என=என்க.

ஒடுவங்காடு, காரைக்காடு என்பன பிறபுல்லும் ஆறும் உள வேனும் ஒடுவை காரை பலவாதலால் அஃறிணைக் கண் பன்மை யாற் பெயர் பெற்றன என்றறிக. பார்ப்பார் பலராயினும் கமுகு பலவாயினும் தலைமையானும் பன்மையானும் பெற்ற பெயர் என்க. ஒன்றின முடித்தலான் அரசர் பெருந்தெரு, வயிர கடகம் ஆவுரிஞ்சுகுற்றி யென்பனவும் பொதுச் சொல் எனவும் கொள்க

பிற குறிப்புகள்.

"வயிர கடகம் என்பது ஒன்றென முடித்தலான் அடக்காமல் கமுகந் தோட்டம் என்றாற் போலத் தலைமை பற்றிய பெயராகக் கொள்ளத் தககது போல் தோன்றுகின்றது. மேற் கூறப்பட்ட கமுகந் தோட்டம் முதலிய பல் பொருட் டொகுதி யில் ஒவ்வொரு பொருளும் தனித்தனியாக இருக்கவே பல பொருளும் சேர்ந்துள்ளன. வயிர கடகம் என்பதில் வயிரமும் பிற மணிகளும் பொன்னும் சேர்த்து ஒரு பொருளாக அமைக்கப் பட்டு விட்டன. அதனால் வயிர கடகம் ஒரு பொருளே பல பொருட் டொகுதியன்று எனக் கொள்க." —பூவராகம் பிள்ளை.

ஆதித்தர் காலத்துக் கேற்ற உதாரணம் தந்தார், அவை:

"செட்டித் தெரு (உயர்திணை) அங்கு பிற இனத்தார் சிலரும் குடியிருப்பர்.

வெற்றிலைக் கொடிக்கால் (அஃறிணை) அங்கு சில அகத்தி முருங்கையும் நிற்கும்.

சிவன் கோயில்—இங்கு பிற தெய்வ உருவங்களும் இருக்கும்

வெற்றிலை பாக்குக் கடை—அங்கு பழம், சுருட்டு, புகை யிலை, தீப்பெட்டி பிறவும் உள.

எது சிறந்ததோ அல்லது மிகுதியோ அதன் பெயரால் பெயர் பெற்றது"

ஒருசார் மரபு பற்றியது

50. பெயரினும் தொழிலினும் பிரிபவை யெல்லாம்
மயங்கல் கூடா வழக்குவழிப் பட்டன.

ஆ. மொ.
இல.

The exclusion of opposit exes by the mention of nouns and verbs is in accordence with usage and it is not to be confused,

க. சு.

Nouns and verbs denoting all different subject should be (counted) together (only) according to usage and not to be confused.

பி. இ. நூ

நன். 3:2

இருதிணை ஆண்பெணுள் ஒன்றனை ஒழிக்கும்
பெயரும் வினையும் குறிப்பி னானே.

இல. வி. 324

பெயரினும் தொழிலினும் பிரிபவை யெல்லாம்
மயங்கல் கூடா வழக்கு வழிப் பட்டன.

முத்து. ஒ. 82

பெயரினும் வினையினும் பிரிபவை யெல்லாம்
வழுவிலவா மிருதிணை மருங் கினுமே.

இளம்.

இச்—எனின், இதுவும் மரபு வழுக் காத்தல் நுதலிற்று.

உரை: மேல் நின்ற அதிகாரத்தால் உயர்திணைக்கண்ணும். அஃறிணைக் கண்ணும் பெயரினானும் தொழிலினானும் பிரிந்து வருமவை யெல்லாம் மயங்குதற்குச் செல்லா; வழக்கு வழிப் பட்டன ஆகலான் என்பது, எ—று.

அவைதாம் பெண் ஒழி மிகு சொல்லும் ஆணொழி மிகு சொல்லும் என இருவகைப்படும்.

†வ—று : உயர்திணைக்கண் பெயரிற் பிரிந்த பெண்ணொழி மிகுசொல் வருமாறு : வடுகரசர் ஆயிரவர் மக்களையுடையர் எனவரும். அத்திணைக்கண் பெயரிற் பிரிந்த ஆண் ஒழி மிகு சொல் வருமாறு : பெருந்தேவி பொறையுயிர்த்த கட்டிற்கண் நால்வர் மக்கள் உளர் எனவரும்.

இனி அத்திணைக்கண் தொழிலிற் பிரிந்த பெண்ஒழி மிகு சொல் வருமாறு : அரசர் ஆயிர மக்களொடு தாவடி போயினார் எனவரும். அத்திணைக் கண் தொழிலிற் பிரிந்த ஆண்ஒழி மிகு சொல் வருமாறு: இன்று இவ்வூரெல்லாம் தைந்நீர் ஆடுப எனவரும்.

இனி அஃறிணைக்கண் வருமாறு : நம்மரசன் ஆயிரம் யானையுடையன் எனவரும்; இஃது அத்திணையிற் பெயரிற் பிரிந்த பெண் ஒழி மிகுசொல். நம்பி நூறு எருமையுடையன் எனவரும்; இஃது அத்திணையிற் பெயரிற் பிரிந்த ஆண் ஒழி மிகுசொல்.

இனி அத்திணைக்கண் தொழிலிற் பிரிந்து வருமாறு : இன்று இவ்வூர்ப் பெற்றம் எல்லாம் உழவொழிந்தன எனவரும். இஃது அத்திணைக்கண் தொழிலிற் பிரிந்த பெண் ஒழி மிகுசொல். இன்று இவ்வூர்ப் பெற்றம் எல்லாம் அறங்கறக்கும் எனவரும்; இஃது அத்திணைக்கண் தொழிலிற் பிரிந்த ஆணொழி மிகு சொல்.

இனி எல்லாம் என்றதனால் ஆணொழி மிகுசொல்லும் பெண்ணொழிமிகு சொல்லும் அன்றிச் சிறப்புப்பற்றி நிற்பன வும் பொதுவாய் நிற்பனவும் மிகுதி வகையான் நிற்பனவும் கொள்க. அவை வருமாறு: அரசர் பெருந்தெரு என்பது சிறப்புப் பற்றி வந்தது. ஆதீண்டு குற்றி, ஆன் அதர் என்பன பொதுவாய் நிற்பன.

---

† உதாரணங்களின் விளக்கம் இச்சூத்திர உரைகளின் இறுதியில் காண்க.

‡இனி மிகுதி வகையாற் சொல்லுவன வருமாறு : இவர் பெரிதும் கால் கொண்டோடுப. இவர் பெரிதும் சோறுண்ப எனவரும் உயர்திணைக்கண்.

இனி அஃறிணைக்கண் இவ்வெருது புற்றின்னும் எனவரும். இவையெல்லாம் மிகுதி வகையான் விளக்கினவாறு.

சேனா.

இ—ள் : உயர்திணைக்கண்ணும் அஃறிணைக்கண்ணும் பெயரினானும் வினையினானும் பொதுமையிற் பிரிந்து ஆண்மைக்கும் பெண்மைக்கும் உரியவாய் வருவனவெல்லாம் வழுவாகா, வழக்கு வழிப்பட்டன வாகலான், எ—று.

உயர்திணைக்கண்ணும் அஃறிணைக்கண்ணும் என்பது அதிகாரத்தான் வந்தது.

'தொடியோர் கொய்குழை யரும்பிய குமரி ஞாழல்' என்பது உயர்திணைக்கண் பெயரிற் பிரிந்த ஆண் ஒழி மிகு சொல். 'வடுகரசர் ஆயிரவர் மக்களையுடையர்' என்பது பெயரிற் பிரிந்த பெண் ஒழி மிகு சொல். 'இவர் வாழ்க்கைப் பட்டார். என்பது தொழிலிற் பிரிந்த ஆண் ஒழி மிகு சொல். 'இவர் கட்டில் ஏறினார்' என்பது தொழிலிற் பிரிந்த பெண் ஒழி மிகு சொல். 'நம்பி நூறு எருமையுடையன்' என்பது அஃறிணைக்கண் பெயரிற் பிரிந்த ஆணொழி மிகு சொல். 'நம்மரசன் ஆயிரம் யானையுடையன்' என்பது பெயரிற் பிரிந்த பெண் ஒழி மிகு சொல் தொடி செறித்தலும், மக்கட்டன்மையும், இவ்வாழ்க்கைப் படுதலும், கட்டிலேறுதலும், எருமைத் தன்மையும், யானைத் தன்மையும் ஒழிக்கப்படும் பொருட்கும் உண்மையான் பொதுவாய் நிற்கற்பாலன ஒருபாற்குரியவாய் வருதலின் மரபு வழுவமைத்தவாறு.

பிற சொல்லாற் பிரிவன, வேறுபடு வினையினும் இனத்தினும் சார்பினும்' (சொல் 53) எனவும், தெரிநிலையுடைய அஃறிணையியற்பெயர்' (சொல் 171) எனவும், 'நினையுங்

---

‡ கால் கொண்டோடுதலும் சோறுண்ணுதலும் யாவரும் செய்வன வாயினும் மிகுதி பற்றி ஒருவர் தொழிலாகக் கூறப்பட்டது.

காலைத் தத்த மரபின், வினையோ டல்லது பால் தெரி பிலவே' (சொல் 172) எனவும் முன் ஓதப்படுதலானும், ஆண்டு வழுவின் மையானும் ஈண்டுத் தாமே பிரிவனவே கொள்க.

தம்மாற்றாம் பிரியும் என்பார் 'பெயரினும் தொழிலினும்' என்றார். பெயர்க்கண்ணும் வினைக்கண்ணும் தாமே பிரிவன எனினும் அமையும்.

அஃறிணைக்கண் தொழிற் பிரிந்தன வுளவேற் கண்டு கொள்க. இன்று இவ்வூர்ப் பெற்றம் எல்லாம் அறம் கறக்கும், உழவொழிந்தன என உரையாசிரியர் காட்டினாரா லோவெனின் பெற்றம் என்னும் பொதுப் பெயர் கறத்தலும் உழுதலுமாகிய சிறப்பு வினையாற் பொதுமை நீங்குதல் வழுவின்மையான் ஈண்டைக் கெய்தாமையின் அவர்க்கது கருத்தன் றென்பது.

தெய்.

எண்ணின்கட் கிடந்ததோர் மரபு உணர்த்துதல் நுதலிற்று வழுக்காத்தலுமாம்.

*இ—ள்: உயர்திணைக்கண்ணும் அஃறிணைக்கண்ணும் பெயரானும் தொழிலானும் பொதுமையிற் பிரியும் பொருள் எல்லாம் எண்ணுங்கால், தமமுள் மயங்குதல் கூடாத வழக்கு வழிப்பட்டன; எ-று.

மா, பலா என்றவாறு: எனவே இனம் சேர எண்ணல் வேண்டும் என்றவாறாயிற்று; †எண்ணுங்கால் என்பது தந்து கொணர்ந்துரைத்தல் என்னுந் தந்திரவுத்தியால் வருகின்ற சூத்திரத்தினின்றும் கொணர்ந்துரைக்கப்பட்டது.

---

* இவ்வுரை பிறர் உரைகளின் வேறுபட்டது. சேனா வரையர் இதற்கு மறுப்புரையாமையின் தெய்வச்சிலை யாருக்கு முற்பட்டவர் அவர் என்பது பெறப்படும்.
"ஒரு பெயர்ப் பொதுச்சொல்" என்னும் முன்சூத்திரத் தில் உள்ள 'உயர்திணைமருங்கினும் அஃறிணை மருங் கினும்' என்பதை இச்சூத்திரத்தில் சேர்த்துக் கொண்டார் இவர்.

† அடுத்து வரும் சூத்திரத்தில் 'எண்ணுத்திணை' என்ப திலிருந்து 'எண்ணுங்கால்' என்று அமைத்துக் கொண்டார்.

உ-ம்: முனிவரும் அந்தணரும் சான்றோரும் எனவும், பாணரும் கூத்தரும் விறலியரும் எனவும், முத்தும் மணியும் பவளமும் பொன்னும் எனவும், மாவும் மருதும் புன்னையும் ஞாழலும் எனவும் எண்ணுக. இவை பெயர். எறிவாரும் எய்வாறும் வெட்டுவாரும் குத்துவாரும் எனவும், ஆடுவாரும் பாடுவாரும் நகுவாரும் எனவும், உண்பனவும் தின்பனவும் பருகுவனவும் நக்குவனவும் எனவும் எண்ணுக; இவை வினை.

அஃதேல்,

ஆவும் ஆனியற் பார்ப்பன மாக்களும்
பெண்டிரும் பிணியுடை யீரும் பேணித்
தென்புல வாழ்நர்க் கருங்கடன் இறுக்கும்
பொன்போற் புதல்வர்ப் பெறாஅ தீரும்
எம்மம்பு கடிவிடுதும் நும்மரண் சேர்மின் (புறம்.9)

எனக்காட்டி இதனுள் அடங்காதால் எனின் அவையும் உய்யத் தகுவார் இவர் என்னும் இனங்குறித்து நின்றனவென்று கொள்க. பிறவும் அன்ன.

நச்.

இஃது இருதிணையிருபாற்கும் பொதுவாகிய பெயர்க்கண் மரபு வழுக்காக்கின்றது.

இ—ள்: பெயரினும் தொழிலினும் பிரிபவை எல்லாம்—உயர்திணைக்கண்ணும் அஃறிணைக்கண்ணும் பெயரினானும் தொழிலினானும் பொதுமையிற் பிரிந்த ஆண்பாற்கும் பெண்பாற்கும் உரியவாய் வருவன வெல்லாம், மயங்கல் கூடா—வழுவாகா, வழக்கு வழிப்பட்டன—வழக்கின்கண் அடிப்பட்டன ஆகலான், எ—று.

உ-ம்: 'பெருந்தேவி பொறையுயிர்த்த கட்டிற்கீழ் நால்வர் மக்கள் உளர்; இது பெயரிற் பிரிந்த ஆண் ஒழி மிகு சொல். வடுகரசர் ஆயிரவர் மக்களையுடையவர்' இது தொழிலிற் பிரிந்த பெண் ஒழி மிகு சொல்.

'இவர் வாழ்க்கைப்பட்டார்' இது தொழிலிற் பிரிந்த ஆண் ஒழி மிகு சொல். 'இவர் கட்டில் ஏறினார்.' இது தொழிலிற்

பிரிந்த பெண் ஒழி மிகு சொல். இவை உயர்திணைக்கண் பெய ரானும் தொழிலானும் பிரிந்தன.

'நம்பி நூறு எருமையுடையன்' இது பெயரிற் பிரிந்த ஆண் ஒழி மிகு சொல். 'நம் அரசன் ஆயிரம் யானை யுடையன்' இது பெயரிற் பிரிந்த பெண் ஒழி மிகு சொல்.

'யானை ஓடிற்று' என்பது தொழிலிற் பிரிந்த பெண் ஒழி மிகு சொல். 'யானை நடந்தது' இது தொழிலிற் பிரிந்த ஆண் ஒழி மிகு சொல்; இவை அஃறிணைக்கண் பெயரானும் தொழிலானும் பிரிந்தன. இவை இரு பெயர்க்கும் பொதுவா யினும் ஒருபாற்கண் தாமே பிரிந்தன.

இவர் பெரிதும் சொல்லுமாறு வல்லவர், இவர் பெரிதும் கால் கொண்டு ஓடுவார் எனத் தொழிலின் மிகுதி விளக்கி வருவனவும் கொள்க.

கல்.

என்-எனின், ஆண் பெண் என்னும் இருபாற்கும் பொது வாகிய பெயர்க்கண் மரபு வழுக்காத்தல் நுதலிற்று.

இ-ள்: பெயரினும் தொழிலினும் ஆண் பெண் என்னும் இருபாற்கும் உரிய பொதுமையிற் பிரிந்து ஒருபாற்கண்ணே நடப்பனவெல்லாம் இலக்கண முறைமையின் மயங்கினவென்று மாற்றல்கூடா; யாதோ காரணம் எனின், அம்மயக்கம் வழக்கின் அடிப்பட்டவதனான் என்றவாறு. அப்பொதுப் பெயர் உயர் திணை அஃறிணை, ஆண்பால் பெண்பால் எனவும் பெயர் வினை யோடு வைத்து உறழ எண் வகைப்படும். அவையாவன: உயர் திணைக்கண் பெயரிற் பிரிந்த பெண் ஒழி மிகு சொல்லும் ஆண் ஒழி மிகு சொல்லும், தொழிலிற் பிரிந்த பெண் ஒழி மிகு சொல்லும் ஆண் ஒழி மிகு சொல்லும், அஃறிணைக்கண் பெயரிற் பிரிந்த பெண் ஒழி மிகு சொல்லும் ஆண் ஒழி மிகு சொல்லும் தொழிலிற் பிரிந்த பெண்ஒழி மிகு சொல்லும் ஆண் ஒழி மிகு சொல்லும் என இவை.

உ-ம்: வடுகரசர் ஆயிரவர் மக்களையுடையர், பெருந் தேவி பொறையுயிர்த்த கட்டிற்கீழ் நால்வர் மக்கள் உளர் எனவும்; அரசனோடு ஆயிரவர் தாவடி போயினார், இன்று இவ் வூரார் எல்லாம் தை நீர் ஆடுப எனவும் உயர்திணைக்கண் பெய

ரினும் தொழிலினும் பிரிந்த பெண் ஒழி மிகு சொல்லும், ஆண் ஒழி மிகு சொல்லும்: நம் அரசன் ஆயிரம் யானையையுடையன்,' 'நம்பி நூறு எருமையுடையன்' எனவும், 'இன்று இவ்வூர்ப் பெற்றம் எல்லாம் உழவொழிந்தன,' 'இன்று இவ்வூர்ப் பெற்றம் எல்லாம் அறத்திற்குக் கறக்கும்' எனவும் வரும். இவை அஃறிணைக்கண் பெயரினும் தொழிலினும் பிரிந்த பெண் ஒழி மிகு சொல்லும் ஆண் ஒழி மிகு சொல்லும் ஆம்.

எல்லாம் என்றதனான் மேற் சூத்திரத்தோடு பெயர்ப் பொதுச் சொல் அன்றித் தலைமை பற்றி வருவனவும் சிறு பான்மை பற்றி வருவனவும் கொள்க. ஆதீண்டு குற்றி, வயிர கடகம் என்னுந் தொடக்கத்தன.

இன்னும் அதனானே இனம் செப்பாது ஒரு தொழிற்கண் மிகை விளக்குதற் பொருட்டாக வருவனவும் அமைத்துக் கொள்க. 'இவர் பெரிதும் சொல்லுமாறு வல்லர்;' 'இவர் பெரிதும் கால் கொண்டோடுப;' 'இவ்வெருது புல் தின்னும்' எனவரும்.

இதனாற் சொல்லியது இருதிணையிடத்தும் ஆண்பாற்கும் பெண்பாற்கும் ஒரு சொல்லுதற்கண்ணேயுரிய பெயர்கள், அப் பொதுமை ஒழிய ஒருபாற்கண்ணேயோடுதல் மரபன்று; மரபன் றாயினும் அமையும் என்று மரபு வழுவமைத்தவாறு:

இலேசினாற் கொண்டனவும் மரபுவழுவமைதி யென வுணர்க.

ஒரு.

என்பது, உயர்திணைக்கண்ணும் அஃறிணைக்கண்ணும் பெயரினானும் தொழிலினானும் பிரிந்து வருமவை யெல்லாம் வழுவாகா, வழக்குவழிப்பட்டன வாகலான். உயர்திணை அஃறிணை யென்பன மேனின்ற அதிகாரத்தாற் கொள்க. அவை மயங்காது வழங்குமிடத்துப் பெண் ஒழி மிகு சொல்லும் ஆண் ஒழி மிகு சொல்லும் என்று இரண்டு வகைப்படும்.

உ—ம் : வடுசரயராயிரவர் மக்களை யுடையர்' என்றக்கால் மக்கள் என்பது பொதுவாயினும் இது பெயரிற் பிரிந்த பெண் ஒழிமிகு சொல். 'பெருந்தேவி கருவுயிர்த்த கட்டிற்கீழ் நால்வர்

மக்களி உளர்' என்றால் இது பெயரிற் பிரிந்த ஆண்ஒழி மிகு சொல். 'அரசர் ஆயிரவர் மக்களொடு தாவடி போயினார்', 'இன்றிச் சேரியாரும் அச்சேரியாரும் பொருப' இவை தொழிலிற் பிரிந்த பெண் ஒழிமிகு சொல். 'இன்று இவ்வூர் எல்லாம் தைநீர் ஆடுப, குறுங்காணம் போப' இவை தொழிலிற் பிரிந்த ஆண்ஒழி மிகு சொல். உயர் திணைக்கண் பெயரானும் தொழிலானும் ஆண் பெண் பிரிந்தவாறு காண்க.

'நம்மரசன் ஆயிரம் யானை யுடையன்' என இது பெயரிற் பிரிந்த பெண்ஒழி மிகு சொல்; யானை பொது. 'நம்பி நூறு எருமையுடையன்' என்றக்கால் இது பெயரிற் பிரிந்த ஆண் ஒழி மிகு சொல்; எருமை பொது. 'இன்றிவ்வூர்ப் பெற்றம் எல்லாம் உழவொழிந்தன' என இது தொழிலிற் பிரிந்த பெண் ஒழிமிகு சொல். 'இன்றிவ்வூர்ப் பெற்றம் எல்லாம் அறத்திற்குக் கறக்கும்' எனத் தொழிலிற் பிரிந்த ஆண் ஒழி மிகு சொல். பெற்றம் பொது. அஃறிணைக்கண் [1] பெயராயினும் தொழிலாயினும் ஆண் பெண் பிரிந்தவாறு காண்க.

இனி எல்லாம் என்றதனால் இவர் பெரிதும் சொல்லுமாறு வல்லர், இவர் பெரிதும் கால் கொண்டோடுவார், இவர் மிகவும் சோறுண்பர் எனத் தொழில் மிகுதியுணர்த்துவனவும் கொள்க. மற்றையார் சொல்லுமாறறியார், கைகொண்டோடுவார், புற்றின்பார் என்பது சொல்லியதன்று மிகுதியுரைத்தவாறு காண்க.

ஆதி.

உயர்திணை அஃறிணை இரண்டின் பொதுச் சொற்கள் பெயராலும் வினையினாலும் எல்லாம் (ஆண் பெண் எனப்) பிரிந்து நிற்பவை; ஆதலின் (பால் யாது என) மயக்கத்துக்கு இடம் இல்லை, உலகவழக்கு தழுவிய முறையே நிற்பன.

சுந்தரம்—பொதுப் பெயர் : போருக்குச் சென்றான் எனின் ஆண்பால்; மகப்பேறு உற்றாள் எனின் பெண்பால்

கோழி—பொதுப் பெயர் : கூவிற்று எனின் சேவல்; முட்டையிட்டது எனின் பெட்டை.

படிப்பவர்—பொதுப்பெயர் : மேரிராணி கல்லூரியில் படிப்பவர்—இங்கு 'படிப்பவர்' பெண்பால் காட்டிற்று—இடத்தால்.

உ. வே. 1. பெயரானும் தொழிலானும்

சிங்கம் —பொதுப் பெயர்: இச்சிங்கத்தின் பிடரி நீளமானது. இங்கு சிங்கம் ஆணைக் குறிக்கின்றது—பிடரிமயிர் என்னும் பெயரால்.

மயில் தோகை விரித்தாடியது. மயில்—ஆண். அவர் வயலுக்கு உழப்போனார்—அவர் ஆண். இவ்வாறு பொதுப் பெயர்கள் சார்ந்த இடத்தாலும் வினையாலும் ஆண் பெண் என அறிய நிற்பன.

பி. கு.

உதாரண விளக்கம் :

வடுகரசர் ஆயிரவர் மக்களையுடையார் : —மக்கள் உயர் திணைப் பெயர். ஆண் பெண் இருபாலார்க்கும் பொது. உடையர் என்னும் குறிப்பு வினையும் இரு பாலாரையும் தழுவியது. வடுகரசர் என்பதன் காரண மாக மக்கள் ஆடவரைக் குறிப்பால் உணர்த்தும். எனவே மக்கள் இங்குப் பெண் ஒழிமித சொல். அதா வது பெண்ணிற் பிரிந்த சொல்.

பெருந்தேவி பொறையுயிர்த்த கட்டிற்கண் நால்வர் மக்கள் உளர் :—உயர் இருபாற்கும் பொதுவாகிய மக்கள் என்பது பொறையுயிர்த்தல் என்னும் வினையால் குறிப் பாக ஆணை ஒழித்துப் பெண்ணை யுணர்த்தியது. இளம்பூரணர் பெருந்தேவி என்ற பெயர் காரணமாக ஆணொழித்தது என்பர்.

அரசர் ஆயிர மக்களொடு தாவடி போயினார்:— மக்கள் உயர் இருபாற் குரியது; தாவடி போயினார் என்னும் வினையால் பெண் ஒழித்து ஆண்பாலுணர்த்தப் பட்டது.

இன்று இவ்வூரெல்லாம் தைந் நீராடுப :— இவ்வூர் உயர் இருபாற்கும் உரியது. தைந்நீர் ஆடுதல் பெண்பாலார் தொழில்; எனவே அத்தொழிலால் இவ்வூர் ஆண்பாலை ஒழித்துப் பெண்பாலை யுணர்த்தியது.

தொடியோர் கொய் குழை யரும்பிய குமரி ஞாழல் : தொடி யோர் என்பது தொடியுடைய ஆண் பெண் இரு பாலார்க்கும் பொது . அது குழை கொய்தல் என்னும்

வினையால்—குழை கொய்தல் பெண்டிர்க்குரியதாத லால் ஆணை ஒழித்துப் பெண்ணுக்காயிற்று.
(இதைப் பெயரிற் பிரிந்ததாகச் சேனாவரையர் காட்டியது பொருந்தாது)

இவர் வாழ்க்கைப் பட்டார் :— உயர் இருபாற்கும் பொதுவாகிய இவர் என்பது, வாழ்க்கைப் படுதல் பெண்ணுக் குரியதாதலின் வாழ்க்கைப் பட்டார் என்னும் வினை காரணமாக ஆணொழித்துப் பெண்ணுக்காயிற்று.

இவர் கட்டில் ஏறினார் :— (கட்டில்-அரச கட்டில்) இவர் என்னும் உயர் இருபாற் பொதுச்சொல் கட்டில் ஏறுதல் ஆடவர்க்காதலின் கட்டில் ஏறினார் என்னும் வினையினால் பெண்ணொழித்து ஆண்பாலை உணர்த்தியது.

நம்மரசன் ஆயிரம் யானையுடையன் :— அஃறிணை யானை, களிறுக்கும் பிடிக்கும் பொதுப்பெயர்; அரசன் என்னும் பெயர் காரணமாக அது பிடியினையொழித்துக் களிற்றினை யுணர்த்தியது.

நம்பிநூறு எருமையை யுடையன் :— எருமை ஆண் பெண் இரண்டற்கும் பொதுவானது. நம்பிநூறு எருமைகளை யுடைத்தாயிருப்பது பாலுக்காதலின் நம்பி என்னும் பெயர் காரணமாக எருமை என்பது ஆண் ஒழித்துப் பெண்ணுக்குரியதாயிற்று.

இவ்வூர்ப் பெற்றம எல்லாம் உழவு ஒழிந்தன :—(பெற்றம்—மாடு) காளைக்கும், பசுவுக்கும் உரிய பெற்றம் என்பது, உழவு ஒழிதல் என்னும் வினையால் பசுவை ஒழித்துக் காளைக் காயிற்று; பெண் ஒழித்து ஆணுக்காயிற்று.

இவ்வூர்ப் பெற்றம் எல்லாம் அறம் கறக்கும் :— பெற்றம் என்பது கறக்கும் என்னும் வினையால் ஆணை ஒழித்துப் பெண்ணுக்குரியதாயிற்று.

அரசர் பெருந்தெரு :— மற்றையோரும் செல்லும் தெருவாயினும் சிறப்புக்காரணமாக மற்றையோரை ஒழித்து அரசர்க்கே கூறப்பட்டது.

ஆதீண்டுகுற்றி :— ஆதீண்டுதற்குரியதாகக் குற்றி இருந்தாலும் பிறவும் தீண்டுமாறே அமைதலின் ஆவேதீண்டும் குற்றி என்ற சிறப்பை ஒழித்துப் பிறவற்றுக்கும் உரிய பொது நிலையுடையதாயிற்று.

ஆன்அதர் : ஆன் செல்லும் வழி. பிற விலங்குகளும் செல்லும் வழியாகவும் இருத்தலின் ஆனே செல்லும் சிறப்பை ஒழித்து யாவற்றுக்கும் பொதுவாயிற்று.

இவர் பெரிதும் கால் கொண்டோடுப :— ஓடுதல் தொழிலுக்குப் பெரிதும் காலே பயன்படுதலின் அத்தொழிற்குப் பயன்படும் கை (வீசுதல்) ஒழிக்கப்பட்டது.

இவர் பெரிதும் சோறுண்ப :— பிற கறிமுதலியன உண்ணப் படினும் மிகுதியும் சோறே உண்ணப்படுதலின் அக்கறி முதலியன ஒழிக்கப்பட்டன.

இவ் வெருது புல் தின்னும் :—பருத்தி முதலிய தின்னினும் மிகுதி காரணமாக அவற்றை ஒழித்துப் புல் தின்னும் எனப்பட்டது.

இவ்வுதாரணங்களுள் அஃறிணைத் தொடர்பானவை சேனாவரையரால் மறுக்கப்பட்டன; அவர் உரையிற்காண்க. யானை ஓடிற்று என்பதைப் பெண் ஒழி மிகுசொல்லுக்கும் யானை நடந்தது என்பதை ஆணொழி மிகு சொல்லுக்கும் காட்டியது சிறப்புடையதன்று. ஓடுதலும் நடத்தலும் இரண்டற்குமேயுரியன.

திணை வழு வமைதி

51. பலவயி னானும் எண்ணுத்திணை விரவுப்பெயர்
அஃறிணை முடிபின செய்யு ளுள்ளே.

ஆ. மொ.

இல.

The nouns belonging to
High class and Non- class may end
Generally in pridicate belonging to
Non-class in poetry

க. சு.

(A sentence in which) uyartinai (high class) and akrinai (non - class) nouns are connected by and, may generally end with the akrinai predicate in poetry

பி. இ. நா.

தேமி. சொ. 9

எண்ணும் இருதிணையும் எய்தும் அஃறிணையா

நன். 378. திணைபால் பொருள்பல விரவின சிறப்பினும்
மிகவினும் இழிபினும் ஒருமுடி பினவே.

இல. வி. 298.

திணைவிரவு எண்ணுப்பெயர் சிறப்பினும்மிகவினும்
இழிபினும் ஒருமுடிபு எய்தும் என்ப

முத்து. ஒ. 83.

திணைவிரவுப்பெயர் செய்யுள் மருங்கே
அஃறிணை முடிபின வாகும் என்ப.

இளம்.

இ—ள் எனின், இது திணை வழு அமையுமாறு கூறுதல் நுதலிற்று

உரை: பல விடத்தினானும் உயர்திணையும் அஃறிணையும் விரவி எண்ணப்படும் பொருள் அஃறிணை முடிபினவாம்; செய்யுளகத்து, எ—று.

வ—று: வடுகர் அருவாளர் வான்கரு நாடர்
சுடுகாடு பேய்எருமை என்றிவை யாறும்
குறுகார் அறிவுடையார்

(நன். 378. சங்கர. உரை, மேற்)

எனவரும்.

[1]இனிப் 'பலவயினானும் அஃறிணை முடிபின செய்யுளுள்ளே' எனவே, சிலவயினான் அஃறிணை விரவாது உயர்திணையான் எண்ணி அஃறிணை முடிபிற்றாகலும் உண்டு செய்யுளகத்து என்றவாறாம். அது வருமாறு:

பாணன் பறையன் துடியன் கடம்பனென்று
இந்நான் கல்லது குடியு மில்லை (புறம் 335)

எனவரும்.

சேனா.

இ—ள்: திணை விராய் எண்ணப்பட்ட பெயர் செய்யுளகத்துப் பெரும்பான்மையும் அஃறிணைச் சொற்கொண்டு முடியும் எ—று.

உ-ம்: வடுகர் அருவாளர் வான்கரு நாடர்
சுடுகாடு பேய்எருமை என்றிவை யாறும்
குறுகார் அறிவுடை யார்.

எனவும்,

கடுஞ்சினத்த கொல்களிறும்
கதழ்பரிய கலிமாவும்
நெடுங்கொடிய நிமிர்தேரும்
நெஞ்சுடைய புகல்மறவரும்என
நான்குடன் மாண்டதாயினும் (புறம். 55)

எனவும் வரும்.

எண்ணுத் திணை விரவுப்பெயர் பெரும்பான்மையும் அஃறிணைச் சொற்கொண்டு முடியும் எனவே, சிறுபான்மை உயர்திணைச் சொற்கொண்டு முடியவும் பெறும் என்பதாம்.

பார்ப்பார் அறவோர் பசுப்பத் தினிப்பெண்டிர்
மூததோர் குழவியெனுமிவரைக் கைவிட்டு
(சிலப்.21: 53. 54)

1. இதனைச் சேனாவரையர் மறுப்பர். அவரை நச்சினார்க்கினியர் மறுத்து இளம்பூரணருரையை ஏற்பர். பார்க்க. கல்லாடர் இளம்பூரணர் கருத்தினர்.

எனவும்,

பார்ப்பார் தவரே சுமந்தார் பிணிப்பட்டார்
மூத்தார் இளையர் பசுப்பெண்டிர் என்றிவர்கட்கு
ஆற்ற வழிவிலங்கி னாரே பிறப்பிடைப்
போற்றி யெனப்படு வார் (ஆசாரக் கோவை. 64)

எனவும் வரும்.

இருதிணைப் பெயரும் விராய் வந்து ஒருதிணைச் சொல்லான் முடிதல் வழுவாயினும், செய்யுளகத்து அமைக என திணைவழு அமைத்தவாறு.

பாணன் பறையன் துடியன் கடம்பன் என்று
இந்நான் கல்லது குடியும் இல்லை. (புறம். 335)

என இருதிணைப் பெயரும் விரவி வாராது உயர்திணைப் பெயரே வந்து செய்யுளுள் அஃறிணை முடிபு கொண்டன என்று உரையாசிரியர் கூறினாரால் எனின், *பாணன் முதலாயினாரைக் குடியென்று சுட்டிய வழிக் குடிக்கேற்ற தொகை கொடுத்தல் வழுவன்மையான் அவ்வுரை போலியுரை யென்க. குடியென்று சுட்டாதவழிப் பாணன் பறையன் துடியன் கடம்பன் என்று இந்நால்வருமல்லது குடியில்லை யென்றேயாம்.

தம்முடைய தண்ணளியும் தாமும் தம் மான்தேரும்
எம்மை நினையாது விட்டனரேல் விட்டகல்க (சிலப் 7: 32)

எனவும்,

யானுந் தோழியும் ஆயமும் ஆடுந் துறை நண்ணித்
தானுந் தேரும் பாகனும் வந்தென் நலனுண்டான்
(யா. வி 28 உரைமேற்.)

எனவும் இவையெவ்வாறு வந்தனவோ எனின் அவை தலைமைப் பொருளையும் தலைமையில் பொருளையும் விராய் எண்ணித் தலைமைப் பொருட்கு வினை கொடுப்பவே தலைமையில் பொருளும் முடிந்தன வாவதோர் முறைமை பற்றி வந்தன ஈண்டைக்கு எய்தா என்பது. தானும் தன் புரவியும் தோன்றினன் என்பதும் அது.

---

* இம்மறுப்புரையை நச்சினார்க்கினியர் மறுக்குமாறு அவருரையிற்காண்க.

தெய்.

திணை வழுவமைந்தலை நுதலிற்று.

இ—ள்: எண்ணின் கண் திணை விரவி வரும் பெயர் பெரும் பான்மையும் அஃறிணை முடிபின செய்யுளுள்;எ—று.

எனவே சிறுபான்மை உயர்திணையான் முடியவும் பெறும் என்று கொள்க.

உ—ம்: கோலஞ்சி வாழும் குடியும் குடிதழீஇ
[1]ஆல்வீழ்பு போலும் அமைச்சனும் — வேலின்
கடைஅணிபோற் றிண்ணியான் காப்புமிம் மூன்றும்
படைவேந்தன் பற்று விடல் (திரிகடுகம். 53)

இது விரவி எண்ணி அஃறிணையான் முடிந்தது.

அங்கண் விசும்பின் அகனிலாப் பாரிக்கும்
திங்களும் சான்றோரும் ஒப்பர் (நாலடி. 151)

எனவும்,

பார்ப்பார் தவரே சுமந்தார் பிணிப்பட்டார்
மூத்தார் இளையர் பசுப்பெண்டிர் என்றிவர்கட்
காற்ற வழிவிலகி னாரே பிறப்பிடைப்
போற்றி யெனப்படு வார் (ஆசார. 64)

எனவும் இவை உயர்திணையான் முடிந்தன. யானையும் குதிரையும் வீரரும் போர்க்களத்துப் பட்டன; அரசனும் படையும் பட்டன எனவும் வழக்கின் கண்ணும் வருமால் எனின், [2]மொழிந்த பொருளோடொன்ற வைத்தல் என்னும் தந்திர உத்தியால் இச் சூத்திரத்திற்குப் பலவயினானும் அஃறிணை முடிபின செய்யுளுள் என்றமையான், சிலவயினான் வழக்கினுள்ளும் விரவி வந்து தலைமையும் பன்மையும் பற்றி வந்து அஃறிணையான் முடியவும் பெறும் என்று கொள்க.

நச்:

இது திணை வழு அமையுமாறு கூறுகின்றது.

---

* க. வே: 1 ஆலம்வீழ்
2 ஒப்பக் கூறல் என்னும் தந்திரவுத்தியால்

இ—ள்: பலவயினானும் எண்ணுத்திணை விரவுப் பெயர்— பல இடத்தும திணைவிராய் எண்ணப்பட்ட பெயர், செய்யுளுள்ளே அஃறிணை முடிபின—செய்யுளகத்துப் பெரும்பான்மையும் அஃறிணைப் சொற் கொண்டு முடியும், எ—று.

'வடுகர் அருவாளர் வான்கரு நாடர்
சுடுகாடு பேயெருமை யென்றிவை யாறும்
குறுகா ரறிவுடையார்'' (நன். 378. சங். உரை. மேற்.)

கடுஞ்சினத்த கொல்களிறும் கதழ்பரிய கலிமாவும்
நெடுங் கொடிய நிமிர்தேரும் நெஞ்சுடைய புகல் மறவரும் என
நான்குடன் மாண்ட தாயினும் (புறம். 55: 7—9)

எனவரும்.

பல வயினானும் என்றமையான், சிலவயினான் திணை விரவாது உயர்திணையான் எண்ணி அஃறிணையான் முடிவனவும், திணை விராய் எண்ணி உயர்திணையான் முடிவனவும் கொள்க.

†பாணன் பறையன் துடியன் கடம்பன் என்று
இந்நான் கல்லது குடியும் இல்லை (புறம். 335. 7,8)

என்றது பாண்குடி, பறைக்குடி எனக் குடியைச் சுட்டி நில்லாது பாணன் பறையன் எனப் பால்காட்டி நிற்றலான், உயர்திணைப் பொருள் நின்று அஃறிணை முடிபு கொண்டனவேயாம்.

பார்ப்பார் தவரே சுமந்தோர் பிணிப்பட்டார்
மூத்தார் இளையார் பசுப்பெண்டிர் என்றிவர்கட்கு
ஆற்ற வழிவிலங்கி னாரே பிறப்பிடைப்
போற்றி யெனப்படு வார். (ஆசார. 64)

பார்ப்பார் அறவோர் பசுபத் தினிப்பெண்டிர்
மூத்தோர் குழவி எனும்வரைக் கைவிட்டு
(சிலப். 23; 53, 54)

இவை திணை விராய் எண்ணி உயர்திணையான் முடிந்தன.

உயர்திணையும் பொருள் என்னும் பொதுமையான் அஃறிணைக்கண் அடங்குதலானும், உயர்திணைக்கண்

---

† சேனாவரையர்க்கு மறுப்பு.

அஃறிணை அவ்வாறு அடங்காமையானும் ஆசிரியர் அஃறிணை முடிபின என்றார்.

திணை விராய் எண்ணி அஃறிணையானும் உயர்திணை யானும் முடிந்தது தலைமைபற்றியும் பன்மை பற்றியும் இழிவு பற்றியும் எனவுணர்க.

'தானுந்தேரும் பாகனும் வந்தென் நலனுண்டான்,' 'யானுந் தோழியும்' (யா. வி. 28. மேற்) என்றாற்போல்வன தலைமைப் பொருட்கு வினை கொடுப்பவே தலைமையில் பொருளும் உடன் முடிந்ததோர் முறைமைபற்றி வந்தனவாம்.

கல்.

என்—எனின், செய்யுளகத்துத் திணைவழுவமையுமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ—ள்: பலவிடத்தானும் திணை விரவி எண்ணப்படும் பெயர் அஃறிணைமுடிபினவாம் செய்யுளகத்து, எ—று.

வடுகர் அருவாளர் வான்கரு நாடர்
சுடுகாடு பேயெருமை யென்றிவை யாறும்
குறுகார் அறிவுடை யார்

எனவரும். பலவயினானும் என்றதனான் சிலவயின் திணை விரவாது உயர்திணையான் எண்ணி அஃறிணையான் முடிவன கொள்க என்பது.

பாணன் பறையன் துடியன் கடம்பன் என்று
இந்நான் கல்லது குடியும் இல்லை.

* சிலவயின் திணைவிரவி எண்ணி உயர்திணையான் முடிவனவும் கொள்ளாமோ எனின், சான்றோர் செய்யுட்கு அவ்வாறு வருவனவாய் இன்மையிற் கொள்ளாம் என்பது. வடுகர் அருவாளர் என்பதூஉம் சான்றோர் செய்யுள் அன்றோ வெனின்,

"கடுஞ்சினத்த கொல்களிறும் கதழ்பரிய கலிமாவும்
நெடுங்கொடிய நிமிர்தேரும் நெஞ்சுடைய புகல்
மறவரும் என

---

*இக்கருத்து ஏற்பதற்கில்லை. முன்னோர் காட்டிய உதாரணங்கள் உளவே.

நான்குடன் மாண்டதாயினும்''
என்பதும் உண்மையின் அமையும் என்பது.

அஃதேல் ''திங்களும் சான்றோரும் ஒப்பர்'' எனவும், வேந்தின் பெரும்பதி மண்ணாண் மாந்த ரீங்கிம் மூவரிதற் குரியரே'' எனவும் சான்றோர் செய்யுளுள்ளும் வருமால் எனின், திங்களும் பதியும் என்பன அஃறிணை முடிபின எனினும், தாம் உயர்திணைப் பொருளாகலான் அவை இந்நிகரனவல்ல, இவற்றின்கட் சிறுபான்மை வழுவினையும் இப்பலவயினானும் என்றதனானாதல் அதிகாரப் புறனடையானாதல் அமைத்தும் என்பது

இதனாற் சொல்லியது செய்யுட்கண் திணைவிரவி எண்ணிய வழிப் பொதுவாக முடியாது ஒரு திணையான் முடிவது கண்டு அதனை அமைத்தவாறு.

இனிப் பொது முடிபிலவென்று அஃறிணை முடிபிற்றாதற் குக் காரணம் என்னோவெனின் அவ்வாறெண்ணிய வுயர்திணை யும் பொருள் என்னும் பொதுமையான் அஃறிணையுள் அடங்கும்; உயர்திணையுள் அஃறிணை அவ்வாறடங்காது என்பது போலும்.

ஒரு.

என்பது பலவிடத்தினும் உயர்திணையும் அஃறிணையும் தம்முள் விராய் எண்ணப்படும் பொருள் செய்யுளிடத் தஃறிணைச் சொற்கொண்டு முடியும்.

உ—ம்: ''வடுகர் அருவாளர் வான்கரு நாடர், சுடுகாடு பேய் எருமை என்றிவையாறும் குறுகார் அறிவுடையார்'' எனவரும். பலவயினானும் என்றதனாற் சிலவயினாற்றிணை விரவாது உயர் திணையான் எண்ணி யஃறிணையான் முடிவனவும், திணைவிரய் எண்ணி உயர்திணையான் முடிவனவும் கொள்க. உ—ம் பாணன் பறையன் துடியன் கடம்பன் என்று இந்நான்கல்லது குடியும் இல்லை (புறம் 335)இது, திணைவிரவாது வந்து அஃறிணையான் முடிந்தது. பார்ப்பார் தவரே சுமந்தார் பிணிப்பட்டார் மூத்தார் இளையார் பசுப்பெண்டிர் என்றிவர்கட்காற்ற வழிவிலங் கினாரே பிறப்பிடைப், போற்றி யெனப்படுவார், ''எருதும்

உழவனும் வந்தார் ஒருகுட நீர் தாராயாயர்மகள்", "மூர்க்கனும் முதலையும் கொண்டது விடார்; நங்கையும் கிளியும் உண்டார், வேந்தன் பெரும்பதி மண்ணாளி மாக்கள் ஈங்கிவர் மூவர் இதற்குரியோரே", "வண்டாரோதி நீயும் நல்லை, தண்டார் மார்பின் இவரும் நல்லாண், ஒலிப்பாட்டின் இவ்வூரும் நன்றே, தீயோர் யாவரும் இல்லை" என இவை திணைவிராய் எண்ணியுயர் திணையான் முடிந்தவாறு காண்க.

பி.கு.

உயர்திணையும் அஃறிணையும் விரவி அஃறிணை முடிபு கொள்ளுதல் பெரும்பான்மை; உயர்திணைமுடிபு கொள்ளுதல் சிறுபான்மை; உயர்திணையே எண்ணி அஃறிணை முடிபு கொள்ளுதலும் உண்டு என்னும் இம்மூன்று கருத்துகளையும் பார்க்கும் போது திணை விரவிவருவன எந்த வினையினாலும் முடியலாம் என்ற கருத்துக்கு வரநேரும்.

பலபொருள் ஒருசொல் பற்றியது

52. **வினைவேறு படூஉம் பலபொருள் ஒருசொல்**
வினைவேறு படாஅப் பலபொருள் ஒருசொல் என்று
ஆயிரு வகைய பலபொருள் ஒருசொல்.

ஆ. மொ.

இல.

One word for many senses falls into two kinds
they are those which differ in having
verbs and those which do not differ

க. சு.

Polysemes (homonyms) are of two classes.
Polysemes which take different verbs
and polysemes which do not take
different verbs

பீ. இ. நா.

முத்து. ஒ. 84.

வினைவேறு படூஉம் பலபொருள் ஒருமொழியும்
வினைவேறு படாஅப் பலபொருள் ஒருமொழியும்
எனவிரு திறத்தவாம் பலபொருள் ஒருமொழி.

இளம்.

இச்—எனின், பலபொருள் ஒருசொல்லின் ‡வகைமை யுணர்த்துதல் நுதலிற்று.

†உரை: வினையான் வேறுபடும் பலபொருள் ஒரு சொல்லும் வினையான் வேறுபடாத பலபொருள் ஒரு சொல்லும் என அவ்விரண்டு வகைப்படும் பலபொருள் ஒருசொல், எ—று.

மற்றொரு பிரதியிற் கண்ட உரை:

இச்—எனின், ஒரு சொல்லான் வரும் பலபொருள்வகை கூறுதல் நுதலிற்று.

‡உரை: பல்பொருள் குறிக்கும் ஒருசொல் வினை வேறு படுகின்ற பலபொருள் ஒரு சொல் என, வினைவேறு படா அப் பல பொருள் ஒரு சொல் என இருவகைப்படும், எ—று.

பலபொருள் குறிக்கும் ஒருசொல்லினைப் பிற வகைப் படுத்திப் பகுத்தல் ஒல்லும் எனினும், வேறுபடுத்திக் கோடற் கண் வினையே சிறப்புடைமையின் இங்ஙனம் வகுத்தோதினார்.

52, 53, 54 எண்களுள்ள சூத்திரங்களைத் தொகுத்த கருத்துகளை 54 ஆம் சூத்திர உரைகளின் பின்னர்க் காண்க.

‡ இச்சூத்திரம் பலபொருள் ஒருசொல் இருவகைப்படும் என்பதுபோல் அமையினும் பலபொருள் ஒருசொல் ஒன்றே வினை வேறு படும் பலபொருள் ஒருசொல் நிலையிலும், வினை வேறு படாப் பலபொருள் ஒரு சொல் நிலையிலும் வரும் என்றதாகக் கொள்க. ஒருசொல் இருவகையில் வரும் என்பது கருத்து. —சிவ.

† இருவகையில் உரை யிருப்பினும் கருத்து ஒன்றே.

சேனா.

இ—ள்: வினை வேறுபடும் பலபொருள் ஒருசொல்லும் வினை வேறுபடாப் பலபொருள் ஒருசொல்லும் என இரண்டு வகைப்படும் பலபொருள் ஒரு சொல், எ—று.

இனமும் சார்பும் உளவேனும் வேறு படுத்தற்கண் வினை சிறப்புடைமையின் அதனாற் பெயர் கொடுத்தார், ஆதீண்டு குற்றி என்பது போல.

†இலக்கணச் சூத்திரங்களேயமையும் இச்சூத்திரம் வேண்டா பிறவெனின், இருவகைய வென்னும் வரையறை அவற்றாற் பெறப்படாமையானும், வகுத்துப் பின்னும் இலக்கணம் கூறிய வழிப் பொருள் இனிது விளங்குதலானும் இச்சூத்திரம் வேண்டும் என்பது.

தெய்

பலபொருள் ஒருசொற் பாகுபடுமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ—ள்: பலபொருள் உணர வரும் சொல்லாவன: பல பொருட்கும் தனித்தனிப் பெயராகி வருவதூஉம் பலபொருள் ஒரு சொல்லாம்: பல பொருட்கும் பொதுப் பெயராகி வருவ தூஉம் பல பொருள் ஒரு சொல்லாம்.

அவற்று வினை வேறுபடூஉம் பல பொருள் ஒரு சொல்லா வன: மா, வேங்கை எனவும், மக்கள், பெற்றம் எனவும் வருவன. வினை வேறுபடாஅப் பலபொருள் ஒரு சொல்லாவன: சேவல் பெடை என்பன. அவற்றுக்கு உதாரணம் வருகின்ற சூத்திரத்தாற் காட்டுதும்.

நச்.

இதனால், பலசொல்லான் ஒருபொருள் உணர்த்தி, இனி ஒருசொல்லான் வரும் பலபொருள் உணர்த்துகின்றார். அவற்றின் பெயரும் முறையும் தொகையும் கூறுகின்றார்.

---

† இலக்கணச் சூத்திரங்கள் அடுத்துவரும் 53, 54 எண் உள்ள சூத்திரங்கள்.

இ—ள்: வினை வேறுபடூஉம் பலபொருள் ஒருசொல்— வினையான் வேறுபடும் பலபொருள் ஒருசொல்லும், வினை வேறுபடாஅப் பலபொருள் ஒருசொல்—வினையான் வேறுபடாத பலபொருள் ஒரு சொல்லும், என்று ஆஇருவகைய பலபொருள் ஒருசொல்—என அவ்விரண்டு வகைப்படும் பல பொருள் ஒரு சொல், எ—று.

கல்.

என்—எனின், மேற் பலசொல்லான் வரும் ஒருபொருள் உணர்த்தினார். இனி ஒருசொல்லான் வரும் பல பொருள் உணர்த்துவான் அவற்றது பெயரும் முறையும் உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்: வினையினான் வேறுபடும் பலபொருள் ஒரு சொல்லும் வினையான் வேறுபடாத பலபொருள் ஒரு சொல்லும் என இருவகைய, பலபொருள் ஒருசொற்கள், எ-று.

உ-ம்: மா, வாள், கோல், கன்று, தளிர், பூ, காய், பழம் என்னுந் தொடக்கத்தன. இவற்றுள் மா என்பதே பலசாதியும் உணர்த்திப் பொதுவாய் நின்றது. அல்லனவெல்லாம் ஒரு சாதியை யுணர நிற்றலின் பெதுமையிலவால் எனின், அவ்வாறு பொதுமைப்படாதாயினும் விகற்பித்து நோக்கத் தம்முள்ளே சாதி [1]பாகுபா டுடைய வென வுணர்க.

இவற்றான் உலகத்துப் பெயர்கள் எல்லாம் ஒரு பொரு ளோடும் ஓரிடத்தோடும் ஒரு காலத்தோடும் பண்போடும் தொழிலோடும் உறுப்போடும் படுத்து நோக்கப் பலபொருள் ஒருசொல் எனப்படும் போலும்.

ஒரு.

என்பது வினை வேறுபடும் பலபொருள் ஒரு சொல், வினை வேறுபடாப் பலபொருள் ஒரு சொல் என இருவகைப்படும் பல

சு. வே. 1 மாறுபாடுடைய

பொருள் ஒரு சொல். அவை மா, வாள், கோல், கன்று, தளிர், பூ, காய், பழம் என்னும் தொடக்கத்தன.

இதுவுமது

53. அவற்றுள்
வினைவேறு படூஉம் பலபொருள் ஒருசொல்
வேறுபடு வினையினும் இனத்தினும் சார்பினும்
தேறத் தோன்றும் பொருள்தெரி நிலையே.

ஆ. மொ:
இல.

Of these,
The verb-differing ones express their
senses by means of having particular verb
by having their kind along with them and
by environment.

சு. சு

Among them,
the meaning of the polysemes which
do take different verbs in clearly
determined by means of particular
verbs, by words if (the followed same)
class, and by context.

பி இ. நூ.

நேமி. சொ. 130

ஒப்பிகந்த பல்பொருள்மேல் சொல்லும் சொல்லைத்
தப்பா வினையினம் சார்பினால் — செப்புக.

நன். 390.

வினைசார் பினமிடம் மேவி விளங்காப்
பலபொருள் ஒருசொல் பணிப்பர் சிறப்பெடுத்தே.

இல வி 320.

வினை பெயர் இனம் சார்பு மேவி விளங்காப்
பலபொருள் ஒரு சொல் பணிப்பர் சிறப்பெடுத்தே.

முத்து. ஒ. 70

அவற்றுள்,
வினைவேறு படூஉம் பலபொருள் ஒருமொழி
வேறுபடு வினையினும் இனத்தினும் சார்பினும்
தேரத் தோன்றும் பொருள்தெரி நிலையே.

இளம்.

இச்—எனின், வினைவேறு படூஉம் பலபொருளாமாறு உணர்த்துதல் நுதலிற்று

உரை : முற்படப் பகுத்து ஓதியவற்றுள் வினை வேறு படூஉம் பலபொருள் ஒருசொல்லை அறியுமிடத்து, வேறுபடு வினையினானும் இனத்தினானும் சார்பினானும் அறியப்படும் எ-று.

வேறுபடு வினையான் அறிய வருமாறு : மா தளிர்த்தது; மா பூத்தது; மா காய்த்தது எனவரும். இவ்வினை மரமாவிற் கல்லது [1]ஏலாது. பிறவும் அன்ன.

மாவும் மருதும் ஓங்கின என்பது இனத்தான் மாமரம் என விளங்கும். மாவும் மரையும் புலம் படர்ந்தன என்றால் விலங்குமா என்பது அறியப்படும்.

இனிச் சார்பினான் அறிய வருமாறு : விற்பற்றி நின்று 'கோல்தா' என்றால் கணைக் கோலின் மேல் நிற்கும், அதற்குச் சார்பு அதுவாகலான். குதிரைமேல் இருந்து 'கோல்தா' என்றால் மத்திகைக் கோலாம் ஆகலானும், சுள்ளற் கோலாமாகலானும் செல்லும், அதற்குச் சார்பு அது வாகலான். பிறவும் அன்ன.

சேனா.

இ—ள் : அவ்விரண்டனுள்ளும் வினை வேறுபடும் பல பொரு ளொருசொல், ஒரு பொருட்கே சிறந்த வினையானும்

---

1. வே. 1 வாராது.

இனத்தானும் சார்பானும் பொருள் தெரி நிலைக்கண் பொதுமை நீங்கித் தெளியத் தோன்றும், எ—று.

மா என்பது ஒருசார் விலங்கிற்கும் ஒரு மரத்திற்கும் வண்டிற்கும் பிற பொருட்கும் பொது. குருகு என்பது ஒரு பறவைக்கும் உலை மூக்கிற்கும் வளைக்கும் பிறவற்றிற்கும் பொது. நாகம் என்பது மலைக்கும், ஒருசார் மரத்திற்கும், யானைக்கும், பாம்பிற்கும் பிறவற்றிற்கும் பொது. சே என்பது ஒருசார்ப் பெற்றத்திற்கும் ஒரு மரத்திற்கும் பிறவற்றிற்கும் பொது.

மாப்பூத்தது; மாவும் மருதும் ஓங்கின என வேறுபடு வினையானும் இனத்தானும் மரம் என்பது விளங்கிற்று. கவசம் புக்கு நின்று 'மாக்கொணா' என்ற வழிக் குதிரை என்பது சார்பினால் விளங்கிற்று. குருகு முதலாயினவும் அன்ன.

வேறுபடு வினையினும் என்றாரேனும் ஒன்றென முடித்தல் என்பதனால் இம்மாவயிரம், வெளிறு என வேறுபடுக்கும் பெயரும் கொள்ளப்படும்

[1]இனத்தொடு சார்பிடை வேற்றுமை யென்னையெனின், ஒரு சாதிக்கண் அணைந்த சாதி இனம் எனப்படும். அணைந்த சாதியன்றி ஒருவாற்றான் இயைபுடையது சார்பு எனப்படும் என்பது.

தெய்.

வினை வேறுபடும் பல பொருள் ஒருசொல் பொருள் உணர்த்துமாறு உணர்த்துதல் நுதலிற்று.

---

1. மரம் என்ற ஒரு சாதியில் விள, பலா முதலிய மரங்கள் உள. எனவே 'விள' என்பதற்கு இனம் பலா என்பது.

   (குதிரை என்னும் பொருள்படும்) 'மா' என்பதற்கும் கவசத்துக்கும் இயைபு இல்லை, ஒரு சாதியின்மையின். ஆனால் போர்க்குச் செல்பவனுக்குக் கவசமும் மாவும் தேவையென்ற இயைபு உண்மையின் இவ்வியைபு சார்பு எனப்படும்.

இ—ள் : மேற் கூறப்பட்டவற்றுள் வினை வேறுபடும் பல பொருள் ஒரு சொல் பொருள் தெரியுங் காலத்து வேறுபட்ட வினையினானும் இனத்தினானும் சார்பினானும் தெளியத் தோன்றும், எ—று.

உ-ம்: மா காய்த்தது, வேங்கை பூத்தது என்றவழி மரம் என்பது அறியப்பட்டது. மா ஓடிற்று வேங்கை பாய்ந்தது என்ற வழி விலங்கு என்பது அறியப்பட்டது. இவை தனித்தனிப் பொருளுணர்த்தின. ‡இவ்வூர்மக்கள் எல்லாம் போர்க்குப் போயினார் என்றவழி ஆண்பால் உணரப்பட்டது. இவ்வூர் மக்கள் எல்லாம் தைந்நீர் ஆடினார் என்றவழிப் பெண்பால் உணரப்பட்டது. இவ்வூர்ப் பெற்றம் எல்லாம் அறங்கறக்கும் என்றவழிப் பெண்பால் உணரப்பட்டது. இவ்வூர்ப் பெற்றம் எல்லாம் உழவு ஒழிந்தன என்றவழி ஆண்பால் உணரப்பட்டது இவை பொதுப் பொருள் உணர்த்தின. இவை வினையாற் பொருள்விளக்கின. மாவும் மருதும் அவை என்றவழி மா மரம் என்பது அறியப்பட்டது. மாவும் புள்ளும் என்ற வழி விலங் கென்பது அறியப்பட்டது. இவை இனம். இப்பொழிலகத்து நூறு மாவுளஎன்றவழி மரம் என்பது அறியப்பட்டது. இப்போர்க் களத்து நூறுமாவுள என்றவழி விலங்கென்பது அறியப்பட்டது. இவை சார்பு. பொதுமையுணர்த்தும் பல பொருள் ஒரு சொல் இனமும் சார்பும் பற்றி வருவனவந்தவழிக் கண்டு கொள்க.

நச்.

இஃது அவற்றுள் வினைவேறுபடுமாறு கூறுகின்றது.

இ-ள்: அவற்றுள் வினவேறுபடும் பலபொருள் ஒரு சொல்—அவ்விரண்டனுள்ளும் வினையான் வேறுபடும் பல பொருள் ஒரு சொல், வேறுபடுவினையினும் இனத்தினும் சார்பினும் — ஒரு பொருட்கே சிறநத வினையானும் இனத்தானும் சார் பானும், பொருள் தெரிநிலை தேறத் தோன்றும்—பொருள் தெரிநிலைமைக்கண் பொதுமை நீங்கித் தெளியத் தோன்றும், எ-று.

---

‡ இவ்வுதாரணங்கள் 50 ஆம்சூத்திரத்துக்கே ஏற்றன.

மா என்பது ஒருசார் விலங்கிற்கும் மரத்திற்கும் வண்டிற்கும் பிறபொருட்கும் பொது. குருகு என்பது ஓர் பறவைக்கும் உலை மூக்கிற்கும் வளைக்கும் பிறபொருட்கும் பொது.

மா பூத்தது—இது வினை. மாவும் மருதும் ஓங்கின—இஃது இனம். வைசம்புக்கு நின்று 'மாகொணா' என்பது சார்பு.

ஒருசாதிக்கண் அணைந்த சாதி இனம். ஒருவாற்றான் இயை புடையது சார்பு. ஒன்றென முடித்தல் என்பதனால் இம் மா வயிரம், வெளிறு என வேறுபடுக்கும் பெயரும் கொள்க.

†'கழிப்பூக்குற்றுக் கானல் அல்கி' (அகம் 330:1) என்றாற போலச் சில பொருள் ஒழித்துச் சில பொருள்மேல் நிற்றல் உரையிற் கொள்க.

இனமும் சார்பும் பின்வரும் வினையொடு கூடி அல்லது பொருள் முடியாமையின் அவையும் வினைவேறு பட்டனவே யாம்.

கல்.

என்-எனின், மேற்கூறிய பலபொருள் ஒரு சொல்லினுள் வினை வேறுபடூஉம் பலபொருள் ஒருசொல் ஆமாறு உணர்த் துதல் நுதலிற்று.

இ-ள்: மேற்சொல்லப்பட்ட இரண்டனுள் வினைவேறு படும் பல பொருள் ஒரு சொல் வேறு படுக்கும் வினையானும் வினையொடு வரும் இனத்தானும் சார்பினானும் இப்பொழுது இவன் கூறியது இப்பொருள் எனத் தெளியத் தோன்றும், பொருள் ஆராய்ச்சிப்படும் நிலைமைக்கண், எ—று.

உ—ம்: மாப்பூத்தது காய்த்தது — இவை வேறுபடு வினை. மாவும் அரசும் புலம் படர்ந்தன, மாவும் மருதும் ஓங்கின—இவை இனம் பற்றி வந்தன.

வில்பற்றி நின்று 'கோல்தா' என்பதூஉம், பலகை பற்றி நின்று 'வாள்தா' என்பதூஉம், தூம்புபற்றி நின்று 'கோல்தா' என்பதும் சார்பு பற்றி நின்றன.

† கழிப் பூக்கள் பலவாயினும் கழிக்குவளை போலும் சில பூக்களை மட்டும் உணர்த்துதல் அறிக.

உரையிற் கோடல் என்பதனால் பல பொருள் ஒரு சொல் லினை இனம் சார்புகளைப் பற்றிப் பல பொருளை யொழித்து ஒருபொருள் மேல் நில்லாது சிலபொருள் ஒழித்துச் சில பொருள் மேல் நிற்பதூஉம் கொள்ளப்படும்.

உ—ம்: "கழிப்பூக் குற்றுக் கானல் அல்கி" என்றாற் போல வரும்.

இனமும் சார்பும் பற்றி வருவனவயிற்றை வினை வேறு படூஉம் பலபொருள் ஒருசொல் என்றது என்னையெனின், அவ்வினமும் சார்பும் அவ்வினைச் சொல்லை வேறு படுக்கும் வழி அதனோடு கூடி நின்று வேறு படுப்பினல்லது தாமாக நில்லாமை நோக்கி அவையிற்றையும் வினை வேறு படூஉம் பல பொருள் ஒரு சொல் என்ப.

பொதுச் சூத்திரத்துள் [1]இரண்டனொன்றாக வடக்கி ஈண்டு அதன் பாகுபாடு தோன்ற விரித்துக் கூறினவாறு போலும்.

அதனாற் சூத்திரத்து இனமும் சார்பும் என்பனவற்றை முன்னின்ற வினையோடு தொடர்புபடப் பொருள் உரைத்துக் கொள்க.

ஒரு.

என்பது வினை வேறு படூஉம் பல பொருள் ஒரு சொல்லை யறியுமிடத்து வேறுபட்ட வினையினானும் இனத்தினானும் சார்பினானும் பொருள் தெரி நிலை தெளியத் தோன்றும்.

உ—ம்: மா தளிர்த்தது பூத்தது காய்த்தது என்ற விடத்து மா மரத்தின் மேலும், 'மாவொடு மாப் பாயும்' என்ற விடத்து விலங்கின் மேலும் செல்லும் வினையான் அறியப்பட்டன. இனி, 'மாவும் மரையும் புலம் படர்ந்தன,' 'மாவும் நாயும் ஓடின' என்றால் இனத்தால் அறியப்பட்டன. 'மாவும் மருதும் ஓங்கின' என்றால் இதுவும் இனத்தால் அறியப்பட்டது. வில் பற்றி நின்று கோல்தா என்ற விடத்து கணைக்கோல் மேலும், பல கைபற்றி

சு. வே: 1 இரண்டையும் ஒன்றாக அடக்கி (இதுவே பொருந்தும்.)

நின்று 'வாள்தா' என்ற விடத்துக் கண்டகவாள் மேலும், குதிரை யேறியிருந்து 'கோல்தா' என்ற விடத்து மத்திகைக் கோல் மேலும் செல்லுமிவை சார்பால் அறியப்பட்டன எனக் கொள்க.

இதுவுமது

† 54. ஒன்றுவினை மருங்கின் ஒன்றித் தோன்றும்

இளம்:

இச்—எனின், அம்மூன்று வகையான் உணர்ந்தவாறு போலாது, உணராமை நிற்குமாறுடைத்து இச்சொல் என்பது உணர்த்துதல் நுதலிற்று.

உரை: ஒன்று வினை என்பது பொதுவினை; பொது வினை யாயிற் பகுதி யுணராமற் றோன்றும், எ—று.

அது வருமாறு: மாவீழ்ந்தது என்ற விடத்து இன்னமா என்பது உணர்தல் ஆகாது பொதுவாய் நிற்கும்

தெய்.

மேலதற்கோர் புறனடை யுணர்த்துதல் நுதலிற்று.

இ—ள்: வினைவேறுபடும் பல பொருள் ஒரு சொல் வேற்று வினைகொண்டு முடிதலேயன்றி இருபொருட்கும் பொருந்தின ஒருவினை கொண்டு முடியின் பிறிதொரு சொல்லோடு (பொரு ளோடு இ—எ) ஒன்றிப் பொருள் தோன்றும், எ—று.
பிறிதொரு சொல் என்பது எஞ்சி நின்றது.

---

† இந்நூற்பாவை அடுத்த நூற்பாவுடன் சேர்த்துப் பாடம் கொண்டார் சேனா வரையர். ஆதலின் இந் நூற்பாவுக்கும் அடுத்த நூற்பாவுக்கும் மற்றையோர் உரைகள் தந்து பின்னர்ச் சேனாவரையர் உரை தரப் படுகிறது. இக்கால ஆசிரியர் கருத்துக்களும் 55 (அ) சூத்திர உரையின் இறுதியில் காண்க.

உ—ம்: மாவீழ்ந்தது என்றவழி இன்ன மாஎன்பது அறிய லாகாமையின், யானை முறித்தலால் வீழ்ந்தது என்ற வழி மரம் என்பதூஉம், அம்புபடுதலான் வீழ்ந்தது என்றவழி விலங்கு என்பதூஉம் உணர்த்தியவாறு கண்டுகொள்க.

நச்.

இது மேலிற் சூத்திரத்திற்கோர் புறனடை கூறுகின்றது.

இ—ள்: ஒன்றுவினை மருங்கின் ஒன்றித்தோன்றும்—கூறிய வினைவேறுபடூஉம் பலபொருள் ஒருசொல் வினையான் வேறுபட நில்லாது பொதுவினை கொண்டு பொதுமைப்பட நின்ற வழியும் வினை வேறுபட்டாற் போல 'இன்னது இது' என வேறுபட நிற்றலும் வழக்கினகத்துண்டு, எ—று.

மாவீழ்ந்தது என்பது வீழ்தல் வினை எல்லாவற்றிற்கும் பொதுவேனும், இவ்விடத்து இக்காலத்து இவன் சொல்லு கின்றது இம்மாவினை என ஒன்றினை உணர்த்தி நின்றவாறு காண்க.

என்றது வினைவேறுபடும் பலபொருள் ஒருசொல் ஒருகால் வினை வேறுபடாத பலபொருள் ஒருசொற்போல நிற்கும் என்றவாறு.

கல்.

என்—எனின் மேற்சூத்திரத்திற்கோர் புறனடையுணர்த்து தல் நுதலிற்று.

இ—ள்: மேற்கூறிய வினைவேறுபடூஉம் பலபொருள் ஒரு சொல், வினையான் வேறுபடநில்லாது பொதுவாகிய வினை யோடு பொருந்தப் பொருட்பொதுமைபட நின்றுழியும் மேல், வினையான் வேறுபட்டாற்போல இன்னது இது என வேறுபட நிற்றலும் வழக்கிடத் துண்டு, எ—று.

உ—ம்: மாவீழ்ந்தது என்பது வீழ்தல் வினை எல்லா மாவிற்கும் பொதுவேயெனினும் இவ்விடத்து இக்காலத்து இவன் சொல்கிறது இம்மாவினை யென்று உணரநிற்கும் என்றவாறு; என்றது முன்கூறிய வினைவேறுபடாப் பலபொருள் ஒரு

சொல்லும் ஒருநிலைமைக்கண் வினைவேறு படூஉம் பலபொருள் ஒருசொற்போல வுணர நிற்கும் என்றவாறு.

அஃதேற் பலபொருள் ஒருசொல்லினை இரண்டாக ஆக்கியது என்னை; ஒன்றேயாகற்பாற்று எனின், அவ்வாறு ஒன்றாயதனையே உணர்பாட்டு வேற்றுமை நோக்கி இரண்டாகப் பகுத்தார் எனவுணர்க.

ஒரு.

என்பது மேற்சொன்ன மூன்றுவகையானும் அன்றிப் பொது வினையாலும் வினை பொருந்துமிடத்திற் பொருந்தித் தோன்று வனவும் உள.

மாவீழ்ந்த தென்றவிடத்து இன்னமா என்றறியலாகாது வீழ்தல் தொழில் எல்லாவற்றிற்கும் பொதுவேயாயினும் இவ் விடத்து இக்காலத்திவன் சொல்லுகின்றது இம்மாவினையென ஒன்றினையுணர்த்தி நின்றவாறு காண்க. இதன் கருத்து வினை வேறுபடும் பலபொருள் ஒருசொல் ஒருகால் வினை வேறுபடாப் பலபொருள் ஒருசொற் போலவும் நிற்கும் என்பது

சு. சுந்தரமூர்த்தி.

இந்நூற்பாவுக்கு இளம்பூரணரும் சேனாவரையரும் ஒரு விதமாகவும், நச்சினார்க்கினியரும் கல்லாடனாரும் ஒரு விதமாக வும், தெய்வச்சிலையார் ஒருவிதமாகவும் பொருள் உரைப்பர்.

சேனாவரையர் இந்நூற்பாவினை அடுத்த நூற்பாவோடு இணைத்து ஒரே நூற்பாவாகக் கொள்ளினும், உரையில் இளம் பூரணர் உரையோடு மாறுபட்டிலர் இவர்கள் உரைக்குமாறு:— பலபொருள் தரும் ஒரு சொல்லிற்குச் சிறப்பு வினை கொடாது பொது வினை கொடுப்பின், அப்பலபொருள் ஒருசொல், இன்ன பொருளைக் குறித்தற்கு வந்தது எனத் தெரியாது; அப்பல பொருட்கும் பொதுவாகவே கருதப்படும் என்பது இந்நூற்பா வின் கருத்தாகும் இங்ஙனம் வினை கொடுத்தும் இன்னதெனத் தெரிந்து கொள்ள இயலாத பலபொருள் ஒருசொல்லினை, அது இன்ன பொருளில் வருகின்றது என வெளிப்படையாகவே விதந்து சொல்லவேண்டும் என்பது அடுத்த நூற்பாவின் கருத் தாகும்.

வினைவேறுபடும் பலபொருள் ஒருசொல் சிறப்புவினை யின்றிப் பொது வினையோடு பொருந்தி வரினும் ஒரு நிலைமை யில் பொருள் விளங்கும் என்பது நச்சினார்க்கினியரும் கல்லாட ரும் கருதும் உரையாகும்.

மாவீழ்ந்தது என்பது விலங்கு, வண்டு, மலர், மரம் ஆகிய வற்றிற்கும் பொருந்துமாகலின் இது பொது வினையாம். இங்ஙனம் கூறின் மா என்பது எதனைக் குறிக்கின்றது என விளங்கவில்லை. எனினும் இவர்கள் இருவரும் ஒருவாற்றான் பொருள் விளங்கி நிற்கும் என்கின்றனர்.

ஒருமரம் பட்டோ, அன்றி அசைவுற்றோ இருக்கும் நிலைமை நன்கு தெரிந்த சூழ்நிலையில், மா வீழ்ந்தது என்பானா யின், அம் மாவும், வீழ்ந்தது என்னும் வினையும் பொதுப்பட இருப்பினும், மா என்பது மரம் என்பது நன்கு விளங்கும். கல்லாடரும் இதனையே வினை வேறுபடாப் பலபொருள் ஒருசொல்லும், ஒரு நிலைமைக்கண் வினை வேறு படூஉம் பல பொருள் ஒருசொல் போல உணர நிற்கும் என விளக்கினார்.

ஒரு நிலைமை — சொல்லுவானும் கேட்பானும் தாம் சொல்லுகின்ற பொருளின் சூழ்நிலையை நன்கு அறிந்திருக்கும் நிலைமை.

இனித் தெய்வச்சிலையார், வினை வேறுபடும் பலபொருள் ஒருசொல் சிறப்பு வினையின்றிப் பொதுவினையொடு பொருந்தி வரின் அதனைப் பொருள் விளங்கும் பிறசொல்லோடு கூட்டிக் கூறப் பொருள் விளங்கும் என இந்நூற்பாவுக்குப் பொருள் கூறினர்.

ஒன்றுதல்—பிறிதொரு சொல்லோடு ஒன்றுதல் என்பது இவர் கருத்து. எனினும் இதுவே கருத்தாக அடுத்த நூற்பாவிற் கும் இவர் பொருள் கூறுதலின் இது அத்துணைப் பொருத்தம் உடைத்தன்றாம்.

நச்சினார்க்கினியரும் கல்லாடரும் கூறுவது நூற்பாவிற்கு வலிந்து பொருள் கொள்வதாகவே காணப்படுகின்றது. எனவே இளம்பூரணரும் சேனாவரையரும் கூறும் பொருளே இந்நூற் பாவிற்குப் பொருந்துவதாகும்.

இதுவுமது

55. ‡வினைவேறு படாஅப் பலபொருள் ஒருசொல்
நினையுங் காலைக் கிளந்தாங் கியலும்

இளம்.

இச்—எனின், வினை வேறுபடாஅப் பலபொருள் ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

உரை: வினை வேறுபடா அப் பலபொருள் ஒருசொல்லை ஆராயுமிடத்து இன்னதென்று அறியக் கிளந்தே சொல்லுக, எ-று.

வ-று: ஆன்கன்று நீரூட்டுக எனவரும். நினைதல் என்பது ஆராய்தல்.

*ஆராயுமிடத்துக் கிளந்து கூறுக எனவே ஆராய்ச்சி இல்லாத இடத்தாயின் கிளவாதே கூற அமையும் என்பதே அமையும். ஆராய்ச்சியையுடைய நிலம் என்பது எருநிலம்; யாதோ எனின் 'கன்று நீரூட்டுக' என்றவிடத்து ஆன்கன்றும் எருமைக்கன்றும் பூங்கன்றும் எனப் பலவும் ஆங்குளவாயின், அவன் சொன்ன கன்று நிற்பப் பிறிதொரு கன்று நீரூட்டல் வழுவாம். அதனான் இன்னுழி இன்னகன்று என்று கிளந்து

‡ இதன் ஆங்கில மொழி பெயர்ப்பைச் சூத்திரம் 55(அ)-இல்காண்க.

* "ஆராயுமிடத்து...யாதோ எனின்" — இத்தொடர் பிழையென்றும் அது பின்வருமாறு அமையலாம் என்றும் கூறுவர் கு. சுந்தரமூர்த்தி. அது:
"ஆராயுமிடத்து கிளந்து கூறுக எனவே ஆராய்ச்சி யில்லாத இடத்தாயின் கிளவாதே கூற அமையும் என்பதாம். நிலம் செல்க என்றவிடத்து விளைநிலமும் வெறுநிலமும் ஆங்கு உளவாயின் அவன் சொன்ன நிலம் நிற்பப் பிறிதொரு நிலம் செல்லுதல் வழுவாம். அதனால் இந்நிலம் என்று கிளந்து சொல்லுக; அல்லாக் கால் இந்நிலம் என்று கிளவாதே சொல்ல அமையும். ஆராய்ச்சியுடைய நிலம் என்பது வெறுநிலம் என் றிருப்பின் பொருந்தும் என்று தோன்றுகின்றது"

சொல்லுக. அல்லாக்கால் இன்னகன்று என்று கிளவாதே சொல்ல அமையும். மேற்சூத்திரத்தின் துணிபும் இதுவே.

வேறுபடு வினையும் இனமும் சார்பும் வேண்டாமை உணர் புழியாயின் அவையின்றியும் அமையும் என்பது.

தெய்.

இது வினைவேறுபடாப் பலபொருள் ஒருசொல் பொருள் உணர்த்துமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்: வினை வேறுபடாத பலபொருள் ஒருசொல் பொருள் உணருங்கால் எடுத்துக்கூறல் வேண்டும், எ-று.

உ-ம்: சேவல் பெடை என்பன வினையால் வேறுபடாமை யால் அன்னச்சேவல் குயிற்சேவல், அன்னப்பெடை குயிற்பெடை என எடுத்துக்கூறப் பொருள் விளங்கினவாறு கண்டு கொள்க.

நச்.

இது நிறுத்த முறையானே வினை வேறுபடாப் பலபொருள் ஒருசொல் ஆமாறு கூறுகின்றது.

இ-ள்: வினைவேறுபடாஅப் பலபொருள் ஒருசொல்— வினையான் வேறுபடாத பலபொருள் ஒருசொல், நினையுங் காலைக் கிளந்தாங்கு இயலும்—ஆராயுங்காலத்து இன்னது இது எனக் கிளக்கப்பட்டு அவ்வாராய்ச்சியுடைய விடத்து நடக்கும்; எ-று.

'கன்று நீர் ஊட்டுக' என்ற வழிக் கேட்டான் இன்ன கன்று என்பது அறிய வாராதவழி, 'ஆன்கன்று', 'பூங்கன்று' என்று கிளந்தே சொல்லுக, என்றவாறு.

நினையுங்காலை என்றதனால் கருமச்சிதைவு உள்வழிக் கிளந்து கூறுக என்பது கொள்க.

'கன்றாற்றுப் படுதத புன்தலைச் சிறார்' (குறுந். 24) என் புழிக் கருமச்சிதைவு இல்வழிக் கிளத்தல் வேண்டாவாயினவாறு காண்க.

அன்றி, "ஒன்றுவினை மருங்கின் ஒன்றித் தோன்றும் வினை வேறுபடாஅப் பலபொருள் ஒருசொல்" என ஒரு சூத்திரமாக்கி

'வேறுபடாத வினை கொண்ட வழி வேறுபடாப் பலபொருள் ஒருசொல்' என்று பொருள் கூறி வினைவேறுபடும் பலபொருள் ஒருசொல்லாகிய மா என்பதுதானே வீழ்ந்தது என்னும் பொது வினை கொண்டவழி வினை வேறுபடாதாய் நின்றதற்கு 'மாமரம் வீழ்ந்தது' எனக் கிளந்து கூறுக என்றார் சேனா வரையர். அங்ஙனம் பொருள் கூறின் வினை வேறுபடாப் பல பொருள் ஒருசொல் எனவேறோர் சொல் இன்றி 'ஆயிருவகைய' (சொல் 52) என்பதனோடு மாறுபடும் என மறுக்க.

கல்.

என்—எனின், வினை வேறுபடாப் பலபொருள் ஒரு சொல் ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ—ள்: வினையினான் வேறுபடாத பலபொருள்ஒரு சொல் ஆராயுங்காலத்து இன்னது இது எனக் கிளக்கப்பட்ட ஆராய்ச்சியை யுடைய விடத்து நடக்கும், எ—று.

உ-ம்: கன்று நீரூட்டுக என்புழிக் கேட்டான் இன்னகன் றென்பது அறியானாமே யெனின் ஆன்கன்று எருமைக்கன்று பூங்கன்று என்க்கிளந்து சொல்லுக.

'நினையுங்கால்' என்றதனாற், கிளவாது கூறினாற் கருமச் சிதைவுண்டெனிற் கிளந்து கூறுக; அல்லாதுழி வேண்டியவாறு கூறுக என்பது பெறப்பட்டது. "கன்றாற்றுப் படுத்த புன்தலைச் சிறார்" என்புழிக் கருமம் சிதைந்தது என்பதின்மையிற் கிளவாது சொல்லவும் அமைந்தது என்பது. எனவே பலபொருள் ஒருசொல் வேறுபடுவினையான் உணரப்பட்டு நிற்றலும், வேறுபடுவினை யின்றிப் பொதுவினையான் உணரப்பட்டு நிற்றலும், பொது வினையாற் கருமம் சிதைவுள்வழிக் கிளந்து சொல்லப்பட்டு நிற்றலும். கருமச் [1]சிதைவில்வழிப் பொது வினையாற் கிளவாது சொல்லப்பட்டு நிற்றலும் என நான்கு பகுதிப்பட்டதென வுணர்க.

இச்சூத்திரங்களாற் கூறியது பலபொருள் ஒருசொல் வினை பற்றிப் பிறக்கும் மரபிலக்கணப் பாகுபாடு என வுணர்க.

ப. வே: 1. சிதைவுள்வழி. கழகப் பதிப்பு—தவறு.

ஒரு.

வினை வேறுபடாஅப் பலபொருள் ஒருசொல் ஆராயுங் காலத்து இதுவெனக் கிளக்கப்பட்ட ஆராய்ச்சியுடைய விடத்து நடக்கும்.

உ-ம்: பலகன் றோரிடத் துள்வழிக் 'கன்று நீரூட்டுக' என்றக்கால் எல்லாவற்றிற்கும் நீரூட்டுக என்று பொதுவாகச் சொல்லாது, 'ஆன் கன்றை நீரூட்டுக', 'எருமைக் கன்றை நீரூட்டுக' எனக் கிளந்து சொல்லுக. மாக்கன்று பல நின்றுழியும் இன்ன கன்றுக்கு நீரூட்டுக என்று கிளந்து கூறுக.

நினையுங்காலை என்றதனால் ஆராய்ச்சியில்லாத விடத்துக் கிளவாது சொல்லுக. உ—ம்: கன்றாற்றுப் படுத்த புன்தலைச் சிறாஅர் எனக் கிளவாது கூறியவாறு காண்க.

55(அ) ஒன்று வினை மருங்கின் ஒன்றித் தோன்றும்
வினைவேறு பாடாஅப் பலபொருள் ஒருசொல்
நினையுங் காலைக் கிளந்தாங் கியலும்,

ஆ. மொ:
இல.

The nouns having the same verbs must be clearly put with proper adjuncts to differentiate them.

௬. சு.

Polysemes which do not take different words should be clearly mentioned with proper adjuncts to differentiate them, if they are by non—distinguishing verbs.

சேனா

இ—ள்: வேறுபடாத வினை கொண்டவழி வேறுபடாது தோன்றும் வினைவேறுபடாப் பலபொருள் ஒருசொல் ஆராயுங் காற்கிளந்து சொல்லப்படும், எ—று.

உ—ம்: மாமரம் வீழ்ந்தது, விலங்குமா வீழ்ந்தது எனவரும்,

வினை வேறுபடாப் பலபொருள் ஒருசொல் என வேறு நிற்பன இல்லை; வேறுபடு வினை முதலியவற்றான் வேறுபடுவன தாமே பொதுவினை கொண்டவழி வினைவேறுபடாப் பலபொருள் ஒருசொல்லாம் என்பது அறிவித்தற்கு ஒன்று வினை மருங்கின் ஒன்றித்தோன்றும் என்றார்.

''ஒன்றுவினை மருங்கின் ஒன்றித் தோன்றும்'' என ஒரு சூத்திரமாக உரையாசிரியர் பிரித்தாரால் எனின், அங்ஙனம் பிரிப்பின் ஒன்றுவினை மருங்கின் ஒன்றித் தோன்றுதலும் வினை வேறுபடூஉம் பலபொருள் ஒருசொற்கே இலக்கணமாய் மாறு கோடலானும், வினைவேறுபடுவன தாமே பொதுவினை கொண்டவழி வினைவேறுபடாதனவாம் என்பது அதனாற் பெறப்படாமையானும் அதுபோலியுரையென்க.

முன்னும் பின்னும் வரும் சார்பு முதலாயினவற்றாற் குறித்த பொருள் விளங்காக்கால் கிளந்தே சொல்லுக எனயாப்புறுத்தற்கு 'நினையுங்காலை' என்றார். ஆங்கென்பது உரையசை. குறித்த பொருள் விளங்காமைக்கூறல்மரபன்மையின் மரபு வழுக்காத்தவாறு.

ச. வே. சுப்பிரமணியன்

பலபொருள் ஒரு சொல்லைப்பற்றிப் பேசுகின்ற தொல்காப்பியம்,

> ''வினை வேறுபடூஉம் பலபொருள் ஒருசொல்
> வினைவேறு படாஅப் பலபொருள் ஒருசொல் என்று
> ஆயிரு வகைய பலபொருள் ஒருசொல்.''

என இருகூறாகப் பகுக்கின்றது. ஆயின் 'மா' என்னும் சொல்லை இரண்டு வகையிலும் சேர்க்கலாம். மாப்பூத்தது மாக்கொணா என்ற நிலையில் வினைவேறுபடுகின்றமைக்குக் காட்டுக் காட்டு கின்றார் சேனாவரையர். வினைவேறுபடாப் பலபொருள் ஒரு சொல்லிற்கு மாமரம் வீழ்ந்தது விலங்குமா வீழ்ந்தது என்பன வற்றைக் காட்டாகக் காட்டுகிறார். *ஆயின் விலங்குமாவா

---

*வேறுபடுவினை, இனம், சார்பு என்பனவற்றோடு 'புணர்ச்சிவிதி' என்பதொன்றையும் கொள்ளலாம் என்பது இவர் கூற்றிலிருந்து தெரிகிறது. யாரும் கூறாத புதிய கருத்து; சிறப்புடையதே— (சிவ)

மாமரமா என்பதற்குப் புணர்ச்சி விதியே இதைக் காட்டிலும் எளிய சான்றாக அமைகிறது.

மா + கோடு = மாங்கோடு—மரமாயின்
மா + கோடு = மான்கோடு—விலங்காயின்

மொழிக்கட்டுரைகள் பக். 3. 4. (198?)

சூத்திரம் 52 — 55 (அ) வரையுள்ளவற்றுக்குச் சிலர் விளக்கம்

பூவராகம்பிள்ளை:

52—55அ ஆகிய எண் உள்ள சூத்திரங்கள் ஒரு பொருள் பற்றிய இலக்கணங்களைக் கூறுகின்றன. பல பொருள்களை உணர்த்தி வரும் ஒரு சொல், பல பொருள் ஒரு சொல். இஃது ஒரு பெயர்ப் பொதுச் சொல், வேறு வினைப் பொதுச் சொல் போல்வதன்று. மா என்ற சொல் இலக்குமி, வண்டு, மாமரம், குதிரை இவற்றை யுணர்த்தும். இவற்றுள் ஒவ்வொன்றுக்கும் தனித்தனியே மா என்பது பெயராக வரும். எனவே மாஎன்பது இலக்குமி முதலிய பொருட்குப் பொதுவாக நிற்கும் பொதுச் சொல்லாகும். இவ்வாறு வரும் பலபொருள் ஒரு சொற்கள் இரண்டு வகைப்படும். வினைவேறுபடும் பலபொருள் ஒரு சொல், வினைவேறுபடாப் பல பொருள் ஒருசொல் என்பன அவ்விருவகை. பலபொருள்கட்குப் பொதுவாக நிற்றலால் பொதுச் சொல் எனப்படும். பல பொருள் ஒருசொல், முடிக்கும் சொல்லாக வரும் வினைச் சொல்லால் அப்பொதுமை நீங்கி ஒரு பொருளைச் சிறப்பாக உணர்த்துமாயின், அது, வினை வேறு படும் பலபொருள் ஒருசொல் எனப்படும். மா என்பது பொதுச் சொல்.மா காய்த்தது என்றால் காய்த்தது என்ற வினை யால் மா என்றதுமரத்தை உணர்த்திற்று. மா பறந்தது என்ற விடத்து மா, வண்டையுணர்த்திற்று. மாபாய்ந்தது என்ற விடத்து மா குதிரையையுணர்த்திற்று. மா அருளினாள் என்ற விடத்து மாஇலக்குமியையுணர்த்திற்று. இவற்றுள் மா என்றது வினையினால் பொதுமையினின்றும் வேறுபட்டுச் சிறப்புத் தன்மையடைந்து சிறப்புச் செயலாயிற்று.

இவ்வாறு வினையினால் பொதுத்தன்மை நீங்கிச் சிறப்புத் தன்மையடையாமல் பொதுச் சொல்லாகவே வருவது வினை வேறுபடாப் பல பொருள் ஒரு சொல்லாகும்.

இப்பிரிவுகள் எங்கும் செல்லக் கூடிய பிரிவல்ல. இடத்திற் கேற்ப அமையக் கூடியனவே. அஃதாவது வினை வேறுபடும் பலபொருள் ஒருசொல், எவ்விடத்தும் வினைவேறு படும் பல பொருள் ஒருசொல்லாகவே வரும்; வினை வேறுபடாப் பலபொருள் ஒரு சொல் எவ்விடத்தும் வினை வேறுபடாப் பல பொருள் ஒரு சொல்லாகவே வரும் என்ற வரையறையில்லை. பல பொருள் ஒரு சொல் பொது வினை கொண்டால் வினை வேறுபடாப் பல பொருள் ஒரு சொல்லாகும். அதுவே சிறப்பு வினை கொண்டால் வினை வேறுபடும் பல பொருள் ஒரு சொல்லாகிவிடும்.

மாவீழ்ந்தது என்ற தொடரில் வீழ்ந்தது என்பது குதிரை, மாமரம், வண்டு மூன்றுக்கும் பொருத்தமான பொதுவினை. அதனால் மா என்பது குதிரையை உணர்த்துகின்றதா? மாமரத்தை உணர்த்துகின்றதா? வண்டை உணர்த்துகின்றதா? என்று அறிதல் இயலாது. இங்கு மா என்பது வினை வேறுபடாப் பலபொருள் ஒருசொல்லாயிற்று. மாகாய்த்தது என்ற தொடரில் காய்த்தது என்பது மரத்திற்குரிய சிறப்பு வினை. அதனால் மா என்பது மாமரத்தை மட்டும் உணர்த்தி வினைவேறுபடும் பல பொருள் ஒருசொல்லாயிற்று. எனவே, பல பொருள் ஒருசொல் இரண்டு வகைப்படும் என்ற வேறுபாடு இடம் நோக்கிக் கொள்ளத்தக்கதேயன்றி எங்கும் செல்லத்தக்கதன்று. இக்கருத்தோடு மேற்கூறப்பட்ட *மூன்று சூத்திரங்களையும் (53—55) உணர்தல் வேண்டும்.

'ஒன்றுவினை மருங்கின் ஒன்றித் தோன்றும்' என்ற வரியைத் தனிச்சூத்திரமாகக் கொண்டனர் உரையாசிரியர். அங்ஙனமாயின், இச்சூத்திரமும் மேற்கூறப்பட்ட வினைவேறுபடும் பல பொருள் ஒருசொற்கே இலக்கணம் கூறியதாகும் ஆகவே பொதுச்சொல், சிறப்புச்சொல் கொண்டவிடத்து வினைவேறு

---

*சேனாவரையர் என்பபடி 52 53,54 என்னும் எண்களுடையனவற்றைக் குறிக்கும். இங்கு 53,54,55 (அ) என நான்காகச் சூத்திரங்கள் அமைக்கப்பட்டுள்ளன.
மரபு வழுக் காத்தல்.

படும் பலபொருள் ஒருசொல்லாகும் என்ற முன் இலக்கணத் தோடு மாறுபடும். அன்றியும்' பலபொருள் ஒருசொற்கள் இரண்டு வகைப்படும் என்ற பிரிவுகள் எங்கும் நியதியாக வரும் பிரிவல்ல; இடம் நோக்கிக் கொள்ளப்படும் பிரிவுகளே என்ற கருத்தும் கிடைக்காமற் போய்விடும். ஆதலால் அங்ஙனம் பிரித் தல் ஆகாது என்க.

மரபு வழுக்காத்தல்

(பல பொருள் ஒரு சொல்லுக்குப் புறனடை — தெய்.)

56. குறித்தோன் கூற்றம் தெரித்து மொழி கிளவி.

ஆ. மொ.

இல.

One who wants to express his idea clearly must express it in un—anbiguous terms

க. க,

one who intend to express (his) idea by words (should use) clear unambiguous speech.

பி. இ. நூ.

இல. வி 321

குறித்தோன் கூற்றம் தெரித்து மொழி கிளவி.

முத்து. ஒ. 87

ஒருபொருள் வேறுபா டுணருங் காலை
விளங்கா தாயின் விளங்க விளம்புப

இளம்.

இச் — எனின், மரபு வழுக்காத்தல் நுதலிற்று

உரை: தான் ஒரு பொருளைச் சொல்லக் கருதுமேல், அதனை இற்று என்று தெரித்துச் சொல்லுக.

[1]வ—று: உலற்றற் றிறமின்றிப் பயின்றார் ஒரு சான்றார் மயிர்நீட்டி உலறி நின்றாரைக் கண்டு ஒருவன், 'எம்பெருமான் உலறி நின்றீரால்' என்றக்கால் வாளாதே 'உலறினேன்' என்னற்க; இது காரணத்தால் உலறினேன் என்க. இது தனக்கு உற்றது உரைத்தல். பிறவும் அன்ன.

இது செப்பு வழுவற்க என்று காத்தவாறு என்ப ஒரு திறத்தார்.

இனித் தெரித்துச் சொல்லாக்கால் வழுவேயாயினும் அமைக எனக் காத்தவாறு.

இனி ஒரு கருத்து :—உலகினுள் ஒப்ப முடிந்த பொருளை ஒருவன் ஒவ்வாமை சொல்லுமே யெனின், இது காரணத்தின் ஒவ்வாமை நோக்கிச் சொல்லினன் என்று தெரித்துச் சொல்லுக என்றவாறு.

> [2]பல்லார் தோள் தோய்ந்து வருதலாற் பூம்பொய்கை
> நல்வய லூரநின் றார்புலாஅல்—புல்லெருக்க
> மாசின் மணிப்பூணெம் மைந்தன் மலைந்தமையாற்
> காதற்றாய் நாறும் எமக்கு

எனவரும்.

---

1. தலைமுடியை உலறுதல் செய்து ஈரம் புலர்த்தியறியாத ஒருசான்றார் ஒருபால் முடியை உலறுதல் செய்ய அது கண்ட ஒருவன், இன்று உலறுதல் செய்து நின்றீர் என்னின், அதன் காரணத்தைக் கூறி இதனால் உலறினேன் என்று கூறுக.

2. மாலை புலால் நாறுதலும் எருக்கங்கண்ணி நறியதாதலும் உலகில் ஒவ்வாதன. இவ்வொவ்வாமையைக் கூறும்போது, பல்லார் தோள் தோய்ந்து வருதலும் மகன் மலைந்து வருதலும் காரணமாக்கிக் கூறுதலின் ஒவ்வாமை குறித்த தலைவி தெரித்துச் சொன்னவாறு காண்க. சேனாவரையர் இப்பாடற் கருத்தமைந்த "ஒல்லேம் குவளைப் புலால் மகன் மார்பிற் புல்லெருக்கங்கண்ணி நறிது" என்னும் வரிகளைக்காட்டி இளம்பூரணர் கருத்தை மறுப்பது அவர் உரையிற் காண்க.

சேனா.

இ—ள் : ஒருபொருள் வேறுபாடு குறித்தோன், அஃது ஆற்றல் முதலாயினவற்றான் விளங்காதாயின் அதனைத் தெரித்துச் சொல்லுக, எ—று.

உ—ம் : அரிதாரச் சாந்தம் கலந்தது போல
உருகெழத் தோன்றி வருமே—முருகுறழும்
அன்பன் மலைப் பெய்த நீர்.

எனவும்,

" வாருமதுச் சோலை வண்டுதிர்த்த நாண்மலரால்
நாறு மருவி நளிமலை நன்னாட "

எனவும் வரும். 'கலந்தது போல வருமே இலங் கருவி யன்பன் மலைப் பெய்த நீர்' எனவும், 'நாறும் அருவி நளிமலை நன்னாட' எனவும் தெரித்து மொழியாதவழிக் குறித்தது விளங்காது வழுப்படுதலின் மரபு வழுக் காத்தவாறு.

வட நூலார் இதலை நேயம் என்ப.

" ஊட்டியன்ன ஒண்டளிர்ச் செயலை " (அகம் 68)
என்புழி இன்னதனை யென்று தெரித்து மொழியாமையின் வழுவாம்பிற வெனின், உவமையென்னும் அலங்காரமாயினன்றே இன்னதொன்றனை யெனல் வேண்டுவது; செயலையந் தளிரினது செய்யாத நிறத்தைச் செய்தது போலக் கூறுங் கருத்தினனாகலிற் [1]பிறிதோர் அலங்காரமாம். அதனான் அது கடாவன்றென்பது.

படுத்துவைத் தன்ன பாறை மருங்கின்
எடுத்துநிறுத் தன்ன விட்டருஞ் சிறுநெறி
(மலைபடு. 15-16)

என இன்னோரன்ன வெல்லாம் அவ்வலங்காரம் பற்றி வந்தன.

"ஒல்லேலங் குவளைப் புலாஅல் மகன்மார்பிற்
புல்லெருக்கங் கண்ணி நறிது"

என்புழிக் குவளை புலால் நாறுதற்கும் எருக்கங்கண்ணி நறிதாதற்கும் காரணம் கூறாமையின் வழுவாம் பிறவெனின், புதல்வர்ப் பயந்த பூங்குழல் மடந்தை பரத்தையிற் பிரிந்து வந்த கிழவனொடு புலந்துரைக்கின்றாளாகலிற் குவளை புலால்

1. தற்குறிபபேற்ற அலங்காரம்.

நாறுதற்கு அவன் தவற்றொடு கூடிய அவன் காதல் காரணம் என்பதூஉம், எருக்கங்கண்ணி நறிதாதற்கு மகிழ்நன் செய்த துனிகூர் வெப்பம், முகிழ்நகை முகத்தால் தணிக்கும் புதல்வன் மேல் ஒரு காலைக் கொருகால் பெருகும் அன்பு காரணம் என்பதூஉம் பெறப்படுதலின் வழுவாகா தென்பது

[2]மீக்கூற்றம் என்புழிப் போலக் கூற்றுக் கூற்றம் என நின்றது.

தெய்.

மேலதற்கோர் புறநடை யுணர்த்துதல் நுதலிற்று.

†இ-ள்: தெரிந்து வேறுபடுக்க வரும் சொல்லைக் கிளந் துரைத்தலே யன்றிக் குறித்தோன் கூற்றமும் ஆம், எ-று.

உம்மும் ஆமும் எஞ்சி நின்றன.

உ-ம்: ''நிவந்தோங் குயர் கொடிச் சேவலோயே' (பரிபா 3:18) என்றவழிச் சொல்லுவான் குறிப்பு மாயவனை நோக்கலிற் கருடனாயிற்று. ''சேவலங் கொடியோன் காப்ப'' (குறுந். 1) என்ற வழிச் சொல்லுவான் குறிப்பு முருகவேளை நோக்குதலிற் கோழியாயிற்று. பிறவும் அன்ன.

நச்,

இது மரபு வழுக்காக்கின்றது

இ-ள்: குறித்தோன் கூற்றம்—ஒருபொருள் வேறுபடக் குறித்தோன் கூற்று ஆற்றல் முதலியவற்றால் விளங்காததாயின், தெரித்து மொழி கிளவி—அப்பொருளைத் தெரித்துச் சொல் லும் சொல்லாகக் கூறுக, எ-று

அரிதாரச் சாந்தம் கலந்தது போல
உருகெழத் தோன்றி வருமே—முருகுறழும்
அன்பன் மலைப் பெய்த நீர்.

எனத் தெரிந்து மொழிப. கலநதது போல வருமே இலங்கருவி அன்பன் மலைப் பெய்த நீர் எனத் தெரிந்து மொழியாக்கால் வழுவாம்.

---

2. மீக்கூற்று எனபது மீக்கூற்றம் என்று ஆனதுபோல

† இவ்வுரை சேனாவரையரால் மறுக்கப்பட வில்லை யாதலின் அவர் தெய்வச்சிலையார்க்கு முற்பட்டவர் என அறியலாம்.

'ஊட்டியன்ன ஒண்டளிர்ச் செயலை' என்றது, ஊட்டாததனை ஊட்டியது போலக் கூறலின் வேறோர் உவம இலக்கணமாம்.

பல்லார்தோள் தோய்ந்து வருதலால் [1]பாய்புனல்
நல்வய லூரநின் தார்புலால்—புல்லெருக்க
மாசில் மணிப்பூண்எம் மைந்தன் மலைந்தமையால்
காதற்றாய் நாறும் எமக்கு.

இதுவும் தெரித்து மொழிந்தது.

[2]ஒல்லேம் குவளைப் புலாஅல் மகன் மார்பிற்
புல்லெருக்கங் கண்ணி நறிது.

எனத் தெரித்து மொழியாதாயிற்று ஆயினும், தலைவன் தவறும் புதல்வன் மேல் அன்பும் காரணமாகக் கூறுதலும் வழுவன்று என்றலும் ஒன்று.

கல்.

என்-எனின், இதுவும் ஓர் செயற்கைப் பொருள்மேல் மரபு வழுக்காத்தல் நுதலிற்று.

இ-ள்: உலகத் தொப்ப முடிந்த பொருளை ஒவ்வாமற் சொல்லக் குறித்தவன் சொல்லுஞ் சொல்லாதற்கு ஓர் காரணங் கூறிக் கூறுஞ் சொல்லாய் இருக்கும், எ-று.

உ-ம்: பல்லார்தோள் தோய்ந்து வருதலிற் பூம்பொய்கை
நல்வய லூரநின் றார்புலால்—புல்லெருக்கு
மாசில் மணிப்பூணெம் மைந்தன் மலைந்தமையால்
காதற்றாய் நாறும் எமக்கு.

என. இதனாற் சொல்லியது ஓர் செயற்கைப் பொருளை ஓர் இயற்கையாக வோர் காரணங்கருதிக் கூறுமிடத்துத் தான் கருதிய காரணத்தினை விளங்கச் சொல்லுக வென ஓர் மரபாராய்சிக் கூறியவாறு. இதுவும் ஓர் மரபு வழுவமைதி போலும்.

சு.வே: 1. பூம்பொய்கை. 2. புல்லேம்

ஒரு.

என்பது தான் ஒரு பொருளைக் கருதிச் சொல்லுமேல் அதனை யிற்று என்று தெரித்துச் சொல்லுக.

உ-ம்: அரிதாரச் சாந்தம் கலந்தது போல
உருகெழத் தோன்றி வருமே—முருகுறழும்
அன்பன் மலைப்பெய்த நீர்

எனத் தெரித்துமொழி; 'கலந்தது போல வருமே யிலங்கருவி யன்பன் மலைப்பெய்த நீர்' என்று கூறற்க. அன்றியும்,

பல்லார்தோள் தோய்ந்து வருதலாற் பாய்புனல்
நல்வய லூரநின் றார்புலால்—புல்லெருக்க
மாசின் மணிப்பூண்எம் மைந்தன் மலைந்தமையால்
காதற்றாய் நாறும் எமக்கு

எனவும் தெரித்து மொழிந்தவாறு.

"ஒல்லேங் குவளைப் புலாஅல் மகன்மார்யிற்
புல்லெருக்கங் கண்ணி நறிது" என்று கூறற்க. கூறில் வழுவாம்.

ஆதி.

ஒன்று குறித்து உரைப்பான் தன் சொல் நன்கு பொருள் தெளிவாகத் தெரிய மொழி கிளத்துக.

கல் எடுப்பு எப்போது—ஈமக்கடன், நடுகல் நாட்டல், கல் கண்டு எடுத்துவரல்—இவ்வாறு பல பொருள் தரலால் சொல் தெளிவான பொருள் தந்து நிற்கவேண்டும்.

காக்க: நாகாக்க, கடவுள்காக்க—இவ்வாறு அடக்குக, காப்பாற்றுக எனப் பொருள் வேறுபடலால் குறிப்பறிந்து தெளிந்து மொழிதல் வேண்டும்.

ஓம்புக, அரிது இச் சொற்களும் இவ்வாறே. "மஞ்சள் அழகும் அழகல்ல"—மஞ்சள் சந்தனக் கலவை.

பி. கு

உரையாசிரியருள் தெய்வச்சிலையார் தவிர ஏனையோர் யாவரும் இச்சூத்திரம் மரபு வழுக் காத்ததாகவே கூறினர். இளம்பூரணர் காட்டிய உதாரணம் வினாவிடையாகக் காணப் படுதலின் அதற்கேற்பச் செப்பு வழுக்காத்ததாகவும், அமைதி

கூறியதாகவும் கொள்வதும் உண்டு என்பது அவர் உரையில், தெரிகிறது.

உயர்திணைப்பெயர்க்கு அஃறிணை முடிபு

5 . குடிமை யாண்மை யிளமை மூப்பே
அடிமை வன்மை விருந்தே குழுவே
பெண்மை யரசே மகவே குழவி
தன்மை திரிபெயர் உறுப்பின் கிளவி
காதல் சிறப்பே செறற்சொல் விறற்சொல் என்று
ஆவறு மூன்றும் உளப்படத் தொகைஇ
அன்ன பிறவும் அவற்றொடு சிவணி
முன்னத்தின் உணரும் கிளவி யெல்லாம்
உயர்திணை மருங்கின் நிலையின வாயினும்
அஃறிணை மருங்கிற் கிளந்தாங் கியலும்

ஆ. மொ.

இல.

The nobility, manlines, youth, old age slavery, strength, newness, group
Womanhood, Kingship, boyhood, and girlhood, child hood,
noun of changed nature, words derived from limbs,
words denoting love, honour, hatred and valour
these eighteen and such other words which are to be under stood by intuition
haev pridicate of non - class even though they denote objcets of High class.

க சு.

The six times threc words kuṭimai (states os family) āṇmai (man liness), iḷamai (youth), mūppu (old age) aṭimai (slavary), Vaṉmai (strangth), viruntu (feast), kuḻuu (group) peṇmai (womanhood(, aracu (kingship), makavu (sonhood / daugter

hood), kuḻavi (child hood) taṉmai - tiripeyar (noun denoting change of quality), uṟuppin kiḷavi (words pertaining to organs), kātaṟcol (terms of endearment) ciṟappuecol (terms of honoar) ceṟaṟcol(words of hatred andangeṟ) Viṟaṟcol (words denoting valour) and allsuch other wordswhich resemble (them)and may be imagined in the mind takeakṟiṇai verbs even when they denote uyartiṇai items

பி. இ. நா.

நேமி. சொ. 8.

குழு அடிமை வேந்து குழவி விருந்து
வழுவுறுப் புத்திங்கள் மகவும் — பழுதில்
உயர்திணைப் பண்போடு உயர்வுறுப்பு மெய்யும்
அயர்வில் அஃறிணையே யாம்.

நன். 379.

உவப்பினும் உயர்வினும் செறலினும் சிறப்பினும்
இருப்பினும் பால்திணை இழுக்கினும் இயல்பே.

இல. வி. 299.

உவப்பினும் உயர்வினும் சிறப்பினும் செறலினும்
இழிப்பினும் சொல்நோக்கினும் திணை பாலவை
வழுக்கினும் வழுவென வரையார் என்ப.

முத்து. ஒ. 88

ஆண்மை குடிமை அடிமை மூப்பே
விருந்தே இளமை வெண்மை உறுப்பே
குழுவே வன்மை குருடே மகவே
அரசே காதல் அஃறிணை முடிபின.

இளம்.

இச்—எனின், திணைவழுக் காத்தல் நுதலிற்று.

*உரை: குடிமை ஆண்மை தொடக்கத்தனவும் பிறவும் அந்நிகரன வெல்லாம் உயர்திணையல்லவும், உயர்திணைப் பொருளைச் சார்ந்து நிகழும் குணங்களும், உயர்திணைப் பொருளைப் பற்றுக் கோடாக நிகழ்தலின் உயர்திணையைப் போல வழங்கல் வேண்டுமே யெனினும், அஃறிணையைச் சொல்லியாங்குச் சொல்லுக; எ—று.

வ—று: அவர்க்குக் குடிமை நன்று ....குடிமை
அவர்க்கு ஆண்மை நன்று ....ஆண்மை
அவர்க்கு இளமை நன்று ....இளமை
அவர்க்கு மூப்பு நன்று ....மூப்பு
அவர்க்கு அடிமை நன்று ....அடிமை
அரசு வன்மை நன்று ....வன்மை
விருந்து வந்தது ....விருந்து
அக்குழு நன்று ....குழூஉ
பெண்மை அடங்கிற்று ....பெண்மை
அரசு நிலைத்தது ....அரசு
மகவு நலிந்தது ....மகவு
குழவி யழுதது ....குழவி

எனவரும்.

அலி வந்தது—இதுதன்மை திரிபெயர்
குருடு வந்தது—இஃது உறுப்பின் கிளவி.

என் காதல் பொலிவாயிற்று, என்யானை வந்தது இவை முறையே காதலும் சிறப்பும் கெழீஇ வந்தன. காதல் கிள்ளை யினையும் யானை மகவினையும் பற்றி வந்தன.

கெழீஇயிலி வந்தது—இது செறற்சொல்

---

*இவ்வுரைப்பகுதி பிழைப்பட்டுள்ளது. பின்வருமாறு இருப்பின் நன்று:—"குடிமை ஆண்மை யென்னும் தொடக்கத்தனவும் அந்நிகரன பிறவும் உயர்திணைப் பொருளைச் சார்ந்து நிகழும் குணங்களாய் அத்திணைப் பொருளையே பற்றுக் கோடாகக் கொண்டு நிகழ்தலின் அவற்றை உயர்திணையைப் போல வழங்க வேண்டுமே யெனினும் அஃறிணையைச் சொல்லியாங்குச் சொல்லுக என்றவாது"—கு. சுந்தரமூர்த்தி

விறற்சொல் விறலையுணர்த்துதல்; அது பெருவிறல் வந்தது எனவரும்.

பேடி வந்தது, குரிசில் வந்தது என்னுந் தொடக்கத்தனவும் அறிந்து கொள்க.

இதுவும் ஒருசார் ஆசிரியன் உரைப்பது: இனிக் குடிமை ஆண்மை என்றித் தொடக்கத்தன ஒருவன் ஒருத்தி பலர் என்னும் மூன்றுபாற்கும பொதுவாய்ப் பின் முடியுங்கால் அஃறிணை முடிபிற்றாக என்பது. வன்மை என்பது மூன்று பாற்கும் பொதுவாய் நிற்பது யாண்டுப் பெறுதுமோ எனின் வழக்குப் பெற்றுழிக் கொள்க.

சேனா.

இ—ள்: குடிமை முதலாக விறற் சொல் ஈறாகச் சொல்லப் பட்ட பதினெட்டும் உளப்பட அன்ன பிறவும் அவற்றொடு பொருந்தித் தொக்கு, முன்னத்தினுணரும் கிளவிகள் எல்லாம் உயர்திணைப் பொருள் மேல் நின்றனவாயினும் அஃறிணைப் பொருளையுணர்த்தி நின்றவழிப் போல அஃறிணை முடிபே கொள்ளும், எ—று.

உ—ம்: குடிமை நன்று, குடிமை தீது, ஆண்மை நன்று, ஆண்மை தீது எனவரும். ஒழிந்தனவற்றிற்கும் இவ்வாறு பொருந்தும் வினை தலைப் பெய்க.

தன்மைதிரிபெயர்: அலி. இதனோடு ஒரு பொருட் கிளவியாய் வருவனவும் கொள்க.

உறுப்பின் கிளவி: குருடு. முடம் என்னுந் தொடக்கத்தன.

காதற் சொல்: பாவை, யானையென ஒப்புமை கருதாது காதல் பற்றி வருவன.

சிறப்புச் சொல்: கண் போலச் சிறந்தானைக் கண் என்றலும் உயிர் போலச் சிறந்தனை உயிர் என்றலும் என இவை முதலாயின.

செறற் சொல்: செறுதலைப் புலப்படுக்கும் பொறியறை செழ்இயிலி யென்னுந் தொடக்கத்தன.

விறற்சொல்: விறலை யுணர்த்தும் பெருவிறல், அருந்திறல் என்னுந் தொடக்கத்தன.

தன்மை திரிபெயர் முதலாயின் பொருள் வகையான் ஆறாக அடக்கப்பட்டன.

குடிமை ஆண்மை இளமை மூப்பு அடிமை வன்மை பெண்மை உறுப்பின்கிளவி சிறப்புச்சொல் விறற்சொல் என்பன உயர் திணைக்கண் ஆகுபெயரா யல்லது வாரா. அல்லன இருதிணைக் கண்ணும் ஒத்தவுரிமைய வெனக் கொள்க.

காதல் பற்றிச் சிறுவனை யானையென்றலும், ஆகுபெய ராமன்றோ வெனின், யாதானும் ஓர் இயைபுபற்றின் ஒன்றன் பெயர் ஒன்றற்காயது ஆகுபெயராம். இயைபு கருதாது காதல் முதலாயினவற்றான் யானையென்றவழி ஆகுபெயருள் அடங்கா வென்பது. சிறுவனை யானை யென்றலும் ஒன்றன் பெயர் ஒன்றற் காதல் ஒப்புமையான் ஆகுபெயரென்பாரும் உளர். சொல்லுவான் குறிப்பொடு படுத்துணரப் படுதலின் முன்னத் தினுணருங் கிளவி' என்றார்.

'அஃறிணை முடிபின' வென்னாது 'அஃறிணை மருங்கிற் கிளந்தாங்கியலும்' எனப் பொதுப்படக் கூறியவதனால் குடிமை நன்று, குடிமை நல்ல; அடிமை நன்று அடிமை நல்ல என ஏற்புழி ஒருமைக்கும்பன்மைக்கும் பொதுவாய் நிற்றலும்கொள்ளப்படும்.

அன்ன பிறவும் என்றதனான் வேந்து, வேள், குரிசில், அமைச்சு, புரோசு என்னுந் தொடக்கத்தனவும் கொள்க.

குடிமை முதலியன உயர்திணையுணர்த்தும்வழி அஃறிணை யான் முடிதல் வழுவாயினும் அமைகவெனத் திணைவழு வமைத்தவாறு.

தெய்.

திணை வழுவமைதி யுணர்த்துதல் நுதலிற்று.

இ—ள்: குடிமை முதலாக எண்ணப்பட்டனவும் அத்தன் மைய பிறவும் அவற்றொடு பொருந்திக் குறிப்பினான் உணருங் கிளவியெல்லாம் உயர்திணை மருங்கில் நின்றனவாயினும் அஃறிணையிடத்துச் சொல்லான் வழங்கப்படும், எ—று.

உயர்திணை மருங்கின் நிலையினவாயினும் என்ற உம்மை யான் இவையெல்லாம் பண்பு குறித்தவழி அஃறிணையாம் என்பதூஉம், பொருள் குறித்தவழி உயர்திணையாம் என்பதூஉம்

கூறியவாறாயிற்று. குடிமையாவது குடியாகிய தன்மை. அது அக்குடியிற் பிறந்தாரைக் குறித்து நின்றது. இக்குடி வாழ்ந்தது; இக்குடி கெட்டது என்ப. குடிமை என்பது குடி என வருமோ எனின்.

மடிமை குடிமைக்கண் தங்கின்தன் ஒன்னார்க்கு
அடிமை புகுத்தி விடும் (குறள் 608)

என்றவழிக் குடி எனப் பொருளாகியவாறு கண்டு கொள்க.

ஆண்மையென்பது ஆணாகியதன்மை; அத்தன்மையைக் குறித்து ஒரு ஆண் வந்தது என்ப.

இளமை என்பது இளையாரைக் குறித்து நிற்கும். இவ்வவை இளமையின்று என இளையாரை இலது என்னும் பொருள்பட வந்தது.

மூப்பு என்பது முதியாரைக்குறித்து நிற்கும்; 'இவ்வவை மூப்பு இன்று' என முதியாரை இலது என்னும் பொருள்பட வந்தது.

அடிமை என்பது அடிமைத் தொழில் செய்வோர்மேற்று. அவன தடிமை வந்தது என அப்பொருள் குறித்து நின்றது.

வன்மையென்பது வலியாகிய தன்மை. அவனது வலி போயிற்றென அவற்குத் துணையாயினாரைக் குறித்து நின்றது.

விருந்து என்பது புதுமை. விருந்து வந்ததெனப் புதியார் வந்தார் என்பது குறித்து நின்றது

குழூஉ என்பது திரள். குழூஉப் பிரிந்தது, அவை யெழுந்தது, படைதிரண்டது என்பன குழுவிய மாந்தரைக் குறித்தது.

பெண்மையென்பது பெண்ணாகிய தன்மை; ஒரு பெண் வந்தது என்ப.

அரசு என்பது அரசத் தன்மை; அரசிருந்தது என்பது அரசன் என்பதைக் குறித்தது.

மகஎன்பது மகன் மகள் என்னும் முறைப் பெயர் இரண் டற்கும் பொதுவாகி நிற்பது; மகக் கிடந்தது என்ப.

குழவியென்பது அப்பொருளின் இளமை குறித்து நிற்கும். குழவி அழுதது என்ப.

தன்மை திரிபெயர் என்பது தன் இயல்பிற்றிரிந்த பொருட் பெயர். அது மருள் என்பது. அதனை மருள் வந்தது என்ப.

உறுப்பின் கிளவி என்பது உறுப்பினாற் கூறப்படும் சொல். அஃதாவது குருடு முடம் என்பன. குருடு வந்தது, முடம் வந்தது என்ப.

காதல் என்பது காதல் பற்றி நிகழும் சொல். காதற் சொல் சிறப்புச் சொல் என ஒரு சொல் வருவிக்க. என்பாவை வந்தது என் யானை வந்தது என்ப. தன் மகளை இங்கிதோர் நல் கூர்ந்தார் செல்வமகள் (கலி - 56) என்ற வழி 'இது' என்பது காதல் பற்றி வந்தது.

சிறப்பு என்பது சிறப்பைப் பற்றி வருஞ் சொல். கண் போலச் சிறந்தானை 'என் கண்' வந்தது என்ப.

செறற் சொல் என்பது செறலினாற் கூறுஞ்சொல். 'என் பகை வந்தது', 'திருவிலி வந்தது' என்ப. "ஏஎ இஃதொத்தன்" (கலி 102) என்ற வழி இஃதென்பதும் அது.

விறற் சொல் என்பது வீரியத்தாற் கூறும் சொல். விறல் வந்தது, சிங்கம் வந்தது, புலி வந்தது என்ப, அவ்வீரியம் குறித்து.

அன்ன பிறவும் என்றதனால் குடும்பம் வாழ்ந்தது, வேந்து சென்றது, ஆள் வந்தது, அமைச்சு வந்தது, தூது வந்தது, ஒற்று வந்தது, நட்பு நன்று என்பன கொள்க.

அவற்றொடு சிவணி முன்னத்தின் உணரும் கிளவி யெல்லாம் என்றதனால், உலகு வாழ்ந்தது, நாடுவந்தது, ஊர் வந்தது என்பது அவ்விடத்துள்ள மாந்தரைக் குறித்தது. பிறவும் அந்நிகரனவெல்லாம் கொள்க. இவையெல்லாம் ஆகுபெயர் அன்றோ எனின், பெயராயின் தன் பொருட்கு உரிய பாலான் முடியும். இவை அன்ன வன்றி வேறுபட்டு முடிதலிற் குறிப்பு மொழியாயின.

நச்.

இது திணை வழுக் காக்கின்றது.

இ—ள்: குடிமை ஆண்மை இளமை மூப்பே அடிமை வன்மை விருந்தே குழுவே பெண்மை அரசே மகவே குழவி தன்மை திரிபெயர் உறுப்பின்கிளவி காதல் சிறப்பே செறற் சொல் விறற் சொல் என்று ஆவறு மூன்றும் உளப்பட அன்ன பிறவும் அவற்றொடு சிவணித் தொகைஇ—குடிமை முதலாக விறற் சொல் ஈறாகச் சொல்லப்பட்ட அப்பதினெட்டும் உளப்பட அவை போல்வன பிறவும் அவற்றொடு பொருந்தித் தொக்கு, முன்னத்தின் உணரும் கிளவி யெல்லாம்—சொல்லுவான் குறிப் பொடுபடுத்து உயர்திணைப் பொருளை உணரப்படும் சொற்கள் எல்லாம், உயர்திணை மருங்கின் நிலையின ஆயினும்—உயர் திணை இருபாற்கண்ணும் பெரும்பான்மை நிலை பெற்றன ஆயினும், அஃறிணை மருங்கின் கிளந்தாங்கு இயலும்—அஃறிணைப் பொருளை உணர்த்தி நின்றவழிப் போல அஃறிணை முடியே கொள்ளும், எ—று.

என்னை உயர்திணைப் பொருள் உணர்த்தியவாறு எனின், இக்குடிமை முதலியன எல்லாம் பெரும்பான்மையும் உயர் திணைக்குப் பண்பேயாய் நின்று அப்பண்பினை உணர்த்தி அஃறிணையாய் நில்லாது, அப்பண்புச் சொல் தன் பண்பையும் தன்னையுடைய பொருளையும் ஒருங்கு தோற்றுவித்துப் பிரியாது நிற்றலின் உயர்திணைப் பொருளையே யுணர்த்திற்றாம். இங்ஙனம் நிற்கும் என்றுணர்தல் சொல்லுவான் குறிப்பினான் அன்றி உயர்திணைப் பொருளின் தீர்ந்து இன்னவாறு நிற்கும் என்று வேறோர் ஆற்றான் உணர்தல் இன்று என்றற்கு 'முன்னத் தின் உணரும்' என்றார். இவற்றுள் விரவுப் பெயராய் அஃறிணைப் பண்பை உணர்த்துவன உளவேனும், அவையும் சொல்லுவான் குறிப்பான் ஒருகால் உயர்திணைப் பண்பே உணர்த்தும் என்று கருதி, 'உயர்திணை மருங்கின் நிலையின ஆயினும்' என்றார். உயர்திணைப் பெயரும் விரவுப் பெயரும் மேல் கூறுபடுத்துதும்.

இனிக் குடிமை ஆண்மை முதலியவற்றை ஆகுபெயர் என் பாரும் உளர். குடிமை என்னும் குணப் பெயர் ஆகுபெயராய்க் குடிமகனை உணர்த்திற்றேல் குடிமை நல்லன் என உயர்திணை யான் முடியும். அன்றிக் 'குடிமை' எனத் தனக்குரிய பண்பை உணர்த்தி நிற்குமேல் பின்னர் அஃறிணை மருங்கின் கிளந்தாங்

இயலும் என வேண்டா, தானே அஃறிணையான் முடியும். ஆதலின் ஆகுபெயர் என்றலும், பண்பு உணர்த்தி நிற்கும் என்றலும் பொருந்தாமையுணர்க. இக்குடிமை முதலியவற்றிற்கு 'நன்று தீது' என்றும், 'வந்தது, போயிற்று' என்றும் ஏற்ற அஃறிணை வினை கொடுத்து ஓட்டுக.

இனி இவை உயர்திணைப் பண்பாய் அப்பொருளையும் ஒருங்கு உணர்த்தி நிற்குமாறு :—

குடிமையாவது குடிப்பிறப்பிற்கேற்ற ஒழுக்கம்; அஃது "ஒழுக்கம் உடைமை குடிமை" (குறள் 133) என்றதனான் உணர்க. "மடிமை குடிமைக்கண் தங்கின்" (குறள் 608) என உயர்திணை இருபாலையும் உணர்த்திற்று.

ஆண்மையாவது ஆளுந்தன்மை; அஃது "ஆயிடையிரு பேராண்மை செய்த பூசல்" (குறுந். 4) என இருபாலையும் உணர்த்திற்று. இன்னும் "ஊராண்மைக் கொத்த படிறுடைத்து" (கலி 89; 2) எனவும், "வேளாண்மை செய்து விருந்தோம்பி வெஞ்சமத்து வாளாண்மையானும் வலியராய் — தாளாண்மை'. எனவும் வரும். இது,

> வேளாண் எதிரும் விருந்தின் கண்ணும்
> வாளாண் எதிரும் பிரிவினானும் (தொல். கள. 16)

எனவும்,

> உட்குடையாள் ஊராண் இயல்பினாள் (நாலடி. 384

எனவும் விகாரமாயும் நிற்கும். இவ்வாண்மை யாளுந்தன்மையே யன்றி ஆண்பாலாகிய தன்மையும் உணர்த்தும் என்றற்கு 'ஆண்மை சுட்டிய எல்லாப் பெயரும் (பெயரியல். 26) என்று ஆசிரியர் விரவுப் பெயர்க்கண் உடம்பொடு புணர்த்து ஓதினார் இவ்விரண்டு பண்பும்,

> பிறப்பே குடிமை ஆண்மை ஆண்டோடு
> உருவு நிறுத்த காம வாயில்
> நிறையே யருளே உணர்வொடு திருவென
> முறையுறக் கிளந்த ஒப்பினது வகையே
>
> (மெய்ப். 52)

என்னும்மெய்ப்பாட்டியல் சூத்திரத்தால் தலைவற்கும் தலைவிக்கும் ஒப்பவுரிய என்றே ஓதுகின்றார். ஆகலின் இரண்டும் இரு பாற்கும்ஒப்பவே ஓதினார்.

இனி ஆண்மையை 'ஆள்வினை' என்றும் உரைப்ப. இவ்வாண்மையும் மேல் கூறும் பெண்மையும் உயர்திணை ஆண்பாலையும் பெண்பாலையும் உணர்த்தா என்று கருதி,

ஆண்பால் எல்லாம் ஆண் எனற் குரிய

பெண்பால் எல்லாம் பெண் எனற் குரிய (மரபி 50) என அஃறிணைக்கே ஓதியவற்றையே,

பெண்ணும் ஆணும் பிள்ளையும் அவையே (மரபி. 69) எனக் கிளந்து கூறாதவழி உயர்திணையையுணர்த்தும் என்று மரபியலுட் கூறுவர். அன்றியும்,

புல்லா வாழ்க்கை வல்லாண் பக்கம் (புறத். 21) என்றும்,
பாடாண் பகுதி (புறத் 25)

என்றும் பிறாண்டும் 'ஆண்மை' என்னாது 'ஆண்' என்றே சூத்திரம் செய்ததனாலும், ஆண் மக்கள், பெண் மக்கள் என்னும் வழக்கானும் உணர்க.

இனி ஆண்மையை விரவுப் பெயர் என்றால், முற்காட்டிய உதாரணங்கட்கும் விரவுப் பொருள் அஃறிணைப் பெயர்க்கும் ஏலாமை யுணர்க.

''ஆண்மை தோன்ற ஆடவர்க் கடந்த'' (புறம் 242 : 4) என்பதற்கும் 'ஆளுந் தன்மை தோன்ற' என்றே பொருள் உரைத்துக் கொள்க.

இளமையாவது காமச் செவ்வி நிகழ்வதோர் காலம்.''இளமை கழிந்த பின்றை வளமை, காமம் தருதலும் இன்றே'' (நற்: 126) என உயர்திணையிருபாலும் உணர்த்திற்று.

மூப்பு: 'மூப்புடை முதுபதி' என உயர்திணையிருபாலையும் உணர்த்திற்று.

இளமையும் மூப்பும் பொருள் மேல் நில்லாது பண்பின் மேல் நிற்பின் அஃறிணையையும் உணர்த்தும்.

அடிமையென்பது "அடிமைபுகுத்திவிடும்" குறள் (608) என உயர்திணை யிருபாலும் உணர்த்தும்.

வன்மையாவது ஒரு தொழிலை வல்லுதல். அது 'சொல் வன்மை நன்று' என உயர்திணை யிருபாலும் உணர்த்தும். ஈண்டு 'வன்மை' வலியன்று

விருந்து: "விருந்தெதிர் கோடலும்" (சிலப். 16 : 17) என உயர்திணை யிருபாலையும் உணர்த்திற்று. "ஆங்கவை விருந் தாற்றப் பகல் அல்கி" (கலி. 66.) என அஃறிணைக்கும் இது வரும்.

குழு: 'குழுவின் பெயரி' எனவும், 'ஐம்பெருங்குழுவும் எண் பேராயமும்' (சிலப் 5:1 57) எனவும் உயர்திணையிருபாலும் உணர்த்தும்.

பெண்மையாவது கட்புலன் ஆயதோர் அமைதித்தன்மை. அது "பெண்மை அடுத்த மகளென் கிளவி" பெயரியல். 9) என்ப தனால் உணர்க. இது மகள் என்பது பெண்பால் உணர்த்தப் பெண்மை என்பதும் பெண்பால் உணர்த்துமேல் கூறியது கூறலாம். ஆதலின் ஆசிரியர்க்கு இதுவே பொருளாயிற்று 'ஆண்மையடுத்த மகன்" (பெய. 9) என்பதற்கும் இஃது ஒக்கும்.

"பெண்மை சுட்டிய உயர்திணை மருங்கின்" (கிளவி யா 4) என்பதனாலும்,

"பிறனியலாள் பெண்மை நயவாதவன்" (குறள் 147) என்ப தனாலும் உணர்க. இப்பெண்மை அமைதித் தன்மையே அன்றிப் பெண்பாலாகிய தன்மையும் உணர்த்தும் என்பது கருதி ஆசிரியர் "பெண்மை சுட்டிய எல்லாப் பெயரும்" (பெய. 26) எனவிரவுப் பெயர்க்கண் உடம்பொடு புணர்த்து ஓதினார். உயர்திணை ஆண்பாற்கு உரித்தன்றிப் பெண்பாற்கே வரினும் அதுவும் உயர் திணையேயாதல் நோக்கி "உயர்திணை மருங்கின் நிலையின ஆயினும்" என்றார்.

அரசு: "அரசபடக் கடந்தட்டு" (கலி. 105: 1) என உயர் திணை ஆண்பால் உணர்த்திற்று. "பெண் அரசியேந்தினள்' (சீவக. 736) என ஈறு வேறாயவழிப் பெண்பாலும் உணர்த்தும்.

இஃது "அரசுவா வீழ்ந்த களத்து" (களவழி. 35) என அஃறிணைக்கும் வரும்.

இனி மகவும் குழவியும்,

குழவியும் மகவும் ஆயிரண் டல்லவை

கிழவ வல்ல மக்கட் கண்ணே (மரபி. 23) என அஃறிணைக்கேயன்றி உயர்திணையிருபாற்கும் வரும் என்றார்.

தன்மை திரிபெயர்: அலி.

உறுப்பின் கிளவி: குருடு முடம்; இவை இருபாற்கும் ஒக்கும். விரவுப் பெயர்க் காயின் முடவன் முடத்தி எனவரும்.

காதல்: யானைவந்தது, பாவை வந்தது என ஒப்பின்றிக் காதல் பற்றி நிற்கும். அது, போர் யானை வந்தீக இங்கு "(கலி 86: 10) எனவரும். தன்னின முடித்தலால் "தேமலர் அங்கண் திருவே புகுதுக" (சீவக: 21: 21) என உவப்பும் கொள்க.

சிறப்பு: கண்போலச் சிறந்தானைக் 'கண்' என்றலும், உயிர் போலச் சிறந்தானை 'உயிர்' என்றலும் ஆம். அஃது, 'ஆலமர் செல்வன் அணிசால் பெருவிறல் போல வரும் எம உயிர்" (கலி. 81: 9, 10) எனவரும்.

செறற் சொல்: செறுதலைப் புலப்படுக்கும் "பொறியறை" கெழீஇயிலி. அது, 'போசித்தை' (கலி. 94: 22) என்றாற் போல் வது. தன்னின முடித்தலால், "ஏவவும் செய்கலான் தான் தேறான் அவ்வுயிர், போமளவும் ஓர் நோய்" (குறள் 848) என இழிபும் கொள்க.

விறற்சொல்: விறலையுணர்த்தும் பெருவிறல்; (கலி, 81 10) 'அருந்திறல்' போல்வன.

'அன்ன பிறவும்' என்றதனால் வேந்து, வேள், குரிசில், அமைச்சு, புரோசு (பதிற் 7 பதிகம்) என ஒரு பாற்கு உரிய காட்டலும் ஒன்று. இருபாற்கு உரியன வந்துழிக்காண்க. இவையெல்லாம் 'பண்பு' என்று விளக்கிய பண்பு வாய்பட்டால் ஓதினார். இவை உயர்திணைப் பண்புப் பெயராய் அப்பொருளையும் ஒருங்கு உணர்த்தினவேனும் அஃறிணைச் சொற் கொண்டு முடியும் என வழுவமைத்தார்.

கல்.

என்—எனின், திணை வழுக் காத்தல் நுதலிற்று.

இ—ள்: குடிமை யென்னும் சொல்லும், ஆண்மை என்னும் சொல்லும், இளமை யென்னும் சொல்லும், மூப் பென்னும் சொல்லும், அடிமை யென்னும் சொல்லும், வன்மை யென்னும் சொல்லும், விருந்து என்னும் சொல்லும், குழு வென்னும் சொல் லும், பெண்மை யென்னும் சொல்லும், அரசு என்னும் சொல் லும், மக என்னும் சொல்லும், குழவி யென்னும் சொல்லும், தன்மை திரிந்ததனாற் பெற்ற பெயர்ச் சொல்லும், உறுப்பிற் பெயர்ச் சொல்லும், காதல் என்னும் சொல்லும், சிறப்பித்துச் சொல்லும் சொல்லும், செறுத்துச் சொல்லும் சொல்லும், விறல் என்னும் சொல்லும் என்று சொல்லப்பட்ட பதினெட்டுச் சொல் லும் உட்பட வந்த தன்மையனவும் பிறவும் அவற்றொடு கூடித் தொக்கு இவ்வகையாகிய குறிப்பினான் உணரப்படும் சொற்கள் எல்லாம், உயர்திணையிடத்தே நிலை பெற்றன வாயினும், அஃறிணையிடத்துச் சொல்லுமாறு போலச் சொல்லப் பட்டு நடக்கும்; எ—று.

உ—ம்: இவற்குக் குடிமை நன்று, தீது; ஆண்மை நன்று, தீது, இளமை நன்று, தீது; மூப்பு நன்று, தீது; அடிமை நன்று, தீது; வன்மை நன்று, தீது; விருந்து வந்தது, போயிற்று; குழு நன்று, பிரிந்தது; பெண்மை நன்று, தீது.

இவற்கு என்பதை ஏற்புழி ஒட்டிக் கொள்க. அரசு வந்தது போயிற்று; மக நன்று, தீது; குழவி எழுந்தது, கிடந்தது.

தன்மை திரி பெயர்: அலிவந்தது, போயிற்று.

உறுப்பின் கிளவி :— குருடு வந்தது, போயிற்று; †கூன் வந்தது, போயிற்று.

காதல் : என் யானை வந்தது, போயிற்று; என் பாவை வந்தது, போயிற்று.

---

† இது கழகப் பதிப்பில் இல்லை.

சிறப்பு : கண் போலச் சிறந்தாரைக் 'கண்' என்றலும் உயிர் போலச் சிறந்தாரை 'உயிர்' என்றலுமாம். ஆதலின் அஃது "ஆலமர் செல்வன் அணி சால் பெருவிறல் போல வரும் எம் உயிர்." 'என் உயிர் வந்தது போயிற்று;' 'என் கண் வந்தது, போயிற்று' எனவும் வரும்.

செறற் சொல் : கெழீஇயிலி வந்தது, போயிற்று (என் காதல் வந்தது, போயிற்று) பொறியறை வந்தது, போயிற்று,

விறற் சொல்: பெருவிறல் வந்தது போயிற்று எனவரும்.

'அன்ன பிறவும்' என்றதனால் பேடி வந்தது, பேடிகள் வந்தன; வேந்து வந்தது; வேள் வந்தது; குரிசில் வந்தது; ஒரு கூற்றம் வந்தது; புரோசு வந்தது; உலகு வந்தது என்னுந் தொடக்கத்தனவும் கொள்க.

'இவற்குக் குடிமை நன்று' என்றதன் பொருள் †'இவன் குடிமை நல்லன்' என்னும் பொருண்மையாகக் கொள்க. பிறவும் இவ்வாறே உயர்திணையாகவுணர்க. குடிமை என்பது குடியாண்மை யெனவும், ஆண்மை யென்பது ஆண்மகன் எனவும், இளமை யென்பது இளவல் எனவும், மூப்பு என்பது முதுமை எனவும், அடிமை யென்பது அடி எனவும், வன்மையென்பது வலி யெனவும், விருந்து என்பது புதுமை யெனவும், குழு என்பது கூட்டம் எனவும், திரள் எனவும் ஆயம் எனவும் அவை யெனவும், பெண்மை என்பது பெண் எனவும், குழவி யென்பது பிள்ளை யெனவும் மதலையெனவும் பிறவும் வாய்பாடுற்றமையறிக.

இவற்றுள், ஆண்மை பெண்மை யென்றாற் போல்வன விரவுப் பெயராய் நிற்கும். குடிமை அடிமை அரசு என்றாற் போல்வன உயர்திணைப் பெயராய் நிற்கும். இவ்விகற்பமும் அறிந்து கொள்க.

---

† இவற்குக் குடிமகன் நல்லன் என்பது கழகப்பதிப்பு—ஒருவனைப் பார்த்து இவனுக்குக் குடிமகன் நல்லன் என்னும் வழக்கில்லை. ஆதலின் இது ஆராய்தற்குரியது.

இக்குடிமை முதலியனவெல்லாம் உயர்திணைப் பண்பாக லான் அப்பண்புச் சொற் றன் பொருள்மேல் ஒருஞான்று நில் லாது தன்னையேயுடைய பொருள்மேலே தன் பொருளுந் தோன்றிப் பிரியாது நின்றமையின் உயர்திணையாயிற்று, என்பது.

[1]அவற்றிற்கடி பண்பென்பது போதல் வேண்டிக் குடிமை யாண்மை எனப்பண்பு வாய்பாடு படுத்துக் கூறினார் போலும்.

தன்பொருள்மேல் நில்லாது என்றது என்னை? இளமை மூப்பு என்றாற் போல்வன அவற்றிற்கு அப்பண்பு தன் மேலும் வழக்குண்டோ எனின், அவ்வாறு வருவனவும் சிறுபான்மை யுள வேனும் அடிமை அரசு மக குருடு கூன் என்றாற் போல்வன பொருள்மேலன்றிப் பண்பின்மேல் வழங்கலின்மையின் அவற்றிற் கெல்லாம் முன் கூறியதே நினைவு என்பது.

இனி அவையெல்லாம் பண்பின்மேல எனவும், பண்பு கொளவருதல் என்னும் ஆகுபெயராற் பொருள்மேலே நின்றன எனவும், அவற்றுக்கண்ணது ஈண்டு ஆராய்ச்சி யெனவும், அவற்றுப் பண்பு பொருள்மேல் வழக்கில்லனவற்றை இறந்த வழக்கென்று கூறியும் பிறவாறு கூறுவாரும் உளர். அதுவும் அறிந்து கொள்க.

இதனாற் சொல்லியது பண்பு நிமித்தமாகப் பொருள் நிகழும் சொற்கள் பலவும் தம் பொருட்கேற்ப உயர்திணையாய் முடியாது சொற்கேற்றவாற்றான் அஃறிணையின் முடிவனகண்டு அதனை ஈண்டு அமைத்தவா றெனவுணர்க.

ஒரு.

என்பது குடிமை முதல் விறற்சொல் ஈறாகச் சொல்லப் பட்ட பதினெட்டும் உட்பட அவைபோல்வன பிறவும் அவற்றொடு தொக்குக் குறிப்பினான் உயர்திணைப் பொருளை யுணர்த்துஞ் சொற்கள் எல்லாம் உயர்திணை முப்பாற்கண்ணும்

சு. வே: 1. அவையிற்றிற்கடி.

நிலை பெற்றனவாயினும் அஃறிணைப் பொருளை யுணர்த்தி நின்றுழிப்போல அஃறிணை முடிபே கொள்ளும்.

உ-ம்: இவர்க்குக் குடிமை நன்று, குடிமைதீது. இவர்க்கு என்பதனை யாண்டும் ஒட்டிக் கொள்க. ஆண்மை நன்று, தீது; இளமை நன்று, தீது; மூப்பு நன்று, தீது; [1]அடுமை நன்று, தீது; வன்மை நன்று, தீது; விருந்து வந்தது, போயிற்று; குழு நன்று, பிரிந்தது; பெண்மைநன்று, தீது; அரசு வந்தது, போயிற்று; மகநன்று, தீது; குழவி அழுதது, கிடந்தது; இனித்தன்மை திரிபெயர்: அலி வந்தது போயிற்று; இனியுறுப்பின் கிளவி: குருடு வந்தது, போயிற்று; கூன் வந்தது, போயிற்று; இனிக் காதல் கிளவி: என் காதல் வந்தது, போயிற்று; என்பாவை வந்தது, போயிற்று; இனிச் சிறப்பு: என் யானை வந்தது, போயிற்று; பாவை வந்தது, போயிற்று; இனிச் செறற்சொல்: கெழீஇயிலி வந்தது, போயிற்று; இனி விறற்சொல்: பெருவிறல் வந்தது போயிற்று எனவரும். இவை உயர்திணையாயினவா றென்னை? குடிமை என்ற விடத்து ஒருவன் மேலானும் ஒருத்தி மேலானும் பலர் மேலானும் நிற்கும். ஒழிந்தனவும் இவ்வாறே காண்க. இனி யன்ன பிறவும் என்றதனால் பேடி வந்தது; வேந்து வந்தது; வேள் வந்தது: குருசில் வந்தது; பொறியறை வந்தது; புரோசு வந்தது; உலகு வந்தது எனவும் கொள்க.

ஆதி.

இதற்கு† ஒரு எல்லை யில்லையாதலின் ஆசிரியர், 'இரு திணைக்கும் உறழ் சொற்களும் உளவே'' என ஒரே அடியில் அடக்கியிருக்கலாம்.

ச. வே. 1 அடிமை

† உயர்திணை மருங்கில் நிலையும் சொற்கள் அஃறிணை மருங்கில் கிளந்தாங்கு இயலுவதற்குக் குடிமை யாண்மை முதலிய சொற்களை எடுத்துக் கூறியிருப் பினும் அப்பதினெட்டனுள் அடங்காது மேலும் பல இருத்தலின்—எல்லையில்லையாதலின் ''இருதிணைக் கும் உறழ் சொற்களும் உளவே'' என ஒரேயடியில் அடக்கியிருக்கலாம் என்பது இவர் கருத்து.

அவ்வாறடக்கின் குடிமை ஆண்மை முதலிய பாகுபாடு கள் தெளிவாகத் தெரியவாரா வாதலின் உதாரணங்

பி.சு.
பூவராகம்பிள்ளை.

"குடியாண்மை......விறற் சொல் என்பன உயர்திணைக் கண் ஆகுபெயராய் அல்லது வாரா; அல்ல இருதிணைக் கண்ணும் ஒத்தவுரிமைய எனக் கொள்க" என்ற (சேனாவரையர்) கருத்துப் பொருத்தமாகக் காணப்படவில்லை. சூத்திரத்தில் "குடிமை யாண்மை முதலியவெல்லாம் உயர்திணை மருங்கின் நிலையின வாயினும் அஃறிணை மருங்கிற் கிளந்தாங்கியலும்" என்று கூறப்பட்டிருப்பதை நோக்குமிடத்து, 'குடிமை ஆண்மை முதலிய உயர்திணைக்கே யுரியன; ஆயினும் அஃறிணைச் சொல் போல அஃறிணை முடிவு கொள்ளும் என்பதே' அப்பகுதியின் கருத்தாகலின் அவையெல்லாம் உயர்திணைக்கே யுரியன என்பது பெறப்படும். ஆகவே 'ஆகுபெயராயல்லது வாரா' என்றதும், 'இருதிணைக்கண்ணும் ஒத்தவுரிமைய' என்றதும் பொருத்தமாகத் தோன்றவில்லை. குடிமை விறற்சொல் என்பன உயர்திணைக்கண் ஆகுபெயராயல்லது வாரா எனின், அவை இயல்பாக அஃறிணைக்குரியன என்ற கருத்தே பெறப்படும். அங்ஙனங் கூறுதல் சூத்திரக் கருத்துக்கு முரணாகும். நச்சினார்க்கினியர் இவையெல்லாம் உயர்திணைக்கே யுரிய வென்றும், இவற்றுட் சில அஃறிணைக்கும் வரும் என்றும் கூறுகின்றார். அவர் கருத்துப் பொருத்தமாகக் காணப்படுகின்றது.

ச. வே. சுப்பிரமணியன்

உயர்திணைக்குரிய பண்புகளாக அமையும் குடிமை ஆண்மை பெண்மை அரசு மகவு போன்றவை அஃறிணை முடிவு கொள்ள லாம். (பண்பு குறித்த வழி அஃறிணையாம் என்பதும் பொருள் குறித்த வழி உயர்திணையாம் என்பதும் கூறியவாறாயிற்று— தெய்வச்சிலையார்) பின்பு உயர்திணை அஃறிணையாயும், அஃறிணை உயர்திணையாயும், ஆண்பால் பெண்பாலாகவும், பெண்பால் ஆண்பாலாகவும் முடியும் நிலையும் ஏற்பட்டது. அதற்குரிய காரணங்களை நன்னூல் அணுகுகிறது. இலக்கண விளக்கம் பின்பற்றுகிறது. (இலக்கணத் தொகை—சொல்.)

களாக அவற்றை எடுத்துக் கூறினார் ஆசிரியர் என்க — சிவ.

இதுவுமது

58. காலம் உலகம் உயிரே உடம்பே
பால்வரை தெய்வம் வினையே பூதம்
ஞாயிறு திங்கள் சொல்என வருஉம்
ஆயி ரைந்தொடு பிறவும் அன்ன
ஆவயின் வருஉம் கிளவி யெல்லாம்
பால்பிரிந் திசையா உயர்திணை மேன.

ஆ. மொ:

இல.

Time, world, soul, body,
fate - deciding God, action, clements
sun, moon and word, these ten and such
other words
never express gender of Hihg class
though they belong to High class.

ச.சு.

The twiee five words kālam (times/god of time= death), ulakam (the, word/people), uyir (life-breath/soul), utambu (human body), pālvarai teyvam (fate-deciding god), Vinai (Fāte), Pūtam (elements) n̲āyiru (sun), tin̲kal (moon) col (word/goddess of speach) and all similar ones, (although they) belong to uyartinai, they do not take uyartinai (Verbs).

பி இ. நா.

முத்து. ஒ. 89

உயிரே காலம் உலகம் உடம்பே
தெய்வம் பூதம் திங்கள் வினையே
ஞாயிறு பிறவும் அவற்றோ ரற்றே

90

உயர்திணை முடிபா தலும்உரித் தாகும்

இளம்.

இச்—எனின், இதுவும் உயர்திணையான் முடியாது அஃறிணையான் முடியும் என்பது உணர்த்துதல் நுதலிற்று.

உரை: காலம், உலகம் என்றித் தொடக்கத்தனவும் உயர் திணை யெனினும் உயர்திணைப் பால் பிரிந்து இசையா; அஃறிணையான் இசைக்கும், எ—று.

வ—று : இவற்குக் காலம் ஆயிற்று......காலம்
உலகம் பசித்தது..............உலகம்
உயிர் போயிற்று.................உயிர்
உடம்பு நன்று....................உடம்பு
[1]இவற்குத் தெய்வம் ஆயிற்று...தெய்வம்
இவ்வினை நன்று.................வினை
இவனைப் பூதம் புடைத்தது...பூதம்
ஞாயிறு எழுந்தது..............ஞாயிறு
திங்கள் எழுந்தது.................திங்கள்
சொல் நன்று.......................சொல்

எனவரும்.

பிறவும் என்றதனால் வெள்ளி எழுந்தது, செவ்வாய் எழுந்தது என்பன கொள்க.

இச்சூத்திரம் தெய்வம் சுட்டிய பொருள் அஃறிணையான் முடிபேற்றல் கூறினார் என்ப ஒரு திறத்தார்; அற்றன்று; ஈண்டுத் தெய்வமும் உள; மக்களும் உளர்.

‡ இனி மேற் சூத்திரம் முன்னர்த் தாம் உணரப்படும் என்ற வாறு கூறினார்; இச்சூத்திரம் உயர்திணைப் பொருளை அஃறிணை முடிவு ஏற்பனவற்றிற்குக் கூறினார் என்பது.

உலகம் என்பது உலகத்தார் மேற்று. உடம்பு என்பது உடம்புடையார் மேற்று என்பது.

---

‡ சூ. 57.

1. சு. வே. இவற்குப் பால் ஆயிற்று எனவும் ஆம்.

சேனா.

இ—ள்: காலம் முதலாகச் சொல்லப்பட்ட பத்தும் அத் தன்மைய பிறவு மாகிய அப்பகுதிக்கண் வரும் சொல் எல்லாம், உயர்திணைச் செல்லாயினும், உயர்திணைக்கண் பால்பிரிந் திசையா; அஃறிணைப் பாலாய் இசைக்கும் எ—று.

உ—ம்: இவற்குக் காலம் ஆயிற்று; உலகம் பசித்தது; உயிர் போயிற்று; உடம்பு நுணுகிற்று; தெய்வம் செய்தது; வினை விளைந்தது; பூதம் புடைத்தது; ஞாயிறு பட்டது; திங்கள் எழுந்தது; சொல் நன்று என வரும்.

பிறவும் என்பதனால் பொழுது நன்று, யாக்கை தீது, விதி வலிது, கனலி கடுகிற்று, மதிநிறைந்தது, வெள்ளி யெழுந்தது, வியாழ நன்று என்பன போல்வன கொள்க.

காலம் என்றது காலக் கடவுளை. உலகம் என்றது ஈண்டு மக்கட் டொகுதியை.

உயிரே உடம்பே யெனப் பொது வகையாற் கூறினாரேனும் மக்களுயிரும் உடம்புமே கொள்ளப்படும். என்னை? உயர்திணை முடிபு கொள்ளா என விலக்கப்படுவன அவையே யாகலின் என்பது.

"அஃறிணை யென்மனார் அவரல பிறவே" (கிளவி 1) என்புழி அஃறிணையாய் அடங்கி உயர்திணை முடிபு எய்தாமை யின் [1]அவையும் விலக்கற் பாட்டிற் கேலாவெனின், அற்றன்று; [2]மக்கட் சுட்டுடைமையான் அவை உயர்திணையே யாம் என்பது. யாதோ மக்கட் சுட்டுடையவா றெனின், அறஞ் செய்து துறக்கம் புக்கான் எனவும், உயிர் நீத்து ஒருமகன் கிடந்தான் எனவும் உயிரும் உடம்பும் அவரின் வேறன்றி அவராக வுணரப் பட்டு உயர்திணைக்கேற்ற முடிபு கொண்டு நிற்றலின் மக்கட்சுட்டுடைய என்பது. ஓராவை எம் அன்னை வந்தாள் என்றும், ஓர் எருத்தை எந்தை வந்தான் என்றும் உயர் திணை வாய்பாட்டாற் கூறியவாறு போல, உயிரும் உடம்பும்

1. உயிரும் உடம்பும்.
2. மக்களாகக் கருதப் படுதல்.

அவ்வாறு கூறப்பட்டன என்று கொள்ளாமோ வெனின் கொள்ளாம். அவற்றான் வரும் பயன் நோக்கிக் காதலால் எம் அன்னை, எந்தை என்றான் ஆண்டு; ஈண்டுக் காதன் முதலாயின வின்மையின் மக்கட் சுட்டுடைய என்பது.

பால்வரை தெய்வம் என்பது எல்லார்க்கும் இன்பத் துன்பத் திற்குக் காரணமாகிய இருவினையையும் வகுப்பது; வினை யென்பது அறத்தெய்வம். சொல் என்பது நாமகளாகிய தெய்வம்.

அஃதேல் குடிமை ஆண்மை யென்பனவற்றோடு இவற்றிடை வேற்றுமை யென்னை யெனின், அவை இருதிணைப் பொருட்கண்ணும் சேறன் மாலைய; இவை அன்னவல்ல என்பது.

உலகம் என்பது இடத்தையும் ஆகுபெயரான் இடத்து நிகழ் பொருளாகிய மக்கட் டொகுதியையும் உணர்த்துமாக லான் இருதிணைக்கண்ணும் சென்றதன்றோ எனின், அற்றன்று வடநூல் உலகம் என்பது இருபொருட்கும் உரித்தாக ஓதப்பட்ட மையின். மக்கட்டொகுதியையுணர்த்தும் வழியும் உரிய பெயரே யாகலின் ஆகுபெயர் அன்று. அதனால் ஒருசொல் இரு பொருட்கண்ணும் சென்றதெனப்படாது இருபொருட்கும் உரிமையான் இரண்டு சொல் எனவே படும் என்பது. வேறு பொருள் உணர்த்தலின் வேறுசொல் ஆதலே துணிவாயினும், பல பொருள் ஒரு சொல் என்புழி எழுத்தொப்புமை பற்றி ஒரு சொல் என்றார்.

மேல் என்பது ஏழாம் வேற்றுமைப் பொருள் உணர்த்துவ தோர் இடைச்சொல்லாகலின், ஈறு திரிந்து 'மேன' என நின்றது.

இதுவும் திணை வழுவமைதி.

தெய்.

உயர்திணைப் பொருட்கண் எஞ்சியது உணர்த்துதல் நுதலிற்று.

இ—ள்: காலம் முதலாகச் சொல்லப்பட்டனவும் அத் தன்மைய பிறவுமாகிய பொருட்கண் வரும் சொல் எல்லாம் உயர்திணையிடத்தன; ஆண்டுப்பால் பிரிந்திசையா, எ—று.

காலம் என்பது முன்னும் பின்னும் நடுவுமாகி என்றும் உள்ளதோர் பொருள். உலகம் என்பது மேலும் கீழும் நடுவுமாகி எல்லாவுயிரும் தோற்றுதற்கு இடமாகிய பொருள். உயிர் என்பது சீவன். உடம்பு என்பது மனம், புத்தி, அகங்காரமும் பூத தன்மாத்திரையுமாகி வினையினாற் கட்டுப்பட்டு எல்லாப் பிறப்பிற்கும் உள்ளாகி நிற்பதோர் நுண்ணிய உடம்பு. இதனை மூலப்பகுதி எனினும் ஆம். பால் வரை தெய்வம் என்பது ஆணும் பெண்ணும் அலியுமாகிய நிலைமையை வரைந்து நிற்கும் பரம்பொருள். வினை என்பது ஊழ். பூதம் என்பது நிலம், நீர், தீ, வளி, ஆகாயம் ஆகிய ஐம்பெரும் பூதம். ஞாயிறு என்பது தீத்திரளாய் உலகு விளக்குவது. திங்கள் என்பது நீர்த்திரளாய் உலகிற்கு அருள் செய்வது.

சொல் என்பது எழுத்தினான் இயன்று பொருள் உணர்வது. அச்சொல்லினான் இயன்ற மந்திரம், விடம் முதலாயின தீர்த்தலின் தெய்வம் ஆயிற்று. இந்நூல் செய்தான் வைதீக முனிவன்; ஆதலின் சொல் என்பது வேதம் என்று கொள்ளப் படும். பிறவும் என்றதனால் வியாழம் வெள்ளி முதலாயின கோண்மீனும், பரணி கார்த்திகை முதலாயின நாண்மீனும், காரகையும், பூதம் பேய் எனப் பாலுணர நில்லாத தெய்வப் பொருண்மையும் கொள்ளப்படும். உதாரணம் முன்னர்க் காட்டுதும்.

நச்.

இதுவும் திணை வழுக்காக்கின்றது.

இ—ள்: காலம் உலகம் உயிரே உடம்பே பால்வரை தெய்வம் வினையே பூதம் ஞாயிறு திங்கள் சொல் என வருஉம் ஆயிரைந் தொடு அன்ன பிறவும்— காலம் முதலாகச் சொல் ஈறாகச் சொல்லப்பட்ட அப்பத்தும் அத்தன்மையன பிறவுமாகிய, ஆவயின் வருஉம் கிளவி எல்லாம்—அவ்வுயர் திணைக்கண் வரும் சொல் எல்லாம், உயர்திணை மேனபால் பிரிந்து இசையா—உயர் திணைச் சொல் ஆயினும் உயர்திணைக்கண் பால் பிரிந்து இசையா; அஃறிணைப்பாலாய் இசைக்கும், எ—று.

இச்சூத்திரத்துக் கூறியவற்றுள் உலகமும் உயிரும் உடம்பும் ஒழிந்தன எல்லாம் தெய்வத்தையே உணர்த்தின ஆதலின், தெய்வம் என்பதனை "தெய்வம் சுட்டிய பெயர் நிலைக்

கிளவியும்" (சொல். 4) என்பதனான் உயர்திணை யென்பதும் பெற்றாம். இவையெல்லாம் 'தெய்வம்' என்னும் உயர்திணைப் பொருளை உணர்த்தினவேனும் 'தெய்வம்' என்னும் சொல் அஃறிணை வாசகம் ஆதலின் அதற்கு ஏற்ப அஃறிணை முடிபே கொள்ளும் என்றார்.

இச்சொற்கள் கூறுகின்ற பொழுதே தத்தம் உயர்திணைப் பாற் பொருளே தோற்றுவித்து நிற்றலின் ஆகுபெயர் அன்மை யுணர்க.

இவற்குக் காலம் ஆயிற்று என்றது காலக்கடவுளை. உலகம் பசித்தது என்றது உலகத்தாரை. 'உயிர் போயிற்று, உடம்பு நுணுகிற்று' —இவை உயர்திணை முடிபு கொள்ளா என விலக்குதலின் ஈண்டு உயர்திணைக்கேயுரிய ஆயின. என்னே?

அறஞ்செய்து துறக்கம் புக்கான்
உயிர் நீத்து ஒருமகன் கிடந்தான்

என உயிரும் உடம்பும்வரின் வேறன்றி அவராக உணரப்பட்டு உயர்திணைக்கு ஏற்ற முடிவு கோடலின் மக்களே ஆயின. இவை இங்ஙனம் உணர்த்தலின் ஆகுபெயர் [1]அல்ல.

தெய்வம் செய்தது— இதனைப் பால் வரை தெய்வம் என்றார். இன்ப துன்பத்திற்குக் காரணமாகிய இருவினையும் வகுத்தலின். வினை விளைந்தது—இஃது இருவினைத் தெய்வம்.

பூதம் புடைத்தது (சிலப். ၁: 134) ஞாயிறுபட்டது, திங்கள் எழுந்தது.

சொல்நன்று: இது நாமகளாகிய தெய்வம்.

பிறவும் என்றதனால் பொழுது நன்று, யாக்கை தீது, விதி வலிது, கனலி சுடுகிற்று; மதி நிறைந்தது, வெள்ளி எழுந்தது, வியாழம் நன்று எனவரும்.

காலம் உலகம் என்பன வடசொல் அல்ல. ஆசிரியர் வட சொற்களை எடுத்தோதி இலக்கணம் கூறார் ஆகலின். உலகம்

க. வே. 1 அன்று.

என்பது மக்கள் தொகுதியை உணர்த்திய வழி உயர்திணையாயும் இடத்தை உணர்த்திய வழி அஃறிணையாயும் வருதலின்' ஒரு சொல் இரு பொருட்கண்ணும் சென்றது எனப்படாது. இரு சொல் எனவே படும். அங்ஙனம் மக்கள் தொகுதியை உணர்த்துங் கால் உரிப்பெயராயே உணர்த்திற்று; ஆகுபெயர் அன்று. இங்ஙனம் வருவனவற்றைப் பலகால் எடுத்து ஓதாமை இலேசாகக் கருதி, "ஒருசொல் பல்பொருட் குரிமை தோன்றினும்" (உரியி. 1) என எழுத்து ஒப்புமைபற்றி ஒருசொல் என்றார். உலோகம் என்றது வடமொழித்திரிபு.

கல்.

என் எனின், இதுவும் திணை வழுக்காத்தல் நுதலிற்று.

இ—ள்: காலம் என்னும் சொல்லும் உலகம் என்னும் சொல்லும் உயிர் என்னும் சொல்லும் உடம்பு என்னும் சொல்லும் இருவினை யாவர்க்கும் வரைந்தூட்டும் தெய்வத்தின் மேல் 'பால்' எனவரும் சொல்லும் வினையென்னும் சொல்லும் பூதம் என்னும் சொல்லும் ஞாயிறு என்னும் சொல்லும் திங்கள் என்னும் சொல்லும் சொல் என்னும் சொல்லும் என்று வருகிற பத்துச் சொல்லினோடு பிறவும் அத்தன்மையாகிய உயர்திணைப் பொருள் போல வரும் சொற்கள் எல்லாம் உயர்திணையிடத்துப் பால் உணர்த்தும் சொல்லாற் பிரித்துச் சொல்லப்படா; அஃறிணைப் பாலாற் சொல்லப்படும், எ—று.

உ—ம்: இவற்குக் காலம் ஆயிற்று; உலகு பசித்தது; உயிர் போயிற்று; உடம்பு நுணுகிற்று; இவர்க்குப் பால் ஆயிற்று வினை நன்று, வினை தீது; இவனைப் பூதம் புடைத்தது; ஞாயிறு எழுந்தது, பட்டது; திங்கள் எழுந்தது, பட்டது; சொல் நன்று, தீது. பிறவும் என்றதனால் செவ்வாய் எழுந்தது, பட்டது; வெள்ளியெழுந்தது, பட்டது எனவரும்.

என்னை யிவை உயர்திணை ஆயினவாறு எனின், காலம் என்றது காலனை; உலகம் என்றது உலகத்தாரை; உயிர் என்றது உயிர்க் கிழவனை; உடம்பென்றது அஃதுடையானை; பால் என்பது இன்பதுன்பங்களை வகுப்பதோர் தெய்வம்; வினை யென்பதுவினைத் தெய்வம்; பூதம் என்பது தெய்வப் பகுதி; ஞாயிறு திங்கள் என்பன தெய்வம்; சொல் என்பது சொல்மடந் தையை.

‡ஆயின இவற்றை மேலவற்றோடு ஒன்றாக[1] வைத்த தென்னையெனின், அவையெல்லாம் பண்படியாகப் பொருள் மேல் நிகழ்தலின் அவற்றை முன்னத்தின் உணரும் கிளவியென வேறொருவகையாற் கிளவாது வரும் பெயரினையும் வேறொரு வகையாக்கிக் கூறினார் என வுணர்க.

இவற்றுள் பூதம் ஞாயிறு திங்கள் என்பன [2]வொழிந்தன வெல்லாம் ஆகுபெயரான் அஃறிணைப் பெயர் உயர்திணை மேல் நின்றன வென வுணர்க.

இதனாற் சொல்லியது இவையும் சில [3]வுயர்திணை யாதற் பொருட்டு ஆகுபெயராய், அதற்கேற்ப முடியாது. சொற்கேற்ப முடிவதனைக் கண்டு அதனை அமைத்தவாறாயிற்று.

ஒரு.

என்பது, காலம் முதலாகச் சொல் ஈறாகச் சொல்லப்பட்ட பத்தும் அத்தன்மையன பிறவுமாகிய சொல் எல்லாம், உயர் திணையெனினும் உயர்திணையிடத்துப் பால் பிரிந்திசையா; அஃறிணைக்கண் இசைக்கும்.

உ—ம் : இவர்க்குக் காலம் ஆயிற்று; வினை நன்று, தீது: இவனைப் பூதம் புடைத்தது; ஞாயிறெழுந்தது, பட்டது; திங்கள் எழுந்தது, பட்டது; சொல் நன்று, தீது. பிறவும் என்றதனால், வெள்ளியெழுந்தது, பட்டது; வியாழம் எழுந்தது, பட்டது; செவ்வாய் எழுந்தது, பட்டது என்பன வெல்லாம் கொள்க. மேற் சூத்திரத்திற்குள்ளன பிறவும் என்றதனால் ஆங்கு மீண்டும் சூத்திரம் சொல்லிய தென்னை யெனின், மேற் சூத்திரத்திற் சொல்லின வெல்லாம் மக்கள் மேலன இதனுள் சொல்லின எல்லாம் தெய்வங்கள் மேலன என்பது;

---

‡ சு. வே :

1. ஓதாததென்னையெனின்—இது பொருந்தும்.
2. ஒழித்து அல்லன எல்லாம்.
3. உயர்திணைப் பெயர் தம் பொருட்டு—இது பொருந்த வில்லை.

காலம் என்பது கூற்றத்தை; உலகு உலகமுடையான். உயிர் என்பதனையும் தெய்வம் என்ப. உடம்பு ஐம்பெரும் பூதங்களான் இயன்றமையின் தெய்வம் என்ப. பால்வரை தெய்வம் எல்லார்க்கும் இன்ப துன்பங்களை யவரவர் விதி வழியிற் பயப்பிதோர் தெய்வம். வினை வினையைப் படைப்பானையன்றி யிருவினை யையும் தெய்வம் என்ப. பூதம் என்பது ஓர் தெய்வம். ஞாயிறு திங்கள் என்பனவும் அவை. சொல் சொல்லின் கிழத்தியை யென இவ்வாறு கொள்க.

இனியின்னும் ஓர் கருத்து :— [1]மேல் உயர்திணை யல்லாதன உயர்திணையாய் அஃறிணையான் முடிபுபெற்றமைகாட்டினார்; இதனால் உயர்திணையான தேவரையும் மக்களையும் உள்ளடக்கி அஃறிணையான் முடிபு எய்தினமை காட்டினார் என்க. உலகமும் உயிரும் உடம்பும் மக்கட்பண்பு: அல்லாதன தெய்வம் எனக்கொள்க. பால்பிரிந்திசையா உயர்திணைமேன — உயர் திணைமேற் பால்பிரிந்திசையா என்க.

ஆதி.

பால்வரை — ஆண் பெண் எனப் பால்வரைவு ஏற்பட வைப்பது, காமம். (மெய்ப். 27) ''பிறப்பு குடிமை ஆண்மை ஆண்டு'' என்னும் சொற்களுடன் 'காமம்' பற்றியும் குறிப்பது குறிப்பிடத்தக்கது.

பி. கு.

பால் வரை தெய்வம் என்பதற்கு,

''எல்லார்க்கும் இன்பதுன்பத்திற்குக் காரணமாகிய இரு வினையையும் வகுப்பது'' —சேனா.

''ஆணும் பெண்ணும் அலியுமாகிய நிலைமையை வரைந்து நிற்கும் பரம்பொருள்'' —தெய்வ.

''இன்பதுன்பத்துக்குக் காரணமாகிய இருவினையையும் வகுப்பது'' —நச்

சு. வே: 1 மேல் உயர்திணையாய் அஃறிணையான் ஏற்றமைகாட்டினார்.

பால் என்பது இன்பதுன்பங்களை வகுப்பதோர் தெய்வம். —கல்

"எல்லார்க்கும் இன்பதுன்பங்களை யவரவர் விதிவழியிற் பயப்பதோர் தெய்வம் — ஒரு.
என உரையாளர் யாவரும் கூறியதிலிருந்து, இருவினைகளும் தாமே சென்று உயிர்களையடைவதில்லையென்பதும், அவற்றைச் செய்த உயிரிடம் சேர்ப்பது ஒருபொருள்-அது பரம்பொருள் என்பதும் அறியக்கிடக்கும். பால் என்பதற்கு இன்பதுன்பங்களுக்குக் காரணமான இருவினை — விதி— எனப் பிறர்யாவரும் உரை கொள்ளத் தெய்வச்சிலையார் மட்டும் ஆண் பெண் அலிப் பால் எனப் பொருள் கொண்டார்.

பால்வரை தெய்வம் என்பதற்கு உதாரணமாக 'இவற்குத் தெய்வம் ஆயிற்று" என்பதை இளம்பூரணர் காட்டியதிலிருந்தும் அவ்வுதாரணத்தையே "இவற்குப் பால் ஆயிற்று எனவும் ஆம்" என வேறுபாடம் உண்மையிலிருந்தும் அவர்க்குப் பால் என்பதும் தெய்வம் என்பதும் ஒரு பொருளன என்னும் கொள்கையெனக் கருதலாம். எனவே பால்வரை தெய்வம் என்பதற்குப் "பாலாகிய வரையறைப்படுத்தும் தெய்வம்" எனப் பொருள் கொள்ள வேண்டுவதாம்

"உலகம் என்பது காணப்படும் இடத்தையும் மக்களையும் உணர்த்தும். அதனால் இருபொருளையும் ஒரு சொல்லே உணர்த்தியது எனக் கொள்ளல் கூடாது. உலகம் — மக்கள் எனத் தனித்தனிச் சொல்லாக இருந்து தனித்தனிப் பொருளை யுணர்த்தியது எனக் கொள்ளல் வேண்டும். ஒரு சொல் ஒரு பொருளைத்தான் உணர்த்தும் அப்படியானுல் உலகம் பல பொருள் ஒரு சொல் எனக் கொள்ளலாமா கூடாதா என்ற வினா எழும், பல பொருள் ஒரு சொல் என்பது ஒன்று இல்லை. ஆனால் பலபொருள் ஒரு சொல் என்றது சொல் ஒப்புமை கருதாமல் எழுத்து ஒப்புமை கருதியே பல கொருள் ஒரு சொல் என்பது வழங்கப்பட்டது" — இவ்வாறு சேனாவரையர் விளக்கம் தருவது நுண்மையாய் அமைந்ததாகும். மா என்பது 'மாநுகர்மலர்' என்றவிடத்து வண்டு என்னும் பொருளிலும், மா பூத்தது என்றவிடத்து மரம் என்னும் பொருளிலும், மாப்பிசைந்துண்டான் என்றவிடத்து உணவு

மா(வு) என்னும் பொருளினும் வரினும் ஒவ்வொரு பொருளுக்கும் ஒவ்வொரு (தனித்தனியான) சொல்லாகவே மா என்பதைக் கொள்ளல் வேண்டும்.

> "இவ்வாறு கூறப்படுவதால் மா என்ற சொல் ஒவ்வொரு பொருளுக்கும் வேறு வேறு காரணங் கருதியிடப் பட்டிருத்தல் வேண்டும் என்பதும், பின்னர் வடிவு ஒப்புமை கருதிப் பலபொருள் ஒருசொல் என வழங்கப்பட்டிருத்தல் வேண்டும் என்பதும், ஒவ்வொரு பொருளின் பெயரும் காரணப் பெயரே யாதல் வேண்டும் என்பதும், பின்னர், காரணம் அறியப்படாதன வெல்லாம் இடுகுறிப்பெயர் என வழங்கப்பட்டன என்பதும் பெறப்படும். "மொழிப் பொருட் காரணம் விழிப்பத் தோன்றா" என்ற சூத்திரம் இக் கருத்தை வலியுறுத்துவதாக உள்ளது"

என்பர் பூவாராம் பிள்ளை.

'குடிமை' முதலியவற்றிற்குப் புறநடை
(குடிமை, காலம்என்பனவற்றின் புறநடை. தெய்)

59. நின்றாங் கிசைத்தல் இவணஇயல் பின்றே.

ஆ. மொ:
இல.

These never express gender of High Class standing in their forms unchanged.

சு.சு.

It is not in their nature (to take high class' verbs) when they stand without modificat!on.

இளம்.

இச்—எனின், 'குடிமை யாண்மை' என்பதற்குப் புறனடை கூறுதல் நுதலிற்று.

உரை : இச் சொல்லப்பட்டவற்றுக்கு நின்றாங்கு இசைத்தல் இயல் பின்று என்பது.

எனவே மேற் சூத்திரத்திற் சொல்லப்பட்டவற்றிற்கு நின்றாங்கு இசைத்தல் இயல்புமாம் என்பது.

வ—று : குடிமை நல்லன்; வேந்து செங்கோலன் எனவரும்.

சேனா.

இ—ள் : ஈறுதிரியாது நின்றாங்கு நின்று உயர்திணையாய் இசைத்தல் ஈண்டு இயல்பின்று, எ—று.

ஈண்டு என்றது கால முதலாகிய சொற்களை. அவை யிடையீடின்றி மேற் சொல்லப்பட்டு நிற்றலின் 'இவண்' என்றார்.

'இவணியல்பின்று' எனவே குடிமை ஆண்மை முதலாயின சொல்லின் கண் குடிமை நல்லன்; வேந்து செங்கோலன் என நின்றாங்கு நின்று உயர்திணையாய் இசைத்தல் இயல்புடைத் தென்பதாம்.

தெய்.

மேலதற்கோர் புறனடை யுணர்த்துதல் நுதலிற்று.

இ—ள் : மேல் உயர்திணைக்கண் பால் பிரிந்து இசையா என்று ஓதப்பட்டன எல்லாம் அத்திணை யுணர நின்றனவேனும் அவ்வாறு உயர்திணை உணரநின்று ஒலித்தல் இவ்விடத்து வழக்கின்று, எ—று.

இவ்விடம் என்றது உயர்திணையை.

நச்.

இது குடிமை ஆண்மைத் தொடக்கத்திற்கு ஓர் புறனடை.

இ-ள் : நின்றாங்கு இசைத்தல் — ஈறு திரியாது நின்றாங்கு நின்று உயர்திணையாய் இசைத்தல், இவண் இயல்பு இன்று — கால முதலிய சொற்களிடத்து இயல்பு இல்லை, எ-று.

எனவே குடிமை ஆண்மை முதலிய சொற்களிடத்து இயல்பு உண்டாம் என்றவாறு. குடிமை நல்லன்; ஆண்மை நல்லன்; மூப்புத் தீயன் என ஒட்டுக.

கல்.

என்—எனின், குடிமை ஆண்மை என்றதற்கோர் புறனடை யுணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் : நின்ற வாய்பாட்டானே நின்று உயர்திணை முடிபு பெறுதல் இக்காலம் உலகம் என்னுந் தொடக்கத்தனவற்றிற் கியல்பன்று; எனவே மேற்கூறிய குடிமை ஆண்மை என்னுந் தொடக்கத்தனவற்றிற்கு இயல்பு, எ-று.

உ-ம்: குடிமை நல்லன்; வேந்து செங்கோல் நல்லன் என வரும். உயர்திணை முடிபிழந்து நின்றனவற்றையம் முடிபுடைய என்று எய்துவித்தவாறு.

இம்முடிவு இலக்கணமாதலின் இதுவே பெரும்பான்மை யாகற்பாற்றெனின், இலக்கணமே யெனினும் வழக்குப் பயிற்சி யான். அதுவே பெரும்பான்மை யாயிற்றென வுணர்வது. இச் சொற்கள் ஈறு வேறுபட்டு குடிமகன் ஆண்மகன் என நிற்பன உயர்திணை முடிபே முடிபு எனக் கொள்க.

இதனாற் சொல்லியது மேற்கூறிய இருவகைத் திணைவழு வினையும் ஒருவகைத் தன் மேலும் முடிபுடையவாயும், ஒரு வகைத்தன்மேல் முடிபில்லன வாயும் வருவது கண்டு அவற்றது உண்மையும் இவற்றது இன்மையும் உடன்கொண்டு கூறிய வாறாயிற்று.

ஒரு.

என்பது, ஈறு திரியாது நின்றாங்கு நின்று உயர்திணையாய் இலசத்தல் காலம் உலகம் முதலிய சொற்களிடத்து இயல்பில்லை. எனவே குடிமை முதலிய சொற்களிடத்து நின்றாங்கு இசைத்தல் இயல்பாம்.[2] இவண் என்பது காலம் உலகம் என்னும் சூத்திரம்.

உ—ம்: குடிமை நல்லன்; ஆண்மை நல்லன்; இளமை நல்லன்: மூப்புத்தீயன் என ஒட்டிக்கொள்க. இச்சூத்திரங் குடிமை ஆண்மை யென்னுஞ் சூத்திரத்துக்குப் புறநடை யென்றறிக.

சிவ.

இச்சூத்திரம் 'குடிமை ஆண்மை' என்னும் சூத்திரப் புறனடையா? 'காலம் உலகம்' என்னும் சூத்திரப் புறனடையா

சு.வே. 1 மேல் 2 என்பதாம்.

என்பது பற்றியுரையாளரிடையே கருத்து வேறுபாடுளது. இளம்பூரணர், நச்சினார்க்கினியர், கல்லாடனார், ஒருவர் ஆகியோர் 'குடிமை ஆண்மை' என்பதற்குப் புறனடை என்பர் தெய்வச்சிலையார் 'காலம் உலகம்' என்பதன் புறனடை என்பர். சேனாவரையர் யாதும் கூறவில்லை. எனினும் அவர் உரைப் போக்கு முன்னவர் கருத்தையே தழுவியதாகும்.

இச்சூத்திரத்தின் கருத்தாக யாவரும் கொள்வது ஒத்துளது. "சொற்கள் யாதோர் திரிபும் இல்லாமல் நின்றவாறே நின்று உயர்திணையாய் இசைப்பது இவ்விடத்தில் இல்லை" என்பதே இச்சூத்திரப் பொருள்.

"சொற்கள் என்பது குடிமை ஆண்மை முதலியனவற்றையும் காலம் உலகம் முதலியனவற்றையும் குறிக்கும். எனவே குடிமை முதலிய சொற்களும் காலம் முதலிய சொற்களும் யாதோர் திரிபும் இல்லாமல் இருந்தவாறே உயர்திணையாய் இசைத்தல் உண்டெனினும் காலம் உலகம் என்னும் இச்சூத்திரத்தில் மட்டும் காலம் உலகம் முதலியன இருந்தவாறே இருந்து உயர்திணை யாய் இசைத்தல் இல்லை. அதாவது காலம் நல்லன் என்பது போல இசைத்தல் இல்லை. அதனால் குடிமை நல்லன் என்பது போலக் குடிமை முதலிய சொற்கள் நின்றவாறே நின்று உயர் திணையாய் முடிபு கொண்டு இசைத்தல் உண்டு" இவ்வாறு கருத்தமையவே யாவரும் உரைகூறினர். இதைக்காணும் போது 'குடிமை ஆண்மை' 'காலம் உலகம்' என்னும் இரண்டு சூத்திரங் களுக்கும் இது புறனடை எனக்கொள்வதில் தவறிராது என்ன லாம்.

காலம் —என்பதற்குப் புறநடை
(இதுவுமது-தெய்)

60. இசைத்தலும் உரிய வேறிடத் தான.

ஆ. மொ.
இல.
When they change in forms they can express the gender of Hish class.

க.சு

In other plaees they may be uttered (with 'high class' verbs)

இளம்.

இச்—எனின், இது 'காலம் உலகம்' என்பதற்குப் புறனடை யுணர்த்துதல் நுதலிற்று.

உரை : வேறிடம் என்பது வேறு வாய்பாடு; வேறு வாய் பாட்டாற் சொல்ல இசைக்கும்; ஓதிய வாய்பாட்டாற் சொல்ல இசையாது, என்பது.

வ—று : காலன் கொண்டான்; உலகத்தார் பசித்தார் என வரும்.

சேனா.

இ—ள் : காலம் முதலாகிய சொல் உயர்திணையாய் இசைத் தலும் உரிய, ஈறு திரிந்து வாய்பாடு வேறுபட்டவழி, எ-று.

காலன் கொண்டான்; உலகர் பசித்தார் என வாய்பாடு வேறுபட்டவழி உயர்திணையாய் இசைத்தவாறு கண்டு கொள்க.

தெய்.

மேற் கூறப்பட்ட சொற்கள் பாலுணர வருமாறு உணர்த்து தல் நுதலிற்று. வழுவமைதியும் ஆம். வேறிடம் என்பது அஃறிணையை.

இ-ள் : மேல் பால் பிரிந்திசையா என ஓதப்பட்ட சொற்கள் அஃறிணையாய் இசைத்தலும் உரிய, எ-று.

உம்மை யெச்சவும்மை யாகலான் அஃறிணைக்குரிய சொல் லான் அன்றி இருதிணைக்கும் பொதுவாகிய சொல்லானும் இசைத்தலும் உரிய, எ-று.

உ-ம் : காலம் வந்தது, வரும். உலகு கிடந்தது; உயிர் போயிற்று; உடம்பு விட்டது; தெய்வம் தந்தது; வினை விளைந்தது; பூதம் செறிந்தது; ஞாயிறு எழுந்தது; திங்கள் எழுந்தது; சொல்பயன் தந்தது; வியாழம் எழுந்தது; வெள்ளி பட்டது; பரணி தோன்றிற்று; பூதம் புடைத்தது; பேய் பிடித்தது; பிறவும் அன்ன.

நச்

இது காலம் உலகத்திற்கு ஓர் புறனடை.

இ—ள் : இசைத்தலும் உரிய—காலம உலகம் முதலிய சொற்களும் உயர்திணையாய் இசைத்தலும் உரிய, வேறு இடத்தான—ஈறு திரிதற்கு ஏற்பன ஈறு திரிந்து வாய்பாடு வேறுபட்டவிடத்து, எ—று.

காலன் கொண்டான்; உலகர் பசித்தார் என ஈறு திரிவன வற்றோடு ஒட்டுக.

கல்.

என்—எனின், காலமும் உலகமும் என்பதற்கோர் புறனடை யுணர்த்துதல் நுதலிற்று.

இ—ள் : காலமும் உலகமும் என்னுந் தொடக்கத்தன உயர்திணை முடிபு பெறுதலும் உடைய, அவ்வோதிய வாய்பாடு ஒழிய வேறு வாய்பாடாயினவிடத்து, எ—று.

உ-ம் : காலம் என்பது மகரஈறு; காலன் என்னும் னகரவீறாய் நின்றுழிக் காலன் கொண்டான் என முடியும். உலகத்தோர் பசித்தார்; உயிர்க்கிழவன் போயினான் என்பனவும் அவை.

இதனாற் சொல்லியது, மேல் 'நின்றாங் கிசைத்தல் இவணியல் பின்று' என்ற விலக்கு இவண் எனக் காலமும் உலகமும் என்னும் வாய்பாட்டினையே நோக்கி விலக்காது, அப்பொருள்மேல் வரும் வாய்பாடுகள் எல்லாம் விலக்குவது போலும் நோக்கம்பட நின்றதென்று கொள்ளினும் கொள்ளற்க என்று அவை வேறிடத்தாயின் இசைக்கும் எனவும் கூற வேண்டிக் கூறினார் என்பது.

ஒரு.

என்பது காலமுதலிய சொற்கள் உயர்திணையாய் இசைத் தலும் உரிய, ஈறு திரிந்து வாய்பாடு வேறுபட்டவிடத்து. வேறிடமாவது ஈறுதிரிதல். காலம் என்பது மகரவீறு; அது காலன் எனத்திரிந்தது. பிறவும் ஏற்குமாறு திரித்துச் சொல்லுக.

உ-ம் : காலன் கொண்டான்; உலகு காப்பான்; உயிர்க் கிழவன் போயினான் என ஒட்டுக. இச்சூத்திரங் காலம் உலகம் என்பதற்குப் புறநடை.

சிவ.

இச்சூத்திரத்தில் வேறிடம் என்பது ஈறுதிரிந்து வேறாய இடம் என யாவரும் கொள்ளத் தெய்வச்சிலையார் உயர்திணை யின் வேறாய அஃறிணையிடம் எனப் பொருள் கொண்டார். காலம் முதலியன உயர்திணைப் பொருளன ஆயினும் முடிபு கொள்ளுங்கால் அஃறிணை முடிபுகொள்ளும் என்பது முன்னர்க் கூறப்பட்டது. அன்றியும் நின்றபடி இருந்து உயர்திணையைக் கொள்ளாது என்று கூறியதிலிருந்து ஈறுதிரிந்து உயர்திணை முடிபு கொள்ளும் என்பதும் பெறப்பட்டுவிட்டது. அதனால் ஈறுதிரிந்து உயர்திணை முடிபு கொள்ளும் என்பதைக் காலம் முதலியவற்றுக்கு மீண்டும் கூறவேண்டிவதில்லை. இவ்வாறு எண்ணியதால் தெய்வச் சிலையார் அஃறிணை முடிபுகொள்ளும் என வேறுபொருள் கொண்டார். காலம் வந்தது, வரும் என உதாரணமும் காட்டினார். இச்சூத்திரம் 'காலம் உலகம்' என்னும் சூத்திரத்தை மட்டும் நோக்கியதாகக் கொள்ளாமல் குடிமையாண்மை' என்னும் சூத்திரத்தையும் நோக்கியதாகக் கொள்ளலாம். குடிமை நன்று என்றாலும் குடிமை நல்லன் என்றாலும் குடிமை என்பது உயர்திணைக்குரியதாக வரினும் குடிமை செழித்தது என்பதுபோல வருமிடங்களில் குடிமை என்பது குடியின் தன்மை என்னும் பொருளில் வேறு இடமாகிய அஃறிணையிடத்திலும் வந்ததாகக் கொள்ளலாம். எனவே இச்சூத்திரமும் 'குடிமையாண்மை' என்பதையும்,'காலம் உலகம்' என்பதையும் நோக்கிய புறனடைச்சூத்திரமாகக் கொள்ளலாம்'

இனம் செப்பல்

61. எடுத்த மொழியினம் செப்பலும் உரித்தே.

ஆ. மொ.

இல.

Expressed words may imply related ideas

கு. கூ.

A speach which is uttered may express related ideas

பி. இ. நூ.

நேமி. சொ. 90

......சொன்ன மொழி தானினத்தை
உன்னி முடித்தலும் உண்டு.

நன். 402

அடைமொழி இனமல்லதும் தருமாண்டுறின்
358. ஒருமொழி ஒழிதன் இனங்கொளற் குரித்தே.

முத்து. ஒ 9..

எடுத்தமொழி இனம் இயம்பலும் உரிய.

இளம்.

இச்—எனின். 'இனச்சுட்டில்லாப் பண்புகொள் பெயர்க் கொடை' (சொல். 18) என்னும் சூத்திரத்திற்குப் புறனடை உணர்த்துதல் நுதலிற்று.

உரை : மேற் 'பண்புகொள் பெயர்க்கொடை' (சொல். 18) வழக்கினுள் இனம் பெற்றே நிற்க என்றான், இனி இனம் இன்றியும் நிற்கும் வழக்கினுள், எ—று.

வ—று : பெருங் கொற்றன், பெருஞ்சாத்தன் என வரும்.

அற்றன்று; அவையும் ஆண்டே யடங்கும்; மற்று என்னை கருதியது எனின். இஃது அருத்தாபத்தி பெற்றது என்க.

"விதந்த மொழியினம் வேறும் செப்பும்" என்பது பரிமாண சூத்திரம்.

இதுவும் அப்பொருட்டு.

வ—று : 'மேலைச் சேரிக் கோழி யலைத்தது' எனக் கீழைச் சேரிக்கோழி யலைப் புண்டமை சொல்லாமையே முடிந்ததாம். 'குடங்கொண்டான் வீழ்ந்தான்' என்றவழிக் குடம் வீழ்ந்தமை

சொல்லாமையே முடிந்ததாம். இந்நிகரன இனஞ் செப்பின.* 'செப்பலும் உரித்து' எனவே செப்பாதன 'ஆவாழ்க; அந்தணர் வாழ்க' என்றவழி ஒழிந்தனவும் ஒழிந்தாரும் சாக என்றவாறு அன்று என்பதாம்.

சேனா.

இ—ள் : இனமாகிய பல பொருட்கண் ஒன்றனை வாங்கிக் கூறியவழி அச்சொற் றன் பொருட்கினமாகிய பிற பொருளைக் குறிப்பான் உணர்த்தலும் உரித்து, எ—று.

உம்மையெதிர்மறையாகலான் உணர்த்தாமையும் உரித்து என்பதாம்.

உ-ம் : அறஞ் செய்தான் துறக்கம் புகும் எனவும், இழிவறிந்து உண்பான்கண் இன்பம் எய்தும் (குறள் 946) எனவும் வரும் இவை சொல்வார்க்கு இனப்பொருள் இயல்புரைக்கும் குறிப்பு உள்வழி, மறஞ்செய்தான் துறக்கம் புகான்; கழிபேர் இரையான் இன்பன் எய்தான் என இனம் செப்புதலும, அக் குறிப்பில் வழி இனஞ் செப்பாமையும் கண்டு கொள்க.

எடுத்த பொருளை உணர்த்தும் மொழியை 'எடுத்த மொழி' என்றார். இனன் அல்பொருளின் நீக்குதற்கு 'இனம்' என்றார்.

அஃதேல், மேற்சேரிக் கோழி அலைத்தது எனக் கீழ்ச்சேரிக் கோழி யலைப்புண்டது எனவும், குடங்கொண்டான் வீழ்ந்தான் எனக் குடம் வீழ்ந்தது எனவும் இவை இனஞ்செப்பும் என்றும், ஆவாழ்க, அந்தணர் வாழ்க என்பன இனஞ்செப்பா என்றும் உரையாசிரியர் கூறினாரால் எனின், அற்றன்று, கீழ்ச் சேரிக் கோழியலைப்புண்டல் இன்றி மேற்சேரிக்கோழி அலைத்தல் அமையாமையானும், குடம் வீழ்தலின்றிக் குடம் கொண்டான் வீழ்தல் அமையாமையானும் கீழ்ச்சேரிக் கோழியலைப் புண்டலும், குடம் வீழ்தலும் சொல்லானன்றி

* இப்பகுதி தொடர்ப்பிழையாயுளது. "செப்பலும் உரித்து எனவே செப்பாதன ஆவாழ்க, அந்தணர் வாழ்க என்பன' என்றவழி ஒழிந்தனவும் ஒழிந்தாரும் சாக என்றவாறன்று என்பதாம்" என்று தொடர் அமையலாம்.

இன்றியமையாமையாகிய பொருளாற்றலாற் பெறப்படும் ஆகலான் ஈண்டைக்கு எய்தா;* இது சொல்லாராய்ச்சியாகலான் என்பது. இன்னோரன்ன சொல்லாற்றலாற் பெறப்பட்டன எனின், புகையுண்டென்றவழி எரியுண்மை பெறுதலும் சொல் லாற்றலாற் பெறப்பட்டதாம்.

இனி 'ஆவாழ்க அந்தணர் வாழ்க' என்புழிச் சொல்லுவான் ஒழிந்த விலங்கும் ஒழிந்த மக்களும் சாக என்னுங் கருத்தின னாயின் இவையும் இனம் செப்புவன வன்றோ என்பது. அதனான் அவை போலியுரை யென்க.

ஒரு தொடர் ஒரு பொருளுணர்த்தி யமையாது வேறு ஒரு பொருளும் குறித்து நிற்றல் வழுவாயினும் அமைக என மரபு வழுக்காத்தவாறு.

தெய்.

இது செப்பின்கட் கிடந்ததோர் குறிப்பு உணர்த்துதல் நுதலிற்று.

---

* இச்சூத்திரம் சொல்லாராய்ச்சி பற்றியது. அதனால் சொல்லாற்றலாற் பெறப்படுவனவற்றையே இங்குத் கொள்ளவேண்டும். அறம் என்னும் சொல்லிற்கு இனம் மறம். சுவர்க்கம் என்பதற்கு நிரயம் இனம். எனவே அறம் செய்தான் சுவர்க்கம் புகும் எனின் இன மான 'மறம் செய்தான் நிரயம்புகும்' என்பன பெறப் படும்; இது சொல்லாற்றலால் பெறுதலாம். மேலைச் சேரிக்கோழி என்பதற்குக் கீழைச்சேரிக் கோழி என்பது இனமன்று. குடத்துக்குக் குடம் கொண்டான் இன மில்லை. எனவே சொல்லாராய்ச்சியுள்ள இங்கு இவ் வுதாரணம் பொருந்தாது. கீழைச்சேரிக் கோழியலைப் புண்ணலும், குடம்கொண்டான் வீழ்தலும் பொரு ளாற்றலால் பெறப்படுவன. அவை இங்குக் கூறப்படா. புகைக்கு எரி இனமன்று. புகையுண்டு என்றால் அங்கு எரியுண்டு என்பது சொல்லினால் அன்றிப் பொருளாற் றலால் பெறப்படுவது. கீழைச்சேரிக் கோழி யலைப் புண்டது என்பதைச் சொல்லாற்றலால் பெறப்பட்டது என்னல் வேண்டும்; அவ்வாறு யாரும் கூறார் ஆதலின் பொருத்தமில்லை.

இ-ள்: எடுத்துச் சொல்லப்பட்ட சொல் தனக்கு இனமாகிய பொருளைச் செல்லுதலும் உரித்து, எ-று.

உம்மையாற் சொல்லாமையும் உரித்து, எ-று.

'தென் சேரிக் கோழி வென்றது' என்றவழி 'வடசேரிக் கோழி தோற்றது' என்னும் பொருளும் காட்டி நின்றது. இது இனம் செப்பியது. அந்தணர் வாழ்க என்றவழி அரசரும் வணிகரும் கெடுக என்றவாறன்றி அந்தணரையே குறித்து நின்றது. இது இனம் செப்பாது வந்தது. இன்னும் இச் சூத்திரத்தின்கண் 'இனம் செப்பலும் உரித்து' என்றதனாலே இனமல்லாதன செப்பலும் உரித்து என்று கொள்ளப்படும். அவ்வாறு வருவன ஏற்புழிக் கொள்க. சுமந்தான் வீழ்ந்தான் என்றவழிச் சுமவாதான் வீழ்ந்திலன் என்னும் பொருள்படுதலே யன்றிச் சுமக்கப்பட்டதும் வீழ்ந்ததெனச் செப்பியவாறும் கண்டு கொள்க பிறவும் அன்ன.

நச்.

இது அருத்தா பத்தி கூறுகின்றது

இ-ள்: எடுத்த மொழி—இனமாகிய பொருட்கண் ஒன்றை விதந்து வாங்கிக் கூறிய அச்சொல், இனம் செபபலும் உரித்து—தன் பொருட்கு இனமாகிய பிறபொருளைக் குறிப்பால் உணர்த்துதலும் உரித்து, எ-று.

உம்மை யெதிர்மறை யாகலின் உணர்த்தாமையும் உரித்தாயிற்று.

'அறம் செய்தான் துறக்கம் புகும்' என்றவழி இனப்பொருளாகிய 'மறம் செய்தான் நிரயம்புகும்' என்பது உணர்த்திற்று. 'இழிவறிந்து உண்பான்கண் இன்பம் எய்தும்' (குறள். ௯௪௬) என்றவழிக் கழிபேர் இரையான் இன்பம் எய்தான் என்பதும் இனப்பொருளை உணர்த்திற்று. கீழ்ச் சேரிக்கோழி அலைத்தது என மேற் சேரிக்கோழி அலைப்புண்டதும் அது

'ஆ வாழ்க, அந்தணர் வாழ்க' என்பன இனம் செப்பாதன அருத்தாபத்தி இனம் செப்புமாறு தன்னொடு மறுதலைப்பட்டு நிறபது ஒன்று உள்வழியாயிற்று. மறுதலைப்பாடு பல உள்வழிச் செப்பாது. ஆவிற்கு மறுதலை எருமை, ஒட்டகம் எனப் பலவுள.

அந்தணர்க்கு மறுதலை அரசர் வணிகர் வேளாளர் எனப் பிறரும் உளர். அங்ஙனம் பல மறுதலை யுள்வழிச் செப்பாது.

கல்.

என்-எனின், இஃது [1]அருத்தாபத்தியாதற் கூறுதல் நுதலிற்று.

இ-ள்: விதந்தமொழி தன் இனத்தைக்காட்டி நிற்றலும் உரித்து; உம்மையாற் காட்டாது நிற்றலும் உரித்து, எ-று.

உ-ம்: கீழ்ச்சேரிக் கோழியலைத்த தென, மேற்சேரிக் கோழி யலைப்புண்டது என்பது சொல்லாமையே முடிந்ததாம். குடங்கொண்டான் வீழ்ந்தான் எனக் குடம் வீழ்தலும் முடிந்தது. இவை இனம் செப்பின.

ஆவாழ்க அந்தணர் வாழ்க என்பது இனம் செப்பாதன, இவையும் இனம் செப்பின என்னாமோ எனின், சொல்லுவான் கருத்து [1]அஃதன்றாம். மறுதலை பலவுளவழி இனஞ்செப்பா மையானும் இனஞ்செப்பாவாயின வுணர்க.

ஒரு.

என்பது அருத்தா பத்தி கூறுகின்றது. இனமாகிய பொருட் கண் ஒன்றை விதந்து கூறியவழி அச்சொல் தனக்கு இனமாகிய பிறபொருளைக் குறிப்பால் உணர்த்துதலும் உரித்து எடுத்த மொழி-விதந்தசொல்.

உ-ம்: அறஞ்செய்தான் துறக்கம் புகுதும் என்றவழி, மறஞ்செய்தான் நிரயம் புகுதும் என்பதுணர்த்திற்று. இழிபறிந் துண்பான் இன்பம் எய்தும் எனக் கழிபேரிறையான் இன்பம் எய்தான் என்பதுணர்த்திற்று. குடங்கொண்டான் வீழ்ந்தான் எனக் குடம் வீழ்ந்தது சொல்லாமல் முடிந்தது. பிறவும் அன்ன. இனஞ்செப்பலும் உரித்தே எனில் உம்மையால் செப்பாமையும் உரிதது; ஆவாழ்க, அந்தணர் வாழ்க என்றால் ஒழிந்தனவும் ஒழிந்தாரும் சாக என்பதன்றெனக் கொள்க.

சு-வே. 1 அருத்தாபத்திமேற்று.

சு. வே. 1 அஃதன்மையானும்—இதுபொருந்தும்

ஆதி

கூறும் ஒரு சொற்றொடர் அதற்கு இனமான பிறவற்றைக் குறிப்பதும் உண்டு.

இருவரில் அவன் நல்லவன்-இவன் தீயன் என அடுத்தவனை அறிவிக்கின்றது. துவையல் மட்டும் போதும்-சாம்பார் வேண்டாம். என அறிவிக்கின்றது. எழுதவேண்டும் தாளுடன் மை-பென்சிலையும் சேர்த்து அறிவிக்கின்றது. பையுடன் பள்ளி சென்றான்-பை புத்தகம் நோட்டு அடிக்கோல் பென்சில் பல வற்றை அறிவிக்கின்றது.

செப்பலும் உரித்தே என்றதனால் இனம் குறியாதிருப்பதும் உண்டு. செடிக்குத் தண்ணீர் பாய்ச்சுகிறான் என்பதனால் மரத் துக்குப் பாய்ச்சவில்லை என்பது பொருள் இல்லை.

கண்ணகி சிறந்த பத்தினி என்பதனால் மாதவி பத்தினி யல்லள் என்று பொருள் கோடற்கு இல்லை.

சிவ.

இச்சூத்திரத்தில் எடுத்த மொழி என்பதற்கு, 'சொல்ல எடுத்துக்கொள்ளப்பட்ட சொல்' என இளம்பூரணர், தெய்வச் சிலையார், கல்லாடனார் ஆகியோரும், 'இனம் பலவற்றுள் ஒன்றை அடைமொழியாகக் கொண்ட சொல்' எனச் சேனா வரையரும், நச்சினார்க்கினியரும், ஒருவரும் பொருள் கொண் டனர். இவ்விருவகைப் பொருளையும் கொள்ளலாம். இனம் என்பது இச்சூத்திரத்தில் ஒரு சொல்லுக்கு ஓர் இனமே கொள்ளப்படும் என்பதும், பல இனம்கொள்ளப்படாது என்பதும் நச்சினார்க்கினியர் கருத்து. இது ஏற்பதற்கில்லை. 'சோற்றை நனி தின்றான்' என்றால் சோறு என்பதன் இனமாய கறி, துவையல் முதலிய பல பொருளையும் சுவைத்து நனி தின்றான் எனப்படுதலைக் காணலாம். இது இனம் செப்பியதற்கு உதாரணம் கறி, துவையல் முதலியவற்றை யதிகம் கொள்ளாமல் சோறு மட்டும் அதிகம் தின்றவனைப் பார்த்துச் சோற்றை நனி தின்றான் என்றால் அது இனம் சுட்டவில்லை. உரை யாசிரியர் இரு வேறு கருத்தினராயினும் அவர்கள் கருத்தும் அவ் வக்கால இடங்களுக்கேற்பப் பொருள் தருமாதலின் தழுவுதற் குரியதே என்னலாம். ஆதித்தர் இக்கருத்திலேயே உதாரணங்கள் கொடுத்தார்.

கண்ணகி சிறந்த பத்தினி என்பதனால், மாதவி பத்தினி யல்லள் என்று பொருள் கோடற்கு இல்லை என்று அவர் காட்டிய உதாரணம் பொருந்துமாயினும், தமிழ் மரபுக்கு மாறாக மாதவி தானும் பிறன் ஒருவனை விரும்பியவளாகக் கருத்துப்படவேண்டும் என்று வலிய கானல்வரி பாடியதனால் மாதவியினும் கண்ணகி சிறந்த கற்புடையாள் என்னும் கருத்தில் அவ்வாறு சொல்லின் மாதவி சிறந்த கற்புடையாள் என்று சொல்வதற்கில்லையாதலின் அவர் காட்டிய அவ்வுதாரணம் சிறவாது.

திணைவழுக்காத்தல்

(பன்மைச் சொல் ஒருமையொடு முடிதல்—தெய்)

62. கண்ணுந் தோளும் முலையும் பிறவும்
பன்மை சுட்டிய சினைநிலைக் கிளவி
பன்மை கூறும் கடப்பா டிலவே
தம்வினைக் கியலும் எழுத்தலங் கடையே

ஆ. மொ:

இல.

'Kaṇ' (eye) 'Thoḷ' (shoulder) Mulai and such other words which denote limbs in pairs need not nesessarily denote plural number unless either they are followed by plural verbs or they have the plural suffix.

க.சு.

words denoting limbs in plural like kan 'eyes', tol 'shoulders', mulai 'breast' and other (similar words) need not denote the plural number unless they are followed by plural verbs.

பி. இ. நூ.

முத்து. ஒ 92.

கண்ணும் முலையும் கையும் பிறவும்
பன்மை சுட்டிய சினைநிலைக் கிளவி
பன்மை யுரைக்கும் கடப்பாடிலவே

சூ. 27/.

உயர்திணை தொடர்ந்த பொருள் முதலாறும்
அதனொடு சார்த்தின் அத்திணை முடிபின.

இல. வி. 29/ ஷை ஷை

இளம்.

இச்—எனின், திணை வழுக் காத்தல் நுதலிற்று.

[1]உரை: கண்ணும் தோளும் முலையும் பிறவும் பன்மைப் பாலாற் கூறுதல் கடப்பாடில; தம் வினைக்கியலும் எழுத்தல் லாத விடத்து, எ—று.

வ—று: கண் நல்லள்; தோள் நல்லள்; முலை நல்லள் என வரும்.

பிறவும் என்றதனால் புருவம் நல்லள்; காது நல்லள் என்பன போல்வன கொள்க.

[2]இனி ஒருமை சுட்டிய சினைக்கிளவி ஒருமை கூறும் கடப்பாடில்லன வற்றிற்கு ஒத்து என்னை பிறவெனின், மேற்

---

1. கண் முதலியன ஒன்றல்லாப் பல வாதலின் பன்மைப் பெயர்கள். இவை அஃறிணைப் பெயர்கள். இவை வினை முடிபு கொள்ளுங்கால் கண் நல்லன என்பது போல முடிதல் வேண்டும். இவ்வாறு முடிவது தமக்குரிய வினையால் முடிவதாகும். இவ்வாறன்றித் தம் முதலின் வினையால் முடிவதாயின் பன்மை வினை முடிபு தேவையில்லை-கண் நல்லள் என்றே முடியும்.

2. மூக்கு ஒருமைப் பெயர். இது மூக்கு நன்று எனமுடியும். இதுவும் தன் முதல் வினையால் முடியும போது தனக் குரிய ஒருமை வினையால் முடியாமல் மூக்கு நல்லள் என முதலின் வினையாலேயே முடிதல் இசூத்திரத்தில் கொள்ளவேண்டும். அதற்கு விதியாதெனின் 'காலம் உலகம்' என்னும் சூத்திர முதலாகத் திணை வழு வமைதி கூறி வந்த ஆசிரியர் தொடர்பில்லாத 'எடுத்த மொழி' என்னும் சூத்திரத்தை இடை வைதத மாறு பாட்டினையே விதியாகக் கொள்ளவேண்டும்.

'கால முலகம்' (சொல் 58) என்று திணை வழுக் காத்து வாரா நின்ற அதிகாரத்திடையே, 'எடுத்த மொழியினம் செப்பலும் உரித்தே' (சொல் 61) என்னும் சூத்திரத்தை இடனன்றி வைத்தார். அது நிலமாகத் தந்து உரைத்தவற்றையும் கொள்க என்பது.

வ—று: மூக்கு நல்லள்; கொப்பூழ் நல்லள் என வரும்.

(முதலாவது கிளவி யாக்கம் முற்றிற்று)

சேனா.

தம் வினைக் கியலும் எழுத்தான் முடிதலும் தம் முதல் வினைக்கியலும் எழுத்தான் முடிதலும் எனச் சினைநிலைக் கிளவி இருமுடிபுடையவற்றுள், முதல் வினைக்கியலும் எழுத்தான் முடிவுழி யென்பார் 'தம் வினைக்கியலும் எழுத்தலங் கடை' என்றார்.

இ—ள்: கண் முதலாயவும் பிறவும் பன்மை குறித்து நின்ற சினைநிலைக் கிளவி, அவை தம் வினைக் கியலும் எழுத்தான் முடியாது தம் முதல் வினைக் கியலும் எழுத்தான் முடியும் வழிப் பன்மையாற் சொல்லப்படும் யாப்புறவுடையவல்ல; முதல் ஒன்றாயின் ஒருமையானும் பன்மையாயின் பன்மையானும் கூறப் படும், எ-று.

உ-ம்: கண்ணல்லள்; தோள் நல்லள்; முலை நல்லள். எனவும் கண் நல்லர்; தோள் நல்லர்; முலை நல்லர் எனவும் வரும்.

பிறவும் என்றதனாற் புருவம், காது என்னுந் தொடக்கத் தனவும் கொள்க.

'பன்மை கூறும் கடப்பாடிலவே' என்றதனாற் பால் வழுவும், 'தம் வினைக் கியலும் எழுத்தலங்கடை' என்றதனால் திணை வழுவும் அமைத்தார்.

பன்மை கொண்டன, பன்மை யொருமை மயக்கம் இல்லாத் திணை வழு வாகலின், தம் வினைக் கியலும் எழுத்தலங் கடை யென்பதனால் அமைக்கப்படும்.

மூக்கு நல்லள், கொப்பூழ் நல்லள் என ஒருமைச் சினைப் பெயர் நின்று உயர்திணைப் பெயர் கொண்டனவும், நிறம் கரியள், கவவுக் கடியள் எனப் பண்பும் தொழிலும் நின்று உயர்

திணை கொண்டனவும் தன்வினை முடித்தல் என்பதனான் அமைக்கப்படும்.

'கோடு கூரிது களிறு,' 'குளம்பு கூரிது குதிரை' என அஃறிணைப் பன்மைச் சினைப் பெயர் நின்று முதல் வினையாகிய ஒருமையான் முடிந்தனவும் அமையுமாறு என்னை யெனின், ஆண்டுப் பன்மை யொருமை மயக்கமல்லது திணை வழுவின்மை யின் ஈண்டைக்கு எய்தா; அப்பன்மை யொருமை மயக்கம் ஒன்றென முடித்தல் என்பதனான் அமைக்கப்படும். அஃதேல் இச்சூத்திரத்தால் திணை வழுவோடு கூடிய பால் வழு அமைக் கப்பட்டது என்பது ஏற்றாற் பெறுதும் எனின், சினைக் கிளவிக் குத் தம் வினைக் கியலும் எழுத்தாவது அஃறிணை வினைக்குரிய எழுத்தாம். அஃதல்லாதது உயர்திணை வினைக்குரிய எழுத் தேயாம். என்னை? அஃறிணைக்கு மறுதலை உயர்திணையே யாகலான்; அதனால் திணை வழுவுதலும் பெறுதும் என்பது. அஃதேல் தம் வினைக் கியலும் எழுத்தாவன சினை வினைக் குரிய எழுத்தென்றும் அவையல்லாதனவாவன முதல் வினைக் குரிய வெழுத்தென்றும் உரைக்க; உரைக்கவே, உயர்திணைச் சினையும் அஃறிணைச் சினையும் எல்லாம் அடங்கும் எனின், அற்றன்று; அஃறிணைக்கண் சினை வினைக்குரிய எழுத்தொடு முதல் வினைக்குரிய எழுத்திற்கு வேறுபாடின்றி எல்லாம் அஃறிணை யெழுத்தே யாகலின் தம் வினைக் கியலும் எழுத் தலங்கடை என்பதற்கேலாதாகலான், கண் முதலாயின உயர் திணைச் சினையேயாம் என்பது.

கிளவியாக்கம் முற்றிற்று.

தெய்.

ஒருசார் பாலறி சொற்கண் கிடந்ததோர் மரபு உணர்த்து தல் நுதலிற்று,

இ-ள்: [1]கண்ணும் தோளும் முலையும் அத்தன்மைய பிறவும் ஆகிய பன்மை சுட்டிய சினை உணர வரும் சொல், தம் வினைக் கேற்ற எழுத்தான் முற்றுப் பெறாதவழிப் பன்மையுணர்த்தும் மரபு இல, எ-று.

1. இவ்வுரை மற்றையோர் உரைக்கு மாறுபட்டது. இதனைச் சேனாவரையர் மறாமையால் காலத்தால் சேனாவரையர் முற்பட்டவர் என்பது போதுதரும்.

எனவே, பன்மை யீற்றான் வாராக்கால் ஒருமை யீற்றான் வரப் பெறும் என்பதூஉம், அவ்வழி அவ்விரு பொருட்கண்ணும் கிடப்பதொரு பொதுமையைக் குறிக்கும் என்பதூஉம் கொள்ளப் படும். கண் நொந்தது, முலை யெழுந்தது, தோள் தசைத்தது என்ற வழிப் பன்மை யுணர்த்திற்றிலவாயினும் அச்சாதி யொருமை உணர்த்தியவாறு கண்டு கொள்க. பிறவும் என்ற தனால் கை கால் என்பனவும் கொள்க. 'இரு நோக்கு இவள் உண்கண் உள்ளது" (குறள் 1091) என்றவழி நோக்காகிய ஒருமை குறித்து வந்தது. ஒப்பக் கூறல் என்னும் தந்திரவுத்தியால் சினைப் பொருளேயன்றி முதற் பொருளும் சாதியொருமைபற்றி வருவனவும் அமைத்துக் கொள்க.

> உள்ளிய தெல்லாம் உடன்எய்தும் உள்ளத்தான்
> உள்ளான் வெகுளி யெனின் (குறள் 309)

இதனுள் உள்ளிய வெல்லாம் எனற்பாலது நினைக்கப்படுதல் ஆகிய ஒருமை குறித்து வந்தது. அஃதேல், கண் நல்லன் என்பது எவ்வாறு வந்தது எனின், கண்ணது நன்மையுடயன் என்னும் பொருள்பட வந்தது. கண் நொந்தான் என்பது எவ்வாறு வந்த தெனின் கண் நோகப்பட்டான் எனச் செயப்படு பொருள் குறித்து நின்றது. [2]இவை வினையியலுட் காணப்படும்.

முதலாவது கிளவியாக்கம் முற்றும்

இவ்வோத்தினுள் சூத்திரம் உட்பட்ட உரையினது அளவு கிரந்த வகையான் ஐந்நூற்று நாற்பது (ஐந்நூற்று அறுபது (இ-ஏ.)

நச்.

இதுவும் திணைவழுக் காக்கின்றது.

இ—ள்: கண்ணுந் தோளும் முலையும் பிறவும்—கண்ணும் தோளும் முலையும் அவை போல்வன பிறவும், பன்மை சுட்டிய சினை நிலைக்கிளவி—பன்மையைக் குறித்து நின்ற சினை நிலைமைய உணர்த்திய சொற்கள், தம் வினைக்கு இயலும் எழுத்து அலங்கடை—அவை தமக்குரிய பன்மை வினைக்கு ஏற்ற அகர ஈற்றால் கூறக்கருதாது தம் முதல் வினைக்கு ஏற்ற ஒருமை யீற்றானும் பன்மையீற்றானும் கூறக் கருதியவழி,

2. "அம்முக கிளவியும்" என்னும் வினையியற் சூத்திரத்துள் (34) காணப்படும்.

பன்மை கூறும் கடப்பாடு இல—தமக்குரிய பன்மையால் கூறப் படும் யாப்புறவுடைய அல்ல, எ—று.

உ—ம் : கண் நல்லள், தோள் நல்லள், முலை நல்லள் எனவும், கண் நல்லர் தோள் நல்லர் முலை நல்லர் எனவும், கண் நொந்தாள், தோள் நொந்தாள், முலை நொந்தாள் எனவும் வரும்.

பிறவும் என்றதனால் புருவம், காது முதலியனவும் கொள்க.

மூக்கு நல்லள் கொப்பூழ் நல்லள் என ஒருமைச் சினைப் பெயர் நின்று உயர்திணை கொண்டனவும், நிறம் கரியள் கலவுக் கடியள் எனப் பண்பும் தொழிலும் நின்று உயர்திணை கொண்டனவும் தன்வின முடித்தலால் கொள்க.

கண் நொந்தது, முலை யெழுந்தது என்றாற் போல்வன சாதி ஒருமை உணர்த்தலும் இதனால் கொள்க. 'கோடு கூரிது கரி' 'குளம்பு கூரிது குதிரை' எனப் பண்புச் சினைப் பெயர் நின்று முதல் வினையாகிய ஒருமையான் முடிவதுவும் கொள்க.

கிளவி ஆக்கம் முற்றும்

கல்.

என்—எனின், திணைவழுக் காத்தல் நுதலிற்று.

பொருள் : கண்ணுந் தோளும் முலையும் பிறவும் ஆகிய பன்மைப் பொருளை யுணர்த்திய சினை நிலைமை யுணர நின்ற சொற்கள், தம் பன்மையாற் கூறுதலையே இலக்கண முறைமை யாக வுடையவல்ல; அதிகாரத்தானும் உயர்திணையாய் முடித லுடைய. அஃது எப்பொழுதுமோ எனின், அற்றன்று; தமது வினைக் கேற்ற எழுத்தினாற் சொல்ல நினையாது தம் முதல் வினையாற் சொல்லக் கருதிய பொழுது, எ—று.

உ—ம் : கண் நல்லள். தோள் நல்லள், முலை நல்லள் என்பனவாம். பிறவும் என்பதனாற் புருவம் நல்லள், காது நல்லள் என வரும்.

திணை வழு வதிகாரம் கூறி வாரா நின்றதனிடையே 'எடுத்த மொழி' யென்று இயைபில்லது கூறியவதனான் ஒருமைச் சினை உயர்திணையாய் முடிவனவும் கொள்க.

உ—ம் : மூக்கு நல்லள், கொப்பூழ் நல்லள் என வரும்.

இதனாற் சொல்லியது உயர்திணைச் சினைப் பொருள் தனக்கேற்ற சினை வினை கொள்ளாது முதல் வினை கொண்டு முடிவன கண்டு அதனை அமைத்தவாறு என்க.

'வினையிற் றோன்றும் பாலறி கிளவி' (சொல். 11) முதலாக இத்துணையும் சென்ற ஆராய்ச்சி யென்னுவகையிலக் கணத்துள்ளும் எழுவகை வழு ஆராய்சசி யெனவுணர்க.

முதலாவது கிளவியாக்கம் முற்றும்

ஒரு·

என்பது கண்ணும் தோளும் முலையும் அவை போல்வன பிறவும் பன்மையைக் குறித்து நின்ற சினை நிலைமையை யுணர்த்திய சொற்கள், தமக்குரிய பன்மை வினைக் கேற்ற அகர வீற்றாற் கூறக் கருதாது தம்முதல் வினைக் கேற்ற ஒருமை யீற்றானும் பன்மையீறறானும் கூறக் கருதியவழி தமக்குரிய பன்மையாற் கூறப்படும் முறைமையுடைய வல்ல.

உ—ம் : கண்ணல்லன், கண்ணல்லள், கண்ணல்லர்; தோள் நல்லன், தோள் நல்லள், தோள் நல்லர்; முலை நல்லன், முலை நல்லள், முலை நல்லர் எனவும், கண் நொந்தான் முலை நொந்தாள் எனவும் வரும். பிறவும் என்றதனாற் புருவம் காது, கால் முதலியன கொள்க. 'பன்மை கூறும் கடப்பாடில' என்றதனால் ஒருமைக்குங் கொள்க. மூக்கு நல்லள், கொப்பூழ் நல்லள் என்க. 'தம் வினைக்கியலும எழுத்தலங்கடையே' என்றதனால் தம் முதலுக்கு இயலும் எழுத்தான் முடியும் என்பதாம்.

இச்சூத்திரம் அஃறிணை உயர்திணையான் முடியுமாறு கூறித்திணை வழுவமைத்தது.

தன்னின முடித்தல் என்பதினாற் கோடு கூரிதுயானை, குளம்பு கூரிது குதிரை யெனத்திணை வழுவின்றி அஃறிணைப் பன்மைச் சினைப் பெயர் நின்று முதல் வினையாகிய ஒருமை யான் முடிவனவும் கொள்க.

முதலாவது கிளவியாக்க உதாரணம் முற்றும்

ஆதி.

கண் தோள் முலை போன்ற பன்மை குறிக்கும் சினைப் பெயர்கள், தம் பன்மைக்குரிய வினைமுற்று விகுதியில்லா

விடத்துப் பன்மைப் பெயராகச் சொல்ல வேண்டிய முறை கிடையாது. (பன்மை வினையாக இருப்பின் கண்கள், முலைகள் எனப் பன்மை கூறல் வேண்டும்)

பால் ஊட்டுகின்றன (பன்மை விகுதி) முலைகள் (எனப் பன்மையெழுவாய் கொள்ளும்) நீர் ஒழுக்கி நின்றன (பன்மை விகுதி) கண்கள் (எனப் பன்மை எழுவாய் கொள்ளும்) மலை போல் உயர்ந்தன (பன்மை விகுதி) தோள்கள் (எனப் பன்மை எழுவாய் கொள்ளும்) பிறவும்=புருவம் காது போன்ற பன்மைப் பெயர்கள்.

இவ்வாறு பன்மை விகுதியே வரவேண்டும் என்பது முறைமையாகாது. ஒருமை விகுதியும் இத்தகைய பெயர்களின் பன்மையைக் காட்டி நிற்கும்.

அவள் கண் அழகானது—இருகண்களையும் குறிக்கும்.
அவர் தோள் உயர்ந்தது—இருதோள்களையும் குறிக்கும்.
மங்கை முலை பெரியது—இருமுலைகளையும் குறிக்கும்.

குறிப்பு : ஆசிரியர் இத்துணை விரிக்காமல்
"இணைப் பொருட் பன்மை
ஒருமைப் பெயர்கொடு உரைத்தலும் முறையே"
எனக் கூறியிருப்பின் இன்னும் விரிவான பொருள் தந்து நிற்கும்.

இந்தச் செருப்பு எனக்குப் பொருந்தும்—பன்மை இணை
இந்தக் கம்மல் வயிரம்— ,,
காலில் சதங்கை கட்டினாள்— ,,

"இணைப் பொருட் பன்மையும் இணைப் பெயர்ப் பன்மையும் ஒருமைப் பெயர்கொடு உரைத்தலும் வழக்கே" எனின் சூத்திரம் சாலச் சிறப்புடைத்து.

இனப்பெயர்—ஆ, புலி, சிங்கம், நாய், குயில், மயில் இதன் ஒருமைப் பெயரும் பன்மைப் பொருளாம்.

ஆவின்பால் நலந்தருவது	—	ஆவினம்
புலியின் குணம் மூர்க்கம்	—	புலியினம்
சிங்கம் அச்சமின்றி வாழும்	—	சிங்கங்கள்
நாய் நன்றியுள்ள விலங்கு	—	நாய்கள்
குயில் குரல் கேட்கத் தக்கது	—	குயிலினம்
மயில் அழகு நம்மைக் கவர்வது	—	மயிலினம்

வாக்கிய அமைப்பில் திணை பால் பற்றிய எழுவாய்க்கு ஏற்ற வினை முற்று—வினா விடைமுறை—அடை மொழிகள் அமையும் முறை—ஐயுற்ற இடத்தில் அறிவிக்கும் முறை—ஆயிற்று, அன்றி, அல்லதுஇல், செல், வா, தா, கொடு, யாது, எவன் இச்சொற்கள் பயிலும் முறை—சிறப்புப் பெயர்கள் நிற்கும் முறை—உயர்திணை அஃறிணைக் கலப்பு—இருதிணை யாகவும் வரும் சொற்கள்—பல பெயர்கள் தொடர்தல்—இரட்டை மொழிகள்—பெயர் தனியினந்தழுவி நிறறல்—ஒருமை பன்மையாகப் பொருள் தரல்—இவை பற்றி நன்கு விளக்குவதால் இவ்வதிகாரம் கிளவியாக்கம் ஆயிற்று.

முற்றியது.

(கிளவியாக்கவுரைவளம் ஒருவாறு முடிந்தது.)

*உதாரணச் செய்யுட் பொருள்

சூத்திர எண் 4. பெண்ணவாய் ஆணிழந்த பேடி யணியாளோ கண்ணவாத் தக்க கலம் (நாலடி. 251) = பெண்மைத் தன்மையை அவாவி ஆண்மைத் தன்மையை இழந்த பேடியானவள் கண் விரும்பத்தக்க கலத்தை அணிய மாட்டாளோ?

சூ. 7. கானம் தகைப்ப செலவு (கலி. பாலை. 3. 22) = தலைவன் பிரிந்து செல்லும் செலவினை அவன் செல்லும் காட்டிடத்துப் பொருள்களே தடுப்பனவாம்.

பூக்குழாய் என் ஐயர்கண் இல்லாக தீது = பூவினை யுடைய கூந்தல் உடையவளே! என் தந்தையர் மாட்டுத் தீது இல்லையாக.

சூ. 9. சினையவும் சுனையவும் நாடினர் கொயல் வேண்டா நயந்து தாம்கொடுப்ப போல = கோட்டுப் பூக்களையும் சுனைப் பூக்களையும் தேடிச்சென்று கொய்ய வேண்டாதபடித் தாமே விரும்பிக் கொடுப்பன போல

சூ. 16 அவன் கோலினும் தண்ணிய தடமென் தோளே (பட்டினப். 300) = அவ்வசரனின் செங்கோலின் இனிமை யினும் பெரிய மென்மையான தோள்கள் தண்மை யுடையனவாம்.

துளிதலைத் தலைஇய தளிரன்னோள் (குறுந். 222) = மழைத் துளியைத் தன்னிடத்தே கொண்ட தளிர் போலும் மென்மையான உடம்புடையாள்.

சூ. 17. உப்பக்க...கூடற்கச்சு (தி. வ. மாலை. 12) வடக்குப் பக்கம் பார்த்து, உபகேசி (நப்பின்னை)யின் தோளை

---

* உதாரணத்துக்காகப் பொருள் தரப்பட்டது; செய்யுட் பொருள் முழுமையும் தரபபடவில்லை.

மணந்தவனாகிய கண்ணனை வடமதுரைக்கு அச்சாணி என்று சொல்வர் அறிந்தோர்; தெற்குப் பக்கம் பார்த்து மாதாநுபங்கி என்றும், குற்றமற்ற செந்நாப் போதார் என்றும் கூறப்படும் திருவள்ளுவரை வையைப் புனல் ஓடும் கூடற்கு (தென்மதுரைக்கு) அச்சாணி என்று சொல்வர்.

நறுநீல...பெண்டிர் அடி=பாரியின் அறத்தன்மையொடு கூடிய பறம்பு நாட்டுப் பெண்களின் (பாரிமக்களின்) கால்கள் பாரியையிழந்து பிறநாடுகளிடமாகச் செல்லும் போது (நெய்தல் நிலத்துள்ள) நல்ல மணமுள்ள நீலநிற முள்ள நெய்தற் பூக்களையும் கொட்டிப்பூக்களையும் தீண்டுதலால் பிற (நெய்தல்) நாட்டுப் பெண்டிரின் முடிகள் போல மணக்கும். (நெய்தல் நிலப் பெண்டிர் முடியில் அப்பூக்களைச் சூடுதல் இயல்பு)

மேற்றான்...செற்றமுலை:-பகைவனின் மிக்க வலியைச் சாய்த்துக் கண்ணன் ஆடும்போது கொண்ட குடத்தைத் தமக்கு ஒப்புமையாகாமல் அலைக்கழித்துத் தாம் இருக்கும் இடமாகிய இடையைக் கொன்ற முலைகள், கிளையின் மேலிருந்து ஒருவன் அதன் கீழ்ப்பகுதியை வெட்டினால் எப்படியோ அப்படித் தெளிவில்லாத செயலை மேற்கொண்டனவாம்.

சூ. 18. மாக்கடல் நிவந்தெழு செஞ்ஞாயிற்றுக் கவினை= நீலக்கடல் முகட்டில் உயர்ந்தெழுகின்ற செஞ் ஞாயிற்றின் அழகுடையை.

நெடுவெண் திங்களும் ஊர் கொண்டன்று (அகம்.2)= நெடிய வெண்மையான திங்களும் ஊர் கோளைக் கொண்டது.

செஞ்ஞாயிற்று நிலவு வேண்டினும், வெண்திங்களுள் வெயில் வேண்டினும் (புறம் 38)= கொடுங்கதிர் விரிக்கும் செஞ்ஞாயிற்றின்கண் நிலவொளி வேண்டுமென்றாலும் தண்கதிர் விரிக்கும் வெண்திங்களிடத்தில் வெங்கதிர் வேண்டுமென்றாலும்.

சூ. 21 பரிசிலர்க்...தடக்கை. (புறம்.14)= குரிசிலே! நினது முழந்தாள் அளவாகத் தாழ்ந்திருக்கும் நீண்ட கையானது நின்னை வந்து இரக்கும் பரிசிலர்களுக்கும் பெறுதற்கரிய கலங்களை (அணிகளை) நல்கிய காரணத்தால் வலிமையுடையதாகும்.

தெரிகணை நோக்கி...களத்து (களவழி.5)=செங்கண்மால் தன்னிடம் தவறு செய்த பிற வேந்தர்களைக் கொன்ற போர்க்களத்தில் காகங்களானவை, ஆய்ந்து எய்யப்பட்ட அம்புகளால் கிழிக்கப்பட்ட வீரர்களின் உடற்புண்களிடமெங்கும் ஒழுகிய குருதியை நன்றாகப் படிந்து உண்ட காரணத்தால் தமது கருநிறம் இழந்து குக்கிற்பறவை போல் சிவந்த உடம்பையும் சிரல் பறவை போல் சிவந்த மூக்கினையும் உடையவாயின

பெருமழைய...ஆயினதோள் =திருநுதலுடையவளே! பெய்ய வருகின்ற மேகத்தின் தன்மையுடையனவாய் இரவலர் கொள்ளுதற்குரிய குறையாத சிறப்பினையுடைய வள்ளன்மை மிக்க கைகளையுடைய கருமுருகன் என்பவன் சூடிய மாலையை இன்று என் கூந்தலில் வைத்தமையால் இதுவரை அழகிழந்த என் தோள்கள் முன்னைய அழகுடையனவாயின.

அரியகானம்...தோளே (குறு.77)= கடத்தற்கரிய பாலை நிலத்தில் என்னைப் பிரிந்து சென்ற தலைவர் திறத்து மெலிந்தனவாகிய பரந்த மெல்லிய என் தோள்கள்— உ. வே. சா.

நல்லவை...செயற்கு (குறள். 305)=நல்லகாலம், நல்ல இடம் நல்ல கருவி, நல்ல தொழில் முதலியன எல்லாம் போகும் ஊழால் தீயனவாகிக் கெடுக்கும்; ஆகும் ஊழ் இருந்தால் தீயகாலம், தீயஇடம், தீய கருவி, தீய செயல் முதலியன எல்லாம் நல்லனவாகி நன்மைதரும்.

சூ 26. சிறுபைந்தூவிச் செங்காற்பேடை (அகம்57) = சிறிய பசுமையான சிறகுகளோடு சிவந்த கால்களையுடைய பேடை (அன்னம்)

கவிசெந்...கூகையும் கூடி (புறம்238)=பிணமிட்டுப் புதைக் கப்பட்ட செய்ய தாழியானது குவிந்த புறத்தேயிருந்த செவிசிவந்த கழுகின் சேவலும், பொகுவல் என்னும் புள்ளும், அஞ்சாவாய், வாய்வலிய காக்கையும் கோட்டானும் கூடி.

சூ. 27. கொடுங்கோல் கோவலர் ... தாயர்(முல்லை. 15,16)= கொடிய கோலையுடைய கோவலர் பின்னே நின்று செலுத்துதலானே இப்பொழுதே வந்துவிடுவர் நம் முடைய தாய்மார்.

சூ. 29. பெருவிறலமரர்க்கு வென்றி தந்த (புறம் 55)=பெரிய ஆற்றல் வாய்ந்த தேவர்க்கு வெற்றியை விளைவித்த.

தூண்டில் வேட்டுவன் வாங்க வாராது (அகம் 36)=தூண்டில் இட்டுக் காத்திருந்த வலைஞன், (அதில் ஒருமீன் அகப்பட உடனே அதைக்கொள்ளவேண்டி (சடேரென) எடுக்க வாராது.

அரிமலர்... நின்றது அரவு (யா.வி. சூ. 57 உரைமேற்) = (திங்களை விழுங்கும்) பாம்பானது கோடு பரந்த மலர் ஒத்த கண்ணையுடைய அழகிய மாமைநிறத்தையும் உடைய உழவப்பெண்ணின் திருமுகத்தையும் வானின் திங்களையும் பார்த்து எது திங்கள் எது திருமுகம் என்று அறியமுடியாமல் மயங்கி மண்ணுலகத்தும் வானுலகத்தும் செல்லாமல் வருத்தமுடையதாகி ஐயத்துள்ளே நின்றுவிட்டது.

சூ. 33. கண்சளியாச் .... வெள்ளை நிலை =

இப்பாடலின் பொருள் விளங்கவில்லை.

நாஞ்சில் (கலப்பை), குழையொன்று, வெள்ளை (வெண்ணிறத்தான்) என்பன பலராமனைக் குறிப்பனவாக உள்ளன. அதனால் இப்பாடல் பலராமனைப் பற்றியதாதல் வேண்டும். இதில் குழையொன்று என்பதில் ஒன்றும் என்றிருக்க வேண்டுவது உம்மை தொக்கதாகும். ஐவர் நிலையும் என்பதிலும் உம் தொக்கதென்னலாம்.

சூ. 34. உறற்பால நீக்கல் உறுவார்க்கும் ஆகா (நாலடி 104)= வந்து அடைதற் பாலனவாகிய வினைகள் அடைபவர்களால் நீக்கலும் ஆகா.

மன்னுக பெரும நீ நிலமிசையானே (புறம். 6) = பெரும! நீ இவ்வுலகத்தின் கண் நிலை பெறுவாயாக.

மன்னாவுலகத்து மன்னுதல் குறித்தோர் (புறம். 165) = நிலை பேறில்லாத இவ்வுலகில் நிலைத்தலை நினைத்தவர்.

மன்னாப் பொருட்பிணி முன்னி (நற் 71) = நிலையில்லாத பொருள் சேர்த்தலை நினைத்து.

சூ. 35. நாணும் நட்பும்......வுலகத் தானே (அகம் 268) = இவ்வுலகத்தில் நாணமும் நட்பும் ஆகிய இரண்டும் இல்லாதவர் உளரோ என்று ஆராய்ந்து காணின் அதற்கு இலக்காக என்னையன்றி வேறு யாரும் இலராவர்—சோமசுந்தரனார்.

சூ. 37. இஃதோ செல்வற்......பெயர்தந்தேனே (அகம். 26) = இதோ இங்குள்ள என் செல்வனாகிய மகனுக்கு (குழந்தைக்கு) ஒத்திருந்தோம் (நுமக்கி ஒத்தில்லை) யாம் என்று சொல்லி மெல்ல என் மகனிடம் பெயர்ந்து சென்றேன்.

நாணி நின்றோள்......கெனவே (அகம்) = மகிழ்ந! வெட்கப் பட்டு நின்றவளை (பரத்தையை)க் கண்டு வருத்துதல் இல்லாத தெய்வம் போன்றவளாகிய அப் பரத்தையும் நின்மகனுக்குத் தாயாதல் மேம்பாடுடையதே என்று இரங்கி விரும்பினேன் அல்லவா?

கொய்தளிர்...நட (நன். சூ. 397. சங். உரை மேற்.) = கூத்தப் பெருஞ்சேந்தன் என்னும் அரசன், கொய்யும்தளிர் நிறைந்த தண்டலை (சோலை)க்குச் செல்லத் தினமும் ஏறுதற்குரிய வெற்றிக்களிறே! உன்னைக் கைதொழுது வேண்டுவேன்; நீ தண்டலைக்குச் செல்லும் போது உன் மீது அமர்ந்து வரும் காலேக வண்ணனாகிய அவனை எம் கண்ணாரக் காணும் பொருட்டு எங்கள் வீட்டுச் சன்னல் பக்கமாகச் சாரச் செல்வாயாக.

பொற் பூண் சுமந்த......கொண்டவாறும் (சீவக. 19) = "நல்ல பொலிவுடைய கழல் கட்டியவனும் உலக் கல்லின் பெருமையைக் கெடுத்த—கனத்த சிறந்த மணித் தூணை யொத்த தோளுடையவனுமாகிய சீவகன்

பொன்னாலாகிய பூணாகிய கிம்புரியணிந்த இரண்டாகிய மென்மையான முலைகளாகிய கொம்புகள் தன் மார்பில் உழுமாறு இரண்டு மாதங்கள் விரும்பித் தங்கினபடியும், பின்னர் மலைகளை யூடறுத்துக் கொண்டு விரைவாக வழிக் கொண்டபடியும்''

வையைக் கிழவன்......ஒருங்கு (நன். சூ. 397. சங். உரை மேற்) =''தையலாய்! வையை யாற்றுக்கு உரிமையுடையவனாகிய பாண்டியனது விளக்கமிக்க மாலையணிந்த மாண்புள்ள மார்பகத்தை இன்று நீ எனக்குக் கொடுத்தாய் (சேர்த்து வைத்தாய்); அவ்வாறு கொடுக்கவில்லையென்றால் கூடலார் (மதுரையார்) தலைவனாகிய அப்பாண்டியனோடு நீயும் (யான் இறந்து படுதலால் உண்டாகும்) பழிச் சொல்லை முழுதும் படுவாய்''

சூ. 39. அவனணங்கு......விளைவு (நன். 394. சங். உரை மேற்) = அன்னாய்! ஆய்ந்த இழையணிந்த தோழியே! வேலனானவன் வெற்றிமிக்க மாலையணிந்த சேந்தன் (முருகன்) பெயரை வாழ்த்தி முகமலர்ந்து கடம்ப மலர் மாலையை யணிந்து கொள்வானாயின் (குறி சொல்லத் தொடங்குவானாயின்) பிறகு அவ்விடத்து விளைவது என்னவாகும்? ஏன் எனின், நம்மை வருத்தும் நோயைச் செய்தவனே அவனாவான் (சேந்தனாவான்).

சூ. 46. ஆவும் ஆனியற்......சேர்மின் (புறம். 9) = ஆக்களும் ஆவின் இயல்புடைய பார்ப்பனமாக்களும், பெண்களும் நோயாளரும், தம் குடியில் இறந்து தென்புலத்தில் வாழும் முன்னோர்க்கு விரும்பிக் கடன் ஆற்றும் புதல்வர்களைப் பெறாதவரும் ஆகிய நீவிர் அனைவரும் எம் அம்புகளை விரைவில் விடுவோம். (போர் மேற் கொள்வோம்) ஆதலின் நுமக்குப் பாதுகாவலான இடங்களைச் சென்று சேர்வீராக.

மூங்கில் மிசைந்த முழந்தாள் இரும்பிடி (கலி = 50) தானே வளைகின்ற மூங்கிலின் கோலைத்தின்ற முழந்தாளை யுடையகருமையான பெண் யானை.

நளி புகை......மிசைந்து (மலை படு. 249)= தீயினாலே செறிந்த புகை நாறாமல் வதக்கி (வாட்டி) மயிர் போகச் சீவித் தின்று — நச்.

இடம்படின்......சிறந்த (கலி 29.) தானடித்த களிறு தனக்கு இடது புறமாக வீழின் அதனை உண்ணாத புலியினும் சிறப்புற்ற.

கடவுள்......அயின்றனர். (பரிப. 5. 44,45)=கடவுள் கற்பினை யுடைய ஒரு மீனாகிய அருந்ததி ஒழிய ஏனையோ ராகிய விளங்காநின்ற கார்த்திகைமகளிர் அறுவரும் அப்பொழுதே உண்டனர். — பெருமழைப் புலவர்.

அறுசுவை .... தின்றென=அறுசுவை யொடு கூடிய உணவினை அணிந்த அணிகளையுடையவள் தருதலி னால் பெரிய வயிறு நிறைய நாளைவேண்டும் என வையாது தின்றதாக.

சூ. 47. உண்ணு நீர் வேட்டேன் என வந்தாற்கு. (கலி. குறி. 15) = உண்ணப்படும் (பருகப்படும்) தண்ணீர்த் தாகம் கொண்டேன் என வந்தவனுக்கு.

பாலும் உண்ணான் பழங்கண் கொண்டு (அகம் 48)=பாலும் குடியான் வருத்தம் கொண்டு.

கலைப் புற அல்குல் கழுகு குடைந்துண்டு (மணிமே. 6 : 41)= ஆடையைப் புறம் சுற்றியுள்ள அல்குலைக் கழுகானது குடைந்து தின்று.

சூ. 51. கோவஞ்சி..........பற்றுவிடல் (திரி. 33)— படை வேந்தனானவன், தன் செங்கோலுக்கு அஞ்சி வாழும் குடிமக்களும், ஆலம் விழுது போல் குடிமக்களைத் தழுவித் தாங்கும் அமைச்சனும் வேலின் பூண் போன்ற வலிமையுடையான் காவலும் ஆகிய இம்மூன்றையும் பற்றிப் போற்றிக் கொள்வதை விடாதிருப்பானாக.

அங்கண்............ஒப்பர். (நாலடி. 151)—அழகிய இடமகன்ற ஆகாயத்தில் அகன்ற நிலவொளியைத் தாங்கும் திங்களும் சான்றோரும் ஒப்பர்.

பார்ப்பார்...எனப்படுவார் (ஆசார. 64)—எடுத்த பிறவியில் பிறரால் போற்றி எனப் புகழப்படுபவர் யாரெனில் பார்ப்பார், தவமுனிவர், பாரம் சுமந்தவர், நோயாளர், முதியவர், சிறுவர், பசு, பெண்டிர் என்னும் இவர்களுக்கு எளிதிற் செல்லுமாறு முழுமையும் வழி விட்டு விலகிச் செல்பவரேயாவர்.

கடுஞ்சினத்த...மாண்டதாயினும் (புறம் 55)—மிக்க சினத்தையுடைய கொல்யானையும், விரைந்த ஓட்டத்தையுடைய சேணம் பூட்டப்பட்ட குதிரையும், நெடிய கொடியைக் கட்டிய உயர்ந்த தேரும், அஞ்சா நெஞ்சுடைய போரை விரும்பும் வீரரும் என்னும் நான்கு படைகளுடன் சிறப்புற்றதானாலும்.

தம்முடைய...விட்டகல்க (சிலப்.7.32) (தலைவன்) தம்முடைய இரக்கமும் தாமும் தம்முடைய குதிரை பூட்டப்பட்ட தேரும் என்னை நினையாமல் விட்டு விட்டனராயின் விட்டுச் செல்க.

யானும் தோழியும்... உண்டான் = யானும் தோழியும் பிற தோழியர் கூட்டமும் நீராடுந்துறைக்கண் தானும் (தலைவனும்) தன் தேரும் தேர்ப்பாகனும் வந்து சேர்ந்து என் அழகை அனுபவித்தான்.

வடுகர் = அறிவுடையார் (நன். 378. சங்-மேற்) = வடுகர், அருவாள நாட்டார், வான் போன்ற (ஒன்றுமில்லாத) கருநாடர், சுடுகாடு, பேய், எருமை என்னும் இவை யாறனையும் அறிவுடையார் குறுக மாட்டார்.

பார்ப்பார் அறவோர்...கைவிட்டு. (சிலப். 21:53, 54)= பார்ப்பனர், அறவோராம் அந்தணர், பசு, பத்தினிப் பெண்டிர், முதியோர், குழந்தை எனும் இவரை விட்டு விட்டு.

சூ. 55. கன்றாற்றுப் படுத்த புன்தலைச் சிறார்(குறு. 241)= ஆன்கன்றுகளை ஓட்டிச்சென்ற புல்லியதலையினை யுடைய சிறுவர்

சூ. 56. பல்லார்தோள்......எமக்கு. பொலிவமைந்த பொய்கையும் நல்லவயலும் சூழ்ந்த ஊரனே! நீ பல பரத்தையர் தோள்களைத் தழுவி வருதலினால் நீ யணிந்திருக்கும் மாலை புலால் நாற்ற முடையதாகியது; குற்றமற்ற மணிகளால் ஆக்கப்பட்ட அணிகளணிந்த என் மகன் அணிந்த காரணத்தால் அவனணிந்த புல்லிய எருக்க மாலையும் எனக்கு விருப்பமானதாய் மணக்கும்.

நிவந்தோங்கு உயர்கொடிச் சேவலோயே (பரிபா. 3:18)= சேவல் (கருடன் எழுதிய மிகவுயர்ந்த கொடியையுடையோனே (நிவந்து, ஓங்கு, உயர் ஒரு பொருள).

சேவலங் கொடியோன் காப்ப (குறு. 1) மயில் சேவல் எழுதப் பட்ட கொடியுடையோன் முருகன் காப்ப. (கோழிச் சேவலும் உண்டு)

அரிதாரச்...நீர். முருகனை ஒக்கும் எம் ஆன்பன் (தலைவன்) மலையிடத்து மழை பெய்தமையால் வந்த நீரானது அரிதாரச் சாந்தைக் குழைத்துக் கலந்தது போல நிறம் பொருந்தக் காட்சியளித்து வரும்

வாருமது ......நன்னாட= ஒழுகுகின்ற தேன் உடைய சோலையில் வண்டுகள் உதிர்க்க வீழ்ந்த அன்றலர்ந்த மலர்களால் நறுமணம் கமழும் செறிந்த மலை நாட்டவனே.

ஊட்டி யன்ன ஒண்தளிர்ச் செயலை (அகம். 6?)= நிறம் ஊட்டினாற் போன்றுள்ள அழகிய தளிர்களையுடைய அசோகு. (அழகிய அசோகந்தளிர்)

படுத்து......சிறுநெறி (மலைபடு. 15, 16.)— படுக்க வைத்தாற் போல் காணப்படும் பாறையில் (நெடுந் தொலைவிலிருந்து பார்ப்பவர்க்கு) எடுத்து நிறுத்தி வைத்தது போல் தோற்றமளிக்கும் விடுதல் இல்லாத (தொடர்ந்த) சிறிய வழி.

ஒல்லேம்......நறிது. — தலைவ! (நீயணிந்துள்ள நல்ல) குவளை புலால் நாற்றம் உடையதாகும் ஆதலால் உன்னைச் சேரேம். மகன் மார்பில் உள்ள புல்லிய எருக்க மாலை எமக்கு நல்ல மணமுடையதாகும்.

சூ. 57. மடிமை......விடும் (குறள். 608)— மடியினது (சோம்பலினது) தன்மை (உயர்) குடிமை யுடையான் கண்ணே தங்குமாயின், அஃது அவனைத் தன் பகைவர்க்கு அடியனாந் தன்மையை அடைவித்துவிடும் — பரிமேலழகர்.

சங்கிதோர் நல்கூர்ந்தார் செல்வமகள் (கலி. 56)— இவ்வூரிடத்துப் பிள்ளையின்றி வறுமைப்பட்டவர்க்கு அது நீங்க வந்த செல்வ மகள்.

ஆயிடை யிருபே ராண்மை செய்த பூசல் (குறு. 43)—அவ்விடத்து (அக்காலத்து) தலைவனிடத்ததும் என் (தலைவி) இடத்ததும் ஆன இரு பெரிய ஆண்மைக் குணங்கள் செய்த போரால்.

ஊராண்மைக் கொத்த படிறுடைத்து (கலி 89:2)— ஊரையாளுந் தன்மைக்குப் பொருந்தின கொடுமையையுடைத்து— நச்.

வேளாண்மை செய்து ...... தாளாண்மை. — உழவு செய்து அதனால் வருவிருந்தினரைக் காத்துக் கொடிய போர்க்களத்து வாள் போரிலும் வலியராய்த் தாளாண்மை ....

உட்குடையாள் ஊராண் இயல்பினாள் (நாலடி. 384)— அச்சம் உடையவள் உதவி செய்யும் இயல்புடையவள்.

ஆண்மை தோன்ற ஆடவர்க் கடந்த (புறம். 247)— தன்னுடைய ஆண்மை (வீரம்) தோன்ற பகை வீரரை எதிர்த்துக் கொன்ற.

இளமை......இன்றே. (நற். 126.)— இளமை நீங்கிய பிறகு செல்வம் காம இன்பத்தைத் தருதல் இல்லை.

ஆங்கவை விருந்தாற்றப் பகல் அல்கி (கலி. 66:4) — யானை மதத்தில் தங்கியிருந்த வண்டுகள் தங்களுக்கு விருந்து செய்யப் பகற்காலத்தில் அங்கேயே தங்கி.

பிறனியலாள் பெண்மை நயவாதவன். (குறள் 14)— பிறனுக் குரிமை பூண்டு அவனுடைய இயல்பின்கண்ணே நிற்பாளது பெண்தன்மையை விரும்பாதவன்— பரிமேலழகர்.

அரசு படக் கடந்தட்டு (கலி. 105) — பகையரசு படும்படியாக வென்று கொன்று.

அரசுவா வீழ்ந்த களத்து (களவழி. 35) — அரச யானை பட்ட போர்க்களத்தில்.

தேமலர் அங்கண் திருவேபுகுதுக (சீவக. 21:21) — தேன் பொருந் திய மலர் போலும் அழகிய கண் உடைய இலக்குமி போன்றவளே வருக.

ஆலமர் செல்வன் அணிசால் பெருவிறல் போல வருமெம் உயிர் (கலி. 81:9,10)— ஆலின் கீழ் அமர்ந்த இறைவனுடைய அழகமைந்த முருகன் போல எம் உயிர் அனையான் வரும்.

ஏவவும்,........நோய். (குறள் 848)=புல்லறிவாளன் தனக்குறுதி யாயவற்றை அறிவுடையார் சொல்லாநிற்கவும் செய்யான்; அதுவன்றித் தானாகவும் இவை செய்வன வென்றறியான்; அவ்வுயிர்யாக்கையின் நீங்கு மளவும்

நிலத்திற்குப் பொறுத்தற்கரிய ஒரு நோயாம்
பரிமேலழகர்

சூ. 61. இழிவறிந்துண்பான்கண் இன்பம் (குறள் 946)=உணவு குறைதல் நன்று என்று அறிந்து குறைவாக உண்பவன் கண் இன்பம் (நிலைக்கும்)

சூ. 62. இருநோக்கிவள் உண்கண் உள்ளது (குறள் 1091)= இவளுடைய மைதீட்டப் பெற்ற கண்களில் உள்ள தாய நோக்கு என்னைப் பார்க்கும் போது இரண்டு நோக்காக அமைந்துள்ளது.

உள்ளிய...யெனின் (குறள். 39)=தவம் செய்யுமவன், தன் மனத்தால் வெகுளியை ஒருகாலும் நினையானாயின் தான் கருதியபேறெல்லாம் ஒருங்கே பெறும்—

—பரிமேலழகர்

பயன் படுத்தப் பெற்ற நூல்கள்

1. தொல்காப்பியம்—சொல்லதிகாரம்—இளம்பூரணம்
சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம்,
1/140 பிரகாசம் சாலை, சென்னை 1 (1973)

2. தொல்—சொல்—சேனாவரையம்
கு. சுந்தரமூர்த்தி பதிப்பு. (1966)
கிடைக்குமிடம் கு. சுந்தரமூர்த்தி
தெற்குத் தெரு, திருப்பனந்தாள்

3. தொல்—சொல்—தெய்வச்சிலையார்
சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழக வெளியீடு (1979)

4. தொல்—சொல்—நச்சினார்க்கினியம்
சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழக வெளியீடு (1974)

5. தொல்—சொல்—கல்லாடம், + ஒருவர் உரை.
சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழக வெளியீடு (1964)

6. தொல். சொல். கல்லாடனார் விருத்தி
தெ. பொ. மீனாட்சி சுந்தரனார் பதிப்பு.
வெளியீடு : தமிழ்நாடு அரசினர் கீழ்த்திசைச் சுவடி
நூலகம் சென்னை 5 (1971)

7. தொல்—சொல். உரைக்கோவை முதற்பாகம்.
ஆபிரகாம் அருளப்பன், வி. அய. சுப்பிரமணியம்
பதிப்பு (1963)

கிடைக்குமிடம். அருள் அச்சகம், வடக்குக்கடை வீதி
பாளையங் கோட்டை, திருநெல்வேலி.

8. தொல்—நன்னூல்—சொல்லதிகாரம்
க. வெள்ளைவாரணனார்
வெளியீடு : திருமதி வெ. பொற்றடங்கண்ணி
142, கனகசபை நகர், சிதம்பரம் (1971)

9. தொல்—சொல்லதிகாரம்—ஆதித்யம் (1977)
கிடைக்குமிடம் C. L. S. கிறித்தவ இலக்கிய சங்கம்.
பூங்கா நகர், சென்னை-1

10. தொல்-சொல். சேனாவரையர் உரை.
சி. கணேசய்யர் உரை விளக்கக் குறிப்புக்களுடன்.
வட இலங்கைத் தமிழ் நூற் பதிப்பகம், சுன்னாகம்
இலங்கை. (1955)

11. தொல்-சொல். சேனாவரையம்
பூவராகம் பிள்ளை விளக்கத்துடன்
சைவ சித்தாந்த நூற் பதிப்புக்கழக வெளியீடு

12. தொல்காப்பியச் சொல்லதிகாரக் குறிப்பு
பி. சா. சுப்பிரமணிய சாஸ்திரியார்.
வெளியிட்டோர்: S. P. கணேச சாஸ்திரி
38 பாண்டியன் சந்து, தெப்பக்குளம்,
திருச்சிராப் பள்ளி. (1930)

13. Tholkappiyam with criti cal studies
By S.ILAKKUVANAR (1963)
Kuralneri Publish ing house
Maduri-6

14. Journal of Tamil Studies (13) June 1978 (14) December 1978
International Institute of Tamil studies
Madras-20

சொல்லகராதி

(எண்-பக்க எண்)

அஃறிணைச் சொல் 33, 34
அஃறிணைப் பால் ஐயம் 211
அஃறிணைப்பலவின்பால் ஈறு 111
அஃறிணையிருபால் 69
அகரக் கிளவி 21
அகரச் சுட்டு 48
அகம் 231, 298
அசைநிலை 92
அடிசில் 353
அடிமை 427
அடுக்கியல் உறவு 85
அடுக்கு 363
அடுக்குத் தொடர் 24
அடுக்குவகை 42
அடை 231
அண்ணாமலைப் பல்கலைக் கழகம் 24
அண்ணாமலை நகர் 24
அண்மை நிலை 4, 10
அணி 353
அணிகுறித்து நிற்றல் 233
அத்து—அல்வழிச் சந்தி 110
அதிகாரம் 5, 14
அதிகாரம் என்பது முறைமை 1
அதிவியாப்தி 16
அநுவாதம்—மீண்டும்கூறுவது 119, 121
அய்யாசாமி, மா. 59
அரசு 422, 427
அரவம் 913, 14
அரிசி 21
அருகிய வழக்கு 229, 230
அருத்தாபத்தி 455
அல்வழித் தொடர் 6
அலி 36, 80, 85, 1-1, 128, 141
அலியர் 80
அவ்வியாப்தி 16
அவனறிவுதான் காண்டல் 146 153
அவனறிவு தான் கோடல் 143
அவாய் நிலை 4, 10
அவையல் கிளவி 172
அறத் தெய்வம் 437
அறம் 5, 452—455
அறமாவது அழுக்காறின்மை 92, 93
அறிசொல்—அறிதற்குக் கருவியாகிய சொல் 67, 69
அறிபொருள் வினா 145
அறியான் வினா 145, 146
அறியான் வினாதல் 143
அறிவார்க்குக் கருவியாகிய சொல் அறிசொல் 65
அறிவு ஒப்புக் காண்டல் 143, 146 153

அறுவகை ஒட்டு 1, 2, 10, 11, 12, 15,
அறுகரணம் 13
அன்மொழித் தொகை 18, 24, 30
ஆ 134, 452, 453
ஆக்கம் அமைத்துக் கோடல் 19, 20
ஆக்கம்-ஆக்கம் என்பது சொற்கள் பொருள் கண் மேலாமாறு 19
ஆக்கவகை 42
ஆகாயம் 177, 192
ஆகு பெயர் 38, 56, 74, 81, 243, 244, 421, 424, 43 , 433 437, 4 9, 440, 441
ஆசாரக் கோவை 385
ஆசிரியர் தொல்காப்பியர் 16
ஆசிரியன் 181
ஆசிரியன் இட்டதோர் குறி 35
ஆசிரியர் மதம் 242
ஆடூஉ 33, 6 , 69
ஆடூஉ அறிசொல் 32, 33, 34, 41, 64, 75, 92
ஆடூஉப் பெயர் 129
ஆடூஉப் பொருளை அறி விக்கும் சொல் 91
ஆடூஉ மகடூஉ என்பன பண்டையார் வழக்கு 67
அடூஉவின் கண் நிகழும்சொல் 41
ஆண்டியப்பன், தே. 23
ஆண்பன்மை 82
ஆண்பாற் சொல் 68
ஆண்பாற் பன்மை 81
ஆண்மை 422, 42 , 426
ஆணலிப் டன்மை 81
ஆதித்தர் 12, 48, 54, 85, 136, 140, 161, 163, 178, 188, 227, 286, 293, 295, 517, 32 , 334 355, 360, 362, 365, 371, 379 416, 4 2, 442, 4 6
ஆய்வுக் கோவை 48, 59
ஆரைக் கிளவி 242
ஆவின்பால் 465
ஆழ்வார்நகர் குடியிருப்பு 23
ஆறு தொகை 11, 12, 15
இகரச்சுட்டு 48
இசின் 50
இசை 9, 13, 14
இசைக்கும் என்பது செய்யும் என்னும் பெயரெச்சம் 29
இசைக்கும் என்பது செய்யும் என்னும் முற்றுச் சொல் 32, 121
இசைப்பு 41, 45
இசைப்பு இசை 37, 41, 45
இசைநிறை 0, 51, 52
இசைநிறைச் சொற்றொடர் 48
இட்டிகை 191
இடக்கரடக்கல் 170, 175, 177, 178
இடக்கரடக்கும் தகுதி 172
இடமயக்கம் 124
இடவழு 126, 129, 131
இடவழூஉ 134
இடுகுறி 11, 14, 20
இடுகுறிப் பெயர் 414
இடைச் சொல் 54
இடைச் சொல்லோத்து 7, 20
இடைச்சொல் வகை 42
இடைக் சொற்றொடர் 24
இயங்கு திணை 9

இயம் 353
இயற்கைப் பொருள் 195
இயற்கைப் பொருள் என்பது காரணப் பொருள் 192
இயற் பெயர் 304
இயற் பெயரும் சிறப்புப் பெயரும் 318
இயற் பெயரும் சுட்டுப் பெயரும் 302
இரட்டைக் கிளவி 361, 363
இரட்டுற மொழிதல் 328
இரண்டிடம் 10, 11, 13, 15
இரண்டு திணை 1, 10, 11, 12, 15
இராம சுந்தரம் 85
இரு பெயரொட்டாகு பெயர் 56
இருபெயரொட்டுப் பண்புத் தொகை 44, 65, 106, 195, 242
இருமை 65
இருமொழித் தொடர் 5, 10, 11
இலக்கணத் தொகை 17, 137
இலக்கணத் தொகை—சொல் 181
இலக்கணத்தோடு பொருந்திய மரூஉ வழக்கு 177
இல்க்கணப் பகுதி—சொல் 177
இலக்கண வழக்கு 177
இலக்கிய நடை 48
இலதை 13
இலக்கணவிளக்கம் 60 முதல் ஒவ்வொரு நூற்பாவின் கீழும்.
இலக்குவனார் 21 முதல் ஒவ்வொரு நூற்பாவின் கீழும்.
இழிசினர் 177
இழிதிணை 44
இழிவு சிறப்பும்மை 161
இளம்பூரணர் 3 முதல்
இளம்பூரணர் சமணர் அல்லர் 74
இளமை 422, 426
இளவழகனார் 342
இறந்த காலந்தொக்க வினைத்தொகை 21
இறந்தகால வினைத்தொகை 42, 47
இறிஞி 14
இறைபயப்பது 148
இன்சாரியை 29, 39
இனப்பொருள் 287, 288
உடம்படுதல் 148, 152
உடம்படுமெய் 31
உடம்பொடு புணர்த்தல் 53, 273
உடம்பொடு புணர்த்துக் கூறுதல் 103
உம்மை 203, 226
உம்மை எதிர்மறை 202, 204, 265
உம்மைத்தொகை 24, 28 233
உம்மை விகாரத்தால் தொக்கது 57
உய்த்துணர வைத்தல் 347
உயர்சொல் 240
உயர்திணைச் சொல் 22, 34
உயர் திணைப்பன்மை 241
உயர் திணைப் பெயர்க்கு அஃறிணை முடிபு 417
உயர்திணைப் பொருள் 81

உயர்திணை முப்பால் 59
உயர்ந்த ஒழுக்கம் 38, 40
உயிர் உணர்தல் 191, 192, 193
194
உயிர்க்கிழவன் 449, 450
உயிர்ப்பொருள் 71
உயிரில் பொருள் 71
உயிரில்லன 26
உயிருடையன 26
உரிச்சொல்லோத்து 7, 20
உரிச்சொல்வகை 42
உரிச்சொற்றொடர் 24
உரு 213, 217
உருபனியல் 24
உருபு 214, 215, 216, 217
225, 226, 227
உருபுத்தொகை 4
உரு உவமம் 163
உரைக்கோவை 19?, 224
உரையசை 408
உரையாசிரியர் 3, 16, 29,
31, 32, 47, 54, 64, 65,
88, 89, 90, 93, 146, 164,
172, 173, 180, 214, 233,
254, 256, 314, 334, 341,
347, 385, 410, 416,
உரையிற் கோடல் 42
உருபுத்தொகை 45
உலகம் 192
உலகத்தோர் 449, 450
உலகர் 449
உவமத் தொகை 24
உவமம் என்பது ஒப்புணர்த்
தல் 167
உவமை 113, 413
உவாப்பதினான்கு 35
உள்ளது உரைத்தல் 148,
152, 158, 161
உறழ் பொருள் 174
உறுவது கூறல் 148, 158,
160, 161
உறுப்பின் கிளவி 419, 420
423, 428, 429.
எங்கள் வீரன் (நாய்) 48
எச்ச உம்மை 277, 278, 279
எச்சப்பெயர் 47
எச்ச வகை 42, 43
எச்ச வியல் 20, 21, 24
எட்டு வேற்றுமை 1, 2, 10,
11, 12, 15
எண்ணு நிலைத் தொடர் 11
எண்ணு நிலை வகை 10,
27, 42
எதிர் மறை 23
எய்தியது விலக்கல் 202, 310,
எரு 200, 202,
எருமை 454
எழுத்ததிகாரம் 7, 34
எழுத்தல் ஓசை 14
எழுத்தானாம் ஓசை 13
எழுவகை வழு 1, 2, 10, 11,
15
எழுவாய் வேற்றுமை 7, 8
என்மனார் 25—29, 36—38,
42
ஏ என்பது ஈற்றசை 28, 29,
32, 43, 44, 68, 72, 94,
97, 99, 100
ஏகாரம் அசை நிலை 93
ஏகாரம் சிறப்பு பற்றி
வருதல் 159
ஏகாரம் பிரிநிலை 101
ஏகாரம் மூன்றும் ஈற்றசை
37

ஏவல் 23, 152, 161
ஏவுதல் 148, 158
ஏழுவகை வழு 10
ஏற்புழிக் கோடல் 119
ஐந்தாம் வேற்றுமைப் பொருள் 28
ஐந்து பால் 1, 10, 11, 12, 1 , 118
ஐம்பெரும் பூதம் 9
ஐயம் துணிந்துழிச் சொல்லும் மரபு 219
ஐயமறுத்தல் 143, 153
ஐயவினா 145, 146
ஒக்கல் 218
ஒட்டகம் 454
ஒருசாரன—வினையாலணையும் பெயர் 126
ஒரு புடையான் ஒற்றுமை 3
ஒரு பொருட் கிளவி 18
ஒரு பொருள்மேல் இரு பெயர் வழுக் காத்தல் 313, 319, 321
ஒருமை 65. 72
ஒருவர் 14
ஒருவன் ஒருத்தி பற்றிய மரபு 335
ஒலி 13, 14
ஒன்றென முடித்தல் 183, 184, 186, 217, 241, 338 339, 343 346, 348
ஓசை 9, 13
ஓலையைத் திருமுகம் என்றல் 177
ஔவையார் 49
கட்டுரைச் சுவை 119
கடலொலி 13
கடலோசை 14
கடவுள் 87
கடு—கடுக்காய் 167, 198, 200 205,
கண்ட விடத்து ஐயம் 210
கண்ணகி 456, 457
கண்ணல்லாள் 450—463
கணேசய்யர் 189
கதி 272
கமீல் சுவலபில் 25 முதல் ஒவ்வொரு நூற்பாவின் கீழும்
கமுகு 177
கருஞாயிறு 185
கருத்துப் பொருள் 8
கருமுருகன் 204, 205
கருமை 178 188
கருவி கருத்தா 37, 45
கருவூர் 143
கல் 80
கல்லாடனார் 11 முதல்
கலித்தொகை 102, 112, 353, 425, 427
கவி மரபு 48 49
கவிமரபாக வந்த இசைநிறை 48, 49
களவழி 202, 204
காட்சிப் பொருள் 8
காணாவிடத்து ஐயம் 210
காதல் 428, 429
காதற் சொல் 420
காப்பியர் நெறி 23
காரணக் கிளவி 315
காரணக் குறி 11, 14, 20
காரொலி 13
கால மயக்கம் 43 124
காலவழு 126, 129, 131
காலன் 449, 450
கிளத்தப் படுவது கிளவி 22

கீழ்ச்சேரிக்கோழி 452 455
குக்கில் 203
குடம் 452—455
குடிமை 425
குமரி 144
குமாரசாமி ராஜா 59
குரிசில் 202
குழவி 423
குழு 427
குழுவின் வந்த குறிநிலை வழக்கு 170, 172, 175, 177
குழூஉ 422
குழூஉக் குறி 178
குற்றம் 202
குற்றி 213—227, 229
குறள் 22, 203, 425, 427
குறிப்பில் தோன்றல் 17
குறியீடு 46
குறுஞ்சூலி 184, 187, 188
குறுந்தாட்டு 108, 109
குறுந்தொகை 204, 414 425
குறும்பூழ் 188
குறைக்கும் வழிக் குறைத்தல் 27, 35 43, 46, 151
குன்றக் கூறல் 315, 348
கூழ் 177
கூறிட்டு மொழிதல் 147
கூறியது கூறல் 240
கை 270
கொப்பூழ் 458—463
கொற்றன் 117
கொடுந்தாட்டு 110
கோட்சுறா 184
சகரக் கிளவி 21
சங்கர நமச்சிவாயர் 27
சங்கொலி 9, 14
சச்சிதானந்தம் க. வா 58
சண்முகம் செ. வை 49
சந்திராதித்தர் 80
சான்றோர் 30, 39, 51
சான்றோர் செய்யுள் 30, 39
சிந்தாமணி 300. 365
சிலப்பதி காரம் 384, 427, 439
சிவணி என்பது பெயர்ச் சொல் அன்று 60
சிவலிங்கனார் 22, 50, 207, 228, 293, 304, 341, 354, 355, 361, 408, 433, 446, 450, 456
சிறப்பு 428, 430
சிறப்புடைப் பொருளைத் தான் இனிது கிளத்தல் 2¯1
சிறப்புச் சொல் 420
சிறப்பும்மை 158, 160
சிவஞான முனிவர் 5
சுட்டிய என்பது வினை யெச்சம் 90
சுட்டு ஆராய்ச்சி 310
சுட்டு—கருதுதல் 30, 215
சுட்டு—நன்கு மதிப்பு 38
சுட்டுப் பெயர் முற்பட வருமிடம் 309
சுட்டு முதற் காரணக் கிளவி 312
சுந்தர மூர்த்தி கு. 60, 149 163, 192, 207, 283, 288, 294, 360, 365, 402, 419,
சுப்பிரமணிய சாஸ்திரியார் 16 287, 3 7, 353,
சுப்பிரமணியன் ச. வே 17, 21, 136, 179, 181, 262, 322, 334, 341 350, 408, 433

சுப்பிரமணியன் சி. 23
செஞ்ஞாயிறு 1:2, 183, 186—1:9
செத்தாரைத் துஞ்சினார் என்றல் 177
செந்தமிழ்ச் செல்வி 5:
செந்தாமரை 18 , 189
செம்பஞ்சி 118
செம்பளிங்கு 118
செப்பினும் வினாவினும் சினைமுதற் கிளவி 161
செப்பு 23, 114, 151
செப்பு அறுவகை 144, 152
செப்பு நான்கு 147
செப்பு மயக்கம் 124
செப்பு வழாநிலை 164
செப்பு வழு 126, 1:8, 1:0, 198, 282, 291, 292, 297, 412
செப்பு வழூஉ எழுவகை 150
செப்பு வழுக் காத்தல் 306 316, 363, ·16
செப்பு வழுவமைதி 155, 156, 157, 160, 161, 280
செய்தென் எச்சம் காரண காரியப் பொருட்டாய் நிற்றல் 67
செய்ம்மன 36
செய்யிய என்னும் வினையெச்சம் 81, 90
செய்யும் என்னும் முற்றுச் சொல் 45, 40
செய்யுமன 36
செய்யுள் முடிபு 30
செய்யுள் விகாரம் 43, 45, 68
செய்யுளாறு 233
செய்யுளின்பம் 51
செய்வினை 22
செயப்பாட்டு வினை 22
செயற்கைப் பொருள் 195
செலவு 251
செறற் சொல் 419, 420, 423, 428, 430
சேற்று நிலம் 191, 193
சேனாவரையர் 2, முதல் ஒவ்வொரு நூற்பாவுரையிலும்
சொல்நான்கு வகை 10, 11, 15
சொல் முடிபு மூவகை 65
சொல்லாது இறுத்தல் 148
சொல்லியைபு 44, 45
சொல்லோட்ட நிலை 2·3
சொற் சேர்க்கையாகிய வாக்கிய அமைப்பு 22
சொன்மை 17
ஞாபகம் 119, 121, 329
ஞாபகம் கூறல் 324 327
தகுதி 4, 10, 170, 177, 178
தகுதி மூன்று வகை 175
தகுதியும் வழக்கும் 169
தந்திர உத்தி 42, 375
தந்திர உத்தி வகை 60, 68
தமிழ் மரபு 83
தரவு 252, 256
தற்குறிப்பேற்ற அலங்காரம் 413
தன்மைக் கிளவி 21
தன்மை திரிபெயர் 76, 83, 419, 420, 421 423, 428, 429
தன்வினை 22
தன்னின முடித்தல் 164, 166, 241, 291, 292, 305, 307,

308, 350,
தனிமொழி 4, 5, 6, 10, 18
தானவர் 4
திணை இரண்டு 25
திணை ஐயம் 212
திணை மயக்கம் 124
திணை வழு 125, 129, 285, 299, 332, 347, 383, 385, 388, 446
திணை வழுக்காத்தலி 331, 346, 423, 429, 438, 440
திணை வழுவமைதி 329, 345, 349, 382, 386, 421, 347
திணை வழுஉ 132
திணை வழுஉவமைதி 333
திருவள்ளுவன் 319, 320
தீ 177, 185, 191, 192, 193, 194
துணிந்து கூறல் 147
துணை யென்பது இணை 165
துறக்கம் 452—455
தெங்கு 177
தெ. பொ. மீ. 13
தேவர் முப்பத்து மூவர் 272
தேவு 87
தேனீ 23
தெய்வச்சிலையார் 18 முதல் ஒவ்வொரு நூற்பாவுரை யிலும்
தொகுத்தல் 12
தொகுத்துச் சுட்டல் 122
தொகா நிலைவகை 35 36
தொகைச் சொல் 320
தொகைத் தொடர் 54
தொகை நிலைத் தொடர் 11
தொகை நிலைவகை 10, 27, 35, 42
தொடர்மொழி 4, 6, 7, 10, 18
தொடரியல் உறவு 85
தொண்டனார் 243
தொல்காப்பிய மூலம் 342
தொல்காப்பிய மொழியில் 24, 86
தொல்காப்பியர் 40, 49, 51, 52, 56, 84, 85, 101, 289
தொல்காப்பியனார் 16
தொல்-சொல்-உரைக்கோவை 319
தொல்லாசிரியர் 33
தொல்லாசிரியர் குறி 30
தொழில் பெயர் 36
தொன்னூல் விளக்கம் 20, 60 70, 124, 213, 231, 249, 253 268, 275,
தோள் 458—463
தோன்றா எழுவாய் 43, 222
நச்சினார்க்கினியர் 16 முதல் ஒவ்வொரு நூற்பாவுரை யிலும்
நடை 214, 221, 231
நரகர் 75, 78, 80, 81, 82,
நரகி 75, 78, 80, 81
நற்றிணை 426
நன்னூல் 25 முதல் ஒவ்வொரு நூற்பாவின் கீழும்.
நாய் 464
நால்வாய் வேழம் 187
நாலடி 79, 139, 425
நிரயப்பாலர் 81
நிரயம் 452—455
நிலம் 177, 191, 192, 193, 194
நிலைத் திணை 9
நிலம் நீர் தீ வளி ஆகாயம் 35

நிலனும் நீரும் 21
நீர் 177, 191, 192, 193, 194,
198, 200, 202
நீலம் 177
நுண்ணுணர்வு 199
நுறுங்கு 18, 20
நெடுந்தகடி 188
நேமி நாதம் 25 முதல் நூற்பாக்களின் கீழ்
நொய் 18, 20
படை 353
பண்பாவது தமக்குள்ளதோர் இயல்பு 185
பண்புத் தொகை 35, 40, 43, 44, 55, 110, 240
பண்புத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை 30, 38, 54
பண்புத் தொகை யாராய்ச்சி 320
பயன் உவமம் 163
பயனிலைத்தொடர் 11
பயனிலை வகை 27, 42, 45
பரிபாடல் 353, 414
பலபொருள் ஒரு சொல் 300
பவணந்தி முனிவர் 123
பறி 177
பன்மை 65, 72
பன்மைச் சொல் 72
பன்மைப்பாற் சொல் 68
பன்மொழித் தொடர் 5, 10, 11
பாரிநிலையம் 57
பால்ஐயம் 20
பால் மயக்கம் 124
பால்வரை தெய்வம் 437, 442 443
பால்வழு 126, 129, 285
பால்வழூஉ 133, 134
பாலறி கிளவி 123
பாலுணர நில்லாத தெய்வப் பொருண்மை 438
பாளிதம் 177
பிண்டம் 216, 218
பிரமாணம் 17
பிரிநிலை 93
பிற்கால இலக்கண நூல்கள் 25 முதல் ஒவ்வொரு நூற்பாவின் கீழும்
பிறநூல் முடிந்தது தானுடம்படுதல் 233
பிறர் மதம் மேற்கொண்டு கூறுதல் 233
பிறவினை 22
பிறழ உணர்ந்தார் வழக்கு 191
புறநானூற்று உரையாசிரியர் 361,
புறநானூறு 348, 383, 585 426
புறநிலையடிப்படை 17
பூவராகம் பிள்ளை 101, 113, 173, 189, 315, 356, 371, 409, 433, 444
பெயரியல் 20
பெயரெச்சத் தொடர் 24
பெயரெச்சம் 81
பெருங் கொற்றன் 450
பெருஞ்சாத்தன் 450
பெருவழக்கு 229, 230
பெட்டை 219
பெண் அலிப்பன்மை 81
பெண் பன்மை 82
பெண் பாற் சொல் 68
பெண்பாற் பன்மை 81

பெற்றம் 213, 214, 216, 219
பேடர் 85, 87
பேடி 74, 77, 79, 81, 83-89, 121, 138, 140, 141,
பேடிப்பன்மை 81
பேடிப்பால் 81
பேடி முடிபு 37
பேடியும் தெய்வமும் 72
பேடு 75, 76, 83, 87, 138
பொதுப்பிரிபாற் சொல் 336, 337, 338, 341, 342, 344, 345
பொருட்படை 45
பொருண்மை 17
பொருள் கோள் வகை 42
பொருளியைபு 64
பொருளொடு புணராச் சுட்டுப் பெயர் 29
பொறையுயிர்த்தல் 177
போலி 178
போலியுரை 32, 14
மக்கட் சுட்டு 25, 28, 30, 40, 43, 48, 53, 54, 55
மக்கட்சுட்டு என்பது இரு பெயரொட்டுப் பண்பாகு பெயர் 38
மக்கள் என்று கருதப்படும் பொருள் 53
மக்கள் என்று குறிக்கப்படும் பொருள் 53
மக்கள் என்று சுட்டப்படும் பொருள் 53
மக்களைச் சுட்டும் பெயர் 53
மகடூ அறி சொல் 32, 33, 62, 65
மகடூஉ 33, 60, 69
மகடூஉவின் கண் நிகழும் சொல் 41
மங்கலம் 178
மங்கல மரபினாற் கூறுதல் 177
மங்கல மரபு 170, 175
மதுரை 23
மயங்கக் கூறல் 289
மயிலைநாதர் 271
மரபாராய்ச்சி 415
மரபிலக்கணப்பாகுபாடு 406
மரபியல் 39, 104, 130
மரபிலக்கணம் 193, 328
மரபு மயக்கம் 124
மரபு வழாநிலை 306, 316
மரபு வழு 126, 129, 132, 174, 176, 276, 299, 301, 310, 322, 354, 363, 374, 376
மரபுவழுக் காத்தல் 324, 326, 332, 351, 364, 366, 368, 369, 372, 377, 408, 411, 413, 414, 415, 416
மரபு வழுவமைத்தல் 368, 370
மரபு வழுவமைதி 37, 45, 140, 162, 316, 328, 329 332, 333, 350, 378
மரூஉ 178
மரூஉ வழக்கு 170, 175, 176, 177
மலைபடுகடாம் 353
மறம் 452—455
மறுத்தல் 148, 152
மன் என்பது இடைச் சொல் 29, 41
மன் என்னும் இடைச் சொல் 32
மன்னாப் பொருள் உம்மை பெறல் 274

மன—மன் 46 47
மன என்பதூஉம் வினை
பற்றிய அசை நிலையிடைச்
சொல் 46
மனவுணர்வு 47
மாற்றம் 13
மிறிஞி 14
மீனாட்சி சுந்தரனார் தெ.
பொ. 13, 19
முத்து வீரியம் 26 முதல்
ஒவ்வொரு நூற்பாவின்
கீழும்
முத்துப் பதிப்பகம் 23
முதல் 237
முதல் நூலாசிரியர் 40
முதற் சூத்திரவிருத்தி 5
முற்கு 13
முற்றுச் சொல் எச்சப்
பெயர் 28
முற்றும்மை 277. 278
முன்றில் 180
முன்னிலைக் கிளவி 21
மூப்பு 422, 425
மூன்று இடம் 1, 2, 10. 11,
12, 15
மூன்று காலம் 12, 10, 11,
13, 15
மெய்யவற்குக் காட்டல் 143,
146, 153
மெய்யுவமம் 163
மேற் கோள் மலைவு 30, 51
52, 53
மொழிக் கட்டுரைகள் 409
மொழிந்த பொருளோடு
ஒன்ற வைத்தல் 327, 386,
மொழியியற் கட்டுரைகள்
58
யா 114, 261
யாப்பருங்கல விருத்தி 388
யானைக்கோடு 42
யோகம்—கூட்டல் 128
யோக விபாகம் என்னும்
நூற்புணர்ப்பு 128
வடசொல் 439
வடநூல் 437
வடநூலார் 6, 10, 65, 413
வடமொழித் திரிபு 440
வடமொழிப் புலவர் 66
வண்டல் 209, 211
வடிவு 216, 218, 232, 233
வண்ணக்கர் 177
வண்ணச்சினைச் சொல்
230—237
வண்ணப்பண் 232
வந்தது கொண்டு வாராதது
முடித்தல் 234, 242, 211
வரதராசன் மு. 56
வழக்காறு 185
வழக்காறு இருவகை 170,
175
வழக்கு 170, 177, 178
வழக்கு என்பது காரண
மின்றி வழங்கற்பாடே
பற்றி வருவது 171
வழாநிலை 146
வழுக்காத்தல் 375
வழுவமைதி 185, 256
வழுவற்க என்னும் விதி 135
வள்ளுவர் 49
வளி 177, 191, 192, 193,
194
வன்மை 422, 427
வன்னிலம் 193
விகாரம் 113

விசேடிப்பது அடைமொழி 189
விண்ணொலி 13
விபாகம்—பிரித்தல் 128
வியங்கோள் 23
வியங்கோள் எண்ணுப் பெயர் 345
விரவுப்பண்மை 241
விரவுப் பெயர் 304, 424, 430
விரித்துக் கூறல் 122
விரித்துத் தொகுத்தல் 122
விரிக்கும் வழி விரித்தல் 27, 35, 43, 46
விருந்து 422, 427
விளிமரபு 7, 20, 21, 24
விளி வேற்றுமை 7, 8
விறற் சொல் 420, 423, 428, 430, 431,
வினா 23, 141
வினா ஐந்து 149, 153
வினா மயக்கம் 124
வினாவழாநிலை 164
வினாவழு 126, 143, 145, 148, 150, 153
வினாவழுவமைதி 156
வினாவிடை 222
வினாவி விடுத்தல் 147
வினாவும் செப்பாதல் 153
வினாவெதிர் வினாதல் 148, 152, 154
வினைத்தொகை 35, 42
வினை நிலை 23
வினை முற்றுத் தொடர் 24
வினையாலணையும் பெயர் 3,16 17,
வினையியல் 20
வினையுவமம் 163
வினையெச்சத் தொடர் 24
வினைவேறு படாப் பல பொருள் ஒரு சொல் 404—409
வினைவேறு படும் பல பொருள் ஒரு சொல் 409
வீளை 9, 13
வெண்பா 205
வெண்மை 188
வெள்ளாடை 39
வெள்ளை வாரணனார் 47, 72, 83, 110, 122, 293 340
வெளிது 178
வேற்றுமைத் தொகைப் புறத்துப் பிறந்த அன் மொழித் தொகை 18
வேற்றுமைத் தொடர் 7
வேற்றுமை மயங்கியல் 7, 20, 21, 24
வேற்றுமை யியல் 24
வேற்றுமையோத்து 20, 21
Affixes 21
Communications 23
Meaning Consideration 23
Morphology 24
Paradigm 85
Phonetic system 23
Phonadigmatic relation 85
Subramaniam, S.Dr. 21
Syntagmatic relation 85
Syntax 21 23
Word order 21
Word and sementics 24

சூத்திர முதற்குறிப்பு அகராதி

(எண்—பக்க எண்)

அ ஆ வ என 111
அடைசினை 2 0
அப்பொருள் 2›0
அவற்றுள், தருசொல் 249
அவற்றுள், யாதென 262
அவற்றுள், வினைவேறு படூஉம் 394
ஆக்கக்கிளவி 201
ஆக்கந்தானே 197
ஆடூஉ வறிசொல் 59
ஆண்மை திரிந்த 137
இசைத்தலுமுரிய 447
இயற்கைப் பொருளை 191
இயற்பெயர்க்கிளவி 302
இரட்டைக்கிளவி 361
இருதிணை மருங் ·16
இனச்சுட்டில்லா 181
இனைத்தெனவறி ‐67
உயர்திணை யென்மனார் 25
உருவெனமொழி 212
எடுத்த மொழி 450
எப்பொருளாயினும் 280
எண்ணுங்காலும் 357
ஏனையிரண்டும் 253
ஒருபெயர்ப் பொது 365
ஒரு பொருள் குறித்த 323
ஒருமை யெண்ணின் 335
ஒருவரைக் கூறும் 233
ஒன்றறி கிளவி 107
ஒன்றறி சொல்லே 69
ஒன்றுவினை 040, 407
கண்ணுந்தோளும 457
காலம் உலகம் 434
குடிமை யாண்மை 417
குறித்தோன் 411
சிறப்பின் ஆகிய 318
சுட்டு முதலாகிய 312
செப்பினும் வினா 161
செப்பும் வினாவும் 141
செப்பே வழீஇ 157
செயற்கைப் பொருளை 194
செலவினும் வர 245
தகுதியும் வழக்கும் 169
தன்மை சுட்டலும் தன்மைச் சொல்லே 3_9
நின்றாங்கிசை 444
பலவயினானு 382
பான்மயக்குற்ற 206
பெண்மை சுட்டிய 72
பெயரினும் தொழிலினும் 371
பொருளொடு புணார 296
மன்னாப் பொருளும் 27
முற்படக்கிளத்தல் 309
யாதெவன் 258
ரஃகான் ஒற்றும் 98
வியங்கோள் 346
வினாவும் செப்பே 153
வினையின் தோன்றும் 123
வினை வேறுபடாஅ 404
வினை வேறுபடூஉம் 390
வேறுவினைப் 350
ளஃகான் ஒற்றே 96
னஃகான் ஒற்றே 91

நிறுவன வெளியீடுகள்

1.	தமிழில் விடுகதைகள்	...	ரூ.	12	00
2.	தமிழ் இலக்கியக் கொள்கைகள்—III	...	ரூ.	8	00
3.	தமிழ் இலக்கியக் கொள்கைகள்—IV	...	ரூ.	10	00
4.	தமிழ் நாட்டுப்புற இயல் ஆய்வு	...	ரூ.	15	00
5.	தமிழ் இலக்கியக் கொள்கைகள்—V	...	ரூ.	12	00
6.	தமிழ் இலக்கியக் கொள்கைகள்—	...	ரூ.	16	00
7.	தமிழர் நாட்டு விளையாட்டுகள்	...	ரூ.	14	00
8.	தமிழர் ஆடைகள்	...	ரூ.	16	00
9.	தமிழர் பழக்க வழக்கங்களும் நம்பிக்கைகளும்	...	ரூ.	16	00
10.	தமிழர் கண்ட மனம்	...	ரூ	9	00
11.	தமிழர் தோற்கருவிகள்	...	ரூ	10	00
12.	தமிழர் உணவு	...	ரூ	12	00
13.	தமிழக நாட்டுப்புறக் கலைகள்	...	ரூ.	10	00
14.	தந்திவனபுராணம்	...	ரூ	15	00
15.	தொல்காப்பியம்—சிறப்புப்பாயிரம்	...	ரூ.	10	00
16.	தொல்காப்பியம்—நூன்மரபு	...	ரூ.	9	00
17.	தொல்காப்பியம்—மொழிமரபு	...	ரூ.	9	00
18.	தொல்காப்பியம்—மரபியல்	...	ரூ.	10	50
19.	தொல்காப்பியம்—பிறப்பியல்	...	ரூ.	8	00
20.	தொல்காப்பியம்—புணரியல்	...	ரூ.	10	00
21.	தொல்காப்பியம்—தொகைமரபு		ரூ		
22.	அடியார்க்கு நல்லார் உரைத்திறன்	...	ரூ.	12	00
23.	கருவூரார் பலதிரட்டு	...	ரூ.	12	00
24.	திருக்குருகூர் திருவேங்கடநாதன்	...	ரூ.	12	00
	பிள்ளைத்தமிழ்	...	ரூ.	7	50
25.	பணவிடு தூது	...	ரூ.	6	00
26.	சின்ன மகிபன் குளுவ நாடகம்	...	ரூ.	5	00
27.	உலகத் தமிழ் எழுத்தாளர் யார்-எவர் ?	...	ரூ.	6	00
28.	கூவநூல்	...	ரூ	7	00
29.	பிரபந்தத் திரட்டு	...	ரூ.	16	00
30.	மனைநூல்	...	ரூ.	15	00
31.	A Study of Perunkatai	...	Rs.	12	00
32.	Papers on Tamil Studies	...	Rs.	15	00
33.	Thiru Murugan	...	Rs.	5	00
34.	Dissertations on Tamilology	...	Rs.	10	00
35	Tamil Research through Journal	...	Rs.	7	50
36.	Dr. Mu. Va.	...	Rs.	20	00
37.	The Tamil writers Directory	...	Rs.	10	00
38.	Tamil Drama	...	Rs.	20	00
39.	Cultural Heritage of the Tamils	...	Rs.	20	00
40.	Literary Heritage of the Tamils	...	Rs.	50	00
41.	Heritage of the Tamils—				
	Language and Grammar	...	Rs.	22	00
42.	Epigraphical Evidences for Tamil Studies		Rs.	10	00

இயக்குநர், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
டி. டி டி. ஐ தரமணி சென்னை-600 113.